சம்பூரண சுயம் பிரகாசம்

மவ்லானா மவுலவி மஷாயிஹ்
A. முஹம்மத் தாஹிர் ஹஸனீ காதிரீ
(கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்)

www.miskinsha.blogspot.com

www. Miskinsha .blogspot. com

www.miskinsha.blogspot.com

சம்பூரண சுயம் பிரகாசம்

[COMPLETE SELF-ILLUMINATION]

ஆசிரியர் :

குருமஹான் அவ்லாதுர் ரஸூல், ஆரிஃபு பில்லாஹ்,

மஷாமிஹ், மவ்லானா, மவுலவி,

A. முஹம்மத் தாஹிர் ஹஸனி காதிரி

(கத்தலைல்லாஹு ஸிர்ரஹூல் அஜீஸ்)

முஹம்மத் தாவூத் பதிப்பகம்,

" தெளிவகம் "

44, பள்ளிவாசல் தெரு, மதுக்கூர் - 614 903.

www.miskinsha.blogspot.com

முதற் பதிப்பு : ஷவ்வால் 1414
ஏப்ரல் 1994

MOHAMMED DAWOOD PUBLICATIONS,
"THELIWAGAM"
44, Mosque Street, MADUKKUR-614903.

Printed at:
MOOKAMBIKA PRINTERS, TIRUVARUR. PH: 22009

மெஞ்ஞான சொரூபர்

குருமஹான் அவ்லாதுர் ரஸூல், ஆரிஃபு பில்லாஹ்,
மஷாயிஹ், மவ்லானா, மவுலவி,

A. முஹம்மத் தாஹிர் ஹஸனி காதிரி

(கத்தஸல்லாஹு ஸிர்ரஹூல் அஜீஸ்)

www.miskinsha.blogspot.com

بسم الله الرحمن الرحيم

முன்னுரை :

■

எங்கும் பரிபூரணமான சத்த சைதன்யமாய் விளங்கும் ஹக் ஸுப்ஹான ஹுவ தஆலா வாகிய அல்லாஹ்வின் அளப்பெரும் கருணையினால் – அவன் தன் பேரருளால் – நமக்கு உண்மையை உபதேசித்து, கருணை கூர்ந்து – அறிவு பூர்வமாகச் சிந்திக்கக் கூடிய அறிஞர்களுக்காக – மெஞ்ஞான விளக்கங்களையும், – தன்னை அறிந்து தன் தலைவனை நாம் அறிந்து கொள்ள – மிகவும் எளிய பயிற்சி முறைகளையும் நமக்கு அருளிச் செய்த வழித்தூய் மெய்ஞ்ஞான சொரூபர் நம் பரமகுரு மஹான், அல்லாதுர் ரஸ்லில், மஷாயிஹ், மௌலானா, மௌல்வி முஹம்மத் தாஹிர் ஸாஹிப் ஹஸனி காதிரீ (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ்) அவர்கள் தமது ஜீவிய காலத்தில் புத்தக ரூபத்திலும், பாடங்களாகவும் ஆத்ம ஞான கருவூலங்களை இயற்றி அருளினார்கள்!

அவர்களின் சிஷ்யர்களில் ஒருவரான சிக்கல் பொருள்வைத்த சேரி மா. மு. மஸ்தான் லெப்பை (ரஹ்) அவர்கள் 1926 - ல் 'அஸ்ராரே வாஹிதிய்யத்' என்னும் கலிமா விளக்கம் என்ற மொழி பெயர்ப்புக் கட்டுரையை புத்தக ரூபத்திலும், 1928-ஆம் ஆண்டு வஷ்ஷம்ஸி தப்ஸீர், இஸ்லாத்தின் உண்மை பற்றிய உபன்யாசங்கள் 4 பாடங்கள், அரபி வாக்கு அல்லது உண்மையின் ரகசியம் ஆகிய பாடங்களை சிறு புத்தகமாகவும் வெளியிட்டார்கள்.

நமது குரு மஹான் அவர்களின் மற்றொரு சிஷ்யரான வத்தலக்குண்டு P. K. மைதீன் பாட்சா ஸாஹிப் (ரஹ்) அவர்கள் பர்மா நாட்டின் ரங்கூன் நகரிலிருந்து மெஸ்மரிஸம் என்ற பெயருடைய சிறு நூலை வெளியிட்டார்கள்.

அதன்பின் குருமஹான் நமக்கு அருளிச் சென்ற அருமை நிறைந்த எல்லாப் பாடங்களையும் ஒன்று திரட்டி - அரபுத் தமிழில் பதிவு செய்து – பெரு முயற்சி எடுத்து வெளியிட மஹான் அவர்களின் மற்றொரு சிஷ்யரான - என் தந்தையார் க. ஒ. மி. முஹம்மத் தாவூத் (ரஹ்) அவர்கள் 1938-ல் விழைந்தார்கள்.

ஆனால் அதற்கு முன் வத்தலக்குண்டு P. K. மைதீன் பாட்சா ஸாஹிப் அவர்கள் – கடவுள் நூறு, கடவுள் வாக்கு, கடவுள் செயல், விக்கிரஹ நிக்கிரஹம், ஹுவல் அஹது என்கிற மஹாஞானம்,

www.miskinsha.blogspot.com

தொழுகையின் அந்தரங்கம் அல்லது வணக்கத்தின் ரகசியம் போன்ற முக்கிய பாடங்களையும், இந்நூலாசிரியரான நமது குரு மஹான் அவர்கள் 'அஜ்வீபுல் ஆலம்' என்னும் தமது சொந்த மாத பத்திரிக்கையில் 1911-ஆம் ஆண்டு வெளி உலகிற்கு அறிமுகப்படுத்திய - காயத்ரி மந்திர ரகசியம், மெஞ்ஞான மெய் யொளியின் பேரிடி – வேத வாக்கியங்களின் எதிரொலி, பெண்மரில் வித்தையின் மகிமை, மெய்மரில வித்தையின் அபார சக்தி போன்ற உண்மையை உணர்த்தும் அறிவுப் புரட்சி கட்டுரைகளையும் உள்ளடக்கிய "சுயம்பிரகாசம்" என்ற பெயருடைய அருள் நூலை வெளியிட்டார்கள்.

அந்நூலை எம் தந்தையார் கண்ணுற்ற போது – குருமஹான் அவர்களின் மிக முக்கியமான அந்தரங்க குறிப்புகளான "இல்முன்னஃப்ஸ்-தன்னை அறிதல்-சுயஞானம், ரகசிய ஞானம், பிரம ரகசியம், ஆண்டவனின் அகமியம், மானிட அகமியம், மனிதனும் ஆண்டவனும் தனித்திருக்கும் போது பேசிக்கொள்ளும் அகமியம், இல்மே ரூஹானி என்னும் ஆத்ம தத்துவம்" போன்ற-மற்ற பாடங்கள் அந்நூலில் இடம் பெறாமல் இருப்பதால் எல்லாப் பாடங்களையும், நூற்களையும் ஒன்று திரட்டி வெளியிட ஆர்வம் கொண்டார்கள். அவர்கள் காலத்தில் இந்த வேலை பூர்த்தி அடையாமல் - அவர்கள் மறைவிற்குப் பிறகு - எனது விருத்தாப்பிய காலத்தில் 'இன்ஷா அல்லாஹ்' "சம்பூரண சுயம்பிரகாசம்" என்ற திருப் பெயரினைத் தாங்கி நூல் வெளி வருகின்றது.

இந்நூல் வெளி வர பெரு முயற்சி எடுத்து ஆதரவளித்த மெய்யன்பர்கள் அனைவரின் அன்பிற்கு எம் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

எல்லா வகையிலும் ஒத்துழைப்பு நல்கிய குரு மஹான் அவர்களின் மகள் சல்மா அம்மாள் வயிற்றுப்பேரர் வழுத்தூர் பாலா R. முஹம்மத் காசிம் சாஹிப் அவர்களுக்கும், மதுக்கூர் E. முஹம்மது நூலித் அவர்களுக்கும் எமது நன்றியினை உரித்தாக்குகிறோம்.

நமது குரு மஹான் அவர்களுக்கு மேலப்பாளையம், ஆரம்பண்ணை இன்னும் தமிழகமெங்கும் உள்ள பல ஊர்களிலும் பல சிஷ்யர்கள் இருந்தனர். மேலப்பாளையத்தில் குரு மஹானின் சிஷ்யப் பிள்ளை V. S. T. சையத் தாயீம் (ரஹ்) அவர்கள் அந்த ஆத்ம ஞான சபையை ஏற்படுத்தி மஹான் அவர்களின் புகழைப் பரப்பினார்கள். இன்றும் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆத்மஞான சபை இயங்கி வருகின்றது. இவர்கள் P. K. மைதீன் பாட்சா சாஹிப் வெளியிட்ட 'சுயம்பிரகாசம்' நூலை இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார்கள். அவர்களது ஜீவிய காலத்தில் நாம் அங்கு சென்று இந்நூலை முழுமைப் படுத்தி வெளியிடுவதற்காக அவர்களை அணுகினோம். அவர்கள் காலத்திலும் இம் முயற்சி நிறைவேறாமல் இப்போதுதான் நிறைவெய்துகிறது!

எல்லாம் வல்ல அல்லாஹ் ஜல்லஷானஹூவ தஆலாவின் அளப்பெரும் கருணையால் - அவனது உதவியைக் கொண்டு - வெளிவரும் இந்த 'சம்பூரண சுயம்பிரகாச' நூலை வாசிக்கும் அன்பர்கள் அனைவருக்கும்-எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் எல்லாம் வல்ல இறைவன் ஞான வழியினைத் திறந்து விட்டு - தன்னை ஒழுங்கு படுத்திக் கொள்ளும் தத்துவத்தை நல்கி - ஆத்ம சக்தியை அதிகப் படுத்தி – தூய்மை நிறைந்த மேலோராக வாழும் பாக்கியத்தை அருள்வானாக!

நாம் அனைவரும் வஹ்தத்தென்னும் நூரில் (ஏகத்துவ மெய் யொளியில்) ஒன்று சேர்ந்து ஆனந்திப்போமாக! ஆமீன்!

மதுக்கூர்,
ஜனவரி 1994
ரஜபுமாதம் 1414

இங்ஙனம்,
P. M. முஹ்யித்தீன் அப்துல் காதிர்.

குறிப்பு: இத்துடன் மா. மு. மஸ்தான் லெப்பை அவர்களின் முகவுரையும், P. K. மைதீன் பாட்சா ஸாஹிப் அவர்களின் நூன் முகமும் இணைக்கப்பட்டுள்ளன.

www.miskinsha.blogspot.com

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

வஷ்ஷம்ஸிதப்ஸீர் புத்தக முகவுரை

■

புகழும் அவன் – புகழ்பவனும் அவன் – புகழப் பெறுபவனும் அவன் என்னும் தௌஹீதுக்கு உரித்தான அல்லாஹ் ஒருவனுக்கே எல்லாப் புகழும்! அவன் திருத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும் அவர்கள் உறவினர்கள் மீதும் ஸலவாத்தும், ஸலாமும் உண்டாவதாக!

இந்நூலில் அடங்கிய வஷ்ஷம்ஸி தப்ஸீரையும், இஸ்லாத்தின் உண்மையைப் பற்றிய உபந்நியாசங்களையும், வேறு சில நூற்களையும் எனது குரு மஹான் வழுத்தூர் ஆரிபுல் மவ்லூதாகிய முஹம்மத்தாஹிர் ஸாஹிபு காதிரீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள், தமது ஜீவிய காலத்தில் என்னிடத்தில் கொடுத்து நமது சகோதரர்கள் அறிந்து அமல் செய்யும் பொருட்டு அச்சியற்றி வெளியிடச் சொன்னார்கள். அவ்வாக்ஞையின்படியே இந்நூலை வெளியிட்டேன். இந்நூலாசிரியர் அவர்கள் உஜூதிய்யாவைச் சேர்ந்தவர்கள் என்பது இந்நூலை வாசிப்பவர்கட்கு நன்கு விளங்கும். இஸ்லாமாவதற்கு முன் அரபிகள் அநாகரீகமாக நடந்த விபரங்களையும், அவர்களை குர்ஆன் வேதத்தைக் கொண்டு சீர்திருத்திய விபரங்களையும் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

குர்ஆன் ஷரீபில் அல்லாஹுத்தஆலா சத்தியம் செய்து சொல்ல வேண்டிய காரணம் என்ன? என்ற கேள்விக்கு இந்நூலில் தக்க காரணமும் அதற்கு விடையும் கூறியிருப்பதானது சாலவும் பொருத்தமாயிருக்கிறது. ஆதலால் இத்தூல் நமது முஸ்லிம் சகோதர – சகோதரிகளுக்கும் – ஏனைய அன்பர்களுக்கும் ஐயந்திரிபை அகற்றி நன்மையைத் தரும் என்றே கருதுகிறேன். அன்பர்கள் வாசித்து எல்லா நன்மையும் பெற்று ஈடேற்றம் பெறுவார்களாக. ஆமீன்!

சிக்கல் பொருள்வைத்தசேரி
1928

மா. மு. மஸ்தான் லெப்பை.

வத்தலக்குண்டு P. K. மைதீன் பாட்சா சாயபு (ரஹ்)
அவர்கள் வெளியிட்ட

சுயம்பிரகாசம் - புத்தக

நூன்முகம்.

லும்ந்து ஸலவாத்தென்பது அவனைப் புகழ்ந்தும் அவனது திருத்தூதர் மீது ஸலாமும் சலவாத்தும் ஓதுவதாக விருக்கும், இவ்தையே உயர்வான லக்ஷணத்துடன் குறிப்பிட்டிருக்கிறேன். அதாவது,

எந்த ஒன்று எல்லாமாயும் யாவற்றையும் அறிவிக்கக் கூடியதாகவும், தன் நிலைமையில், சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும், அபேதமாயும், அதீதமாயும் விளங்குகின்றதெதுவோ, அந்த ஒன்றே மக்களுக்கு அன்புடன் அருள் புரிவதால், அவ்தையே உதவி தேடி அதன் தேஜோமய திருநாமத்தால் இந்த அருமையான நூலிற்கு எனது சொந்த ஆராய்ச்சியால் அவனது தீர்க்கதரிசியாகிய (நூர்) முகம்மது நபிகள் நாயகத்தை திருகரண சுத்தியுடன் துதி செய்து ஒரு சுருக்கமாகிய முகவுரை வரைதலாவது:

அருமையாகிய சகோதரர்களே!

அருள் என்னும் சமுத்திரத்தில் அறிவென்னும் துளிகள் ததும்பும், இந்நூற் பெருமை செப்பத்தரமன்று! இந்நூலில் யார் யாருக்கு எவை எவை தேவையோ, அவையெல்லாம் பொலிந்து மலிந்து கிடக்கின்றன! இன்னும் ஒவ்வொரு மதத்தின் உண்மையான சீர்திருந்தத்தின் இரகஸியங்கள் ஆங்காங்கு கதிர்விட்டு மின்னிப் பிரகாசிக்கின்றன. இதுவுந் தவிர இந்நூலின் உயர்வான வாசகத்தின் கருத்துரைகள் அஞ்ஞானத்தின் இருளைப் பிளக்கும் மெஞ்ஞானத்தின் கொடிய இடி மின்னலுக்கு ஒப்பாகும் என்பதில் மிகையாகாது! இந்நூலோ அச்சமும், அகந்தையும், பொறாமையும், பொய்யும், புறட்டும், இணையும் உள்ள நெஞ்சத்தாரின் முன்வினை (இருநவத்தை) பிளந்து அறியாமை என்னும் ஷைத்தானை விரட்டும் அறிவென்னும் ஷஹாதத்து கலிமாவின் அம்பு எனவும் கூறத்தகும்!

www.miskinsha.blogspot.com

சித்திரவதை செய்தும், கொலை செய்தும், கல்லாலெறிந்தும், கதையாலடித்தும், ஈட்டியால் குத்தியும், அம்பாலெய்தும் அப்பெரியோர்களைச் செய்த மகா அக்கிரம கொடுந் துன்பத்தை யார்தான் கேட்டுச் சகிக்கக்கூடும்! அநியாயம்! அநியாயம்! அந்தோ! அந்தோ! ஹா! அப்பெரியோர்களின் ஃபத்வா என்னும் சாபத் தீட்டால் அக்கூட்டங்கள் வரவரக் குறைந்து கறைந்து நிர்த்தூளியாகி விட்டன. இனி இத்தகையாளர் கண்காண்டற்குக் கிடையார்கள். இது சத்தியவாக்காகும்! இக்காலத்தில் கீழக்கரை என்னும் ஊரில் உலகம் புகழ்பெற்ற குத்புஸ்ஸமானா கல்வத்து நாயகம், அவர்களால் ஆக்கப் பெற்ற "உலூமுத்தீன்" என்னும் நூலைப் பார்த்தாலே தெரியவரும்.

இதோ ஞானசூரியன் தனது எதார்த்த நிலையில் பரிபூரண கலையுடன் இலங்குகின்றது! அஞ்ஞானமென்னும் இருள் இருந்த இடம் தெரியாமல் மறைகின்றது! அக்காலத்திய அரசர்கள் முல்லாக்களுக்கு கீழ்ப்படிந்து அவர்களின் பொய்யான கட்டளையை நிறைவேற்றி வந்தார்கள். இக்காலத்தில் அறிவிற் சிறந்த அரசர்களும் சீமான்களும் முல்லாக்களை வேரோடு களைந்து வருவதைப் பத்திரிக்கைகளில் கண்கூடாகப் பார்த்து வருகிறோமல்லவா?

இனி ஆத்மஞானந்தான் உலகில் நிலை நிற்கும்! இது உண்மை! உண்மை!! உண்மை!!!

அன்பர்களே! இத்நூலை வாசிக்க ஆரம்பிக்கும் முன்பு மெஞ் ஞானத்தின் மெய்யொளியின் பேரிடி, வேத வாக்கியங்களின் எதிரொலி என்னும் அத்தியாயத்தை முற்றிலும் உணர்ந்து வாசிக்க வேணுமாய்த் தெரிவிக்கலானேன்.

பேரின்ப சிகாமணிகளே! இத்நூலாசிரியரைப் பற்றிய சரித்திரம், சுருக்கமாக இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாயிருக்கிறது. இவர்கள் மரபு காத்திரமுல் அன்பியா, செய்யதுல் முர்சலீன், முஹம்மது முஸ்தபா, ரசூல் ஸல்லல்லாஹு அலைகி வசல்லமவர்களின் மகளார் பாத்திமா நாயகமவர்களின் புத்திர சிகாமணியின் பரம்பரையில் வந்துதித்தவர்கள் இவர்களின் வாசஸ்தலமோ தஞ்சை ஜில்லா மேலவழுத்தூர். இவர்களின் தந்தையார் மகா மேதாவி! அருமை யாகிய சந்த புருஷர்; இல்மு என்னும் கல்வியை ஒழுங்கறக் கற்றவர்; சகல கைத்தொழிலும் செய்யும் கூர்மையாகிய புலனை யுடையவர்கள். ஹக்கீகத்துல் இன்சான் என்னும் நூலைக் காவிய உலகிற்கு தானம் தந்தவருமான செய்கு அப்துல் காசிம் காதிரிய்யி அவர்களின் அருந்தபஸ்ஸாலும், அதீதசமாதியாலும் கருணாகரனின் கடாட்சத்தாலும் இன்னவர்களுக்கு செல்ட புத்திரராகவும், மதியிலும் மிக்க அழகிய முகவசீகராராகவும், சாந்தமும் அருளும், அன்பும் ஒருங்கு சேர்ந்து உருவெடுத்தது போன்றும் உதயமானார்கள். முஹம்மது தாஹிர் எனும் திருநாமம் தனது தந்தையார்க்கு தெய்வீக குட்சம பூதாதையர்களால் அருளப் பெற்ற அந்நாமத்தையுடையவர்கள். மகா அற்புத மகிமையுடன் நாளுக்கு நாள், வளர் மதியம் போல் 20 ஆண்டுக்குள்ளாக எல்லாக் கல்வியையும் கற்று சகலகலா வல்லபனென, உலகம் போற்ற தமது தந்தையவர்களிடமே அருள்ஞான தீக்ஷைப் பெற்று, கல்பு என்னும் மனதின் 3 வித களிமயத் தென்னும் மகாதத்துவத்தை யடைந்து அபார ஆத்ம தத்துவ நிபுணராகி மஷாயிகு என்னும் ஞானாசிரிய ருமாகி 15-வது வயதில் உலகத்தின் ஆச்சரியத்தை வெளியாக்க வேண்டி 'அஜாயிபுல் ஆலம்' என்னும் பத்திரிகையைப் பிரகரம் செய்தார்கள். அன்றே, அஞ்ஞான விபரீத துவித மென்னும் அரக்கனின் முடிசாய்ந்து இருந்த இடம் தெரியாமல் தட்டுக்கெட்டுத் தடுமாறி ஓடும் ஓட்டத்தை தடுப்பார் ஒருவருமில்லை!

மவ்லானா மவ்லவி மஷாயிகு ஆரிபில்லாஹி எனது குருபிரான் அவர்களின், அபார கல்வியும், கவ்பும், கறாமாத்தும் மனோ தத்துவமும், அன்னவர்களின் கீர்த்தியும் எனது சிற்றறிவுக்கு எட்டக்கூடியதாகவில்லை. கூடிய சீகிரம் அவர்களின் விரிவான சரித்திரம் சுயம்பிரகாசத்தின் 2 வது பதிப்புடன் வெளிவரும் அதில் காண்க. தவிர இம்மகானவர்கள் சூட்சம சம்பந்தமாக தனது ஆத்ம சக்தியால் எனக்கு ஞானோபதேசம் செய்த அரிய இரகசியார்த்தத்தை ஆத்மஞானத்தின் சூட்சம அருள் குருவின் கடாட்ச மென்று என்னால் இயற்றப் பெற்ற பாடலில் வரைத்திருக்கிறது. அதிதீவிர பக்குவிகளுக்கு குரு உபதேசம் இம்மாதிரியேயாகும்!

எமது குருமகானவர்கள் தமது ஜீவியகாலத்தில் "அச்சிற் பதிப்பித்து அவசியம் வெளியாக்குவாய்" என்று என்னிடம் நேரில் உத்தரவு செய்து, கையொழுத்துப் பிரதியாகிய "கடவுள் நூது, கடவுள் வாக்கு, கடவுள் செயல், விக்கிர நிக்கிரகமாகிய இந்நூற்களைத் தந்தருளியுள்ளார்கள். இத்துடன் மேலப்பாளையம் ஆ. மு. அப்துல் ரஹிமு ராவுத்து அவர்களுக்கு எழுதிய மகா ஞானம், பரம கு. ஒ. பி. முதலாவது தாவது அவர்களுக் கெழுதிய தொழுகை அல்லது வணக்கத்தின் இரகசியமும், அன்னவர்களால் இதற்கு முன் வெளியாக்கிய அஜாயிபுல் ஆலத்திலிருந்து மெஸ்மரிஸ சம்பந்தமான வியாசங்களையும், கலிமா அல்லது காயத்திரியின் மூலமந்திர இரகசியத்தையும் ஒருங்கு சேர்த்து இதற்குப் பொதுப் பெயர் அவர்களின் சூட்சம சம்பந்த அருள் வாக்குப்படி

www.miskinsha.blogspot.com

"சுயம்பிரகாசம்" என நாமம் சூட்டி வெளியிடலானேன். இந்நூல் முஸ்லீம் என்னும், அதிதீவிர பக்குவிகளுக்கு பெரும் பிரயோஜனம் தரும் என்பதில் ஐயமின்று.

முகம்மதுல் கஸ்ஸாலி நகுமத்துல்லாஹி அலைஹிவஸல்லம் கீமியாயெ ஸஆதத்தென்னும் நூலிலிருந்து, அருமையாகிய இரண்டொரு வாக்கியங்களை குறிப்பிட வேண்டிய தவசியாகவிருக்கிறது. அதாவது:

என்றும் அழிவில்லா நித்யானந்த பதவி பெற்ற தெல்லிக்குப்பம் அப்துர் றஹ்மான் சாயபு அவர்களால் தமிழில் மொழி பெயர்த்த கெ கீமியாயெ ஸஆதத் தென்னும் மகா சங்கை பொருந்திய (கித்தாப்) நூலை அறிவுடைய மக்கள் யாவரும் முற்றிலும் வாசித்துணர வேண்டி தவசியாகுமே. அதிலும் 1-வது வால்யம் இபாதாத்தும் 4-வது வால்யம் முஞ்ஜியாத் ஆக இந்த இரண்டு அத்தியாயங்களை ஒவ்வொரு பக்குவிகள் வாசிப்பதுடன் 1-வது வால்யத்தில் நான்கு உன்வான்களையும், இமாமவர்களின் முகவுரையையும் வாசிப்பவர்களின் இருதயம் எவ்விதமான விருக்குமற்று தன் உள்ளத உண்மையைக்கண்டு நிரதிசயானந்த மடைவர் என்பது நிஜமே! முகவுரையில் (குர்ஆன்) "நாம் உன்னை விட்டும் உன் திரையைத் திறந்துவிட்டோம். பின் உன் பார்வையானது இன்று கூர்மையாக இருக்கிறது" (குர்ஆன்) "நீ உன் றப்புடைய நாமத்தை தினைப்பாயாக, இன்னும் எல்லாவற்றையும் விட்டொழித்து அவன் பக்கம் வருவாயாக" என்றும்,

1-வது உன்வான் தன்னையறிவது என்பதில் எவன் தன் நஃப்சை யறிந்தானோ நிடனாக தன் றப்பை அறிவான் என்றும், கீமியாவின் 3-வது பதிப்பில் 1-வது உன்வானில் 28-வது பக்கத்தில் "ஆனால் ஒருவருக்கு" என்பதிலிருந்து 29-வது பக்கம் வரையிலும் 30-வது பக்கம் "கண் திருஷ்டியானது" என்பதிலிருந்து 31-வது பக்கம் 32, 33, 34-வது பக்கம் வரையிலும், 35-வது பக்கம் "ஆனால் இந்தப் பக்கங்களில்" என்பதிலிருந்து 36-வது பக்கம் வரையிலும், 27-வது பக்கம் "மஸ்ரிரு மக்ரிபுகளின் றப்பான அவனே யன்றி வேறு நாயனில்லை" என்பதிலிருந்து 28-வது பக்கம் பூராவும், நன்றாக ஒரு முறைக்கு இருமுறை வாசித்தால் நமது சுயம்பிரகாசத்தின் நூலாசிரியரை குறை சொல்ல முன்வருவோர், முனாஃபிக்கீன்களாகத்தான் இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்தி, சுயம்பிரகாசத்தை ஒப்புக்கொள்வதிலின்றும் தரிபு கெடாமலிருக்க வேண்டுமாய் பெரிதும் விரும்புகிறேன். எனது முர்ஷித் அவர்களின் இருதயத்தின் ஞானப்பிரகாசத்தின் கதிர்கள் அளவு கடந்தவென்பது சுயம்பிரகாசத்தை வாசிப்போருக்கு தன்கு தெரிய வரும்! இவர்களின் விலாயத், கறாமாத்தின் மகிமைகளை இவர்களின் முரீதின்களாகிய ஸாலிகீன்கள், பிரத்தியட்சமாகக் கண்டுணர்ந்திருக்கிறார்கள் என்பதை யான் மிகைபடச் சொல்வதற்கில்லை!

முஆமலாத்து 8-வது அஸ்லு 264-வது பக்கத்தில் "ஆகவே அவன் என்பது அறிவுஸ்தானமாகிய" என்பதிலிருந்து கெ பக்கம் முடிவு வரையிலும்,

முஞ்ஜியாத்து 4-வது அஸ்லி 172-வது பக்கத்தில் ஜுஹுதுடைய பாடத்தில் "அல்லாருஸுமத்தாரு இவி எதை விட்டுவிட வேணுமோ" என்பதிலிருந்தும் 173-வது பக்கத்தில் குர்ஆனில் சதாமனம் என்பதைப்பற்றிய வியாக்கியானத்தையும் கவனிக்க வேண்டிய தவசியமே!

முஞ்ஜியாத்து 9-வது அஸ்லு 348-வது பக்கத்தை முற்றிலும் வாசித்தால் அன்பர்களுக்கு சந்தேகம் விபரீதமென்னும் சங்கைபோல் குர்ஆனுக்கு அறபிக் கல்வியிலும் மற்ற கல்வியிலும் தேர்ச்சியடைந்த பண்டிதர்கள் அவரவர்கள் கருத்துக்கியைந்தவாறு அர்த்தம் செய்திருக்கிறார்கள். குர்ஆன் கடவுளின் தெய்வீக வாக்காக இருப்பதால் எவர்களும் இதுதான் அர்த்தம் என்று மெய்ப்பித்தல் கூடாதெனும் அறிவாளிகளின் வியாக்கியானத்தை குறை கூறுதலும் கூடாதென்பதும் உணர்க. வாசகம் பெருகுமாதலால் இத்துடன் இந்நூலின் முகவுரையை சம்பூரணமாக்குகிறேன். ஆமீன்!

கருணாகரன் கருணை புரிவான்!

இங்ஙனம்,

P. K. மைதீன்பக்ஷா சாயபு,

வத்தலக்குண்டு.

www.miskinsha.blogspot.com

ஓர் விக்ஞாபனம்.

இந்நூலில் அபார விஷேட ஸ்வானுபவ அமிர்த மொழிகள் ஆனந்த கெம்பீரத்துடன் வரையப் பெற்றிருக்கின்றன! இஃது எதிர்முகமாக, அதிதீவிர பக்தவமுள்ள மாணாக்கள், ஞானதீக்கை பெறுவது போன்று, இந்நூலாசிரியர், சாத்திரத்தின் மூலமாகத் தீட்சித்தல் செய்கிறார். இது இக்காலத்தின் மக்களுக்குக் கிடைத்த பெரும் பாக்கியமேயாம்!

தவிர, இந்நூல் எந்த மதத்தையும் குறைகூற முன்வரவில்லை! மதங்களின் உண்மையான சடங்குகளையும், ஒவ்வொரு மதத்தின் முடிவாகிய மகா வாக்கியத்தையே கடைப் பிடித்து, மிளிர்கின்றன! ஆதலால் முழு மக்களின் இருதய கமலத்துக்கு, இஃது, ஆர்ப்பள வேனும் குறையோ, சந்தேகமோ வருத்தாதென்பது உண்மை!

இந்நூலை வாசிக்கும் முரீதின்களென்னும் முமுட்சுகள் இந்நூலிற், தமக்கு விளங்காத வசனமிருப்பதாகத் தோன்றுதலாகின் அவரவர்கள் சொந்தப் பொறுப்பிலேயே, ஸ்டாம்பு செலவுடன் சங்கை கேட்டால், உத்தரம் தெரிந்தவரை சொல்லவும் கூடும். விதண்டாவாத குதர்க்க மொழிகளுக்கு யாம் பதிலிருத்தல் அவசியமாயிராதென்பதையும் அறிவிக்கும்,

P. K. மைதீன்பாக்ஷா சாயபு,
குடைக்கானல் ரோடு[illegible]ர்க்கம்,
வத்தலக்குண்டு.

بسم الله الرحمن الرحيم

பதிப்புரை.

எல்லாப்புகழும் இறைவனுக்கே!

அஞ்ஞான இருள் சூழ்ந்து அந்தகாரத்தில் மிதப்பதோடு அல்லாமல் மெஞ்ஞானத்தை ஒர்ந்து அறியாமல் மூடபக்தியும், மூடச் செயல்களும் எங்கும் நிறைந்திருக்கும் இந்த காலத்தில் "சிற்றறிவு" படைத்தவர்களால்-அறிவியல் ஆராய்ச்சியின் மிக மோசமான பின் விளைவுகளால்-மக்கள் தொல்லைகளுக்கு ஆளாகும் இந்த காலக் கட்டத்தில் "அஞ்ஞான இருள் கிழிக்க இந்தச் சம்பூரண சுயம் பிரகாசம் என்னும் மெஞ்ஞான மெய்யொளியை" முதன் முதலில் முதல் வெளியீடாக வெளியிடுவதினால் நாம் பெருமிதம் அடை கிறோம். இந்த அபூர்வமான நூலைத் தந்த குருமஹான் அவர் களுக்கு எமது சார்பாகவும், இதைப் படிக்கும் உங்கள் சார்பாகவும் இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழும் நன்றியினைச் சமர்ப்பிக் கின்றோம்!

இந்நூலாசிரியரான குருமஹான் மவுலவி அவர்கள் குர்ஆன், ஹதீது, சட்ட நூற்களில் மாபெரும் வல்லுனராகவும், ஆத்ம சக்தி யை அடைந்து மாபெரும் வல்லமையோடும் விளங்கினார்கள் என்பது இந்நூலைப் படிப்பவர்க்கு தன்றாக விளங்கும். P. K. மைதீன் பாட்சா (ரஹ்) அவர்களும் தமது "நூன்முகத்தில்" குருமஹான் அவர்களின் மகிமைகளை விரிவாகத் தெளிவுபடுத்தி யுள்ளார்கள்.

"ஒரு காலத்தில் இந்த ஞானமானது பூரணமான உன்னத நிலைமைக்கு வந்து பிரகாசிக்கவும், எல்லாச் சையிலும் தேவ தத்துவம் வெளியாகவும் கூடும் என்று தோன்றுகின்றது" என்ற முன்னறிவிப்பை 1911-ல் எழுதினார்கள். அதனால்தான் எம் தந்தையார் K. O. P. முஹம்மது காஸிம் (ரஹ்) அவர்கள் பர்மாவில் இருந்தபோது மஹான் அவர்களிடம் சென்று "நான் தொகுத்து வைத்துள்ள தங்களின் சுயம்பிரகாச நூலை வெளியிட விரும்புகிறேன்" என்று கேட்டுக்கொண்டபோது "மைதீன் பாட்சா அவர்களுக்கு இப்போதுதான் அனுமதி தந்தேன். நீங்கள் அவரிடம் சென்று அதை வாங்கிவந்து வெளியிடுங்கள்" என்று கூறினார்கள். மைதீன் பாட்சா அவர்களைச் சந்திக்க இயலாமல் போனதால் மீண்டும் குரு மஹான் அவர்களிடம் சென்று தெரிவித்த போது "இதை வெளியிடுவதற்கு நேரம்வரவில்லை போலிருக்கிறது" என்று

www.miskinsha.blogspot.com

கூறிவிட்டு "ஒரு காலம் வரும் அப்போது வெளியிடலாம்" என்று கருத்து தெரிவித்தனர். மஹான் அவர்களின் முன் அறிவிப்பின்படி அவர்கள் குறிப்பிட்டது இந்தக் காலம்தான் என்பதை நாம் உணர முடிகிறது.

தன்னை அறிந்து ஈடேற்றம் அடைய விரும்புகிறவர்கள் ஜீவகாந்த ஒளியை அவசியம் அடைந்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

மனிதனுக்கு தற்காப்பே இந்த ஜீவகாந்த ஒளிதான்!

பெரும் பெரும் ஞானிகளெல்லாம் இந்த தத்துவத்தால்தான் தன்னைக் காத்துக்கொண்டார்கள்!

ஆத்ம ஒளியில்லாதவர்கள் பதருக்குச் சமமானவர்கள்!

"ஞானப்பேரொளியை நான் அடைந்து அவ்வொளியிலேயே வாழ்ந்து வருகிறேன்" என்று பெருமானார் முஹம்மது (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.

இறைவன் கூறுகிறான்:

"அவ மன் கான மய்த்தன் ஃபஅஹ்யய்னாஹு வ ஜஅல்னா லஹு நூரன் ய ம் ஷீ பி ஹீ ஃபின்னாஸ்" (குர்ஆன் 8:6 ஆயத் 122)

மரணம் அடைந்த ஒருவனை நாம் உயிர்ப்பித்து எழுப்பினோம். இன்னும் அவனுக்கு ஆத்ம ஒளியைக் கொடுத்தோம். அதைக் கொண்டு அவன் மனிதர்களிடையே நடமாடுகிறான். அவன் இருளிலே கிடந்து தத்தளிப்பவனுக்கு சமமல்ல" என்று. எனவே நன்றாக உணர்ந்து கொள்ளுங்கள்.

அதனால்தான் ரஸூலல்லாஹ் (ஸல்) அவர்கள் "மூது கப்ல அன்தமூது - இறப்பு வருவதற்கு முன் இறந்துவிடுங்கள்" என்று என்று கூறுகிறார்கள். அப்போதுதான் நமக்கு இறையருள் கிட்டும்!

பின்னர் "லயுத்ஹிலன்னஹும் முத்ஹலன் யர்ழவ்னஹு அவன் அவர்கள் விரும்பும் இடத்தில் (திருப்திப்படி) அவர்களைப் பிரவேசிக்கச் செய்வான்" என்ற குர்ஆன் ஆயத்தின்படி அஷ்டமா சித்திகளுக்கும் நாம் தகுதியானவர்களாவோம்!

"தான் நாடியவருக்கு அவன் ஞானத்தை கொடுக்கிறான். யாருக்கு ஞானம் கொடுக்கப்படுகிறதோ அவர் மட்டுமே அதிகமான

தன்மைகள் கொடுக்கப்பட்டவராகிறார். ஆனாலும் ஞான வழி திறந்துவிடப்பெற்ற நல்லறிவுடையோர்களைத் தவிர மற்றவர்கள் நினைத்துப் பார்க்கமாட்டார்கள்" என்று இறைவன் கூறுகிறான். (அல்பகரா 3 : 2 ஆயத் 261)

ஆகவேதான் இறைவன் யாருக்கு நாடியிருக்கிறானோ அவர்களுக்கு அளவில்லாப் பெரும் பாக்கியங்களை வழங்குகிறான் அப்படிப்பட்டவர்களுக்குத்தான் குரு மஹான் அவர்கள் "கடவுள் தூதில் சொல்கிற "உதிப்பே கடவுள் தூது! சொல்லே அவர் வாக்கியம்! ஒருவன் உலகத்தை அறிவின் கண்ணைக்கொண்டு உற்று நோக்குவானாகில் அவனுக்கு ஓர் ஆசானுமில்லை; ஒரு வேதமும் இல்லை" என்ற நிலை உருவாகும்!

குருமார்களுக்கெல்லாம் குருவாக "மஷாயிஹாக" விளங்கினார்கள். எனவேதான் கடவுள் வாக்கு பாடத்தில் (26-வது குறிப்பு) தன்னைக் கடவுளாக அறிந்தவன் எவ்வளவு தாழ்ந்தாலும் அடிமையாகமாட்டான். தன்னை ஆண்டவனாக அறியாதவன் எவ்வளவு உயர்ந்தாலும் ஆண்டவனாகமாட்டான் என்றும் "இஸ்லாத்தில் ஆண்டவனை அடிமை கொள்ளக்கூடாது. அடிமையை அடிமை கொள்ளலாம். அடிமைத்தனம் நீங்கினால் உரிமையாக்கிவிடுவார்கள். சுயஞானம் உண்டாகாதவரை அடிமைத்தனம் நீங்காது. ஆகையால் நீங்கள் அடிமைகளை சீடன் முறையில்வைத்து வேலை வாங்குவதோடு சுயஞானத்தைப் போதித்து உரிமைவிடுங்கள்" என்று மற்ற ஆத்மஞானிகளுக்கு அறிவுரை வழங்குகிறார்கள்.

ஆனால் யாரும் தற்பெருமையுடன் "நானே கடவுள்" என்ற சாதாரண அர்த்தத்தில் தங்களை வீணாக்கிக்கொள்ளாதீர்கள்! தன்னை விளங்காமல் நானே கடவுள் என்றவர்கள் அழிந்து விட்டனர் என்பதை வரலாறு காட்டுகிறது!

"வ மன் ய்யகுல் மின்ஹும் இன்னீ இலாஹுன் மின் தூனிஹீ ஃபதாலிக நஜ்ஸீஹி ஜஹன்னம்" இன்னும் அவர்கள் யாரேனும் "அவனன்றி நிச்சயமாக நானே கடவுள் என்று கூறுபவருக்கு நாம் நரகத்தை கூலியாகக் கொடுப்போம்" என்று இறைவனும் கூறுகிறான்.

நூலாசிரியர் சிறப்பு

மவுலவியாக தம் ஆசிரியர் அவர்கள் இருந்த காரணத்தால் குர்ஆனின் தூய்மை நிறைந்த ஞான விளக்கங்களை மிகவும் தெளிவான தமிழில் தந்துள்ளனர். இது குர்ஆன் ஆராய்ச்சியில் நினைப்பவர்களுக்கு நன்றாக விளங்கும்

www.miskinsha.blogspot.com

"லி குல்லி உம்மத்தின் ஐ அல் ளா மன்ஸகன் ஹும் நாஸிகூஹும் ஃபலா யுனாழிஉன்னக ஃபில் அம்ரி வத்உ இலா ரப்பிக. இன்னக ல அலா ஹுதன் முஸ்தகீம்"

"ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் ஒவ்வொரு துறவற (யோக) முறையை நாம் அவர்களுக்கு யோகப் பயிற்சி செய்வதற்கு ஏற்படுத்தி இருக்கிறோம். எனவே இக்கட்டளையில் அவர்கள் உம்முடன் பிணங்க வேண்டாம். நீர் உம் இறைவன் பக்கமே (வெட்ட வெளிப் பயிற்சி செய்ய) அழைக்கவும்! நிச்சயமாக நேரான வழியின் மீதே நீர் அழைக்கிறீர்"

குர்ஆன் அல்ஹஜ் 17 : 22 ஆயத் 67

என்ற ஆயத்தின்படி நம் ஆசிரியர் அவர்கள் நமக்கு இந்த பயிற்சி முறையை அருளி யிருக்கிறார்கள்.

நபி பெருமானார் (ஸல்) கூறுகிறார்கள்:

பொறாமை யென்பது நியாயமான குணம்தான் என்று வாதித்தால் இருவகைப்பட்ட மனிதர்களே அப்படிப்பட்ட பொறாமைக்கு மிகவும் பொருத்தமானவர்கள்.

ஒருவர் அளவுக்கு அதிகமான திரண்ட செல்வத்தை அடைந்த தோடு மட்டும் அல்லாமல் மிருந்த தான தர்மங்களை செய்வதற்கு நல்ல மனதையும் பெற்றிருக்கிறார், இவர் பொறாமைப்பட தக்கவர். மற்றொருவர் இறையருளால் மார்க்க சம்மந்தமான ஞானப் பிரகாசத்தை அடைந்து அதன்படி தானும் நடந்து மற்றவருக்கும் அதை போதிப்பவர். இவரும் பொறாமைப்படத் தக்கவர் என்று கூறினார்கள்.

நம் குரு மஹான் அவர்கள் ஞான ஒளியை தான் அடைந்த தோடு மட்டும் அல்லாமல் மற்றவர்களும் அடைந்து இன்புற வேண்டும் என்பதற்காக நமக்கு இந்த நூலை வழங்கியவர்கள்! உண்மைக் கருத்தை மறைக்காமல் மார்க்க விஷயங்களை துல்லிய மாக நமக்குத் தந்த காரணத்தால் குத்புஸ்மானா கீழக்கரை கல்வத்து நாயகம் (ரழி) அவர்களால் "தென்னாட்டு கஸ்ஸாலி" என்று போற்றப்பெற்றார்கள். அதற்காகத்தான் நாம் மஹான் அவர்களுக்கு நன்றி செலுத்தும் முகமாக "அருளானந்த நூறு"வில் நம் உடல் பொருள் ஆவி மூன்றையும் வழங்கி ஆனந்தம் அடைகிறோம்.

குரு மஹான் அவர்கள் "என்னை வணங்கி நீங்கள் ஞானம் அடைந்து கொள்ளுங்கள்" என்று கூறவே இல்லை இவர்கள்

ரசூலல்லாஹ் (ஸல்) அவர்களின் பேரர் ஹஸன் (ரழி) அவர்களின் வம்சா வழியில் தோன்றியவர்கள். ஆகவே முஹம்மது (ஸல்) அவர்களின் கொள்கையையே உறுதிப் படுத்துகிறார்கள். உண்மை சிலருக்கு கசக்கலாம்! ஆனால் இதைக் கூறாமல் இருக்க முடிய வில்லை.

கைஸ் பின் ஸஅத் (ரழி) கூறுகிறார்:

நான் ஹீரா என்னும் இடத்திற்கு சென்றபோது அங்குள்ள மனிதர்கள் தங்கள் தலைவனை தெய்வமாக வணங்கினர். அதைக் கண்ட நான் "இறைத் தூதர் அவர்களே வணக்கத்திற்குரியவர்" என்று கூறிவிட்டு வந்தேன். பின்னர் நாயகம் (ஸல்) அவர்களிடம் நடந்த விபரத்தைக் கூறினேன். அதற்கு அவர்கள் மிகுந்த ஆச்சரியம் கொண்டு "நீர் என்னுடைய கபுர் (சமாதி) வழியே செல்ல நேர்ந்தால் அதை நீர் வணங்குவீரோ? என்று கேட்டார்கள். "தங்களுடைய புதைகுழியான சமாதியை நான் ஒருபோதும் வணங்க மாட்டேன்" என்றேன். "அவ்வாறாயின் என்னை நீங்கள் ஒருவரும் வணங்கக்கூடாது" என்று கடுமையாக உத்தரவிட்டார்கள். மிஷ்காத் : 204

எனவே குருமஹான் அவர்கள் மனிதரை வணங்கும் வணக்கத்தையும், போட்டோ வைத்து வணங்குவதையும் கண்டிக் கிறார்கள். இந்நூலைப் படிப்பவர்கள் அறிவு பெற்று, ஆச்சரிய முற்று, ஆனந்தம் அடைந்து மெஞ்ஞானசொரூபராகிய இந்நூல் ஆசிரியர் அவர்களின் முகத் தோற்றம் எப்படி இருக்கும்? என்று வினவுவார்கள் என்பதற்காகத்தான் குரு மஹான் அவர்களின் புகைப்படம் இந்நூலில் இடம் பெற்றிருக்கிறது.

மேலும் "ஓ மனிதனே! உனக்கு உடலில்லை, உயிரில்லை, நாமமில்லை, ரூபமில்லை. நீ ஆகாயமுமல்ல. நீ ஆத்மாவுமல்ல! நீ யார் என்று பார்! உன் தத்துவங்களை ஞாபகம் செய்! என்று கூறி "நாம் ஒன்றையும் வழிபடாமல் விக்கிரஹத்தை நிக்கிரஹம் செய்தால் (துவைதத்தை விட்டு அத்வைதத்தை கைக்கொண்டால்) எல்லாம் நமக்கே வழிபட்டு நம்மையே வணங்கும்! என்று தெளிவு படுத்துகிறார்கள்.

"நீ நாம ரூபத்தில் கட்டுப்பட்டு உன்னை சிறிய பொருளாய் அறிந்திருக்கிறாய்! நீயோ முடிவில்லாத அகண்டமானவன்! காலமும் உன்னை அறிந்து கொள்ளாது! உன் தத்துவங்களுக்கோ முடி வில்லை. சர்வமும் உனக்கு அடிமை. நீயும் கடவுள் அருப அம்சத்தைப் போல் விரிவாகிக்கொள்! என்று அறிவுறுத்து

www.miskinsha.blogspot.com

கிறார்கள். நீ இதற்கு முன் எங்கிருந்தாய்? என்று கேட்டு நமது இருப்பிடத்தைக் கூறி ஆத்மஞானத்தை அடைந்து கொள்ள நல் வழியினைக் காட்டுகிறார்கள்.

"சக்கரை என்றால் நாவு தித்திக்காது! விளக்கென்றால் விடு வெளிச்சமாகிவிடாது! ஞான தித்திக்கு யோக சித்தியும் அவசியமாக வேண்டும்!" என்று சொல்வதோடு மட்டும் அல்லாமல் வெட்ட வெளிப் பயிற்சியை நமக்கு அருளியிருக்கிறார்கள்.

மெஸ்மரிஸம், தல்ஸம் எனப்படும் இல்மே தவஜ்ஜா என்னும் ஆத்ம ஞான மகத்துவத்தை மறுப்பவர்கள் அறிவீனர்கள் என்று குறிப்பிட்டு "இதன் ஆரம்பமும் முடிவும் கடவுளாகிய அல்லாஹ்வுடைய உதவியைக் கொண்டாயிருக்கும்" என்று கூறுகிறார்கள்.

பல்வேறு அதிசயிக்கத்தக்க பதவிகளை அடைந்திருந்த நம் மஹான் ஆரிஃபுபில்லாஹ் அவர்களின் சிறப்பு சொல்லித் தீராது! அவர்களைப் போலவே அவர்களின் தம்பி சையத் குலாம் ரசூல் ஹஸனி அவர்களும், குரு மஹான் அவர்களின் மாணவர்களும் ஆத்மஞானத்தைப் பிரயோகம் செய்து நன்மைகள் புரிந்தனர். அத்தோடு பல்வேறு சிறப்புக்களையும் பெற்றிருந்தனர். நாமும் அவர்களின் ஆசையைப் பூர்த்தி செய்வோம்! ஆத்மஞானத்தை அடைந்து மேன்மை பெறுவோம்!

நூற் சிறப்பு:

"ஆத்மஞானத்தை ஒரு மதத்தின் எல்லைக்கு உட்படுத்தி விளங்குவது அசாத்தியம்! இன்று ஒரு மதத்தின் எல்லைக்கு உட்படா விட்டாலும் எம் மதத்தின் மத சம்மந்தமான சடங்குகள், ஜப தபங்கள் யாவும் இதனைச் சேர்ந்தது ஆனால் எல்லா மதமும் இதையே தழுவி நிற்கும்" என்ற உண்மையைக் கூறி "எவர்கள் இந்த ஞானத்தை வாசித்தால் தங்கள் மதம் தப்பிப் போகும் என்று எண்ணுகிறார்களோ... அவர்கள் இந்த நூலை வாசிக்கவே கூடாது" என்று தெளிவு படுத்துகிறது.

ஆத்மஞானத்தை கைக்கொள்ள விரும்பும் முரீது எனப்படும் சிஷ்யர்களுக்கு – அவர்கள் எந்த தரீகாவைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் சரி – இந்நூல் மிகுந்த பயனை அளிக்கும்! குருமார்கள் சொல்லாத-சொல்லித் தராத-ரகசிய விளக்கங்கள் இதில் அதிகம்!

"தன்னை அறிய வேண்டும்! தன்னை அறிவதே கடவுளை அறிவதாக இருக்கும்" என்ற கொள்கையுடன் பிரமமே ஆன்மா!

ஆன்மாவே மனம்! மனமே ஜீவகாந்த ஒளி! ஜீவகாந்த ஒளியே உயிர்! உயிரே உடலாகும்! ஒரே வஸ்து பல வஸ்தாய் வெளியாகி இருக்கிறது. ஒன்றுக் கொன்று ரூப பேதம், குண பேதமே யன்றி உண்மை பேதம் இல்லை. இது மஹா நுட்பமான ஞானம்" என்று விளக்கிக் கூறி "மரத்துக்கு நுவக்கமும் முடிவும் வித்தாக இருப்பது போல் உலகத்துக்கு மனிதனே நுவக்கமும் முடிவுமாக இருக்கிறான். ஆகையால் மனிதன் பிரமத்திலிருந்து பல பதவிகளைக் கடந்து பிரமத்தில் போய்ச் சேர வேண்டும். இவனுக்கு சரீர யாத்திரை முடிந்து விட்டது! இனி ஆன்ம யாத்திரை செய்ய வேண்டும்!" என்றும் இந்நூல் நமக்கு வழிகாட்டுகின்றது!

ஆன்ம யாத்திரையில்... "லதர்கபுன்ன தபகன் அன்தபக்கின்" நீங்கள் ஒரு நிலையிலிருந்து படிப்படியாக மற்றொரு நிலைக்கு ஏறிச் செல்வீர்கள். (குர்ஆன் : 30 : 81 ஆயத் 19) என்ற ஆயத்தின் படி ஸரீஅத், தரீகத், ஹகீகத், மஅரிஃபா என்ற நான்கு படித்தரங்களை விளக்கி கூறுகிறது.

"இன்னல்லாஹ மஅகும்" உங்களுடன்தான் இறைவன் இருக்கிறான் என்ற குர்ஆன் ஆயத்தின்படிதான் ஜப தபங்களும் அமைந்திருக்கின்றன!

"ஓ மனிதனே! நீ என்னுடைய சட்டங்களையே பின்பற்றி நடப்பாய். மேலும் நீ என்னைப் போல் ஆகிவிடுவாய்! அதன் பின் "ஆகு" என்று சொன்னவுடன் அஃது அப்படியே ஆகி விடுவதைக் காண்பாய்-என்று இறைவன் கூறுகிறான்" (மிஷ்காத்-398) என்று நபி பெருமானார் (ஸல்) அவர்கள் கூறிச் சென்றதை செயலில் நாம் காட்ட வேண்டும் என்பதற்காக பயிற்சியை நமக்கு விளக்கி "நாமே நம் அனுபவத்தில் (ஹக்கு) கடவுளாக இருந்து உலகத்தை நடத்துவோம்!" என்று நம்பிக்கையூட்டுகிறது!

அணுப் பிளவால் – அணுசக்தி கதிரியக்கத்தால் – அழியப் போகின்ற இந்த உலகத்தை ஆத்மஞானத்தால் நாம் காப்பாற்றிக் கொள்ள முடியும்! என்ற கருத்தினை பல இடங்களில் வலியுறுத்திச் சொல்கின்றது! விஞ்ஞானத்தால் அழிவைத் தேடிக்கொண்டுள்ள அணுசக்தி மயமான இந்த உலகில் ஆத்ம ஞானம் இல்லையேல் யாவும் அழிந்துபடும்! என்பதைத் தெளிவாகக் கூறுகின்றது! "இயற்கை பிரமாணமே இஸ்லாம்! இஸ்லாம் வலியுறுத்துவது ஆத்ம ஞானத்தையே!" என்று-உண்மையை மறைக்காமல்-கூறுகின்றது! இறை வேதம் கூறும் மறை மொழிகள், ரகசியங்கள் இதில் அப்பட்டமாக விளக்கப் பெற்றுள்ளன!

www.miskinsha.blogspot.com

படிப்பதற்கு முன்...

இந்நூலாசிரியராகிய குரு மஹரான் அவர்கள் 1911-ஆம் ஆண்டு தம் முடைய அஞ்ஞாயிபுல் ஆலம் பத்திரிக்கையில் வெளியாக்கிய கட்டுரைகளின் தொகுப்பும் இதில் சேர்ந்திருக்கிறது. எனவே "மெய்ஞ்ஞான மெய்யொளியின் பேரிடி" கட்டுரையின் ஆரம்பத்தில் "45 வருடமாக" என்று இருக்கிறது. அது "1866 ஆம் வருடத்திலிருந்து" என்று ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்! "வஸ்வஸ்மஸி தப்ஸீர்" பல அபூர்வமான அரிய உண்மை விளக்கங்களைக் கொண்டிருக்கிறது! "இல்முன்னஃப்ஸ்" மஹரா ஞானம் போன்ற பாடங்கள் பல ரகசியங்களைக் கொண்டிருக்கின்றன! இரகசிய ஞானம் மிகவும் நுட்பமாக இறைத் தன்மையை விளக்குகிறது. இல்மே ரூஹானி: தலை சிறந்த ராஜயோக ஆத்ம ஞானப் பயிற்சியை பத்திய விபரங்களுடன் கூறுகிறது. "மெஸ்மரிஸம்" என்ற தலைப்பில் இருப்பது ஆதியில் வெளியான புத்தகம். அதில் பயிற்சி முறைகளும், தலை மூளை, மற்றும் மீடியன் அல்நெர்வின் வேலைகள் படங்களுடன் விவரிக்கப்பட்டுள்ளது. விக்கிரஹ நிக்கிரஹ பாடம் - வெளி மற்றும் உள் விக்கிரஹ வணக்கத்தைக் கண்டிக்கிறது! கடவுள் தூது, கடவுள் வாக்கியம், கடவுள் செயல் இம் மூன்று பாடங்களும் அசரீர வாக்காக குரு மஹான் அவர்களுக்கு வெளியான விளக்கங்களுடனும், அறிவியல்துறை இதுவரை கண்டு பிடிக்க இயலாத உண்மைகளையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றன!

இஸ்லாத்தின் உண்மை பற்றிய உபந்நியாசம் நான்கு பாடங்களும் இஸ்லாத்தின் கொள்கைகளை விளக்குகின்றன. தொழுகை அல்லது வணக்கத்தின் ரகசியம் அறிவு பூர்வமான வணக்கத்தை சொல்லிக் காட்டுகின்றது! காயத்ரி மந்திர விளக்கம் இதுவரை மறை பொருளாக இருந்தது. அதன் பொருள் விளக்கப் பெற்றுள்ளது. பன்மொழிப் பண்டிதரான நம் குரு மஹரான் அவர்கள் உண்மையினை விளக்கி எல்லா வேதங்களின் "உண்மைப் பொருளையும், ஆத்மஞானமோ எல்லா மதத்தையும் சம்மதித்ததாக அதன் எல்லையை விட்டும் கடந்து நிற்கும்" என்றும் நமக்கு நன்றாக எடுத்துக் காட்டுகிறார்கள்! "அருளானந்த துஆ"வில் எல்லா ரகசியங்களையும் அடக்கி வைத்திருக்கிறார்கள்!

படியுங்கள்! படித்தபின் செயலில் (யோகப் பயிற்சியில்) இறங்குங்கள்! பாவங்களை விட்டு விலகி, உங்களை தூய்மை படுத்திக் கொண்டு

மெய்ஞ்ஞான மெய்யொளி விசும் ஆத்ம ஞானிகளின் சங்கத்தில் இணைந்து விடுங்கள்! அஞ்ஞான இருள் விலகி உலகில் ஆத்மீகப் புரட்சி ஏற்பட வழி வகுப்போம்! ஏகத்துவ - அத்வைத - நெறியில் உலகத்தை வழி நடத்துவோம்!

பெருமைக்குரிய இந்நூலைப் படிப்பதற்கு எளிதாகவும், பார்வைக்கு அழகாகவும், சிறந்த முறையில் அச்சிட்டுக் கொடுத்த மூகாம்பிகா அச்சக உரிமையாளர் அவர்களுக்கும், அச்சக ஊழியர்கள் அனைவருக்கும் பதிப்பகத்தின் சார்பாக எங்கள் இதயம் கனிந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறோம்.

சம்பூரண சுயம்பிரகாசம் என்னும் பெயருடைய இந்நூல் K. O. P. M. முத்திரையுடன் வெளி வருகிறது. எனவே முத்திரை இல்லாமல் இந்நூல் விற்கப்பட்டால் எமக்குத் தெரியப்படுத்துங்கள்.

எங்களால் இயன்ற வரை குறைகளைக் களைந்து இந்நூலை வெளியிட்டிருக்கிறோம். குறை இருப்பின் திருத்திக்கொள்ளுங்கள். குறைகளைத் தெரியப்படுத்துங்கள்! அடுத்தப் பதிப்பில் திருத்தத்துடன் வெளியிடுவோம்.

அனைவருக்கும் நன்றி!

P. M. முஹ்யித்தீன் அப்துல் காதிர்.
பதிப்பகத்தார்.

www.miskinsha.blogspot.com

மெஞ்ஞான மெய்யொளியின் பேரிடி வேதவாக்கியங்களின் எதிரொலி

நாற்பத்தைந்து வருடமாக மெஞ்ஞானத்தின் கொடிய இடியானது உலகமெல்லாம் குமுறுகின்றது. வேதவாக்கியங்களும் அதற்கு ஒற்றுமையாகவே எதிரொலிக்கின்றன. அதனால் மத பேதமும், ஜாதி வைராக்கியமும் நிர்த்தூளியாகின்றது. கல்வியிற் சிறந்த அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் பிவ் வெட்டுகின்றது. இவ்வாம், மற்ற தேசங்களிலும் இவ்வொளியானது பிரதிபிம்பிக் கின்றது. அதனால் அனேகருடைய மனம் ஆவந்தத்தினால் பிரகாசிக் கின்றது. அனேகருடைய மனம் " வெளிச்சத்தைக் கண்ட வௌவாலைப்போல் " வெருளுகின்றது. எவெல்ரால், " மலத்தை உருட்டுகிற வண்டுக்கு சுகந்த வாடை கொடு விஷமென்றது போல்" சிலருள்ளம் உழல்கின்றது. எவ்வாறும், அந்த மதமற்ற கொள்கையாகிய மெய்யொளியின் இடி மின்னலை ஒருவராலும் தடுக்க முடியவில்லை. அந்தக்கொடிய கோடையிடியினால் மூடத் தனமான பக்திகளும் மோட்டினமயான மதப்பைத்தியங்களும் தவிடு பொடியாகின்றன. நாளுக்குநாள் தெய்வீக ஞானமும் சன்மார்க் கமும் ஆர்ப்பரித்துக் கொந்தளிக்கின்றது. அநேகர்களுக்கு மத பேதமான பேய் நிங்கிவிட்டது. இன்னும், சிலருக்குத் தலை சுற்றி ஆடுகின்றது. ஞான ஒளியின் கொடிய அதிர்ச்சியினால் மதபேதமான போலியான கட்டுக்கள் சின்னாபின்னமாக இடிக் கப்படுகின்றன. இன்னும் கொஞ்சக்காலத்தில் மதமானது ஏழை கள் வசத்திலும், மூடர்கள் வசத்திலும் தங்குமேயல்லாது, சீமான் கள் வசத்திலும், அறிவாளிகளின் வசத்திலும் தங்காது! இனி அது பிரயாணமாய்விட்டது; அதன் பயணத்தை ஒருவரா லும் தடுக்க முடியாது. அஞ்ஞான இருளின் மேல் மெஞ்ஞான சூரியன் உதயமாகப்போகிறது! இதோ விடி வெள்ளி உதய மாகிவிட்டது. விழித்துக்கொள்ளுங்கள்! அந்தகர்களும், கூகை களும், வௌவால்களும் தங்கள் பாழடைந்த இருட்டறை களைத் தேடி ஓலமாய்ப் பறக்கின்றன. மெஞ்ஞான ஒளி யானது கோடி சூரியன் போல் பிரகாசித்து நல் உள்ளமான

www.miskinsha.blogspot.com

பழைய பூர்வ நிலைமைக்கு வந்து இலங்கப் போகிறது. இந்தக் கொடிய மின்னலை அஞ்ஞானிகளின் கண்கள் பார்க்க சக்திபெறாது. இப்போதே அவர்கள் கண் கூசுகின்றது. இந்த மெய்யொளியின் பேரிடி முழக்கத்தைக் கேட்டு சிலர் தங்கள் செவியில் விரலைத் திணித்துக்கொள்கிறார்கள். மதபேதமான வைராக்கியப் பேய் பிடித்தவர்கள் தங்கள் மதங்களிலேயே மதபேதமில்லையென்பதை உணரவில்லை. நமது முன்னோர்களாகிய மத மூலாதிரியர்கள், ஞானத்துக்காகவே வேதங்கள் கொண்டு வந்தார்கள். நமது வேதங்களும் மனிதர்களை ஞானத்தில் ஒற்றுமையாகும்படிக் கதறுகின்றன. வேத வாக்கியங்கள் மத பேதத்தையும், ஜாதி வைராக்கியத்தையும் நமக்குப் போதிக்கவில்லை. நமது முன்னோர்களும் நமக்கு ஜாதி பேதத்தை உபதேசிக்கவில்லை. கல்வியில் உயர்ந்தவர்களே, உயர்ந்தவர்கள்! கல்வியில் தாழ்ந்தவர்களே தாழ்ந்தவர்கள். உண்மைக்கு மிஞ்சின மதமுமில்லை உலகத்தில் எல்லா ஜாதியையும் சமமாக நேசிக்க வேண்டும்.

"வேதங்கள் கால நிலைமைக்கு ஒத்துவராமல் அதன்ஞானார்த்தமான பொருள்கள் மறைந்து அதன் கருத்துகள் அனேக விஷயங்களுக்கு ஒற்றுமைப்படாமல் இருண்டு கருஸலாகி, மனிதர்கள் வேத வாக்கியங்களில் தங்கள் அபிப்பிராயங்களைச் செலுத்தும் காலம் வருமானாலும், இன்னும் மத சம்பந்தமான செயல்களில் ஞான சம்பந்தமான மூல காரணங்களை மனிதர்கள் தவறவிட்டு அதன் மூல காரணம் இன்னதென்று விளங்காமல் போகும் காலம் வருமானாலும், ஞானத்திற்கும் காலத்திற்கும் ஒற்றுமையாக புதிய வேதம் வரவேண்டியப் பிரமாணமென்றும், மனிதர்கள் ஞானத்தில் ஒற்றுமையாகும் காலம் வருமளவும் மேற்சொல்லிய நிலைமைகள் காலத்துக்கு காலம் ஏற்படும். அதனால் வேதமும் புதிது புதிதாய் வந்துகொண்டே இருக்குமென்றும், மனிதர்கள் எந்தக்காலத்தில் ஞானத்தில் ஒற்றுமையாகி மெய்ஞானமாகிய ஒரே மதத்தை அனுசரிப்பார்களோ, அதுவே ஞாயத்தீர்ப்பான உலக முடிவு நாள்! அப்பொழுது வேதம் பூலோகத்தை விட்டும் எடுபட்டுப்போகும்" என்பது முன்னோர்களின் சித்தாந்தம். வேத வாக்கியங்கள் தம் தம் காலத்தில், காலத்திற்கும் ஞானத்திற்கும் வெகு ஒற்றுமையாய் இருந்து பின்னால் வரவர மனிதர்கள் அதில் தங்கள் வாசகங்களையும் கலந்து விட்டார்கள். காலமானது வேதங்களை இறங்கினது போல் ஒரே நிலைமையில் இருக்க விடாது. அப்படி, அது இறங்கினது போல் ஒரே நிலைமையில் இருந்த போதிலும், அது எல்லா காலங்களுக்கும் ஒத்து வராது.

எல்லாக்காலங்களுக்கும் ஒத்துவரும்படி வேதம் இறங்கியிருந்தால் அதன் பொருள்கள் வெளிப்படையாயிராமல் மிகக்கருஸலாயிருக்கும். அதை எல்லா காலங்களையும் உணர்ந்தவன் தான் அறியக்கூடும். அப்படி எல்லா காலங்களையும் உணர்ந்தவன் ஒருவனுமில்லை. அந்தந்தக் காலத்திலுள்ளவர்கள், அந்தந்தக் காலத்துக்குரிய பொருள்களை வேத வாக்கியங்களில் நிச்சயிக்கக்கூடும். எல்லாக் காலங்களையும் உணர வேண்டியதில்லை என்றால், ஒரு காலத்தில் நிச்சயித்த பொருள், இன்னொரு காலத்துக்கு உதவாதென்பது நிஜம். அப்படியானால், ஒரு காலத்தில் நிச்சயித்த பொருள்களைக் கொண்டும் விசுவாச சம்பந்தமாயும் செயலின் சம்பந்தமாயும் ஏற்பட்ட சித்தாந்தங்களும் அப்படியே. எந்த ஜாதியார் தங்கள் வேதத்தை இறங்கினது போல பேதப்படாமல் இருக்கிறதென்றும், எக்காலத்துக்கும் அது ஒற்றுமையாகவே இருக்கும் என்றும் எண்ணியிருக்கிறார்களோ, அவர்கள் மேற்சொல்லிய விஷயங்களைச் சற்று கவனிக்க வேண்டும். இல்லாவிடில் அவர்கள் மதம் தற்போது அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் உண்டாயிருக்கிற கல்வி சம்பந்தமான இடி மின்னலுக்கு முன் நிலை நிற்காது.

நம்முடைய ஆன்மா நமக்கு ஆசானாகிறவரையில் நம்முடைய மதத்தையும், வேதத்தையும் கைவிடக்கூடாதென்றும், மதத்தைக் காலத்துக்குகாலம், உண்மையையும், நீதத்தையும் அனுசரித்து ஞானத்துக்கு ஒற்றுமையாக நடத்த வேண்டுமென்றும் முன்னோர்களின் சித்தாந்தம் அலறுகின்றது; ஞானமில்லாவிட்டால் மதத்துக்கு உயிரேயில்லை. எல்லா மதங்களிலும் உண்மை மறைந்துவிட்டது என்கிலும் இல்லாமல் போய்விடவில்லை. அங்கங்கு மின்மினிப் பூச்சியைப்போல் மின்னிக் கொண்டிருக்கிறது. அதுவும் மறைந்து விட்டால் புதிய வேதமும், புதிய மதமும் வரவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. மனிதர்களுடைய துஷ்டத்தனத்தினால், இராஜ சட்டம் அதிகப்படுவது போல், மனிதர்களுடைய அஞ்ஞானத்தினால் மதமும், வேதமும் அதிகப்படவேண்டியதுதான். மதங்கள் மூடர்களுக்காக ஏற்பட்டதேயல்லாது அறிவாளிகளுக்கல்ல! எவ்வளவு அறிவாளியாக இருந்தாலும் சன்மார்க்கத்தை அனுசரிக்காதவன் அறிவாளியுமல்ல. எல்லோரும் ஞானத்தில் ஒற்றுமை ஆகிவிட்டால் மத சம்பந்தமான சண்டையே அற்றுவிட்டது. அதற்கு இன்னும் கொஞ்சக்காலம் போகவேண்டும் இன்னும் அனேகர்களுக்கு அறிவு போதாது. அதுவரையில் மதங்களைக் காலத்துக்கு காலம் அனுபவ சித்தாந்தமாகிய ஸைன்ஸென்னும் மெஞ்ஞானத்திற்கும், புத்திக்கும் ஒற்றுமையாக நடத்த வேண்டும்.

www.miskinsha.blogspot.com

அதாவது : (Work of God is word of God) கடவுளுடைய செயலே, கடவுளுடைய சொல். அல்லது கடவுளுடைய சொல்லே, கடவுளுடைய செயல். வேதங்கள் கடவுளுடைய சொல்லாயிருக்கிறது. சிருஷ்டிப் பொருள்கள் கடவுளின் செயலாயிருக்கிறது. சிருஷ்டிப் பொருள்களின் ரூபத்தில் கடவுளின் வாக்கியம் ,கொத்தப் பட்டிருக்கிறது. கடவுளின் சொல்லின் வாக்கியமாகிய வேதத்தைச் சரசின்கண் வரிக்கின்றது. கடவுளின் செயலின் வாக்கியமாகிய சிருஷ்டிப் பொருள்களின் தத்துவப் பிரமாணங்களைப் புத்தியின் கண் வரிக்கின்றது. இந்த இரண்டுக்கும் மத்தியில் புத்தியிருக்கிறது. புத்தியைக் கொண்டுதான் மனிதன் மேன்மையடைந்திருக்கிறான். மதமும் இந்த புத்திக்காகத்தான் வந்திருக்கிறது. விசுவாசம், பக்தியும்கூட புத்திக்குத் தாழ்ந்ததுதான். புத்தியோ முந்தியேயுள்ளது. புத்தியைக் கொண்டுதான் விசுவாசம், பக்தி உண்டாக வேண்டும். கடவுளுக்கும், மனிதனுக்கும் இடையில் மத சம்பந்தமான சொந்தத்தை ஏற்படுத்தினதும் இந்தப் புத்திதான். புத்திக்கு மாற்றமாக வேதமும், மதமும் இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அதைக்கொண்டும் மனிதர்கள் நேர்வழிபெற முடியாது. ஆகையால் மதமும், வேதமும் புத்தியைக் கொண்டும் சம்பந்தப் பட்டதல்ல.

மனிதர்களுக்கு மூட பக்தியும், மூட விசுவாசமுந்தான் வேண்டும் என்று சொல்வது சரியல்ல. ஒருவரும் மூடத்தனமான மதத்தையும் வேதத்தையும் அனுசரிக்க முடியாது. ஆகையால் புத்தி, வேதம், இயற்கையாகிய தத்துவப் பிரமாணம் இந்த மூன்றும் ஒன்றுக் கொன்று மாற்றமானதல்ல. மகா ஒற்றுமையான கடவுளின் உண்மைத் தூதர்களாயிருக்கும். எப்போதும் நிஜத்தையே சொல்லக் கூடியவர்கள் ஆகையால். அனுபோகமாகிய தத்துவப் பிரமாணம், புத்தி, வேதம் இந்த மூன்றும் கடவுளால் நமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் ஒன்றின் சொல்லுக்கு மற்ற இரண்டும் சாட்சியாயிருக்கும்.

ஒன்றின் சொல்லுக்கு மற்ற இரண்டும் சாட்சியாக ஒத்துக் கூறினால் அதுவே சரி. ஒன்றின் சொல்லுக்கு ஒன்று மட்டும் சாட்சியாக ஒத்து நின்று, இன்னொன்று சாட்சியாக ஒத்து வராவிட்டால் அதுவும் நம்பத்தக்கதல்ல. இந்தப் பிரமாணத்துக்கு எந்த மதம் எந்த வேதம் ஒற்றுமையாயிருக்கிறதோ, அந்தமதமும் அந்த வேதமும் உண்மையானது. மதம், வேதங்களின் உண்மை களை ஆராய்ச்சி செய்து கண்டு பிடிப்பதற்கு இதற்கு மிஞ்சின உரைகல் அல்லது மாற்றுக்கல் இன்னொன்றில்லை. கருத்தி, யுக்தி

அனுபோகமென்பதின் தாற்பரியமும் இதுதான்! எந்தச்சங்கதியும் சுருதி, யுக்தி, அனுபோகத்திற்கு ஒத்திருக்க வேண்டும். இல்லா விட்டால் அது சரியல்ல என்பது முன்னோர்களின் சித்தாந்தம். ஒருவர் 'குர்ஆனி'லுள்ள இஸ்லாம் மதத்தை இந்தப் பிரமாணத் திற்கு ஒத்திருக்கிறதாகச் சொல்லுகிறார். மனிதர்கள் தங்கள் அபிப்ராயத்துக்கு மூடத் தனமாக அனுசரித்திருக்கிற இஸ்லாம் மதத்தைக் குறித்ததல்ல. ஆகையால் அவர் சொல்லுகிறார்: (அல் இஸ்லாமு ஹுவல்பித்ரத்து, வல்பித்ரத்து ஹுவல் இஸ்லாமு) '' இஸ்லாம் மதமே இயற்கைப் பிரமாணம்; இயற்கைப் பிரமாணமே இஸ்லாம் மதம்.'' இந்த பிரமாணத்தை ஒத்தில்லாத மதமும், வேதமும் அல்லது இந்தப் பிரமாணத்தை ஒத்து நடக் காத மதங்களும், வேதங்களும் இந்தக் காலத்தில் பஞ்சாய்ப் பறந்துவிடும்!

எல்லா மதங்களிலும் பொய்யான கட்டுக்கதைகள் அதிகப்பட்டு உண்மை மறைந்து விட்டது. எந்த மதத்திலும் அது உற்பத்தி யாகிக் கொஞ்சக் காலம் வரையில் மகாத்மாக்கள் அதிகமாக உண்டாயிருந்தார்கள். பின்பு வரவரக் குறைந்து போனார்கள். மகாத்மாக்கள் வெளிக்கு எந்த மதத்தில் இருந்த போதிலும் மதமற்ற மெஞ்ஞானமான மதத்தையே அனுசரித்து இருந்தார்கள். அவர்கள் மத பேதத்தையும் ஜாதி வைராக்கியத்தையும் போதிக்க வில்லை. அவர்கள் கொண்டுவந்த வேதங்களும் அப்படியே. அவர்களுடைய ஞான மார்க்கத்தையும் விசுவாசத்தையும் உலகத் தில் பரவவிடாமல் தடுத்து, அவர்கள் உயிருக்குப், பொருளுக்கும், அபிமானத்துக்கும் நஷ்டத்தை உண்டாக்கக்கூடிய துஷ்டர்களுடன், தங்கள் நஷ்டத்தையும், தங்களைச் சேர்ந்தவர்களின் நஷ்டத் தையும் தடுத்துக்கொள்ளும் பொருட்டாக யுத்தம் செய்திருந்த போதிலும் ஒருவரையும் தங்கள் மதத்தையும், கொள்கையையும் அனுசரிக்கும்படி வம்பிக்கவில்லை. வம்பிக்கிறதில் விசுவாசமும், சமாதானமும் உண்டாகாது. ஆதலால் ஒருவரையும் வம்பிக்க வேண்டாமென்று தாங்களே சொல்லியிருக்கிறார்கள். தங்கள் மதத்தை அனுசரிக்காதவர்களிடத்தில் தங்களுக்கு அடங்கியிருக்கும் பொருட்டாகத் தலைக்கூலி அல்லது தலைவரி வாங்கிக்கொண்டு விட்டுவிட்டார்கள். தங்கள் மதத்தை அனுசரிக்காத ஒருவரையும் அவர்கள் கொலை செய்யவில்லை. அநேகருடைய உயிரைக் காப்பாற்றும் பொருட்டாக மனித பலியை மிருக பலியாக மாற்றி விட்டார்கள். கடவுளுக்கு யாதொரு பலியும் தேவையில்லை என்று, வேத வாக்கியத்தினால் அறிவித்திருக்கிறார்கள். இன்னமும் சொல்லியிருக்கிறார்கள்:

www.miskinsha.blogspot.com

எல்லா மதங்களின் உண்மையும் ஒன்றுதான்; அவைகள் கால விகற்பத்தினால் கெட்டுப்போய் விட்டன. பாவத்தை விட்டும் விலகியிருப்பது உங்களுக்கு தோன்பாயிருக்கும். கடவுளுடைய சொல்லுக்கு வழிபடுகிறது, உங்களுக்கு தவமாயிருக்கும். அற்புதம் செய்ய விரும்ப வேண்டாம்; மூடர்களைச் சீர்திருத்துவதே பெரிய அற்புதம்! உங்கள் மதங்களை நீங்களே சீர்திருத்திக் கொள்ளுங்கள். அல்லது, உங்கள் மதத்தின் சீர்திருத்தமாகிய எங்கள் மதத்தை அனுசரியுங்கள். உலகத்துக்கெல்லாம் ஒரே மதந்தான்!

சில மதங்கள் 500 வருடத்திலும், சில மதங்கள் 1000 வருடத்திலும் கெட்டுப் போயிருக்கிறது. அது கெடாமலிருந்தால் அதையே கால விகற்பங்களுக்கு ஒற்றுமையாக நடத்த ஒருவர் வரவேண்டும் என்று வேதங்கள் கூறவில்லையா? சில மதங்களில் 100 வருடத்திற்கு ஒரு விடுத்தம் ஒருவர் வந்து மதத்தைப் புதுப்பிப்பார் என்கிறார்கள். இந்த ஆதாரத்தைக் கொண்டு தங்கள் மதம் எக்காலத்துக்கும் ஒற்றுமையாய் இருக்கும் என்கிறார்கள். இது உண்மையாயிருந்தால் அப்படி ஒத்து நிற்குமென்பதில் சந்தேகம் இல்லை. எல்லா மதங்களிலும் வெளிப்படையான சடங்குகள் பல விதமாயிருந்த போதிலும் பொது விதிகள் ஒற்றுமையாகவேயிருக்கிறது. என்றாலும், அந்த மதங்களில் உண்மை செம்மையாக வெளியாகவில்லை அந்த மதங்களுடைய சடங்குகளின் மூல காரணமும் தெரியவில்லை. உண்மை அதிகமாய் மறைந்துவிட்டது. நமது கொள்கைகளும், நமது செயல்களும், எந்த விதமாயிருந்த போதிலும் ஞானத்தைப் பரிபூரணமாய் வெளியாக்கக் கூடியதாயிருக்க வேண்டும். ஒருவரும் ஒரே உடை அணியமாட்டார்கள்; ஒரே ஆகாரம் சாப்பிடமாட்டார்கள்; என்றாலும், ஒரே கடவுளைத் தான் வணங்கவேண்டும். மதங்கள் காலத்துக்குக் காலம் சீர்திருத்த மடையாததினால் நம்மவரில் ஒரு கூட்டம் நாஸ்திகராகிவிட்டார்கள்.

இவர்களின் கொள்கை என்னவென்றால், "மனிதர்கள் மூடத்தனமாயிருந்த காலத்தில் பெரிய பூமி அதிர்ச்சி, இடி, மின்னல் முதலிய கொடிய பயங்கரமான ஆபத்துகளினால் மனிதர்களுக்கு உண்டாகிற அழிவை உத்தேசித்துத் திடுக்கமடைந்தவர்களாக மூடத்தனமான பயத்தினால், அவர்கள் தங்களுக்கு மேலாக ஒரு கடவுள் இருக்கிறார்; அவர் கோபமாயிருக்கிறபோது இப்படிச் செய்கிறார். அவரை நாம் சந்தோஷப்படுத்த வேண்டும்; அப்பொழுதுதான் கிருபை செய்வாரென்று பலியிடவும் ஆராதனை செய்யவும் தலைப்

பட்டார்கள். அதுவே வரவர மதமாகி விட்டது. மற்றபடிக் கடவுளுமில்லை, மதமுமில்லை. வைத்திய சாஸ்திரத்தின்படி (பிணி) சங்கடத்தையும் வருத்தாவிட்டால். எல்லா வஸ்துகளையும் சாப்பிடலாம். தாயிடம் போகிறதும், மகளிடம் போகிறதும் சரிதான். நாம் இம்சிக்கப்படாமலிருப்பதற்காக ஒருவரையும் இம்சிக்கப் படாது என்பதாகும்". ஆஹா; இவர்களின் கொள்கை இவர்களுக்கே சிறந்தது. நமது எண்ணங்களும் விசுவாசங்களும் மூடத்தனத்தின் பலாபலன்தானா? நமது முன்னோர்கள் வள்ளுவர்களுடைய ஜோசியத்தின் பேரிலா உயிரைக் கொடுத்தார்கள்? மதங்களெல்லாம் மூடத்தனத்தின் பலாபலனாயிருந்தால் அதைக் கொண்டும் கல்வியிற் சிறந்தவர்களுக்கு எப்படி திருப்தியுண்டாகும்? கடவுளில்லையா? கடவுளோடு முன்னோர்கள் பேசவில்லையா? நமக்கு அவர்கள் வேதங்கொண்டு வரவில்லையா? அவர்கள் நம்மை ஏமாற்றியா விட்டார்கள்? வெளிக்கண் குருடாயிருப்பவர்களுக்குச் சூரியனைத் தெரியாது. அகக்கண் குருடாயிருப்பவர்களுக்குக் கடவுளைத் தெரியாது. கடவுள் சிருஷ்டி பொருள்களின் மூலமாக நம்மோடு பேசுகிறார். சிருஷ்டிப் பொருள்களின் தத்துவ பிரமாணங்களைக் கொண்டு அவர் கருத்தை நாம் தெரிந்து கொள்கிறோம். வேத வாக்கியங்களும், சிருஷ்டிப் பொருள்களின் தத்துவப் பிரமாணமாகிய இயற்கைப் பிரமாணங்களைக் கொண்டு கடவுளை நமக்கு அறிவிக்கின்றன. நம்முடைய சரீரத்தைக் கிழித்துப் பார்த்தால் இரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு முதலியவை காணப்படுகின்றன. ஆன்மாவைத் தெரியவில்லை. ஆன்மா இல்லையா? நாம் எந்தத் தத்துவத்தைக் கொண்டு ஜீவித்திருக்கிறோம். வெறும் சூனியத்தை கொண்டா? நாம் ஆன்மாவைத் தெரிந்து கொள்ளாத வரையில் கடவுளையும் தெரிந்துகொள்ள இயலாது.

நாம் இரசாயன சாஸ்திரத்தைக் கொண்டும் ஆக்ஸிஜன், நைட்ரோஜன், நைட்ரோஜன், அல்லது பிராணவாயு, ஜல வாயு, உப்பு வாயு முதலியவைகளைத் தனித்தனியாகப் பிரிக்கலாம்; என்றாலும் அதன் தொழிலை அதை விட்டும் நீக்க இயலாது. இரண்டு லட்ச மைலுக்கு அப்புறத்திலுள்ள நட்சத்திரங்களை தூரதிருஷ்டிக் கண்ணாடியினால் பரிசோதிக்கிறோம். இன்னும் பூதக்கண்ணாடியினால், கற்களிலுள்ள கரடுகளையும், கொசுக்களிலுள்ள பேன்களையும் காண்கிறோம். அந்தச் சிறிய பிராணியைப் பார்த்தால் அதன் அங்கத்தின் அதிசயம் ஒரு பெரிய உலகம் போலிருக்கிறது. இந்தக்கருவிகளெல்லாம் கடவுளைக் காட்டுமா? நமது கண்களில் அவர் ஒளி நிறைந்திருக்கிறது; அவரை எப்படி பார்க்கக்கூடும்?

www.miskinsha.blogspot.com

நமது அறிவிலும் அவர் ஒளி நிறைந்திருக்கிறது; அவரை எப்படி அறியக்கூடும்? ஒவ்வொரு அணுக்களும் அவர் தத்துவத்தினால் அசைந்து கொண்டிருக்கிறது; அவரை எப்படி மட்டுப் படுத்தக்கூடும்? வான சாஸ்திரத்தின் கண்ணைக்கொண்டு பார்! பூமி சாஸ்திரத்தின் கண்ணைக்கொண்டு பார்! தத்துவ சாஸ்திரத்தின் கண்ணைக் கொண்டு பார்! வைத்திய சாஸ்திரத்தின் கண்ணைக் கொண்டு பார்! இரசாயன சாஸ்திரத்தின் கண்ணைக் கொண்டு பார்! அவருடைய ஞாபகத்தை வரத்தாத ஓர் எண்ணமாவது நம்முடைய மனதில் ஓடிவராது. உலகத்தின் அரூபமே கடவுள். கடவுளின் சரூபமே உலகம்! என்றாலும் இந்த ரூபத்திலும் அவர் மட்டுப்பட்டவரல்லர். அவருடைய செயலையும் சொல்லையும் மட்டுப்படுத்த முடியாது. அவருடைய சொல்லும் செயலும், இன்னும் அனேகம் வெளியாக வேண்டியது பாக்கியிருக்கிறது. அந்த விஷயங்கள் ஒரு வேதத்திலும் ஒரு மதத்திலும் கட்டுப்பட்டு போகவில்லை; அப்படிச் சொல்லுகிறவர்கள் பைத்தியக்காரர்கள். கொஞ்ச நேரம் யாதொரு எண்ணமுமற்று நம்முடைய இந்திரியங்களை அடக்கியிருந்தால் அவருடைய ஒளியைக் காணக்கூடும்.

நமது முன்னோர்கள் எதார்த்தவாதிகள் மட்டுமல்ல; சன்மார்க்கர்களாகவும் இருந்திருக்கிறார்கள். அவர்கள் நம்மை ஏமாற்ற இரத்தம் சிந்தவில்லை. அவர்கள் நமக்குக் கொண்டு வந்த மெய்ஞானத்தின் பேரில், பின்னுள்ளவர்கள் போட்ட திரையினால் உண்மை மறைந்து விட்டது. அதனால் வேதம் ஒரு விதமாகவும் மதம் ஒரு விதமாகவும் பிரிந்து விட்டது. சிலர் தங்கள் மதத்தில் தங்கள் புத்திக்குப் பிடிக்காத சங்கதிகளைப் பிசகென்று நன்கு உணர்ந்திருந்தும், ஜாதிக்கட்டுக்குப் பயந்து கும்மாயிருந்து விடுகிறார்கள். சிலர் அதைச் சட்டை பண்ணாமல் உண்மையை எடுத்துக்காட்ட துணிந்தால் அவர்களின் கொடியை தெருப்பைத் தங்கள் முன்னாலையில் முடியத் துணிகிறார்கள். பின்னுள்ளவர்கள் தங்கள் காலத்தில் நல்ல எண்ணத்தோடு எடுத்த புதிய எடுப்பு அவர்கள் காலத்திற்கு வேண்டியதாயிருந்தது. அவர்களையும் அந்த காலத்தில் மனிதர்கள் நிந்தித்தார்கள். நீங்கள் அவர்களைப் புகழ்கிறது போல், உங்களுக்குப் பின்னுள்ளவர்கள் உங்களையும் புகழ்வார்கள். ஆனதினால் புத்தி, வேதம், அனுபோகம் மூன்றுக்கும் ஒற்றுமையாகிய மெஞ்ஞானத்தை முன்னோர்கள் கொண்டு வந்தபடி விவரித்துக் காட்டுங்கள். அந்த மதமற்ற மெஞ்ஞான மதத்தையே சகலரும் தங்கள் மதத்தின் மூலமென்று உணர்வார்

கள், "அமெரிக்கர், ஆங்கிலேயர்களைப்போல்" எல்லாரும் மெஞ்ஞானத்தையே அனுசரிப்பார்கள். உண்மையான மதம் எதுவோ, அஃது அறிவாளிகளைத்தானே கருஷிக்கும். ஒருவரும் கூப்பிட வேண்டிய தேவையில்லை.

ஆகையால் சகல மதத்திற்கும் உயிராகிய மெஞ்ஞானத்தையே விவரியுங்கள். அவரவர் வேதமும் அதற்கு என்ன விளைவளிக்கின்ற தென்பதைத் தாங்களே உணர்ந்து கொள்வார்கள். ஒருவரும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. உண்மையை எந்த வேதமும் பொய்யாக்காது; பொய்யை எந்த வேதமும் மெய்யாக்காது!

இராஜ சட்டம் காலத்துக்குக்காலம் மாறுதலடைவது எப்படி சகஜமோ, அதுபோல் மார்க்கச் சட்டங்களும் காலத்துக்குக்காலம் மாறுதலடைய வேண்டியது சகஜமே. நாளதுவரையில் எந்தமதமும் ஒரே நிலைமையில் இருக்கவில்லை; மதங்களைக் காலத்துக்கும், ஞானத்துக்கும், அனுபோகத்துக்கும் ஒற்றுமையாக உண்மையை மட்டும் மனிதர்களுக்கு எடுத்துப் போதிக்கிறது. ஒரு மனிதனால் மட்டும் இயன்ற காரியமல்ல. ஆனதினால், ஞானவான்களின் கொள்கை இன்னதென்றும் வேத வாக்கியங்களின் சாரம்சம் இன்னதென்றும் எடுத்துக்காட்டுவோம். அதன் பின் நீங்களே உங்கள் மதங்களைச் சீர்திருத்திக் கொள்வீர்கள். அப்படிச்செய்யாவிட்டால் உங்கள் மதங்கள் நிலை நிற்காது. சர்வ சமய சமரச கருத்தை யாவரும் அனுசரிக்க வேண்டியது அவசியம்.

www.miskinsha.blogspot.com

விக்கிரக நிக்கிரஹம்.

விக்கிரகம் = அஃதாவது, இரண்டு = (துவிதம்)
நிக்கிரகம் = அஃதாவது, இரண்டென்பதில்லை = (அத்வைதம்)

இதிப்பே கடவுளின் தூது. சொல்லே அவர் வாக்கியமாம் ஏனென்றால் 'துவுவத்'தென்னும் துவித மார்க்கங்கள் முடிவாகி விட்டன. இனி, 'விலாயத்'தென்னும் அத்வைத மார்க்கந்தான் நடைபெற வேண்டும். முன்னுள்ள நபிமார்களாகிய தீர்க்கதரிசிகள் தேவ பூசை கூடாதென விக்கிரகங்களை நிக்கிரகம் செய்திருக்கிறார்கள். அப்படியிருக்க பின்னுள்ள அவிவேகிகள் விக்கிரகங்களை வெளிப்படையாய் வணங்காவிட்டாலும் அதற்குப்பதிலாகத் தங்கள் மனதின்கண் தேவபூசைகளை ஏற்படுத்திக்கொண்டார்கள். தன்னை இன்னானென்றும், இன்ன வஸ்துவென்றும் அறியாமல் போனார்கள். தேவ பூசையாகிய மனதின்கண் ஏற்பட்டுள்ள விக்கிரகங்களையும் நிக்கிரகம் செய்தவனே ஞானியாவான்!

ஒரு நபியாவது 'நுபுவத்'தென்னும் துவித மார்க்கத்தை முடிவு செய்ததாகச் சொல்லவேயில்லை. முதன்மையது நபி மட்டுந்தான் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்க, அவர் மார்க்கத்திலும் துவிதம் இருப்பது ஆச்சரியம்! ஞானத்தை மனிதர்களுக்கு உபதேசிக்க வந்த வர்களே தீர்க்கதரிசிகளாம். இந்த தீர்க்கதரிசிகளாகிய நபிமார்கள் அனேகருக்குந் துவித மார்க்கத்தை முற்றிலும் கண்டித்து விலக்கி அத்வைத மார்க்கத்தை நிலை நிறுத்தாட்டச் சமயமும் காலமும் வாய்க்கவில்லை. ஏனென்றால் மனிதர்கள் அவரவர்கள் காலத்தில் அத்வைத உபதேசத்திற்கு யோக்கியதையற்றவர்களாகவே இருந்தார்கள். ஞாபகமிருக்கட்டும்! துவித மார்க்கம் நபிமார்கள் உபதேசித்ததல்ல. தீர்க்கதரிசிகளின் தாவா உலகத்தில் ஏற்படுவதற்கு முன்னேயே மனிதர்கள் தங்களுக்காகத் துவித மார்க்கத்தை வம்பாக ஏற்படுத்திக் கொண்டார்கள். அஃதெப்படி எனில்,

சில விவேகிகள், நாமும் இந்த உலகமும் யாது? எப்படி உண்டானோம்? சர்வமும் தானாய் உள்ளதா? மற்றபடி வேறொரு வஸ்து அல்லது தத்துவத்தின் வருதிப்படியுண்டானதா? என ஆராய்ச்சி செய்தபோது அவர்கள் செய்த நிர்மானமாவது: "தமக்கிருக்கும் ஏலாத்தனத்தையும், தமக்கு நேரிடும் சங்கடங்களையும், தம் சித்தம் போல் ஒன்றும் தமக்கு நடைபெறாததையும், தங்களுக்குண்டாகின்ற மரணத்தையும், ஒவ்வொரு வஸ்தின் அழிவையும், சகலமும் ஒரே நிலைமையில் இல்லாமல் பேதமடைந்து கொண்டு வருவதையும் கவனித்து இவை தானே தானாயுள்ளதாயிருந்தால் இவற்றிற்கு இந்த உபாதைகளும், அழிவும், மாறுதல்களும், சங்கடங்களும் ஏற்படக் காரணமில்லை. எது தானாயுள்ளதோ, அது நிரப்பமானதாயும், அழியாததாயும் தேவையற்றதாயும், எப்போதும் ஒரே நிலைமையில் உள்ளதாகவும் இருக்கவேண்டும். இவற்றை அப்படிக் காணப்படவில்லை. ஆகையால், அகத்தியம் இவை வேறொரு வஸ்துவின் அல்லது தத்துவத்தின் வருதிப்படியே உண்டாயிருக்க வேண்டும்" என்று தேவ பக்தியை வம்பாக உண்டாக்கிக்கொண்டு கடவுளுக்கு அடையாளமாக விக்கிரகங்களை வைத்து ஆராதனை செய்யத் தலைப்பட்டார்கள். தமக்கும் பிறருக்கும் நல்லதாகத் தோன்றும் விஷயங்களை நன்மையான காரியமென்றும், தமக்கும் பிறருக்கும் கெட்டதாகத் தோன்றும் விஷயங்களைப் பாவமான காரியமென்றும் மார்க்கங்களை உண்டுபண்ணிக் கொண்டு அதன்பேரில் நடந்து வந்தார்கள். ஒவ்வொரு காரியத்தையும் நன்றாகப் புத்தியைக்கொண்டு ஆலோசித்து ஏற்படுத்தி இருந்தார்கள். இவ்விதமாகத் துவித மார்க்கம் ஏற்பட்டுவிட்டது. அப்படி இருக்கும்போது, அதி நுட்பமான புத்திசாலிகள் முன் சொன்னவர்களைப் பார்க்கிலும் அதிகக் கூர்மையான அறிவாளிகள் செய்ததாவது: "மற்ற வஸ்துக்களை விசாரணை செய்வதைப் பார்க்கிலும் நம்மையே நாம் விசாரணைசெய்வது உத்தமம். ஏனென்றால், உலகத்தில் மற்ற வஸ்தைப்போல் நாமும் ஒரு வஸ்தாக இருக்கின்றோம். மற்ற வஸ்துக்கு ஏற்படுகிற நிர்மானந்தான் நமக்கும். ஆகையால், மற்ற வஸ்துக்கள் நமக்குத் தூரமாயிருக்கின்றன. நமக்கு நாமே சமீபமாயிருக்கின்றோம். ஆதலின் சமீபமாயிருக்கிற நம்மையே அறியாமல் தூரமாயுள்ளவைகளை எப்படி அறியக் கூடும்?"

ஆகவே, தன்னையே விசாரிக்கத் தலைப்பட்டார்கள். அஃதெவ்வாறெனில், "நாம் இதற்கு முன் எங்கிருந்திருப்போம்? தாய், தகப்பனின் இந்திரியமாகிய சுக்கில சுரோணிதமாய் இருந்திருப்போம். இதற்கு முன் நாவியம், பழவர்க்கம், மாமிசம், கீரை, பிறங்கு முதலிய உண், நீர், குடிப்பு முதலான ஆகாரதிகளாய் இருந்திருப்போம். இதற்கு முன் (பிரிதிவி) மண்ணாக இருந்

www.miskinsha.blogspot.com

திருப்போம். இதற்கு முன் (அப்பு) ஜலமாக இருந்திருப்போம்; இதற்கு முன் (காற்று) வாயுவாக இருந்திருப்போம்; இதற்கு முன் (தேயு) அக்கினியாகிய அழல் சொரூபமாக இருந்திருப்போம்; இதற்கு முன் ஆகாயமாக இருந்திருப்போம்; இதற்கு முன் ஆகாய வடிவமான பிரம சொரூபமாய் இருந்திருப்போம்; இதற்கு மேல் யாதொரு பதவியுமில்லை." ஆதலின் தச்சில்லா மாளிகை சமைத்திருப்பதையும், வித்தில்லா மாமரம் முளைத்திருப்பதையும் தெரிந்து கொண்டு தன்னையே கடவுளாகத் தெரிந்து தன்னில் தானே ஐக்கியப்பட்டார்கள். "அசலில் தமக்கு மரணமும் பிணிகளும், ஏலாத்தனமும் இருந்ததில்லை. இடையில் பொய்யாக தோன்றி இருக்கின்றது எது அசலில் இல்லாமல் இடையில் கற்பிதமாகத் தோன்றி இருக்கிறதோ அதை நாம் ஜயித்து நமக்கில்லாமல் நீக்கிவிடலாம். அசலிலுள்ள நமது பூரணமான சர்வ வல்லமையும் நம்மை விட்டு நீங்கக் காரணமில்லை நம் அசலிலுள்ளது ஒருபோதும் நம்மைவிட்டு நீங்கா"தென நன்றாய்த் தெரிந்து கொண்டார்கள்.

ஆகையால் தனக்கன்னியமாய் பிரமமில்லை; பிரமத்திற்கன்னிய மாய்த்தானில்லை. தன் ஆன்மாவே சுத்த பிரமமென்று, தன் இந்திரியங்களாகிய புலன்களைப் புத்தியிலும், புத்தியை மனதிலும், மனதை ஆன்மாவிலும் ஒடுக்கி அஃதாவது, தன்னை யாதொரு தத்துவ அம்சங்களான தடிப்பின்றி, அகண்டமான முடிவற்ற தானாய்த் தனியாய் என்றைக்குமுள்ள அறிவின் சுபாவமான சுத்த ஆகாயத்தைப் போன்ற வெறும் வெட்ட வெளியாகிய, சர்வத்திற்கும் அதீதமான, மனதாலும் வாக்காலும் எடுத்துரைக்க ஒண்ணாத, சர்வமுமிறந்து இல்லாமையாய் இருக்கிற, இல்லாமைக்கில்லாமை யான உள்ளமையாகிய தன் சுய வடிவான, சுத்த சூனியமான அறிவாகாயத்தில் சேர்த்து "முன்னும் பின்னும், மேலும் கீழும், இடப்புறமும் வலப்புறமும், தன் சிந்தனையினால் முடிவில்லாத அரூபத்திற்கு அரூபமான பிரமாகார அரூபத்தைச்சிந்தித்துத் தன் சரீரம் உள்பட சர்வத்தையும் அதில் நசித்து இறக்கும்படிச் செய்து அலையற்ற சமுத்திரம்போல் தனது எண்ணம் அசையாமல், வெளித் தோற்றமாகிய ஜெகத்தையும், உள் தோற்றமாகிய மன திலுண்டாகும் பல எண்ணமான விடய சொரூபங்களையும் அதில் அழித்துக் கரையும்படிச் செய்து, சுத்த மெய்யான தன் சுயவடிவில் ஐக்கியப்பட அப்பியாசித்துச் சர்வமும் அதில் லயப்பட்டுத்தானே தானாயிருக்கும்போது" அவர்களுக்கு மெய்யான உதிப்புண்டாகி நமக்கு மெய்யான வார்த்தைகளை அறிவித்தார்கள். ஆகையால்,

அவர்களின் உதிப்பே கடவுளின் தூதும், அவர்களின் வார்த்தையே கடவுளின் வாக்கியமுமாம். இவர்களைத்தான் தீர்க்கதரிசிகள் என்று சொல்லப்படும்.

இவர்கள் தாம் துவைதிகளை அத்வைதிகளாக்க வந்தவர்கள். இவர்களின் முக்கியத் தாற்பரியம்; "தேவ பூசையாகிய விக்ரகத்தை நிக்ரகம் செய்து மானத பூசையைக் கற்பிக்கவேண்டும் என்பது தான்." இவர்கள் மதத்தில் அணுவேனும் துவிதங்கூடாது. மானத பூசையென்பது விக்கிரக ஆராதனை முதலிய தேவ பூசை முதலானதல்ல. வணக்கமில்லாத வணக்கமாகிய தன்னைத்தான் வணங்கும் வணக்கமேயாம்! மனதின் விக்கிரகத்தையும் நிக்கிரகம் செய்வதுதான் அவர்களின் முக்கியக் கருத்து. அந்த மகான்களை யே வணங்குவதும் தாற்பரியமல்ல. சர்வமும் கடவுளாயிருப்பது போல் அவர்களும் கடவுள்தான். அந்த மகான்களின் படங்களை யும், சுரூபங்களையும் வணங்குகிறதும் அல்ல; இவைகளெல்லாம் துவைதிகள் ஏற்படுத்தினதேயொழிய அத்வைதிகள் ஏற்படுத்தின தல்ல. துவைதிகள் வேதங்களிலும் தங்கள் தாற்பரியங்களைக் கலந்து விட்டார்கள். இக்காலத்தில் வேதங்களை வாசித்துணர்வது மகா கஷ்டமாய் விட்டது. ரிஷிகளின் ஞானமானது தேவ பூசையிலும், விக்கிரக ஆராதனையிலும், சூரிய வணக்கம், நட்சத்திர வணக்கத்திலும் இன்னும் வேறுவிதமான பல வஸ்துக்களின் ஆராதனையிலும் மறைந்து விளக்கமில்லாமல்போன காலத்தில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் தீர்க்கதரிசியாக வந்து ஞானத்தை விளக்கிக் காட்டினார். இவர் வராதிருந்தால் ஞானம் உலகத்தை விட்டும் மறைந்தே போயிருக்கும். மரித்துப்போன ஞானத்தை மறுபடியும் உயிராக்கினார். இவரைச் சிலர் கிறிஸ்துவென்று சொல்கிறார்கள்; இவர் கிறிஸ்துவல்லர்; இவர் உபதேசம் கிறிஸ்துவுக்கு 1500 வருடத்திற்கு முன் எழுதப்பட்டது. "ரிவியூ ஆப் ரிவியூஸ்" 3-வது வால்யூம் 435, 436ஆம் பக்கம் "ஜான் டேவிஸ்" சொற்படி கிறிஸ்துவுக்கு 300 வருடத்திற்குப்பின் எழுதப்பெற்றதென்றால், சரித்திரங்களுக்கு இணங்கவில்லை.

துவைதிகளின் மதமும் கொள்கையும் கனவைப்போல் அணுமானமும் சந்தேகமும் நிறைந்த சுத்தப்பொய் வடிவாகவும், அத்வைதிகளின் மதமும் கொள்கையும் விழிப்பைப்போல் சந்தேகமற்ற பிரத்தியக்ஷ மான சுத்த மெய் வடிவாகவும் இருக்கிறது. வேதங்களிலும் அத் வைதமான ஞான நூல்களிலும், அத்வைதமான வார்த்தைகளைக் கண்டால், துவைதிகள் தங்கள் மதத்திற்கும் கொள்கைக்கும் இடை

www.miskinsha.blogspot.com

யுறாயிருக்கிறதெனக் கண்டு அதைத்திருத்தித் தங்கள் கருத்துக் களைப்புகுத்தியிருக்கிறார்களெனத் தெரிந்து கொள்ளவும். ஒவ் வொரு வேதமும் தனக்கு முன்னுள்ள வேதத்தைத் துவைதிகள் திருத்திக் கெடுத்து விட்டதாகக் கூறுகின்றது. அப்படியே அத் வைதமான ஞான நூல்களையும் திருத்திக் கெடுத்து விட்டார்கள் உலகத்தில் ஒரு வேதமாவது, ஒரு புஸ்தகமாவது துவைதிகளால் மாறுதலடையாததில்லை இவைகளிலுள்ள தவறுகளை நீக்கி சுத்த மெஞ்ஞானத்தையே எடுத்துப் போதிப்பவர்களைத் தீர்க்க தரிசிகளின் அம்சத்தில் பிறந்தவர்களென்று தெரிந்து கொள்ளவும் அவர்களால்தான் அந்தத் தவறுகளைக் கண்டுபிடிக்கக் கூடும். மற்றவர்களால் ஏலாது. வேதத்தின் தாற்பரியமும், அத்வைத ஞான நூல்களின் கருத்தும் துவிதமேயல்ல; அத்வைதந்தான்! எந்த பாஷையிலும், எந்த ஜாதியார்களின் நூலிலும் இந்தக்குழப் பம் நேரிட்டே இருக்கிறது. துவைதிகள் அத்வைதிகளை அதிக நிம்சை செய்து வந்தார்கள். ஆதலால், துவைதிகளுக்கு அத் வைதிகள் தங்கள் ஞானத்தை மறைத்துக்கொண்டே வந்தார்கள். அந்தச் சரித்திரங்களே எழுதுகிறதாயிருந்தால் புஸ்தகம் விரிவாகும். அதைக் கேட்பவர்கள் ஒருவரும் அழாமல் இருக்க ஏலாது. எப்போ துமே துவைதிகள் அத்வைத மார்க்கத்திற்குத் துரோகிகளாக இருந்திருக்கிறார்கள், அவர்கள் நாசமாகும் காலம் வந்துவிட்டது. அவர்கள் மதத்தின் பேரில் மெஞ்ஞானத்தின் இடி விழுந்து விட்டது; துவித மார்க்கத்தின் போலிக் கட்டடம் அஸ்திவாரமற்று அதன் கூரை சரிந்து விட்டது; இனி அது ஜீவிக்காது; அதன் (வயது) ஆயுள் இப்போடு சரியாய் விட்டது. தீர்க்க தரிசிகளும் அவர்களைத் தொடர்ந்த மெஞ்ஞானிகளும் அத்வைத ஞானத்தை துவைதிகளின் மதத்திற்கும் கொள்கைக்கும் விரோதமில்லாதது போல் தந்திரமாகப் பேசி அவர்களின் மதத்தையும் கொள்கையை யும் நிர்த்தூளியாக்கியிருக்கிறார்கள்.

ஆகையால், கருத்து விளங்காமல் அவர்கள் துவிதமார்க்கத்தை உபதேசித்ததாக நினைக்க கூடாது. அப்படியானால், விக்கிர கநிக்ரகம் ஏன் செய்தார்கள்? துவித மார்க்கத்தை உபதேசிக்கிறதாக இருந்தால் விக்கிரக நிக்கிரகம் செய்ய யாதொரு காரணமுமில்லை. மனோ வித்தியாகிய மனதின் விடய சொரூபத்தை வணங்குகிற தும், கல்லை வணங்குகிறதும் சரிதான் என்கிலும், கல்லைப் பார்க்கிலும் மனதின் விடய சொரூபம் சற்றுக்குச்சற்று பேதப்பட்டு அழியக்கூடியதாயிருப்பதுமன்றி, கல் கையால் சமைத்த ரூபமாயும், விடய சொரூபம் மனத்தால் சமைத்த உருவமாயும் இருக்கிறது.

இதைச் சொரூபமாகக் காணாமல் அரூபமாகக் கண்டாலும், இந்த அரூபமும் ஒரு வகை நிலையற்ற எண்ணத்தின் சொரூபந்தான்.

தன் மனதால் உண்டாக்கின அரூபத்தையாவது, சொரூபத்தை யாவது வணங்குவதைப்பார்க்கிலும் அந்த இரண்டையும் படைத்த ஆண்டவனாகிய நம்மையே வணங்குவது மேலல்லவா? மனதின் விக்கிரகமாகிய வம்பான தேவ பக்திதான் வெளியிலுள்ள விக்கிர கங்களுக்குக் காரணம். வெளிவிக்கிரகங்களைத் தகர்த்து உள் விக்கிர மாகிய மனதில் வம்பாக ஏற்படுத்திக்கொண்ட தேவ பூசை, தேவ பக்தி என்னும் விக்கிரகத்தை நிக்கிரகம் செய்ய வேண்டுமென்ற தாற்பரியமேயொழிய வேறல்ல. அல் குர் ஆன்: சூரத்துல் ஹஜ்ஜு, 5-வது ருக்உ, 3-வது ஆயத்து: "நம் நாயனே கடவுளாயிருக்குமென்றவர்களை அவியாயமாக தேச பிரஷ்டம் செய்யப்பட்டது. அப்படிக் கடவுள் இவர்களை, அவர்களைவிட்டும் விலக்காவிட்டால், சன்னியாசிகளின் மடங்களும், கிருஸ்தவர்களின் கோயில்களும், யூதர்களின் ஆலயங்களும், கடவுளின் நாமத்தை அதிகமாய் ஸ்தோத்திரம் செய்யும் மஸ்ஜித்களும் அகத்தியம் தகர்க் கப்பட்டுப் போகும்." இதன் கருத்தாவது,

நமது ஆத்மாவே கடவுளாயிருக்குமென்ற அத்வைதிகளை துவைதிகள் தூற்றாவிட்டால் நாமும் சர்வமுமாய் இருக்கின்ற ஆத்மாவான கடவுளானவர் துவைதிகளைவிட்டும்.அத்வைதிகளை வேறே பிரிக்காவிட்டால் ஜப தபங்களும் ஆலயங்களும் நிர்த்தூளி யாக்கப்பட்டுப் போகுமென்பதாம். அல் குர் ஆன்: சூரத்துல் அலக், 1-வது ருக்உ. 5, 6, 7, 8, 9-வது ஆயத்: "உண்மை யாக மனிதனாகிறவன் அவசியம் மாறுதல் செய்கிறானென்பது ஒருகாலுமில்லை. அவன் தன்னையே தான் தோட்டமிட்டான், தேவையற்றவனாகி விட்டான். நிச்சயமாக உன் கடவுளிடமே மீளுவது அவனுக்கவசியமில்லை." "நீ அவனைப் பார்க்கவில்லை யா? அடியார்களைத் தொழும்போது வேண்டாமென்று விலக்கு கிறான்." அல் குர் ஆன்: சூரத்துல் மாவூன், 1-வது ருக்உ 3, 4-வது ஆயத்: "தொழுகையை இன்னதென்றியாமல் தொழு கிறவர்களுக்கு நாசமாயிருக்கும், அல்லது அவர்கள் கை சேதப் படுவார்கள் அல்லது மௌத்துக்குப்பின் ஐயோ! வென்னும் அபயச் சப்தமிடுவார்கள்."

ஆனதினால், தீர்க்கதரிசிகள் வெளி விக்கிரகமாகிய சிலை களைத் தகர்த்துவிட்டு உள் விக்கிரகமாகிய மனதின் விக்கிரகத்தை வணங்கச் சொல்வார்களா? இது பிரஞ்ஞான இலக்கணத்திற்கு

www.miskinsha.blogspot.com

விரோதமல்லவா? ஆகையால், துவைதிகள் தங்கள் இலக்கணத்தைக் கொண்டு வேத வாக்கியங்களுக்குத் துவிதமாக வெவ்வேறு அர்த்தங்கள் செய்யக்கூடும். அப்படியானால், வேத வாக்கியத்தின் ஞானமான கருத்துக்கள் பிசகிவிடும். ஆகையால், நாம் அவற்றை "இல்மே ஹக்காயிக்" என்னும் பிரமஞான இலக்கணத்தைக் கொண்டு நிராகரிக்க வேண்டும். பிரம ஞானமாகிய ஆத்ம ஞான இலக்கணத்திற்கு விரோதமாக வேதமில்லை. பிரமமும் ஆத்மாவும் ஒன்றென்பதுதான் வேத வாக்கியத்தின் முடிவு. அப் பிரமத்தை நாமே என்று தெரிந்து கொள்ள வேண்டும். துவைதிகளின் கடவுள் நமது ஆத்மாவே! அவர்களின் வணக்கம் நமக்கே! அவர்களுக்கு வரமளிக்கிறதும் நாமே! அவர்கள் தன்னையறியாமல் நமக்காகக் கல்லையும் தன் எண்ணத்தையும் வணங்குகிறார்கள்.

மகத்துவம் தங்கிய 1-வது ரிக் வேதத்தின் முடிவு இரண்டு பதம்: அஃதாவது "பிரஞ்ஞானம் பிரமம்." பிரஞ்ஞானம்—ஜீவன், பிரமம்—ஈசன்.

2-வது யஜுர் வேதத்தின் முடிவு மூன்று பதம்: அஃதாவது, "அகம் பிரமாஸ்மி" அகம்—ஜீவன், பிரமம்—ஈசன், ஆஸ்மி—அவ் விரண்டின் ஐக்கியம்.

3-வது "சாம" வேதத்தின் முடிவு மூன்று பதம்: அதாவது "தத்வமசி" தத்—ஈசன், துவம்—ஜீவன், அசி—அவ்விரண்டின் ஐக்கியம்.

4-வது 'அதர்வண' வேதத்தின் முடிவு மூன்று பதம் அஃதாவது "அய ஆன்மா பிரமம்" அயம்—ஜீவன், ஆன்மா—ஈசன், பிரமம்—அவ்விரண்டின் ஐக்கியம். இந்நான்கு வேத மகா வாக்கியத்தின் தாற்பரியமும், ஜீவனும், ஈசனும் நானென்றறிவது. எனெனில், ஜீவன் ஈசனிலும், ஈசன் என்னிலும் ஐக்கியம். ஆதலின், அவ் விரண்டின் ஐக்கியமான லட்சியார்த்தம் நானே!

சிறப்புப் பொருந்திய 1-வது "தைராத்" மறையின் முடிவு: "ஃபனாஃபில் அஃப் ஆல்" சர்வமும் கடவுளின் செயல்; அக் கடவுள் நானே. 2-வது, "சபூர்" மறையின் முடிவு: "ஃபனாஃபில் அஸ்மா" சர்வமும் கடவுளின் நாமரூபம்; அக்கடவுள் நானே! 3-வது 'இஞ்ஜீல்' மறையின் முடிவு 'ஃபனாஃபில் எஸ்பாத்' சர்வமும் கடவுளின் தத்துவம்; அக்கடவுள் நானே! 4-வது

"புர்கான்" வேதத்தின் முடிவு: 'ஃபனாபித் தாத்' சர்வமும் கடவுளின் உள்ளமை; அக்கடவுள் நானே! என்பதாம். இந் நான்கு மகா வேத வாக்கியத்தின் தாற்பரியமும் ஒன்றே! இன்னும் மற்ற வேதங்களின் தாற்பரியமும் இவ்வாறே ஒற்றுமையாயிருக்கின்றன!

ஞாபகமிருக்கட்டும்! துவைதிகளின் கொள்கை மதத்திற்கு விரோதமில்லாததுபோல் தந்திரமாகப்பேசி, அத்வைத மார்க்கத்தை உபதேசித்து, அவர்கள் மதத்தையும் கொள்கையையும் நிர்த்தூளியாக்கும் உத்தியோகத்திற்கே "நுபுவத்" தீர்க்க தரிசனமென்று பெயர். இவ்விதமான வழக்கம் முஹம்மது நபிக்கு முன்னுள்ள தீர்க்க தரிசிகளிடமும் இருந்தது. ஆனால், மகத்துவம் தங்கிய தீர்க்க தரிசிகளில் நாயகமான முஹம்மது நபியானவர் ஞானத்தைக் கொஞ்சமும் மறைக்காமல், பகிரங்கமாகத் துவைதிகளின் விரோதத்தைச் சட்டை பண்ணாமல், அத்வைதத்தையே உபதேசித்துச் சகல மதங்களிலுமுள்ள துவித மார்க்கத்தை நொறுக்கிப் பொடிப் பொடியாக்கிவிட்டார். இவர் காலத்தில் தான் துவித மார்க்கமாகிய விருக்ஷம் வேரற்றுச்சாய ஆரம்பித்தது. இன்றும் சாய்ந்துகொண்டே வருகிறது. இன்னும் கொஞ்சக் காலத்தில் சாய்ந்துவிடும். அதன் பின் அவருடைய அத்வைத மார்க்கந்தான் உலகத்தில் எப்போதும் பிரகாசிக்கும்!

துவித மார்க்கமெல்லாம் அழிந்து நிர்மூலமாகிவிடும். அவர் வாக்கும் அப்படியே! துவைதிகளுக்குப் பயந்து தந்திரமாக அவர்கள் கொள்கைபோல் ஞானத்தை மறைத்துப் பேசும் வழக்கம் இவர் காலத்தில் முற்றிலும் ஒழிந்து போயிற்று. ஆகையால், உலகமெல்லாம் இவர் காலத்தில் அஞ்ஞானத்தில் சீர்திருத்தமடைந்தது. உலகமெங்கும் இவர் மெஞ்ஞானம் பரவ ஆரம்பித்துவிட்டது. ஆதலின், சகல மதங்களிலும் இரகசியமாய் மறைந்து கிடந்த ஆத்ம ஞானத்தை அந்தந்த மதஸ்தர்களும் அவரவர் மதத்தைக் கொண்டே விளங்கிக் கொண்டார்கள். எல்லா மதமும் ஒரு முறை அவரால் சீர்திருத்தமடைந்தது. அனேகர்களுடைய சந்தேகங்கள் தெளிந்தன.

எந்தக்காலத்தில் மதங்களில் மெஞ்ஞானத்தின் உயிர் போய் விடுமோ, இன்னும், மதங்கள் செத்த சவம் போல் உயிரற்றதாய் விடுமோ அக்காலத்தில் தீர்க்கதரிசிகள் வந்து மதங்களில் மெஞ் ஞானத்தின் உயிரை ஊதி அவற்றை உயிர்ப்பித்து, மனிதர்களின் இருதயங்களில் ஆத்ம ஞானத்தின் வித்தை விதைத்து விடுவார்

www.miskinsha.blogspot.com

கள். துவைதிகளின் சுத்தப்பொய்யான மதத்தில் தங்கள் மெய்யைப் போட்டுவிடுவார்கள். அஃதேதெனில், தங்கள் மெய்யை அவர்களின் பொய்யைக்கொண்டு உபதேசிக்காவிடில் அவர்கள் நம்பவேமாட்டார்கள். ஆதலின், அவரவர் மதத்தின்படியே அவர்களுக்கு ஞானத்தை உபதேசிக்க வேண்டியதாயிருந்தது. ஆனதினால், தந்திரமாக அவர்கள் மதத்திற்கு ஒற்றுமையாய்ப் பேசுவது போல் பேசிக் "கண்ணாடி வீட்டைக் கல்லால் நொறுக்குவது போல்" அவர்கள் மதத்தை நொறுக்கித் தங்கள் மதத்தையே அதில் ஸ்தாபித்து (நிலை நிறுத்தி) இருக்கிறார்கள். ஆனால், முஹம்மது நபியானவர் பொய்யான துவித மார்க்கங்களை முற்றிலுங்கண்டித்து விலக்கி, மறைவில்லாமல் அதிதீர்க்கத்தோடு அத்வைத மார்க்கத்தை உபதேசித்தார்.

எல்லா தீர்க்க தரிசிகளும் பயந்து மறைத்து அத்வைதத்தைத் தந்திரமாகப் பேசியும், அவர்களைத் துவைதிகள் சும்மாவிடவில்லை. அதிக ஹிம்சை செய்தார்கள். அப்படியே அதைவிட அதிகமாகவே முஹம்மது நபியும் ஹிம்சிக்கப்பட்டார். இதுபோலவே, அத்துவித மார்க்கத்தை உபதேசிக்க வந்த மற்றப் பெரியோர்களாகிய மகான்களும் ஹிம்சிக்கப்பட்டார்கள். ஐயோ! இந்தக்கொடிய 'வன்காஃபிர்'களாகிய துவைதிகள் தலையில் கொடிய கோடை இடி விழவில்லையா? அவர்கள் நாசமாய்ப் போகவில்லையா? நபிமார்களின் சொல்லைப் பழுது செய்தவர்களும், அவர்களை ஹிம்சித்துப் பழி செய்தவர்களுக்குச் சமானமானவர்கள் அல்லவா?

துவைதிகள் 'கடவுள் எங்கும் எல்லா வஸ்திலும் இருக்கிறார். ஆதலால், கல்லை வணங்கினால்தானென்ன? செம்பை வணங்கினால்தானென்ன? கூடாதா? வெனத் தீர்க்கதரிசிகளுடன் வம்பாகத் தர்க்கித்தார்கள். அதற்குத் தீர்க்கதரிசிகள் சொன்னதாவது: "நம் உடலுக்கு உயிர் எப்படியோ, அதுபோல் உலகத்திற்குக் கடவுள். நம் உயிருக்கு உடல் எப்படியோ அதுபோல் கடவுளுக்கு உலகம். அப்படியானால் உடலும் உயிரும் சேர்ந்தால்தான் பூரணமாகும். "தன்ஸீஹாகிய" அவர் அரூப அம்சமும் "தஸ்பீஹாகிய" அவர் சொரூப அம்சமும் சேர்ந்தாலன்றிப் பூரணமாகாது. அப்படியிருக்க சொரூப அம்சத்தை மட்டும் வணங்கலாமா? நீங்கள் அரூப அம்சத்தை அறியவில்லையென்றே வைத்துக் கொள்வோம், சொரூப அம்சத்தையாவது நீங்கள் பூரணமாக வணங்குகிறீர்களா? இல்லை! ஏனெனில் மனிதனென்றால், மனிதனுடைய எல்லா அவயவங்களும் அதில் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். கை, அல்லது கால், அல்லது விரல் என ஏதாவது ஓர்

உறுப்பைக் கண்டித்துப் பேசினால் அது மனிதனின் ஓர் அங்கத்தை மட்டும் அறிவிக்குமே தவிர அவனது முழு அங்கத்தைத் தொட்டும் அறிவிக்காது. ஆகையால், ஜகமெல்லாம் கடவுளின் சொரூப அம்சமாயிருக்க, ஒரு சொரூபத்தை மட்டும் கண்டித்து எப்படி வணங்கலாம்? ஒரு கால் நீங்கள் அதைக் கடவுளை விட்டும் நீங்கினதல்ல என்பீர்கள்!

நாம் சொல்லுகிறோம்: "காது அல்லது கண் என ஏதாவதோர் உறுப்பைக் கண்டித்தால் அதுவும் மனிதனை விட்டும் நீங்கினதல்ல. என்றாலும், அது முழு மனிதனாகுமா? ஆகையால், சர்வமும் கடவுளாயிருக்க ஒரு ரூபத்தை மட்டும் கண்டித்து எப்படி வணங்கலாம்? ஒரு கால், நீங்கள் ஒரு ரூபத்தையா வணங்குகிறோம், பல ரூபங்களையல்லவா வணங்குகிறோமென்பீர்கள். அப்படியானால் நீங்கள் வணங்குகிற உருவங்களுக்கிடையில் சர்வலோகங்களின் உருவங்களும் அடங்குமா? சிலதை வணங்கினால் சர்வத்தையும் வணங்கினதாக எப்படியாகும்? ஆகையால், குறிப்பின்றி மட்டுப்படுத்தாமல், சர்வத்தையும் மொத்தமாகவல்லவா வணங்கவேண்டும்?" நீங்கள், "எங்கும் எல்லா வஸ்திலும் கடவுள் இருக்கிறார்; எதை வணங்கினால்தானென்ன?" வென்கிறீர்கள்: உங்கள் சொல்படியே சர்வமும் கடவுளாயிற்று. நீங்களும் அந்தத் தொகையில் உள்ளவர்கள்தாமே! அப்படியிருக்க நீங்கள் கடவுளை ஏன் வணங்க வேண்டும்? அவர் உங்களை விட்டு நீங்கியா இருக்கிறார்? உங்களையே நீங்கள் வணங்கினால் போதாதா? என்றார்கள். அதற்குத் துவைதிகள் நாம் கடவுளாயிருக்க நம்மைத்தான் ஏன் வணங்க வேண்டும்? என்றார்கள்.

அதற்குத் தீர்க்கதரிசிகள்: நம்மை நாம் வணங்க வேண்டிய தேவையில்லை. நாம் நமது மூலத்தையறிந்து அதில் ஐக்கியப்பட்டாலன்றி நம் மெய்யான தத்துவங்கள் வெளியாகாதென்றார்கள். அதற்குத் துவைதிகள்: நாம் நமது மூலத்தைவிட்டும் பிரிந்தா இருக்கிறோம்? என்றார்கள். அதற்குத் தீர்க்கதரிசிகள்: நாம் அதை விட்டும் பிரியவில்லை என்பது உறுதிதான், என்றாலும் உங்களின் வேறென்ற எண்ணத்தின் பழக்க வாசனை உங்களை விட்டும் நீங்குமளவும் அதில் ஐக்கியப்பட வேண்டும். அப்படி அதில் ஐக்கியப்பட்டால் நமக்கு மெய்யான அறிவும், மெய்யான தத்துவமும் உண்டாகும். இல்லாதவரையில் உண்டாகாதென்றார்கள்.

ஏனென்றால், நமது மனமாவது ஆன்மாவின் ஆரோபமான வடிவு, ஆனதால் சலனமெல்லாம் இதற்கே! ஆன்மாவுக்கல்ல;

www.miskinsha.blogspot.com

எவன் தன்னை அசைவற்ற ஆன்மாவென்று சிந்திக்கின்றானோ, அவனுக்கு மனம் அதில் லயப்பட்டுப் போகின்றது. அப்போது அவனில் மெய்யான அறிவும், மெய்யான தத்துவங்களும் வெளியாகின்றன. மற்றவர்களில் அப்படி வெளியாகாது. எவனுக்கு மனம் ஆன்மாவில் இறந்து விட்டதோ, அவன் சுத்த பிரமமாகி விட்டான்! அனேகமாக மனிதப்பண்பிராது. ஒருவன் தன்னை பிரமமெனவும், பிரமத்தின் வடிவு இன்னதெனவும் சந்தேகமற விளங்கி அதையே உறுதி கொண்டிருப்பானாகில் இதற்கு "ஃபனாயே இல்மி" எனச் சொல்லப்படும். இந்த உறுதியானது அவன் மரணம் வரையில் அவனை விட்டு நீங்காதிருக்குமாகில் சந்தேகமின்றி அவன் முத்தனாவான்! அவனுக்கு ஜன்மமில்லை. எவன் தன் மனதை ஆன்மா அல்லது பிரமத்தில் லயப்படுத்தி விட்டானோ, அஃதாவது: தன்னை பிரமம் அல்லது ஆன்மாவெனச் சிந்தித்துச் தன் மனதை அதில் அழித்து விட்டானோ, இத்தன்மையை "ஃபனாயே ஹாலி" எனச் சொல்லப்படும்; இவனில்தான் மெய்யான அறிவும், கடவுளின் தத்துவமாகிய ஆன்மதத்துவமும் வெளியாகும். இவன் தான் பல அற்புதங்களைச் செய்யக்கூடும்.

எவனுக்கு "ஃபனாயே இல்மி" என்னும் முன் சொன்ன பதவி கிட்டுமோ, அவனைத்தான் இஸ்லாமானவனெனச் சொல்லப்படும். "இஸ்லாம்" என்ற பதத்திற்கே பொருள்: முத்தி தான்! நூஹு, இபுறாஹீமுடைய மார்க்கத்தை வைத்துக் கொண்டு இது தான் முஹம்மதுடைய மார்க்கமென்று முஹம்மதுடைய உபதேசமின்னதென்று விளங்காத ஜனங்கள் வழக்கடிக்கிறார்கள். குர்ஆனில்: ஷரகும் மார்க்கமும் நூஹும், இபுறாஹீ முக்குடையதென்றே வருகின்றது. எல்லாத் தீர்க்க தரிசிகளும் "சர்வமும் கடவுளாகவே இருக்கிறது, ஒன்றும் கடவுளல்லாதில்லை" என்கிற "ஹத்து" அல்லது எல்லை வரையில் ஞானத்தை உபதேசத்துத் துவித மார்க்கத்தைத் தந்திரமாக அத்வைத ஞான மார்க்கத்திற்குச் சமீபிக்கும்படிச்செய்து துவித மார்க்கத்தின் அங்கங்களையெல்லாம் அனேகமாக மாற்றி விட்டார்கள். என்றாலும், சிலருக்கு அத்வைத ஞானத்தை இரகசியமாகப் போதித்தேயிருந்தார்கள். பகிரங்கமாக உபதேசிக்க முடியவில்லை. அப்படி இருக்கும்போது, மகா மகத்துவந்தங்கிய முஹம்மது நபியானவர் வந்து அத்வைதமாகிய சுய ஞானத்தை யாதொரு மறைவின்றி பகிரங்கமாய் எல்லாருக்கும் போதித்துச் "சகல வேதங்களிலும் மதங்களிலும் சொல்லப்பட்ட கடவுளின் லக்ஷியார்த்தமான குறிப்பு "நாமே!" நமது லக்ஷணத்தையும்

குறிப்பையுமே அவை அப்படிக் கூறுகின்றன. நம்மையன்றி வேறு கடவுளில்லை" என உபதேசித்து முந்தின மதங்களையும் வேதங்களையும் "மன்ஸூஹ்" செய்து மாற்றி அவைகளிலெல்லாம் அத்வைதமான சுய ஞானத்தை ஸ்தாபித்தார்.

இன்னும் தமக்குப்பின் நபியே இல்லையென்று நுபுவத்தென்னும் நீர்க்க தரிசனத்தைத் தம்மோடு முடிவு செய்து விட்டார். ஏனென்றால் நுபுவத்தென்பது கடவுளைத் தொட்டும் செய்தி அறிவிப்பது. இதுவும் நுவைதிகளுக்காக அவர்கள் கொள்கைபோல் தந்திரமாகப்பேசி, அவர்கள் மதத்தை உடைத்துத் தங்கள் மதத்தை ஸ்தாபிக்க இவர்கள் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட உத்தியோகம். இந்த உத்தியோகம் முஹம்மது நபிக்குப்பின் அவசியமல்லாமல் போயிற்று. ஏனென்றால், இவர் காலத்தில் நுவைதங்களெல்லாம் ரத்தாய் விட்டது. கடவுள் விசுவாசம், பக்தி என்னும் பெரிய விக்கிரகத்தை முற்றிலும் நசுக்கி விட்டார். அதிலிருந்து அத்வைத ஞானமாகிய சுய ஞானம் பிரகாசிக்க ஆரம்பித்து விட்டது! இனிமேல் தன்னைத் தொட்டும் செய்தியறிவிக்கிறவர்களேயல்லாது கடவுளைத்தொட்டும் செய்தியறிவிக்கிறவர்கள் வரமாட்டார்கள். "விலாயத்" தென்னும் அத்வைத ஞானமானது பூமியில் நன்றாய் வேரூன்றிக்கொண்டது. இனி நுவைதிகளால் அதைப்பிடுங்க ஏலாது. நுவைதிகளின் கொள்கையும், மதமும் அடியோடு நாசமாய்விட்டது. முனாஃபிக்கான முஸ்லிம்களைத் தவிர ஒருவரும் (யோலிக்) கடவுளை வணங்கார்கள்.

சந்தேகிகளாகிய முனாஃபிகீன்கள் பிறர் காணாமல் விக்கிரக ஆராதனை செய்து வந்தார்கள்; அதையும் கண்டுபிடித்துக்கண்டிக்கப்பட்டது. ஆகையால், வெளியுருவத்தை எப்படியாவது கண்டு கொள்கிறார்கள்; மன உருவத்தை ஒருவரும் கண்டுகொள்ள இயலாதெனக் கடவுள் தியானமாகிய உள் விக்கிரகத்தை இரகசியமாக வணங்கி வந்தார்கள். சிலர் மெல்ல மெல்ல வெளி விக்கிரகத்தையும் ஏற்படுத்திக் கொண்டார்கள். சிலர் இன்னம் இது வரையில் ஏற்படுத்திக் கொள்ளவேயில்லை; ஒரு கால் பின்னால் ஏற்படுத்திக் கொள்வார்கள்? "இன்சானுல் காமில்" 2-வது வால்யூம் 63-வது அத்தியாயம், 77-வது பக்கம் 16-வது வரி; "ஒருவன் கடவுளை ஏற்றுக் கொள்வதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஒருவன் அதை மறுத்து விடுவதனால் ஒரு நஷ்டமுமில்லை. நூஹு அல்லது நேவா என்னும் தீர்க்கதரிசியானவர் ஆண்டவத்தவந்தின் தன்மையாகிய "இஸ்லாம்" மதத்தை உபதேசிக்கவும், அடிமைத்தனத்தின் தன்மையாகிய விக்கிரக ஆராதனையை மகாக் கேவலமானதென காட்டவுமே அனுப்பப்பட்டார்."

www.miskinsha.blogspot.com

ஆச்சரியம்! சத்துப் பொருளானது அசத்தான பொருள்களை எப்படி வணங்கும்? எவன் அடிமையாக இருக்கிறானோ, அவன் எவ்வளவு உயர்ந்தாலும் ஆண்டவனாகான். எவன் ஆண்டவனாயிருக்கிறானே, அவன் எவ்வளவு தாழ்ந்தாலும் அடிமையாகான். இஸ்லாத்தில் ஆண்டவனை அடிமை கொள்ளக்கூடாது. அடிமையை அடிமை கொள்ளலாம். அடிமைத்தனம் நீங்கினால் உரிமையாக்கி விடுவார்கள். சுயஞானம் உண்டாகாத வரையில் அடிமைத்தனம் நீங்காது. ஆகையால், நீங்கள் அடிமைகளை சீஷன் முறையில் வைத்து வேலை வாங்குவதோடு, சுய ஞானத்தைப் போதித்து உரிமை விடுங்கள்; அவர்கள் எஜமானாகி விட்டால் அடிமை கொள்ளாதீர்கள். இதுவே அடிமை கொள்வதின் இரகசியம். மற்றப்படி தன் சுய நலத்தைக் கருதி அவர்களைச் சீர்த்திருத்தாமல் மிருகத்தைப்போல் எப்போதும் அடிமையாகவே பாவிப்பது நியாயமாகாது. பார்! "அத்த அவிலுல் முஹக்கம் பீ முத்த ஷாபீஹை புஸுலில் ஹிக்கம்" என்னும் கிரந்தம், "பஸ்ஸே ஹிக்மத்தே சுபிகிய்யா பீ கலிமத்தே நூஹிய்யா" என்னும் அத்தியாயம் 139-வது பக்கம்.

"எப்பொழுது நமது கடைசி நபியாகிய நீர்க்கதரிசி எனக்குப்பின் இனி நபியே இல்லை" எனச் சொன்னாரோ, இச்சொல்லானது தபோதனர்களின் இடுப்பை முறித்து விட்டது. ஏனெனில், இவ்வார்த்தையானது அடிமைத்தனத்தைத் துண்டித்து விட்டது. ஆகையால், அவர்களின் பேரில் இனி அடிமைத்தனத்தின் யாதொரு நாமமும் நடைபெறக்கூடாது. ஏனெனில், நாயனுக்கு 'வலி' என்ற பெயரைத் தவிர "நபி" என்ற பெயரில்லை. ஆகையால், "நுபுவத்" தென்னும் நபித்தனம் முடிவாகிவிட்டது. வலித்தனமென்னும் விலாயத்துத் தரிபாடாயிருக்கிறது; இந்த வலி என்ற நாயனின் நாமமே அடிமைகள் பேரில் இம்மையிலும் மறுமையிலும் நீங்காமல் நடைபெற்று வரும். பின்பு 'நுபுவத்து' முடிவாகிவிட்டபடியால், அடிமைக்கு நாயனைத்தவிர யாதொரு நாமமும் மிச்சப்படவில்லை. நாயன் தன் அடிமைகள் பேரில் கிருபையுள்ளவன்; ஆகையால், அவன் விலாயத்தை மீதியாய் வைத்தான். அதில் சரியை இல்லை. காலத்துக்குத்தக்க வேறு நவீனச் சட்டங்களை அவர்களுக்காக நிர்மாணம் செய்து ஸ்தாபித்துக் கொள்ளச் சரியையையும் தரிபடுத்தி வைத்தார்கள். இப்படிச் செய்பவர்களே நீர்க்கதரிசிகளின் வாரிசாகவும், அனந்தரக்காரர்களாவும் இருக்கின்றார்கள். "புஸுலில் ஹிக்கம் என்னும் கிரந்தம்" ஹிக்மத்தே கதிரிய்யா பஸ்ஸே கலிமயே உஸைரிய்யா என்னும் அத்தியாயம் 176-வது, 177-வது பக்கத்தைப் பார்!

தொழுகையின் அந்தரங்கம்

ஆண்டவன் ஒவ்வொரு வஸ்திலும் ஓர் இன்பத்தைப் படைத்திருக்கிறான். இன்பமில்லாதது ஒன்றுமே இல்லை. ஒரு ஜீவனுக்கு பிடிக்காதது வேறொரு ஜீவனுக்குப் பிரியமாயிருக்கலாம். இப்படியே இந்திரியங்களாலடையும் சுகத்தையும் உத்தேசித்துக்கொள்க. சரீர சுகத்தைப் பார்க்கிலும் இந்திரிய (புலன்கள்) சுகமே அதிக மேலானது. சரீரம் மட்டும் தனியே யாதோர் சுகத்தையும் அடையாது. அதற்கு இந்திரியமும் அவசியம் சம்பந்தப்பட்டே இருக்கவேண்டும். ஆக எல்லா வஸ்திலும் இன்பமுண்டாயிருக்கிறது. எல்லா வஸ்துமே இன்ப வடிவு. சர்வமுமே சுக வடிவு. இப்படியாக எல்லா வஸ்துக்களையும் இன்ப ரூபமாய் அமைத்தவன் மனிதனை எதற்காகப் படைத்தானோ! அதிலும் விசேஷமான இன்பமிருக்க வேண்டும். எதற்காகப் படைத்தது? ஆண்டவனை வணங்குவதற்கு. அப்படியாயின் ஆண்டவனை வணங்குகிறதில் அல்லது ஆண்டவனைத் தொழுகிறதில் இருக்கிற இன்பம் எல்லாவற்றையும்விட அதிக மேலானதாயிருக்கும். மனிதன் காரணம், அசல் மற்றவை நிமித்த காரணம். ஆகவே, மனிதனடைகிற இன்பம் வேறெந்த வஸ்துக்குமில்லை. மனிதனே மேலான இன்பத்தை அறிவான்.

சுர நோய்க்காரனுக்குத் தேன் கசப்பாயிருக்கும். ஆனால் தேன் கசப்பல்ல. அது வியாதியின் சேஷ்டை. அப்படியே தொழுகையில் இன்பமில்லாது போனால், உடனே அந்த வியாதிக்குப் பரிகாரம் செய்து கொள்ளவேண்டும். ஏனென்றால், இது ஆன்ம சம்பந்தமான தங்கடம் (பிணி). அனேகமாக ஞானமில்லாததால் உண்டாகும். சிகிட்சை ஆன்ம வைத்தியர்களால் செய்யச்சாத்தியப்படும். உதாரணமாக, ஸ்திரீயின் இன்பத்தையடையச் சக்தி இல்லாது போனால் அனேக பொருள்களைச் செலவு செய்து சிகிட்சை செய்கிறார்கள். அது குணமாகாவிடில் விசனிக்கிறார்கள். இன்னம் அனேகவிடங்களில் ரோசத்தினால் மாண்டும் இருக்கிறார்களாம்: இவ்வித மரணம் சில விடங்களில் நடந்திருக்கலாம். கேவலம், "ஆகாயத்தில் பகிபறக்க 'அதன் நிழலை வேட்டையாடுவது

www.miskinsha.blogspot.com

போலும்" " எறிந்த கல்லை எலும்பென்று வாலையாட்டிக்கொண்ட நாயைப்போலும், "கஸ்தூரிக்காய் முற்றினவுடன் அதன் வாசத்தைச் சுவாசத்தில் எட்டிக்கொண்ட மானானது அதைத்தேடி அலைந்தது போலு "மிருக்கிறது. " எது சத்தோ அஃது அசத்திலிருக்காது. ஸ்திரீயின் சுகம் ஆன்ம சுகத்திற்கிடாகாது என்றாலும், அதை அடுத்திருந்தபோதிலும் சூரியனுக்கும் அதன் பிம்பத்திற்கும் வித்தியாசமுண்டு."

காமத்தாலுண்டாகும் அன்பு நீங்கிவிடும். கடவுள் அன்பினாலுண்டாகிற அன்பு நீங்கிவிடாது. ஆன்மாவுக்கு இன்பமே கடவுளின் அன்பு. ஆன்மாவுக்கு ஸ்திரீ சரியான ஜோடியல்ல. கடவுளே சரியான ஜோடி. ஆன்மாவுக்குக் கடவுளோடு அனுபவிக்கும் ஆனந்தம் அபாரசக்தியுள்ளது. இதற்குச் சரியான உவமை சொல்லச் சிறப்படாததால் விளக்கத்திற்காக ஸ்திரீயின் சம்பந்தத்தை உவமையாக எடுத்துக்காட்டப்பட்டது. அறிவோகிகளுக்கு நன்றாய் விளங்கியிருக்கும். ஆன்ம சுகம் தெரியாத பேடிகள் ஆண்டவனோடு சுகிக்க, ஆரோக்கியம் பெற, ஆனந்திக்க, இன்பமடைய வேண்டுமானால், தங்கள் பேடித்தனம் நீங்கத்தக்கதான பரிகாரம் செய்ய வேண்டும். தன் மனைவியுடன் கூடச்சக்தி இல்லாவிட்டால் எவ்வளவு அவமானம்! நம்மையாளும் கர்த்தா தன்னுடன்கூடி ஆனந்திக்கச் சக்தியில்லாமல் போனால், அதிலும் கொடிய மானக்கேடு! இந்த ஆன்ம சம்பந்தமான பிணி அல்லது பேடித்தனம் நீங்க என் கவலையில்லை? அதில் நாம் ரொம்பக் கவலே எடுக்கவேண்டும். ஒருவன் மனைவி வேறொருவனை இச்சிக்க அவனுக்கு இஷ்டமிருக்குமா? இருக்காது. அப்படியே ஆண்டவனை விட்டு வேறொரு வஸ்தை இச்சிக்க ஆண்டவனுக்கும் பொருத்தமிருக்காது. ஆண்டவனை விட்டு வேறொரு வஸ்துக்கு நாம் அச்சப்படவும், ஆண்டவனைத்தவிர வேறொரு வஸ்தின் பேரில் நம்பிக்கை வைக்கவும் அவனுக்கு இஷ்டமில்லை.

நமது இன்பத்திற்கு ஊற்றுக்கண் ஆண்டவன். சகல இன்பத்தையும் அங்கிருந்து நாம் பெற்றுக்கொள்ள வேண்டும் சகலத்தையும் அவனிடம் ஒப்பித்துவிட வேண்டும். பாலத்தைவிட வேண்டும். அவனிடம் அடி எடுத்துவைத்துப் பின் வாங்கக்கூடாது. எல்லாக்கஷ்டங்களையும் சகிக்க வேண்டும். அவன் அருளையே நோக்கியிருக்க வேண்டும். இந்திரியங்களை அடக்க வேண்டும். ஆங்காரத்தை நாசம் செய்ய வேண்டும். அப்படி இருந்தால் மின்னலைப் போல் பளீரென்று ஓர் ஒளி பிரகாசித்து விசும்! அந்த

ஜோதி மயத்தில் தொழுகையின் இன்பத்தை அறியலாம். நமது பிரார்த்தனைகளும் வரங்களும் பலிதமாகும். பத்தாவுக்கும் பத்தினிக்கும் இருக்கிற சம்பந்தத்தைவிட அதிலிருக்கிற இன்பத்தை விட எத்தனையோ பங்கு அதிகமாயிருக்கலாம். ஆகையால், சிற்றின்பம், பேரின்பமென்று விளங்குகின்றது. உலகத்தில் நாமறிந்த ஸ்திரீ இன்பத்தை அதிக மேலாகக் காணுகிறோம்; ஆகையால் நம் மேலான இன்பத்தையே உவமையாகக் கூறப்பட்டது. மற்றபடி வேறெந்த இன்பங்களும் அதற்கு நிகரல்ல. ஞானிகள் சொல்லுகிறார்கள்: " அந்த இன்பத்தை அறிந்தவன் உலகத்தில் வேறு எந்த இன்பத்தையும் மேலாகக் காணமாட்டான்."

சகலத்தையும் நாமறிகிறோம்; நம்மை ஒன்றும் அறியாது. நம் தத்துவங்களையும் நாம் அறிகிறோம்; நம் தத்துவங்களும் நம்மையறியாது. நம்மால் அறியப்படும் வஸ்துக்கள் யாவும் அழியும். ஒரு காலும் நாம் அழிவதில்லை. " நாம் அறிவல்ல; அறிவையும் அறிகிறவன். " ஒரு கண்ணாடிக்குள் மறு கண்ணாடி காட்டும் ஆகாய பிம்பம்போல் " அறிவில் அறிவு தோன்றும்." தோன்றும்படியான அறிவு சுட்டறிவு; சுய அறிவல்ல, சிவனறிவு! சுட்டறிவு தோன்றாமல் சுய அறிவில் தரிபட்டால் இன்பம் ஜனிக்கும் இது தான் " பரையோகம்!" நாத கீதங்கள் கேட்கும். ஆனந்தமுண்டாகும். இதற்கு மேலுள்ள பதவிகளில் அளவற்ற அற்புதங்களுண்டு. இதற்குமேல் நமது முயற்சிக்கு வேலையில்லை. ஆண்டவன் அன்பே காரணம். இவனை இழுக்கப்படுவதும், ஆனந்தமடைவதும் முடிவில்லாதது. ஆனதால், அநுள் அவத்தைத் துன்பம் எனப்படும். ஆண்டவன் கிருபை இருந்தால் ஞானத்தைப் பூரணமாகக் கொடுத்திருப்பான். அவர்கள் தட்டழியமாட்டார்கள். தன் லக்ஷியத்தை இழக்கமாட்டார்கள். இன்பம் அவசியம் வல்ல பத்தில் நின்றுமுள்ளது. அதை ஒருவராலும் தடுக்க முடியாது. அன்னியம் அவத்தையாயிருக்கும். இவ்விடம் விழிப்பிருந்தாலன்றி அவ்விடமும் பிரயோஜனமாகாது. ஒன்றிற்குப்பின் ஒன்றாக உண்டாகும் ஆனந்தம் அளவற்றது.

இன்னம் ஒரு விருக்ஷத்தை அது போன போக்கில் வளரவிட்டு அதை நிமிர்த்தால் வெகு கஷ்டமாயிருக்கும். அதைப் போல் நெடு நாளாகத் தொழுகையை விட்டிருந்தவர்கள் தொழுவதும் மகா கஷ்டம். ஆதலால், சகலநம் தொழுகிற வழக்கத்தை நிறுத்துவது நன்மையாகாது. தொழுகையில் ஏற்பட்ட அங்கங்கள் யாவும் வெளிப்படையாய்ச் செய்யும் துப்புறவு முதலான செய்கைகளும்

www.miskinsha.blogspot.com

ஆன்மாவில் ஆழமாகக் குணம் செய்கின்றன. அப்படியே ஆன்மாவின் குணம் சரீரத்திலும் தாவுகின்றன. நமக்குச்சிரிப்புண்டானால் சந்தோஷமும், அழுகையுண்டானால் துக்கமும் உண்டாகின்றது. அதற்கு மாற்றமாகத் துக்கமுண்டானால் அழுகையும், சந்தோஷமுண்டானால் சிரிப்பும் வருகிறது. ஆகையால், தொழுகையில் சாஷ்டாங்கம் முதலானது வீணல்ல ; நமது உறுப்புகள் ஒய்ந்து நமது எண்ணங்கள் அசைவற்று ஒர்மைப்பாட்டை அதிகப்படுத்தும். இப்படித் தொழுவதால் இன்பமில்லாமல் போகாது.

சராயம் குடிக்கத் தொடங்குபவன் ஆரம்பத்தில் குடிக்கும் போது யாதோர் இன்பமில்லாமல் தான் குடிக்கிறான். வரவரக் குடிக்கக்குடிக்க ஓர் இன்பத்தை பெறுகிறான். பிறகு அவனால் நிறுத்த முடியவில்லை. விடமுடியாத காரணமென்ன? அதைப் போல் தொழுகையை விடாமல் தொழுது வந்தால் ஆரம்பத்தில் இன்பமில்லாவிட்டாலும் வரவர இன்பமுண்டாகும் ; தொழுகையை விடமுடியாது." தலையில் இருக்கிற சுமையை இறக்கித்தள்ளுவது போல் " தொழுவதும், " ராஜனுக்கு வரி செலுத்துவது போல் " செலுத்துவதும், இது மனமில்லாமல் தொழுகிற தொழுகையாய் இருக்கும். ஆண்டவனுக்கு இது அவசியம் போலிருக்கிறது? அவன் தேவையற்றவன். இது நமக்குத்தான் அவசியம். அவன் கட்டளையினால் நாமே பலனடைகின்றோம். நம் நாட்டத்தை அவனிடம் பெற்றுக்கொள்கிறோம்.

நம்மிடத்தில் ஞானமும் பக்தியும் ஒன்றுதான்; வேறாகாது. அவரவர்கள் பதவிக்குத்தக்கபடி ஒரு வகையத்தின் பேரில் இருந்தாலும் சரி. நமம் கூடாதென்பதும், நமம் வேண்டுமென்பதும் இரண்டையும் வேறாகக் கூறுவதுதான். இரண்டு பிரிவாக விளக்கத்துக்காகக் கூறுவது சரியே! இவ்வளவு சின்னமான பேச்சுக்களினங்காதவர்கள் தொழுகிறவர்களைக் கண்டிப்பதும், தொழாதவர்களை நிர்பந்தம் செய்வதும் வழக்கம். ஜடப் பொருள்களிலெல்லாம் ஆன்ம ஒளி பரவி இருக்கிறது. ஜடப்பொருள் இல்லாமல் ஆன்மாவைத் தனியாகக்காண நேரவில்லை. கர்ப்பத்தில் அது இந்நியத்தோடு சம்பந்தப்பட்டிருக்கிறது. நாம் உணரவேயாதவித மாய்க் கர்ப்பத்தை வளர்த்து வருகிறது. அப்படியே நம் தொழுகையிலும் ஆரம்பத்தில் அவ்வொளி பிரகாசிக்கின்றது. பிண்டத்திலும் அவயவங்கள் வளர வளர ஆன்ம ஒளி பிரகாசித்து உறுப்புகளை அசையச் செய்து ஜடத்துக்கு வேறாக ஒரு பொருளிருப்பதாகக் காட்டி விடுகிறது. அப்படியே நம் தொழுகையிலும் மின்

னலைப்போல் பிரகாசித்து அவ்வொளி அதிகத் துலக்கமாய், மேலே நமது அன்பினால் ஊர்த்துவ முகமாய் ஏறும். இதற்குப் பகரமாய் அதோ முகமாய்க் கடவுள் அன்பினாலும் ஓர் ஒளி இறங்கும். இரண்டும் சந்திக்கும். இதுவே ஆண் பெண்ணின் இரகசியமென உவமை கூறப்பட்டது. ஆண்டவன் அடிமைக்குள்ள சம்பந்தம், பேரானந்தம் மன வெளிச்சம், கடவுள் சம்பாஷணை, கேட்கப்பட்டது கிடைக்கும், அற்புதம், சொர்க்கத்தின் இன்பம், கடவுள் தரிசனம் எல்லாம் கிடைக்கும். இதற்குமேல் சொல்வது வழக்கமில்லை. தாமே அறிவார்கள்.

மனிதர்கள் சந்ததியை வெளிப்படுத்த வேண்டுமென்று, மனிதர்களுக்கு இதில் ஹிம்சை கூடாதென்று கடவுள் ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்பத்தை உண்டாக்கியிருக்கிறான். இல்லா விட்டால் இந்தப் பெரிய காரியத்தைச் செய்வதற்கு இருவரும் அபிமானம் அல்லது வெட்கஸ்தலங்களைக் காட்டுவதற்கு அவர்களிடம் இருக்கும் வெட்கம் ஒரு போதும் இடங்கொடாது. மற்றபடி சில புத்தியில்லாதவர்கள் இந்த இன்பத்தையே பெரிதாகக் காணுகிறார்கள். சிலர் தொழுகையின் அங்கங்களையெல்லாம் சேர்த்து வாதிக்கிறார்கள். (இலாஹியத்து) பரஸ்பரம் எல்லாருக்கும் பொது.

மனிதனல்லாது எந்த ஜீவன் எந்தப்பொருள்களுக்கும் பரஸ்பரம் பொதுவாயிருக்குமென்பது, அவியாயிருப்பவனுக்கும் கால் அல்லது கையில்லாதவனுக்கும் பரஸ்பரத்திற்கு வழி இல்லாமல் போகிறது.

www.miskinsha.blogspot.com

மஹா ஞானம்

"ருஹென்"னும் சூரியன் "கல்பென்"னும் சந்திரனுக்கு முன் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. "ஹக்கென்"னும் சமுத்திரத்தில் கல்க்கென்னும் மச்சங்கள் வளர்கின்றன. சரீரத்தில் கல்பு, கல்பில் ருஹ், ருஹில் நாயனில்லை. நாயனில் ருஹ், ருஹில் கல்பு, கல்பில் ஜடமிருக்கிறது. நாயன் என் நஃப்ஸ்! நஃப்ஸை அறிந்தவன் நாயனையறிவான். என் வட்டம் அல்லது விகாசம் அல்லது "நாயிறா" முடிவில்லாதது. ஆலயம் என் சரீரம். இலிங்கம் என் மனம். என் ஆத்மாவே சிவன். உங்கள் ஜடமே பள்ளி. உங்கள் கல்பே கஃபா. உங்கள் நுஹே நாயன். நாயனை நினைத்தால் தன் நஃப்ஸை நினைத்தான். நாயனை மறந்தால் தன் நஃப்ஸை மறந்தான் உங்கள் ஜடத்தை கல்பிலும் உங்கள் கல்பை ருஹிலும், உங்கள் ருஹை உங்கள் நஃப்ஸ் அல்லது நாயனிலும் அழித்துத் தானாய் நின்றவர்கள் தாம் "காமில்" "அக்மல்", "முக்கம்மில்". இந்த ரகசியத்தின் நுணுக்கத்தை அறிந்தவனுக்கு ஈமான் ஹாசிலாச்சது. ஈமான் ஹாசிலானவனுக்கு அதுவே தொழுகை!"

வஸ்ஸெம்ஸி தப்ஸீர்

(லாஹிர், பாத்தின் பொருள்)

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்.

"வஸ்ஸெம்ஸி வ முஹாஹா, வல்கமரி இதாத்தலாஹா,
வன்னஹாரி இதா ஜல்லாஹா, வல்லைலி இதா யக்ஷாஹா,
வஸ்ஸமாயி வமா பனாஹா, வல்அர்ழி வமா தஹாஹா,
வநஃப்ஸின் வமா ஸவ்வாஹா."

இதன் பொருள்:

மிகக் கிருபையுள்ளவனும், மகா கருணையுடையவனுமாகிய அல்லாஹ்வின் திரு நாமத்தைக் கொண்டே ஆரம்பம்.

"சூரியன் மீதும் அதன் பிரகாசத்தின் மீதும் சத்தியமாக. இன்னும், அந்தச் சூரியனிடத்திலிருந்து பிரகாசத்தைப் பெற்றுக் கொள்ளும் சந்திரன் மீதும் சத்தியமாக, சுத்த வெளிச்சமான பட்டப் பகலின் மீதும் சத்தியமாக, இருளாயிருக்கிற இரவின் மீதும் சத்தியமாக, வானத்தின் மீதும், அதையுண்டாக்கினவன் மீதும் சத்தியமாக, பூமியின் மீதும், அதை விரித்தவன் மீதும் சத்தியமாக, நஃப்ஸின் மீதும், அதை ஒழுங்குபடுத்தியவன் மீதும் சத்தியமாக."

இதன் விருத்தியுரை:

இந்த சூரத்தில் நாயனாகிறவன், சகல வஸ்துவின் பேரிலும் சத்தியம் செய்து கடைசியாக "இன்ஸா"னுடைய நஃப்ஸின் பேரிலும், தன் பேரிலும் சத்தியம் செய்து இருக்கிறான். எவனென்றால், அல்லாஹ்த்தாலாவாகிறவன், "இன்ஸா"னுடைய "நஃப்ஸை" தரிபாடானதாகவும் அவன் "அக்கலை" (புத்தியை) நிதமுள்ளதாகவும், அவன் சரீரத்தை அழகான சாயலாகவும் படைத்து, அவனுக்குச் சகல தத்துவங்களையும் கொடுத்திருக்கிறான். முன் சத்தியம் செய்து சொன்ன பல வஸ்துக்களின் தத்துவங்களையும் இவன் நஃப்ஸில் சேகரம்செய்து, இவனை நிரப்பமாக்கியிருக்கிறான். இவனிடத்திலில்லாத தத்துவம் ஒன்றுமில்லை.

www.miskinsha.blogspot.com

இன்ஸான் காமில் நஃப்ஸும், சூரிய-சந்திரன் உவமானமும்:

இன்ஸான் காமிலுடைய நபுஸாகிறது, சூரியன் அதன் பிரகாசத்தின் தத்துவத்தைத் தனக்குள் வைத்துக்கொண்டிருக்கிறது. சந்திரனுடைய குணமும் அதில் தோற்றப்படுகிறது. அந்த நபுஸானது வேறொருவரிடத்திலிருந்து ஞானத்தை அல்லது அருளைப்பெற்றுக் கொள்ளவும் அது ஒரு "நூரி"லிருந்து பிரயோஜனமாக, "நூரை" (ஒளியை) எடுத்துக்கொள்ளவுங்கூடும். அதில் வெளிச்சமாயிருக்கிற பகலின் குணமும் உண்டாயிருக்கிறது. எவ்விதமெனில், கஷ்டப்படுகிறவனும், கூலி வேலை செய்கிறவனும் பகலின் வெளிச்சத்தில் கூடிய வரையில் தங்கள் காரியங்களை முடித்துக்கொள்வதுபோல்,"ஹக்கை" (கடவுளை)த் தேடுகிறவனும், "ஸுலூக்கு" யோகத்துடைய பாதையில் நடக்கிறவனும், "இன்ஸான் காமிலு"டைய நஃப்ஸைப்போல் நடந்து, வெகு லகுவாகவும், தெளிவாகவும் தங்கள் "தீனின்" கருமங்களை நிறைவேற்றிக் கொள்வான். ஆகையால், அந்த நஃப்ஸானது பகலைப்போல் தன்னை வெகு தெளிவாக வெளியாக்கக்கூடும். பகலின் சகல குணங்களையும் தனக்குள் வைத்துக் கொண்டிருக்கிறது

காமில் நஃப்ஸும் இரவின் உவமானமும்:

"இன்ஸான் காமி"லுடைய நஃப்ஸுக்கு அந்தகாரமான இராக்காலத்தை உவமானிக்கப் பெற்றிருக்கிறது. ஏனென்றால், "நஃப்ஸா"னது மிகக் கடப்பாக சகலத்தையும் விட்டு நீங்கி நாயனளவில் பராக்காயிநப்பது அதற்குண்டாயிருந்தும், நாயனுடைய பூரணத்தின் நோக்கப்படி தன் "நஃப்ஸானியத்" தான தூல இச்சையின்புறம் சில சமயம் நோக்கி விடுகின்றது. அதாவது எதெது இன்ஸானுடைய நஃப்ஸுக்குப் பாத்திரமானவைகளாய் மனிதர்களின் பேரில் வைக்கப்பட்டிருக்கிறதோ அவையடங்கலும், வெளிரங்கத்தில் "நூரானியத்" தான "ஸுலூக்" குடைய பாதைக்கு விரோதமாகவும் இடையூறாகவும் தோன்றுகின்றது. எவ்விதமெனில் புசித்தல், குடித்தல், தூங்கல், தன் மனைவியுடன் இச்சையைப் பூர்த்தி செய்தல், மக்களை வளர்த்தல் முதலானவைகளை நிறைவேற்ற வேண்டியதாயிருக்கிறது. ஆகையால், சொற்ப நேரத்துக்காக இந்த இருட்போர்வையைப் போர்த்துக்கொள்கிறது. இதனது உண்மையில் அதற்கு இருளின்புறம் பிரியமுண்டாயிருக்கிற நிமித்தமல்ல; எனினும், அறிவும் பூரணமுமுடைய நாயனே அதை அவ்வாறு நோக்க அருள் புரிகிறான். ஏனென்றால், "ரூஹானியத்" தான (ஆன்மா அளவில் சேர்க்கப்பட்ட) கஷ்டத்தையும் அலுப்பையும் விட்டு கொஞ்சம் ஆரோக்கியம் பெற்று மறுபடியும் அந்த கஷ்டமான தவத்தின் தெண்டிப்பை எடுக்க அந்த "நஃப்ஸு" தயாராகிக்கொள்கிறது.

எவ்வாறெனில், வேட்டை செய்கிற இராஜாளியின் கண்கள் தைக்கப்பட்டிருந்த போதிலும், வேட்டைக்காக அவிழ்க்கப்படும். அதுபோல், "காமிலான" (பரிபக்குவமடைந்த) வர்களுடைய "நஃப்ஸா"னது தனக்கு அதிகமான மனக்களைப்பும், சடைவும் ஏற்பட்டு மிகக் கலக்கமும், துக்கமும் மேற்கொண்டிருக்கிற வேளையில் கொஞ்சம் நஃப்ஸானியாவான இன்பத்தைக் கொண்டு பலனைப் பெற்றுக்கொள்கிறது. ஆகையால், மறுபடியும் அதன் சக்தியற்ற சரீரமானது ஆன்மாவின் சம்பந்தத்திற்காகப் புதிதாகத் தத்துவத்தையும் சக்தியையும் எடுத்துக் கொள்கிறது. இந்த சொற்பத்திரையினால் மிகப்பெரிய "நூரானியா"வான (பிரகாசமான) பதவிகளைக் கடந்து விடுகிறது.

இஃதன்றி, "இன்ஸா"னுடைய" நஃப்ஸில்" அந்தகாரமான இரவும் ஏனைய குணங்களும் காணப்படுகிறது. அதை வான சாஸ்திரி, ஜோதிட சாஸ்திரி, தத்துவ சாஸ்திரிகளுடைய கூர்மையான பார்வைகள் கண்டறிந்திருக்கிறது.

காமில் நஃப்ஸும் ஆகாய உவமானமும் :

"இன்சான் காமி"லுடைய நஃப்ஸுக்கு வான லோகத்தை உவமானமாகச் சொல்லப் பெற்றிருக்கிறது. வான லோகத்தின் ஆகாயமானது எவ்வளவு விஸ்தீரணமாகவும், விரிவாகவுமிருக்கிறது? அது ஒரு வஸ்துவாலும் பூரணமாகமாட்டாது; அது போல் பெரியோர்களுடைய "நஃப்ஸுன்னாத்திக்கா" (ஆன்மா)வும் பெரிய விஸ்தீரணத்தைத் தனக்குள் வைத்துக்கொண்டிருக்கிறது. பல்லாயிரம் ஞானங்களையும், அகமியங்களையுமறிந்திருந்தும் அந்த 'நஃப்ஸா'னது "மாஅரஃப்னாக்க ஹக்க மஅரிஃபத்திக்க" நான் உன்னை அறியும் விதமாய் அறியவில்லை என்று சப்தமிட்டுக் கொண்டிருக்கிறது. வான லோகமாகிய ஆகாயமானது பிரகாசமுள்ள நட்சத்திரங்களினால் நிறைந்திருப்பதுபோலவே, மகா பிரகாசமுள்ள தத்துவங்களை "நஃப்ஸி"ற்குள் வைக்கப் பெற்று நட்சத்திரங்களைப்போல் பிரகாசித்துக்கொண்டிருக்கிறது.

காமில் நஃப்ஸும் பூமி உவமானமும் :

"இன்ஸான் காமி"லுடைய நஃப்ஸுக்குப் பூமியையும் உவமானமாகக் கூறப்பெற்றிருக்கிறது. முதல்தரமான பூமியை நன்றாய்

www.miskinsha.blogspot.com

உழுது, நீர்ப்பாய்ச்சி உரங்கொடுத்து, வித்துக்களைத் தெளித்து வேளாண்மை செய்தால் மற்ற பூமியைவிட இந்த பூமியானது ஆயிரம் பங்கு அதிகமாகக் கனிகளைக் கொடுக்கின்றது. அந்தக் கனிகள் மற்றக்கனிகளைவிட இன்பத்திலும், அழகிலும், பருமனிலும், குணத்திலும் மிகவும் சிறந்ததாகின்றது. இதே பிரகாரம், "இன்ஸான் காமிலு"டைய நஃப்ஸின் தன்மையுமிருக்கிறது.

அதாவது, அதில் "அஹ்காமெ இலாஹி" (நாயனுடைய கட்டளைகள்) என்னும் வித்தைத் தெளிப்பதனால் வித்தையான பசுமையுடன் அதன் "அவுமாலெ ஸாலிஹா" வி (நற்செய்கைகளி)ன் பயிர்களானது வெளிப்படுகின்றது. அவ்வாறாகவே "நஃப்ஸிற்"கும் அதிக மேலான, இன்பமான கனிகளுண்டாயிருக்கிறது. அதைப் பார்க்கிற ஒவ்வொருவரும் "ஹக்குஸுப்ஹான ஹுவத்தாலா"வுடைய பரிசுத்தமான "குதரத்தை" எண்ணி "சுப்ஹானல்லாஹ்! சுப்ஹானல்லாஹ்!"–நாயனே பரிசுத்தமானவன்! நாயனே பரிசுத்தமானவன்! என்று சொல்கிறார்கள். ஆகையால், "வ நஃப்ஸின் வமா ஸவ்வாஹா" என்கிற இந்த ஆயத்தானது வெகு தெளிவாகக் காட்டுகின்றது!

காமில் நஃப்ஸும் ஆலம் கபீரும் :

"இன்ஸான் காமிலு"டைய நஃப்ஸானது அதன் அகமியத்தினாலும், குணத்தினாலும் ஒரு "ஆலமா"யிருக்கிறது. "ஆலமே கபீரா"கிய பெரிய லோகத்தின் சகல குணங்களையும், தத்துவங்களையும் சுருக்கமாகத் தனக்குள் சேகரம் செய்து வைத்துக்கொண்டிருக்கிறது. எது போலேயானால், அல்லாஹுத்தாலாவாகிறவன் சூரியனுடைய குணத்திலிருந்து ஆரம்பித்து, இந்த பூமி வரையில் சகல வஸ்தின் குணங்களையும் சைக்கினையாக விவரித்தான். (குறிப்பு : சூரியனானது நாயனுடைய பூராயத்தின்படி 730 தத்துவங்களாகத் தன்னைக் கோலப்படுத்தி உலகத்தில் பல தத்துவங்களைப் போடுகின்றது. ஒவ்வொரு கோலத்தின்படிக்கும் அதற்குச் சொந்தமான ஒரு நாமமுண்டாயிருக்கிறது. ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்பவைகள் உண்மையில் அதன் சொந்தமான தத்துவம் அல்லது குணத்தின்படி சூரியனின் நாமமே! இந்த தத்துவங்களைக் கருத்தில் பாவிக்காமல் தனிமையாக அதன் நாமத்தை மட்டும் பேசுகிறதாயிருந்தால் அதைச் சூரியனென்று சொல்லப்படும். மற்றபடி இந்தச் சூரியனுக்குச் சொந்தமான குணங்களையும் தத்துவங்களையும் ஸ்தானங்களையும் கருத்தில் பாவித்துப் பேசுகிறதாயிருந்தால், அதைச் சில சமயம் பகலென்றும் இரவென்றும், சில சமயம் ஞாயிறென்றும், திங்களென்றும், சில சமயம் சித்திரை,

வைகாசி என்றும், சில சமயம் பரணி, கார்த்திகை என்றும் சொல்லப்படும். ஆக இவைகளெல்லாம் சூரியனின் நாமந்தான். இன்ஸானுடைய நஃப்ஸும் பல தத்துவங்களினாலும், பல பதவிகளினாலும் பல குணங்களினாலும் பல நாமத்தையடைகின்றது. சில சமயம் "நஃப்ஸே ஸக்கிய்யா"(பரிசுத்த ஆன்மா)வென்றும் சொல்லப்படுகிறது. சில சமயம் "அம்மாறா" வென்றும், சிலசமயம் "லவ்வாமா"வென்றும் சில சமயம் "முத்மயின்னா" வென்றும் (அதாவது : சுபாவ குணம், அறிவின் குணம், ஆன்ம குணம் என்றும்) சொல்லப்படுகின்றது. முடிவில் சூரியனுக்கு எவ்வளவு நாமங்களிருக்கின்றதோ, அவ்வளவு நாமமிதற்குமுண்டு. வாசகம் விரியுமென்றஞ்சி விடுத்தனம். ஷை முக்குணத்தை "இஸ்லாத்தின் உண்மை உபந்நியாசம்" என்னும் நமது பாடத்தில் தெளிவாய்க் காணலாம்.)

அதாவது, சத்தியத்தின் போங்காக அவைகளைச் சொன்னான். அதற்குப்பின் "இன்ஸான் காமிலுடைய" நஃப்ஸைக் குறித்துச் சொன்னான். ஏனென்றால், அப்போதுதான் இன்சான் காமிலுடைய நஃப்ஸானது அந்தப் பல தத்துவங்கள் முழுவதையும் சேகரித்துக் கொண்டிருக்கிறதென்று தெரியவரும். அந்த தத்துவங்கள் முன் சத்தியம் செய்து சொன்ன வஸ்துக்களில் தனித் தனியாய்த் தோற்றப்படுகின்றன.

அல்லாஹ் செய்த சத்தியத்தின் பொருள் :

அல்லாஹுத்தாலா, தான் படைத்த வஸ்துக்கள் அவனுடைய உஜூது (உள்ளமை)க்கு முன்னால் அற்பமானதாகவும், நிலையற்றதாகவுமிருக்க அவைகளின் பேரில் ஏன் சத்தியம் செய்தான்? என்று கேட்பார்களாகில், "குர் ஆன் ஷரீப்" முழுமையிலும் நாயனுக்குப் பொதுவாக ஒரு ஆதத்து (வழக்கம்) ஏற்பட்டிருக்கிறது. அதாவது, அவன் சில மறைவான விஷயங்களை ஸ்தாபிக்க அல்லது ரூபிக்க நாடுவானாகில் தன்னுடைய "உஜூதி" (உள்ளமையி)லும், குணத்திலும் சாதாரணமாய் வெளிரங்கமான பொருளைக் கொண்டு திருஷ்டாந்தப்படுத்திக் காட்டும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. சூரியனையும் அதன் பிரகாசத்தையும், சந்திரன் சூரியனிலிருந்து ஒளியைப் பெற்றுக்கொள்கிறதையும், இரவு பகலைப்பற்றிய விபரமும், ஆகாயம் முதலியவற்றின் விபரமும், வெளிரங்கமான "உஜூது"களையும், குணங்களையும் வைத்துக் கொண்டிருக்கிறது. இதில் ஒருவருக்கும் பேச்சுக்கிடமில்லை. இன்ஸானுடைய நஃப்ஸோ, மிக மறைவானதும் புத்திக்கு மட்டுப்படாததுமாயிருக்கிறது. அதை விளக்கப் புகுங்கால் அனேகருக்கு அனேக போராட்டம் ஏற்படுகிறது.

www.miskinsha.blogspot.com

நஃப்ஸும் சில சந்தேகங்களும் :

அனேக கூட்டத்தார்கள் "நஃப்ஸு" அதாவது "ரூஹேயின் ஸா"னாகிறது "காயிமான" (நிலைபாடான) வஸ்துவென்பதையும், அது சரீரத்தைவிட்டுப்பிரிந்த பின்னும், எப்போதும் நிலையாயிருக்கக் கூடுமென்பதையும் ஒத்துக் கொள்ளவேயில்லை. சிலர் "நஃப்ஸு" உண்டுமென்றும், தரிபாடான வஸ்துவென்றும் ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இவர்கள் அதனுடைய உண்மைத் தத்துவங்களையறிந்து அதற்குத்தக்கபடி "கதர்ப்" (கண்ணியப்) படுத்தவில்லை. எனினும், சிலர் நாம் பூலோகத்துக்கு வந்தது, மிருகங்களைப்போல் உண்ணவும், குடிக்கவும், நஃப்ஸானி யாவான இன்பத்தில் ஆயுளைப் பாழாக்கவுமென்றே எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இன்ஸானுடைய நஃப்ஸானது எவ்வளவு மேலானதென்றும், எப்பேர்பட்ட தத்துவங்களைத் தனக்குள் வைத்துக் கொண்டிருக்கிறதென்றும், கொஞ்சமும் தெரியாது. அது "கமாலாத்து" (நிரப்பங்)களைத் தேடிக்கொள்ள நோக்கம் வைக்குமேயானால், சொற்ப நாளையில் உலக முழுமையும் அதிலுள்ள பல தத்துவங்களையும் ஒரு "தாயிறா"வை (வட்டத்தை)ப் போல் சூழ்ந்து கொள்ளக்கூடும். ஆகையால், "அல்லாஹ் ஜல்லஷானஹு"வாகிறவன் இந்த "முபாரக்" கான சூரத்தில் இன்ஸானுடைய நஃப்ஸையும், அதன் அளவற்ற குணங்களையும் சிறப்பையும் நிரூபிக்க நாடியிருக்கிறான். ஆகையால், முந்தி அவனாகிறவன் நமது எண்ணங்களைச் சேகரித்து அதன் பரிசுத் நோக்கம் வைக்கிறதற்காக, சூரியன், சந்திரன், முதலான பல வஸ்தின் குணங்களை விவரித்து; அதன் பின் இன்ஸானுடைய நஃப்ஸின் புறம் சைக்கினை செய்தான். ஏனென்றால், அது அந்தப்பல தத்துவங்கள் அடங்கலையும் சேகரித்துக் கொண்டிருக்கிறது.

இப்பொழுது இன்ஸானுடைய நஃப்ஸில் அவ்வளவு மேலான தத்துவங்களும், குணங்களும் முற்றிலுமுண்டாயிருக்கின்றன. அவைகள் நட்சத்திரங்களிலும் பூமியிலும் வெவ்வேறாகத் தோற்றப்படுகின்றன. அப்படியிருப்பதால் அவ்வளவு வஜ்ப்மான, பல தத்துவங்களைச் சேகரித்துக் கொண்டிருக்கிற வஸ்தைக்குறித்து, அது ஒரு வஸ்துமல்ல, "மௌத்துக்குப்பின்" எப்படி பாக்கியாயிருக்கக்கூடுமென்று சந்தேகிப்பது மகா மூடத்தனம். இந்தக் குணங்களெல்லாம் வெளிரங்கமான வஸ்துக்களில் உண்டாயிருக்கின்றன. அதைத் திட்டமாக உண்டென்று ஒத்துக்கொள்கிறதில் நமக்கு யாதொரு பேர்க்கும் இடமில்லை.

ஒரு பொட்டையன் கூட வெயிலையுணர்ந்து சூரியன் உண்டென்று ஒத்துக்கொள்கிறான். இன்ஸானுடைய நஃப்ஸில் அவைகளெல்லாம் ஒன்றாகச் சேகரமாயிருக்கிறது. அப்படியிருப்பதால், இன்ஸானுடைய நஃப்ஸானது திட்டமாக நிலையான வஸ்தாயிருக்கிறதென்பதில் நமக்கு என்ன பேர்கண்டாயிருக்கிறது? தன் சுயத்தில் ஒரு வஸ்துமல்லாதது, மவுஜூதாயிருக்கிற வஸ்து அடங்கலுடைய குணங்களையும் சேகரித்து வைத்துக்கொண்டிருக்க கூடுமா?

சத்தியமும் சாட்சிகளும்

அல்லாஹ் ஜல்ல ஷானஹுவாகிறவன் சத்தியம் செய்கிறதின் போக்கை இதற்காகவே அனுசரித்திருக்கிறான். அதாவது சத்தியமானது சாட்சிக்குப் பிரதியாயிருக்கிறது. உலகத்திலுள்ள நீதிவான்கள் சாட்சிகளில்லாவிட்டால் சத்தியத்தின் பேரில் ஞாயத்தை முடிவு செய்து விடுகிறார்கள். ஒரு முறை சத்தியம் செய்வதனால் ஏறக்குறைய இரண்டு சாட்சிகளைக் கொண்டு எடுக்கக்கூடிய பலனை எடுத்துக் கொள்கிறார்கள். ஆகையால், புத்தியின்படி, வழக்கத்தின்படி, சட்டத்தின்படி, மார்க்கத்தின்படி சத்தியத்தைச் சாட்சிக்குப் பதிலாக எண்ணப்படுகின்றது. ஆகையால், இந்த எடுப்பின் பேரில் அல்லாஹுத்தாலா அவைகளை சாட்சியைப் போல் தீர்மானித்திருக்கிறான்.

அல்லாஹ்வின் சத்தியமும் அகமியமும் :

"சூரியன் பேரிலும், அதன் பிரகாசத்தின் பேரிலும் சத்தியமாக" என்று சொன்னதற்கு அகமியத்தின் அர்த்தமாவது : சூரியனும் அதன் பிரகாசமும் இன்ஸானுடைய நஃப்ஸு மவுஜூதாகவும் காயிமாகவுமிருக்கிறதென்று சாட்சி சொல்லத்தக்கதாயிருக்கிறது. ஏனென்றால், சூரியனுக்கு உஷ்ணம் வெளிச்சம் முதலானவைகள் காணப்படுவது போல், இன்ஸானுடைய நபுளிலும் அனேக குணங்கள் உண்டாயிருக்கிறது. "முகாஷபா"வி (அகப்பார்வையி)ன் வெளிச்சம், "தவஜ்ஜஹு" (யோகத்து)டைய உஷ்ணம் இவைகளெல்லாம் காமிலானவர்களுடைய நபுளில் காணப்படுகின்றது. அத்த நபுளினுடைய புதுமைகள் சூரியனுடைய உஷ்ணத்தையும் அதன் பிரகாசத்தையும்விட பன்மடங்கு மேற்கொண்டதாக இருக்கிறது. ஆகையால், சூரியன் மவுஜூத் (உண்டென்ப)தாக ஒப்புக் கொள்ளும்போது, குணத்தில் அதற்கு ஒப்பாக அல்லது அதற்குச் சரியாக—அதைவிட மேலாக இருக்கிற—இன்ஸானுடைய நஃப்ஸை ஏன் மவுஜூதாக ஒப்புக்கொள்ளக்கூடாது?

www.miskinsha.blogspot.com

அல்லாஹுத்தாலா சூரியனைத் தொடருகிற சந்திரன் பேரில் சத்தியம் செய்து சொன்ன சொல்லுக்கு அதன் கருத்துரையாகிறது: சந்திரன் தனது குணத்துடன் சூரியனிலிருந்தும் ஒளியைப்பெற்றுக் கொள்கிறது. அதானது இன்ஸானுடைய நஃப்ஸு மவுஜூதாக வும், காயிமாகவும் இருக்கிறதின் பேரில் சாட்சி சொன்னதாயிருக் கிறது. ஏனென்றால் சந்திரன் சூரியனிலிருந்து நூரை (ஒளியை) பெற்றுக்கொள்வது போல், ஹக்கைத் தேடுகிறவன்-ஹக்கைத் தேட ஆயத்தமாயிருக்கிறவனுடைய நஃப்ஸானது. வேறொரு இன் ஸான் காமிலுடைய நஃப்ஸைத் தொடர்ந்து, அதனுடைய நூரி லிருந்து நூரை எடுத்துக்கொள்கிறது. அதனுடைய "பாத்தி"னான " பைலி "லிருந்து " பைலை " (அருளை)ப் பெற்றுக்கொள்கிறது. என்றாலும், சந்திரனைக்காண அதிகமாக நூரைப் பிரயோஜன மாகத் தேடிக்கொள்கிறது. ஏனென்றால், சந்திரனானது ஒளியைப் பெற்றுக்கொண்டு மறுபடியும் அதை விட்டுவிடுகின்றது. ஆனால், இது ஒரு போதும் அதை விடுகிறதில்லை. ஆகையால், நூரைப் பிரயோஜனமாக தேடிக்கொள்கிறதில் இந்த சந்திரனுடைய கூட் டாளி, அல்லது பங்காளிக்கு மேற்கொண்டதாயிருக்கிறது. சந்திரனு டைய மற்ற எல்லா குணங்களையும் தத்துவங்களையும் தனக்குள் வைத்துக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்க சந்திரனை மட்டும் " மவுஜூதானதாகவும் ", " காயிமானதாகவும் " இருக்கிறதென்று ஏற்றுக்கொண்டு, இன்ஸானுடைய நஃப்ஸு திட்டமாக மவுஜூ தாயிருக்கிறதை முற்றிலும் மறுத்து விடுவது என்ன காரணம் ?

சத்தியத்தின் கருத்து :

அல்லாஹுத்தாலா இன்சானுடைய நஃப்ஸுக்கு முன் சத்திய செய்து சொல்லப்பட்ட வஸ்து அடங்கலையும் அதன் குணத்தி னால் சாட்சியாகவும், சாட்சி சொல்லப்பெற்றதாகவும் தீர்மானித்து, இந்த விஷயத்தின் புறம் நம்மை நோக்க வைத்திருக்கிறான். இன்ஸானுடைய நஃப்ஸானது உண்மையாக மவுஜூதாயிருக்கிறது. இதே பிரகாரம் ஒவ்வொரு இடங்களிலும் குர் ஆன் ஷரீபில் சிலச்சில வஸ்துக்களைக்கொண்டு சத்தியம் செய்யப்பட்டிருக்கிறது. அந்தச் சத்தியங்களினால் ஒவ்வோரிடங்களிலும் இதுவே கருத்து. ஏனென்றால், பகிரங்கமான விஷயங்களை அதைப்போலுள்ள மறைவான அகமியங்களுக்காக சாட்சியைப்போல் எடுத்துக்காட்டப் படுகிறது. ஆனால் இன்ஸானுடைய நஃப்ஸு மவுஜூதாக இருக் கிறதற்காக வேண்டி சத்தியத்தின் போங்காக சாட்சிகளை எடுத் துக்காட்டப்பட்டிருக்கிறது.

சாட்சிகளின் குணம் நஃப்ஸில் எங்கே என்ற வினாவுக்கு விடை :

அந்த சாட்சிகளின் குணம் இன்ஸானுடைய நஃப்ஸில் பகிரங்கமாக எங்கு காணப்படுகிறது? அப்படிக் காணப்படுகின்ற தென்பதற்கு என்ன முகாந்தரம் ? என்று சிலர் கேட்கலாம். இந்த சந்தேகத்தை நிவர்த்தி செய்வதற்காக " அல்லாஹ்ஜல்லஷா னஹு " திருவுளமாகின்றான்: " ஃபஅல்ஹமஹா ஃபுஜூரஹா வ தக்வாஹா" - அதாவது, அல்லாஹுத்தாலாவாகிறவன் இன் ஸானுடைய நஃப்ஸைப் படைத்து இருள், வெளிச்சம்-நன்மை தீமை என்கிற இரண்டு பாதையைத் திறந்து வைத்திருக்கிறான்.

தீமையின் பலன் :

எவன் இருளான (பாவமான) துன்மார்க்கத்தை அனுசரிக் கிறானோ, அவனை அந்தப் பாதையில் முடிவு வரையில் சேர்க்கப் படுகிறது. மிக்க இருளான இரவுக்கு ஒப்பாய் விடுகிறான். பாவ மான காரியங்கள் இருளான எண்ணங்களைத் தவிர மற்ற ஒரு வஸ்திலும் அவனுக்கு இன்பம் வராது. இவ்விதமான சாவகாசமே அவனுக்கு நல்லதாகத் தெரியும். இவ்விதமான பராக்கே அவனு டைய மனதைச் சந்தோஷப் படுத்தும். அவனுடைய கெட்ட சுபாவத்தின் நிலைமைக்குத்தக்கபடி கெட்ட காரியத்தின் உதிப்பே அவனுக்குண்டாகிக் கொண்டிருக்கும். ஒரு போதும் நல்ல எண்ணங் கள் அவனுடைய மனதில் உண்டாகாது.

நன்மையின் பலன் :

பரிசுத்த தலத்தின் நூரானியாவான பாதையை அனுசரிப்பானே யானால் அந்த நூருக்கு உதவி செய்யுமான " இல்ஹாமு " அவ னுக்குண்டாகிக் கொண்டிருக்கும். அதாவது, அல்லாஹுத்தாலா நன்மையை விரும்புகிறவன் மனதின் ஒளியைத் தன்னுடைய சொந்த " இல்மி "னால் கமாலாக்கி விடுகிறான். அவனுடைய பிரகாசமான " முகாஷபா "வுடைய நெருப்பைக் கொளுத்தி விடு கிறான். அப்போது அவன் தன்னுடைய பிரகாசமான நூரைப் பார்த்து அதனுடைய பிரயோஜனத்தினால் தேடிக்கொள்கிற குணத்தை அனுபவித்துப் பூரணமான பக்தியைக்கொண்டு அறிந்து கொள்கிறான். அதாவது, சந்திரன், சூரியனுடைய ஒளி நம்மிலு முண்டாயிருக்கிறது. உயர்ந்து விஸ்தீரணமாயிருக்கிற வான லோ கமாகிறது, நட்சத்திரங்களைக் கொண்டு நிறைந்திருப்பது போல்,

www.miskinsha.blogspot.com

தம்முடைய நெஞ்சில் விரிவான இருதயமும், மேலான மனத்தைரியமும், நம்முடைய மனதிலும் தலை மூளையிலும் பிரகாசமான தத்துவத்தின் பொக்கிஷங்கள் உண்டாயிருக்கிறது. அவைகள் நட்சத்திரங்களைப் போல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, அப்போது அவனுக்கு இவைகளைத் தெரிந்து கொள்கிறதற்காக வேறே வெளிரங்கமான முகாந்தரங்கள் யாதொன்றும் தேவையில்லை என்றாலும், அவனுக்குள்ளிருந்தே ஒரு நிரப்பமான முகாந்திரத்தின் ஊற்றுக் கண் எப்போதும் சுரந்து கொண்டிருக்கும். அவனுடைய தாகமுள்ள மனதுக்கு இது தாகத்தைத்தீர்த்துக் கொண்டிருக்கும்.

நஃப்ஸை பக்குவப்படுத்தும் வழி :

கலூக்கின்படி இந்த நஃப்ஸானியாவான குணங்களை எப்படிக் காணக்கூடுமென்று கேட்கப்படுமேயானால், அல்லாஹ் ஜல்லஷானஹூ திருவுளமாகிறான்: "கத்அஃபுலஹ மன்ஸக்காஹா வகத்காப மன்தஸ்ஸாஹா"-அதாவது எவனொருவன் தன்னுடைய நஃப்ஸை பரிசுத்தமாக்கினானோ, இன்னும் கெடுதலையும் கெட்ட குணங்களையும் முழுவதும் விட்டு ஆண்டவனுடைய "ஹூக்மு" (கட்டளை)க்கு கீழாக தன்னைப் போட்டு விட்டானோ, அவன் "முராதை" (நாட்டத்தை) பெற்றுக்கொள்வான். அவனுடைய நஃப்ஸு, அவனுக்கு "ஆலமே சகீரை" (சிறிய உலகத்தை)ப் போல் பல தத்துவங்களும் சேகரமாகப்பட்டதாகத் தெரிய வரும். எவன் தன்னுடைய நஃப்ஸைப் பரிசுத்தமாக்கவில்லையோ, வீணான இச்சையில் தன்னைப் புதைத்து விட்டானோ, அந்த "மத்லபு" (தேவை)களைப் பெற்றுக்கொள்கிறதை விட்டு நீங்கியிருப்பான். இந்தத் தர்க்கத்தின் நிர்மானமாகிறது, சந்தேகமின்றி இன்ஸானுடைய நஃப்ஸில் ஆலமுழுமையிலும் காணப்படுகிற அந்தப்பல தத்துவங்களுமுண்டாயிருக்கின்றன. அதன் பேரில் "எக்கீன்" (விசுவாசம்) வருகிறதற்காக இது ஒரு நேரான வழி.

பாவத்தினால் தமூது வர்க்கத்தார் அடைந்த பலன் :

இன்ஸானாகிறவன் அல்லாஹூத்தாலாவுடைய "காணூனின்" (சட்டத்தின்)படி நஃப்ஸை பரிசுத்தமாக்குகிறதின் புறம் நோக்க வேண்டியது. நபுஸை பரிசுத்தமாக்குகிற வேளையில் "இல்முல் எக்கீன்" (கல்வி கேள்வியின் அனுமானம்) மட்டுமல்ல. "ஹக்குல் எக்கீனாக" (அனுபவத்தில்) அந்த மறைவான தத்துவங்களின் உண்மை வெளிப்பட்டுப் போகின்றது. அல்லாஹ் ஜல்லஷானஹூவாகிறவன் ஒரு "மிதாலா" (உவமானமா)க "தமூது" கிளையார்களுடைய வர்த்தமானத்தைச் சொல்லிச் சொல்லுகிறான்:

"கத்தபத்தமூது பி தக்வாஹா, இதின்பஅத அஷ்காஹா ஃபகாலலஹூம் ரஸூலுல்லாஹி நாக்கதல்லாஹி வசுக் யாஹா பகத்தபூஹ்" பஅக்கருஹா, பதம்தம அலைஹிம் ரப்புஹூம் பிதன்பிஹிம் பஸவ்வாஹா, வலாயகாபு உக்பாஹா."

அதாவது, அந்த தமூது கிளையார்கள் தங்கள் மாறு செய்கிற சுபாவ குணத்தினால், தங்கள் காலத்து நபியைப் பொய்யாக்கினார்கள். அப்படிப் பொய்யாக்க ஒரு பெரிய துரோகியானவன் அவர்களில் எழும்பி முன்னோக்கினான். அக்காலத்து ரஸூலானவர்கள் அவர்களுக்கு "நஸீஹத்" தாகச் சொன்னார்கள்: அதாவது, "நாக்கத்துல்லாஹ்வாகிய" அல்லாஹூத்தாலாவுடைய ஒட்டகையை, அது தண்ணீர் குடிக்கும் தானத்தைத் தடுக்க வேண்டாம் என்றும். ஆனால், அதையவர்கள் கேட்காமல் ஒட்டகையுடைய காலை அறுத்து விட்டார்கள். இந்தப் பாவத்தின் மிடிமையினால், அல்லாஹூத்தாலா அவர்கள் பேரில் மரணத்தின் அடிஎய அடித்தான். அவர்களை மண்ணோடு மண்ணாக்கி விட்டான். அல்லாஹூத்தாலாவாகிறவனின் தண்டனையைப்பற்றி அவர்கள் இறந்த பின்-அவர்களுடைய விதவையான மனைவிகள், எத்தீமான பிள்ளைகள், அனாதையான குடும்பத்தின் சங்கதி எப்படியாகுமென்கிற விஷயத்தைக்குறித்து அந்த ஒட்டகத்தை கொன்றவன் கொஞ்சமும் கவலிக்க (பயப்பட)வில்லை. இது ஒரு மகா நுட்பமான "மிதால்" (உதாரணம்).

அல்லாஹ்வின் ஒட்டகையின் இரகசியம் :

அல்லாஹூத்தாலாவாகிறவன் இன்ஸானுடைய நஃப்ஸை நாயனுடைய ஒட்டகைக்கு ஒப்பாக்குகிறதற்காக வேண்டி இவ்விடத்தில் சொல்லியிருக்கிறான்; அதன் கருத்தாவது: "இன்ஸானுடைய நஃப்ஸும் உண்மையில் இந்தக் கருத்துக்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அது நாயனுடைய ஒட்டகையாக உபயோகப்படுவதற்கேயுண்டாயிருக்கிறது. அது "ஃபனாபில்லாஹ்" வாகிற (தன்னை அல்லாஹ்வில் அழிக்கிற)போது எப்படி ஒருவன் ஒட்டகையின் பேரில் சவாராகிறானோ, அது போல், அல்லாஹூத்தாலா தனது பரிசுத்தமான "தஜல்லி"யுடன் நஃப்ஸின் மீது வெளியாகிறான். ஆகையால், (சுபாவ குண) நஃப்ஸுக்கு வழிபட்டவர்களுக்கும், ஹக்கை விட்டு முகத்தைத் திருப்பி கொள்கிறவர்களுக்கும் திடுக்கமாகவும், அழகாகவும் சொல்லுகிறான்:

www.miskinsha.blogspot.com

தண்ணீரின் இரகசியம் :

" நீங்கள் ' தமூது ' கிளையார்களைப் போல் அல்லாஹுத் தாலாவுடைய ஒட்டகை தண்ணீர் குடிக்கும் தானமாகிய, நாயனை அறிந்து ஞாபகம் செய்யும் தெய்வீக ஞானத்தின் ஜீவ நீர்த்தத்தின் கிணறை, அதைக்கொண்டே அந்த ஒட்டகையின் ஜீவன் நிலை நிற்கிறதாயிருக்க அதை அதன் பேரில் தடைசெய்கிறீர்கள். நீங்கள் தடை செய்கிறது மட்டுமல்ல அதன் காலையே வெட்டிப்போடுகிற யோசனையில் இருந்தால் அது அல்லாஹுத்தாலாவுடைய பாதை யில் நடக்கிறதைவிட்டு நின்று விடும். ஆதலால், உங்களுக்கு "ஹைரை" (நன்மையை) நாடுவீர்களேயானால் ஜீவ நீர்த்தத்தை அதன் பேரில் தடை செய்ய வேண்டாம். உங்களுடைய இச்சை களாகிய கத்தி, கட்டாரிகளைக் கொண்டு அதனுடைய காலை வெட்ட வேண்டாம். நீங்கள் அப்படிச் செய்வீர்களேயானால், அல்லாஹுத்தாலா சவாரிக்காக உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக் கிற ஒட்டகையானது காயப்பட்டுச் செத்துப் போகுமேயானால், ஒன்றுக்கும் உதவாததாக காய்ந்த விறகுகளைப்போல் வெட்டப் பட்டு பின்பு நெருப்பில் போடப்படுவீர்கள். நீங்கள் இறந்த பிறகு அல்லாஹுத்தாலா உங்களுக்குப்பின்னால் மீதியாயிருக்கிற உங்கள் குடும்பத்தாரின் பேரில் ஒரு போதும் கிருபை செய்யமாட்டான். உங்களுடைய பாவம், பழியுடைய மிடிமைத்தனம் அவர்களையும் தொடரும். நீங்கள் மட்டும் உங்கள் கருமத்தின் மிடிமையினால் சாகிறதல்ல; உங்கள் பிள்ளை குட்டி குடும்பத்தாரையும் அந்த அக் கிரமத்தில் போடுகிறீர்கள்." என்பது இந்தத் துலக்கமான "ஆயத்" தினால் தெளிவாக நிச்சயமாகிவிட்டது.

மனிதனே மேலானவன் :

கிருபையுள்ள நாயனே இன்ஸானை எல்லாப்படைப்புகளை விட மேலாகவும், சிறப்பாகவும் உண்டாக்கியிருக்கிறான். மலாயி கத்துகள், நட்சத்திரங்கள், அனாசிர் (பஞ்ச பூதங்கள்) முதலா னவைகளும் எவை இன்ஸானுக்காக, நாயனுக்கும் இன்ஸானுக்கும் இடையில் தொண்டு செய்து கொண்டிருக்கின்றனவோ, அவைகள் இன்ஸானுக்கு மேன்மையாகத் தோன்றவில்லை. அவைகள் இடையில் உண்டாயிருக்கிற காரணத்தைக் கொண்டு இன்ஸா னுக்கு யாதொரு சிறப்பையும் கொடாது. அவைகட்குத்தான் இன்ஸானைக்கொண்டே சிறப்பு ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவு சிறப்பான " மகலூக்கு " (சிருஷ்டிப்பு)டைய பணிவிடையில் இருப் பதே அதற்குப் பெரிய சிறப்பு. ஆகையால், உண்மையில் அவைக ளெல்லாம் ஊழியக்காரர்களேயல்லாது எஜமானல்ல !

சகலமும் மனிதனுக்கு ஊழியம் செய்கிறது:

இந்த விஷயத்தில் ' ஸஅதி ஸீராஸீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி ' அவர்கள் பின்வருமாறு மிக்க அழகாகச் சொல்லியிருக் கிறார்கள் : "மேகமும், காற்றும், சூரியனும், சந்திரனும், வானமும் உன்னுடைய பிரயோஜனமான வேலையிலிருக்கின்றன. உனக்கு ஒரு ரொட்டி கிடைக்குமேயானால் மறதியாகச் சாப்பிடாதே. ஏனென்றால், இவைகளெல்லாம் உனக்காகச் சுற்றி ஊழியம் செய் கின்றன. நீ ஊழியம் செய்யாமலிப்பது நீதமல்ல, நீதத்துக்கு ஒழுங்குமாகாது." என்பதே!

இந்த " முபாரக் "கான ஸுரத்தால் இன்ஸான் காமிலுடைய நஃப்ஸின் தகுதியையும், வலுப்பத்தையும், அதில் அமைந்திருக்கும் தத்துவங்களையும் மிகத் தெளிவாகத் தெரிகிறோம். இந்த நஃப் ஸை கெட்ட குணங்களை விட்டும் பரிசுத்தமாக்கி நாயனுடைய கட்டளைக்கு முற்றிலும் கீழ்படிந்து நடந்தவர்களே அந்தக் காமி லீன்களுடைய தன்மையை அடைவார்களென்றும், அவ்விதமில்லா தவர்கள் அடையும் கெடுதியையும் தெரிகிறோம். தேகத்திற்கு உணவு அவசியமாதல் போல் நஃப்ஸுக்கு அல்லது ஆன்மாவுக்கு ஹக்கை அறியவும், அவனை தியானிக்கிறதும், தெரிசிப்பதும் உணவாயிருக்கிறது. இதுவே " மாஉல் ஹயாத்து " (ஜீவ நீர்த் தம்) என்று சொல்லப்படும். இதுவே அதற்குள்ள இயற்கை குண மாதலால், இதையே உண்டாக்கிக் கொள்ள வேண்டுமென்றும் மற்ற குணங்கள் செயற்கையென்றும் அதை நீக்குவதற்குத் தெண்டிப்பதே அவசியவென்றும் தெரியவருகிறது.

(மகத்துவமும், மகா கருணையுமுள்ள நாயனே ! எங்களு டைய நஃப்ஸை பரிசுத்தமாக்கி நாங்கள் பூரணத்தை அடைந்த காமிலீன்கள் பதவியில் சேரும்படி அருள் புரிவாயாக ! ஆமீன் ! யாரப்பல் ஆலமீன் !)

www.miskinsha.blogspot.com

இல்முன் நஃப்ஸ்

(தன்னையறிதல் — சுயஞானம்)

நிறியக்கடவாய்! நஃப்ஸ் அல்லது ரூஹ்: இதைத் தத்துவஞானிகள் இருதயத்தின் ஆவியென்றும், சாதாரண ஜனங்கள் உயிரென்றும், இந்துக்கள் ஆத்மாவென்றும், இஸ்லாமானவர்கள் ஆண்டவனின் கற்பனையென்றும் சொல்வார்கள். அஃதானது ஏறுவோளாகவும், அதன் சரீரம் வாகனமாகவுமிருக்கின்றது. ஆண்டவனின் உத்தரவுப்படி சரீரத்தினுள் பரதேசியைப்போல் சிலகாலம் தங்கியிருந்து, சரிவரச் சரீரத்தைத் காப்பாற்றுவதில் கவனமுள்ளதாயிருக்கிறது. ஐம்புலன்களானவை, அதன் பரிசுத்தமாகிய சுயத்திலின்றுமே தரிபாடாயிருக்கின்றன; அதன் அரசாட்சியின் பட்டணமாயிருக்கின்றது. அஃது இல்லாவிட்டால், சரீரமானது அசைவற்ற ஒரு மண்ணின் பொம்மையாயிருக்கலாம்! இனத்தில், சரீரத்தைக் கொண்டு யாதொரு சம்பந்தமுமில்லையென்றாலும், ஒவ்வொரு நாடி நரம்புகளிலும் சரிவர உண்டாயிருக்கின்றது. சரீர முழுமையும் அதன் அரசாட்சியின் பட்டணமாயிருக்கிறது. உறுப்பின் முழுமையிலும் அதன் ஆட்சியுமாடு; நாடி உடைவதினால் அதற்கு வருத்தமுண்டாகிறது; இன்னும் சரீர சுகத்தினால் அதற்கு ஆறுதலும், ஆரோக்கியமுமுண்டாகின்றன. ஆனால் அதன் சுயம் அதனை விட்டு முற்றிலும் அலக்காய் உள்ளது.

அதன் உதாரணமாவது: தோட்டக்காரனுக்கு, யாதொரு விருக்ஷம் வெட்டப்படுவதினாலும், விழுந்து விடுவதினாலும், பலன் கொடாதினாலும், பட்டுப்போவதினாலும் மிருந்த வருத்தமுண்டாகலாம்; செழித்தோங்குவதினால் மிருந்த சந்தோஷப்படலாம். ஆனால், அசலில் இரண்டுக்கும் முற்றிலும் வேறுபாடு உண்டு. ஏனெனில், தோட்டக்காரரின் சுயம், தோட்டத்தின் மரங்கள் கூடுதல் குறைவதனால், கொஞ்சமும் கூடிக் குறைவதில்லை.

அதன் மிருந்த சூக்குமமாவது, முட்டையினுள் பிரவேசிக்கின்றது. அதன் உட்தோல், வெளித்தோலில் கிஞ்சிற்றேனும் வித்தியாசமில்லை. தெவிவான கண்ணாடியில் பார்வை எப்படிச் செல்லுமோ, அப்படிச் செல்கிறது அதனைப் பண்டிதர்கள் ஜீவ உஷ்ணமென்பார்கள்; அல்லது வைத்திய முறைப்படி ஜீவ

காங்கையென்னலாம்; ஆனால், காங்கையைவிட எத்தனையோ பங்கு அதிக சூக்குமமாயிருக்கின்றது! உஷ்ணத்தின் காங்கையை உணரலாம்; ஜீவகாங்கையை உணரவும் ஏலாது.

இவ்வாறு சூக்குமமாயிருப்பதோடு, பொதுவாகச் சரீரத்தின் விஷயங்களை அதுவே செய்கின்றது. ஆகாரத்தைத் தீனிக்குடலில் கொண்டுபோய் ஒவ்வோர் இடங்களுக்குத்தக்கவாறு (எவ்விடம் அஃது அவசியமாயிருக்கின்றதோ) அதுவே செலுத்தி வைக்கின்றது. தான்கு பூதங்களாகிய பற்பல சுபாவங்களுக்கு அவற்றின் சுபாவப்படி உதவி செய்கின்றது. சரீரத்தின் அசுத்தமான மஸ்துகளையும், ஆகாரத்தின் கழிவுகளையும் மூத்திரம், மலம், ஒக்காளம், வியர்வை, ஏப்பம் மூலமாய் வெளிப்படுத்துகின்றது. ஆத்மாவின் சொந்த குணம் யாதெனில், சரீரத்துக்கு ஆகாரம் அளிக்கும்; தான் உட்கொள்ளாது. அஃதாவது, "சுத்தச் சாப்பாடு அளிக்கும்; தான் சாப்பிடாது" என்பது, உண்மை ஆண்டவனின் பண்பாயிருக்கின்றது. முடிவில், அவ்வளவு சூக்குமமான உண்மையே கருவி அவசியமின்றிச் சர்வ காரியங்களையும் முடிவு செய்கின்றது. மற்றோர் உதாரணம்: கனவின் நிலைமை; அந்நிலைமையில் மனிதன் எல்லா அவசியங்களைப்பற்றியும் சம்பாஷித்துக்கொள்கின்றான்; யாதோர் உறுப்பின் அவசியம் இல்லாமற்போகிறது.

ஆகையால், இவ்விதமே ஆண்டவனின் தன்மையென அறிந்து கொள்க! அஃதாவது, அவன் தானே எல்லாக் காரியங்களையும் செய்கின்றான்; ஆனால், யாதொருவன் அவயவமும் தேவையில்லை. அவனின் கட்டளை மட்டும் எல்லாக் காரியங்களுக்கும் கர்த்தாவாக இருக்கும். ஆகுக என்றால் உடனே ஆகிவிடும்!

ரூஹ் அல்லது ஆத்மா அவனின் படைப்பாயிருக்கும். அஃது அவ்வளவு சூக்குமமாயிருக்கின்றது! அவயவமில்லாமல் வேலை செய்கின்றது! அதன் பரிசுத்தமான சுயம் அவனைக்கொண்டு யாதொரு சம்பந்தமும் வைத்திருக்கவில்லை. அதன் சூக்குமம் அவனின் பரிசுத்தமான சுயத்தில் மாண்டதாயிருக்கின்றது.

ஆகையால், இந்த விஷயங்களில் அறிவை விருத்தி செய்தால், "மன் அரஃப நஃப்ஸஹு ஃபகத் அரஃப ரப்பஹு" அஃதாவது எவன் நஃப்ஸை அறிந்தானோ, அவனே ஆண்டவனை அறிந்தான்" என்ற தாற்பரியத்தை உணரலாம். ஆத்மாவின் சூக்குமம் இவ்வாறென விளங்கிவிட்டால், லாப நஷ்டம் அதன் சுயத்தில் இல்லை. அது சாப்பாடு அளிக்கும்; தான் சாப்பிடாது; நிங்கின்

www.miskinsha.blogspot.com

பேரில் கோபிக்கும் ; நன்மையின் பேரில் சந்தோஷமும், யாதோர் உறுப்பு சோர்வடைந்து வருத்தப்பட்டால், பரிகாரமும் செய்கிறது. இரக்கம் வைக்கிறது. முடிவில், ஆண்டவனின் சுயத்தின் பண்பு, அனேகமாக-அதில் சுருக்கமாக இருக்கிறது! ஆனதினால், நபிகள் பிரான் (ஸல்) திருவுளம் பற்றியுள்ளார்கள் : "எவன் தன் நப்ஸையறிந்தானோ, அவனே ஆண்டவனை அறிந்தான்" என்று!

எவ்விதம் நாம் பூரணத்தின் பார்வையைக் கொண்டு நப்ஸைப் பார்க்கிறோமோ, இன்னும், அறிகிறோமோ அவ்விதம் ஆண்டவனின் சுயத்தைப்பார்க்கக்கூடும்; அல்லது அறியக்கூடும்! சரீரம் அழியக்கூடிய வஸ்தாயிருக்கிறது. அதன் தத்துவங்களும் அழியக்கூடிய வஸ்தாயிருக்கிறது. இன்னும், களங்கமுள்ளதாயிருக்கிறது. இவ்விதப்பார்வையின் பேரில் ஆண்டவனின் தரிசனத்தின் எண்ணம் மிக பைத்தியமாயிருக்கிறது.

பாக்கிய பூரணமாகக் கருத்தை உணர்வது, "ஆலிமெஹக் காணி" (மெய்யறிவாளர்) அல்லது "சூஃபியாக்க (தத்துவ ஞானிக) ளாகிய" மற்றான்களின் காரியம் சாதாரண புத்தி இந்தப்பதவியை எட்டிக்கொள்ளாது; அதனை அறிய முடியாது! பொருளில்லா விட்டால் பாத்தியம் எப்படி கொள்ளும்? கர்பாதியாயிருப்பவர் களுக்குச் சூரியனின் பிரகாசத்தைக்காணச் சக்தியில்லை; அவர் களால் சூரியனை எப்படிக் காணக்கூடும்? மானிட ஆத்மாவின் அந்தரங்கத்தில் புத்தியைச் செலுத்துவது மகா கஷ்டம். இதைப் போல், மிருகம், பக்கிசாரம், மரம், செடி, கற்காடு, புழுப் பூச்சி மற்ற எல்லா ஜீவ வர்க்கங்களின் உயிர்களின் அந்தரங்கத்தில் புத்தியைச் செலுத்துவதிலும் இதே கஷ்டம் நேரிட்டிருக்கிறது. பகுமையான தழைகளையுடைய மரங்களானவை, கூர்மையானபார் வைக்கு-ஒவ்வோர் இலையும் ஆண்டவனை அறியும் ஏடுகளாயிருக் கின்றன!

இவைகளை யோசித்துப் பார்க்கலாம் : சர்வ வல்லமை யுள்ள கடவுளின் விநோத விசித்திரக் காட்சிகள் தோற்றப்படு கின்றன; அவைகளினிடத்தில் வெளி உறுப்பாகிய ஏக காலுமில் லை; யூகமுமில்லை; நாக்குமில்லை; இவ்வளவு எளாத்தன்மையில் எவ்விதம் புஷ்பங்களை, இலைகளை விநயமான நிறமுள்ளதாக வெளிப்படுத்துகின்றன? மனிதனுக்கு கை, கால், முதலிய கருவி களிலிருந்தும் வாய்க்கவில்லை. (மனித) அறிவு அது வரையில் சேல்லவில்லை. அவைகள் பூமியில் வேர்களின் நரம்பின் மூலமாய்ச்

சாரங்களை அல்லது, அல்லது ரசங்களை உட்கொள்ளுவதும், சூரியனிலிருந்து பல நிறங்களைப்பெறுவதும் ஒருவராலும் ஏலாது! அவைகளின் சிறிய பெரிய நரம்புகளை உற்பத்தி செய்ய யாரால் கூடும்?

பிராணிகளின் ஜீவன்களைப் பார்க்கலாம்! புஷ்பங்களிலிருந்து தேனீக்கள் எவ்விதம் தேனை வெளிப்படுத்துகின்றன? எண்ணிதம் ஆறு மூலைகளுள்ள (அறுகோண) அறைகளை அமைக்கின்றன? பெரிய இஞ்சினியர்களாலும் ஆகாது! இவ்விதம் பக்கிசாரம், நாற்கால் மிருகங்களைக் கவனிக்கலாம் : அவைகள் என்னென்ன (அற்புத மான) விசித்திரக் காட்சிகளையும், சர்வ வல்லமையுள்ள ஆண்ட வனின் தத்துவங்களையும் வெளிப்படுத்துகின்றன! இவ்விதம் நித காலம் மனிதன் யோசனையைச் செலுத்திக் கொண்டிருப்பானாகில், நம்பிக்கையுண்டு. ஆண்டவன், அவனுக்காக ஞான வழிகளைத் திறந்து விடுவான்!

ஆன்மா தரித்துக்கொள்ளும் ஸ்தானம் இருதயம். அஃது ஒரு கடைசிப்புள்ளி. ஒடுக்கத்திலுண்டு; மார்புக்கிடையில் "வாழைப் பூவைப்போல்" அது தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருக்கும் காரணமாவது : ஆயுசை நீடிக்கச்செய்யும் வெளிக்காற்றை எல்லா உறுப்புகளிலும் பெற்று, முதலாவது, ஆன்மாவின் பிரகாசத்தைத் தலை மூளைக்குச் செலுத்தி, பிறகு கீழ் அவயவங்களுக்குச் செல்லவும், அசுத்தமான காற்றை விட்டுக்காக்கவும், ஆண்ட வனின் ஒளியிறங்கும் ஸ்தலத்தைவிட்டும் அசுத்தமான காற்றை விலக்கவுமேயாம்!

இஸ்லாத்தின் ஜீவாமிர்தம் — கடவுளின் பக்தியாவது : "சிசுவுக்குத் தாய்ப்பாலைப்போல்," ஜீவாத்துமாவாயிருக்கிறது. நமது ஆத்மாவானது கடவுளை ஏற்றுக் கொண்டிருக்கிறது. ஆகையால், அதனை மறுக்கவாவது, அல்லது அதன் மகத்துவம் அல்லது, தத்துவங்களைக் குறைக்கவாவது நமது மனதில் யா தோர் எண்ணம் அல்லது ஊசாட்டம் வருமாகில் அதனை அதிக வேகமாக உதைத்துத் தள்ளிவிடுகின்றது. ஆனதினால், "சூரி யன் சூரியகாந்திக் கண்ணாடியில் தன் கதிர்களை வெளிப்படுத்தி பஞ்சில் நீப்பற்றச் செய்வது போல்," தன் சர்வ வல்லமையை ஆத்மாவில் வெளிப்படுத்திச் சகல காரியங்களையுஞ் செய்விக்கின்ற கடவுளை, அது மறக்க முடியாது!

மாயையென்பது ஆத்மாவுக்கன்று, மனதுக்குத்தான்! ஏனென் றால், இது பொய்யையும் மெய்போல் அறியும். ஆத்மா அப்படி

www.miskinsha.blogspot.com

யல்ல; அது மெய்யைப்போல் அறியும். ஆகையால், இதனைக் கடவுளென்றும், அல்லவென்றும் சொல்ல முடியவில்லை. ஏனென்றால், அது மற்றக்காரியங்களையெல்லாம் செய்கின்றது. இதைப் போலவே, மனமானது ஆத்மாவினிடம் சகல வல்லமையையும் பெற்றுப் பெரிய காரியங்களைச் செய்கின்றது. ஆகையால், மனதையும் ஆத்மாவென்றும், அல்லவென்றும் சொல்ல முடியவில்லை. ஆகையால், ஆத்மாவை ஆகாயத்துக்கும், மனதை அதில் சஞ்சரிக்கும் காற்றுக்கும் ஒப்பிடலாம்; அல்லது, ஆத்மாவுக்கு நட்சத்திரமில்லாத வெட்ட வெளியென்றும், மனதுக்கு நட்சத்திரமுள்ள வெட்டவெளியென்றும் சொல்லலாம்.

ஆத்மாவில் சகல தத்துவங்களும் அதிக சூக்குமமாயும் அல்லது சுருக்கமாயும் வெளியாயிருப்பதால், இதனைக் "குருஷ்" என்றும், மனதில் விவரமாகத் தடித்து வெளியாயிருப்பதால், இதனை "அர்ஷ்" என்றும் சொல்லலாம். முந்தினதை அதிகமாய்த் தனதாகவும், பிந்தினதை மிகப் பெரிதானதென்றும் சொல்லலாம். மனதை ஆத்மாவுடன் கலந்தால், அதற்கு மன வெளிச்சமென்று பெயர்; அல்லது, (கஷ்ஃபு) திரை நீக்கமென்றும் சொல்வார்கள்; அல்லது, மாயை விலகும். மாயையை இப்லீஸ் என்பார்கள்.

மனதை ஆத்மாவில் கலக்கும் விதம்: தன் சுயத்தை நிர்மலமாகச்சிந்தித்து, எண்ணம் அசையாதிருந்தால்–இந்தச் சாதனங்கைகூடினால் சாத்தியமாகும். இதற்கு நான்கு பருவங்களுண்டு. 1. பால்குடிப் பருவம், 2. மதலைப்பருவம், 3. பாலியப் பருவம், 4. விருத்தாப்பிய பருவம். இந்தப் பருவங்களின் பழக்கத்திற்காக ஷரீஅத்து, தரீக்கத்து, ஹக்கீகத்து, மஅரிஃபத்து என்று வழங்குகிறது. அந்தப்பருவம் அல்லது, பதவிக்குத்தக்கவாறு விஸ்வாசம், செய்கை, தபம், சமாதி என்று விகற்பப்படும்.

(நாயக வாக்கியம்: அதாவது, "நாங்கள் (தீர்க்கதரிசிகள்) மனிதர்களுடன் அவரவர் நிலைமைக்கேற்றவாறு கலந்துறவாடும்படி ஏவப்பட்டிருக்கிறோம்.")

இரகசிய ஞானம்

அஃதாவது அல்லாஹுத்தாலா (கடவுள்) அருபமான அம்சம்:

அஃதெப்படியென்றால்;

1. "ஆகாயத்தைப்போல்" அருபமாய் ஆதி அந்தமில்லாமல் அகண்டமாய்த் தானே தானாய்த் தனியாய்ப் பேதமில்லாமல் எப்போதும் உள்ள பராபர வஸ்துவே அவர் அருப அம்சம்!

2. இதுவே தத்துவ அம்சங்களான யாதொரு தடிப்பும் இல்லாதது. இதற்குமேல் யாதொரு பதவியுமில்லை. இதுவே அவரின் மெய்யான அம்சம்! மற்றதெல்லாம் அவரின் பொய்யான அம்சங்களாயிருக்கும். நமது "ரூஹும்" (ஆன்மாவும்) இதுபோலொத்த அம்சந்தான்!

3. அவரின் பொய்யான அம்சங்களை ஒருவராலும் மட்டுப்படுத்த இயலாது. உள்ளபடி (மெய்யான அம்சமாகிய) இதற்கு யாதொரு பெயரும், ரூபமும், செயலும், யாதொன்றுமில்லை. நிறம், குணம், குறி அற்றது. இதனுடைய சுபாவத்தினால் சகலமும் உண்டாயிருக்கின்றன!

4. இதுவே சகல வஸ்துக்களாகவும், சகல வஸ்துக்களின் சுயமாகவும் இருக்கிறது. அதனால், தன் சுய அருபத்தில், கொஞ்சமென்கிலும் பேதப்படாமல் இருக்கிறது. இது மகா ஆச்சரியம்! இதுவே எங்கும் நிறைந்த பூரண அம்சமாக இருக்கிறது. இதுவன்றி வேறே வஸ்துக்கு இடமில்லை.

5. இதுவே "லாத்த அய்யன்" குறிப்பற்ற அம்சமென்றும், "தன்ஸீஹ்" அருப அம்சமென்றும் சொல்லப்படும். இதையும், இதன் பொய்யான அம்சங்களையும் நமது ஆத்மாவைக்கொண்டே அறிய வேண்டும். மற்றபடி வேறு வழியில்லை. நமது "ரூஹில்" (ஆத்மாவில்) அதை அதிகச் சுயரூபமாகவே அறியலாம். அதில் சகல அம்சங்களும் பிறந்து இல்லாமலாயிருப்பதுடன், தான் உள்ளும் புறமும் அற்றதாய்ச் சுயத்தில் பிரத்தியட்சமாய் இருக்கிறது. தான் சகலத்தின் பார்வையாகவும், (ஹயாத்து) ஜீவனாகவும் இருக்கிறது. இது தன்னையே பார்த்ததாகவும், தன் சொரூப அம்

www.miskinsha.blogspot.com

சங்களைப் பாராததாகவும் இருக்கிறது. இதனுடைய சுபாவமே யாதொரு தடிப்பற்ற — கிரகங்களற்ற (சுத்தி) வெட்ட வெளியாம்! இதில் அதனுடைய சுய இச்சையின் தொனி சப்திக்கிறது! இதனால் பிராண அம்சங்களைப் பெறுகின்றன. இதன் அரூப அம்சமானது நிரச வஸ்துக்களில் சத்தாகவும், தாவர வஸ்துக்களில் இரஸமாகவும், ஜீவ வஸ்துக்களில் உஷ்ணமாகவும் விளங்குகிறது போல், இதனுடைய இச்சையினால் பிராணிகளில் காமமாகவும் வழங்குகிறது. நிர்குண சுபாவமான யாதொரு தத்துவ அம்சங் களற்ற தனியான ஒரு வஸ்து, "(பச்சோந்தி) ஒணான் பல நிறங் களைக் காட்டுவது போலும்," "பளிங்கு தன் சுயத்திலில்லாத பல வர்ணங்களைக் காட்டுவது போலும்," "கானலானது தன் னைத் தண்ணீரைப் போலும், அல்லது அலையைப் போலும் காண்பிக்கின்றது. அதுபோல்" தானே சகல அம்சங்களாக வழங் குகிறது. இது மகா வல்லமையான சுபாவம்! இந்த அசைவற்ற ஆன்ம ரூபமான வெறும் வெளியில் பெருத்ததாகி, அதன் சுய இச்சையினால் சகல கருக்களும் அமைகின்றன. இந்த நுண்ஸாகிய இச்சையினால் வானத்தில் ஜீவ அம்சங்கள் தொனிரூபமாகவே இருக்கின்றன! இதையே பார்வை அம்சமாகிய (ஹயாத்து) ஜீவனென்னும் சொல்லப்படும். அதன் சுபாவமென்ன? அறிவாம்! இந்த அறிவானது தன்னையே அறிந்ததாகவும், தன் சொரூப அம்சங்களை அறியாததாகவும் இருக்கிறது. இந்தச் சூன்யமான ஆகாயமே ஆன்ம ஆகாயம்! இது சுயத்தில் இல்லாததாயும், அறிவில் பார்த்தால் உள்ளதாயுமிருப்பதால், தன் சுயத்தை எட் டிக்கொள்ளாமல், அறிவைமட்டிலும் எட்டிக்கொள்கிறது. அப்படியே உலகம் முழுதும் பார்த்தால், தன் சுயத்தில் இல்லாததாயும், அறிவில் உள்ளதாயும் இருக்கிறது. அப்படியே நாமும் நமது அறிவை எட்டிக்கொள்வோம்! நம் சுயத்தை எட்டிக்கொள்ள மாட்டோம்! அஃது ஏனென்றால், "கண்ணாடியில் முகம் தெரிகிற வரையில் அந்த இடத்தில் கண்ணாடியைப் பார்க்க இயலாது"

"களங்கமற்ற கண்ணாடி தன்முன் வேறோர்
களங்கமற்ற கண்ணாடி காட்டும் போது
விளங்கியதன் மயமாகி யபேத மாகி
விகற்பமின்றி நிர்விகற்ப மானாற் போல
அளந்தறியப் படாவிபுவாய் சத்தாய் சித்தாய்
ஆனந்த மாம்பிரமத் தைக்கிய மான
உளந்தெளிந்த படியிருந்தாலுல கமெங்கே?
உலைவெங்கே? யென்று சங்கை யொழித்தி டாயே!"
— கைவல்ய நவநீதம்.

இரகசிய ஞானம்

(இஸ்லாத்தின் மூலத்தத்துவங்கள்)

1. சர்வ வல்லமையுள்ள பராபர வஸ்துவே கடவுள்! அவர் உதிப்பே அவர் தூது! அவர் சொல்லே அவர் வாக்கியம். இதுவே சர்வத்திற்கும் மூலம்! சர்வத்திற்கும் லக்ஷியம்! இதனை மூவிடங் களில் அஃதாவது, தன்மை, முன்னிலை, படர்க்கை; அஃதாவது, நான், நீ, அவன் என்றும், இம்மூன்றுமல்லாமல் பேசக்கூடாத மௌனமாகவும் அவரவர் தகுதிப்படி பாவிக்கலாம்!

2. ஆகாயத்திற்கு அசலாயுள்ள ஒரு பொருளை, அல்லது, லக்ஷி யத்தைச் சுட்டிக்காட்டிச் சொல்லாமல் சொல்லும் விதமாய்க் "கலிமா" என்ற மூல மந்திரத்தில் "நாயனில்லை நாயனைத் தவிர" எனச் சைக்கினை செய்திருக்கிறது. அதனைப் பிரத்தி யக்ஷமாக அதன் தத்துவங்களையும், நாம ரூபங்களையும் பிரபஞ் சங்களாகிய சிருஷ்டிப்புக்களின் சங்கிலிக் கோர்வையில் காணலாம்!

3. ஏனென்றால், இருக்கிறது சுத்த சுயமேயல்லாது வேறல்ல! மற்றதெல்லாம் "மித்தை." மித்தை வடிவத்தை மாயை எனப் படும். சுத்த சுயத்தில் எல்லாம் மாண்டதாயிருக்கின்றன. ஆகை யால், அஃதே அந்தரங்க இயற்கையில் மறைந்து கிடக்கின்ற புதை பொருளாகும்! அதனை எவ்வளவு தூயதாகவும், பரிசுத்த மாகவும் கண்டானோ, அவ்வளவு தானே தூயதாகவும் பரிசுத்த மாகவுமிருப்பான்! அதனை எவ்வளவு வல்லமையுள்ளதாகக் கண்டானோ, அவ்வளவு தானே வல்லமையுடையவனாயிருப்பான்! அவன் வாக்கு காற்றாயிராது; நெருப்பாயிருக்கும்!

4. அந்த சுயத்தில் யாதொரு பண்பு, வன்னிப்பு இல்லாமல் சுத்த சுயமாய்க் காண வேண்டும். இல்லாவிட்டால் பாபமென்னும் சங்கிலிக்கோர்வை அஃதாவது: ஜென்மமென்னும் தொடர் 'ஷிர்க்' என்னும் இணை அஃதாவது கூட்டு விலங்கு நீங்காது! இஃதெல் லாமில்லாமல் மகா உன்னதமான நிலைமையில், மனோ பலம், ஆத்ம பலம் உள்ளா உள்ளபடி வெளியாகும்! தன் அந்தரங்க சைக்கினையைக் கொண்டு நாம் ஜெயம் பெறலாம்! இப்படி ஜெயம் பெற்றவர்கள் அனேகம்; அவர்களுக்கு மரணமே இல்லை!

www.miskinsha.blogspot.com

இதற்கு ஆத்ம மன வெளிச்சம் அவசியம் வேண்டும். ஆகையால், எண்ணிறந்த நீர்க்கதரிசிகள் உதயமாகி இந்த ஞானத்தை வரம்புக்குட்படுத்தி உயிர் துறந்தார்கள்!

5. இது மத வரம்புக்குட்பட்டதாகையால், "முஹம்மது" (ஸல்) அவர்கள் மதத்தையே தழுவலாமென்று சொன்னதானது ஒன்றும் சரியாது என்பதே துணிவு! எதை அனுசரிக்கலாமென்றால் உள் வேதமாகிய மனோ சாக்ஷியான மன சுதந்திரம் யாருக்கு மில்லை! கடவுளுக்கே உடையது! உண்மையிலும் நீதத்திலும் இருக்கவேண்டும். மன சுதந்திரத்தைப் பிடுங்குவது கூடாது; யாராயிருந்தாலும் பாவமாகும். இதையே "இஸ்லாம்" எனக் கூறலாகும். இதில் ஒருவரையொருவர் அடக்கியாள முடியாது. இஷ்டமிருந்தால் ஒத்திருக்கலாம்; இல்லாவிட்டால் நீங்கிக் கொள்ளலாம்.

6. "முஹம்மது (ஸல்) ஜெகமே தன் ஒளியில் நின்றும் படைக்கப்பட்டது" எனக் கூறியுள்ளார். அவர் உபதேசம் பொது ஜனங்களுக்குப் பொருத்தமாயிருக்கும்படி உபதேசித்துக்காட்டிய விதிகள் அல்லாமல், இவ்விதிகளுக்கு மீறிய விஷயங்களை ஆங்காங்கு சைக்கினை செய்துள்ளார். ஆண் பெண் சம்பந்தப்படுவது போல் " ஆத்மா, பிரகிருதி சம்பந்தப்பட்டு ஒரு கோளம் தயாராய் வருகிறது.

" இஸ்லாத்தின் மூல தத்துவம் "

1. அதுவே சர்வத்திற்கும் ஆதிகாரணமாயுள்ளதுமல்ல, காரண காரியமாயுள்ளதுமல்ல. அஃது, அனாதியாய், நாம ரூப மற்று; பேசக்கூடாத மௌனமாய், முடிவற்றதாய்ச் சர்வ வியாபகமாயிருக்கின்ற பராபர வஸ்து!

2. அதன் தத்துவங்களையும், நாம ரூபங்களையும் உறுதி கொள்வோமாக! அவ்வாறு உண்டுமையும் இல்லாமையுமல்லாத, ஒளியும் இருளுமல்லாத தன் சுய லக்ஷியமான ஆண்டவனைக் கொண்டு உறுதி கொண்டேன்.

3. அதற்கு எதையும் உண்டுமென்றாலும், இல்லை என்றாலும் குற்றமாகும்; அஃது எப்பொழுதும் கலப்பற்றதாய் பேதமற்றுக் களங்கமற்ற நிர்வாணமாய் நிறம், குறி, அற்றிருத்தல் அவசியமாகும். இரண்டு மாற்றங்களுக்கும் பொதுவாயிருக்கவேண்டும்.

4. அவ்வாறான கடவுளின் சத்து, சித்து, ஆனந்த வடிவமாய் ஆரோபித்து "ஸ்திரீ புருஷர்களைப் போல்" ஆத்மா, பிரகிருதி

யுடன் கூடிப் பிரபஞ்சத் தத்துவங்களாகவும், அதன் நாம ரூபங்களாகவும் வெளியான (அஃதாவது தேவர்களான) அமரர்களைக் கொண்டும் உறுதி கொண்டேன்!

5. அஃதாவது, முடிவில்லாத சுயம் என் லக்ஷியமாதலால், என் பிரபஞ்சமென்னும் வற்றாச் சமுத்திரத்தில் உதயமாகும் அக்ஷரமும் தொனியுமற்ற அவரது வேதங்களைக் கொண்டும், முடிவு வரையில், முடிவற்றதாக உறுதி கொண்டேன்!

6. தேவ தூதராகிய அஃதாவது, ஜிப்ரெயீலும் நீர்க்கதரிசிகளைக் கொண்டு என் உதிப்பே அவர் தூதாகவும், என் சொல்லே அவர் வாக்கியமாகவும் உறுதி கொண்டேன்!

7. "நியாயத் தீர்ப்புக்குரிய கடைசி நாள், அஃதாவது பிரளய காலம் வந்து அழியக்கூடியது அழியும்! அழியக்கூடாதது அழியாது" என்றும் உறுதி கொண்டேன்!

8. என்னால் மதிப்பிடும் நன்மை தீமைகளும் ஆண்டவனில் நின்றுமுள்ளது என்றும் உறுதி கொண்டேன்!

9. இறப்பிற்குப் பின் எழுப்புவது என்றும், இதற்கு ஆத்ம சம்பந்தமான ஜடமுண்டென்றும் உறுதி கொண்டேன்!

இஸ்லாத்தின் மூல தத்துவங்களின் அகமியம்:

1. "சுயம்" இது உண்மையுமல்ல; இன்மையுமல்ல, இரண்டு மாற்றங்களுக்கும் பொதுவானது! ஒன்றென்பதும், பலவென்பதுமல்ல, ஒளியுமல்ல, இருளுமல்ல, ஆதிகாரணமாயுள்ளதுமல்ல. காரண காரியமாயுள்ளதுமல்ல!

2. ஆதியந்தமில்லாததாய், நிறம் குறி இல்லாததாய், நாமரூபமில்லாததாய், களங்கமில்லாததாய், எவ்வகையான ஸ்துதி, தோத்திரங்களுக்கு எட்டாததாய், பேசக்கூடாத மௌனமாய், ஆதி காரணமான நாயனுக்கும், நமக்கும் பொது லக்ஷியமாய், அனாதியாய்ச் சுயமாய்!

3. சிந்தனைக்கெட்டாததாய்ச் சர்வ வல்லமை சர்வ வியாபகமாய்த் தத்துவ அம்சங்களான தடிப்பில்லாதாய்ப் பராபரமாய், அரூபத்திற்கு அரூபமாய், இல்லாமைக்கு இல்லாமையாயிருக்கும்! உண்மையைத் தெரிவிக்கக் "கலிமா" என்ற மூல மந்திரத்தில், "நாயனில்லை நாயனைத்தவிர" என்று ஆதிகாரணத்தைச் சொல்லாமல் சொல்லும் விதமாய்க் காட்டியிருக்கிறது.

www.miskinsha.blogspot.com

4. அஃது ஏனெனில், அருபத்தையும் சொருபத்தையும், இல்லை, உண்டு எனச் சைக்கினை செய்ததெல்லாம், இன்மை, உண்மை யல்லாத ஒன்று, அல்லது ஒன்றுமல்லாததைக் காட்டுவதற் கொப்பாம்!

இஸ்லாத்தின் மூல தத்துவங்கள்:

விசுவாச முறைகள்:

1) ஆண்டவனைக் கொண்டும் உறுதி கொண்டேன்.
2) அவன் அமரர்களைக் கொண்டும் உறுதி கொண்டேன்.
3) அவன் வேதங்களைக் கொண்டும் உறுதி கொண்டேன்.
4) அவன் தீர்க்கதரிசிகளைக் கொண்டும் உறுதி கொண்டேன்.
5) நியாயத்தீர்ப்பான கடைசி நாளைக்கொண்டும் உறுதி கொண்டேன்.
6) நன்மை, தீமை ஆண்டவனில் நிர்ணயமுள்ளதெனவும், இறந்த பின் எழுப்புவது உண்மையெனவும் உறுதி கொண்டேன்.

ஷஹாதத் ஓதல்:

1) அஃதாவது, சாக்ஷிசொல்கிறேன்: வணக்கத்திற்குத் தகுதியான நாயன் யாருமில்லை, ஆண்டவனைத் தவிர! மேலும், சாக்ஷி சொல்கிறேன், உண்மையாக முஹம்மதாகிறவர்கள் ஆண்டவனுடைய அடிமையாகவும், தூதராகவுமிருக்குமெனப் பகர்வதேயாம்!
2) தொழுகையை நியமமாகத் தொழுதல்.
3) ஜக்காத்தென்னும் நாயன் கட்டளைப்படி தர்மங்களைக் கொடுத்தல்.
4) ரமழான் மாதத்தில் நோன்பு அஃதாவது, உபவாசமிருத்தல்.
5) தகுதியுள்ளவர்கள் வாழ்நாளில் ஒரு தடவை (புண்ணிய க்ஷேத்திரமாகிய) "கஃபா"வுக்குத் தீர்த்தயாத்திரை செய்தல்.

அஸ்ராரே வாஹிதியத்து

என்னும்

சிவபதவியின் அகமியங்களாகிய பரிசுத்த கலிமாவின் விளக்கம்:

சகல வணக்கங்களும் மெய்யான கடவுளாகிய ஹக்கு சுபு ஹானஹூவத் தஆலாவுக்கே தகுதியாகும். சகல புகழ்ச்சிகளும் அவனுடைய மெய்யான ரஸூலாகிய முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களுக்கே யோக்கியமாகும்!

பின்னர், இந்நூலானது "அஸ்ராரே வாஹிதியத்"தென்னும் ஏகத்துவமாகிய சிவபதவியின் இரகசியங்களாகிய "கலிமா"வின் உட்பொருள்களையும் வெளிப்பொருள்களையும் விளக்கிக்காட்டிய பார்ஸி பாஷையிலுள்ள ஒரு சிறிய கிரந்தம். இஃதானது இந்நூலாசிரியராகிய "ஷாஹ் முஹம்மது ஹசன் சாபிரீ" என்பவர்களிடம், அவரது சீடராகிய "ஷாஹ் முஹம்மது பாருக் ஹசன் சாபிரீ" என்பவர்கள் கேட்டுக் கொண்டதன் நிமித்தம், இந்நூலாசிரியர் "ஹசன் சாபிரீ (ரஹ்மஹூல்லாஹூ அலைஹி) அவர்களில் நின்றும் இரகசியமாய் உபதேசிக்கப்பட்டு வந்த கலிமாவின் மர்மத்தைத் தாம் தமது குருமுகதாவில் விளங்கிக் கொண்டபடி ஒரு சிறிய நூலாகச் செய்திருந்தனர். அதைச் சகலரும் எளிதில் உணரும்படி "கலிமா"வின் பொருளைத் தீர்க்கமாய் உணர்ந்து கொள்ளும் பொருட்டு, "வழுத்தூர், மௌலானா, மௌலவி, மஷாயிக் முஹம்மது தாஹிர் ஷாஹ் காதிரீ" (எடிட்டர்: "அஜாயிபுல் ஆலம்) அவர்களால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

ஈமானிலும் இபாதத்திலும் ஷிர்க்குவ்டாயிருந்தால் அவை களிரண்டும் பயன்படா. அன்றி (அஃப்ழலு திக்ரி லாயிலாஹ இல்லல்லாஹூ) அதாவது, வணக்கம் அல்லது தியானங்களில் மிகவும் வினசயானது, சிறப்புமிக்கது "லாயிலாஹ இல்லல் லாஹூ" என்கிற "கலிமா"வாயிருக்குமென்று ஹதீது ஷரீபில் வந்திருக்கிறது. ஆகையால், "கலிமா"வை யாவரும் அறிய வேண்டியது அவசியமென்று ஒவ்வொருவரும் அந்தக் "கலிமா"வின்

www.miskinsha.blogspot.com

உட்பொருள் வெளிப் பொருள்களையும் விளங்கி விஸ்வாசிக்க வேண்டியது அவசியமாகும். இல்லாவிடில் அவர்கள் ஈமானும் இஸ்லாமும் துருஸ்தாகாது! ஏனெனில், ஒருவன் வெளிப்பொருளை மட்டும் ஒப்புக்கொண்டிருந்தானாகில் அவனோ உயிரில்லாத உடலை வைத்திருக்கிறான். ஒருவன் உட்பொருளைமட்டும் ஒப்புக் கொண்டிருந்தானாகில், இவனோ உடலில்லாத உயிரை வைத்திருக்கிறான். இந்த இருவரும் இஸ்லாத்தின் மெஞ்ஞானத்தின் பதவிகளைக் கடப்பது அசாத்தியம்! ஏனென்றால், இந்த இரண்டும் ஆணைப்போலும், பெண்ணைப்போலும் ஒன்றுக்கொன்று தேவையாயிருக்கின்றன! ஆண் பெண் இருவர் சம்பந்தமின்றி அவ்லாதுகள் (சந்தானம்) உண்டாவதெப்படி அசாத்தியமோ, அப்படியே, லாஹிர்-பாத்தின் (புறம்-அகம்) அன்றியே தௌஹீது, ஈமான், மஃரிபாவின் நற்பாக்கியத்தின் பலன்களைப் பெற்றுக்கொள்வது அசாத்தியம்! இந்த இரண்டையும் இழந்திருக்கிறவன் பதவியின் பெருமையைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை அவனோ இவ்வும் பொட்டையன்! ஆகிரத்திலும் பொட்டையன்!

உதாரணம்: ஒருவன் தன் ஒட்டகை காணாமற்போனதைக் குறித்து கேள்விப்பட்டபோது, "நான் அதன் பேரில் சவாரியாயில்லாமற் போனதே நல்லதாச்சுது, இல்லாவிட்டால், அதோடு நானும் சேர்ந்து காணாமற் போயிருப்பேன்" என்று சந்தோஷமடைந்தானாம். அவனும் இவனைப்போலொத்த மூடனேயாம்! இவர்களின் நிலைமை பயங்கரமும், வருந்தத்தக்கதுமானது. ஐயோ! இவர்களின் கதி எவ்வாறாய் முடியும்? அறியாமலிருக்கும் நிலைமையைப் பற்றித் துக்கிக்காமல் பெருமை பாராட்டுவது பதருக்குச் சமானமன்றோ? கடவுள் சந்நிதியைப் பார்க்கினும் சுவன பதவியும் தாழ்ந்ததேயன்றோ?

நூலாரம்பம்:

பரிசுத்தக் கலிமாவின் பொருள்களாவன:

பரிசுத்தக் கலிமாவில் ஐந்து பறுழுகளிருக்கின்றன. 1) வயதில் ஒரு தடவைப் பரிசுத்தக் கலிமாவைச் சொல்லுதல். 2) பரிசுத்தக் கலிமாவை ஸிஹ்த்தாகச் சொல்லுதல். 3) பரிசுத்தக் கலிமாவின் பொருட்களையறிதல். 4) மரணம் வரையில் விசுவாசம் கொண்டிருத்தல். 5) நபிகள் நாயகத்தின் நான்கு தலைமுறைகளையறிதல். ஆகவே, "லாயிலாஹ இல்லல்லாஹு" என்பதன் பொருளாவது: "லா" வென்பது திரிகாலங்களிலும் பொதுவாக

"இல்லை" என்றும், "இலாஹு" வென்பது பொதுவாக நாயனென்றும், "இல்லா" வென்பது "தவிர" வென்றும், அல்லாஹு வென்பது "மெய்யான நாயன்" என்றும் பொருளாகின்றன. ஆகையால், பரிசுத்தக் கலிமாவின் பொருளாகிறது: திரிகாலங்களிலும் பொதுவாக நாயனில்லை. அஃதாவது, பொய்யான நாயனாயிருந்தாலும் சரி, மெய்யான நாயனாயிருந்தாலும் சரி! "அர்ஷ் முதல் தஹத்துத்தறா" வரையில் ஏழு வானத்திலும், ஏழு பூமியிலும் யாதொரு வஸ்தும் நாயனில்லை மெய்யான நாயனைத் தவிர!

'மெய்யான நாயனைத்தவிர' என்பதற்கு அத்தாட்சி அல்லாஹுத்தாலாவே சொல்லுகிறான்: "வஹுவல்லாஹு ஃபிஸ்ஸமாவாத்தி வல்அர்ழி" அதாவது, ஏழு வானத்திலும், ஏழு பூமியிலும் மெய்யான நாயனே நாயனாயிருக்கும். ஆனால், சில பெரியோர்கள் பரிசுத்தக் கலிமாவுடைய பொருளின் தர்க்கத்தில் சொல்கிறதாவது: பொதுவாக நாயனென்ற பொருளை அனுசரிப்போமாயின் அவசியம் பொய்யுண்டாகும். ஏனெனில், இவ்வாறு இந்தக் கலிமாவில், மெய்யான நாயனாயிருந்தாலும் சரி, பொதுவாக நாயனில்லை என மறுக்கப்பட்டிருக்கிறது. என்கிலும், பொய்யான நாயனோ, உண்டாயிருக்கின்றன! எவ்வாறெனில்: சில காஃபிர்கள் விக்கிரகங்களையும், சிலர் அக்னியையும், சிலர் சூரியனையும், சிலர் சந்திரனையும், சிலர் வேறு கிரகங்களையும், சிலர் மனிதனையும் வணங்குகிறார்கள். இவைகள் பொய்யான நாயனாயிருப்பதுமின்றி உண்டாயுமிருக்கின்றன! பரிசுத்தக் கலிமாவின் பொருளில் பொய்யான நாயனில்லை எனச் சொல்வோமானால் அவசியம் பொய்யுண்டாகின்றது!

இவைகளுக்கு விடையாகிறது: ஒரு போதும் பொய்யுண்டாகாது! ஏனெனில், இவைகளின் உண்டுமையை மறுக்கவில்லை, என்கிலும், இவைகளின் நாயகத்தனத்தின் பாத்தியத்தை மறுக்கப்படுகின்றன: இவைகளின் உண்டுமையை மறுத்தால் அப்பொழுதுதான் பொய்யுண்டாகும்! எவ்வாறெனில், ஒருவன் ஸைத்தில்லை என்று சொல்வானாகில், ஸைத்து ஆஜரில்லை என்று கருத்தாகுமேயொழிய, ஸைத்தென்பவனின் உண்டுமையில்லை எனக் கருத்தாகாது. இன்னும் இவைகளில் நின்றும் நாயகத்தனத்தின் பாத்தியத்தை ஏன் மறுக்கப்படுகிறதென்றால்: நாயகத்தனத்துக்கு தன்னை வணங்குகிறவர்களுக்கு நற்கூலியளிக்கவும், தன்னை வணங்காதவர்களைத் தண்டிக்கவும் சக்தியுண்டாயிருக்க வேண்டும்! இவைகளில் இதைக் காணப் படவில்லை: ஆகையால், நாயனல்லவென்று தெரியவருகின்றது!

www.miskinsha.blogspot.com

வேறொரு காரணம் என்னவெனில், நாயகத்தனமுள்ளது பாக்கியம் அளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும்! எவ்வாறெனில், ஒருவனுக்குச் சுகத்தையோ, அல்லது கண்ணையோ அளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும்! இவைகள் இவ்வாறான பாக்கியங்கள் அளிக்கக் கூடியதாயில்லை. வேறொரு காரணம் என்னவெனில், நாயகத்தனமுள்ளது ஒவ்வொரு வஸ்துவையும் படைக்கக் கூடியதாயிருக்க வேண்டும்! இவைகளுக்கு இந்தச் சக்தியேயில்லை! மேலும், தாமும் படைக்கப்பட்ட வஸ்துக்களாயிருக்கின்றன! வேறொரு காரணவென்னவெனில், நாயகத்தனமுள்ளது கொஞ்சமும் தேவையற்றதாயிருக்க வேண்டும்! இவைகளுக்குத் தானத்தைக் கொண்டும் தேவையுண்டாயிருக்கின்றன. தானமில்லாவிடில் அவைகள் உண்டாயிருக்கவும் இயலாது! மெய்யான நாயனோ, ஸ்தானத்தைக் கொண்டும் தேவையுள்ளவனாயிருக்கவில்லை. என்கிலும், ஸ்தானமன்னியில் இருக்கிறான்! ஏனென்றால், மெய்யான நாயனாகிறவன் ஸ்தானமுண்டாகிறதற்கு முன்னுமிருக்கிறான்; ஸ்தானமுண்டான பின்னுமிருக்கிறான்!

வேறொரு காரணம் என்னவெனில்: நாயகத்தனமுள்ளது பூர்வீகமானதாகவும், தரிபாடானதாகவுமிருக்க வேண்டும்! இவைகள் புதிதானதாகவும் அழியக்கூடியதாகவுமிருக்கின்றன! வேறொரு காரணம் என்னவெனில்: நாயகத்தனமுள்ளது ஜீவனுள்ளதாயும், தத்துவமுள்ளதாயும், அறிவுள்ளதாயும், நாட்டமுள்ளதாயும், வசித்தையுள்ளதாயும், கேள்வியுள்ளதாயும், பார்வையுள்ளதாயும், படைக்கக்கூடியதாயும், இரணம் (உணவு) அளிக்கக்கூடியதாயும், அடக்கி ஆளக்கூடியதாயும் இருக்க வேண்டும்! இவைகளில் இவைகளைக் காணப்படவில்லை! ஆகையால், இவைகள் எவ்வாறு நாயகத்தனத்துக்குத் தகுதியாகவும் நாயனாகவுமாகும்? ஆனால், காஃபிர்கள் மூடத்தனத்தினால் இவைகளை வணங்குகிறார்கள்! மெய்யான நாயனை அறியவில்லை! மற்றவர்களுடைய வார்த்தையும் அவர்கள் கேட்கவில்லை. மூமினானவர்களுடன் தர்க்கிக்கிறார்கள். இந்தச் சொல்லானது பெரியோர்களுடைய (கடைசி) முடிவான சொல்லாயிருக்கும்!

இன்னொரு வகை என்னவென்றால்: "இலாஹ" என்பதற்கு "மெய்யான நாயன்" என்ற பொருளை அனுசரிப்போமாயின், அவசியம் "குஃபிர்" உண்டாகும்; இருக்கிற வஸ்தை இல்லையென்று சொன்ன குற்றம் ஏற்படும்! இருக்கிற வஸ்தை இல்லையென்று சொன்னால் பொய்யுண்டாகுமேயொழிய "குஃபிர்"

எப்படியுண்டாகும்? அன்றி இவ்விடத்தில் 'மெய்யான நாயனில்லை நாயனைத் தவிர' வென்று மெய்யான நாயனை மறுத்திருந்தால் குஃபிருண்டாகும்! ஏனென்றால், மெய்யான நாயனை இல்லை என்பது குஃபிராயிருக்கிறது! இன்னமிதற்கு விடை என்னவெனில் இவ்விடத்தில் குஃபிருண்டாகாது! ஏனெனில், பரிசுத்த கலிமாவில் மெய்யான நாயன் அன்னியில் உள்ளவைகளை நாயனென்று கண்டிருப்பதை விலக்கப்பட்டிருக்கிறது. மற்றபடி மெய்யான நாயனை மறுக்கவில்லை. இதில் இனி இருக்கிற வஸ்தை இல்லையென்று சொல்லுகிற குற்றம் எப்படியுண்டாகும்?

"இலாஹ "வென்பது மெய்யான நாயனாயிருந்தால், மெய்யான நாயனோ மறுக்கப்பட்டுப் போய்விட்டது. "அல்லாஹ்" வென்பதும் மெய்யான நாயனாயிருக்கிறது; இதுவும் மறுக்கப்பட்டுப்போகின்றது! இந்த வகையில், இதை இருக்கிற வஸ்தை இல்லை என்று சொன்ன குற்றம் அவசியம் ஏற்படும். இதற்கு விடை என்னவெனில், இவ்விடத்தில் "அல்லாஹ் "வென்பதை மறுக்கப்படவில்லை. ஏனெனில், "இல்லா "வென்பது இவ்விடத்தில் தரிப்படுத்துகிற "னிஃபத்தான" பண்பாயிருக்கும்; மறுக்கிற கருத்தல்ல! இல்லாவிடில் குஃபிர் மட்டுமல்ல, ஷிர்க்கும் வந்துவிடும். ஆகையால், இருக்கிற வஸ்தை இல்லையென்று சொல்லுகிற குற்றம் ஏற்படவில்லை!

மெய்யான நாயனில்லை என்பதற்கு அத்தாட்சியாவன: மெய்யான நாயனைத்தவிர வேறொரு நாயன் உண்டாயிருந்தால், படைக் கோலங்கள் உண்டாகாது! வெறுமையாய்விடும்! ஏனெனில் ஒரு நாயன் உலகத்தைப் படைக்க நாடுவான்! வேறொரு நாயன் உலகத்தைப் படைக்காமல் இருக்க நாடுவான்! ஆகையால், இருவருக்குமிடையில் சண்டையுண்டாகும். ஆனதினால், உலகமுண்டாகாது! யாராவது இருவரும் ஒற்றுமையாயிருந்து உலகத்தைப்படைக்கக்கூடாதா? எனக்கேட்பாராகில், அதற்கு விடையாவது: ஒற்றுமையானது நாயகத்தனத்துக்குத் தகாது. ஏனென்றால், நாயன் தேவையற்றவனாகவும், சக்தியுள்ளவனாகவுமிருக்க வேண்டும். ஒற்றுமையானது ஏலாத்தனத்தையும், தலையையும் வருத்துகின்றன. மெய்யான நாயனைத் தவிர வேறு நாயனில்லை என்பதற்கு வேறொரு அத்தாட்சி அல்லாஹுத்தாலா சொல்லுகிறான்; ("லௌக்கானஃபீஹிமா ஆலிஹத்தன் இல்லல் லாஹு லபஸத்தா.") அதாவது, "வானத்திலும், பூமியிலும், வேறு நாயன்கள் உண்டாயிருந்தனவாகில், அந்நியம் வானமும், பூமியும் அழிந்து போயிருக்கும்! அஃதாவது, இல்லாமையாய்ப்

www.miskinsha.blogspot.com

போயிருக்கும்." ஆனால் வானமும் பூமியும் இல்லாமையாய்ப் போய் விடவில்லை என்கிறும், அவைகள் உண்டாயிருக்கின்றன. ஆகையால், வானத்திலும் பூமியிலும் வேறு நாயனில்லை எனத் தெரிய வருகின்றது.

"முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்பதன் பொருளாவது: முஹம்மதாகிறவர்கள் அல்லாஹ்வுடைய ரஸூலாயிருக்கிறார்கள். அவனால் அனுப்பப்பட்டவர்களாயிருக்கும். அதாவது முஹம்மதை அல்லாஹுத்தாலா ரஸூலாக்கி, நபித்தனத்தைக் கொண்டும் தாவாச் செய்யும்படி ஏவியிருக்கிறான். மற்றபடித் தாங்களே ரஸூலாகி நபித்தனத்தைக் கொண்டும் தாவாச் செய்யவுமில்லை; ஜனங்கள் ஒன்றுகூடி அவர்களை ரஸூலாக்கவுமில்லை. எவ்வாறெனில், சில அரசர்கள் தாங்களே அரசனென்று தாவாச் செய்து ஜனங்களை ஒன்றுகூட்டி, தானே அரசனாக ஆகிக்கொண்டார்கள். அவர்களின் சட்டம் என்னவெனில் யார் தன்னை அரசனென்று ஒப்புக்கொள்கிறார்களோ, அவர்களுக்குத் தன் உத்திரவின் பேரில் கார்மானம் கொடுப்பார்கள். ஆண்டவனின் உத்தரவின் பேரிலல்ல! யார் தன்னை அரசனென்று ஒப்புக் கொள்ளவில்லையோ, அவர்களைத் தன் உத்தரவின் பேரில் கொல்வார்கள். அவர்களின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பார்கள். அவர்களின் பெண்டு பிள்ளைகளைப் பறிமுதல் செய்வார்கள். அடிமையாக்கிக் கொள்வார்கள். இவ்வாறு அவர்கள் செய்வது ஆண்டவனின் உத்தரவின் பேரிலல்ல!

ஆனால், முஹம்மது (ஸல்) அவர்களுடைய நபித்தனம் இவ்வாறானதல்ல. அவர்களுடைய நபித்தனத்தை ஒப்புக் கொள்கிறவர்களுக்குத் தம் உத்தரவின் பேரில் கார்மானமளிப்பதில்லை. என்கிறும் ஆண்டவனுடைய உத்தரவின் பேரில் தேவ வசனத்தைக்கொண்டு அவர்களுக்குக் கார்மானமளிப்பார்கள்! அவர்களுடைய நபித்தனத்தை ஒப்புக் கொள்ளாதவர்களை ஆண்டவனுடைய உத்தரவின் பேரில் தேவ வசனத்தைக் கொண்டு அவர்களைக் கொல்லுவார்கள். அவர்களுடைய பொருள்களைக் கொள்ளை செய்வார்கள். அவர்களுடைய பெண்டு பிள்ளைகளை அடிமையாக்கிக் கொள்வார்கள். முடிவு என்னவென்றால், முஹம்மதாகிறவர்கள் ஆண்டவனுடைய உத்தரவின்றி, தேவ வசனமில்லாமல் யாதொரு காரியமும் செய்கிறதில்லை. காஃபிர்களுடன் சண்டை செய்ததும் தன் இஷ்டத்தின் பேரிலல்ல! இன்னம் அவர்களுக்கு நபித்தனமும், பேரும், கீர்த்தியும் வேண்டுமென்ற பேராசை முதலான கெட்ட குணங்கள் ஒரு போதுமிருந்ததில்லை. ஆனால்

முஹம்மதாகிறவர்கள் அல்லா(ஹ்)வுடைய ரஸூலாயிருக்குமென்பதற்கு அத்தாட்சி என்ன? வென்று கேட்கப்படுமானால் அதற்கு அல்லா ஹுத்தாலா சொல்லுகிறான்: ("வமா முஹம்மதுன் இல்லா ரஸூலுன் கத்கலத் மின் கப்லிஹிர் ருஸூலு") அஃதாவது, முஹம்மதாகிறவர்கள், ஆண்டவனுடைய ரஸூலைத் தவிர வேறில்லை. உண்மையாகவே முஹம்மதுக்கு முன் ரஸூல்மார்கள் சென்றிருக்கிறார்கள் இன்னம் முஹம்மதாகிறவர்கள் தாமே தங்கள் சொந்தத்திற்கு நபித்தனத்தைக் கொண்டும் தாவாச் செய்யவில்லை. என்கிறும், ஆண்டவனுடைய உத்தரவின் பேரில் தான் தாவாச் செய்தார்கள் என்பதற்கு அத்தாட்சி என்ன வெனில், அதற்கு அல்லா ஹுத்தாலா சொல்லுகிறான்: ("குல்யா அய்யு ஹன்னாஸு இன்னீ ரஸூலுல்லாஹி யிலைக்கும் ஜமீஆ)" அஃதாவது, "முஹம்மதே சொல்லும்; ஓ மனிதர்களே! உண்மையாக நான் உங்கள் எல்லாரளவிலும் அல்லா(ஹ்)வுடைய ரஸூலாக அனுப்பப்பட்டிருக்கிறேன் என்று!" இனி யாராவது, முஹம்மதென்ற நாமத்தையுடையவர்கள் உலகத்தில் அனேகர் இருக்கிறார்கள். ஆகையால், எந்த முஹம்மது அல்லாஹ்வுடைய ரஸூலாயிருக்குமென்று கேட்பார்களாகில் அதற்கு விடையாவது: அப்துல் முனாஃபுடைய மகன் ஹாஷிம் ஹாஷிமுடைய மகன் முத்தலிஃப்; முத்தலிஃபுடைய மகன் அப்துல்லாஹ்; அப்துல்லாஹ்வுடைய மகன் முஹம்மது என்பவர்கள்! அல்லாஹ்வுடைய ரஸூல் இவர்கள் என்பதாம்! ஆகையால் நபிகள் நாயகத்தினுடைய இந்த நான்கு தலைமுறைகளை அறிகிறது மூமினாவர்கள் பேரில் "ஃபர்ழா"யிருக்கிறது. மேற்கூறிய பரிசுத்தக் கலிமாவின் பொருளாகிறது வெளிரங்கமானதாயிருக்கும்.

அந்தரங்கப் (பாத்தின்) பொருள்:

"லா"வென்பதன் பொருள்: முக்காலங்களிலும், பொதுவாக "இல்லை" என்பதாம். "இலாஹ"வென்பதன் பொருள்: வெளியிலுள்ளதாயிருந்தாலும் மனதில் உள்ளதாயிருந்தாலும் சரி, பொதுவாக "உண்டுமை" என்பதாம். "இல்லா"வென்பதன் பொருள்: "தவிர"வென்பதாம். ஆகையால், "லாயிலாஹ" வென்பது வெளியில் உள்ளதாயிருந்தாலும், மனதில் உள்ளதாயிருந்தாலுஞ்சரி, பொதுவாக "உண்டுமை"யானதில்லை. "இல்லல்லாஹு" நாயனைத்தவிர அதாவது நாயலே உண்டாயிருக்கிறான். ஆண்டவனைத் தவிர உலகம், சிருஷ்டி, இம்மை, மறுமையாகிய இரு லோகங்களும் அதிலுள்ளவைகளும் இல்லாததாயிருக்கும்.

www.miskinsha.blogspot.com

அல்லாஹுத்தா லா சொல்லுகிறான்: வ இன் இக்திலாஃபுன் அய் இப்குன் இன்த கல்குன்" என்றது பொய்யல்லாது மெய்யல்ல. அந்தக் கண்ணாடியில் பார்க்கிறவனன்றி வேறில்லை! இவ்வுலகமும் அதிலுள்ளவைகளும் உண்டாயிருக்கிறது. அவைகளைச் சிரசின் கண்ணைக்கொண்டு பார்க்கப்படுகின்றது; அப்படியிருக்க இவைகளை இல்லையென்று நீங்கள் எப்படிச் சொல்லக் கூடுமெனக் கேட்பார்களாகில் அதற்கு விடையாவது;

உலகமானது அர்ஷு தொடுத்து தஹ்த்துத்தரா வரையில் இம்மை மறுமையாகிய இருலோகங்களும் நிழலைப்போல் இருக்கும். ஒவ்வொருவஸ்துவின் நிழலையும் தலையின் கண்ணைக்கொண்டு பார்க்கக்கூடும்; என்றாலும், அவைகள் உண்மையானதல்லவென ஒவ்வோர் அறிவாளிகளும் அறிவார்கள். ஆகையால், உலகமும் அதிலுள்ளவைகளும் இவ்வகையைச் சேர்ந்ததுதான்! தலையின் கண்ணைக் கொண்டும் பார்க்கப்படும் என்றாலும், அவைகள் இல்லாதவைகளே! இந்த இரகசியம் ஞானவான்களிடத்தில் மறைந்ததல்ல. யார் ஞானியாயில்லையோ, அவர்கள் நிழலின் உதாரணத்தை அறியார்கள்!

எப்பொழுது நாயனைத் தவிர உள்ளவைகள் "லா" வென்ற சொல்லினால் மறுக்கப்பட்டுப் போய்விட்டதோ, அப்பொழுதே 'முஹம்மதுர் ரஸூலுல்லாஹி' என்பது மறுக்கப்பட்டுப் போய்விட்டது! இனி "முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்று சொல்வோமாகில் அவசியம் அன்னிய மென்பது தரிபடும். ஏனென்றால், ஒன்று அல்லாவாச்சுது. மற்றொன்று அவனுடைய ரஸூலாச்சுது. ஆகையால் "முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்று எப்படிச் சொல்லுகிறது? ஆனால், சொல்லலாமா? சொல்லக்கூடாதா? வென யாராவது கேட்பார்களாயின், முதலாவது விடை:- முஹம்மதை அல்லாஹ்வுடைய ஒளியென்றும், அல்லாஹ்வுடைய தோற்றமென்றும், அல்லாஹ்வுடைய சுயமென்றும் கருதிச் சொல்லலாம்; இவ்வகையில் அன்னியமென்பது தரிபடாது!

இரண்டாவது விடை:- நாவினால் "முஹம்மதுர் ரஸூலுல்லாஹி" என்று சொல்லவும். மனதினால் நாயனைத் தவிர வேறொரு வஸ்து இல்லை யென்று அறியவும், ஏனென்றால், அல்லாஹ்வுடைய ரஸூலாகிய முஹம்மது (ஸல்)க்கு இரண்டு பாரிசம் உண்டாயிருக்கிறது. ஒன்று வெளிக் கோலம்: இதனைச் சிரசின் கண்ணினால் பார்க்கலாம். இன்னம் அவர்களின் ரூபத்தைக் காணக்கூடும். வெளிக் கோலத்தின்படி முஹம்மதாகிறவர்கள்

அல்லாஹ்வுடைய அடியாராகவும், அவனுடைய ரஸூலாகவுமிருக்கும். மற்றொன்று உட்கோலம்; இதனை மனத்தின் கண்ணினால் பார்க்கக்கூடும். இதுவாகிறது முஹம்மது (ஸல்) வுடைய அகமியமாயிருக்கும்; உட்கோலத்தின்படி முஹம்மது (ஸல்) வுடைய அகமியமானது நாயனாயிருக்கிறது. ஏனென்றால், ஹதீதேஷரீஃபில் வந்திருப்பதாவது 'மன் றஆனீ ஃபகத் ரஅல்ஹக்க' அதாவது 'யார் என்னைக் கண்டார்களோ, அவர்கள் உண்மையாக நாயனையே கண்டார்கள்." ஆகையால், மூமினானவர்கள் நபிகள் நாயகத்துடைய இரண்டு பாரிசத்தையும் அறிய வேண்டும். அப்பொழுது தான் அவர்களுடைய "மஅரிஃபத்து" (ஞானம்) நிரப்பமாகும். யாராவது நபிகள் நாயகத்துடைய இரண்டு பாரிசத்தையும் அறியாமலும், நோட்டமிடாமலும்இருப்பார்களேயாகில், அவர்களுடைய ஈமானும், மஅரிஃபத்தும் நிரப்பமானதல்ல. ஏனென்றால், யாராவது நபிகள் நாயகத்துடைய நபித்தனத்தை 'இன்கார்' (நிராகரிப்புச்) செய்வானாகில் காஃபிராகிவிடுவான். இன்னம் அவர்களை வெளிக் கோலத்தை நாயனென்று சொல்லுவானாகிலும் காஃபிராகிவிடுவான்! ஒரு வஸ்து வெளிக் கோலத்தின்படி ஒரு வஸ்தாகவும், உட்கோலத்தின்படி வேறொரு வஸ்தாகவும் எப்படி இருக்கக் கூடுமென்று கேட்டால் அதற்கு உதாரணம் 'பனிக்கட்டி' யிலேயே இருக்கிறது. அது வெளிக்கோலத்தில் பனிக்கட்டியாகவும், உட்கோலத்தில் தண்ணீராகவுமிருக்கிறது!

இலாஹ வென்பதன் பொருள்: பொதுவாக நாயனென்று வழங்குகின்றது. அப்படியிருக்க அதன் பொருளைப் பொதுவாக உண்டுமை என்று எப்படி அனுசரிக்கிறதெனக் கேட்பார்களாகில், அதற்கு விடை என்னவென்றால்: வார்த்தைகளுக்கு மூன்று விதமான பொருள்களிருக்கின்றன. முதலாவது ஒற்றுமைப் பொருள், இரண்டாவது தாற்பரியப் பொருள், மூன்றாவது அவசியப் பொருள்! அவசியப் பொருளாவது: தனக்கு அவசியமான பொருளைக் குறித்து அறிவிக்கிறதாம். எழுத்துகளானது மனிதனைக் குறித்து அறிவிக்கும்! ஆகையால் 'இலாஹ' வென்பதற்குப் பொதுவாக உண்டுமை என்ற பொருளை அனுசரித்ததானது அவசியப் பொருளாயிருக்கின்றது. ஏனெனில், ஒவ்வொரு வஸ்துக்கும் உண்டுமை வேண்டும். ஆகையால், எல்லா வஸ்துக்களுக்கும் உண்டுமை வேண்டியதாயிருக்கிறது.

வேறொரு விடை என்னவெனில், வார்த்தைகளுக்கு இரண்டு விதமான பொருள்களிருக்கின்றன. ஒன்று சாதாரணப் பொருள். மற்றொன்று சைக்கினைப் பொருள். ஆகையால், 'இலாஹ' வென்ப

www.miskinsha.blogspot.com

தற்குப் பொதுவாக நாயனென்ற பொருள் சாதாரணப் பொருளாக வும், பொதுவாக உண்டுமை என்ற பொருள் சைக்கினைப் பொரு ளாகவுமிருக்கின்றன. ஆகையால் மெய்யையும், மெய்யான குரு வையும் தேடுகிறவர்களுக்கு நாயனை "ஷிர்க்"கில்லாமல் அறி கிறது அவசியமாகும். ஏனெனில், அவனுடைய நாயகத்தனத்திலும் அவனுடைய உண்டுமையிலும் இணை இல்லை. ஆகையால், இவ்விருவகையிலும் இணையை நீக்கிக் கொள்வது அவசியமாகும். எப்பொழுது ஆண்டவனுடைய உண்டுமையிலும், அவனுடைய நாயகத்தனத்திலும் இணையை நீக்கினானோ, அப்பொழுதுதான் நிரப்பமான மூமினும், அறிவாளியுமாவான்! எவனொருவன் ஆண் டவனுடைய நாயகத்தனத்தில் இணையை நீக்கி அவனுடைய உண்டுமையில் இணையை நீக்கவில்லையோ, அவனாகிறவன் நாயனல்லியிலுள்ளவைகளை நாயலென்று காணாவிடிலும், நாயனல்லியிலுள்ளவைகளை உண்டுமெனக் காண்கிறான். ஆகை யால், இந்த மனிதனாகிறவன், நிரப்பமான மூமினும், அறிவாளியு மல்ல. ஆனதினால், மெய்யையும், மெய்யான நாயனையும் தேடு கிற மூமினானவர்கள், பரிசுத்தக் "கலிமா"வின் உள்ரங்கமான மெய்ப்பொருளை அறியவேண்டும்!

அந்த உள்ரங்கமான மெய்ப்பொருளாகிறது, நாயனைத்தவிர உள்ளவைகள் இல்லை என நீக்கி நாயனைத் தரிப்படுத்துகிற தாயிருக்கும்! இவ்வாறு மற்ற வஸ்துக்களை இல்லை என மறுத்து நாயனைத் தரிப்படுத்துகிற விஷயத்தில் உண்மையை அனுசரித்த மூமினானவர்கள் எப்படித் தெண்டிக்க வேண்டுமென்றால், தங்கள் பார்வையில் நாயனைத்தவிர வேறு வஸ்து தெரியக்கூடாது. தாம் எந்த வஸ்துவைப்பார்த்தபோதிலும் அந்தவஸ்தைக்காணக்கூடாது. தன்னை நோட்டமிட்ட போதிலும் தன்னைக் காணக்கூடாது. நாயனையே காணவேண்டும்! தன்னை இழந்தவனாக நோட்ட மிட்டால் தன்னைக் காணமாட்டான், நாயனையே காண்பான்! இவ்வாறாக மற்ற வஸ்துக்களையும் உத்தேசித்துக் கொள்ளவும். (இத்நிலையானது இந்நூலாசிரியரின் பேரில் உண்டாயிருந்தது, இன்னம் மற்ற "அவ்லியாக்களின்" பேரிலும் உண்டாயிருந்ததாகையால்) உண்மையைத் தேடுகிற மூமினானவர்களுக்கு எப்பொ முது இந்நிலைமையுண்டாகுமோ, அப்பொழுது நாயன் வரையில் சென்று விட்டோம்; இன்னம், நாயனைப் பெற்றுக்கொண்டோம் என்று அறிவார்கள்!

மேலும் அல்லாஹுத்தாலா – "பஅய்னமாத்து வல்லா பதம்ம வஜ்ஹுல்லாஹி" என்று சொன்னதும் அவர்கள் பேரில்

வெளியாகும். அதாவது, நீங்கள் எங்கிருந்த போதிலும், எந்த வஸ்தைப் பார்த்த போதிலும், அந்த வஸ்தாகிறது விடுதியிடும் தன்மை, ஒன்றாய்விடும் தன்மை, பாத்திரத்தின் தன்மையன்னியில் நாயனுடைய உள்ளமையாயிருக்கிறதென்பதாம். இன்னம், நாய னைப் பெற்றுக்கொள்கிறது, நாயனளவில் சென்றுவிடுகிறதென்ப தன் கருத்தாகிறது, ஞானியாகிறவன் நாயனுடைய உள்ளமையில் தானழிந்துவிடுகிறதாயிருக்கும். எவ்வாறெனில், பனிக்கட்டியானது தண்ணீரில் அழிந்து விடுவது போலென்பதாம்.

ஆகையால், உண்மையைத் தேடுகிறவன் எப்பொழுது நாய னுடைய உண்டுமையிலும், அவனுடைய நாயகத்தனத்திலும் ஷிர்க்கை நீக்கினானோ அப்பொழுது வஹ்தஹூ லாஷரீக்கலஹூ என்ற ஷஹாதத்துக் கலிமாவைச் சொல்வானாகில், உண்மை சொன்னவனாவான். ஏனென்றால், ஆண்டவனுக்கு இரண்டு வகை யிலும்அதாவது. அவனுடைய உண்டுமையிலும், நாயகத்தனத்தி லும் ஷிர்க்கை நீக்கி விட்டான். அவன் ஆண்டவனுக்குக் கொஞ்ச மும் ஷிர்க் வைத்தவனல்ல. எவனொருவன் நாயனுடைய நாயகத் தனத்தின் ஷிர்க்கை நீக்கி அவனுடைய உண்டுமையில் ஷிர்க்கை நீக்கவில்லையோ, அவனாகிறவன் "வஹ்தஹூ லாஷரீக்கலஹூ" வென்று சொல்வானாகில், உண்மை சொன்னவனாகான். இந்த அறிவு என்னத்திற்காகும்? ஏனென்றால், ஆண்டவனுக்கு அவ னுடைய உண்டுமையினால் இணை வைத்திருக்கிறான். ஆகை யால், உண்மையைத் தேடுகிற மூமினானவர்களுக்கு "ஷஹாதத் துக் கலிமா"வின் உள்ரங்கமான பொருளையும், வெளிரங்கமான பொருளையும் அறிய வேண்டியது அவசியமாகின்றது.

ஷஹாதத்து கலிமாவின் வெளிப்பொருள்:

"அஷ்ஹது அன் லா இலாஹ இல்லல்லாஹூ வஹ்தஹூ லா ஷரீகலஹூ" வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹூ வரஸூலுஹூ" ஷஹாதத்துக் கலிமாவின் வெளிரங்கமான பொரு ளாகிறது: "அஷ்ஹது" நான் சாக்ஷி சொல்லுகிறேன். "அன் லாயிலாஹ" பொதுவாக நாயனில்லை. "இல்லல்லாஹூ" மெய்யான நாயனைத்தவிர. "வஹ்தஹூ" அவனாகிறவன் ஒருவனாயிருக்கிறான். "லாஷரீக்கலஹூ" அவனுடைய பூர்வீகத் தில் அவனுக்கு யாதோர் இணையுமில்லை. அஃதாவது, நாயனே பூர்வீகமானவன். மற்ற சிருஷ்டிகளெல்லாம் புதிதானதாகயிருக்கும். அவனுடைய சிருஷ்டிக்கிற தன்மையிலும் அவனுக்கு யாதோர் இணையில்லை. அஃதாவது, வஸ்துக்களைப் படைக்கிறவன்,

www.miskinsha.blogspot.com

நாயனாயிருக்கிறான்! நாயனைத்தவிர உள்ள மற்றெல்லா வஸ்துக்களும் சிருஷ்டிகளாகவும், நாயனால் படைக்கப்பட்டனவாகவுமிருக்கிறது. நாயனுடைய நாயகத்தனத்திலும் அவனுக்கு இணையில்லை. அஃதாவது, நாயனே நாயகத்தனமுள்ளவன். நாயனைத்தவிர உள்ள மற்ற வஸ்துக்களெல்லாம் நாயனையே வணங்கக்கூடிய தாயிருக்கிறது. "வஅஷ்ஹது" இன்னும் சாட்சி சொல்லுகிறேன். "அன்ன முஹம்மதன்" உண்மையாக முஹம்மதாகிறவர்கள், "அப்துஹு" அவனுடைய அடியாராயிருக்கும். யாராவது முஹம்மதை இந்நிலைமையில் நாயனென்று சொல்வாராகில் காஃபிராகி விடுவான். "வரஸூலஹு" அவனால் அனுப்பப்பட்ட ரஸூலாயிருக்கும். இவ்விடத்தில் யாராவது முஹம்மது (ஸல்)வுடைய நபித்தனத்தை அல்லத்தட்டு (அலட்சியம் செய்) வாராகில் காஃபிராகி விடுவான்.

சாட்சியாகிறது சாதிப்பின் பேரில் உண்டாக வேண்டும். இந்த சாட்சியோ நிராகரிப்பின் பேரில் உண்டாயிருக்கிறது. நிராகரிப்பான சாட்சியை ஏற்றுக் கொள்ளத்தக்கதல்லவெனச் சொல்வார்களாகில், இவ்விடத்தில் சாட்சியும் சாதிப்பின் பேரிலே உண்டாயிருக்கிறது. ஏனென்றால், முதல் வார்த்தை நிராகரிப்பாகவும், கடைசி வார்த்தை சாதிப்பாகவுமிருக்கிறது. ஆகையால், சாட்சியானது சாதிப்பின் பேரிலேயே உண்டாயிருக்கிறது. சாட்சிக்கோ வழக்கு அவசியமாயிருக்கிறது. இவ்விடத்தில் வழக்கில்லை. ஆனால், வழக்குச் செய்யும் போதல்லவா சாட்சி சொல்ல வேண்டுமெனக் கேட்பார்களாகில், அதற்கு விடை: சாட்சிக்கு அடியார்களுடைய விஷயத்தில் வழக்கு அவசியமாயிருக்கிறது. நாயனுடைய விஷயத்தில் அவசியமில்லை. ஏனென்றால், பாத்தியமாகிறது இரண்டு வகையாய் இருக்கிறது: ஒன்று அடிமையினுடைய பாத்தியம்: அடிமையினுடைய பாத்தியத்தில் வழக்கு அவசியமாயிருக்கிறது. ஏனெனில், அடிமையாகிறவன் இந்த வஸ்து என்னுடையதாயிருக்கிறதென்று சொல்லுவான். அதன் பின் இரண்டு மனிதன் இந்த வஸ்து இந்த அடியானுடையதுதானென்று சாட்சி சொல்வான். மற்றொன்று நாயனுடைய பாத்தியம்: நாயனுடைய பாத்தியத்தில் வழக்கு அவசியமானதல்ல. வழக்கன்னியில் சாக்ஷி சொல்ல வேண்டும். எவ்விதமெனில், இவ்விடத்தில் நாயனுக்கே நாயகத்தனமுள்ளதெனஸ்தாபித்து அவனல்லாத வஸ்துக்களுக்கு நாயகத்தனமில்லை என மறுத்து சாட்சி கூறப்பட்டிருக்கிறது. இதுதான் "தொராத்துக் கலிமா"வின் வெளிரங்கமான பொருள்!

ஷஹாதத்துக் கலிமாவின் உட்பொருள்:

அஷ்ஹது—நான் சாட்சி சொல்லுகிறேன்.

அன்லாயிலாஹ—மனதிலும், வெளியிலும் பொதுவாக உண்டுமையானதில்லை

இல்லல்லாஹு—நாயனைத்தவிர. அஃதாவது, மொத்தத்திற்கு நாயனே உண்டாயிருக்கிறான்.

வஹ்தஹு—ஒருவனாயிருக்கிறான்.

லாஷரீக்கலஹு— அவனுடைய உண்டுமையில் யாதோர் இணையுமில்லை. அஃதாவது, நாயனுடைய உண்டுமையானது தரிபாடானதாயிருக்கிறது.

வேறு ஒரு வஸ்துவுக்கும் உண்டுமையே இல்லை, என்கிலும், இந்த தொராத்துக் கலிமாவின் பொருளினால் காஃபிர்களுடைய நாயனும் மெய்யானநாயனென்றே தெரியவருகின்றது. ஆனால், மிகுந்த அறிவீனத்தால் பார்த்ததைக் சாட்சியாகக் காணவில்லை; ஏனெனில், காஃபிர்கள் விக்கிரகம், மனிதன், சந்திரன், சூரியன், அக்னி, காற்று, தண்ணீர் முதலிய ஒவ்வொரு வஸ்துவையும் வணங்குகிறார்கள். இவைகளெல்லாம் நாயனுடைய உள்ளமையாயிருக்கிறது. மேலும் அவைகள் சுத்த நாயனாகவே இருக்கின்றன! ஆகையால், உண்மையில் நாயனையே வணங்குகிறார்கள். ஆகிலும், வெளிரங்கத்தில் வணக்கம் வஸ்துவுக்காயிருக்கிறது. எதுபோலென்றால், (உண்மையை அறியாத) சில மூமினானவர்கள் நாயனை வணங்குகிறார்கள். ஆகிலும், வெளிரங்கத்தில் நாயனல்லாததுக்காயிருக்கிறது. அத்தகைய மூமினானவர்களுடைய நாயனுக்கும், காஃபிர்களுடைய நாயனுக்கும் வித்தியாசம் என்னவெனில், "மட்டுப்பட்டது", "மட்டுப்படாதது" என்பதாம்; உண்மையிலல்ல. அஃதாவது, காபிர்களுடைய நாயன் ரூபத்தைக் கொண்டும் மட்டுப்பட்டதாயிருக்கிறது. மூமினானவர்களுடைய நாயனானது ரூபத்தைக் கொண்டும் மட்டுப்படவில்லை.

[குறிப்பு: "கலிமாவின் அந்தரங்கப் பொருளின்படி காஃபிரானவர்கள் வணங்குகிற விக்கிரகங்கள் முதலானவைகளும் நாயனென்றே தெரிகிறது. அப்படியிருக்க, இணையற்ற இஸ்லாத்தில் அழைக்க வேண்டியதென்னவென்று கேட்டால், அதற்கு விடை: "சகல வணக்கங்களும் அல்லாஹ்வுக்காகவே இருப்பதுடன், அவர்கள் "முத்தலக்" காகிய (குறிப்பற்ற) நாயனை "முகையதாகிய" (குறிப்புடைய) சூரத்தில் (உருவத்தில்) வணங்குவதால் நிரப்பமான வணக்கம் இன்னவிதமென்று அவர்களறியாதிருப்பதால் "வஹ்தா

www.miskinsha.blogspot.com

னியத்தை" (ஒன்றுபடுத்துவதைத்) தரிப்படுத்தி நிரப்பமான வணக்கத்தானில் அவர்களை அழைப்பதற்காகவல்லாது வேறில்லை. அது எவ்வாறெனில், ஒரு மனிதனை நாமழைக்க வேண்டுமானால், அவனுடைய ஆன்மாவின் தத்துவமும், ஜடத்தின் தத்துவமும், வெளி உறுப்பு, உள்ளுறுப்பு சகலவற்றையும் சேர்த்துக் கொண்ட அவனுக்குள்ள (ஸைது என்ற) பெயரைக்கொண்டு அழைப்பதால், அல்லது மனிதனே! என்று கூப்பிடுவதால், அவனைக் கூப்பிட்டதாகுமல்லாது அவனுடைய உறுப்புக்களிலொன்றைக் குறிப்பிட்டு காலே! கையே! என்றழைத்தால், காரியம் தள்ளி அதுவும் அவனாகவேயிருப்பதுடன் நிரப்பமாக அவன் மீதில் அறிவிக்காது. அதுபோல் ஐயறிவுக்குள் அகப்பட்ட நட்சத்திரம், விக்கிரகம் முதலானதை வணங்குவது மனிதனுக்குள்ள வெளி உறுப்பைப் போலும், ஜின் முதலான பிசாகளை வணங்குவது, அவனுடைய "கியாலாகிய" மனத்தோற்றத்தைப் போலும், "மலாயிக்கத்து"களாகிய தேவாதிகளை வணங்குகிறது, அவனுடைய "அக்கலிய்யதாகிய" புத்தியின் தத்துவம் போலுமாயிருக்கும். (இணையற்ற) முஸ்லிம் மானவர்களுடைய வணக்கம் சகலத்தையும் சேர்த்து, மட்டுத்திட்டம் சகலத்தையும் விட்டு நீக்கி, பேரையும், பேருடையோனையும் "தன்ஸீஹ்" (அரூப அம்சம்) இல்லாமலும், (சொரூப அம்சம்) "தஸ்பீஹ்" இல்லாமலும் இரண்டையும் சேர்த்து, "தன்ஸீஹ் மஹ்லென்ற மக்அது சிதுக்காகிய" உண்மை குடிகொண்ட துறையில் நின்று வணங்குகிறதாயிருக்கிறது. ரஸூல்மார்களை அனுப்பப்பட்டதும், காஃபிர்களோடு போர் செய்வதும், இவ்விதமான மஃரிபாவாக வணங்குவதற்கல்லாது வேறில்லை" (உஸூலுத்தீன்)

வஅஷ்ஹது—இன்னம், சாட்சி சொல்லுகிறேன்: "அன்ன முஹம்மதன்—உண்மையாக முஹம்மதாகிறவர்கள், "அப்துஹு" அஃதாவது, நாயனுடைய தோற்றமாயிருக்கிறார்கள், "வரஸூலுஹு" நாயனுடைய ஒளியாகவும், அவனுடைய சுயாராகவும், சுத்த நாயனாகவுமிருக்கிறார்கள். என்றாலும், இவ்விடத்தில் ஒவ்வொரு வஸ்துடைய உண்டுமையும் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. மேலும், முஹம்மது (ஸல்)வுடைய உண்டுமையும் நிராகரிக்கப்பட்டுப் போய் விட்டது. ஆகையால், சிலர் முஹம்மதை (ஸல்) "அப்துஹு வரஸூலுஹு" "வைச் சொல்வார்களாகில் அவரியம் உண்டுமையுண்டாகின்றது. எவ்வாறெனில், ஒரு உண்டுமை நாயனாயிற்று; ஒரு உண்டுமை அடிமையாயிற்று; ஒரு உண்டுமை ரஸூலாயிற்று. ஆகையால், இணையுண்டாகின்றதெனக் கேள்வியுண்டாகலாம். ஆனதினால், இத்நிலைமையில் முஹம்மதை (ஸல்) நாயனுடைய தோற்றமென்றும், நாயனுடைய ஒளியென்றும், நாயனுடைய கய

மென்றும் சொல்ல வேண்டும். அப்பொழுது தான் "ஷிர்க்"கை விட்டு நீங்குவார்கள் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டியது: நாயன் ஒருவனாயிருக்கிறான்; அவனுடைய உண்டுமையிலும், அவனுடைய நாயகத்தனத்திலும் அவனுக்கு யாதோர் இணையுமில்லை என்பதற்கு அத்தாட்சியானது இந்த "ஷஹாதத்து கலிமா"விலே உண்டாயிருக்கிறது. ஆகையால், நாயனாகிறவன் அவனுடைய உண்டுமையிலும், அவனுடைய நாயகத்தனத்திலும் ஒருவனாயிருக்கிறானென்று நீங்கள் சொல்லுகிறீர்களே! இதற்கு அத்தாட்சி என்னவென்று கேட்பார்களாகில், அதற்கு விடை இந்தப் பரிசுத்தக் "கலிமா"வாகிய "ஷஹாதத்துக் கலிமா"விலே உண்டாயிருக்கிறது.

இன்னம், நாயனை ஒருவனென்று உறுதி கொள்வது பிரத்தியட்சமாயிருக்கிறது; அத்தாட்சி தேவையில்லை. எவ்வாறெனில், வானமும், பூமியும் சர்வ லோகங்களும் உண்டாயிருப்பது உண்மையெனப் பிரத்தியக்ஷமாகிறது; அத்தாட்சி தேவையில்லை. ஏனெனில், ஒவ்வொரு மனிதனும் வானமும், பூமியும், சர்வ லோகங்களும் உண்டாயிருக்கிறதை அறிகிறான், பார்க்கிறான். ஆகையால், நாயன் ஒருவனென்பதற்கு அத்தாட்சி இதுவே போதுமானதாயிருக்கிறது. அப்படியிருக்க, நாயன் ஒருவனென்பதற்குப் பரிசுத்தக் "கலிமா"வாகிய "ஷஹாதத்துக் கலிமா"வே அத்தாட்சியாயிருக்கிறதென நீங்கள் என் சொல்லுகிறீர்கள்? என்று கேட்பார்களாகில் அதற்கு விடை: இவ்விடத்தில் இரண்டு விதமான மதமுண்டாகிறது. ஒன்று உள்ரங்கமான கல்விவான்களின் மதம்! மற்றொன்று வெளிரங்கமான கல்விவான்களின் மதம்! ஆகையால், நாயனை ஒருவனாக உண்மை கொள்வது பிரத்தியக்ஷமானது; பிரத்தியக்ஷமென்பதற்கு அத்தாட்சியே தேவையில்லாதது. இதானது உள்ரங்கமான கல்விவான்களின் மதமாயிருக்கிறது. வெளிரங்கமான கல்விவான்களின் மதமல்ல. ஏனெனில், அலை, குமிழி, நீர்க்குட்டி, நீர்க்குழி, நீர்த்துளி, முதலியவை ஜலமேயல்லாது வேறல்ல, கானலானது ஜலத்தைப்போல் தோற்றுவது போல, இவைகளின் நாம ரூபங்கள் கற்பிதமும் பொய்யுமான மாயையே! ஆகையால், சகல வஸ்துக்களையும் நாயனுடைய ஒரே உண்டுமைதானென்று உள்ரங்கமான கல்விவான்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகையால், உலகத்தின் உண்டுமையானது பிரத்தியக்ஷமானதாயிருப்பதும் அல்லாமல் சுத்த நாயனுடைய உள்ளமையாகவேயிருக்கிறது!

இன்னும் வெளிரங்கமான கல்விவான்கள் இரண்டு உண்டுமை உண்டுமென ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஒன்று முதற்

www.miskinsha.blogspot.com

காரணமாகிய நாயனுடைய உண்டுமை, மற்றொன்று இரண்டாவது காரணமாகிய சிருஷ்டிகளின் உண்டுமை. சிருஷ்டிகளின் உண்மையைப் பார்க்கக்கூடும். ஆகையால், இதற்கு அத்தாட்சி தேவையில்லை. நாயனுடைய உண்டுமையைப் பார்க்க இயலாது! ஆகையால், இதற்கு அத்தாட்சி வேண்டும். ஆனதினால், வெளிரங்கமான கல்விவான்கள் நாயனை அத்தாட்சியைக் கொண்டே அறிகிறார்கள். ஆனால், உள்ரங்கமான கல்விவான்கள் சொல்லுகிறார்கள்: நாயனை அத்தாட்சியைக் கொண்டும் அறிய முடியாது; எனினும், அத்தாட்சியை நாயனைக்கொண்டும் அறியலாம். மேலும், அவர்கள் சொல்லுகிறார்கள்: அத்தாட்சியானது இவ்விடத்தில் சுத்த காரண காரியமாயிருக்கிறது. அஃதாவது, மூலத்தின் கோலமாகவேயிருக்கிறது. மேலும், வெளிரங்கமான கல்விவான்கள் நாயனை அத்தாட்சியைக் கொண்டும் அறியத் தேடுகிறதானது எவ்வாறாயிருக்கிறதென்றால், ஒருவன் விளக்கு, பந்தம், தீவட்டியின் வெளிச்சத்தைக் கொண்டும் சூரியனை அறியத் தேடுகிறது போலாயிருக்கிறது. மேலும் விளக்கு, பந்தம், தீவட்டி முதலியவைகளின் வெளிச்சத்தை, சூரியன் வெளிச்சத்திற்கு முன்னால் காணவியலாதென்பது தெரிந்த விஷயமே. அப்படியிருக்க விளக்கு, பந்தம், தீவட்டியின் வெளிச்சத்தைக்கொண்டு சூரியனை எவ்வாறு அறியக்கூடும்? இராக்காலத்தில் சூரியன் உதயமாகிப் பிரகாசிக்காதகையால் சூரியனும் யாதொரு வஸ்தும் தெரியவராது. எப்பொழுது சூரியன் உதயமாகுமோ, அப்பொழுது பகற்காலத்தில் சூரியனின் வெளிச்சத்தைக்கொண்டு சகல வஸ்துக்களையும் காணலாம். சூரியனையும் அதன் வெளிச்சத்தைக் கொண்டே காணலாம். அவ்வாறே வெளிச்சத்தையும் அவ்வெளிச்சத்தைக் கொண்டு காணக்கூடும். ஆகையால், நாயனை அவன் ஒளியைக் கொண்டு அறியக்கூடுமேயல்லாது, புத்தி புலன்களின் ஒளியைக் கொண்டும், அத்தாட்சிகளைக் கொண்டும், நாயனல்லாததாகக் காண்கிற. அறிகிற வஸ்துக்களின் அறிவைக் கொண்டும் ஒருபோதும் அறியமுடியாது! ஹதீதே குதிசியில் வந்திருப்பதாவது: "அரஃப்து ரப்பீ, பிரப்பீ" அதாவது, "என் நாயனை என் நாயனைக் கொண்டே அறிந்தேன்." இன்னொரு சொல்லாகிறது: "ர அய்த்து ரப்பீ, பிரப்பீ" அதாவது, "என் நாயனை என் நாயனைக் கொண்டே கண்டேன்" என்பதாம்.

உண்மையைத் தேடுகிற மூமினாகிய விசுவாசிகள் நான்கு யாத்திரை, நான்கு பதவி, நான்கு தியானங்களை அறிய வேண்டியது அவசியமாகும். மேலும் நாயனையும் வலுப்பமாகக் காண

வேண்டியது. முதலாவது, நாயனையில் யாத்திரை யாகுதல் (இலல்லாஹி); இரண்டாவது நாயனில் யாத்திரையாகுதல் (ஃபில்லாஹி); மூன்றாவது, நாயனில் நின்றும் யாத்திரை யாகுதல் (மினல்லாஹி); நான்காவது, நாயனுடன் யாத்திரை யாகுதல் மஅ அல்லாஹி; என்பதே! ஞான வழியில் யாத்திரையாகுதல், பாதை நடக்குதல், என்பதன் பொருளையும் உணர, அறிய வேண்டியது அவசியமாயிற்று. ஆகவே, இரண்டிற்கும் பிரயாணஞ் செய்தலென்ற ஒரே பொருளேயாகும். ஆகையால், யாத்திரையானது வெளிரங்க யாத்திரை, உள்ரங்க யாத்திரை என இருவகையாகும்.

1. வெளிரங்க யாத்திரை:

ஒரு மனிதன் ஒரு ஊரைவிட்டு மறு ஊருக்குப் பிரயாணமாகுதல், அல்லது ஒரு இடத்தைவிட்டு மறு இடத்திற்குப் போகுதல் அல்லது தன் தேசத்தைவிட்டு (இறைஇல்லம்)கஃபதுல்லாஹ்வுக்கு யாத்திரையாகுதல் என்பது கருத்து. வெளிரங்க யாத்திரையில் இரண்டு வஸ்து உண்டாயிருக்கிறது. 1-வது யாத்திரையின் துவக்கம், 2-வது யாத்திரையின் முடிவு. யாத்திரையின் துவக்கமாகிறது அவன் சுய தேசமாயிருக்கும்; யாத்திரையின் முடிவாகிறது "கஃபத்துல்லாஹ்"வாயிருக்கும். இந்த யாத்திரையில் தன் சுய தேசத்தை விட்டுவிடுகிறது அவசியமாகும். இந்த யாத்திரையில் "கஃபத்துல்லாஹ்" போய்ச்சேர அதிக நாள் செல்லும். இதற்கிடையில் அனேக விலக்குகின்றனவான கஷ்டங்களும் தொந்தரவுகளும் உண்டாயிருக்கிறது. நாயனுடைய கிருபை உண்டாயிருந்தால் "கஃபத்துல்லாஹ்"வுக்குப் போய்ச்சேர்வான். அவனைக் "கஃபத்துல்லாஹ்"வுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்க வழி காட்டுகிறவன் அவசியமாயிருக்கிறது!

2. உள்ரங்க யாத்திரை:

ஒரு மனிதன் ஒரு பதவியை விட்டு மறு பதவிக்கு பிரயாணமாகிறானென்பது கருத்து! வெளிரங்க யாத்திரையில், யாத்திரையின் துவக்கமும் முடிவுமுண்டாயிருக்கிறது. அவ்வாறே உள்ரங்க யாத்திரையிலும், யாத்திரையின் துவக்கமும் முடிவுமுண்டாயிருக்கிறது. வெளிரங்க யாத்திரையில் சுய தேசத்தை விடவேண்டியது அவசியமாயிருக்கிறது. அவ்வாறே உள்ரங்க யாத்திரையிலும் தன் சொந்தப் பதவியை இழக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது. வெளிரங்க யாத்திரையில் குறித்த இடம் போய்ச் சேர்வதற்கு அதிக

www.miskinsha.blogspot.com

நாள் செல்லும். உள்ரங்க யாத்திரையிலும் நாயனிடஞ் சென்று முடுகிக் கொள்வதற்கு வெகு நாள் செல்லும்! வெளிரங்கமான யாத்திரையில் அனேக விலக்குகின்றனவான கஷ்ட நிஷ்டூரங்கள் உண்டாயிருக்கின்றன. அவ்வாறே உள்ரங்க யாத்திரையிலும் அளவற்ற இடையூறான கஷ்ட நிஷ்டூரங்கள் உண்டாயிருக்கின்றன. வெளிரங்க யாத்திரையில் நாடிய நாட்டத்தைப் பெற்றுக்கொள்கிறது. நாயனுடைய கிருபையைக் கொண்டாயிருக்கிறது. அவ்வாறே உள்ரங்க யாத்திரையிலும் காரிய சித்தியையடைந்து கொள்கிறது. நாயனுடைய கடாக்ஷத்தைக் கொண்டாயிருக்கிறது. வெளிரங்க யாத்திரையில் வழி காட்டுகிறவன் அவசியமாயிருப்பது போல், உள்ரங்க யாத்திரையிலும் வழிகாட்டி அவசியமாயிருக்கிறது. வெளிரங்க யாத்திரையில் வழிகாட்டுகிறவனில்லாமல் நாடிய நாட்டத்தைப் பெற்றுக்கொள்ள இயலாது. உள்ரங்க யாத்திரையிலும் வழிகாட்டியின்றி காரிய சித்தி உண்டாகமாட்டாது!

உள்ரங்க யாத்திரையானது ஞானவான்களாகிய "உலமா"க்களுடைய சமூகத்தில் மன வெளிச்சத்தாலும், சிந்தனையினாலு முள்ள யாத்திரைக் கருத்தாயிருக்கிறது. சிந்தனை என்பது தியானம்! தியானமென்பது அறிவு! சிந்தனையையும் வெளிரங்கமான உலமாக்கள் "தர்த்தீபெ உமூரெ மஅல்லாமாத்தின் லயத் அத்தியிலா மஜ்ஹூலெ நல்ரி" அதாவது, அறியப்பட்ட விஷயங்களை ஒழுங்கு படுத்துகிறதாகிறது கொண்டு அறியப்படாத யோசனைக்குரிய விஷயங்களளவில் கொண்டுபோய்ச் சேர்க்குமானதாகவே சொல்லுகின்றார்கள். உள்ரங்க உலமாக்களுடைய சமூகத்தில் சிந்தனையென்பது வெளிரங்கத்தைவிட்டும் உள்ரங்கத்தளவில் செல்வதற்கும், ரூபத்தை விட்டு அரூபத்தளவில் செல்வதற்கும், பலதை விட்டு ஒன்றளவில் செல்வதற்கும், சிருஷ்டிகளைவிட்டு நாயனளவில் செல்வதற்கும் சொல்லப்படும். உள்ரங்கமான யாத்திரை இந்த நான்குதான் சொல்லப்பட்டிருக்கிறது. (ஆதலால், மேலே சொல்லியிருக்கிற விபரங்களை நன்குணர்ந்து தன்னையும் தலைவனையும் அறித்து ஈடேறும்படி எல்லாம் வல்ல அல்லாஹுத்தாலா கிருபை செய்வானாகவும். ஆமீன்!)

காயாத்திரி என்னும் முலமந்திரத்தின் அகமியம்:

காயத்திரி என்பது "கலிமா"! இதைப்பற்றி அவர்களின் பாராயண நூற்களில் எழுதப்பட்டிருக்கிறதாவது: வானம், பூமி, சந்திரன், சூரியன், மனு, ஜின் முதலியன யாதொன்றுமில்லாமல், கடவுள் தாமே நாம ரூபமற்றவராய், நிஷ்களங்கமாய், நிரஞ்சனராய்த் தனித்தவராயிருக்கும்போது, அவர் தாம் தமது பூர்வீகமான உள்ளமையைக் கொண்டு சிருஷ்டிகளைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று சிந்தித்தனர். அப்பொழுது அவருடைய உள்ளமையில் நின்றும் ஓம் என்ற ஒரு சப்தம் வெளியாயிற்று. அதனை "ஹூ"வெனச் சொல்லப்படும். அத் தொனியானது அனேக இலக்ஷ வருடமாக அவருடைய உள்ளமையில் நின்றும் வெளியாகிக் கொண்டிருந்தது; பின்பு அதில் நின்றும் ஒரு வெண்மையான ஒளியானது வெளியாகிப் பிரகாசித்தது. அதனைப் பரமாத்மாவெனக் கூறுவார்கள். இதனை "நூரே முஹம்ம"தெனச் சொல்லப்படும். பின்பு அவ்வொளியில் நின்றும் ஆகாயமும், அதில் நின்றும் வாயுவும், அதில் நின்றும் அக்கினியும், அதில் நின்று ஜலமும், அதில் நின்றும் மண்ணும் உற்பத்தியாகி இவ்வைந்து பூதங்களினால் உலகங்களெல்லாம் சிருஷ்டிக்கப்பட்டனவாம். அன்றி மேற்கூறிய 5 பரமாத்மாவானவர், தஸய்யா அதாவது "குன்" வெனக் கட்டளையிட்டனர். உடனே சகல சிருஷ்டிகளுமுண்டாகி "விதுர்வானீனம்" அதாவது "ஃபயக்கூ"வென விடையளித்தனவாம்.

சமஸ்கிருத பாஷையானது மிகப் பூர்வீகமானதும் தவிர மகாக் கஷ்டமானது. இதில் அனேக கல்விகளும், ஞானங்களும் நிறைந்திருக்கின்றன. ஆயிரத்தில் இரண்டொருவர் வேதத்தின் உண்மைகளையுணர்ந்த பிராமணர்களாயிருக்கலாம். மற்றவர்களெல்லாம் சாஸ்திரங்களையும் அஃதாவது, "ஃபிக்ஹூ" அல்லது புராணங்களையும் வாசித்திருப்பார்கள். மற்றபடி சாதாரணமாக ஞானங்கள் காயத்ரி அஃதாவது, "கலிமா" அல்லது கீர்த்திமந்தர் அஃதாவது, "ஒஜீபா" முதலிய வெளிப்படையான கல்விகளைக் கற்றுக்கொண்டு காலத்தைக் கடத்துகின்றனர். இந்த காயத்ரியானது அவர்களுடைய சகல ஞானங்களுக்கும் மூளையாகவும்

www.miskinsha.blogspot.com

உயிராகவுமிருக்கின்றது. இதனையவர்கள் " இஸ்மே தாத் "தென அனுஷ்டித்து வருவதுமன்றி, இந்த அனுஷ்டானத்தையே எல்லாவற்றைவிட மேலென்றும் உத்தேசித்திருக்கின்றனர். அனேக மகாத்மாக்கள், இந்த காயத்ரி மந்திரத்தின் அகமியங்களைக் குறித்து அனேக புத்தகங்களை எழுதியும், கடைசியாக அதன் உண்மைகளை எட்டிக்கொள்ளக்கூடாமல் இதன் முழு அகமியங்களைக் குறித்துக் கடவுளே அறிவாரென எழுதியிருக்கின்றனர். ஏனெனில், ஒவ்வொரு பதத்திற்கும் பற்பல அர்த்தமும், ஒவ்வொரு அசை அல்லது மாத்திரைகளின் வித்தியாசத்தினால், வெவ்வேறு கருத்துக்களுமுண்டாகின்றன. இதன் உண்மையை உணர்ந்து அதன்படி நடப்பவர்களை பிரமஞானி அஃதாவது, ஆரிபே காமில் யெனச் சொல்லப்படும்.

இந்த காயத்ரி கலோகத்தைப் பிராமணர்கள் சூரியன் உதயமாகும்போதும், அஸ்தமிக்கும் போதும், மதியத்தின் போதும் ஆயிரம் விடுத்தம், அல்லது நூற்றியேட்டு விடுத்தம், அல்லது பத்து விடுத்தம் மெதுவாக உச்சரிப்பார்கள். இதனைப்பிற ஜாதியினருக்கு ஒருபோதும் கற்றுக் கொடுப்பதில்லை. அவர்களிலுள்ள வேதாந்திகள், இன்னம் பெரியோர்கள் எழுதியிருக்கிறதாவது : " காயத்ரியென்னுஞ் சுலோகத்தை உச்சரித்தவர்கள் பிராமணர்களாயிருக்கும். அவர்களை ஒரு போதும் வேறாக எண்ணக்கூடாது. தம்மோடு போஜனமருந்தச் செய்யவேண்டும்! "

காயத்ரி என்னும் சுலோகமாவது : " ஓம். பஹோர், பஹாவ பஸுவஹா, ஓம், தஸய்யா விதுர்வானீனம், பஹர்க்கஹோ, தேவ்ஸத்தியா தீமஹய்ய தீமஹவு, பர்ச்ச வதாயத."

இதன் சுருக்கமான கருத்துரையாவது : கடவுள் சிருஷ்டிகளை சிருஷ்டிக்க நோக்கியபொழுது அவருடைய உள்ளமையில் நின்றும் ஓம் என்ற சப்தம் வெளியாயிற்று. அச்சப்தத்தில் நின்றும் வெளியான வெண்மையான ஒளியில் நின்றும் இத்தொனியே வெளியாயிற்று. அவ்வொளியான பரமாத்துமாவானவர் " சிருஷ்டிகள் உண்டாக "வெனக் கட்டளையிட்டனர். அப்பொழுதே சகலமுமுண்டாகி " உமது கட்டளையின்படி உண்டாயினோ மென" விடையளித்தன.

இதன் சுருக்கமான விரித்துரையாவது : முந்திக்கடவுளுடைய கட்டளையின்படி மூன்று பெயர் ஜோடி ஜோடியாக, அல்லது ஆணும் பெண்ணுமாக உண்டாயினார்கள். முதலாவது விஷ்ணு இலக்ஷ்மி. இரண்டாவது, பிர்மா-சரஸ்வதி. மூன்றாவது மஹேஸ்வரன்-பார்வதி. அதன் பின் மற்றவை உண்டாயின என்பதே!

காயத்ரியல்லாமல் " கலிமா "வென்னும் மூல மந்திரத்தின் அகமியமும் இதைச் சேர்ந்ததுதான். கலிமாவென்பது யாதெனில் " லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸுலில்லாஹி " இதன் சுருக்கமான கருத்துரையாவது : வணக்கத்திற்குத் தகுதியான நாயன் யாருமில்லை ; கடவுளைத் தவிர. முஹம்மது கடவுளுடைய தூதராயிருக்குமென்பதேயாம். இன்னமிதன் சுருக்கமான விரித்துரையாவது : ஆதியில் கடவுளின் உள்ளமையில் நின்றும் ஓர் ஒளி உண்டாயிற்று. அதனை " நூரே முஹம்மதி." அல்லது முஹம்மது நபியுடைய ஒளியெனச் சொல்லப்படும். இவ்வொளியே சகல சிருஷ்டிகளுக்கும் மூல காரணமாம். இவ்வொளியைக்கொண்டே சகல சிருஷ்டிகளும் சிருஷ்டிக்கப்பட்டனவென்பதேயாம்! கலிமா அல்லது காயத்திரியானது, வெளிப்படையாகிய பொருள்களில் சற்று ஒற்றுமையாகவும், விகற்பமாகவுமிருக்கலாம். இத்தல்லாமல் அவைகளுக்கு வேறு சில பொருள்களையும் பாவிக்கலாம். " குரங்கைப் போல் " மனித வடிவில் உள்ளவர்களும், " கிளியைப் போல் " இந்த மந்திரங்களை உச்சரிப்பவர்களும் அறிந்திருக்கிற பொருள்களும் இதுதான்! இதன் மூலப்பொருளாகிய உட்பொருளில் கிஞ்சித்தும் சற்றாகிலும் ஒன்றுக்கொன்று பேதமில்லை. சாதாரணமாக எல்லோரும் மேற்சொல்லிய வெளிப்படையாகிய பொருளைத்தான் உணர்ந்திருப்பார்கள். உட்பொருளை உணர்ந்தவர்கள் ஆயிரத்திலொருவர்கூட இருப்பது அருமை ! ஏனெனில், காயத்திரியும், கலிமாவும் சுருதி முடிவாகிய பிரணவத்தைச் சுட்டிக் காட்டுகின்றது!

பிரணவந்தான் மூல மந்திரம் ; இதைத்தான் கலிமா என்றும், காயத்திரி என்றும் சொல்லப்பட்டது. இதன் மகத்துவத்தை ஒருவராலும் சொல்ல முடியாது ! பிரணவமானது கடவுளுடைய உள்ளமையில் நின்றும் முதலில் வெளியான ஓங்கார சப்தமேயாம்! இதனை ஓம் அல்லது " ஹூ "வெனச் சொல்லப்படும். இத்தொனியை குடிலை என்றும் "பரை" என்றும், " நாதம் " என்றும் சொல்லப்படும். இத்தொனியானது "லாத்த அய்யன்" என்ற பராபரத்தில், அக்கினியிற் சூடு போல் மறைந்திருந்த இச்சா சக்தியேயாம். இந்த இச்சா சக்தியை ஓங்கார வட்டமென்றும், " இலிங்க பீடம் " என்றும் சொல்லப்படும். " புருஷனிடமிருக்கிற ஸ்திரீக்கு காமம் ஜனித்தது போல் " ஓங்கார வட்டமாகிய இலிங்க

www.miskinsha.blogspot.com

பிடத்தின்கண் எழுத்தருளிய அறிவுக்கு இலிங்கமென்றும், விந்து வென்றும் " தஅய்யன் " என்றும், பரமென்றும் சொல்லப்படும். கடவுளுடைய உள்ளமையாகிய "லாத்தஅய்யன்" என்னும் பரா பரத்தை பிரமமென்றும், ஆன்மாவென்றும், இதன்கண் பிரணவ மாய் எழுத்தருளிய " தஅய்யன் " என்னும் பரத்தை பிரமாவென் றும் மனமென்றும் சொல்லப்படும். ஓங்கார வட்டமாகிய இலிங்க பீடத்தை " சுக்கூன் " என்றும், இலிங்கமாகிய விந்துவை " நுக் கத்து " அல்லது புள்ளியென்றும், இந்து இரு புருவத்தின் மத் தியில் பிரகாசிக்கிறதென்றும், அதனை " சுல்தானன்னஸீரா " வென்றும், சின்மயவடிவு என்றும் சொல்லப்படும். இதனைச் சிலர் தன் நிலை என்றும், நடு நிலை என்றும் சொல்லுவார்கள். எவ் வளவு கல்விகளை நாம் கற்றிருந்த போதிலும் தன்நிலையை அறிவதரிது!

பிரமத்துக்கும், பிரமாவுக்குமுள்ள வித்தியாசமே மனதுக்கும் ஆன்மாவுக்குமுள்ளது. உண்மையில் இவ்விரண்டிற்கும் யாதொரு விகற்பமில்லை. உள்ளமையில் இவ்விரண்டும் ஒரே வஸ்துதான்! இரண்டல்லவெனினும் அதன் செய்கையால் இரண்டாகப்பாவிக் கப்படுகிறது. கடவுளின் உள்ளமையானது சங்கற்பமாகிய அறிகிற அல்லது இச்சிக்கிற தன்மையை விட்டொழிந்திருக்குமேயானால், அதனைப் பிரபஞ்சத்திற்கு பிரமம் என்றும், நமக்கு ஆன்மா என்றும் சொல்லப்படும். இன்னம் கடவுளின் உள்ளமையானது சங்கற்பமாகிய அறிகிற அல்லது இச்சிக்கிற தன்மையில் ஆயிருக்கு மேயானால், அதனைப் பிரபஞ்சத்திற்கு பிரமாவென்றும், நமக்கு மன மென்றும்சொல்லப்படும். ஆகையால், பிரமமும் ஆன்மாவும்,பிரமாவும் மனமும், அல்லது மனமும் ஆன்மாவும், பிரமாவும் பிரமமும் ஒன்றே யாம்! நிர்விகார கூடஸ்த சுத்த சைதன்யமாகிய அப்பிரமமானது தனது திருஷ்டியாகிய அறிவுக்குக்கூட எட்டிக்கொள்ளக்கூடாத விதமாய் அவ்வளவு சூக்ஷுமமாக இருந்தது. அந்தானது, அந் நிலைமையில் ஒன்றென்பது, பலவென்பது, இல்லையென்பது, மரணம், ஜீவிப்பு, அறிவு, மடமை, முன்பின், அகம் புறம், இருள் ஒளி, நாமம் ரூபம், குணம் குறி – முதலிய யாதொரு குறிப்பும் அற்றதாயிருந்த போது, தன்னை எட்டிக்கொள்ள வேண்டுமென்ற இச்சையால் தன் அறிவைக்கொண்டு உற்று நோக்கிய போது, தன் எண்ணத்தில் வெளியான தோற்றத்தைத் தானென்றறிந்து தன் அசலை மறந்து, அல்லது அப் பிரமமானது தனக்கு அசலில் யாதோர் உள்ளமையுமில்லாமலிருக்கத் தனக்கோர் உண்டுமை

உண்டோவென நினைத்தபோது, அவ்வெண்ணத்தில் வெளியான தோற்றத்தைத் தானென்றறிந்து தன் சுயத்தை மறந்துவிட்டது! அவ்வெண்ணத்தின் தோற்றத்தை அகங்காரமென்றும், அஞ்ஞான மாகிய அறிவென்றும் நடுநிலையாகிய நாமென்றும், மனமென் றும், பிரமாவென்றும் சொல்லப்படும். சிந்தனைக்கெட்டாத அப் பிரமமானது தனக்கு யாதோர் உள்ளமையுமில்லாமல் இருக்க தன் எண்ணத்தில் தனக்கு ஒரு தோற்றத்தை எவ்விதம் உண்டாக்கிக் கொண்டதோ, அதுபோல் தனக்கில்லாத தத்துவங்களையும் தனக்கு உண்டுமெனத்தன் எண்ணத்தில் உண்டாக்கிக்கொண்டது. இவ்வாறே தனக்கில்லாத வஸ்துக்களையும் தனக்கு உண்டுமெனத் தன் எண்ணத்தில் உண்டாக்கிக்கொண்டது. இவ்விதமாக " களங்க மற்ற கண்ணாடியில் ரூபம் பிரதிபிம்பிப்பது போல் " நாதவடிவான இச்சா சக்தியில் விந்து மயமான அறிவானது பிரதிபலித்தது. அவ்வறிவின் சங்கற்பத்தால் பிரபஞ்சம் தோன்றிற்று! பிரமத்தில் கற்பிதமாகத் தோன்றிய விஷயத்தை மாயாவென்றும் "கியால்" என்றும், " வஹ்தத் " தென்றும், " அல்லாஹ் " வென்றும், பிரமாவென்றும், மனமென்றுஞ் சொல்லப்படும். ஆகையால், மன துக்கு அரபு பாஷையில் " கல்பு " அஃதானது தலைகீழாய் மாறினது : அல்லது விகாரப்பட்டது என்றும், சமஸ்கிருத பாஷை யில் மனதுக்கு " மன் " அல்லது இல்லாதது. அல்லது பொய் யானதென்றும் பொய்யதாகின்றது. இதுபோல் வேத மந்திரமென் பது, உச்சரிப்பும், உச்சாடனமுமல்ல ; சிந்தனை, ஆராய்ச்சி, என்று பொருளாகும்! இது போலவே, வித்தை என்பது வேடி க்கை விளையாட்டல்ல ; கல்வி, ஞானம் என்று பொருளாகும்! அனேகர் மந்திரத்தை உச்சரிப்பென்று எண்ணுகிறார்கள். போனோகிராபில் (டேப் ரிக்கார்டரில்) மந்திரத்தை உச்சரிக்க வைத் தால் குணமுண்டாகாது! மைண்டாகிய (Mind) மனமில்லாவிடில் மந்திரம் என்னத்திற்காகும்? இவ்விடத்தில் மனதைக் கற்பிதமாக உண்டென்றும், உள்ளமையில் இல்லையென்றும் அறியவும். கான லானது தண்ணீர்போல் பொய்யாகத் தோற்றும். அந்தப்பொய்யில் பொய்யான அலையும் தோன்றும்! அதில் நாம் ஸ்நானம் செய் யவும், தாகம் நிர்த்துக்கொள்ளவும் முடியாது. அது போலவே பிரமத்தில், அல்லது ஆத்மாவில், கற்பிதமாய்த் தோற்றிய பிரமா அல்லது மனதில் கற்பனையாகத் தோற்றிய பிரபஞ்ச விஷய மானது கனவைப்போல் பொய்யான மாயையேயாகும்! இதை உண்மையென்று விஸ்வாசித்தவர்கள், " ஆகாயத்தில் பறக்கிற பட்சியின் நிழலை, பட்சியென வேட்டையாடத் துரத்தித் திரிந் தவர்கள் போலும், எறிந்த கல்லை எலும்பென்றெண்ணி குசா

www.miskinsha.blogspot.com

லாய் வாலையாட்டிக் கொண்ட கடைகெட்ட நாயைப்போலும்" ஆவார்கள்!

பொய்யை விட்டு மெய்யை விசுவாசிப்பதே ஞானம்! மெஞ் ஞான மெய்யொளியின் மின்னொளியாகிய ஞானத்தை அனுசரிக் காதவர்கள் மிருகமென்பதில் சந்தேகமில்லை! ஞானத்துக்கு ஒற்றுமைப்படாத சரியை அல்லது மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாது. சிலர் சரியை அல்லது மார்க்கத்துக்கு ஒற்றுமைப்படாத ஞானத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பார்கள்; இது மகா மூடத்தனம்! ஏனெனில், ஞானமென்பது உயிராகவும், சரியை அல்லது மார்க்கமென்பது உடையாகவுமிருக்கிறது. ஞானத்தை மாற்ற முடியாது! சரியை அல்லது மார்க்கத்தை ஞானத்துக்குத் தக்கபடி பல விதமாக மாற்றிக்கொள்ளலாம். ஆகையால், உலக முழுமையும் ஞானம் ஒன்றாகவும் சரியை அல்லது மார்க்கம் பல தாகவுமிருக்கிறது. ஞானத்துக்காக சரியை அல்லது மார்க்கமே யொழிய, சரியை அல்லது மார்க்கத்துக்காக ஞானமல்ல!

ஞானமென்பது உண்மையையறிகிறது (அறிந்து கொள்வது). உண்மையை அனுசரித்து, சரியை அல்லது மார்க்கம் காலத்துக்குக் காலம், மனிதர்களுடைய படிப்பு அல்லது அறிவின் விஸ்தீரணத் துக்குத்தக்கபடி மாறுதலடையும்! ஞானம் அப்படி மாறுதலடைய வழி யில்லை! ஒரு காலத்தில் ஏற்பட்ட சரியை அல்லது மார்க்கத்தை எப்போதும் அனுசரித்து வரவேண்டுமென்கிற கொள்கையும் தவறு! ஏனெனில், ஒரு மதத்திலும் நாளது வரையில், சரியை அல்லது மார்க்கம் ஒரே நிலைமையிலிருந்து வரவில்லை. பலவிதமாக மாறியே வந்திருக்கிறது. இந்தக் காரணங்களை ஆலோசித்துப் பார்த்தால் கலிமா, காயத்ரி, முதலிய ஒவ்வொரு மதங்களின் மூல மந்திரங் களின் அகமியமும் ஒன்றாயிருக்கிறதென தெரிந்து கொள்ள ஏது வுண்டு. மூல மந்திரங்களின் வெளிப்பொருள் பலவிதமாயிருந்த போதிலும், உட்பொருள் ஒற்றுமையாகவேயிருக்கும்! ஞானமல்லது உண்மையை அனுசரித்து, மார்க்கமல்லது சரியையை நடத்த வேண்டுமென்கிற நோக்கத்தால், ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் மார்க்கம் அல்லது சரியைகளில் பல பிரிவாகவும், பல கூட்டமாகவும் பிரிந்து போயிருக்கிறார்கள். இதில் ஒன்றையாவது நல்லது,அல்லது கெட்டதென்று சொல்ல வழியில்லாவிட்டாலும், எது அதிகமாக உண்மையை அனுசரித்திருக்கிறதோ, அதை நல்லதென்று சொல்ல எதுவுண்டு. என்றாலும், ஒன்றையும் கெட்டதென்று சொல்ல வழியில்லை!

உண்மையை அறிகிற விஷயத்தில் பலர் பலவிதமாய் இருக் கிறார்கள். சுருதி, யுக்தி, அனுபோகம் இம்மூன்றிற்கும் ஒத்திருப் பதே உண்மையென்பது அனேகர்களுடைய சித்தாந்தம்! இத் தர்க்கங்களில் தலையிட்டுக் கொள்கிறது அவ்வளவு உசிதமல்ல (நல்லதல்ல). ஏனெனில், லோகவாதனை, தேகவாதனை, சாஸ்திரவாதனை இம் மூன்று வாதனைகளையும், மண்ணாசை, பெண்ணாசை, பொருளாசை இம்மூன்று ஆசைகளையும் விட்டு நீங்குவதே அவசியமாகும். அப்படி நீங்குவது சாமானியமல்ல! தன்னையறிய வேண்டும்! தன்னையறிவதே கடவுளையறிவ தாயிருக்கும்! தானிருக்கிறது நிச்சயமாயிருந்தால் கடவுளிருக் கிறது நிச்சயந்தான்! நாம் அவரை விட்டு நீங்கவில்லை; அவர் நம்மை விட்டு நீங்கவில்லை. அவரில் நாமிருக்கிறோம்; நம்மில் அவரிருக்கிறார்! அவரது கெடியினது கொடிய இடியின் முழக்கத் தையும் அவரது நிருமுகவடிவினது கடின ஒளியின் மின்னலையும் நம்மில் வைக்கப்பட்டிருக்கிறது! சூரியனென்னும் ஆன்மாவும், மன மென்னும் சந்திரனும், புலன்களென்னும் நட்சத்திரங்களும் நம்மில் மின்னிப்பிரகாசிக்கின்றன! எல்லா வஸ்துக்களையும் தம்முடைய தத்துவம் அறிகிறது! நம்முடைய தத்துவத்தை மற்ற வஸ்துகள் அறியவில்லை. நம்முடைய தத்துவத்தை நாமறிகிறோம். நம்மை தத்துவம் அறிகிறதில்லை! ஏனெனில், புலனைப் புத்தியறியும்; நம்முடைய புத்தியைப் புலனறியாது! புத்தியை மனமறியும்; மனதைப் புத்தியறியாது! மனதை ஆன்மா அறியும்; ஆன்மாவை மனமறியாது!

நாம் ஒரு வஸ்தை நம்முடைய அறிவைக்கொண்டு அறிகி றோம். அந்த அறிவே அந்த ஆன்மாவாயிருந்தால் எதை அறி யும்? நாம் ஒரு வஸ்தை நம்முடைய மனதைக் கொண்டு நாடு கிறோம். அந்த மனமே அந்த ஆன்மாவாயிருந்தால் எதை நாடும்? நாம் ஒரு வஸ்தை நம்முடைய பார்வையைக் கொண்டு பார்க்கி றோம். அந்தப் பார்வையே அந்த ஆன்மாவாயிருந்தால் எதைப் பார்க்கும்? ஆன்மாவுடைய அலை மனமாகவும், மனதுடைய அலை புத்தியாகவும், புத்தியுடைய அலை புலன்களாகவும், புலன்களுடைய அலை பிரபஞ்சத் தோற்றங்களாகவுமிருப்பதால், புலன்களைப் புத்தியிலும், புத்தியை மனதிலும், மனதை ஆன்மாவிலும் அடக் கித் தன்னையறிந்தவனே கடவுளை அறிந்தவன்! கடவுளை அறிகிற வழியே மோட்சத்துக்குரிய வழி! மோட்சத்துக்குரிய வழியை யார் காட்டினபோதிலும் அதை ஏற்றுக்கொள்ள வேண் டியது அவசியம்! எந்தெந்த மூலாசிரியர்களை மனிதர்கள் ஞானத் துக்காக தொடர்ந்திருக்கிறார்களோ, அந்த மூலாசிரியர்களின்

www.miskinsha.blogspot.com

நாமத்தைக்கொண்டே அவர்களை அழைக்கப்படும். உதாரணமாக முஹம்மதைத் தொடர்ந்தவர்களை, முஹம்மதியர்களென்றும், கிறிஸ்தைத் தொடர்ந்தவர்களைக் கிறிஸ்தவரென்றும் சொல்வது போல் மற்றவர்களையும் உத்தேசித்துக் கொள்க. சர்க்கரையென்றால் நாவு தித்திக்காது! விளக்கென்றால் வீடு வெளிச்சமாகி விடாது! ஞான சித்திக்கு யோக சித்தியும் அவசியமாக வேண்டும்!!

ஞானமென்பது விசுவாசம். யோகமென்பது தபம். ஞானத்தைக்கொண்டு ஜீவ முக்தியும், யோகத்தைக் கொண்டு விதேக முக்தியும் அடையக்கூடும்! யோகிகள் சில காலத்துக்குப்பின் நமது கண்களுக்குத் தெரியாமல் மறைந்து விடுவார்கள்! அவர்களை நாம் வெளிக்கண்ணால் காண முடியாது. பிறகு சிலகாலம் சென்று அவர்கள் தங்கள் தப பலத்தால் அடைந்திருக்கிற சூட்சுமமான சரீர சம்பந்தத்தையும் விட்டு நீங்கி, கடவுளில் கலந்து விதேக முக்தியை அடைவார்கள்! அவர்கள் சூட்சுமமான நிலைமையில் இருக்கும் போது மனிதர்களுக்கு உதவி செய்யவும், அவர்களைக் கண்டு பேசவும் கூடும்! "மேடம் பிளவாட்ஸகி" என்னும் துரைசாணி திபெத்திலிருக்கும்போது அனேக மகாத்மாக்களை கண்டதாகவும், அதோடு ஹெமேலியாப் பருவதத்தில் "கோட்டு ஹோமிலால் சிங்கா" என்னும் மகாத்மாவை சந்தித்து அவரிடம் அனேக ஞானங்களைக் கற்றதாகவும், அவரை ஒருவரும் இந்த வெளிக்கண்ணால் காண இயலாதென்றும், அவர் அம்மலைக் குகையில் வசிக்கிறதாகவும், அவர் துறவியாகி 200 வருஷத்துக்கு அதிகமாகிறதென்றும், அவர் அந்த அம்மாளுக்கு, உலகத்தில் நாஸ்திகம் பரவாமல் ஆஸ்திகம் பரவும்படி உலகத்தாருக்கு, ஆத்ம ஞானத்தின் உண்மையைப் போதிக்க உத்தரவளித்ததாகவும், அவர் சிலருக்குத் தரிசனமாகி நல்ல உதவிகளைச் செய்திருப்பதாயும் சொல்லப்படுகிறது.

"கிலுர்", "இல்யாஸ்" போன்ற சில மஹாத்மாக்கள் இன்னும் மரிக்கவில்லை என்றும், அவர்கள் "மாவுல் ஹயாத்" என்னும் ஜீவ நீர்த்தமாகிய அமிர்தம் சாப்பிட்டிருப்பதால் சாகாமாட்டார்களென்றும், "இத்ரீஸ்" ஜீவனோடு சுவர்க்கம் புகுந்ததாகவும், "ஈஸா" ஜீவனோடு வானலோகம் உயர்ந்தப் பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இவைகள் உண்மையென்பதற்கு ஆத்ம ஞானமாகிய யோகாப்பியாசத்தினால் ஏதுவுண்டு! ஜீவ முக்தியென்பது சரீர சம்பந்தம் அல்லது சரீர அனுபோகத்துடன் நமது எண்ணத்தினால் நம்மைக் கடவுள் என்று அறிதல், அல்லது நமது

எண்ணத்தினால் நம்மைக் கடவுள் என்று சிந்தித்தல், அல்லது நமது செயல்களைக் கடவுளுடைய செயல்களென்று கருதுதல் முதலியனவாம்! இவ்விதமாக நமது எண்ணங்களும், செயல்களும், தத்துவங்களும் எப்போதும் சிந்தனையின் மூலமாக சிவத்தில் கலந்திருக்குமானால் இதனை ஜீவமுக்தியென்றும், இவ்வித சாதனையுள்ளவர்கள் மரணத்துக்குப் பின் விதேக முக்தியை அடைவார்களென்றும் சொல்லப்படும்! இது போலவே சங்கற்ப சமாதியென்பது ஏதாவது ஒரு எண்ணத்தில் நமது மனதை நிலை நிறுத்துதல், அல்லது தன்னையும் தன் தத்துவங்களையும் சிவத்தில் சேர்க்க, அல்லதுதன்னை சிவமென்றுச் சிந்திக்க, அல்லது யாதொரு மறைவான விஷயங்களை வாசித்துணர சமாதி செய்தல் முதலியனவாம்! நிர்ச்சங்கற்ப சமாதியென்பது யாதோர் எண்ணமும் செயலுமற்று, பிரமத்தைப்போல் யாதொரு சலனமற்றிருப்பதேயாம்! இது மகாப்பெரிய பதவி! இதன் மகத்துவத்தைச் சொல்ல இயலாது!

தனிர யோகத்துக்காக இருதயம், புருவ மத்தி, மூக்கு முனை, தலை மூளை, கழுத்துப் பள்ளம், நாபி, கண் பாவை, நெஞ்சுக் குழி, ஆகாயம், யாதொரு அட்சரம், யாதொரு சுரூபம், யாதொரு வஸ்து, தன் சுரூபம், தன் குருவின் சுரூபம், தன் மனைவியின் சுரூபம் முதலியனவைகளில் எதிலேனும் ஒன்றில் சிந்தையை வைத்து, இந்திரியம் முதலிய தத்துவங்களை அடக்குவதுமுண்டு! அல்லது தன்னைக் கண்டிப்பான சரீரமல்ல என்றாவது, சூட்சுமமென்றாவது ஆன்மாவென்றாவது, பிராணவென்றாவது சிந்தித்துப் புலன்களை அடக்குவதுமுண்டு!

ஹட் யோகம்:

ஹட் யோகமென்பது சுவாசத்தைக் கொண்டு மனதை வசப்படுத்தல். ஹட் என்பது சுவாசமென்றும், யோகமென்பது சாதனை என்றும் சொல்லப்படும். இதனைக் கருமயோகம் என்றும் சொல்வதுண்டு. இதற்கு மூன்று வகையான பிராணாயாமம் அல்லது வாயு ஸ்தம்பனமாகிய மூச்சடக்கம் செய்யவேண்டும். முதலாவது பூரகம்: அதாவது, இருதயத்தை விட்டும் வாயுவை வெளிப்படுத்தல். அதன் வழியாவது: பிராண வாயுவை அதன் ஸ்தலமாகிய இருதயத்தை விட்டும், சுழி முனை நாடியின் வழியாக மேலே இழுக்கப்படுகின்றது. அப்படி இழுப்பதனால் மற்ற தான்கு வாயு வகிய அபானன், வியானன், உதானன், சமானன் முதலிவை

www.miskinsha.blogspot.com

சுழி முனை நாடியில் சம்பந்தப்பட்டிருக்கிற நரம்புகளின் வழியாக சுழி முனை நாடிக்குட்செல்லு மேல்பாரிசம் இழுக்கப்படுகின்றது. பின்பு அந்த வாயுக்களை மெள்ள மெள்ள தலை மூளை வரையில் கொண்டு போகப்படுகின்றது. இரண்டாவது கும்பகம் : இதன் வழிவாவது மேற் சொல்லிய மேலே இழுத்துக்கொண்ட காற்றை தலை மூளையின் மத்தியில் சேகரம் செய்து ஸ்தம்பித்தல் இந்தச் செயலானது அதிக உஷ்ணத்தைக் கொடுக்கின்றது உஷ்ணமானது நெருப்பின் குணம்! ஒரு சமயம் இச்செய்கையின் உஷ்ணத்தினால் சரீரத்துக்குச் சேதமும் பலஹீனமும் உண்டாகும். இது நம்முடைய காரியத்துக்கு இடையூறாகும். ஏனெனில் சரீரமானது எல்லாக்காரியங்களிலும் ஆன்மாவுக்கு வாகனமாயிருக்கிறது வாகனமில்லாவிட்டால் வழி நடப்பது வெகு கஷ்டம். ஆகையால், இந்த வேலை செய்கிறவர்கள் தன் சரீரத்தைக் காப்பாற்றுகிற விஷயத்தில் எப்போதும் வெகு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்! இச்செய்கையால் ஏற்படுகிற நஷ்டத்தை நம்முடைய சிந்தனையினால் அகங்காரம் முதலிய மற்ற கெட்ட குணங்களில் போட்டு சித்திக்க வேண்டும். நம்முடைய சரீரத்துக்கல்லவென்று நினைக்க வேண்டும். இதனால் அவைகள் எரிந்து போய் சரீரம் மட்டும் சேமமாயிருக்கும்!

மூன்றாவது, இரேசகம்: இஃதாவது, வாயுவைத் தலை மூளையை விட்டும் வெளிப்படுத்துதல். அதன் வழியாவது : முன் மேலே இழுந்தேற்றி ஸ்தம்பித்த வாயுக்களை மெள்ள மெள்ள விடுதல். எவ்விடமிருந்து அவ்வாயுக்களை மேல் பாரிசம் இழுக்கப்பட்டதோ அவ்விடத்துக்கே மறுபடியும் செலுத்தி விடுதல். இச்செய்கையானது முந்திய செய்கையைவிட அதிக கஷ்டம். இந்த வாயுக்களானது விடுகிறபோது தன் சொந்த இடமாகிய மூல ஸ்தானத்தை நோக்குகின்றது. இன்னும் அதிக வேகமாய் அவ்விடத்துக்குச் செல்ல முயல்கின்றது அடக்கி மெதுவாய் விடுகிற தத்துவம் நம்மைவிட்டு நழுவிவிட முடுக்கி விடுகின்றது. இச்செயலின் குணமானது கடைசியில் குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால், அமுதத்தின் மூல ஸ்தானமாகிய கபாலம் அல்லது தலை மூளையில் கும்பகத்தின் செயலினால் வெளியான அக்னியின் புகையை மேகமாகத் தீர்மானித்து எப்போதும் அமுதத்தை வருவித்துக் கொண்டிருக்கிறதாகச் சிந்திக்க வேண்டும்! இந்த எண்ணம் கெட்டியாகிவிட்டால் தலை மூளை அமுதத்தினால் நிறைந்து விடும். இன்னும் சுழி முனை நாடியின் வழியாக எல்லா நரம்புகளுக்கும், அவயவங்களுக்கும் சென்று கொண்டிருக்கும். இன்னும் எரிந்துபோன குணங்கள் மறு

படியும் உயிர்பெற்று உதித்தெழும்பும்! அஃதாவது, கெட்ட குணங்கள் எரிந்துபோனபடியால் அவைகளுக்குப் பதிலாக நற்குணங்களே வெளியாகும்! இன்னும் அகத்தின் சுத்தத்திற்குத்தக்கபடி முகத்தில் சௌந்தரியமும் (அழகும்) வார்த்தையில் இன்பமும், மானுடர்கள் பேரில் அன்பும் வெளியாகும்! இன்னும் இச்செய்கையின் மகத்துவமான குணம் யாதெனில், இச்செயலைச் செய்கிறவனிடம் மலக்குல் மௌத் என்னும் எமதூதருக்கு வேலை கிடையாது! மரணமும் ஜீவிப்பும் இவன் வசத்திலாயிருக்கும்! அஃதாவது, இவன் சித்தப்படியாயிருக்கும். இதைக்கொண்டு சரீர சம்பந்தத்தைவிட்டு நீங்கி விதேக முக்தியை அடைகிறதாயிருந்தால், மேற் பற்களையும், கீழ் பற்களையும் அகற்றி, இடையில் உதடுகளை மடித்து நெருங்க மூடிக் கொண்டு நுனி நாவை அண்ணத்தில் செலுத்தி, கும்பகத்தின் செயலால் வாயுவை ஸ்தம்பித்துச் சரீர சம்பந்தத்தை விடப்படுகிறது!

பிரணவ சாதனையே மேலானது!

நாட் யோகத்தை, சுவாச அப்பியாசத்தை யோகசித்தியின் விளக்கத்திற்காக இங்கு கூறப்பட்டிருப்பினும் அதனை மறுத்து, இராஜயோகத்தைச் சேர்ந்த பிரணவ சாதனையை எல்லாவற்றையும்விடச் சிறந்ததெனக் "கடவுள் செயல்" என்ற பாடத்தில் உபதேசிக்கப் பெற்றுள்ளதையும் அறிந்து கொள்க!

www.miskinsha.blogspot.com

பிரம இரகசியம்

பேசக்கூடாத மௌனத்தின் அகமியம்:

பேசக்கூடாத மௌனமானது முடிவில்லாதது! அறிய ஏலாது! இன்ப துன்பமில்லாதது! அழியாதது! இன்மையும் உண்மையு மல்லாத, இவ்விரண்டு மாற்றத்தை வெளியாக்கக்கூடிய பொது வான அகமியம்! சர்வத்தையும் ஏக அகிதமாய்ப் பொதிந்து கொண்ட தனித்த பொருள்! அது தன்னைக் கொண்டுதான் தேவையுள்ளது. தன் தேவையின் தேட்டத்தால் இச்சையுண்டாகி பிரணவ தொனி உண்டானது. இத்தொனியின் நிமித்தம் தள்ளு கிற சக்தி. இழுக்கிற சக்தி உண்டானது. தன் சுயத்தில் நின்றும் பரம அணுக்கள், ஜீவ அணுக்கள் அல்லது, மகா நுண்மையான பருக் கக்கூடாத பர அலை-ஜீவ அலைகள் மேலே ஏறுகிறதும் கீழே இறங்குவதுமாக இருக்கின்றன! முடிவில்லாத மூன்று விகாரங்கள் அ, இ, உ, எனப் பருக்கக்கூடாத விதமாகத் தொனிமயமாகவே வெளியாயின! மின்சாரத்தைப் போல் வேலை செய்கின்றன!

அதன் தாற்பரியம் என்னவென்றால், "என்னிலுண்டானது நானே! நானே என்னிலடங்குவேன்" என்பதாம். இந்த இச் சையின் விகாரத்தின் திறமை வல்லபத்தைச் சொல்லக்கூடவில்லை (முடியவில்லை). இருளும் ஒளியுமல்லாத மௌனத்தின் திறமை யைப்பற்றி எப்படிச் சொல்லக்கூடும்? இச்சையின் விகாரத்தில் முடிவில்லாத ஏகப்பார்வை தோன்றியது! இதில் தன்னை எட்டிக் கொள்ளவில்லை. தன்னைக் எட்டிக்கொள்ளும் துறை கிடைக்க வில்லை. இதைப் பறை ஆன்மா எனப்படும். இதில் அகங்காரம் முடிவில்லாத விகாரமாக ஏற்பட்டது. இதில் தன்னை நானென்று எட்டிக்கொண்டது. இதைப் பறை அறிவு எனப்படும்.

இதில் நான்கு விதமான உலகங்கள் மறைந்திருப்பதாகச் சொல்லப்படுகின்றன. சிக தானிருந்தும் தனக்குத் தெரியாது, பசி யுண்டானால் பாலைத் தேடுவது வழக்கம்! பிரமத்திடம் எந்தச் சக்தியும் இல்லாமல் போகிறதில்லை. அதைத் தூய்மையாக்க யாதொரு தத்துவமும், செயலும் இல்லையெனச் சொல்லப்பட்டது!

ஆண்டவனின் அகமியம்

தான் அறிவிலுள்ளது, தன் சுயத்திலில்லாதது! ஆண்டவன் தனக்கு யாதோர் உள்ளமையுமில்லாதிருக்கத் தன் அறிவில் கற் பிதம் செய்து கொண்டது போல், யாதொரு தத்துவமும் இல்லா மலிருக்கத் தனக்குத் தத்துவமிருப்பதாக அறிவில் கற்பிதம் செய்து கொண்டது! அதைப்போல் தன்னில் யாதொரு பொருளுமில்லா மலிருக்கத் தன்னில் பொருளிருப்பதாக அறிவில் கற்பிதம் செய்து கொண்டது! அறிவின் தோற்றம் அறிவில் வெளியாயிருக்கிறது. இதைச் சுயத்தின் கருணை எனப்படும்! சுயத்தின் தோற்றம் வெளியிலுண்டாயிருக்கிறது. இதைச் சுயத்தின் அருள் எனப் படும்! ஏனென்றால், முந்தி அறிவில் வெளியாகி, பின்பு சுயத்தில் வெளியாயிருக்கிறது. அதன் கருணையும், அருளும் பூரணமாயிற்று. ஆண்டவன் தன் அறிவுக்கு மாற்றமாக ஒன்றும் செய்கிறதில்லை; நாமும் நமதறிவுக்கு மாற்றமாக ஒரு போதும் நடக்கக் கூடாது!

நம் சம்மதமும் அவன் சம்மதமும் ஒன்றாயிருக்கிறது. நம் குறு கிய அறிவுக்கு-நமதறிவு விஸ்தீரணமில்லாததால்-உலகின் காரியம் பூரணமாகத் தெரியும். அறிவு விஸ்தீரணமிருந்தால் அது பூரணமாகத் தோன்றாது. ஆண்டவன் தன் சாயலாக மனிதனைப் படைத்தது விணாகாது! இவனும் தன் அறிவிலுள்ளவன், தன் சுயத்திலில் லாதவன்! அவன் அறிவுக்கும், இவன் அறிவுக்கும் சம்பந்தமுண்டு! இவன்தான் தன் ஆண்டவனை அறியக்கூடும்! மற்றதெல்லாம் தன் அறிவிலுள்ளதைத் தவிர தன் சுயத்திலில்லாததை இன்னது தானென்று விளங்கச் சக்தியில்லாதவை. இதனால் மனிதன் மற்றதை விட மேலானவன்!

மனிதன் ஆண்டவன் அம்சம்; ஆண்டவனுக்குப் பிரதிநிதியா யிருக்கிறான்! ஆண்டவனுக்கு முதல் தோற்றமாயிருக்கும். மற்ற தெல்லாம் இவன் தோற்றமாயிருக்கின்றது. இவன் ஆட்சியைக் கொண்டு உலக சமாதானத்தை ஆண்டவன் நாடியிருக்கி றான். இவன் உண்மையும், இன்மையும் அல்லாத நிலைமை யில், இவனை இன்ன வஸ்துவென்று குறிப்பிட இயலாது!

www.miskinsha.blogspot.com

மானிட அகமியம்

மனிதனில் தேவ ஆவியும் அருளும் நிரம்பி இருக்கிறது. இவனில் ஆண்டவன் சுயமாகப் பிரகாசிக்கிறான்! கடவுள் நீதம் இவனைக் கொண்டு வெளியாக நாடியிருக்கிறான். இவன் நீதம் தவறி நடக்கக்கூடாதெனக் கண்டித்து இருக்கிறான். எல்லாரிடமும் கருணை பாராட்டித் தனக்குப் பிரியமானதைப் பிறருக்குச் செய்யவும், தனக்குப் பிரியமில்லாததைப் பிறருக்குச் செய்ய வேண்டாமெனவும் ஆக்ஞாபித்திருக்கிறான். இவன் செயலைக் கடவுள் செயலாகப் பாவிக்காத வரையில் நாம் பாவியாகிறோம்! நமக்குச் செயலேது? நாம் கடவுள் செயலுக்குக் கருவியாக இருக்கின்றோம்! நமக்கு உள்ளமை ஏது? கடவுள் உள்ளமைக்குக் கருவியாக இருக்கின்றோம்! நமக்குத் தத்துவமேது? கடவுளின் தத்துவத்திற்கு கருவியாக இருக்கின்றோம்! நமக்கு ஓர் உள்ளமையும், தத்துவமும், செயலும் உண்டு என்றால், பெரிய அநியாயமாக இருக்கின்றது! இந்த அநீதத்துக்கு நாம் ஜவாபு (பதில்) சொல்ல வேண்டும். ஆனால், நீமையிலுமா? என்று யாரும் கேட்கலாம். கடவுள் பதில் அளிக்கிறான்: அல்ல என்று!

"ஓ மனிதனே! நீ தீங்கு செய்வதால் தீங்கையும் படைத்த வனாகிறேன். உன்னை எனக்குப் பிரதிநிதியாக்கினேன்! எனக்கு நன்மைதான் பிரியம், தீமையல்ல! நீ! நீயே தீமை செய்கிறாய். ஒருகால் தீமை செய்ய எனக்குத் தத்துவமேது? என்று கேட்பாய். கவனி! என்னையறியாத குருட்டுத்தனத்தினால் இந்தக் கேள்வி கேட்கிறாய்! தீமை செய்யத் தத்துவமில்லாத நீ! தீமை செய்ய எனக்குத் தத்துவம் உண்டென்று கற்பிதம் செய்யலாமா? இது மஹா கொடியது! ஆகையால், மனிதன் மூடனும், அநியாயக் காரனும் ஆகின்றான்!"

மனிதனும் ஆண்டவனும் தனித்திருக்கும்போது பேசிக்கொள்ளும் அகமியம்

மனிதனும் ஆண்டவனும் தனித்திருக்கும்போது பேசிக் கொள்ளும் அகமியம் மஹா நுட்பம்! ஆண்டவன் தன் அறிவுக்கு மாற்றம் செய்ய மாட்டான்! மனிதனும் தன் அறிவுக்கு மாற்றம் செய்வதில்லை. தனக்குப் பிரியப்பட்டதைப் பிறருக்குச் செய்வான். தனக்குப் பிரியமில்லாததைப் பிறருக்குச் செய்வதில்லை. உன் மனதின் ஏட்டை வாசித்துப்பார்! கடவுள் வாக்கியம் தெரியும்! ஞானியாயிருப்பவன் சகலரையும் தானாகப் பாவித்து நடந்து கொள்வான்! அஞ்ஞானியாயிருப்பவன் சகலரையும் வேறாகவும், அன்னியமாகவும் பாவித்துத் தனக்கு ஒரு விதமும், பிறருக்கு ஒரு விதமும் செய்வான்! நான் வேறு அவன் வேறென்பதில் பக்ஷபாதம் (வேறுபாடு) இல்லாமற் போகாது!

இஸ்லாத்தில் உண்மையை அறிவது ஞானம்! உண்மையை நம்புவது பக்தி! உண்மையில் நடப்பது மார்க்கம்! இதுவே பொதுவானது; பாரபக்ஷமில்லாதது; எல்லோராலும் அனுசரிக்கக் கடமைப்பட்டது; "வஹ்வல் ஹக்கு வயஹ்தி மன் பஷ்ஷாஉ" இதுதான் உண்மை! இதை யார் நாடுவானோ அவன் பெற்றுக்கொள்வான்!

www.miskinsha.blogspot.com

அசரீர வாக்கு
அல்லது
உண்மையின் ரகசியம்

1-வது கடவுளின் உள்ளமை:

1. கடவுள் உள்ளமை உடையவர்! எனில், அவர் சூனியமல்ல. அவர் உள்ளமை இருக்கிற போது சூனியமேது? அவர் உள்ளமையில் அவரைத்தவிர சூனியமில்லை. அவர் உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

2. கடவுள் பூர்வீகமானவர்! எனில், அவர் புதிதல்ல. அவர் உள்ளமை பூர்வீகமாயிருக்கிறபொழுது புதிதேது? அவர் பூர்வீகமான உள்ளமையில் அவரைத்தவிரப் புதிதில்லை! அவர் பூர்வீகமான உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

3. கடவுள் தரிபாடானவர்! எனில், அவர் அழிபவரல்ல. அவர் உள்ளமை தரிபாடாயிருக்கிறபொழுது அழிவேது? அவர் தரிபாடான உள்ளமையில் அவரைத்தவிர அழிவில்லை! அவர் தரிபாடான உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

4. கடவுள் புதிதானதுகளுக்கு ஒவ்வாதவர்! எனில், அவர் புராதனமுள்ளவர். அவர் உள்ளமை புராதனமாயிருக்கிறபொழுது புதிதானவை ஏது? ஒவ்வுவதெங்ஙனம்? அவர் புராதன உள்ளமையில் அவரைத்தவிரப் புதிதுமில்லை. ஒவ்வுவதுமில்லை. அவர் புராதன உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

5. கடவுள் தானேதானாய் உள்ளவர்! எனில், அவர் ஆதாரம் அற்றவர். அவர் தானேதானாயிருக்கிற உள்ளமையில் ஆதாரம் ஏது? அவர் தானே தானான உள்ளமையில் அவரைத்தவிர ஆதாரமில்லை. அவர் தானே தானான உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

6. கடவுள் ஒருவரானவர்! எனில், அவர் பலரல்ல. அவர் உள்ளமை ஒன்றாயிருக்கிறபொழுது பலதேது? அவர் ஒன்றான உள்ளமையில் அவரைத்தவிரப் பலதில்லை. அவர் ஒன்றான உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

2-வது கடவுளின் தத்துவங்கள்:

1. கடவுள் ஜீவனுள்ளவர்! எனில், அவருக்கு மரணமில்லை. அவர் உள்ளமை ஜீவனுள்ளதாயிருக்கிறபொழுது மரணமேது? ஜீவனுள்ளதாயிருக்கிற அவர் உள்ளமையில் அவரைத்தவிர மரணமில்லை! ஜீவனுள்ளதாயிருக்கிற அவர் உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

2. கடவுள் அறிவுள்ளவர்! எனில், அவருக்கு மடமையில்லை. அவர் உள்ளமை அறிவுள்ளதாயிருக்கிறபொழுது மடமை ஏது? அறிவுள்ளதாயிருக்கிற அவர் உள்ளமையில் அவரைத்தவிர மடமை இல்லை. அறிவுள்ளதாயிருக்கிற அவர் உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

3. கடவுள் நாட்டமுடையவர்! எனில், அவர் நாட்டமற்றவரல்ல. அவர் உள்ளமை நாட்டம் உள்ளதாயிருக்கிறபோது நாட்டமின்மை ஏது? அவர் நாட்டமுள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர நாடாதத் தன்மையில்லை. அவர் நாட்டமுள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

4. கடவுள் தத்துவமுடையவர்! எனில், அவர் தத்துவமில்லாதவரல்ல. அவர் உள்ளமைத் தத்துவமுடையதாயிருக்கும் பொழுது தத்துவமின்மை ஏது? அவர் தத்துவமுள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர தத்துவமில்லாமை இல்லை. அவர் தத்துவமுள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

5. கடவுள் கேள்வியுள்ளவர்! எனில், அவர் செவிடல்ல. அவர் உள்ளமை கேள்வி உள்ளதாயிருக்கிறபொழுது செவிடேது? அவர் கேள்வி உள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர செவிடில்லை. அவர் கேள்வி உள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

6. கடவுள் பார்வையுள்ளவர்! எனில், அவர் குருடல்ல. அவர் உள்ளமை பார்வையுள்ளதாயிருக்கிற பொழுது குருடேது? அவர் பார்வையுள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர குருடில்லை. அவர் பார்வை உள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத் தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

7. கடவுள் பேச்சுள்ளவர்! எனில், அவர் ஊமையல்ல. அவர் உள்ளமை பேச்சுள்ளதாயிருக்கிறபொழுது ஊமை ஏது? அவர் பேச்சுள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர ஊமையில்லை. அவர் பேச்சுள்ளதாயிருக்கிற உள்ளமையில் அவரைத்தவிர அன்னியமேது? எல்லாம் அவரே!

www.miskinsha.blogspot.com

இஸ்லாத்தின் உண்மையைப் பற்றிய உபந்நியாசம் - I

1. உண்மையை அறிவது ஞானம்! உண்மையை நம்புவது பக்தி! உண்மையில் நடப்பது மார்க்கம்! இதனை "இல்மு", "ஈமான்", "இஸ்லாம்" எனப்படும்.

2. ஆண்டவன் அறிவையும், நமது அறிவையும் பெரிய நெருப்பு, சிறிய நெருப்புக்கு உவமை கூறலாம்! ஏனென்றால், சிறிய நெருப்பும் பெரிய நெருப்பாய் வியாபிக்கக் கூடியதாயிருக்கிறது!

3. ஆண்டவன் தன் அறிவுக்கு மாற்றம் செய்வதில்லை; நாமும் அவன் அறிவுக்கு மாற்றம் செய்யக்கூடாது. நமது அறிவுக்கும் மாற்றம் செய்வது தகாது!

4. நமது ஆத்மாவுக்குப் பிரியமானதைப் பிறருக்குச் செய்யலாம். நமது சொந்த ஆத்மாவுக்குப் பிரியமில்லாததைப் பிறருக்குச் செய்யலாகாது!

5. ஏனெனில், நமது மனைவியை ஒருவன் தொட நமக்குப் பொருத்தமில்லாதது போல் பிறன் மனைவியையும் நாம் தொடுவது தகாது!

6. நமது பொருளை ஒருவன் திருட நமக்குச் சம்மதமில்லை. அதுபோல் வேறொருவன் பொருளை நாம் திருடுவது தகாது! இப்படியே பாவமான காரியமெல்லாம் நமது அறிவுக்கு மாற்றமாக வேயிருக்கும்!

7. சூரியனிலிருந்து சந்திரன் ஒளியைப் பெறுவதுபோல், நம் அறிவு, ஆண்டவன் அறிவில் நின்றும் தெளிவைப் பெறுகிறது!

8. பெரிய நெருப்பும், சிறிய நெருப்பும் கொளுத்துகிற தன்மையில் ஒன்றாயிருப்பது போல், பேரறிவும், சிற்றறிவும் அறிகிற தன்மையில் ஒன்றாயிருக்கிறது!

9. ஆண்டவன் அறிவில் வெளியாகாதது நம் அறிவில் வெளியாவதில்லை. அவன் அறிவில் கெட்டதாயிருப்பது நம் அறிவில் நல்லதாயிராது. அவன் அறிவில் நல்லதாயிருப்பது நம் அறிவில் கெட்டதாயிராது!

10. ஆண்டவன் வெறுப்புக்கும், அவன் இஷ்டத்துக்கும் நாம் எப்போதும் ஒற்றுமையாகவே இருக்க வேண்டும். நம்மை அவன் தனக்குப் பிரதிநிதியாக்கியிருக்கிறான்!

11. நாம் ஆதியில் ஆண்டவனிடம் நம் அறிவுக்கு மாற்றம் செய்வதில்லை என்று வாக்குறுதி செய்திருக்கிறோம்!

ஆண்டவனின் உண்மை:

1. ஆண்டவன் இருளுமல்ல, ஒளியுமல்ல; அவன் உண்மையை அவன்தான் அறிவான்! அவனை அவனேயல்லாது அவனுக்கு அன்னியமாயுள்ளவை அறியாது!

2. அவன் எல்லாமாகவும், எல்லாம் அல்லவுமாகவுமிருக்கிறான். அவன் சொரூப அம்சப்படி எல்லாம் அவனே! அவன் அரூப அம்சப்படி எல்லாம் அவனல்ல!

3. ஆண்டவனின் அம்சம் சிருஷ்டிப்புகளிலும், சிருஷ்டிப்புகளின் அம்சம் ஆண்டவனிலும் சம்பந்தப்பட்டிருப்பதால், தன் அறிவுக்கு மாற்றமில்லாமல் நடக்கும் யோக்கியதை உள்ளவனாக மனிதனைப் படைத்தான்!

4. ஆண்டவனில் சர்வ தத்துவமும் உண்டு! உதாரணமாக இரண்டு தத்துவத்தை மட்டும் இங்கு எடுத்துக்காட்டுவோம். ஒன்று தன்னைச் சுயமாய்ப் பார்ப்பது. மற்றொன்று தன்னை அன்னியமாய்ப் பாவிப்பது! அன்னியமாய்ப் பார்ப்பதை மாயை எனப்படும்!

5. சுயம் மேலாகவும், மாயை கீழாகவுமிருக்கிறது. தன் சுயத்துக்கு எதையும் நிகராகப் பாவிக்கவில்லை. ஆகையால், தன் சுயத்துக்கு இணை கூடாதெனக் கண்டிக்கிறான்!

6. தன் சுயத்தின் இச்சையில் சிருஷ்டிப்புகளை வெளிப்படுத்தினான்! தன் சுயத்தைப் பார்க்கிலும் அன்னியமானவைகளைப் பெரியதாகக் காணவில்லை. என்றாலும் கடலும் அலையும் ஜலம்தான்!

www.miskinsha.blogspot.com

7. மாயையென்பது அவன் தோற்றத்தில் சாத்தான் எனப்படும்! அவன் மிரட்டுதலில் அகப்படவேண்டாம்; அவனிடம் மருளே தவிர அருளில்லை; வேற்றுமையைப் போதிப்பான்: இதுதான் பாவத்துக்கு வித்து!

8. பாவ குணத்தால் அவனுக்கு இணை உண்டாகின்றது! நான் வேறு, நீ வேறு என்கிற எண்ணத்தால், எனக்கு ஒரு விதமும், உனக்கு ஒரு விதமும் பாரபட்சமாய் நடக்கும்படியாயிருக்கிறது!

9. நற்கிரியை, ஜெப-தபம், தர்மம் முதலானவைகளால் அவன் கருணையை அடையப் பல வழிகளுண்டு! இதில் நம் முயற்சியைப் பெரிதாகக் காணாமல், அவன் அருளையே பெரிதாகக்காண வேண்டும்!

10. அவன் கருணை நம் முயற்சியிலும், நம் முயற்சி அவன் கருணையிலும் சம்பந்தப்பட்டிருக்கிறது!

11. அவன் தன் சுயமாய்ப் பார்க்கிற அறிவுக்கும் அன்னியமாய்ப் பார்க்கிற அறிவுக்கும் பெரிய வித்தியாசமுண்டு. சுயமாய்ப் பார்ப்பதில் வேற்றுமையில்லை அன்னியமாய்ப் பார்ப்பதில் வேற்றுமை உண்டு! மெய்க்குச் சுகமும், பொய்க்கு வேதனையும்உண்டு!

ரஸூலாகிய தீர்க்க தரிசியின் உண்மை:

1. ஆண்டவன் தனது அம்ஸத்திலிருந்து நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்களை வெளிப்படுத்தி இருக்கின்றான். ஆண்டவன் வார்த்தைகளைக் கொண்டு நமக்கு வழி காட்டினார்கள். ஆண்டவனிடம் அவர்களுக்கு இருக்கும் சம்பந்தத்தால் அவர்களைப் பின்பற்றினவர்களுக்கு அவர்களே துணை நிற்பார்கள்!

2. நாயகம் அவர்கள் அனுபவத்தில், நாம் சுய அறிவின் பலத்தால் சுட்டறிவின் பலத்தை குறைத்து விடலாம்! தன் சுய அறிவாகிய பாவமில்லாத குணத்தால், தன் சுட்டறிவாகிய பாவமான குணத்தை ஜெயிக்கலாமென்பதாம்!

3. ஆண்டவன் தன்னைச் சுயமாய்ப் பார்க்கிற அறிவின் பலத்தால் தன்னை அன்னியமாய்ப் பார்க்கிற அறிவான மாயையின்பலத்தைக் குறைக்கக்கூடும். இது மகா ரகசியம்!

4. புன்னிய கருமங்களால் நம் ஆத்ம தத்துவம் வியாபிக்கும்! மாயை நசிக்கும்; நல்ல மனிதர்களைக் கண்டால் நம்மை அறியாமல் அவர்களின் பேரில் அன்பு உண்டாகும்! அதன் காரணம் என்ன? கடவுள் அவர்களின் பேரில் அன்பு பாராட்டுகிறான்!

5. "கடவுள் அம்ஸம் வெளியானபோதெல்லாம் நாம் எல்லார் பேரிலும் கடவுளின் குணத்தையே காட்டவேண்டும்"! புத்திக்கு மாற்றமில்லாத வழிகளையே அவர்கள் காட்டினார்கள்!

6. எல்லாருக்கும் தாராளமான வழியை – நாம் சீர்திருத்தம் அடையும் பொருட்டே – உலக நடையையும், உலக சமாதானங்களையும் அவர்கள் கொண்டு வந்தார்கள்!

7. அவர்களுக்கு நாயனிடமிருந்து வேத வாக்கியம் வந்து கொண்டிருந்தது. ஆண்டவன் நமக்கு மாயையை வெல்லும் விதிகளை அவர்கள் மூலமாக அறிவித்தான். அவர்களை நமக்குத்தீர்க்க தரிசியாக்கினான்!

8. அவர்களைப் பின்பற்றினால் ஆண்டவனைப் பின்பற்றினவர்களாகிறோம்! அவர்கள் நடத்தையில் ஆண்டவனின் குணம் வெளியாகிறதாயிருந்தது. அவர்களின் குணத்தின் சிறப்பு நிகரற்றதாயிருந்தது!

9. ஆண்டவனின் சமூகம் சொர்க்கத்தின் இன்பமாகவும், அவனை விட்டுத் தூரப்படுவது நரகத்தின் துன்பமாகவுமிருக்கிறது. அவனுக்கோ யாதோர் இன்ப-துன்பமில்லை!

10. சிருஷ்டிப்புகள் தன் சொரூப அம்ஸமாயிருந்தும் அவன் அரூப அம்ஸத்தில்தான் வேறாகவேயிருக்கிறான். இது பெரிய இரகசியம்!

11. நாம் வேற்றுமையினால் நரகத்துக்கும் ஆளாகிறோம்! வேற்றுமை இல்லாயிலிருந்தால் சொர்க்கத்துக்கு ஆளாகலாம்!

குர்ஆன் (ஃபுர்க்கான்) வேதத்தின் உண்மை:

1. வேதத்தில் "மாயையின் வழியில் செல்ல வேண்டாமென்று" கண்டிக்கின்றது. அதில் பொய்யேயில்லை. மெய்யைத்தான் அதிக வலுவாகக் கூறுகின்றது.

2. அதில் வம்பில்லை. அறிவுக்கு மாற்றமாய் நடப்பதையே பலமாய்க் கண்டிக்கின்றது. அதில் துன்மார்க்கமில்லை. சன்மார்க்கத்தைத்தான் போதிக்கின்றது!

www.miskinsha.blogspot.com

3. ஆத்மாவுக்கும், ஆண்டவனுக்குமுள்ள நுட்பமான சம்பந்தத்தை எடுத்துக் காட்டுகின்றது.

4. மோக்ஷத்துக்குரிய வழிகளை எடுத்துக் கூறுகின்றது. மதங்களின் தப்பு அபிப்ராயங்களைக் கண்டிக்கின்றது.

5. தமது புத்திக்கு அனுபவமில்லாதவைகளை வேதத்தைக் கொண்டு எடுத்துக்காட்டுகின்றது!

6. நாயன் தன் அறிவுக்கு மாற்றம் செய்வதில்லையென அறிவித்துமிருக்கின்றது. நாமும் நம் அறிவுக்கு மாற்றம் செய்யக்கூடாதெனக் கண்டித்துமிருக்கிறது.

7. ஆண்டவனுக்கு மாறு செய்கிறவர்களை தன் ஆத்மாவுக்கே மாறு செய்கிறவர்களென்று கூறுகின்றது.

8. அறிவை விர்த்தி செய்யும்படி ஏவுகின்றது. எல்லா வஸ்துவும் அழியும், ஆண்டவனோ அழியமாட்டானென எச்சரிக்கின்றது.

9. வேற்றுமை கூடாதெனக் கண்டிக்கிறது! துவிதமற்ற ஒருமை ஞானத்தைப் (தவ்ஹீதை) போதிக்கின்றது! ஒன்றுக்கொன்று தேசமாயிருப்பதை ஏவுகின்றது.

10. சாத்தானைப் பின்பற்ற வேண்டாம்; அவன் உனக்குச் சத்துருவாயிருக்குமெனக் கண்டிக்கின்றது. ஆண்டவன் தன் நாட்டத்தில் இல்லாததைப் படைப்பதில்லை. அவன் நாட்டத்திலுள்ளதை, எதை உவக்கிறான், எதை உவக்கவில்லையென உனக்கே தெரியுமெனக் கூறுகின்றது.

11. உன் நாட்டத்திலுள்ளதை எதை உவக்கிறாய், எதை உவக்காமட்டாய் பார்க்கலாம்! பத்திரம்! நீ அனியாயக்காரனும், மூடனுமாகாதே! இஃது உனக்கு ஒரு சோதனையாயிருக்குமெனக் கூறுகின்றது.

இஸ்லாத்தின் உண்மையைப் பற்றிய உபந்நியாசம் - II

ஆண்டவனின் தன்மை :

1. ஆண்டவன் உண்மையுமல்ல, இன்மையுமல்ல; இரண்டுக்கும் பொதுவான உள்ளமை, அவன் உள்ளமையை அவனேயல்லாமல் அவனுக்கு அன்னியமாயுள்ளவை உணராது!

2. அரூப சக்தியானது சொரூப சக்தியைவிட அபாரமானது! சொரூபங்களையும் அதன் சக்திகளையும் சிருஷ்டிப்புகளின் சங்கிலிக்கோர்வைகளில் நாம் காண்கிறோம். அதையே நாம் சரிவர உணரவில்லை.

3. அரூப சக்தியோ மகா வல்லமையுள்ளது! பிரபஞ்ச வடிவங்களும் அதன் சக்திகளும் அரூபத்தின் சக்தியே! அதன் வல்லமையே! இன்னும் அரூபத்தின் சக்தி, அதன் தோற்றத்தை நாம் சரிவர அறியவில்லை.

4. சொரூபத்தில் அரூபமும், அரூபத்தில் சொரூபமும் சம்பந்தப்பட்டிருக்கின்றது. என்றாலும் அது அரூபத்தின் சக்தியே!

5. நாம் வானம் பூமியை அறியாவிட்டாலும், நம்மை நாம் அறியாமலிருக்க முடியாது! எல்லாவற்றிற்கும் நம்மை மறைத்துக் கொண்டபோதிலும் நம்மை நமக்கு மறைத்துக்கொள்ள முடியாது!

6. ஒவ்வொரு வஸ்தையும் நாம் அறிகிறோம்; நம்மை ஒரு வஸ்தும் அறியவில்லை. நம் தத்துவங்களையும் நாம் அறிகிறோம்; நம் தத்துவங்களும் நம்மை அறியவில்லை! நம்மால் அறியப்படும் பொருள்கள் யாவும் அழியும்! ஒரு காலமும் நீ அழிவதில்லை! உன் தெய்வீகத்தன்மை அழியாது!

7. நாம் நமது தெய்வீகத் தன்மையைக் காப்பாற்ற வேண்டும்! எப்படியென்றால், மாயையை வெல்ல வேண்டும், மெய்யில் நடக்க

www.miskinsha.blogspot.com

வேண்டும்! நம்முடைய ஸ்தலங்களையும், ஆகாரங்களையும், உடைகளையும், உடலையும், மனத்தையும் பரிசுத்தமாய் வைக்கவேண்டும்!

8. நமது புலன்களைப் புத்தியிலும், புத்தியை மனதிலும், மனதை ஆன்மாவிலும், ஆன்மாவைக் கடவுளிலும் எப்போதும் கலந்திருக்க வேண்டும்! கிஞ்சித்தேனும் வேற்றுமைகூடாது! எல்லோரையும் தாமாகப் பாவிக்கவேண்டும்! அவன் அருள் நம் முயற்சியிலும், நம் முயற்சி அவன் அருளிலும் சம்பந்தப் பட்டே இருக்கும்!

9. ஆண்டவன் அறிவு, நம் பிரியம் – பிரியமின்மைக்குச் சாட்சியாகவும், நம் அறிவு, ஆண்டவன் பிரியம்-பிரியமின்மைக்குச் சாட்சியாகவுமிருக்கிறது! அதைப்போல் ஆண்டவன் அறிவு நம் பிரியம், பிரியமின்மைக்கு மாற்றமாகாது!

10. ஆனதினால் நம் அறிவு ஆண்டவன் பிரியம், பிரியமின்மைக்கு மாற்றமன்று! ஏனென்றால், ஆண்டவனின் அறிவில்லாமல் நமக்கு அறிவில்லை! ஆண்டவனின் பிரியம், பிரியமின்மை அன்றி, நமக்குப் பிரியம், பிரியமின்மையில்லை!

11. ஆண்டவன் தன் குணத்தில் மனிதனைப் படைத்தான்! இன்னும், அவன் கருணையில் மாயையின் தீங்குகளையும், அவன் சுயத்தின் நன்மைகளையும் அறிவித்து விட்டான்! நாம் ஏமாறாத படி மாயையின் நிமித்தம் அடிக்கடி உண்டாகின்ற தவறுகளைக் கண்டிக்கின்றான்! அவன் சுயம் அவனுக்கு அன்னியமானதைவிட மகாப் பிரியமும், வல்லமையுமுடையது!

தூதாங்கரின் தன்மை:

1. நான் ஆண்டவனிடமிருந்து வந்திருக்கும் உங்களில் ஒரு தூதனாயிருக்கிறேன்! ஆண்டவன் சில விஷயங்களை எனக்கு அறிவித்திருக்கிறான். உங்களுக்குத் தெரியாததை நான் பேச எனக்கு அனுமதி தந்திருக்கிறான். நீங்கள் அதைக் கேட்கவும், அதன்படி நடக்கவும் உங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறான்!

2. ஆண்டவன் சுயத்தில் அன்னியமில்லை. அன்னியமாய்ப் பார்ப்பது குற்றமல்ல. அதைக் கொண்டு தீங்குண்டாகாமல் நன்மை உண்டாகும்படி பார்க்க வேண்டும்! அவன் சுயத்தின் பிரியத்தையும் பிரியமில்லாததையும் நம் சுயத்தில் ஏன் கவனிக்கக்கூடாது?

3. ஆண்டவன் சுயத்தில் சுழற்சியில்லை, அது மாயையின் தோற்றம்! நமக்கு சுழற்சியிருந்தபோதிலும், மாயையிருந்தபோதிலும், மடமையிருந்தபோதிலும், சாத்தானின் கலைவு இருந்தபோதிலும் தெய்வீகத்தன்மையும் நம்மோடு இருக்கிறது!

4. தெய்வத்துக்கு நிகரானதும், அதன் சக்திகளுக்கு நிகரானதும் எதுவுமில்லை! தெய்வத்தினிடம் எல்லாம் மாண்டு போகும்! வேதங்களில் சொல்லப்பட்ட அனுஷ்டானங்களைக் கவனித்து நடக்க வேண்டும்!

5. நமது தேகம் முதல் அந்தக்கரணம் வரையில் சாத்தானின் (இப்லீஸ்) ஆட்சியுண்டு! நமது களங்கமற்ற மகா பரிசுத்தமான சுயமோவென்றால், கடவுளின் சுயமாயிருக்கிறது! ஆகையால் நமக்கு நன்மைக்குப் பிரியமும், தீமைக்கு வெறுப்பும் உண்டாகின்றது!

6. ஆகையால், கடவுளுக்கு வழிபட்டு நடக்க வேண்டும்! கடவுள் சொல்லை மீற வேண்டாம். அவன் எல்லையைக் கடக்கக்கூடாது! கடவுள் சொல்லை மீறி நடப்பவர்களுக்குக் கொடிய வேதனையும் கடவுள் சொல்லுக்கு வழிபட்டு நடப்பவர்களுக்குப் பெரிய ஆனந்தமும் உண்டு!

7. தெய்வீக அறிவு மகா விசாலமானது! நம் அறிவு மிகக்குறுகியது. தெய்வீக ஞானங்களைக் கொண்டும், தெய்வீக பக்திகளைக் கொண்டும், புண்ணிய கருமங்களைக் கொண்டும் உங்கள் அறிவை விசாலமாக்கிக் கொள்ளுங்கள்! ஆண்டவன் உங்கள் விசாலமான அறிவை நேசிக்கிறான்!

8. இல்லாவிட்டால் உங்களை நிரகத்தைவிடக் கேடாக்குவான்! நீங்கள் அறிவுடையவர்களாயிருப்பீர்களாகில் நரகவாதியாயிருக்க மாட்டீர்கள்! சொர்க்கத்தில் உன்னத மாளிகையில் இருப்பீர்கள். நீங்கள் விரும்பினது கிடைக்கும்!

9 ஆண்டவன் உள்ளமை ஆதியந்தமில்லாதது! நம் உள்ளமை ஆதியந்தமானது ஆண்டவன் தத்துவம் முடிவில்லாதது! நம் தத்துவம் முடிவுள்ளது. ஆண்டவனுக்கு நம்மால் சில காரியம் ஆக வேண்டியதுண்டு. அவனுக்கு மரணமில்லை, நமக்குண்டு. அவனுக்கு அஞ்ஞானமில்லை, நமக்குண்டு!

www.miskinsha.blogspot.com

10. அவனுக்கு மறதியில்லை, நமக்குண்டு! அவனுக்கு ஜோடி இல்லை. நமக்குண்டு! அவனுக்குப் பிள்ளையில்லை, நமக்குண்டு! அவனுக்கு இதைப்போல சாத்தியப்படாத கருமங்கள் அனந்த முண்டு. அவைகள் நம்மாலும் மற்ற சிருஷ்டிப்புகளாலும் ஆக வேண்டியதாய் இருக்கிறது!

11. தன் அரூப அம்ஸத்தில் இல்லாததெல்லாம் அவள் சொரூப அம்ஸத்தில் உள்ளதாயிருக்கின்றன! ஆகையால், நாம் அவனது நீதம் தவறி நடப்பது நம்மை நாமே அனியாயம் செய்து கொண்டதாகும். இது மகா கொடிய பாதகமாகும்!

வேதத்தின் தன்மை :

1. முஹம்மதே! நீர் மகா வலுப்பம் தங்கிய பரிசுத்தமான தேவ குணத்தில் வெளியாயிருக்கிறீர்!

2. ஆண்டவனிடமிருந்து அனுப்பப்பட்டவர்களில் பேதமில்லை. ஆனால் சிலரைவிட சிலருக்கு அதிக மகிமையுண்டு!

3. ஆண்டவன் உங்களிலிருக்கிறான். நீங்கள் அவனைப் பார்க்க வில்லையா? அவன் உங்களில் ஜீவ நாடியைப் பார்க்கிலும் சமீபமாக இருக்கிறான்!

4. ஆண்டவன் உண்டு என்பதில் உங்களுக்குச் சந்தேகம் இருக்குமா? அவனாகிறவன் இப்பேர்க்கொத்த ஆகாய விரிவையும் பூமியையும் படைத்திருக்கிறான்!

5 காரண காரியமெல்லாம் உங்கள் ஆண்டவனோடு முடிவாகி விட்டது!

6. சொல்லும்; "நானும் உங்களைப்போல் மனிதன் தான்! ஆனால், ஆண்டவனுடைய வார்த்தை என்னிடம் வருகின்றது. என் ஆண்டவனும் உங்கள் ஆண்டவனும் ஒன்றுதான்."

7. உங்கள் ஆண்டவனைத் தரிசிக்க நாடுவீர்களாகில் சத்கருமம் செய்யுங்கள். உங்களில் ஒருவனாக, ஆண்டவனைப் பூஜிப்பதில் இணை கொண்டு வராதீர்கள்!

8. உங்களை வீணுக்காகப் படைக்கப்பட்டதென்று எண்ணுகிறீர்களா? நம்மிடம் திரும்பமாட்டீர்களா?

9. பெரிய பாக்கியம் யார் கையில் ராஜ்ஜியமிருக்கின்றதோ, அவனே எல்லாம் செய்யக்கூடும். அவனாகிறவன், மரணத்தையும் ஜீவிப்பையும் படைத்தான். உங்களில் யார் சத்கருமத்தை (நற்செயல்) செய்கிறார்களெனச் சோதிப்பதற்காக. அவன் மாட்சிமையும் மன்னிப்பும் உடையவன்!

10. நீர் அறிவித்துவிடும். உம் காரியம் அறிவித்து விடுவதுதான். நீர் அவர்களின் பேரில் ஜமானல்ல!

11. சொற்ப நன்மை செய்தவனும் அதை (நன்மையின் பலனை) கண்டு கொள்வான். சொற்ப தீமை செய்தவனும் (தீமைக்கான தண்டனையை) கண்டுகொள்வான்!

★

இஸ்லாத்தின் உண்மையைப் பற்றிய உபந்நியாசம் - III

ஆண்டவனின் அகமியம் :

1. ஆண்டவன் தான் வெளியாயிருப்பதையும், தான் வெளியாகாமலிருப்பதையும், இனிமேல் தான் வெளியாகப் போகும் விதத்தையும் அறிந்திருக்கிறான்! அவன் அறிவு மகா அகண்டமான விகாசம்! அது ஆகாயத்துக்கும் அதீதமாயுள்ளது! அதில் மூர்த்தியின் பதவியை அடைந்தவர்கள் இந்த விகாசத்தில் செல்லக் கூடும்!

2. சில சமயம் ஆண்டவன் இஷ்டப்படி விதிப்பயன்களை அறியவும், ஆண்டவன் இஷ்டப்படி அதை மாற்றவும் அவர்களுக்கு வல்லமையுண்டு! இந்தப் பதவியையடைவதற்கு ஆண்டவனுடைய பரிபூரணமான கருணை வேண்டும்! ஆண்டவனின் இஷ்டத்துக்கு ஒற்றுமையாய் இருப்பவர்களுக்கே இந்தப் பதவியை அளிக்கப்படுகிறது!

www.miskinsha.blogspot.com

3. பிரளய காலத்தில் ஆண்டவன் பிரமத்தில் ஐக்கியமாவான்! நூதன சிருஷ்டிப்புகள் மூர்த்திப் பதவியை அடைந்தவர்களால் ஆரம்பமாகும். மூர்த்திகளுக்கு மூர்த்தி ரஸூல்மார்கள்! அவர்களது தூதாங்கர்கள்! மூர்த்திகளுக்கு "அக்தாப்" எனப்படும். மூர்த்திகளெல்லாம் ஒன்றுதான்! அதில் முதன்மையானவரில் ஒன்று சேர்ந்து ஏகமாய்விடும்! பிரமத்தினிடம் கருணையைப் பெற்று சிருஷ்டிக்கப்படும்! பிரமத்தில் ஐக்கியமானதுக்கு (மீண்டும்) வேலையில்லை!

4. மாமூல் என்பது விதியில் நின்றுமுள்ளது! ஆண்டவனுடைய அறிவில் வெளியானது! உலகத்தில் ஆண்டவனால் குறிக்கப்பட்ட விதமாக நடைபெறும்! இயற்கைக்கு மாறறமென்பது விதியைக் கொண்டு சம்பந்தமுள்ளது. ஆண்டவன் அறிவில் வெளியானது, என்றாலும் ஆண்டவனால் நடைபெறும் வழமையின் பேரில் நடை பெறாது. ஆனால் விதிப்படி நடைபெறும்!

5. சில சமயம் இது பரிசுத்த மகான்களால் நடைபெறும்! அப் பொழுது இதை ஆண்டவனால் உண்டாகும் அற்புதம் எனப் படும்! சிலசமயம் வலுவான சித்தமுடையவர்களால் நடைபெறும். இவர்கள் பரிசுத்த மகான்களல்ல! ஏனென்றால், இவர்கள் இயற் கையில் நல்லவர்களாகவும் கெட்டவர்களாகவும் இருக்கிறார்கள்!

6. நல்லவர்களாயிருப்பவர்கள் ஆண்டவனிடம் சுய அதிகாரம் பெற்றிருப்பார்கள்! அவன் இஷ்டத்துக்கு மாறாக நடக்கமாட்டார் கள்! இவர்கள் பரிசுத்த மகான்களாயிருக்கும்! அப்படி சுய அதிகாரம் பெறாதவர்களாயிருந்தால், அவர்களை சத்சுமமுள்ள பக்தர் அல்லது மோக்ஷத்துக்கு அருகர் என்று சொல்லப்படும்! கெட்டவர்களாயிருப்பவர்களைச் சூனியக்காரர்களென்று சொல்லப் படும்!

7. இவர்களில் ஒவ்வொருவரும் உலகத்தில் இயற்கைக்கு மாற்றம் செய்வார்கள்! இவர்களுக்கு பூத குணம், கிரக குணம், பதார்த்த குணம், மந்திரம், மை முதலானதுகளைக் கொண்டு உதவி கிடைக் குமானால் வெற்றி அடைவார்கள்! இல்லாவிட்டால் இல்லை. என்றாலும் எந்தக் காரியத்தில் தங்கள் மனதைச் செலுத்து கிறார்களோ, அதில் அவர்களுக்குத் திறமையுண்டாகும். (ஆனால்) சுயத்தின் திறமை அதிக மேலானது! அது கடவு ளைச் சேர்ந்தது!

8. சுய அதிகாரம் அல்லது சுய ஆட்சித் தத்துவம் தெய்வீக பாகம் பிரமத்தைச் சேர்ந்தது; யாவருக்கும் பொதுவானது; எல்லாத் தத்துவத்தைவிட அதிக மகிமையுள்ளது; இதை "விலாயத்து" எனப்படும்! தீர்க்கதரிசனப்பட்டம் இதற்குக் கீழ்ப் பதவியிலுள்ளது. ஆண்டவன் உதயம் அல்லது உதிப்பில் நின்றுமுள்ளது. இது சிலருக்கு மட்டும் சொந்தம். இதை "நுபுவத்" என்னப்படும்.

9. தூதாங்கர் பட்டம் இது நுபுவத்தைவிட தாழ்ந்த பதவியில் உள்ளது. ஆண்டவன் நாட்டம் அல்லது, அறிவில் நின்றுமுள்ளது. இதுவும் சிலருக்கு மட்டும் சொந்தம். இதை "ரிஸாலத்து" எனப் படும்! ஒருவரில் இந்த மூன்று பதவியுமிருக்குமானால், ஒரே பதவியில் உள்ளவர்களைவிடச் சிறந்தவராயிருக்கும்!

10. தூதாங்கர்த்தனமுள்ளவர்களுக்கு மனிதப் பண்பு அதிகமாய் இருக்கும்! ஏனென்றால், அவர்கள் மனிதரோடு அதிகப் பழக்கம் வைக்க வேண்டியதாயிருக்கும். இவர்கள் வேதமும் தாராளமாக மனிதவர்க்கம் அடங்கலுக்கும் உலக முழுமைக்கும் அவசியமான தாயிருக்கும்! தீர்க்க தரிசனமுள்ளவர்களுக்கு அமரர் குணம் அதிக மாயிருக்கும். ஆகவே, தேவ வசனத்தை அமரர் மூலமாய்ப்பெறு வார்கள். தீர்க்க தரிசிகள் சில சமயம் மார்க்கமுள்ளவர்களாயும், வேதம் உள்ளவர்களாயும் இருப்பார்கள்! சில சமயம் அப்படிக் கில்லை. ஆகையால் தீர்க்கதரிசனம், தூதாங்கர்த்தனமென்று இரு பகுதியாகக் கூறப்பட்டது!

11. சுய அதிகாரத் தத்துவமுள்ளவர்களுக்கு தேவப்பண்பு அதிக மாயிருக்கும்! ஆண்டவனிடமிருந்து தேவ வசனங்களை சுலப மாய்ப் பேசுவார்கள்! இவர்கள் வேதமும், மார்க்கமும் கொண்டு வரமாட்டார்கள். ஆகையால், இவர்களும், வேதம் – மார்க்கம் கொண்டுவராத, தீர்க்கதரிசிகளும், வேதம் – மார்க்கம் கொண்டு வந்த தீர்க்கதரிசி அல்லது தூதாங்கரின் மதத்தையும், வேதத்தை யும் பின்பற்றியிருப்பார்கள்!

தூதாங்கரின் அகமியம்:

1. அழிவும், உற்பத்தியும் மாறாமல் நடந்து கொண்டிருக்கிறது. பிரமம் தவித்திருக்கிற வழமையில்லை. பிரமத்திற்கு ஊர்த்வமுகம், அதோ முகம் என இரண்டு தன்மையுண்டு. ஒன்று அருபத்தின் மீட்சி, மற்றொன்று சொரூபத்தின் மீட்சி. இரண்டுக்கும் நடு நமையத்தில் நடு நிலையாக ஆண்டவனுண்டு!

www.miskinsha.blogspot.com

2. இப்படியே சர்வத்தையும் உத்தேசித்துக் கொண்டு ஒன்றை ஆத்மா, ஒன்றை மனம், ஒன்றைப் பிரகிருதி என்னப்படுகிறது. பிரகிருதிக்கும், ஆத்மாவுக்கும் மையத்தில் நடு நிலையாக இருக்கிறது மனம். பிரமத்தை சில சமயம் வேத வாக்கியத்தின் வழமையில் ஆண்டவனென்றே சொல்லப்படும்!

3. நரகம் போகிறவர்கள் போய்க் கொண்டிருக்கிறார்கள். சொர்க்கம் போகிறவர்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள்! மன்றாட்டம் பாவிகளுக்குப் பெரியோர்களால் ஆகிக்கொண்டு வருகிறது. அவர்கள் இம்மையிலும், மறுமையிலும் தங்கள் தங்கள் காரியத்தைப் பார்த்துக் கொண்டு வருகிறார்கள்!

4. ஒரு வஸ்து அழிந்தவுடன் அதற்குப் பிரளயமாய் விட்டது! பிரமத்தில் செல்லுமானவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள். கடவுள் பிரமத்தில் ஐக்கியமாகிக் கொண்டிருக்கிறார்! இவருக்குக் கீழ் மூர்த்திகளின் ஆத்மாக்கள் ஒன்று சேர்ந்து பிரமத்தின் கருணையைப் பெற்று நூதன சிருஷ்டிப்புகள் சிருஷ்டிக்கப்படுகிறது.

5. ஆண்டவனுக்கு மூர்த்திகள் பிரதிநிதி ஆகிவிடுகிறார்கள்! சகல காரியமும் ஓயாமல் நடந்து கொண்டு இருக்கிறது. இவைகளுக்குக் கூடுதல் குறைச்சலான கால வித்தியாசமுண்டு. ஆகையால், ஏககாலத்தில் உற்பத்தியும் அழிவுமில்லை. சூரியன் ஆளுகையில் சம்பந்தப்பட்ட கோளம் அல்லது உலகங்கள் ஏககாலத்தில் அழியும், அல்லது சிலது அழியும்; ஆக எல்லாம் அழிவுக்கு உடையதே!

6. இதன் காலத்தை குறிக்க முடியாது. எல்லா அழிவையும் உத்தேசித்து ஏககாலமென்று சொல்லப்பட்டது. சிலதொகுதிகள் முன் பின்னாக அழிவதும் நிஜமே! ஒரு கிரகம் அழிவதும் நிஜமே! அதைச் சேர்ந்த சிலது அழிவதும் நிஜமே! ஒரு கிரகத்தின் ஆள்கையின் சங்கிலிக் கோர்வையில் எல்லாம் அழிவதும் நிஜமே! ஏனென்றால், இந்தச் சூரியன் (Solar System) சம்பந்தப்படாத உலகங்கள் அனேகம் இருக்கின்றன!

7. நமது சுபாவத்தில் பிரகிருதியின் செய்கையால் ஜலதோஷம் அல்லது நீர்க்கோர்வையிருக்குமாயின், கனவில் ஜலத்தில் நீந்துவது போலும், முக்குளிப்பது போலும் பிரத்தியக்ஷமாய்க் காணுவது உண்டு! அதைப்போல் நாம் வேகமான ஜுரத்தில் இருப்போமாயின், அக்கினி எரிவது போல் பிரத்தியக்ஷமாய் அடிக்கடி கனவில் காண்கிறோம்! இதைப் போல் நமக்கு வாய்வு அதிகப்பட்டு

வாய்வு ரோகத்தில் இருப்போமாயின் பிரத்தியக்ஷமாய் கனவில் அடிக்கடி பறக்கக் காண்கிறோம்!

8. ஆகையால், நாம் உண்மையில் தரிபட்டு, நமது செயல்களும் உண்மையில் நீதம் தவறாமல் ஆண்டவன் பொருத்தத்துக்கு வழிபட்டதாய் இருந்தால், உங்களுக்கு மேலான சொர்க்கத்தைக் கொண்டு அவன் வார்த்தைப்பாடு செய்கிறான்! அதைப் பிரத்தியக்ஷமாகக் காண்பீர்கள். இல்லாவிட்டால் கொடிய நரகத்தைக் கொண்டு வார்த்தைப்பாடு செய்கிறான்; அதைப் பயந்து கொள்ளுங்கள்.

9. உங்கள் சுயத்தில் நின்றும் நரகத்தையும் சொர்க்கத்தையும் வெளியாக்கப்படும்! அதில் நீங்களே வாசம் செய்வீர்கள்! "உங்கள் சுயம் என் சுயமாய் இருப்பதை நீங்கள் அறியவில்லையா? என் சுயத்தில் நின்றும் வானத்தையும் பூமியையும் நான் படைக்கவில்லையா? நீங்கள் என் சொரூப அம்ஸங்கள் அல்லவா? ஆதியில் என் சொரூப அம்ஸங்களென்று நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லையா?" என்று ஆண்டவன் கேட்கிறான்!

10. நம் அறிவு எதார்த்தத்தில் இருக்குமாயின் இதையெல்லாம் அறிந்தேயிருக்கும்! நம்மைப் பாம்பு கடிக்குமானால் பாம்பினால் அவஸ்தைப்படுகிறோம். பாம்பு கடித்துவிட்டுப் போய்விட்டது. அதைக் கவனத்தில் எடுக்கும் போது விஷத்தால் உபத்திரவப்படுகிறோம். இன்னும் ஆழமாகக் கவனித்தால் புலன்களினால் உபத்திரவப்படுகிறோம். இன்னும் ஆழமாய்க் கவனித்தால் நம் அறிவினால் உபத்திரவப்படுகிறோம். நம் ஞாபகத்தில் பாம்பும் அதன் விஷமும்தான்!

11. ஆக, இன்ப துன்பம் நம் அறிவுக்குத்தான்! உணர்ச்சியில்லாமல் பிரம சொரூபத்தில் ஆய்விட்டால் இன்ப துன்பமற்ற ஆனந்தத்தில் ஆய்விடலாம்! சுய இலட்சியத்தைத் தவறவிட்டால் அசலைப் பெற்றுக்கொள்ள ஏலாது! ஆக தெருப்பின்றி தெருப்பின் வேதனையும், பாம்பின்றி பாம்புகடி வேதனையும் உண்டாகும். பெண்ணின்றி பெண்ணின் சுகமும், உணவின்றி உணவின் சுகமும் உண்டாகும்!

வேதத்தின் அகமியம்:

1. என் அடிமைகள் என்னைப்பற்றி நான் எங்கே? என்று கேட்பார்களாகில், சொல்வீராக: "அவன் உங்களைவிடச் சமீபமாய்

www.miskinsha.blogspot.com

இருக்கிறான். பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனையை கேட்கிறான். பிரார்த்தனைகளால் அவர்கள் அவன் சேர்மானத்தைத் தேடிக்கொள்ளவும். அவன் மீது பக்தியை வைக்கவும். ஏனென்றால், அவர்கள் ஜெயம் பெறுவதற்காக"!

2. "நான் உங்கள் ஆண்டவனல்லவா"? "ஆமாம், நீ எங்கள் ஆண்டவன்." (ஆண்டவனுக்கு அடிமை வார்த்தைப்பாடு செய்தது) "நீ என் சொரூப அம்ஸமல்லவா"? "ஆமாம், நாங்கள் உன் சொரூப அம்ஸந்தான்"!

3. எவ்விதம் நான் முந்திப்படைப்புகளைப் படைத்தேனோ, அவ்விதமே நான் அதை மீளப்படைப்பேன். இஃது என் மீது வார்த்தைப்பாடு. அதை நான் செய்பவனாயிருக்கிறேன்!

4. "பிகில்" (சூர்) ஊதப்படுமானால் வானம்-பூமியிலுள்ளவர்கள் அடங்கலும் மூர்ச்சையாகி விடுவார்கள்! ஆண்டவன் யாரை நாடி இருக்கிறானோ, அவர்களைத் தவிர நீக்கப்பட்டவர்களின் கருத்தாவது, எவர்களுக்குப் பெரிய பிரளயம் முந்தி ஆய்விட்டதோ, அவர்கள் பிரமத்தில் அழிந்தவர்களாயிருக்கிறார்கள். ஜீவக்குழல் அல்லது சுவாசக்குழலை ஊதப்படுமானால் பிரணவதொனி கிளம்பி விடுமென்பதாம்!

5. எல்லா வஸ்தும் அதன் அசலளவில் மீளும் ஆண்டவனுக்கு வானம் பூமியின் அனந்தரமாயிருக்கிறது. பிரம்மத்தைத்தவிர எல்லா வஸ்தும் அழியுமானதாயிருக்கிறது!

6. பிரளய காலம் வரப்போகிறது. நான் அதை மறைக்க விரும்புகிறேன். தினகாலம் அவன் புதிய மகத்துவத்தில் ஆகிறான்!

7. ஆகிலும் அவர்கள் புதிய படைப்புகளில் உடுத்தாட்டப்பட்டவர்களாயிருக்கிறார்கள். ஆண்டவனின் பாக்கியத்தை எண்ணுவிர்களானால் ஒரு போதும் எண்ண முடியாது!

8. மனிதர்களையும், பூத கணங்களையும், என்னை அறிந்து வணங்கவும்,சத் கருமங்களைச் செய்யவும், அந்தச் சுகத்தை அவர்களே அனுபவிக்கவும் படைத்தேன்!

9. மார்க்கமாகிறது ஆண்டவனிடத்தில் "இஸ்லா"மாயிருக்கும். இஸ்லாமாகிறது மனிதனுடைய இயற்கையில் வைக்கப்பட்டிருக்கிறது!

10. உண்மையாளரின் சாவகாசத்தைப் பின்பற்றுங்கள்! அவர்களின் பாதையைக் கற்றுக்கொள்ளுங்கள். அவர்களின் மீது உங்களுக்கு முந்தி கருணையாய் விட்டது!

11. ஆதியானவன் அந்தமானவன் அவனே! வெளியானவன், உள்ளானவன் அவனே! அவன் எல்லா வஸ்துக்களைக் கொண்டும் அறிந்தவனாயிருக்கிறான்!

இஸ்லாத்தின் உண்மையைப் பற்றிய உபந்நியாசம் - IV

பிரமத்தின் ரகசியம்:

1. பேச ஏலாத மௌனமானது நவித்த ஒரு வஸ்து! வஸ்தென்றது அதைக்குறித்துப் பேசுவதற்காக கற்பனையே அல்லாது வேறல்ல! அதற்கு நாம ரூபமில்லை. அது ஒரு வஸ்துவிலும் சேர்ந்ததல்ல. அது பிரத்தியேகமாயுள்ளது. வஸ்தெல்லாம் அதைக் கொண்டே உள்ளன. அது தத்துவ அம்ஸங்களில்லாத, தடிப்பு, நிறம், குறியற்றது!

2. அது தானே, தானாயுள்ளது! அஃது என்றைக்குமுள்ளது. அழிவில்லாதது! அது முடிவில்லாதது! நித்தியமானது; அறிய ஏலாதது; அது சூனியத்துக்கும் அதீதமானது! சிசு தானிருந்தும் தன்னை அறியாமல் பசியுண்டானால் பாலைத்தேடுவது போல், தன் சுய இச்சையினால் தன்னைத்தேடி பிரணவ தொனி உண்டானது! இதை (தாத்தின் முந்தின அலை - பிரம அகங்காரம்) "நஃப்ஸ்" எனப்படும்.

3. ஒரு விளக்கில் ஆயிரம் திரியைக் கொளுத்தி விட்டு அத்திரிகளை அமர்த்திவிட்டால் அந்த விளக்கு எப்படிக் கூடுதல் குறைதல் இல்லையோ, அதைப்போல் அந்தப் பேச இயலாத மௌனத்துக்கு யாதொரு பேதமில்லை! முன்னிருந்தது போல எப்போதும்

www.miskinsha.blogspot.com

இருக்கும். பிரமம் கற்பிதமல்ல! அதைக் கற்பிதமென்று சொல்லு மானவர்கள் அப்போது இருந்ததில்லை. அது அவர்களுக்கு முன் னேயே இருக்கிறது. எல்லாம் பிரமத்தின் கற்பிதம்!

4. முந்தின பிரணவ தொனியின் விகாசம் " அ "வென்றதொனி. இரண்டாவது விகாசத்தின் தொனி " இ " என்றது: இது தான் ஏகப் பார்வை. இந்த விகாசத்தில் தன்னை எட்டிக்கொள்ளும் துறை கிடைக்கவில்லை. இந்த தொனியில் சிறிய மகா நுட்பமான பரமாணுக்களைப் போல பராபர அலைகள் உண்டாகி மேலே ஏறு கிறதும், கீழே இறங்குகிறதுமாய் இருக்கின்றன. இந்த தொனியை அல்லது பார்வையை ஆத்மா அல்லது "ஹயாத்து" எனப்படும்!

5. மூன்றாவது விகாசத்தின் தொனி " உ "வென்றது. இதில் நானென்று தன்னை எட்டிக்கொண்டது. இதையே அகங்காரம், பற அறிவு எனப்படும். இந்த அ, இ, உ, (அரபியில் ஹா, ஹி, ஹூ)வென்ற சப்தத்தின் அர்த்தம் என்னவென்றால், என்னில் உண்டானது என்னில் அடங்கும் என்பதாம்!

6. தனக்கு யாதொரு உள்ளமை இல்லாமலிருக்க எப்படித் தன் அறிவில் உள்ளமையைக் கற்பிதமாக்கிக் கொண்டதோ, அதைப் போல் தனக்கு யாதொரு தத்துவமில்லாமலிருக்க சகல தத்துவமும் தனக்கு இருப்பதாகத் தன் அறிவில் கற்பிதமாக்கிக் கொண்டது! அதையே ஆண்டவன் எனப்படும்! இந்த விகாசத்துக்குந்தான் மனம் எனப்படுகிறது! அதைப்போல்.....

7. தனக்கு யாதொரு வஸ்தும் இல்லாமலிருக்க, சகல வஸ்தும் தனக்கிருப்பதாகத் தன் அறிவில் கற்பிதமாக்கிக் கொண்டது. இந்த விகாசத்துக்குப் பிரகிருதி எனப்படும். இவ்விதம் பிரணவதொனி எல்லா சிருஷ்டிப்புகளிலும் சம்பந்தப்பட்டிருக்கும். அதோமுகம், ஊர்த்துவமுகமாய்ப் பராபர அலை, மேலே ஏறுகிறதும், கீழே இறங்குகிறதுமாயிருக்கின்றன!

8. அழிவும் உற்பத்தியும் நீங்காமல் நடந்து கொண்டிருக்கிறது! நமது மனக்கண் வெளிச்சமிருந்தால் அது தெரியும்! எல்லாம் மாறு தலில்லாமல் ஒரே நிலைமையில் இருப்பதாகத் தோன்றுகின்றது. நம் சரீரம், எண்ணம் மாறுதல் அடைகின்றது. இதை " கபுலு பஸ்து " எனப்படுகிறது. பிரமத்தின் இரகசியத்தை யாரால் சொல் லக்கூடும்? அதன் கருணையிருந்தால் சொல்லலாம்!

9. அது முந்தி அறிவில் வெளியாகி பிறகு வெளியில் வெளியா யிருக்கிறது. முந்தினது கருணை, இரண்டாவது அருள் எனப்படும். கருணை அதன் தத்துவம் அல்லது பண்பு. அருள் அதன் சுயம் எனப்படும். ஒன்றும் அதன் சுயத்தைவிட்டு நீங்கினதாயில்லை. ஆண்டவனை விட்டுவிட்டு அதில் செல்ல வழியில்லை!

10. ஆண்டவன் கருணையே அதன் கருணையாகவும், அவன் அருளாகவுமிருக்கிறது. அதன் கருணையைக் கொண்டுதான் ஆண் டவன் கருணை செய்வான். அதன் அருளைக் கொண்டுதான் ஆண்டவன் அருள் செய்வான். ஆண்டவனென்பது பிரமத்துக்கு அன்னியமில்லை. இரண்டும் ஏகமாயுள்ளது. நம் உடலுக்கு உயிர் எப்படியோ, அதைப்போல ஆண்டவனுக்கு பிரமம். அது செயலற் றது. அதை உணர இயலாது. இது செயலுள்ளது. இதன் செயலை உணரலாம்.

11. ஆகையால், எல்லாத் திறமையும் பிரமத்திலுள்ளது. அதை அறிய இயலாது. அது தத்துவ அம்ஸங்களற்ற தவிப்பொருள்! அது எல்லாமாகவும், எல்லாம் அல்லவுமாகவும் இருக்கிறது. ஆகையால், வேத வாக்கியங்களின் வழமையில் இதையே ஆண் டவனென்று வழங்குகிறது. தன் காரியங்களையெல்லாம் தன் பிரதி நிதி வசம் ஒப்பித்துவிட்டுத்தான் கருணையைப் போடுகிறது. உல கத்துக்கு மனித வர்க்கமே அதன் பிரதிநிதிகளாம். மேலான உல கங்களில் நான்கு விதமான உலகங்கள் பிரமத்தினிடமுண்டு!

தூதாங்கரின் ரகசியம்:

1 இல்லாதது உண்டாகாது, இருக்கிறது அழியாது! இருக்கிறது ஆண்டவன்; அழியமாட்டான்! உண்டாவது அவன் அருப அம் ஸம்; அழியாது! பிரமத்தின் உதயம் ஆண்டவன்! ஆண்டவனின் உதயம் தீர்க்கதரிசிகள். தீர்க்கதரிசிகளின் உதயம் பரிசுத்த மகான் கள். இதை " நஃப்ஸே குதுஸியா " எனப்படும்.

2. ஆண்டவன் நமது குணங்களை மூன்று ஊற்றுக்கண் அல்லது மூன்று பகுதிகளை விவரிக்கின்றான். சுபாவ குணம், அறிவின் குணம், ஆத்ம குணம். இதை " அம்மாறா ", " லவ்வாமா ", " முத்மயின்னா " எனப்படும்.

3. " அம்மாறா " என்பது மொத்தமாக யாதொரு பகுத்தறிவு இல்லாமல் தன் அபேட்சையை நிறைவேற்றிக்கொள்ளும் குணம். இதானது தாமதம் அல்லது மிருகக்குணம் எனலாம். இதுவானது

www.miskinsha.blogspot.com

ஒவ்வொரு மனிதனுக்கும் புத்தி அல்லது ஞானத்தை அனுசரிப் பதற்கு முன் இயற்கையாக ஏற்படும்.

4. "லவ்வாமா "வென்பது அறிவின் குணம் அல்லது இராசதக் குணம். இது பகுத்தறிவு இல்லாமல் மிருகத்தைப்போல், ஞானத் தையும், புத்தியையும் அனுசரிக்காமல் இராது. இஃதானது ஒவ் வொரு மனிதனின் மிதமிஞ்சின குணத்தின் பேரில் நிற்கிக்கும். தீமையின் பேரில் வெறுப்படையும். மிதமிஞ்சாமல் நடுநிலையாய் இருப்பதையே விரும்பும் ஆனால், தன்மையை செய்துகொள்ள போதிய சக்தி இராது. இது சிறு குழந்தைகளைப்போல் பலஹீன த்தால் அடிக்கடி பாவத்தில் தவறி விழும். பிறகு தன்னையே நிந்தித்துக்கொள்ளும்.

5. "முத்மயின்னா "வென்பது ஆத்ம குணம், அல்லது சாத் வீக குணம்! இதுவே தீமையைச் செய்ய சக்தியற்றது. நன்மை யைச் செய்ய சக்தியுள்ளது. இது வேறல்ல. அந்தச் சுபாவ குணமே அறிவின் குணமாகவும், அறிவின் குணமே ஆத்ம குணமாகவும் மாறியிருக்கிறது! உப்புச் சுரங்கத்தில் விழுந்த வஸ்து மடித்து உப்பாய் விடுவது போல், உண்மையான மார்க்கத்தின் உதவி யால் சத் கருமங்களைச் செய்பவர்களுக்கு தெய்வீக பலம் உண்டாகி அறிவிலும் ஆத்மாவிலும் ஆழமாகக் குணம் செய்கின்றது.

6. அமானித குணம் அல்லது அசவின் தேட்டம் சிறு குழந்தை யிலேயே இயற்கையாக வைக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாகக் குழந்தை பிறந்தவுடன் தாயினிடம் நோக்குகின்றது. அதன் அறிவுப் புலன்கள் மலர ஆரம்பித்தவுடன் அதற்கேற்றபடி தாயின் அன்பு அதிகப்படுகிறது. தாயின் மடியைத்தவிர அதற்குப் பிரியமில்லை. தாயை விட்டு தூரப்போட்டு விட்டால் அதன் அழுகை அனுதாப மாயிருக்கும். அது தாயை தெரிந்து கொள்வதற்கு முன்னமே பால்காரியை அமர்த்தாவிட்டால் பெரிய கஷ்டமாயிருக்கும். பால் குடிக்காது. தாயின் மடியை அன்பாகப்பார்க்கும். இந்தத் தேட்டமும், தாய்ப்பாலைத்தவிர பால்காரியின் பாலை விரும்பாத குணமும் அமானிதகுணம். ஆண்டவனின் தேட்டம் இயற்கையில் உள்ள தல்லவா? குழந்தைக்கு அறிவில்லாததால் சுபாவ குணத்தையே காட்டுகின்றது. ஆலோசனைப்படி அறிவின் குணத்தைக் காட்ட வில்லை ஆகையால், அறிவின் ஆலோசனைப்படியில்லாத குணம் நீதமில்லாத சுபாவ குணம்தான்.

7. ஆண்டவனின் பாசம் அல்லது கவர்ச்சி மானிடர்களின் சுபா வத்திலேயே இருக்கின்றது. பொருளாசை, பெண்ணாசை, பூமி

ஆசை முதலான சகல ஆசையும் அசவின் அன்பே தவிர வேறில்லை. தன் அசலைத் தேடி அதன் நாம ரூபம் தெரியாமல், நல்ல ராகம் அல்லது அழகின் கவர்ச்சியில் இழுக்கப்படுகின்றது. இந்த இழுப்பு என்ன? தன் அசலின் குணமல்லவா? இதை அறிவின் ஆலோசனைப்படி பாவிக்காவிட்டால் சுபாவ குணம் – நீமையல் லவா? ஆகையால், நம் அறிவுக்கு மாற்றம் செய்யக்கூடாது. ஒரு வன் நம்மிடம் அமானிதம் வைத்தால் அது நமக்கும் அவனுக்கும் தான் தெரியும். நாம் அதை எடுத்துக்கொண்டால் ஒருவருக்கும் தெரியாது. அதை ஆண்டவனுக்காகப் பயந்து, பாத்தியமுடைய வர்களுக்குச் செலுத்தி வைப்போமாகில் அஃது அறிவின் குண மாகும். அதற்கு புண்ணியமுண்டு! அஃது ஒருவனுக்குத் தெரிந் திருக்குமாகில் அதை எடுத்து கொள்கிறது நமக்கு நீதமல்லவென்று சொல்வான். இது நமக்கு அபகீர்த்தியாருமென்று பயந்து அதைப் பாத்தியமுள்ளவனிடத்தில் செலுத்துவோமாகில் இது சுபாவ குணம்; இதற்குப் புண்ணியமில்லை.

8. தண்டிப்பதும், மன்னிப்பதும்: ஒரு மனிதனின் குற்றத்தை மன்னிக்கிறதனால் மற்ற மனிதர்களுக்கும், குற்றவாளிக்கும் அதைக் கொண்டு நன்மையுண்டாகுமானால் மன்னிக்கலாம். தண்டிக்கிற தில் இருதரத்தாருக்கும் நன்மையுண்டாகுமானால் தண்டிக்கத்தான் வேண்டும். ஒரே போக்காகத் தண்டிக்கவோ, மன்னிக்கவோ இருப் பது நியாயமன்று. எல்லாம் புத்தியின் ஆலோசனைப்படி புத்திக்கு மாற்றமிருக்கக்கூடாது. இல்லாவிட்டால் அறிவின் குணமாகாது. அதற்குப் புண்ணியமிருக்காது. என்றாலும், அது சுபாவ குணம் அல்லது பாவ குணமாகிவிடும். அதைப் போல ஒருவன் கேட்கிற தைக் கொடுத்து விடுவது தர்மமாகாது; அது சுபாவ குணம். தர்மமா? அல்லவா? வென்று தீர்க்கமாய் ஆலோசிக்க வேண்டும். அதுதான் அறிவின் குணம்!

9. எதிர்க்கும் தானம்: நம் பொருளுக்கும், மானத்துக்கும் ஹானி வாஸ்தவத்தில் உண்டாகிறதாய் இருந்தால் எதிர்த்துக் கொள்ள வேண்டும். சும்மா வாய்ப்பேச்சாயிருக்குமானால் எதிர்க்கக்கூடாது. பெரியோர்களைப்போல மன்னிக்க வேண்டும். நம் சொந்தக்கார ரைவிட ஒரு அன்னியனுக்கு தர்மம் செய்வதே உத்தமம். ஏனென் றால், சொந்தக்காரர்களுக்கு நம் சுபாவமே தர்மம் செய்யச்சொல் லும். தர்மம் ஆண்டவனுக்காகச் செய்ய வேண்டும். நம் சொந்தக் காரர்களுக்கும் புத்திக்கு மாற்றமில்லாமல் தர்மம் செய்யலாம் நமக்கு யாதொரு லாபம், நஷ்டமில்லாவிட்டால் நிஜம் சொல்லுவோம். நாம் நிஜம் சொல்லுவோமானால் நமக்கு நஷ்டம் உண்டாகும் சமயத்தில்

www.miskinsha.blogspot.com

ஆண்டவனுக்காக நாம் நிஜம் சொல்லுவோமானால் அது அறிவின் குணம். அதற்குப் புண்ணியமுண்டு. இல்லாவிட்டால் அது சுபாவ குணம். பாவமாகும்!

10. ஓர் ஆணும் பெண்ணும் சையோக தத்துவமுள்ளவர்களாய்த் தனித்தால், அவர்கள் சையோகத்தால் மானக்கேடு, நிர்பந்தம் உண்டாகாதபோது, அந்தச்சமயத்தில் ஆண்டவனுக்காகப் பயந்து இருவரும் தம் பத்தினித்தனத்தை(கற்பை)க் காப்பாற்றிக் கொள்கிறவர்களாயிருந்தால் அஃது அறிவின் குணம். அதற்குப்புண்ணிய முண்டு. மானக்கேடு நிர்பந்தம் உண்டாகுமென்று பயந்து அச் செயலை விட்டவர்களும், அந்த தத்துவமே இல்லாதவர்கள் அல்லது அந்தக்கருவிகள் பழுதாயிருப்பவர்கள் அச்செயலை விட்டிருப்பதும் சுபாவ குணம்; புண்ணியமில்லை. நாம் உயிர்வதை செய்வதிலும், செய்யாமல் இருப்பதிலும் அறிவின் குணத்தையே காட்ட வேண்டும். சுபாவ குணத்தில் புண்ணியமில்லை. நாம் கஸ்தூரி யைப் பாவிக்காமல் விட்டு விடலாம்; அது கலை மான்களை வதை செய்வதால் உண்டாகின்றது. நாம் முத்துக்களைப் பாவிக்காமல் விட்டு விடலாம்; அது சில சிப்பிகளை வதை செய்வதால் உண்டாகின்றது. நாம் பட்டுகளை பாவிக்காமல் விட்டு விடலாம்; அது சில பூச்சிகளை வதை செய்வதால் உண்டாகின்றது. நாம் தேனைப் பாவிக்காமல் விட்டுவிடலாம்; அது சில தேனீக்களை வதை செய்வதால் உண்டாகின்றது. இன்னும்.....

11. நம் சிரசிலுள்ள பேன்களையும் கொல்லாமல் விட்டுவிடலாம். நம் வயிற்றிலுள்ள கிருமிகளையும் கொல்லாமல் விட்டுவிடலாம். நாம் சுவாசிப்பதையும் காற்றிலுள்ள பூச்சிகள் சாவதினால் விட்டு விடலாம். இவ்வாறு நம் உயிருக்கே ஹானியைத் தேடிக்கொள்ளலாம். இஃதெல்லாம் அறிவின் குணமாகாது. சுபாவ குணம் தான்! தன்னைக் கொல்லவந்த மிருகம், தன்னை ஹிம்சிக்கவந்த ஜெந்துவை யார்தான் கொல்லாமல் இருப்பார்கள்? நாம் ஆண்டவனோடு யுத்தம் செய்கிறதா? அவன் வல்லமையின் சட்டம் இயற்கை! நாம் அதற்கு மாற்றமாக இருக்கக்கூடாது. அவன் வல்லமையின் சட்டத்தில் மாமிசம் புசிக்கக்கூடிய மிருகங்களிலும், பட்சிகளிலுமிருக்கக்கூடிய வீரியம், புல் மேய்கிற மிருகங்களிலும், தானியம் பொறுக்குகின்ற பட்சிகளிலும் காணப்படவில்லை ஆகையால் மாமிசமே சாப்பிடுவதும், மரக்கறியே சாப்பிடுவதும் கூடாது. இரண்டையும் அளவு மீறாமல் நடுத்தரமாக சாப்பிட வேண்டும். ஒரே வஸ்தை அளவுமீறி சாப்பிட வேண்டாம். இல்லாவிட்டால் சுகமும் குணமும் கெட்டுப்போகும்!

வேதத்தின் ரகசியம்:

1. கடலும் கெட்டுப்போயிற்று! கரையும் கெட்டுப்போயிற்று! அதாவது, வேதக்காரர்களும் கெட்டுப் போனார்கள்! வேதமில்லாதவர்களும் கெட்டுப் போனார்கள். வேதக்காரர்கள் கடலுக்கு ஒப்பாவார்கள். வேதமில்லாதவர்கள் கரைக்கு ஒப்பாவார்கள். கடல் மூன்று பங்கு, கரை ஒரு பங்கு!

2. உங்கள் பேரில் உங்கள் தாய்மார்களை மனைவியாகப் பாவிப்பதை விலக்கப்பட்டது. உங்கள் புத்திரிகளையும், உங்கள் சகோதரிகளையும், உங்கள் அத்தைமார்களையும், உங்கள் சிறிய தாயார், பெரிய தாயார்களையும் விலக்கப்பட்டது!

3. உங்கள் சகோதரன் புத்திரிகளையும், உங்கள் சகோதரி புத்திரிகளையும், உங்களுக்குப் பால் கொடுத்த தாய்மார்களையும், உங்கள் பால்குடி சகோதரிகளையும், உங்களின் மனைவியின் தாய்மார்களையும், உங்கள் பத்தினியின் முந்தின புருஷனின் புத்திரிகளையும் விலக்கப்பட்டது.

4. நீங்கள் உங்கள் பத்தினியுடன் புணர்ந்திருந்தால் கூடாது. புணராவிட்டால் குற்றமில்லை. உங்கள் புத்திரர்களின் மனைவிகளையும், இரண்டு சகோதரிகளை ஏக காலத்தில் மணம் புரிவதும், இஃதெல்லாம் முன் காலத்தில் நடந்து கொண்டிருந்தது. இனி மேல் விலக்கப்பட்டது.

5. ஸ்திரீகளின் சம்மதமில்லாமல் வம்பாக அவர்களுக்கு வாரிசாகிக் கொள்ளவேண்டாம். உங்கள் தந்தைகளுக்கு பத்தினியாய் இருந்தவர்களை மணம் புரிய வேண்டாம். முற்காலத்தில் நடந்தது போகட்டும். இனிமேல் அப்படிச் செய்ய வேண்டாம்.

6. உங்களில் நின்றும் பரிசுத்தமான ஸ்திரீகள் அல்லது முன்னுள்ள வேதக்காரர்களில் நின்றும் உங்களுக்கு ஆகும். அவர்களை நீங்கள் மணம் புரிந்து கொள்ளலாம். "மஹர்" அல்லது விவாஹக்கூலி நிர்மானமாகி விவாகமாய் விட்டால் சோரத்தனமாகாது. அஃதாவது, அரப் தேசத்தின் (பழங்கால) மூடத்தனமான வழக்கம் பிள்ளையில்லாதவன் மனைவி பிள்ளைக்காக வேறொருவனை நேசித்துக்கொள்வதுண்டு. வேதவாக்கியம் இக்கெட்ட வழக்கத்தைக் கண்டிக்கின்றது. இக் கெட்ட வழக்கத்துக்கு "முஸாபிஹத்" தென்று சொல்லப்படும்.

7. நீங்கள் தற்கொலை செய்து கொள்ள வேண்டாம். உங்கள் பிள்ளைகளைக் கொலை செய்ய வேண்டாம். அன்னியர்கள் வீட்டில் உத்தரவில்லாமல் மிருகத்தைப்போல் பிரவேசிக்க வேண்டாம்.

www.miskinsha.blogspot.com

உத்தரவு பெற்றுக்கொள்வது அவசியம். நீங்கள் அன்னியர்கள் வீட்டிற்கு செல்வீர்களானால், ஸலாம் சொல்லுங்கள். அவர்கள் வீட்டில் ஒருவருமில்லாவிட்டால் அல்லது வீட்டுக்காரர்கள் உள்ளே வர உத்தரவு கொடாவிட்டால் அவ்வீட்டிற்குப் போகவேண்டாம்.

8. அல்லது வீட்டுக்காரன் திரும்பி விடும்படி கட்டளையிட்டால் திரும்பி விடுங்கள். அன்னியர்கள் வீட்டில் கவரேறி அல்லது கூரையைப் பிரித்துக்கொண்டு செல்லவேண்டாம். வீட்டின் வாசற் படி வழியாகச் செல்லுங்கள். யாராவது உங்களுக்கு ஸலாம் சொல்லுவார்களானால் நீங்களும் அதற்கு அழகான பதில் ஸலாம் சொல்லுங்கள். சாராயம், சூதாட்டம், விக்கிரக ஆராதனை, ஜோதிடம் அல்லது சகுனம் இதெல்லாம் அசுத்தமான பிசாசின் தொழில். ஆகவே இவற்றை விட்டு விடுங்கள்.

9. செத்தது, இரத்தம், பன்றி மாமிசம், ஆண்டவனைத் தவிர உள்ள பிசாசுகளுக்குப் படைத்தது, கம்பால் அடித்தது, விழுந்து அடிபட்டு இறந்தது, கொம்பால் துஷ்ட மிருகத்தால் கிழிக்கப்பட்டுச் செத்தது, விக்கிரகத்தின் முன்பாக வல்லயத்தின் பேரில் மாட்டப் பட்டது இவைகளைத் தின்னவேண்டாம். இவர்கள் நாம் என்ன தின்னலாமென்று கேட்பார்களானால், பதில் சொல்லும் : கடலிலும், கரையிலும் பரிசுத்தமானவைகளைத் தின்னலாம். அசுத்தமானவை, செத்தது, செத்ததுக்கு ஒப்பானவைகளைத் தின்னக்கூடாது.

10. சபையில் மற்றவர்களுக்கு இடம் கொடுக்கும்படி சொல்லப்படுமானால், மற்றவர்களுக்கு இடம் கொடுங்கள். உங்களை எழுந்து விடும்படி ஏவப்படுமானால் உடனே எழுந்து விடுங்கள். பருப்பு, இறைச்சி, மரக்கறி பதார்த்தம் பரிசுத்தமானவைகளாகச் சாப்பிடலாம். ஒரே வஸ்தை அளவு மிறிச் சாப்பிடவேண்டாம். வீண்பேர்க பேசவேண்டாம். சமயத்துக்குத்தக்க பேர்க பேசுங்கள். தம் உடைகளையும், தம் உடல்களையும், தம் விடுகளையும் தம் வீதிகளையும், நாம் உட்காரும் ஒவ்வொரு ஸ்தலங்களையும் அழுக்கு, அசுத்தமில்லாமல் காப்பாற்றுங்கள். ஸ்நானம் செய்து கொள்ளுங்கள்.

11. உரத்தும் பேச வேண்டாம்; தாழ்ந்தும் பேச வேண்டாம்; நடுத்தரமாகப் பேசவும். அவசியம் நேரிட்டாலொழிய நடப்பதிலும், விரைவாக அல்லது மெதுவாக நடவாமல் நடுத்தரமாக நடக்கவும், வழிப்பயணங்களில் தக்க ஏற்பாடு அல்லது போதுமான செலவுகளை வைத்துக்கொள்ளவும். முழுக்காயிருந்தால் குளித்துக் கொள்ளவும். சாப்பிடும்போது ஏழைகளுக்கும், நாய், காகம் முதலிய ஜெந்துகளுக்கும் சமயம் வாய்க்குமானால் தர்மம் செய்யலாம்!

கடவுள் தூதும், அவர் வாக்கியமும், அவர் செயலும்

1. கடவுள் தூது:

1. உதிப்பே கடவுளின் தூது! சொல்லே அவர் வாக்கியம்! ஒருவன் உலகத்தை அறிவின் கண்ணைக்கொண்டு உற்று நோக்குவானாகில் அவனுக்கு ஓர் ஆசானுமில்லை; ஒரு வேதமுமில்லை!

2. வேதமோ கடவுள் சொல்லின் வாக்கியம்! சிருஷ்டிப்பொருள்களோ அவர் செயலின் வாக்கியம்! வேதத்தைக் கண்ணைக் கொண்டு வாசிக்கின்றோம். சிருஷ்டிப் பொருள்களை அறிவைக் கொண்டு வாசிக்கின்றோம்.

3. கடவுள் சொல்லின் வாக்கியமும் அவர் செயலின் வாக்கியமும் வேறுபடா. அறிவோ அவர் செயலின் வாக்கியத்தைச் சேர்ந்தது. ஆகையால் வேதம் அறிவுக்கு மாற்றமாகாது!

4. வேதத்தை அறிவுக்கு மாற்றமாகக் கண்டால் அதைக்கொண்டு மனிதனுக்கு நம்பிக்கை உண்டாகாது. ஆகையால் அதன் பொருளைத் (தீர்க்கமாய்) நீர விசாரிக்க வேண்டும்.

5. கடவுள் சொல்லின் வாக்கியமும் அவர் செயலின் வாக்கியமும், அவர் சொல்லின் வேதம், அவர் செயலின் வேதமாகும். அவர் சொல்லும், அவர் செயலும் ஒன்றே!

6. கடவுள் சொல்லின் வேதம் கடிதத்திலும், அவர் செயலின் வேதம் ஆகாயத்திலும் வரைந்திருக்கிறது. அவர் செயலின் ஏட்டை வாசிப்பவர்கள் அவர் சொல்லின் ஏட்டில் தவறார்கள்!

7. கடவுள் சொல்லின் ஏடு அநுமானமாகவும், அவர் செயலின் ஏடு பிரத்தியட்சமாகவும் சிலருக்குத் தோற்றுவதால் அவர்களுக்கு ஒரு வேதமும் ஓர் ஆசானுமில்லை! அல் குர்ஆன் 25 ஆம் ஜுஸ்வு: இலைஹியுரத்து, சூராவில் வருகிறது :

"வ கதாலிக அவ்ஹய்னா இலைக்க ருஹன் மின் அம்ரினா மா குன்த தத்ரி மல்கிதாபு வலல் ஈமானு வலாகின் ஜஅல்னாஹு

www.miskinsha.blogspot.com

நூரன் நஹ்தி பிஹி மன்னஷாஉ மின் இபாதினா வ இன்னக லதஹ்தீ இலா சிராத்தின் முஸ்தகீம்"

"அப்படிப்போல, வஹி கொண்டு அல்லது திரைக்கப்பாலிருந்து கொண்டு அல்லது தூதனுப்பி நாம் நாடியவர்களோடு பேசிக் கொள்வது போல் முஹம்மதே! உம்மளவில் தம்முடைய அம்ருடைய ஆலத்தில் நின்றும் சகல ஜீவாத்மாக்களுக்கும் அசலான ரூஹை உதிக்கச் செய்தோம. முற்படநீரும் வேதமென்னும் அந்தப் பொக்கிஷம் இன்னது, அந்த ஈமான் என்னும் உண்மை இன்னது என்று அறிந்திருக்கவில்லை. ஆகிலும் அந்த ரூஹை நாம் ஏகமாயிருக்கும் ஜோதிப் பிரகாசமாக்கி இருக்கிறோம். நம்முடைய அடியார்களில் நின்றும் நாம் நாடியவர்களை அதுகொண்டு நேர்வழி காட்டுவோம். ஆனால் உமக்கு ஈமான் இன்னது வேதமிவ்வளது என்று நாம் தெரிவித்துவிட்டபடியால் உண்மையாய், கெட்டியாய் (உறுதியாய்) நீரும் செவ்வொத்த பாதையளவில் நேர் வழி காட்டுவீர்." இந்த "வகதாலிக்க அவ்ஹைனா இலைக்க ரூஹன்" ஓர் ஆயத்தையும் ஆராய்ந்து பார்! விளங்கும்.

8. சிருஷ்டிப் பொருள்களில் இழுப்புத் தத்துவமும், மறுப்புத் தத்துவமும் காணப்படுவதால் உலகத்தில் பகையும்நேசமும் காணப் படுகிறது. சிருஷ்டிப் பொருள்களின் தத்துவம் கடவுள் தூதாகவும், அதன் காரியம் வார்த்தையாகவுமிருக்கின்றன.

9. "போன கிராபில்" (டேப் ரெக்கார்டரில்) நமது தொனியும் வார்த்தையும் அழியவில்லை. அவ்வாறே, நாம் பிரயோகித்த தத்துவங்களும், நமது செய்கைகளும், நமது எண்ணங்களும் ஆகாயத்தில் சித்தரிக்கப்படுகின்றன!

10. சாதாரண உதிப்பே கடவுளின் தூது. அவ்வாறான சொல்லே அவர் வாக்கியம். இது மனிதனுக்கு மட்டும் சொந்தமல்ல. எல்லா ஜீவராசிகளுக்கும் உடையது!

11. நேவ ஆவியால் பரிசுத்த ஆவியின் உதவியைக் கொண்டுள்ள உதிப்பே கடவுளின் தூது; அவ்வாறான சொல்லே அவர் வாக்கியம்; இது மனித வர்க்கத்திற்கு மட்டுமே சொந்தமானது. இதை எவராலும் தள்ள முடியாது!

12. இந்த வேதத்தையும் இந்த ஆசானையுமே யாவரும் அனுசரிப்பது அவசியம். இதை அனுசரிப்பவர்களுக்கு வாசிப்பதைவிட கடவுள் பக்தியால் உண்டாகும் ஞானம் வியக்கத்தக்கது!

13. கடவுளின் நீதி ஆத்மா. ஆத்மாவின் நீதி ஆகாயம். ஆகாயத்தில் எல்லாம் அமைந்திருக்கின்றன. ஆகாயத்திற்கு அடி, நடு, முடிவில்லை. திக்கு திசையில்லை. முடிவில்லாத விகாசத்திற்கு எந்த இடமும் நடு மையம் ஆகலாம்!

14. நானென்ற அகங்காரமே எல்லாவற்றிற்கும் நடு மையம்; நானென்ற அகங்காரமே எல்லாவற்றிற்கும் மூலம். தன்னையறிந்தவன் தலைவனையும், தலைவனையறிந்தவன் தன்னையுமறிவான். கடவுளின் பொக்கிஷத்திற்கு இலனே சாவி! (சிறவுகோல்)

15. கடவுளின் அம்சத்தில் நின்றுமுள்ளது ஆத்மா. ஆத்மாவின் அம்சத்தில் நின்றுமுள்ளது ஆகாயம். எல்லாம் ஆகாயத்தின் அம்சத்தில் நின்றுமுள்ளன!

2. கடவுள் வாக்கு.

1. இருக்கிறது அழியாது! இல்லாதது உண்டாகாது. கடவுள் அழியமாட்டார்; அவருக்கு மாற்றமுண்டாகாது. கடவுள் தானல்லாத உண்மைக்கு மாற்றமானவர்; அவரல்லாத உண்மை இல்லை. எல்லாம் அவர் உண்மையே!

2. கடவுளின் உண்மையில் அவரைத்தவிர ஒரு பொருளுமில்லை. அவருக்கு முன்னும், பின்னும் இல்லை. துவக்கம் முடிவுமில்லை. எண்ணிக்கையும் அன்னியமுமில்லை. அவருக்கும் அவர் சிருஷ்டிப் பொருள்கட்குமிடையில் பிளப்பும் இல்லை, அவர் பின்னமாகார். எல்லாம் அவரே!

3. கடவுளின் உண்மை பூர்வீகமும் நித்தியமுமானது. கூடுதலும் குறைதலும் இல்லாதது. எல்லையும் பேதமுமற்றது. தத்துவாமிசங்களான தடிப்பும் உவமையுமல்லாதது; ஒரே தன்மையானது. அவர் கோலத்தையன்றி மூலத்தைக் காணமுடியாது. அவர் பூரணமானவர்!

4. ஒரு வஸ்தும் உண்டாகவுமில்லை, அழியவுமில்லை. மறைந்திருக்கிறதே வெளியாகிறது, வெளியானதே மறைகிறது. அல்லது கடவுளின் அரூப அம்சமே அவர் சொரூப அம்சங்களாக வெளியாகி மறைகின்றது!

5. பொன் எந்த ரூபத்திலும் பேதப்படாது. அவ்வாறே கடவுளின் அரூப அம்சமும். பொன்னை எந்த ரூபத்திலும் காணலாம். அவர் அரூப அம்சத்தை எந்த ரூபத்திலும் காண முடியாது. அஃதோ மகா தடிப்பற்றது!

www.miskinsha.blogspot.com

6. நீர்க்கட்டி, குமிழி, அலை, ஜலமாக இருப்பதுபோல், – பந்தம், தீவட்டி, விளக்கு – நாமம் வெவ்வேறாயினும் ஒரே அக்கினிதான்! ஆனால் சிறிய அக்னியும் பெரிய அக்னியாக விரிவாகிக் கொள்ள சக்தியுள்ளது.

7. கடவுள் அரூப அம்சத்தைப் போலவே அவர் சொரூப அம்சங்களும் முடிவில்லாதவை. பூலோகத்தில் ஒரு வித்தை அல்லது அதன் தோற்றத்தை நீ மட்டுப்படுத்த முடியாது. அவர் அரூப அம்சம் அறிவின் மயமானது. எல்லாம் அவர் அறிவின் ரூபம். எல்லாம் அவர் சுயம்!

8. கடவுளின் அரூப அம்சமோ அஞ்ஞானமில்லாதது தேவையற்றது. இன்ப துன்பமில்லாதது. அவர் சொரூப அம்சங்களோ கனவைப்போல் அஞ்ஞானமுள்ளவை. அதற்குப் பிணியில்லை, இவற்றிற்கு உண்டு. அதற்கு ஊண் இல்லை, இவற்றுக்குண்டு. அதற்கு உறக்கமில்லை, இவற்றுக்குண்டு. அதற்கு ஜோடியில்லை, இவற்றிற்குண்டு!

9. இல்லாததை உண்டுமென்று கண்டதே அஞ்ஞானம், மாயை, தீமை! துவிதமாகவும் அன்னியமாகவும் காணாமல் சொரூப அம்சத்தை விட்டு விழித்தவர்களுக்கே அஞ்ஞானமும், மாயையும், தீமையுமில்லை. இல்லாததை உண்டுமெனக் கற்பித்துக்கொண்டவனே கடவுளுக்குக் கொடிய பகைவன்!

10. சரீரத்தை விட்டவன் இறந்தவனல்லன். தன் செயலுக்குத் தக்கபடி எந்த லோகத்திலாவது தன் செயலின் பலனை அனுபவித்துக்கொண்டிருப்பான். இறந்தவன் பிறக்கமாட்டான். கடவுள் அரூப அம்சத்தையடைந்தவர்கள் திரும்புகிறதில்லை.

11. மாமிசம் புசியாதிருப்பது சைவமாகாது, துவிதமற்றிருப்பதே சைவம். சன்னியாசம் கொள்வது துறவறமாகாது, துவிதமில்லாதிருப்பதே துறவறம். ஒன்றும் புசியாமலிருப்பது உபவாசமாகாது, துவிதமற்றிருப்பதே உபவாசம் (நோன்பு). எந்த ஆராதனையும் தபமாகாது. துவிதமில்லாதிருப்பதே தபம்!

12. கடவுளின் மெய் வடிவோ அரூபம். அவர் பொய் வடிவோ சொரூபம். அஞ்ஞானமும் அவர் அம்சத்தில் நின்றுமுள்ளது. எல்லாமவர் வடிவு, எல்லாமவர் அம்சம். ஒன்றையும் வேற்றுமையாகக் காணாதே!

13. வேற்றுமை இல்லாதவன் அஞ்ஞானமில்லாதவன். மாயையற்றவன். பாபமில்லாதவன். கடவுளின் அரூப அம்சத்தை அடைந்தவன் திரை நீங்கினவன். அவர் தத்துவத்தைப் பிரயோகிக்க வல்லவன்!

14. நாற்றமுள்ள பிணமும், மல ஜலமும்-வெயிலையும், நிலவையும், ஆகாயத்தையும் அசுத்தமாக்காது. கடவுள் அரூபமானவர், ஆகாயத்தைவிட அரூபி; அரூபத்திற்கும் அரூபமானவர்! அவரை எந்த வஸ்துவும் தொடாது!

15. "மலடி கனவில் பிள்ளைபெறக் கண்டது போல்" பிணம், மலஜலமென்பதே பொய். "கானலை நீராகக் காண்பது போல்" ஜகத்து உருவே பொய். கடவுளின் அரூப அம்சப்படி அவருக்கு ஒன்றுமில்லை. சொரூப அம்சப்படி அவருக்கு எல்லாமுண்டு!

16. கடவுளின் அரூப அம்சத்தில் நின்றும் அவர் சொரூப அம்சங்கள் உண்டானது. அவர் சொரூப அம்சத்தில் நின்றும் அவர் அரூப அம்சம் உண்டாகவில்லை. ஆகையால், அரூபத்தின்படி எல்லாம் அவரல்ல சொரூபத்தின்படி எல்லாமவரே!

17. கடவுள் எல்லாமாகவும், எல்லாம் அல்லவுமாகவுமிருக்கிறார். எல்லாவற்றிலும் தான் தானாகவே இருப்பார். அவர் உண்மை மகாதூய்மையானது. கேவலமான வஸ்துவிலும் கேவலமாகாது. அரூபமே அவருக்கு மெய்யான வடிவம். மற்றதெல்லாம் அவர் போலி வடிவம்!

18. ஜகம்–அவர் நாம ரூபங்களுக்கு அடையாளமாகவும், அவர் செயல்–அவர் தத்துவங்களுக்குக் கண்ணாடியாகவுமிருக்கின்றன. சூரியனைச் சூரியனின் ஒளியைக்கொண்டே காண வேண்டும். பந்தம், தீவட்டி, விளக்கின் வெளிச்சத்தினால் காணமுடியாது. அவ்வாறே கடவுளின் உண்மையை, அவர் உண்மையைக்கொண்டே அறிய வேண்டும். புத்தி புலன்களைக் கொண்டல்ல!

19. கடவுள் தானல்லாத புதிதுகளுக்கு மாற்றமானவர். அவரல்லாத புதிது ஒன்றுமில்லை. அவருண்மையில் அவரல்லாமல் மேல்மிச்சமாக ஒரு பொருளுமில்லை. எல்லாமவர் உண்மை. எல்லாமவர் சுயம். எல்லாமவர் உள்ளமை!

20. கடவுள் அஞ்ஞானத்தில் நின்றுமே அறிவை வெளிப்படுத்தி இருக்கிறார். அவருக்கோ அஞ்ஞானமில்லை. நமக்கோ அஞ்ஞான

www.miskinsha.blogspot.com

முண்டு. தம் அஞ்ஞானத்தை ஞானமாக மாற்றிக்கொள்ள நம்மையும் சர்வத்தையும் அவராக அறியவேண்டும்!

21. கடவுளுக்கோ எல்லாம் பிரத்தியக்ஷமாகவும், நமக்கோ கனவைப் போல் மாயையாகவுமிருக்கின்றன. கடவுள் தன் சுயத்தில் இல்லாததையும் தன் தோற்றத்தில் உள்ளதையும் அறிந்திருக்கிறார்.

22. கடவுள் தானல்லாத பொருள்களுக்கே மாற்றமானவர். அவரைத்தவிர ஒரு பொருளுமில்லை. எல்லாமவரே! அவர் மெய்வடிவின்படி எல்லாமவரல்ல. அவர் பொய்வடிவின்படி எல்லாமவரே!

23. கடவுளுக்கோ ஒரு வடிவுமில்லை. எல்லாமவர் வடிவு. ஒரு வடிவுமில்லாதிருப்பதே அவரின் சுயம். எந்த ரூபத்திலும் வெளியாகச் சக்தியுள்ளவர். அவர் சக்தியை மட்டுப்படுத்த முடியாது!

24. கடவுள் உள்ளமையில் அவரைத்தவிர ஒரு பொருளுமிகமில்லை. அவரைத்தவிர இல்லையென்ற பொருளுமில்லை. அவரைத்தவிர. இருக்கிறதென்ற பொருளுமில்லை. அவரைத்தவிர அஞ்ஞானமில்லை, அவரைத்தவிர மாயையில்லை. அவரைத்தவிர பாபமில்லை!

25. ஞானமுமவர், அஞ்ஞானமுமவர், பாவமுமவர், புண்ணியமும் அவர், நீயும் அவர், நானுமவர், வானமுமவர், பூமியுமவர், எல்லாமே அவர். இல்லாமையுமவர், கடவுளுமவர்!

26. தன்னைக் கடவுளாக அறிந்தவன் எவ்வளவு தாழ்ந்தாலும் அடிமையாகமாட்டான். தன்னைக் கடவுளாக அறியாதவன் எவ்வளவு உயர்ந்தாலும் ஆண்டவனாகமாட்டான்! அடிமை ஜாதியை ஆண்டவமார்கள் அடிமை கொள்வார்கள். அடிமைத்தனமோ கேவலமான விக்கிரக ஆராதனை. (குறிப்பு: "இஸ்லாத்தில் ஆண்டவனை அடிமை கொள்ளகூடாது. அடிமையை அடிமை கொள்ளலாம். அடிமைத்தனம் நீங்கினால் உரிமையாக்கி விடுவார்கள். சுய ஞானமுண்டாகாதவரையில் அடிமைத்தனம் நீங்காது. ஆகையால் நீங்கள் அடிமைகளை சீடன் முறையில் வைத்து வேலை வாங்குவதோடு சுய ஞானத்தைப் போதித்து உரிமை விடுங்கள்.")

27. விக்கிரகமும் கடவுள் அம்சந்தான். எந்த வஸ்து அவரம்சமென்றல்ல (அவரம்சம் அல்லவென்று எந்த வஸ்து இருக்கிறது?) எல்லாமவரம்சமே! எந்த ஒன்றையறிந்தால் அதன் மூலமாக சகலத்

தையும் அறியலாமோ அதையே அறியவேண்டும். எந்த ஒன்றை வணங்கினால் அதன் மூலமாக சர்வத்தையும் வணங்கினதாகுமோ அதையே வணங்க வேண்டும்!

28. நாம் எதை வணங்கினாலும் அதுவும் நம்மை வணங்கும்! நாம் எதற்கு வழிப்பட்டாலும் அதுவும் நமக்கு வழிப்படும். நாம் ஒன்றையும் வணங்காமல், ஒன்றிற்கும் வழிப்படாமல் விக்கிரகத்தை நிக்கிரகம் செய்தால் (துவைதத்தைவிட்டு அத்வைதத்தைக் கைக்கொண்டால்) எல்லாம் நமக்கே வழிப்பட்டு நம்மையே வணங்கும்! ஆகையால், வெளி ரூபங்களையும் மனத்தின் ரூபங்களையும் நாசம் செய். எல்லாவற்றையும் வணங்கினவன் ஆவாய். எல்லாம் உனக்கு வழிப்படும்!

29. கடவுளில் நின்றும் ஆத்மா. ஆத்மாவில் நின்றும் ஆகாயம். மற்றதெல்லாம் ஆகாயத்தில் நின்றுமுள்ளன. ஓ மனிதனே! உனக்கு உடலில்லை, உயிரில்லை, நாமமில்லை, ரூபமில்லை. நீ ஆகாயமுமல்ல, நீ ஆத்மாவுமல்ல, நீ யார் என்று பார்! உன் தத்துவங்களை ஞாபகம் செய். உனக்குள்ள பிணியும், வறுமையும், ஏலாத்தனமும் நீங்கும்! (குறிப்பு: "கடவுள் உள்ளமையில் நின்றும் இச்சிக்கிற தன்மை வெளியானால் அதற்கு (ஈஸ்வர) இச்சா சக்தி என்றும். பார்க்கிற தன்மை வெளியானால் அதற்கு (ரூஹ்) ஆன்மா என்றும், அறிகிற தன்மை வெளியானால் (கல்பு) மனம் என்றும், இத்தன்மைகளை விட்டொழித்திருந்தால் அதை (தாத்) தத்ஸ்வரூபம் என்றும், இன்னும் நஃப்ஸாகிய இச்சையை-இப்லீஸ் அல்லது சாத்தான் (பிசாசு) என்றும் ரூஹாகிய ஆன்மாவை மலக்கு அல்லது தேவதை (அமரர்) என்றும், கல்பாகிய அறிவை இன்ஸான் (மனிதன்) என்றும் ஆத்ம ஞானிகள் கூறுகின்றனர்.")

30. நீ இதற்குமுன் எங்கிருந்தாய்? தாய் தகப்பனின் இந்திரியமாயிருந்தாய்; அதற்கு முன் உணவு வர்க்கமாயிருந்தாய்; அதற்கு முன் மண்ணாகயிருந்தாய்; அதற்குமுன் ஜலமாயிருந்தாய்; அதற்கு முன் வாயுவாயிருந்தாய்; அதற்கு முன் அக்கினியாயிருந்தாய்; அதற்கு முன் ஆகாயமாயிருந்தாய்; அதற்குமுன் அறிவாகாயமாயிருந்தாய். அதற்குமுன் கடவுளின் உள்ளமையாயிருந்தாய் அதற்கு மேல் உனக்குப் பதவி இல்லை!

31. ஜலத்தின் அசைவால் சூரியனின் பிம்பம் அசைவது போல் தோன்றுவதும், ஓடுகிற வண்டித் தொடரினால், நிற்கிற வண்டித் தொடர் ஓடுவதாக தோன்றுவதும் எப்படிப் பொய்யோ, அவ்வாறே

www.miskinsha.blogspot.com

நம் அறிவின் அசைவால் உலகங்களும் தோன்றி மறைவதாகத் தோற்றுகின்றன. நமக்கோ யாதோர் அசைவுமில்லை.

32. அஞ்ஞானமோ-சாத்தான் (இப்லீஸ்). உனக்கு சந்தேகத்தை வரத்தி துவித்தத்தைப் போதித்துக் கடவுளைவிட்டும் தூர மாக்கி விடுவான். அவரைவிட்டுத் தூரமாவதைவிடக் கொடிய நரகம் ஒன்றுமில்லை. நரகம் எந்த கிரகமென்று உனக்குத் தெரியுமா ?

33. நரகத்தில்-சிலர் வயிற்றால் நகர்வார்கள்; சிலர் நெஞ்சால் நகர்வார்கள்; சிலர் ஆகாயத்தில் பறப்பார்கள்; சிலர் கீழே நடப் பார்கள். சிலர் புல் பூண்டாக முளைப்பார்கள். சிலர் புழுப்பூச்சியாக ஊர்வார்கள் ! அதன் தட்டுப்பலது. ஒருவரும் நரகம் புகாமல் சொர்க்கம் புகமாட்டார்கள் !

34. நரகத்தின் வேதனைகளை அனுபவிக்க ரூபங்களை மாற்றப் பட்டிருக்கும். அஞ்ஞான - துவிதமே அதன் கொடிய நெருப்பு. அதைக்கண்டு அறிவாளிகள் அஞ்சுவார்கள். எல்லா துன்பத்திற் கும் காரணம் அஞ்ஞானமே !

35. கடவுள் ஆதமை (ஆதாம்) சிருஷ்டித்துத் தன் உள்ளமையை அறிவித்து எல்லாவற்றிற்கும் நீரே தலைமை ஆனவர் என்று ஆசீர்வதித்துத் தன் அம்சமாகிய ஆதமுக்கு வானவர்களைச் சாஷ்டாங்கம் செய்யும்படி ஏவினார். எல்லாரும் செய்தார்கள். சாத்தான் துவிதத்தால் மறுத்து விட்டான். ஆகையால், அவன் பேரில் முவிவு செய்தார்.

36. கடவுன் துவிதமான அமானிதத்தை எடுத்துக்காட்டி எல்லா வஸ்துக்களிடத்திலும் "உங்களில் யாராவது சுமக்கக் கூடுமோ?" என்று கேட்டார்; எல்லாம் மறுத்து விட்டன. மனிதன் அதைச் சுமந்து மூடனாகவும், அனியாயக்காரனாகவும் ஆனான் ! (குறிப்பு : "முடிவில்லாத கடவுளே முடிவில்லாத ஆத்மா. முடிவில்லாத ஆத் மாவே முடிவில்லாத மனம். முடிவில்லாத மனமே முடிவில்லாத ஆகாயம் ; முடிவில்லாத ஆகாயமே முடிவில்லா "அனா" என்கிற நான்! இந்த நானென்ற ஞாபகத்தைத்தவிர வேறெந்த ஞாபகமும் இருக்கக்கூடாது. இந்த நானென்றது குர்ஆனில் "அனல்லாஹ்" அதாவது : "நான் அல்லாஹ் – கடவுளாயிருக்கும்" என்ற நானைத்தவிர வேறில்லை !)

37. கடவுள் ஆதமை துவிதமாகிய மரத்தருகில் (மரக்கம்) முடுக வேண்டுமென்று கட்டளை செய்தார். சாத்தான் அவரை ஏமாற்றி அதன் சமீபத்தில் இருக்க (முடுகும்படி)ச் செய்து விட்டான். ஆனதால் கடவுள் அவர்பேரில் கோபமாகி "பாபிகள் என் சமீபத்தில் இருக்கக்கூடாது" என்று தூரத்திவிட்டார். அதன் பேரில் ஆதாம் மிகவும் சஞ்சலப்பட்டார். அதனால் அவர் பேரில் கிருபையாகி, அவர் துவிதத்தைப் போக்கி அத்துவிதத்தை உபதேசித்து, அவர் பாவத்தை மன்னித்தார்.

38. நீ நாம ரூபத்தில் கட்டப்பட்டு உன்னைச் சிறிய பொருளாய் அறிந்திருக்கிறாய் ! நீயோ முடிவில்லாத அகண்டமானவன் ! கால மும் உன்னை அறிந்து கொள்ளாது ! உன் தத்துவங்களுக்கோ முடிவில்லை ; சர்வமும் உனக்கு அடிமை !

39. நீயும் கடவுள் அரூப அம்சத்தைப் போல் விரிவாய்க்கொள் ! உன் அஞ்ஞானம் நாசமாகும். இப்படி விசாலமாய்க்கொண்டவர்கள் அனேகர்! சிலர் சந்திர மண்டலம் வரையிலும், சிலர் சூரிய மண் டலம் வரையிலும், சிலர் அதற்கு மேலாகவும், சிலர் பூரணத்தை யும் விருத்தி செய்திருப்பார்கள்.

10. இவ்வாறான உன் விகாசத்தைப் பூரணமாக்கி இருந்தால் ஆகாயத்தில் சுற்றும் கோளங்கள் எல்லாம் உன் எண்ணத்தின் அலைகளாக இருக்கும் ! இது வாசித்த கல்வியல்ல. அசரீர வாக்கி னால் உண்டாகும் கல்வி ! நம்மைப் போன்றவர்களைத் தவிர எல்லோரும் இதை அனுசரிக்க வேண்டிய நிர்ப்பந்தமில்லை

41. எந்த மதத்தையும் தூஷணம் பண்ணாதே ! எந்த மதத் திலும் இருக்கிற தவறுகளை நீக்க அஞ்சாதே ! உனக்குக் கெட்டபேர் வந்தாலும் வரட்டும். முடிவில் நீ நல்லவனாயிருப் பாய் ! ஞானத்தில் எல்லோரும் ஒற்றுமையாகும் காலமும்வரும்!

42 ஸ்திரீகளின் பேரில் வெறுப்பில்லாமல் அன்பாயிரு. அநாக ரீகமான செய்கைகளை விட்டுவிடு ! கடவுளைப் பின்னமாக்கி அவர் மகத்துவத்தைக் குறைக்காதே! அவரைத் துவிதமாக வணங் காதே. வணக்கம் இன்னதென்று அறியாமல் அவரைத்துவிதமாய் வணங்கினவர்களுக்கே நரகம் ! அரூபத்தில் சொரூபங்களை மறந்தவனாக சொரூபங்களில் அரூபத்தை நினைந்தவனாக நடுநிலையாக இருந்து கொள் !

www.miskinsha.blogspot.com

43. (பூரணத்துவத்தை அடைந்த) ஞானிகளைக் கண்டால் வணங்கு. அவர்களிடத்தில் கடவுள் வாசம் செய்கிறார். துவைதி களை விரட்டு. அவர்கள் பேரில் முனிவு உண்டாய்க் கொண்டி ருக்கும். நீ நல்லவனாகிவிட்டால் ஒன்றையும் தீங்காகப் பார்க்காதே. நரகமோ துன்பம், சொர்க்கமோ இன்பம்!

44. மலக்கிருமிக்கு மலமே இன்பம். வாசனையுள்ள புஷ்பத்தின் கிருமிக்கு புஷ்பமே இன்பம். அவ்வாறே நரகவாதியின் துன்பமும், சொர்க்கவாதியின் இன்பமும். நரகவாதிகள் சொர்க்கத்தை மேலாக வும், சொர்க்கவாதிகள் நரகத்தைக் கீழாகவும் காண்பார்கள். சொர்க்கத்தை எந்த கிரகமென்று நீ அறியமாட்டாய்!

45. ஏழு நரகம், ஏழு சொர்க்கம் என்று நீ கேள்விப்பட்டிருப்பாய். அதன் உண்மை உனக்கு இன்னதென்று விளங்காது. ஈரேழு பதினான்கு லோகமிருப்பதாயும் கேள்விப்பட்டிருப்பாய். நீ எந்த கிரகத்திற்கு சந்தோஷமாய் அனுப்பப்படுவாயோ, எந்த கிரகத்திற்கு கோபமாய்த் துரத்தப்படுவாயோ! ஆனால் உலகங்கள் எண்ணிக்கை யற்றதாய் இருக்கின்றன. ஒரு சமயம் பூமியில்தான் சிறைபட்டி ருப்பாயோ அறியமாட்டாய்!

46. எல்லா கிரகங்களும் ஒரே சுபாவமானதல்ல. சிலது ஏக இரு ளாக இருக்கும், அதில் பிசாசுகள் வாசம் செய்யும். மகா பயங்கர மானது. சிலது ஏக ஒளியாயிருக்கும்; அதில் வானவர்கள் வாசம் செய்வார்கள். மகா ஆனந்தமானதாயிருக்கும்!

47. சில கிரகங்கள் ஏக அக்கினியாக இருக்கும். அதிலுள்ள வஸ் துக்களெல்லாம் அக்கினி மயமாகவே இருக்கும். இவ்விடத்தில் வஸ்துக்களைப் போட்டால் பற்றி எரியும். சில கிரகங்கள் பனியால் ஏகக்குளிராக இருக்கும்; அக்கினிகூட அதில் ஜீவிக்காது!

48. சில கிரகங்கள் மிகச் செழிப்பாயிருக்கும். அவ்விடத்தில் வறு மையும், பிணியுமில்லை. நல்ல சௌந்தரியமான ஆண்களும் பெண் களும், நல்ல ஆடை ஆபரணங்களை அணிந்திருப்பார்கள். நல்ல கனி வர்க்கங்களும், உணவுகளும், குடிப்புகளுமிருக்கும். சதாவும் பருவகாலமாகவே இருக்கும். வித்து-தரையில் விழுந்தவுடன் அறுக்க (கைகொள்ள) பதமாய் விடும்!

49. சில கிரகங்கள் மிகப் பாழானதாக இருக்கும். வறுமையும் பிணி யுமாயிருக்கும். கொடிய விஷ ஜந்துக்கள் மிகுதியாய் வசிக்கும்.

வெய்யில் அகோரமாயிருக்கும். சகிக்க முடியாது. புற் பூண்டுகள் எல்லாம் கருகிப்போயிருக்கும். மழை அருமையாயிருக்கும்!

50. சில கிரகங்களில் நான்கு சந்திரன் பிரகாசிக்கும். சில கிரகங் களில் எட்டுச் சந்திரன் பிரகாசிக்கும். சில கிரகங்களில் பச்சை, சிகப்பு, நீலம், மஞ்சள் நிறமுள்ள சூரியன் இரண்டு, மூன்று மாற்றி மாற்றிப் பிரகாசிக்கும். அவ்விடத்துப் புஷ்பங்களும், விரு க்ஷங்களும், பக்ஷிகளும் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்!

51. சில கிரகங்களில் மனித வர்க்கமே இல்லை! சில கிரகங்களில் புற் பூண்டுகளே இல்லை. சில கிரகங்களில் ஜீவ ஜந்துக்களே இல்லை. சிலகிரகங்களில் வாயுவேயில்லை. சில கிரகங்களில் ஜலமே இல்லை. கடவுள் இதை யாருக்காக படைத்திருக்கிறாரோ!

3. கடவுள் செயல்

1. கடவுள் ஒளியுமல்ல, இருளுமல்ல! அவர் அஞ்ஞானமில்லாத அறிவில் நின்றும், அஞ்ஞானமாகிய இருளை வெளிப்படுத்தி அதில் நின்றும் அஞ்ஞானமுள்ள அறிவாகிய ஒளியை வெளிப் படுத்தினார். இருளை நாம் கடக்காவிட்டால் அவர் உண்மை விளங்காது. ஆகையால், நம் அறிவு அஞ்ஞானமும், மெஞ்ஞானமு மாகிய இரண்டு அம்சத்தை உடையது. பார்வை அறிவின் அம்ச மாயிருப்பதால் தன் அம்சமாகிய ஒளியில்லாமல் பார்க்காது!

2. ஒரு புலன்களும் ஆன்ம மின்சாரமாகிய மனோ காந்தக்கவர்ச்சி யின் ஒளியில்லாமல் ஒன்றையும் எட்டிக்கொள்ளாது. பசுமையாகிய இலைகளையுடைய மரங்களானவை கூர்மையான அறிவின் பார்வைக்கு ஒவ்வோர் இலைகளும் கடவுளை அறியும் ஏடுகளாய் இருக்கின்றன. துஷ்ட மிருகங்கள் கொலை செய்வதால் குற்றம் செய்த பாவி அல்ல; கடவுளின் நாட்டத்தை அவை நிறைவேற்று கின்றன.

குறிப்பு: "கடவுளின் அம்சமோ இச்சை மயமாகவும், ஆத் மாவின் அம்சமோ பார்வையின் மயமாகவும், மனதின் அம்சமோ அறிவின் மயமாகவும், ஆகாயத்தின் அம்சமோ தத்துவமயமாகவும், எல்லா வஸ்துக்களிலும் விளங்கும் இச்சைமயத்தைத் தத்துவ ஞானிகள் கவர்ச்சித் தத்துவமென்றும் சொல்வார்கள். இந்தத் தத்துவமோ பிராணிகளில் காமமாகவும், தாவர வஸ்துக்களில் சத்தாகவும், நிரச வஸ்துக்களில் கவர்ச்சித் தத்துவமாகவும் விளங்கும். எல்லா எண்ணங்களிலும், எல்லாத் தத்துவங்களி லும் எல்லாப் பொருள்களிலும் கடவுளின்சம்பந்தமுண்டாயிருக்கும்."

www.miskinsha.blogspot.com

3. அவ்வாறே புலன்கள் எட்டிக் கொள்வதெல்லாம் பாவமல்ல. அதிலும் அனேக நன்மைகள் இருக்கின்றன. அதை நியாயமில்லாத வழியில் செலவு செய்வதே பாவம். அறிவாளிகள் அறிவுக்கு மாற்றமாய் நடப்பதே பாவம் அடிமையாயிருப்பதை அறிந்தது போல் ஆண்டவனாயிருப்பதை அறியாமல் போனதே பாவம்!

4. ரூப சாஸ்திரம் பொய்யல்ல. ரூபத்தைப் பார்த்துக்குணங்களை அறியலாம். சிருஷ்டிப் பொருள்களின் ரூபத்தில் கடவுளின் வாக்கியம் கொத்தப்பட்டிருக்கின்றது. அதை அறிவின் கண்ணைக் கொண்டு வாசிக்கலாம்! கடவுளின் செயலின் ஏட்டில் மாமிசம் புசிக்கக்கூடிய பக்ஷிகளுக்கும் மிருகங்களுக்குமுள்ள வீரம் மற்றப் பிராணிகளில் காணப்படவில்லை. எப்போதும் மரக்கறியே புசிப்பது சோழைத்தனத்திற்குக் காரணமாகும். ஆகையால், ஒரே வஸ்தை அளவுக்கு மீறி சாப்பிடக்கூடாது!

5. நம்மைக் கொல்லவந்த பிராணிகளையும், நம்மை ஹிம்சிக்கும் ஜந்துக்களையும் கொல்வது குற்றமல்ல. நாம் நடமாடும் இடங்களில் அதைக்கண்டால் வதைக்கலாம். ஆனால், அதையும் கடவுள் அம்சமென்று உறுதியாய்க் கண்டவர்களை அது ஹிம்சிக்கிறது இல்லை! நம் வயிற்றிலுள்ள கிருமிகளையும், தலையிலுள்ள பேன்களையும் கொல்வது ஆகும்.

6. கஸ்தூரிக்காக மானையும், முத்துக்காகச் சிப்பிகளையும், தேனுக்காக ஈக்களையும், பட்டுக்காகப் பூச்சிகளையும் கொல்வது குற்றமல்ல. கடவுளுக்கும் மனிதனுக்குமுள்ள சுவாதீனம் மற்ற எந்த வஸ்துக்குமில்லை. எல்லாம் இவனுக்கே உள்ளது. இவன் சுய நலத்தைக் காட்டவுமில்லை; ஜீவ வதை செய்யவுமில்லை. கடவுளின் அதிகாரத்தைப் பூலோகத்தில் செலுத்துகிறான். அவர் கட்டளையை நிறைவேற்றுகிறான்.

7. அறிவாளிகள் தீங்கு செய்யமாட்டார்கள். மிருகத்தைப்போல் காட்டு மிலேச்சர்களாயிருப்பவர்களே தீங்கு செய்வார்கள்! கடவுளை அவர்கள் அறியாததால் நன்மை செய்யமாட்டார்கள். அவர்கள் தீங்கை அடக்கு முறையால் கண்டிக்கவேண்டும். அடக்கு முறையில் ஞானமில்லாத மிருகத்தன்மையுள்ளவர்கள் இருக்கக் கூடாது. சிலர் ஞானமில்லாமல் மிருகத்தன்மையால் சட்ட நிரூபர்களாயிருந்ததால் உலகத்தில் அனேக தீங்குகள் விளைகின்றன!

8. ஞான விசுவாசமுள்ளவர்கள் பாவிகளாயிருந்தால் நரகத்தில் அவர்கள் ரூபம் மாற்றப்பட்டிராது. மற்றவர்களை மாற்றப்பட்டிருக்

கும். ஞான விஸ்வாசமற்றவன் நன்மைகளைச் செய்திருந்தால் சொர்க்கத்தில் தாழ்ந்த பதவியிலிருப்பான். நன்மையும் தீமையு மற்ற ஞானிகள் கடவுளிடம் இருப்பார்கள். சிறு குழந்தைகளையும் குழந்தையிலேயே பைத்தியம் பிடித்தவர்களையும் திருப்பப் படுகின்றன.

9. நரகத்திலும் சொர்க்கத்திலுங்கூட திரும்புதலுண்டு. எவன் கடவுள் அரூப அம்சத்தையடைந்து தன்னைக் கடவுளாகப் பெற்றுக் கொண்டானோ அவனைத்தவிர மற்றவர்களுக்குண்டு. நரகத்தில் கோபத்தால் கொலை செய்தவர்களைப் புலியாகவும், தந்திரத்தால் வஞ்சிப்பவர்களை நரியாகவும், திருட்டுத்தனம் உள்ளவர்களைப் பெருச்சாளியாகவும், மூடத்தனமான செய்கையுடையவர்களை மாடு அல்லது கழுதையாகவும், குறும்புத்தனமாகத் துஷ்டதனமுள்ளவர்களைக் குரங்காகவும், நன்றியில்லாதவர்களைக் குதிரையாகவும், கொடிய கோபமுள்ளவர்களை ஒட்டகையாகவும், பேராசையுள்ளவர்களை யானையாகவும், நீசத்தனமான செய்கைகளை உடையவர்களை பன்றியாகவும், கேவலப் புத்தியுடையவர்களை நாயாகவும், அளியாயக்காரர்களை ஓநாயாகவும், ஒருவன் பொருளை நியாயமில்லாமல் அபகரிக்கிறவனை பருந்தாகவும் மாற்றப்பட்டிருக்கும்.

10. அவரவர்கள் குணம் செயலுக்குத் தக்கபடி மிருக ரூபங்களில் வசிப்பார்கள். பிராணிகளில் கேவலமான புழுக்களாகவும், புல், பூண்டுகளில் கேவலமான பாசியாகவும், இதைவிடக் கேவலமான மண்ணாகவும் இருப்பார்கள். பாவம் செய்யாமலிருப்பதே உபவாசம். கடவுளுக்கு வழிபடுவதே தபம். சில தேசத்தார் செயல்-சில தேசத்தார்களுக்கு அநாகரீகமாகவும், சில மதத்தார் சொல்-சில மதத்தாருக்கு நியாய விரோதமாகவும் தோன்றும். உனக்கு எது அழகாகவும், நியாயமாகவும் தோன்றுகின்றதோ அதையே எடுத்துக்கொள்! (குறிப்பு "உண்மையை அறிவது ஞானம்; உண்மையை நம்புவது பக்தி; உண்மையில் நடப்பது (ஒழுகுதல்) மார்க்கம். இதையே இல்மு, ஈமான், இஸ்லாம் எனப்படும். இதுவே பொதுவானது. பாரபக்ஷமில்லாதது! எல்லோராலும் அனுசரிக்கக் கடமைப்பட்டது.")

11. எவ்வளவு சிருஷ்டிப் பொருள்கள் உலகத்தில் உண்டாயிருக்கிறதோ அவ்வளவு செயல்களும், எண்ணங்களும் நமக்குண்டு. கடவுள் உலகத்தில் அனேக பெரிய ஆவிகளைப் படைத்திருக்கிறார்! அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கிரகங்களுக்கும் உயிராய்

www.miskinsha.blogspot.com

இருந்து அவைகளை நடத்தி வருகின்றன. எல்லாவற்றிற்கும் பெரிய ஆவியே பரிசுத்த ஆவி (ஜிப்ரீல்). இந்த ஆவிகளைக் கொண்டு நமக்கு சம்பந்தமுண்டானால் அனேக சக்திகள் நம்மில் நூதனமாக விளங்கும். நீ உன் விகாசத்தை விரிவாக்கு! அவர்கள் சம்பந்தத்தைப் பெற்றுக்கொள் !

12. பூமி மட்டும் அழிவது சின்ன அழிவு. கடவுள் உண்மையைத் தவிர எல்லா கிரகங்களும். வஸ்துக்களும் அழிவதே பெரிய அழிவு. இதன் காலத்தைக் கணிக்க முடியாது. மனிதன் தன் விகாசங் களைக் கடந்து பூரண அரூப அம்ஸத்தை அடைந்து, நூதன சிருஷ்டிப் பொருள்களுக்குக் கடவுளாக வந்து, அவர் அதிகாரம் இவன் பேரில் செல்லாமல் இவன் அவராகவே, அவர் அரூப அம்ஸ மாகவே ஆகிக்கொள்வதையே பெரிய அழிவென்று சொல்லப்படும். பூலோகம் அழிவதற்கு முன்னேயே மனிதன் இந்தப் பதவிக்கு ஆளாகலாம்!

13. மரித்த ஆவிகள் அணிந்திருக்கும் உடைகளைத் துண்டித்துக் கொண்டால் அது எப்படி கொஞ்ச நேரத்தில் புகைந்து காணா மல் போகிறதோ அவ்வாறே "பயாஸ்கோப்பில்" காணும் காக்ஷி யைப்போல் வெளியாயிருக்கிற நரகம் சொர்க்கங்களும், மற்றெல்லா உலகங்களும் சொற்ப நேரத்தில் புகைந்து ஆவியாகிப் பரிணமிக்க தக்கது எல்லாம் சுத்தப் பொய். கடவுள் உண்மையே மெய்!

14. முந்தின பதவியில் நாம் முயற்சித்து நமக்குக் கைகூடாமற் போனது இந்தப் பதவியில் கைகூடுகின்றது. இந்தப்பதவியில் கைகூடாமல் போனது அடுத்த பதவியில் கைகூடும். நம் ஆசை களெல்லாம் நிறைவேறாமல் நாம் மரணத்தை விரும்பாமல் அதற்குப் பயந்தவர்களாயிருக்க நம்மை வலுவந்தமாக நம்மை அறியாமல் கொண்டுபோகப்படுகிறது. ஆகையால், இது நமக்குக் கடைசி ஸ்தானமாகாது. சொர்க்கவாதிகள் நன்மை செய்வார்கள். நரகவாதிகள் தீமை செய்வார்கள். பூமியிலுள்ளவர்கள் இரண் டையும் செய்வார்கள். ஞானிகளுக்கோ இரண்டுமில்லை. இவர் களுக்குத் தீமையோ இரும்பு விலங்கு. நன்மையோ தங்க விலங்கு! இவர்களுக்குக் கடவுளைத்தவிர ஒன்றும் தெரியாது.

15. இறந்தவன் உடனே பிறக்கிறதும், நரகம் அல்லது சொர்க் கம் புகுவதுமில்லை. ஆத்ம சம்பந்தம் அல்லது சூக்ஷ்ம சம்பந்த மான நரகம் அல்லது சொர்க்கத்தை அனுபவிப்பான். இது அவன் கொள்கை விஸ்வாசத்திற்கும் செயலுக்கும் தக்கபடி ஏற்படும். ஒரு மனிதனைப் பாம்பு கடிக்குமானால் அவனைப் பாம்பு உபத்திரவப்

படுத்தினதாக நினைப்பாய் ; பாம்போ அவனைக் கடித்துவிட்டுப் போய்விட்டது. பின்பு அவனை விஷம் உபத்திரவப்படுத்தினதாக நினைப்பாய். விஷமோ அவன் சரீரத்தில் தாவியும், அதன் உணர்ச்சி இல்லாவிட்டால் ஒன்றும் செய்யாது. இன்பமும் துன்பமும் அறிவினாலேயே உண்டாகின்றன. ஆகையால் நம் அறிவிலேயே பாம்பு, தேள், நெருப்பு இன்றி-பாம்பு, தேள், நெருப்பின் வேத னையும்,கனிவர்க்கம், பெண், உணவு இன்றி-கனி வர்க்கம், பெண், உணவின் இன்பத்தையும் காட்டப்படும்.

16. நமது துர்ச்செயல்களும், கெட்ட எண்ணங்களும் பாம்பு, தேள், நெருப்பாகவும், நமது நல்ல விசுவாசம்-நல்ல எண்ணங்கள் தோட்டமாகவும், நந்தவனமாகவும், நமது நல்ல செய்கைகள் கனி வர்க்கம், பெண்கள், நல்ல உணவுகளாகவும் காட்டப்படும். ஒரு வன் சரீரத்தில் அக்கினி அதிகப்பட்டால் கனவில் நெருப்பைப் பிரத்தியக்ஷமாக அடிக்கடி காணுவான். அப்படியே ஒருவன் சரீ ரத்தில் ஜலம் அதிகப்பட்டால் கனவில் ஜலத்தைப் பிரத்தியக்ஷ மாகக் காணுவதுமன்றி அதில் அடிக்கடி நீந்தவும் காண்பான். அப்படியே ஒருவனுக்கு வாயு அதிகப்பட்டால் கனவில் அடிக்கடிப் பறக்கக் காணுகிறான். இவனுக்கு எந்தக் கொள்கை-எந்தச் செயல் இருந்ததோ அதற்குத்தக்கவாறு அதன் குணம் அல்லது பிம்பத்தைப் பிரத்தியக்ஷமாகக் காண்பான்.

17. கனவில் உள்ளவன் தன்னை விழிப்பிலிருப்பதாக நினைத்து தன்னில் இல்லாத பொருள்களையெல்லாம் தன் எண்ணத்தில் உண்டாக்கிக் கொண்டு அவைகளைப் பிரத்தியக்ஷமாகக் காண்கி றான். தனக்கு சரீரமிருப்பதாகவும் தான் காண்கிற வஸ்துகளெல் லாம் உண்மையானதென்றும், கனவை விட்டு விழிக்கச் சக்தி பெறாதவனாகவும் இருக்கிறான். இதே பிரகாரம் சூக்ஷ்மத்தில் காணும் காக்ஷிகளும் அநுபோகங்களும் மெய்யாகவே தோன்றும். ஆனால் கனவுக்கும் விழிப்புக்குங்கூட கிஞ்சிற்றேனும் வித்தியாசம் இல்லை. கனவோ சிறியது, விழிப்போ பெரிய கனவாயிருக்கின்றன!

18. சூக்ஷ்மத்திலும் தனக்குக் கண்டிப்பைப்போல் ஜடமிருப்ப தாகத் தோன்றும். சூக்ஷ்மம் பஞ்சேந்திரியங்களின் ஜடமாகவும், அதிகப்பிரகாசமுள்ளதாகவும், ஆகாயத்தில் சில தூரம் செல்லக் கூடியதாகவும் இருக்கும். இதுவே நல்ல புண்ணியவான்களின் ஆவி. பாவி, அல்லது உலகாசையில் சிக்கின சூக்ஷ்மம் அல்லது ஆவியானது கொஞ்சம் பூத சம்பந்தமுள்ளதாகவும் இருண்டதாக வும் இருக்கும். இதற்கு மேலே அதிகமாய் உயர சக்தியிராது. இது

www.miskinsha.blogspot.com

பூமியையே நோட்டமிட்டதாகத் தன் அபேட்சைகளைப் பூமியில் நிறைவேற்றிக்கொள்ளத் தனக்குக் கண்டிப்பாள ஜடமில்லாததால் யாதொன்றும் பூமியில் செய்து கொள்ளச் சக்தியற்றதாய்க் கவலைப் பட்டுக்குராவிக்கொண்டு, முணங்கிக் கொண்டிருக்கும்.

19. சிலது தனக்கு எந்த விஷயத்தில் ஆசை அதிகமாயிருக் கிறதோ அந்த விஷயம் உயிராயிருக்கிற மனிதனில், எவனில் அதிக மூர்க்கமாயிருக்கிறதோ, இன்னும் அதிக ஞானமில்லாமல் அது விரும்பிய விஷயத்தில் சற்றேறக்குறைய சமமாயிருப்பானோ அவனைக் கண்டால், அவன் சரீரத்தில் சம்பந்தப்பட்டு அவனைக் கொண்டு அந்த அபேட்சைகளைத் தீர்த்துக் கொள்ளப்பார்க்கும். அதற்கு நாம் செய்யும் கிரியைகளினால் சாந்த குணமுண்டாகும். இதுவே கெட்ட ஆவி. சூக்ஷுமம் எண்ணத்துக்கு வழிப்பட்ட தாயிருக்கும். தான் எந்த ரூபத்தை நாடுகிறானோ, அதே ரூபத் தில் ஆகிக்கொள்ளும். சூக்ஷுமத்தைப்போல் சரீரத்தையும் வெளிக்குக் கொண்டு வந்தவர்கள் யோகிகள். சூக்ஷுமம் பதவிக் குத்தக்கபடி மேலே உயரும். அது காணும் காக்ஷிகளும் அனுபவங் களும் அப்படியே!

20. பாவிகளுக்கு ஆசையே நெருப்பு! கெட்ட குணங்களே பாம்பு, தேள்! கெட்ட குணங்களின் பிரிவுகளே அதற்குத்தலை! சூக்ஷுமங்கள் நூற்றைம்பது வருடத்திற்குமேல் தன் பதவியை இழக்கும். ஆயிரத்தைநூறு வருடத்திற்குள் ஜனிக்காது. பதினா யிரம் வருடத்திற்குமேல் சுணங்காது. இது இந்த பூமி கோளத் தின் கணக்கு. மற்ற கோளங்களின் கணக்கல்ல!

21. சூரியனில் நின்றும் எழும்புகின்ற ஒளியின் அலைகள் உயிர் களாயிருக்கும். ஓர் அலை அதன் வட்டத்தைச் சுற்றி முடிக்க ஆயிரம் வருடம் செல்லும். இவ்விதம் ஏழு சுற்று ஏழாயிரம் வரு டத்தில் முடியும். ஒவ்வொரு சுற்றிற்கும் ஏழு வகை ஜெந்துக்கள் உண்டாகி அழியும். அதற்குமேல் அந்த அலை அடுத்த கிரகத் தில் தாவும். இந்த முறைப்படி ஏழு கிரகத்தைக் கடந்து அந்த அலை பூமிக்கு வரும். இதில் ஏழாவது சுற்றில் மனிதவர்க்க முண்டாகும். அதற்குமேல் அது அழிந்து அந்த அலை அடுத்த கிரகத்திற்குப் போகும். இவ்விதம் எண்பத்து நான்கு லக்ஷம் பதவிகள் அஞ்ஞானிகளுக்கு இருக்கின்றன!

22. நீ ஒருவன் பொருளைத் திருட இச்சிக்கிறாயே! உன் பொருளை ஒருவன் திருட இச்சிப்பாயா? நீ ஒருவன் ஸ்திரீயைப்

புணர இச்சிக்கிறாயே! உன் ஸ்திரீயை ஒருவன் புணர இச்சிப் பாயா?. உன் இருதயத்தில் கடவுள் இந்த வாக்கியத்தைக் கொத்தியிருப்பதை வாசித்துப்பார். நீ உனக்கு எதை விரும்பி யிருக்கிறாயோ அதையே பிறருக்கும் செய். நீ உனக்கு எதை விரும்பவில்லையோ அதைப் பிறருக்குச் செய்யாதே. தீமையை விட்டு விலகுவதற்கும் நன்மையைச் செய்து கொள்வதற்கும் இதை விட நல்ல பிரமாணமில்லை.

23. கனவில் காயம்பட்டால் விழித்தவுடன் ஒன்றுமில்லை. அவ் வாறே ஞானிகள் செயல். கனவில் ஸ்திரீபோகம் செய்யக்கண் டால் ஸ்கலிதமாய் விடுகின்றது. அவ்வாறே அஞ்ஞானிகள் செயல். கடவுள் சொல்கிறார்: "நம்மைத்தவிர வேறொரு கடவுளைக் கொள்ளாதே! குற்றவாளிகளை எப்போதும் மன்னிக்காதே! மன்னிக்கிறதனால் அவனுக்கும் மற்றவர்களுக்கும் நன்மை உண் டாகிறதாயிருந்தால் மன்னி; தண்டிக்கிறதினால் நன்மை உண்டா கிறதாயிருந்தால் தண்டி!"

24. உன் உயிருக்கும் உன் பொருளுக்கும் உன் மானத்திற்கும் நிச்சயமாகச் சேதம் வருகிறதாயிருந்தால் எதிர்த்துக்கொள். வெறும் வீண் வார்த்தைகளாயிருந்தால் எதிர்க்காதே. உன் சுபாவ குண மோ மிருகங்களின் குணம். உன் அறிவின் குணமோ தேவர் களின் குணம். உன் ஆத்ம குணமோ கடவுளின் குணம். உன் சுபாவ குணத்தைவிட்டு, அறிவின் குணத்திலாகி, ஆத்ம குணத் தில் வா!

25. சுபாவ குணம் எல்லாருக்கும் ஞானம் உண்டாவதற்கு முன் இயற்கையாக ஏற்படும். இதனால் தீங்கைத்தவிர நன்மை உண் டாகாது. அறிவின் குணமோ, புத்தியையும் ஞானத்தையும் அனு சரித்து நடக்காதவரையில் உண்டாகாது. இது நன்மையின் பேரில் அபேட்சையாகவும், தீமையின் பேரில் வெறுப்புள்ளதாகவுமிருக்கும். சில சமயம் சுபாவ குணத்தின் மூர்க்கத்தால் ஏமாந்து, சிறு குழந்தை போல் தடுமாறி பாவத்தில் விழுந்து தன்னையே நொந்து கொள்ளும். ஆத்ம குணமோ தன் உள்ளமை கடவுள் உள்ளமை என்றும், தன் தத்துவம் கடவுள் தத்துவமென்றும், தன் செயல் கடவுள் செயலென்றும் அறிந்து இருக்கும். இதனால் தீங் குண்டாகாது!

26. நீ வேறு, நான் வேறு என்ற வேற்றுமையான தீய குணம் இருந்தால், உனக்கு ஒரு விதம், எனக்கு ஒரு விதம் என்று

www.miskinsha.blogspot.com

செய்யச் சொல்லும். பக்ஷபாதமாக நடக்காமல் இருக்க முடியாது. ஆத்ம குணம் கடவுளை அறியாத வரையில் உண்டாகாது. கடவுள் என்றால் எல்லாவற்றையும் விட்டுக்கடந்தவர். ஒன்றிலுமில் லாதவரல்ல. உதாரணமாக: நம் கட்டிடத்திற்குள் ஆகாயமிருக் கிறது; அதற்குள் அடங்காமல் வெளியிலும் கடந்து நிற்கிறது. அவ்வாறே எல்லாவற்றையும், நமது எண்ணத்தையும் விட்டுக் கடந்து நின்றவரே கடவுள்! உலகமெல்லாம் அழிந்தாலும் ஆகாயத்தைப்போல் ஓர் உண்மை என்கிலும், ஆகாயத்திற்கும் அசலாயுள்ளது, ஒருபோதும் அழியாது, அதுவே கடவுளின் உண்மை!

27. கஸ்தூரி மானானது தனக்குள்ளிருக்கிற கஸ்தூரிக்காய் முற் றினவுடன் அதன் வாசனையைத் தன் சுவாசத்தில் எட்டிக்கொண்டு தனக்குள்ளிருந்து வாசனை என்றறியாமல், எந்த வாசனை? எங்கிருந்து வருகிறது? எனத்தேடிக் கிறுக்குக்கொண்டு அலை வது போல் நீயும் அலையாதே! எல்லாச்சுகமும் உனக்கு, உன் ஆத்மாவிலேயே இருக்கிறது. நீ அதை லக்ஷியம் பண்ணாமல் இருக்கிறாய்!

28. ஆகாயத்தில் பக்ஷி பறக்க நீ அதன் நிழலை வேட்டையாடப் பார்க்கிறாய். கல்லென்றறியாமல் எறும்பென்று வாலையாட்டிக் கொண்ட நாயைப்போல், நீயும் வாலாட்டுகிறாய். நிழலைப் புதைக்க உன்னால் முடியாது! சிறுகுழந்தைகளைப்போல் உன் நிழலைக்கண்டு நீயே பயப்படுகிறாய்! நரியாயிருப்பவன் சிங்க மாக முடியாது. மதங்கொண்ட யானை சிங்கத்தைக் கனவில் கண்டவுடன் ஒடுங்குவது போல் உன்னைக்கண்டு எல்லாம் ஒடுங் குவதை நீ அறியாமலிருக்கிறாய்!

29. உன்னையே ஆசித்தவனாகவும், உனக்கே பயந்தவனாகவும் இருக்கிறாய்! லாப நஷ்டமின்னதென உனக்குத் தெரியாது. கடவுள் உண்டு என எண்ணிக்கொண்டால் போதுமென்று எண் ணிக்கொண்டிருக்கிறாய். அவரை இல்லையென்று எண்ணிக் கொண்டால் அதனால் உண்டாகிற நஷ்டமென்ன? உன்னை நீ அறியாமலிருப்பதே பெரும் நஷ்டம். ஞானமில்லாமல் கட வுளை மட்டும் விஸ்வாசித்திருப்பதால் என்ன பயன்?

30. நன்மையும் தீமையும் கடவுளாலேயே உண்டாகின்றன! ஒரு வன் செயல் அவரைச் சந்தோஷத்திலும், ஒருவன் செயல் அவ ரைக் கோபத்திலும் ஆக்காது! மனிதன் செயல் அவரைப்பேதப்

படுத்தி விடாது. மனிதன் செயலைவிட அவர் தாழ்ந்தவரல்ல. கடவுள் பலஹீனமானவரல்ல. அவர் குணங்களும் தத்துவங்களும் பலஹீனமானதல்ல. பாவிகளைத் தண்டிப்பதும், நன்மைக்குக் கூலியளிப்பதும் அவர் நீதத்தில் நின்றுமுள்ளது. அவருக்கு ஆசையுமில்லை; வெறுப்புமில்லை. இஃதெல்லாம் அவர் அருப அம்ஸத்தைச் சேராது; அவர் சொரூப அம்ஸங்களையே சேரும்!

ஜெபங்கள்:

31. "நான் அரூப அம்ஸமாயிருக்கிறேன். என்னுள்ளமை கடவுளின் உள்ளமையாயிருக்கிறது. என்னில் எல்லா நன்மை களுமுண்டாயிருக்கிறது. என்னில் தீமையே இல்லை". என்று அனுதினமும் சிந்தித்து வா. உன்னில் தீமை சுருங்கி நன்மையே வளரக் காண்பாய்! இஃது ஒரு நல்ல ஜெபம்.

32. "நான் அகண்டமாயிருக்கிறேன். என் உள்ளமை கட வுளின் உள்ளமையாயிருக்கிறது. எனக்கு ஜடமில்லை. எனக்கு வறுமை இல்லை. எனக்குப் பிணியில்லை. எல்லாச் செல்வமும் எல்லாச் சுகமும் எனக்கே உடையது." என்று எப்போதும் சிந்தித்து வா! உனக்கு வறுமையும் பிணியும் உண் டாகாது. இஃது ஒரு நல்ல ஜெபம்.

33. "என்னில் கடவுள் இருக்கிறார். கடவுளில் நானிருக்கி றேன். என்னைவிட்டு அவர் நீங்கவில்லை. அவரைவிட்டு நான் நீங்கவில்லை எனக்கு மனதின் ஒடுக்கமும் சாந்தமு முண்டு. ஒன்றும் என்னைவிட்டு மீறாது. எல்லாவற்றையும் நான் அடக்கிக்கொள்வேன்." என்று எப்பொழுதும் சிந்தித்து வா. நீ சாந்தமுள்ளவனாகவும், எல்லாமுனக்கு வசியப்பட்ட தாயுமிருக்கும்! இஃது ஒரு நல்ல ஜபம்.

34. "நான் முடிவில்லாதவன்; என் உள்ளமை கடவுளைச் சேர்ந்தது; எல்லாத்தத்துவமும் என்னில் பூரணமாயிருக்கிறது. சகலமும் எனக்குக்கீழ்ப்பட்டது. என் கட்டளையை ஒன்றும் மீறாது. நானே எல்லாவற்றிற்கும் எஜமான்" என்று எப்போதும் சிந்தித்து வா. உன் ஆத்ம குணம் அதிகப்பட்டு, எல்லாம்உனக்குக் கீழ்பட்டு உன் கட்டளையை மீறாது! இஃது ஒரு நல்ல ஜெபம்.

35. "கடவுள் என்னில் பிரகாசிக்கிறார். அவர் தத்துவம் என் னில் பிரகாசிக்கிறது. நான் அவர் அம்சமாயிருக்கிறேன். முன் வினை என்னை ஒன்றும் செய்யாது. விதிப்பயன் என்னைத்

www.miskinsha.blogspot.com

தொட்டு அசைக்காது. நான் எல்லாவற்றையும் செய்து முடிப்பேன், நான் எல்லாவற்றையும் ஜெயிப்பேன். என்று எப்போதும் சிந்தித்து வா. நீ எடுத்த முயற்சி வீண் போகாது! இஃது ஒரு நல்ல ஜெபம்.

36. "நான் கடவுளின் நாட்டமாயிருக்கிறேன். என் நாட்டம் கடவுளின் நாட்டமாயிருக்கிறது. நான் சதாவும் மோக்ஷத்தில் இருக்கிறேன். என்னில் ஆத்ம தத்துவம் அதிகப்பட்டு வருகிறது. என்னில் அற்புதம்செய்யும் சக்தியுண்டாகிறது. நான் நித்தியன்." என்று எப்போதும் சிந்தித்து வா. உனக்கு அற்புதம் செய்யும் சக்தி உண்டாவதோடு மோக்ஷத்திற்கும் அருகனாவாய்! இஃது ஒரு நல்ல தபம்.

37. "நான் எல்லாவற்றையும் சூழ்ந்திருக்கிறேன். என்னைக் காலமும் இடமும் சிறைப்படுத்தாது. வறுமையையும் பிணியையும் அகற்றும் சக்தி என்னில் உண்டாயிருக்கிறது. இந்த மனிதனை சீமானாக்குகிறேன். இந்த மனிதனின் பிணியைத்தீர்க்கிறேன். நான் கடவுள். இவன் நாட்டத்தை நிறைவேற்றுகிறேன்." என்று எப்போதும் சிந்தித்து வா. உன்னில் பிணியையும் வறுமையையும் அகற்றும் சக்தியும், ஒருவன் நாட்டத்தை நிறைவேற்றும் சக்தியும் உண்டாகும். இஃது ஒரு நல்ல தபம்.

38. "என் சித்தம் அதிக வலுவானது. என் ஆத்ம தத்துவம் வெகு கெட்டியானது. எதையும் நான் சாதிப்பேன். எனக்கு அபஜயமில்லை. எல்லாம் என் நாட்டபடியே முடியும். என் நாட்டத்தை ஒன்றும் ஜயிக்காது. எனக்கு மாமிசம் எலும்பும் இல்லை. நிச்சயமாக நான் கடவுள் அரூப அம்சம். எனக்கு துவக்க முடிவில்லை. எனக்குக் காமம் கோபமில்லை. மெய்யாகவே நான் கடவுள். ஜகமெல்லாம் என் மாயை வடிவு. நானே எல்லாருக்கும் வரப்பிரசாதமளிக்கிறேன். எனக்கே எல்லா வணக்கமும்! இந்தப்பாவியின் பாவத்தை மன்னிக்கிறேன். இந்த ஆத்மாவை மோக்ஷத்திற்கு அனுப்புகிறேன். நானே கடவுள்!" என்று எப்போதும் சிந்தித்து வா. நீ ஒரு உயிரைப் பாவமன்னிப்புச் செய்து மோக்ஷத்திற்கு அனுப்பலாம்! இஃது ஒரு நல்ல தபம்.

39. "என் விகாசமோ முடிவில்லாதது. உலகமெல்லாம் எனக்கு ஓர் அணுவுக்குச் சமானம். என்னை அக்கினி சுடாது, ஜலம் அமுக்காது. எனக்கோ கனமில்லை. நான் ஆகாயத்தைவிட இலேசு. நான் பூலத்தில் நடப்பேன். ஆகாயத்தில் பறப்பேன்.

என்னைக்கண்டிப்பான வஸ்து ஒன்றும் நடை செய்யாது. ஜலத்தில் முக்குளித்துப் போவது போல் பூமிக்குள் செல்வேன். தீர்க்கால வர்த்தமானங்களை நானறிவேன்." எனச் சிந்தித்து வா. சித்துகளைச் செய்வாய்! இஃது ஒரு நல்ல தபம்.

40. ஜெப தபங்களின் போக்கை அறிய இந்த உதாரணங்களே போதும்! இதைப்போல் எந்தக்காரியம் அவசியமோ, அதற்குத் தக்கப்படி நடத்திக்கொள்ளவும் போதும். சுவாச அப்பியாசங்களில் போக வேண்டாம். அதில் அனேக அபாயங்களிருக்கின்றன! உன் மனதை வசப்படுத்தி உன் சித்தத்தை வலுவாக்கிக்கொள்ள எவ்வளவோ அப்பியாசங்களிருக்கின்றன. உன் மனதைக்கிஞ்சிற் றேனும் அசையாமல் செய்வதற்கு ஓர் உபாயம் சொல்கிறேன். அது மகான்களின் ரகசியம்! வேதாந்தின் முடிவு! எல்லாவற்றையும்விடச் சிறந்தது! இதைப் பக்குவமில்லாதவர்களுக்கு வெளிக்கிட உத்தரவில்லை. இதற்கு மேலாக ஒரு வழியுமில்லை! இதுவே மகா வாக்கியம்! முக்திக்கு இதைவிட வேறு வழியில்லை! இதில் உனக்குச் சந்தேகம் வருமானால் உன் தர்பாக்கியந்தான், சத்தியமாகச் சொல்கிறேன்! இதன் உண்மையை அனேகர் அறியவில்லை!

ராஜயோகத்தைச் சேர்ந்த முக்கியமான பயிற்சி :

41. "நீ உன் சரீரத்தையும், உலகத்திலுள்ள எல்லா வஸ்துக்களையும் உன் மனதால் அழித்து, மேல் கீழ், முன் பின், திசையற்று, முடிவில்லாத ஆகாயமாகிய வெட்ட வெளியாக இருந்து கொள்! உன் மனதில் அனேக ரூபங்களும், எண்ணங்களும் ஓடிவரும்; அதை நாசம் செய்து கொண்டிரு; சில காலத்தில் உனக்கு சொரூப நாசமுண்டாகும்! அதற்கு மேல் ஒரு சப்தம் உண்டாகும்! அதையே கேட்டுக்கொண்டு வா; அதில் உன் சுவாசம் அழிந்து போகும். அந்த தொனி உன்னில் எப்போதும் மாறாமல் கேட்டுக்கொண்டிருக்கும். நீயும் அந்த சப்தமயமாகவே ஆகிவிடுவாய்! அதற்குமேல் அஞ்ஞானமாகிய இருள் திரையைக் கடப்பாய்! அதற்குமேல் ஞானமாகிய ஒளியின் திரையைக் கடப்பாய்! அதற்குமேல் திருஷ்டிமயமாகிய பார்வையின் திரையைக் கடப்பாய்! அதற்குமேல் ஆசையாகிய இச்சையின் திரையைக் கடப்பாய்! அதற்குமேல் பூரணத்தை அடைவாய்! இதற்கிடையில் அனேக ஆகாஷமலோகங்களைக் காண்பாய்! தேவர்களையும், மகான்களின் ஆத்மாக்களையும் காண்பாய்! உனக்குச் சத்சங்கல்பமுண்டாகும்! உன் எண்ணத்திற்கு மாறாக ஒன்றும் நடக்காது! எல்லாச் சித்துக்கும் நீயே அருகனாவாய்!

www.miskinsha.blogspot.com

நீயே கடவுளாயிருப்பாய்! உன் மகத்துவத்தை யாரால் சொல்லக்கூடும்! மண்ணைப் பொன்னாக்குவாய்; பொன்னை மண்ணாக்குவாய்! இதற்குமேல் உனக்குப் பதவியில்லை!"

மற்ற அப்பியாசங்களினால் நீ சில பதவிகளைத்தான் கடக்கக்கூடும். எல்லாப் பதவிகளையும் கடக்கமாட்டாய். நீ ரத்தினத்தைச் சாதாரணக்கல்லாக நினைக்காதே! முத்தை நத்தை என்று எண்ணி இகைத்தோற்றுவிடாதே! இதை வாயினால் அபக்குவி (பக்குவம் இல்லாதவர்)களுக்கு உரைப்பதே பெரும் பாவம்!

குறிப்பு: "உலகத்தில் அழியாதது எதுவோ, பார்வையிலும் அறிவிலும் மறையாதது எதுவோ, அதுவே நாயன்! அஃதாவது, வெட்டவெளி! அது தான் நமக்கு (ரூஹு) ஆத்மா! அதைத் தான் ஷுஹூது (நிஷ்டை) செய்கிறது. முடிவில்லாத வணக்கம்! அஃது எப்படியென்றால்; முன்னும் பின்னும், மேலும் கீழும், வலது புறமும், இடது புறமும் முடிவில்லாத ஒரே வெட்ட வெளியைத்தவிர, நம் சரீரம் உள்பட மற்றெல்லா வஸ்துவையும் இல்லாமலாக்கி ஒரு ரூபத்தையும் பாராமல் அழித்துவிட்டு தனித்த வெட்டவெளிதான் நான் என்ற ஞாபகத்தைத் தவிர மற்ற எந்த ஞாபகமும் வராமல் பழகி வந்தால் அது "ஹாஸில்" (சித்தி) ஆகும்! அதற்குப்பின் உண்மையாக "கஷ்ஃபு" பரவச நிலை உண்டாகும். அற்புதங்களும் நடத்தலாம்! நாமே நம் அனுபவத்தில் (ஹக்கு) கடவுளாக இருந்து உலகத்தை நடத்துவோம்!

42. நன்மை தீமைகளின் கவலை உனக்கு வேண்டாம். நீ செய்யும் முயற்சிகள் இந்த வழிக்குப் பயனற்றது. உனக்கு ஒரு கொள்கையும் செயலும் வேண்டாம். நீ ஒவ்வொரு காரியத்தையும் உன் புத்தியைக் கொண்டு ஆலோசித்துக் காலத்துக்கும், சமயத்துக்கும் தக்கபடி செய். காலத்தையும் நேரத்தையும் கவனிக்காமல் செய்யும் செயல்கள் அறிவின் குணமாகாது. சுபாவ குணத்தைச் சேரும். அறிவின் குணத்தினாலேயே நன்மை உண்டாகும். சுபாவ குணத்தினால் தீமைதான் உண்டாகும். நன்மையினால் ஒற்றுமையும், தீமையினால் பகையும் உண்டாகும். இருக்கிற பொருளுக்குக் குணமுண்டு. இல்லாத பொருளுக்குக் குணமில்லை. இல்லை என்ற பொருள் வார்த்தையில் இருக்கிறதே தவிர அர்த்தத்தில் இல்லை. கடவுளைத்தவிர ஒரு பொருளுமில்லை! இல்லாததை உண்டு எனக்காண்பதே பொய்! மெய்க்குக் குணமுண்டு! பொய்க்குக் குணமில்லை. குணமில்லாததை நம்புவதே பெரும் பாவம்!

43. நீ உனக்கு யாதொரு லாபமும் நஷ்டமும் உண்டாகாத சமயத்தில் நிறும் சொல்வாய். உனக்கு நஷ்டம் உண்டாகிறதாயிருந்தால் சொல்லமாட்டாய். இஃது அறிவின் குணமல்ல, சுபாவ குணம்! புனராச்சித் நற்குவமுள்ள ஆண்களும் பெண்களும் தங்கள் புனர்ச்சியினால் தண்டனையும் மானக்கேடும் உண்டாகாத சமயம் வாய்க்குமானால், அப்பொழுது பற்றினித்தனத்தைக்காட்டுவதே (கற்புடன் நடந்து கொள்வதே) அறிவின் குணம்! அந்த நற்குவமில்லாதவர்களும், விருத்தாப்பியர்களும், சிறு குழந்தைகளும், புணர்ச்சியால் உண்டாகும் சங்கடங்களை உத்தேசித்து, அச்செயலை விட்டும் நீங்கி இருப்பவர்களும் சுபாவ குணத்தில் இருக்கிறார்கள். அறிவின் குணத்திலில்லை!

44. ஒருவன் உன்னிடம் அமானிதம் வைத்தால், அதைநீ அபகரித்தால் உனக்கு அபகீர்த்தி உண்டாகுமென்று அஞ்சி அதை ஒப்பிக்கிறாய். இது சுபாவ குணம். நீ அதை அபகரித்தால் உனக்கு அதனால் அபகீர்த்தி உண்டாகாத சமயமாயிருந்து அதை நீ ஒப்பிப்பதானால் இது அறிவின் குணமாகும். சிறு குழந்தைகளும், பைத்தியக்காரர்களும் அவர்களிடமிருக்கிற வஸ்துவைக் கேட்டால் ஒரு சமயம் கொடுப்பார்கள்; ஒரு சமயம் இல்லையென்பார்கள். இதனால் அவர்களைத் தர்ம சிந்தனை உள்ளவர்கள் என்றும், உலுத்தர்களென்றும் சொல்லக்கூடாது. இந்த குணங்கள் அவர்கள் அறிவின் ஆலோசனைப்படி உண்டாகவில்லை. தன்னையறியாமலே சுபாவச் செயல்களாய் வெளியாயிருக்கின்றன. ஆகையால், ஒருவன் கேட்டதைக் கொடுத்து விடுகிறது தர்மமல்ல, அது சுபாவச் செயல். கொடுக்க வேண்டியது அவசியமா என்பதைக் கண்டறிந்து செய்வதே அறிவின் குணம்! கொடாத சமயத்தில் கொடுப்பதும், கொடுக்க வேண்டிய சமயத்தில் அதைத்தவற விடுவதும் சுபாவ குணம்.

45. குழந்தைகளும் மிருகங்களும் கோபத்தினால் எதிர்க்க முற்படுவது வீரமல்ல! இது சுபாவ குணம். இதற்கு நன்மையில்லை. எதிர்க்க வேண்டியது அவசியந்தானா என்று புத்தியோடு எதிர்ப்பதே அறிவின் குணம். இதுதான் சரியான கந்த வீரம். இதற்குத்தான் நன்மையுண்டு. அப்படியே, அறிவுக்கு மாற்றமாகக் கொலை செய்வதும், அறிவுக்கு மாற்றமாகக் கொலை செய்யாமலிருப்பதும் சுபாவ குணம். அறிவின் குணமல்ல.

46. ஆசையும் அழகும் ஆண் பெண் இரண்டினத்திற்கும் பொதுவானது. ஆசை அழகைக் கவர்ச்சிக்கும். அழகோ அறிவின் வடிவு.

www.miskinsha.blogspot.com

ஆசையோ உள்ளமையின் முதல் தோற்றம்! ஆசை அழகின் நிமித்தம் சக்தி பூஜை, சிவன் பூஜை ஏற்பட்டுள்ளது. ஞானம் சிவன் பூஜை, சக்தி பூஜையல்ல, மானத பூஜை! மானத பூஜை யானது துட்பமாய் அறிவோர்க்கன்றி விளங்காது!

குறிப்பு "குன்து கன்Zஜன் மGக்னியான் ஃப அஹ்பய்த்து அன் உஃரிஃப ஹலக்துல் ஹல்க்க" "நான் மறைவாகிய புதை பொருளாயிருந்தேன். என்னை அறியப்பட உவந்தேன் – கல்கை– மனிதனைப்படைத்தேன், என்று அல்லாஹுத்தஆலா (கடவுளான வர் பரிசுத்த வாக்கியத்தில்) ஹதீதுகுத்ஸியில் திருவுளமானது போல், இச்சையினால் ஆன்மாவிலுண்டான அலைக்கு மனம் என்றும் அம்மனோ நோக்கத்தால் அம்மனதின் கண் எழும்பிய அலைக்கு ஜீவகாந்த ஒளி (ரூஹல்ஹைவானி) என்றும் பெயர். ஆதலால், இந்த ஒளியை மனமென்றாவது, ஆன்மாவென்றாவது, இச்சாசக்தி (இஷ்குஹுப்பு) என்றாவது சொல்லலாம். இந்த ஒளி அறிவாகவும், இந்த எண்ணம் பார்வையாகவும் இருக்கிறது. இதனோடு இச்சையும் சம்பந்தப்பட்டிருக்கிறது. இந்த இச்சையில் தொனியும் இருக்கிறது."

47. முடிவற்ற கடவுளே முடிவற்ற ஆத்மா! முடிவற்ற ஆத்மாவே முடிவற்ற ஆகாயம்! முடிவற்ற ஆகாயமே முடிவற்ற எல்லாம்! முடிவற்ற எல்லாமே முடிவற்ற நான்! என் அருப அம்சமே கடவுள்! என் சொரூப அம்சங்களே சிருஷ்டிப்புகள்!

குறிப்பு : "மனதின் பிரதிநிதி ஆகாயம். ஆகாயத்திலுள்ள உலகங் களும், அதில் நிறைந்துள்ள தத்துவங்களும் மனதின் தத்துவங்களா யிருக்கின்றன. மனமோ ஆத்மாவின் தத்துவம். ஆத்மாவோ கடவுளின் தத்துவமாயிருக்கின்றன! ஆகையால், இவைகளைப் பூத ஆகாயம், மன ஆகாயம், ஆன்மாகாயம், பிர்மாகாயம் என நான்கு பிரிவுகளாகச் சொல்லலாம்."

48. ஞானிகளை நிந்திக்கிறவன் நீண்ட காலம் மலக்கிருமிகளாக மலத்தில் நெளிந்து கொண்டிருப்பான். நான்கு லக்ஷம் வருடம் அதில் ஜனிப்பான் அவன் செய்கிற நன்மைகள் ஞானிக்கும், ஞானி செய்கிற தீமைகள் அவனுக்கும் அளிக்கப்படுகிறது!

49. குடையைச் சுருக்கிக்கொண்டு மழை இடுக்கில் நுழைந்து மழையில் நனையாமல் போக முயல்வது கூடாத காரியம். அவ் வாறே தற்போதத்தை விட்டு அருள் குடையை விரிக்காமல் உலக மாயையைக் கடத்துவது சாத்தியப்படாது!

50. வெள்ளத்தில் மிதந்து போகிற கரடிக்குட்டியைக் கோனான் ஆட்டுக்குட்டியென மீட்கப் போகுங்காலையில், அவனைக் கெட்டியாய்ப்பிடித்துக் கொண்டது (கரடிகுட்டி). இருவரும் ஜலத்தில் மாண்டார்கள். அவ்வாறே ஆகும் உலக மாயையைக் கடத்த ஞானியென்றெண்ணி அஞ்ஞானியிடம் சென்ற மாணாக்கர்கள் கதி. இன்னும், அறிவில்லாதவனிடம் சென்ற ஞானியின் கதியும் அவ்வாறேயாம்!

மெஸ்மரிஸ வித்தையின் மகிமை

(ஆத்மஞான மகத்துவம்)

மெஸ்மரிஸ வித்தையானது மிகவும் பூர்வீகமானது. இது இலே சானதல்ல. மகா வலுப்பமானது. கிரேக்க தேசத்து ஃபிலாஸோ ஃபர்களாகிய தத்துவ ஞானிகளில் சிலர் "உலமாயெயிஷ்ராக்" என்னும் ஆத்ம ஞானிகளாயிருந்தனர். இவர்கள் தூரத்தில் வரு கிற பிணியாளிகளை நோக்கி அவர்களை யாதொன்றும் விசாரி யாமல், தமது ஆத்ம தத்துவங்களினால் அவர்களின் உள்ளத்தின் கருத்துக்களை உணர்ந்து அவர்களுக்கு யாதொரு ஔஷதமும் கொடாமல், தமது சரீரங்களில் நின்றும் அனிமல் மேக்னடி ஸம், அல்லது ஹைவானி மக்னாத்தீஸென்னும் ஜீவகாந்த ஒளியை அவர்கள் மேல் விசி, அவர்கள் பிணிகளைச் சுகப்படுத்திக் கொண்டிருந்தனர். இன்னும் அவர்கள் இம்மெஸ்மரிஸ வித்தை யின் மூலமாக பிரபஞ்சங்களில் புதைப் பொருளாயிருக்கிற மகா நுட்பமான அந்தரங்க இயற்கைகளில் நமது புத்திக்கு மட்டுப் படாத அனேக இரகசியங்களைக் கண்டறிந்தனர்!

அன்றி மெஸ்மரிஸ ஞானமானது சகல மதங்களுக்கும் உயி ராயிருப்பதுமன்றி, சகல மத மூலாசிரியர்களின் மூல தத்துவமும் இஃதேயாம்! தவிர சகல மதங்களின் உண்மையும், அஷ்டமாசித்தி யின் மூலதத்துவமும் இவ்வித்தையேயாம்! மோஸே (மூஸா) என் னும் தீர்க்கதரிசிக்கு அவர் வித்தியாப்பியாசஞ் செய்துகொண்டிருக்கும் போது ஹெல்ப்பொலெஸென்னும் ஸ்தலத்தில் இவ்வித்தையையே கற்பிக்கப்பட்டதாம். ஜூதியா, இன்னும் எகிப்து தேசத்துப் பூசாரி களால் இயேசு என்னும் தீர்க்கதரிசிக்கு இவ்வித்தையையே கற் பிக்கப்பட்டதென்றும், மூவாயிர வருடத்திற்கு அதிகமாகவே

www.miskinsha.blogspot.com

ஹிந்து, இன்னும் எகிப்து தேசத்து பூசாரிகளின் வசத்தில் இவ் வித்தை இருந்துவந்ததென்றும் உரோபாள்டென்பவர் எழுதி யிருக்கின்றனர். இன்னும், இவ்வித்தையின் உண்மையை அறி யாத வரையில் மதங்களின் உண்மைகளை ஸ்தாபிக்க இயலாது. சகல மத மூலாசிரியர்களின் மூலப்பொருளும், அகமியமும் இதுவே என்பது திண்ணம்!

(நூஹ்) நோவா என்னும் தீர்க்கதரிசி காலத்திலுள்ள மதங்களின் இதிகாசங்களில், அடிக்கடி இவ்வித்தையின் அடையாளங்கள் காணப்படுகின்றன. சற்றேறக்குறைய கிருஸ்துக்கு 500 வருடத் துக்கு முன்னுள்ள ஹக்கீம் பிதாகோரஸ் என்னும் தத்துவ சாஸ் திரி தமது சீடர்களுக்கு இவ்வித்தையைக் கற்பிக்கும்போது, மிரு கங்களின் பேரில் தமது ஜீவகாந்த (ப்பவரை) ஒளியைச் செலுத் திப் பரிசோதித்துக் காட்டிக்கொண்டிருந்தார். ஒரு விடுத்தம் தமது ஜீவகாந்தந் தத்துவத்தினால், ஒரு குரூரமான காடுயை ஒரு நிமி ஷத்திற்குள் தன் சித்தத்திற்குக் கீழ்படுத்திவிட்டார். மறுவிடுத்தம் ஒரு மகாப்பசியுள்ள எருதுக்கு முன் தினையை வைத்து தமது ஜீவ காந்த தத்துவத்தின் வலுவினால், அதைத் தின்ன விடாமல் தடுத்துவிட்டார். இன்னொரு விடுத்தம் ஆகாயத்தின்கண் மிக உயரத்தில் பறந்து கொண்டிருந்த ஓர் இராஜாளியை தமது கண், தமது தையின் ஜீவ காந்தத் தத்துவத்தைக் கொண்டு அதைப் பறக்காமல் தடுத்துக்கொண்டார்.

1878-வது ஆண்டில் மெஸ்மர் என்பவர் பாரிஸ் நகரத்தில் இவ்வித்தையினால் அனேக விந்தைகளைச் செய்து மாவிடர்களை ஆச்சரியப்படுத்திவிட்டார். இவ்வித்தையை நம்பாதவர்கள் தமது ஆத்மாவையே நம்பாதவர்கள்! இவ்வித்தையைப் பழிப்பவர்கள் தமது ஆத்மாவையே பழிக்கின்றவர்கள்! இவ்வித்தையானது முக்திக்குக் காரணமாயுள்ளது! ஏனெனில், சகல மதங்களிலும் முக்திக்குக் காரணமாயுள்ள வழி இரண்டே! முதலாவது ஞானமல் லது விசுவாசம். இரண்டாவது தபமல்லது யோகம்! மெஸ்மரிஸ ஞானமானது யோகத்தைச் சேர்ந்தது. தபத்தினால் இது சித்தி ஆகின்றது. மனிதர்கள் ஞானத்தினால் ஜீவ முக்தியையும், யோகத் தினால் விதேகமுக்தியையும் அடைவார்கள்! ஜீவமுக்தியென்பது சரீர சம்பந்தத்துடன் கடவுளில் கலந்திருப்பது. விதேக முக்தி யென்பது சரீரம் சம்பந்தமின்றி கடவுளில் கலந்திருப்பது! இது மகாப்பெரிய பதவி! ஏனென்றால், சரீர சம்பந்தமிருக்கிற வரையில் மனதின் தடிப்பு நீங்காது. கடவுளிடம் தெளிவானச் சேர்மானம்

கிடைக்காது! இவ்வித்தையில் முற்றிலும் சித்தி பெற்றவர்கள் அட்டமா சித்தியில் முற்றிலும் சித்தி பெற்றவர்களே!

ஆனால், முகம்மதியர்களில் ஜீவ முக்தர்களை காமிலீன்களாகிய சித்தர்களென்றும், விதேகமுக்தர்களை வாசிலீன்களாகிய முக்தர்களென்றும், ஜீவமுக்தர்கள் மரணத்திற்குபின் விதேக முக்தியை அடைவார்களென்றும் கூறுகின்றனர். ஆ! இதன் மகத்துவத்தை யாரால் சொல்லக்கூடும்? ஐயோ! இதை இலேசாக எண்ணுகிறவர்கள் தமது மதங்களின் உண்மைகளைத் தீர்க்கமாய் விசாரித்து உணராத குற்றமென்பதில் சந்தேகமில்லையன்றோ?

தற்போது இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இவ்வித்தை யைச் செய்பவர்கள், இவ்வித்தையில் முற்றிலும் சித்தி பெறாதவர் களே! சொற்ப அப்பியாசத்தின் ஆத்ம தத்துவ விருத்தியினால் வியக்கத்தக்க அனேக அற்புதங்களைச் செய்கின்றனர்! சுமார் முப்பது வருஷத்திற்கு முன்பு இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் இவ்வித்தையைக் குறித்துச் சிலர் சந்தேகித்துக்கொண்டிருந்தனர். தற்போது இவ்வித்தையின் உண்மையை உணராதவர்களைக் கல்வி வான்களென்று மதிக்கப்படவில்லை. முற்காலத்தில் கல்விப் புத்த கங்கள் மிகவும் அருமை. கையெழுத்துக்களில் மிகவும் விலை பெற்றதாக இருந்தது. அப்போது மாவிடர்கள் இவ்விதக் கல்வி அல்லது ஞானங்களை புதை பொருளாய் வைத்து மறைத்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் கற்றவர்களும் மற்றவர்களுக்குக் கற்றுக்கொடாமல் எப்போதும் மறைத்துக்கொண்டே இருந்தார்கள். இக்காலத்தில் யாவரும் எளிதில் இவ்வித்தைகளை இலேசாகக் கற்றுக்கொள்ளலாம். உலகத்தில் இவ்வித வித்தைகளைக் கற்ற வர்கள் ஆடவர்களிலும் ஸ்திரீகளிலும் 30 வருடத்திற்கு முன் 30,000 பெயரிருந்தார்கள். 20 வருடத்திற்கு முன் 3,00,000 பேர் இருந்தார்கள். தற்போது 30,00,000 பேர் இருந்தார்கள்.

இன்னும் 1658-வது ஆண்டில், அயர்லாண்டிலுள்ள மாஜிஸ் டிரேட் மிஸ்டர் கிரேட்ரேக்ஸ் என்பவர் பரோபகாரச் சித்தமுள்ள வராய் அனேக நாடுகளைச்சுற்றி, அனேக நோயாளிகளைத்தேடி, யாதொரு ஃபீசும் வாங்காமல் தமது சொந்தப்பணத்தைச் செலவு செய்து கொண்டு, மகாக் கடுமையான அனேக ரோகங்களைத் தூரத்திலிருந்து இழுத்துச் சுகப்படுத்திக்கொண்டு திரிந்தனராம்! இதைக்குறித்து ஒவ்வொரு கல்வி அல்லது ஞானங்களையும் பரிசோதிக்கும்படி ஏற்பட்ட லண்டன் ராயல் ஏஷியடிக் சொஸைட்டி என்னும் சங்கத்தார் தமது ரிப்போர்ட்டுகளில் எழுதி

www.miskinsha.blogspot.com

இருக்கின்றார்கள். இன்னும் "வர்ஜல்" என்னும் ஒரு தத்துவசாஸ்திரி எழுதுகிறார்: ஒரு கிருஸ்துவ பாதிரியும், அமிரோப்பர் லேட்டென்னும் ஒரு பூசாரியும் இவ்வித்தையின் தத்துவத்தினால், சர்ப்பங்களை மயக்கித் தூங்க வைக்கவும், அதன் கோபங்களைத் தணிக்கவும், அவை தீண்டிய விஷங்களை இறக்கவும் கூடியவர்களாய் இருந்தனராம்.

இன்னும் மிஸ்டர் வார்பிர்ட்டனென்பவர் தம்முடைய "கிரெஸென்ட் அண்டு கிராஸ்" என்னும் புத்தகத்தில் எழுதுகிறார்: எகிப்து தேசத்தார் இவ்வித்தையைச் செம்மையாக அறிந்திருந்தார்களென்றும், அவர்களின் புத்தகங்களில் இவ்வித்தையின் தத்துவங்களைக்குறித்து அடிக்கடி எழுதப்பட்டிருக்கின்றன என்றும், வைத்தியங்களுக்குச் சொந்தமாக ஏற்பட்ட ஓர் அறைக்குள் ஒருவன் மற்றொருவன் பேரில் மெஸ்மரிஸம் செய்வது போலும், மெஸ்மரிஸம் செய்யப்படுகிறவனுக்குப் பின்புறத்தில் ஒரு வேலைக்காரன் அவனுக்குக் காந்த உறக்கம் உண்டானவுடன் அவன் சிரசைப் பிடித்துக் கொள்வதற்காக தயாராய் நிற்பது போலும் சித்திரங்கள் எழுதப்பட்டிருக்கின்றவனவாம்!

மேலும், தேபியீஸெஸென்னும் ஆலயம் மெஸ்மரிஸ வித்தையினால் வியாதிகளைச் சுகப்படுத்துவதற்காகவே கட்டப்பட்டன என்று பழைய சரித்திரங்கள் கூறுகின்றன. இன்னும், டய்வாட்ர ஸென்பவர் தம்முடைய புத்தகத்தில் எழுதுகிறார்: வைத்தியர்களால் கைவிடப்பட்ட அனேக நோயாளிகள் அத்த ஆலயத்துக்குள் புகுந்து வெளியில் வருவதற்கு முன் சுகமடைந்தனராம். இன்னும் சில ஆலயங்களுக்கு இதைவிட அதிக சக்தியை இவ்வித்தையினால் உண்டாக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு ஜாதியிலும் இவ்வித்தை தெரிந்தவர்கள் இருந்தேயிருக்கிறார்கள்! இன்னும் லண்டனில் மெஸ்மரிஸ வித்தையினால் வியாதிகளைச் சுகப்படுத்துவதற்காக "மெஸ்மரிக் இன்பர் மெரி" யென்னும் ஆஸ்பத்திரி உண்டாக்கி சுமார் 25 வருடமாகிறது. இதன் வருஷாந்திர ரிப்போர்ட்களினால் தெரிய வருகிறதாவது: இதனால், மாவிடர்களுக்கு வெகு சகாயம் ஏற்பட்டதுமன்றி, வைத்தியர்களினால் கைவிடப்பட்ட அனேக வியாதிகளில் குஷ்டம் முதல் மருந்தன்னியில் சுகப்படுத்தப்பட்டனவாம்!

சுமார் 30 வருடத்துக்கு முன் பஞ்சாப் தேசத்தில் ஒரு யோகியானவர், மிருகங்களையும், கற்களையும் பேச வைத்தனராம்.

இன்னும், 1876 ஆண்டின் வெல்டன் துரையுடைய "இஸ்ப் பிரீச்சுவலிஸ" "மென்னும் (Spiritualism) புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கிறதாவது: அஸிஸிலுள்ள ஸைன்ட்பிரான்ஸிஸ் (Saint Francis) என்பவரை அனேகர் ஆகாயத்தில் பறக்கக்கண்டனராம். ஸைன்ட்திரேஸா என்னும் ஒரு மாது மற்றக் கன்னியாஸ்திரீகளுக்கு முன் ஆகாயத்தில் பறந்தனளாம்.

இன்னும் லார்டு ஹூரியென்பவரும், மிஸ்டர் வேலன்டைன் கிரேட் ராக் என்பவரும், டாக்டர் ஹென்றிமோர் என்பவருக்கும், மிஸ்டர் கிலான்வெல் என்பவருக்கும் சொன்னதாவது: "அயர்லாண்டைச் சேர்ந்த ராக்கலியென்னும் நகரத்தில் லார்டு கானவேயினுடைய வீட்டில், ஒரு துரையின் காரியதரிசியானவர் நாங்கள் உணவருந்திக் கொண்டிருக்கும் போது எங்களுக்கு முன்பாக ஆகாயத்தில் எழும்பிப் பறந்து கொண்டிருந்தனர்" என்றனராம். இதைக் குறித்து கிலான்வெல் என்பவர் தம்முடைய "ஸேட்டோஸ் பம்ஸ்டிராய் அம்பிடஸ்" என்னும் புத்தகத்தில் எழுதி இருக்கின்றார். இன்னும் டேயிலர் (Tailor) என்பவர் தம்முடைய சரித்திரத்தில், லண்டனிலுள்ள 50 கண்ணியவான்களுக்கு முன்பாக, மிஸ்டர் ஹூம் என்பவர் ஆகாயத்தில் பறந்தாரென்றும், தமக்கும், மற்ற அனேகருக்கும் இது தெரிந்த விஷயமே என்றும் எழுதியிருக்கிறார். இன்னும் ஜாவாவில் சிலர் புலியாகவும், முதலையாகவும் ரூபம் எடுக்க வல்லமையடைந்திருக்கின்றனராம். நம்முடைய காலத்திலிருந்த மேடம் பிளாவாட்ஸகி என்னும் அம்மாள் தம்முடைய ஆத்ம தத்துவத்தினால், காணாமற்போன நகைகளை கண்டுபிடித்ததும், ஆகாய மார்க்கமாகக் கடிதங்களைத் தருவித்ததும், உடைந்த பாத்திரங்களை பொருத்தினதும், இறந்துபோன மனிதர்களைக் கூப்பிட்டுக்காட்டிப் பேச வைத்ததுமல்லாமல், ஷம்லாவில் புஷ்பத்தினால் மழை வருஷிக்கச் செய்ததும், காட்டில் ஆவிபறக்கத் தேத்தண்ணீர்க் கோப்பைகளையும், சுருட்டு முதலிய வைகளையும் தருவித்து விருந்தளித்ததும், இந்தியா, அமெரிக்கா, எகிப்து முதலிய இடங்களில் செய்த பல அற்புதங்களும். தியாஸோபிக்கல் சொஸைட்டி என்னும் சங்கத்தின் வருஷாந்திர ரிப்போர்ட்டுகளினால் தெரியவரும். இந்த அம்மாளின் சரித்திரம் மிகவும் வியக்கத்தக்கது!

இன்னும், "தியாஸோஃபிஸ்ட்" என்னும் புத்தகம், 15 வது வால்யூம் 7-வது அத்தியாயம். 407-வது பக்கத்தில் கர்னல் அல்காட் துரை எழுதியிருக்கிறதாவது: "1876-வது ஆண்டில் நாங்கள்

www.miskinsha.blogspot.com

நியூயார்க்கில், 34-நெம்பர் வீதியில் இருக்கும்போது ஓர் இரவு நானும் மேடம் பிளாவாட்ஸ்கியென்னும் அம்மாளும் அயிஸெஸ் அன்வைல்டென்னும் புத்தகத்தின் ஓர் அத்தியாயத்தை எழுதி முடித்துவிட்டு, மஸோதாவைப் பெட்டிக்குள் வைத்துவிட்டு கள்ளர்களுடைய அச்சத்தினால் கதவுகளுக்குப் பூட்டுப் போட்டுவிட்டு, அந்த அம்மாள் தம்முடைய காமராவுக்கும், (காமரா-அறை) நான் என்னுடைய காமராவுக்கும், படுக்கைக்காக போய்விட்டோம். நான் என்னுடைய உடுப்புக்களைக் களைந்து கொண்டிருக்கும்போது இன்ன வாக்கியத்தில் இன்னின்ன வார்த்தைகளை அதிகப்படுத்தி விட்டால் அவ்வாக்கியத்தின் கருத்துகள் அதிகத் தெளிவாய்விடுமென என் கருத்தில் புலப்பட்டது. அதோடு நாளைக் காலை வரையில் அவ்வார்த்தைகள் என் ஞாபகத்தில் தங்குமோ, தங்காதோ? எனச்சந்தேகமும் ஏற்பட்டது. ஆதலால், நான் என்னுடைய சூக்ஷும சரீரத்தைக்கொண்டு, எழுதுகிற காமராவுக்குள் சென்று அவ்வார்த்தைகளை எழுதிவிட்டு வருவோமென்று நினைத்தேன். ஆனால் ஞாபகத்தோடு சூக்ஷும சரீரம் ஒரு போதும் நான் எடுத்ததில்லை. என்றாலும், இன்னவிதமாக எடுக்கிறதென வழி எனக்குத் தெரிந்தது. ஆகையால், அதுபோல் செய்தேன். காலைவரையில் எனக்கு யாதொன்றும் தெரியவில்லை. பின்பு காலையில் விழித்து என் ஆபீஸுக்குப் போவதற்காக அந்த அம்மாளுடைய காமராவின் வழியாகச் சென்றேன்.

அந்த அம்மாள் என்னை, "நீர் படுக்கைக்குப் போனபின் எழுதுகிற காமராவில் வந்து என்ன செய்து கொண்டிருந்தீர்?" என விசாரித்தார்கள். அதற்கு நான், அவ்விதம் விசாரிப்பதேன்? அவ்விடம் நடந்தது யாது? என வினவினேன். அதற்கு அந்த அம்மாள், "நான் கட்டிலில் படுத்தவுடன் உம்முடைய சூக்ஷும சரீரத்தைக் கவரில் நின்றும் வெளிப்படக்கண்டேன். அஃதானது உறக்கத்தில் உணர்ச்சியற்றிருப்பது போல் தோன்றியது. நான் சத்தமும் கொடுத்தேன். அதற்கு பதில் சொல்லவில்லை. நேராக எழுதுகிற காமராவுக்குச் சென்று கொஞ்ச நேரம் கடிதங்களைப் புரட்டிக் கொண்டிருந்துவிட்டு மறைந்து விட்டது" என்றார்கள். அப்போது நான் என் கருத்தை வெளியாக்கினேன். பின்பு நாங்கள் இருவரும் எழுதுகிற காமராவுக்குச் சென்று மஸோதாவைச் சோதித்தோம். அதில் இரண்டு வார்த்தைகள் மட்டும் சரியாக எழுதப்பட்டிருந்தன. ஒரு வார்த்தை சரியாக எழுதப்படவில்லை. ஒரு சமயம் இந்த விஷயத்திற்கு அதிக அவசியமான மன ஒர்மை அப்போது தவறியிருக்கலாமெனத் தோன்றுகின்றது."

இந்த வாக்கியத்தின் தொடர்ச்சியில் இன்னும் எழுதுகிறார்: தாம் ஒரு விடுத்தம் தம்முடைய ஆபீஸைப் பூட்ட மறந்து விட்டாராம். சூக்ஷும சரீரத்தில் போய்ப் பூட்டிவிட்டுத் திரும்பும்போது, சூக்ஷும சரீரமானது ஒரு கவற்றில் மோதிக்கொண்டு கண்ணில் காயம்பட்டுவிட்டதாம். காலையில் குளித்துவிட்டு கண்ணாடியில் பார்க்கும்போது தெரிய வந்ததாம். இதனால் வாசிப்பவர்கள் சூக்ஷும சரீரமெடுப்பது இரண்டு வகை உண்டென்றும், ஒன்று விழிப்பில் ஞாபகத்தோடு எடுப்பது, மற்றொன்று உறக்கத்தில் ஞாபகமற்று எடுப்பது. கர்னல் அல்காட் துரை இதில் உறக்கத்தில் ஞாபகமற்று எடுத்ததைக் குறித்துச் சொல்லியிருக்கிறார் என்றும் உணர்க!

இன்னஞ் சூக்ஷும சரீரமானது கண்டிப்பான வஸ்துக்களில் மெதுவாகத்தாக்கி, விரைவாகச் செல்லுமாகையால், அது ஒரு வஸ்தில் சடுதியில் தாக்குமாளால் ஒரு சமயம் சேதமுண்டாகலாம். அன்றி சூக்ஷுமத்திற்கும் சரீரத்துக்குமுள்ள ஒற்றுமையில் சில வித்தியாசங்களுண்டு. அதாவது: சூக்ஷுமத்துக்கு சேதம் உண்டானால் சரீரத்துக்கும் சேதமுண்டாகும். சரீரத்திற்கு சேதமுண்டானால் சூக்ஷுமத்துக்கு சேதமுண்டாகாது. ஆகையால், நமது எண்ணம் சூக்ஷும சம்பந்தமாக இருக்கும் போது ஸ்திரீ போகம் செய்யக் கனவு கண்டால் அக்குணம் நமது சரீரங்களில் தாவி ஸ்கலிதமாகி விடுகின்றது. இல்லாவிட்டால் அக்கனவு நினைவாக முடிகின்றது. ஆகையால், மேற்படித் துரையின் எண்ணம் சூக்ஷும சம்பந்தமாக இருந்தபடியால் அக்குணம் அவர் சரீரத்திலும் தாவினது என்று உணர்க.

பிரபஞ்சங்களுக்கு மூல தத்துவமாயிருப்பதே மெஸ்மரிஸ வித்தையின் மூல தத்துவம்! பிரபஞ்சத்தில் ஒரு வஸ்து மற்றொரு வஸ்தின் பேரில் இயற்கையாக மெஸ்மரிஸம் செய்கின்றது. ஆகையால், அவைகள் பேதமடைகின்றன. உதாரணமாக நம்முடைய சரீரத்தில் பிராண வாயு ஒன்றிநந்து அதன் செயலுக்கும் ஸ்தானத்துக்கும் தக்கபடி, அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் எனப் பல நாமங்களை அடைவது போல, பிரபஞ்சங்களின் உற்பத்திக்கும் அழிவுக்கும் காரணமாயுள்ள அம்மூல தத்துவமே (Attraction) கஷிஷ அல்லது கருஷணம் (கவர்ச்சி), (Chemical) கீமியா அல்லது பௌதிக கருஷணம் (ரசாயனம்), Electricity (மின்சாரம்) கஹரு பாயி அல்லது ஆம்பரிய கருஷணம் (Magnetism) மக்னாதிஸி அல்லது காந்த கருஷணம் (Cohesion) இத்திஸாலி அல்லது

www.miskinsha.blogspot.com

பிண்டகர கருஷணம் (Gravitation) தக்கலி (புவி ஈர்ப்பு) அல்லது கரும கருஷணம் எனப்பல தாதுக்களாக ஸ்தானத்துக்கும் செயலுக்கும் தக்கபடி வெவ்வேறு நாமங்களை அடைந்திருக்கின்றன! சில சமயங்களில் ஒரே தத்துவம் இரண்டு காரியங்களுக்குக் காரணமாயிருப்பதும் உண்டு. எவ்விதமெனில் தத்துவ ஞானத்தின்படி அக்கினிஜுவாலை நீராவி முதலியவைகளை மேல் நோக்கச் செய்யவும், கனமான வஸ்துக்களைக் கீழ் நோக்கச் செய்யவும் காரணமாய் இருப்பது பூமியின் இழுப்பாகிய (ஈர்ப்பு விசையே) கரும கருஷணமே! அஃதேனெனில், பூமிக்குச் சமீபத்திலுள்ள ஆகாயம் தடிப்பாகவும், மேலே செல்லச்செல்ல மெல்லினமாகவும் இருப்பதால், நீராவியும் அக்னி ஜுவாலையும் தன் சமூகத்திலிருக்கிற ஆகாயத்தையும் உஷ்ணப்படுத்தி மெல்லினமாக்கி விடுகின்றது. ஆகையால், தடிப்பான ஆகாயமானது தெருங்கி வியாபிப்பதற்காக உஷ்ணப்படுத்தப்பட்ட ஆகாயத்தை நீராவி அக்னி ஜுவாலையோடு மேலே எழுப்பி விடுகின்றது. ஆகையால், மேலேயிருக்கிற ஆகாயத்தின் மெல்லினமும் உஷ்ணப்படுத்தப்பட்ட ஆகாயத்தின் மெல்லினமும் செல்கின்றது. மற்றபடி ஆகாயமானது பூமியின் கவர்ச்சியினால் கீழ் நோக்கிக் கொண்டேயிருக்கின்றது. ஆகையால் பூமிக்குச் சமீபத்திலுள்ள ஆகாயம், மேலிருக்கிற ஆகாயத்தைவிட எப்போதும் தடிப்பாகவே இருக்கின்றன.

இவ்விதமாக ஒரே பொருள் பல இயற்கைக்கும், ஒரே தத்துவம் பல தொழிலுக்கும் காரணமாயிருந்து, ஸ்தானத்திற்கும், தொழிலுக்கும் தக்கபடி வெவ்வேறு நாமங்களைப் பெறுவதும் இயல்பு. கண்ணாடியானது பெரியதைச் சிறிதாக, சிறியதைப் பெரிதாகக் காட்டவும் தூரத்திலுள்ள வஸ்தை சமீபமாக, சமீபத்திலுள்ள வஸ்தைத் தூரமாகக் காட்டவும், அதன் அமைப்புக்குத்தக்கபடி அதன் இயல்பும் வேறுபடும். அப்படியே ஒவ்வொரு வஸ்தும் அதன் அமைப்புக்குத் தக்கபடி அதன் குணமும் இயற்கையும் வேறுபடும். மூலத்தில் ஒரே வஸ்தாக இருந்து கோலத்தில் அல்லது வேஷத்தில் பல வஸ்தாக பல நாமங்களைப் பெறுவதுண்டு. உதாரணமாக ஜலமானது – அலை, நுரை, குமிழியெனவும், பளிங்கானது பல பாத்திரமாகவும், இரும்பு-பல ஆயுதமாகவும், பொன் பல அணிமணியாகவும் மாறும். ஒரே குணம் பதவிக்குத்தக்க நாமங்களைப் பெறுவதும் உண்டு. அதாவது அம்மாறா, லவ்வாமா, முத்து மயின்னா அல்லது தாமதம், இராசதம், சாத்மீகம் எனப்படும்.

இன்னும் ஒரே வஸ்து பல தத்துவங்களைப் போடுவதும் உண்டு. சூரியனானது சற்றேறக்குறைய 730 தத்துவங்களைப்

பூமிக்குப் போடுவதாகக் கல்விமான்கள் உத்தேசிக்கிறார்கள். இன்னும் நமக்குத் தெரியாமல் எத்தனைத் தத்துவங்களைப் போடுகின்றதோ! இவ்வாறாக ஒரு கிரகம் மற்றொரு கிரகத்துக்குப் பல தத்துவங்களைப் போடுகின்றது. அல்லது ஒரு கிரகம் மற்றொரு கிரகத்தின் பேரில் மெஸ்மரிஸம் செய்கின்றது. நிறங்களில் சிகப்பு, மஞ்சள், நீலம் அசலாகவும், மற்ற நிறங்களெல்லாம் அவைகளின் சேர்மானத்தைக் கொண்டே உண்டாகிறதாகவும் தோற்றப்படுவது போல் பிரபஞ்சங்கள் சில மூலப்பொருள்களினால் உண்டாயிருப்பதாகத் தோன்றுகின்றது. என்றாலும், பிரபஞ்சங்களின் மூலப் பொருள்களாகிய பூதங்களுக்கு அசலாயிருப்பது வெட்ட வெளியாகிய ஆகாயமென்பதே அனேகர்களுடைய சித்தாந்தம். ஆகையால், ஒரே மூலப்பொருள் நாமத்தாலும் உருவத்தாலும் விகாரப்பட்டிருக்கின்றன என்று ஆத்ம ஞானிகள் கூறுகின்றனர். பிரபஞ்சங்களின் மூலப் பிரகிருதிகளுக்கெல்லாம் மூலமாயிருப்பது கடவுளின் சித்த தத்துவம்!

"ஒன்றென்பதற்கும், பலதென்பதற்கும், உண்டென்பதற்கும், இல்லையென்பதற்கும், அரூபத்திற்கும், சுரூபத்திற்கும், ஞானத்திற்கும், அஞ்ஞானத்திற்கும், மரணத்துக்கும், ஜீவிப்புக்கும், இன்னும் இரண்டு மாற்றம், அல்லது இரண்டு வேற்றுமையான குணம், செய்கை, இயல்பு அடங்கலுக்கும் காரணமாயிருப்பது கடவுள் சித்த தத்துவம். ஆகையால், பிரபஞ்சங்களைக் கடவுள் சித்தத்தின் தோற்றமென்றும், பிரபஞ்சங்களின் தத்துவங்களைக் கடவுளின் சித்த தத்துவமென்றும் சொல்லக்கூடும். கடவுளின் சித்தத்துக்கும், கடவுளின் சித்த தத்துவத்துக்கும் மூலமாயிருப்பது கடவுளின் உள்ளமை. ஆகையால், சகலமும் கடவுளில் நின்றுமே சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன" என்று பிரமஞானிகள் கூறுகின்றனர். ஆதலால், பிரபஞ்சங்களில் மூல சத்தாகிய கடவுளின் சித்த தத்துவமே மெஸ்மரிஸ வித்தையின் மூல தத்துவம்!

ஒரு வஸ்து மற்றொரு வஸ்தை இழுக்கவும், ஒரு வஸ்து மற்றொரு வஸ்துக்குத் தன் (Power) பவரைச் செலுத்தவும், ஒரு வஸ்து மற்றொரு வஸ்தை நேசிக்கவும், ஒரு வஸ்து மற்றொரு வஸ்தை இச்சிக்கவும், ஒரு வஸ்து மற்றொரு வஸ்தை வெறுக்கவும், ஒருவஸ்து மற்றொரு வஸ்தை வசியமாக்கிக் கொள்ளவும், ஒரு வஸ்து மற்றொரு வஸ்தில் சேரவும், ஒரு வஸ்து மற்றொருவஸ்தை விலக்கவும் காரணமாயிருப்பது பிரபஞ்சங்களின் மின்சாரம் அல்லது காந்த சத்தாகிய ஒவ்வொரு வஸ்திலும் இயற்கையாக நிறைந்து இருக்கிற (Negative or Positive Force) அதாவது குவ்வத்தே

www.miskinsha.blogspot.com

ஸாலிபா அல்லது மவுஜிபாவென்னும் இழுப்புக்காந்தம் அல்லது மறுப்புக்காந்தமாகிய இரண்டு சுபாவத்தையுடைய ஒரே தாது! இதனைப் பிரபஞ்சங்களின் மூல தத்துவம் அல்லது கடவுளின் சித்த தத்துவமென்று சொல்லப்படும். இத்தத்துவமே பிரபஞ் சங்களின் உற்பத்திக்கும் அழிவுக்கும் காரணம்! இத்தத்துவத் தைக்கொண்டே மெஸ்மரிஸமல்லது ஹெப்னாட்டிஸம் என்னும் வித்தை செய்யப்படுகின்றது. மேற்சொல்லிய இழுப்பு காந்தமல்லது மறுப்புகாந்தமாகிய மெஸ்மரிஸ வித்தையின் மூல தாதைக் கடவுளின் சித்த தத்துவமென்றும், இஃதே சற்குணத்திற்கும் துர் குணத்திற்கும், உற்பத்திக்கும் அழிவுக்கும் காரணமென்றும், ஒவ்வொரு வஸ்திலும் இதே உயிராக நிறைந்திருக்கின்றன என்றும் மெஸ்மரிஸ ஞானிகள் கூறுகின்றனர். இன்னும் இத்தத்துவமானது கல்வில் கல்வின் தன்மையாகவும், மரத்தில் மரத்தின் தன்மையா கவும் மிருகத்தில் மிருகத்தின் தன்மையாகவும், மனிதனில் மனித னின் தன்மையாகவும் விகாரப்பட்டிருப்பதால் இதன் குணத்தையும், செயலையும் வரையறுத்துக்கூற ஒருவராலும் இயலாது! ஃபிலா ஸொஃப்களாகிய ஹெக்மா அல்லது தத்துவ ஞானிகளில் சிலர் மேற்கூறிய "நெகடிவ்" அல்லது "பாஸிடிவ்" என்னும் இழுப்புக் காந்தம் அல்லது மறுப்புக் காந்தத்தை இரண்டாகவும் சிலர் இரண்டு தன்மையுடைய ஒரே சத்தாகவும் பாவித்திருப்பதுடன் ஒன்றை ஆணைப்போல் ஃபாயில் அதாவது செயலுக்குடையது என்றும், மற்றொன்றைப் பெண்ணைப்போல் இன்ஃபிஆல் அதா வது: செயலை ஏற்றுக்கொள்ள கூடியதென்றும் (Material) மாத்தியத்தான சடப் பொருள்களுக்கெல்லாம் (Principle) ஸபப் அல்லது இல்லாத்தாகிய மூல சத்தென்றும், சூஃபியாக்களாகிய ஞானிகள் இதனைக் கடவுளுடைய ஸிபாத்தாகிய பண்புகளின் ஜமால், ஜலால் என்றும், கோபமல்லது சாந்த குணமாகிய ஒளி அல்லது மின்னலில் நின்றுமுள்ளதென்றும், சற்குணத்திற்கும், துர்குணத்திற்கும், நீதத்திற்கும், அநீதத்திற்கும் இதுவே காரணம் என்றும், இதற்கு இச்சையும் அறிவும் உண்டென்றும் கூறுகின் றனர். ஆனால் தத்துவ ஞானிகள் இதனை அறிவும் இச்சையும் அற்றதென்றும் கூறுவார்கள். இஃதானது ஒவ்வொரு வஸ்திலும் அந்தந்த வஸ்தின் தன்மையாகவும், ஒன்றுக்கொன்று இருக்கிற காந்த சம்பந்தமல்லது தொடர்பால் ஒன்றுக்கொன்று வழிபடக் கூடியதாகவுமிருக்கிறது.

இந்த சொற்பப் பிரகாசமுள்ள நூர் அல்லது ஒளியாகிய சூக்ஷும பூதமல்லது மூல தாதானது பிரபஞ்சங்களின் ஒவ்வொரு பரமாணுக்களிலும் கண்ணாடியில் பார்வையல்லது வெளிச்சம்

ஊடுருவதுபோல் ஊடுருவிப்பாய்ந்து, சமுத்திரத்தைப்போல் அலை அடித்துக் கொண்டிருக்கிறது. அதனால் சகல வஸ்துக்களும் மாறுதலடைகின்றன. நமது சரீரத்தின் ஜீவனைப்போல் பிர பஞ்சங்களுக்கு ஜீவ தாதாக இருந்து ஜமாதி, ஸய்யாலி, காஸி என்னும் கனபதார்த்தம், ஜல பதார்த்தம், வாயு பதார்த்தம் முதலிய வைகளையும், ஹராரத்து, ருபுதத்து, ருத்தூபத்து, எபூஸத்து ஆகிய உஷ்ணம், குளிர்ச்சி, ஈரலிப்பு, வரட்சி முதலியவைகளையும், ஆக்ஸிஜன், ஹைட்ரஜன், நைட்ரஜன் ஆகிய – பிராண வாயு, ஜல வாயு, உப்பு வாயு முதலியவைகளையும் உற்பத்தியாக்குகின்றன. இன்னும் அந்தந்த வஸ்துக்குத்தக்கபடி, அதற்கு மெல்லினமும் தடிப்பும் ஏற்பட்டிருக்கிறது. இது கடவுளின் தத்துவமேயல்லாது வேறு அல்ல! கடவுளின் தத்துவம் அல்லது பண்புகளுக்கு, தஅத்துத், தகத்தும், தஅக்குர், இன்ஃபிகாக், அல்லது இன்ஃபிஸால் என்னும் எண்ணிக்கை, முந்துதல், பிந்துதல், பிளவு (விரிசல்) முதலியவை கிடையாது!

ஆதி மூலமாகிய கடவுளின் உண்மைக்கும், கோலமல்லது வேஷமாகிய சிருஷ்டிக்குமிடையில், அனேக வித தத்துவங்களும் சத்துச்சாரமாகிய மூல நிரவியங்களும் கணிக்கக்கூடாத விதமாய் இருந்த போதிலும், அவையடங்கலும் கடவுளின் சித்த தத்து வத்தைச் சேர்ந்தது. கடவுளின் சித்த தத்துவமானது படிப்படி யாகத் தடித்து பல தாதுக்களாக அல்லது பிரபஞ்சங்களின் மூலப் பிரகிருதிகளாக பல துறைகளிலும் பல நாமங்களை அடைந்து இருக்கின்றன. தத்துவ ஞானிகள் ஆகாயத்தை "அசைந்தால் காற்றென்றும், அசையாவிட்டால் ஆகாயமென்"றும் சொல்கிறார் கள். ஆகாயம் என்பது ஒன்றுண்டென்பதே அனேகர்களுடைய சித்தாந்தம்!

நாம் ஆகாயத்தைத் தனிமையாக நோட்டமிடும்போதும் ஒரு மெல்லிய கண்ணாடியைக் கொண்டும் நோட்டமிடும்போதும் ஆகாயத்தில் கண்ணாடியின் நிமித்தம் ஏற்பட்ட தடிப்பின் வித் தியாசத்தை நாம் உணராவிட்டாலும் அதற்கு அகத்தியம் தடிப்பு ஏற்பட்டே இருக்கவேண்டும். இன்னொரு கண்ணாடியை அதோடு சேர்த்துக்கொண்டால் முன்னிருந்ததைவிட அதிக தடிப்பு அதற்கு ஏற்பட்டிருக்கலாம். இவ்விதமாகப் பிளப்பின்றி ஒன்றுக்கொன்று ஏற்பட்ட தடிப்பின் வித்தியாசத்தை நாம் உணர இயலாது. அப் படியே கடவுளின் சித்தத்தில் நின்றும் அல்லது கடவுளின் சித்த தத்துவத்தில் நின்றும் பகுக்கக்கூடாத விதமாய்ப் பிளப்பின்றி படிப்

www.miskinsha.blogspot.com

படியாகத் தடித்து வெளியாயிருக்கிற ஒவ்வொரு வஸ்துக்களின் தடிப்பின் வித்தியாசங்களையும் நாம் உணர இயலாது. சாதாரணமாகக் கடினமான கன பதார்த்தங்களுக்கும், நீர் போன்ற ஜல பதார்த்தங்களுக்கும், ஆவியைப் போன்ற வாயு பதார்த்தங்களுக்குமுள்ள தடிப்பின் வித்தியாசங்களை மட்டும் உணரலாம். கடவுளின் உண்மைக்கும், கடவுளின் சித்தத்திற்கும், கடவுளின் சித்த தத்துவத்திற்கும், இன்னும் மற்றுமுண்டான கடவுளின் பண்பு அல்லது தத்துவங்கள் அடங்கலுக்கும் ஒன்றுக்கொன்று உண்டான தடிப்பின் வித்தியாசமேயன்றி மற்றபடி வேறு வித்தியாசமில்லையெனச் சிலர் உத்தேசிக்கின்றனர்.

கடவுளின் உள்ளமையில் நின்றும் இச்சிக்கிற தன்மை வெளியானால்அதற்கு நஃப்ஸ் என்றும், பார்க்கிறதன்மை வெளியானால் அதற்கு ரூஹு அல்லது ஆன்மாவென்றும், அறிகிற தன்மை வெளியானால் அதற்குக் கல்பு அல்லது மனமென்றும், இத்தன்மைகளை விட்டொழித்திருந்தால் அதனை தாத்தென்றும், இன்னும் நஃப்ஸாகிய இச்சையை ஷைத்தான், அல்லது இபுலீஸாகிய பிசாசென்றும், ரூஹாகிய ஆன்மாவை மலக்கு அல்லது தேவுத்தா என்றும், கல்பாகிய அறிவை இன்ஸான் அல்லது மனுவென்றும் ஆத்ம ஞானிகள் அல்லது இலாஹிய் யூன்களாகிய பிரமஞானிகள் கூறுகின்றனர். மேற்கூறிய இச்சை, அறிவு, பார்வை இம்மூன்றிற்கும், இன்னும் மற்றுமுள்ளான கடவுளின் தத்துவங்களடங்கலுக்கும் இப்படியே பதவிக்குத் தக்க பல நாமங்களுண்டு. ஒன்றுக்கொன்று பிரிக்கவும், முன்பின் என்பதற்கும், எண்ணிக்கைக்கும் இடமேயில்லை. ஒன்றில் அநித்தியம் மற்றொன்று சேர்ந்தேயிருக்கும். நாம் விளங்கிக்கொள்வதற்காகவே பிரிச்சலாகவும், முன்பின்னாகவும், எண்ணிக்கையாகவும் பாவிக்கப்படுகின்றன!

ஆதிதொடுத்து அந்தம் வரையில் சகலத்தையும் ஒரே வஸ்தென்று சொல்லலாம். ஒவ்வொரு வஸ்தும் ஆண்டவனாகவும் அடிமையாகவுமிருக்கிறது. ஒவ்வொரு வஸ்தும் தன்னால் ஆக்கப்பட்டு தன்னால் அழிக்கப்படுகின்றன! "He likes unto himself revealing all other objects as bubbles rise out of water, and into it return, so, the world originates from him and to him returns" அதாவது: அவர் தன்னையே ஆசிக்கிறவராக மற்றெல்லா வஸ்துக்களையும் வெளியாக்குகிறார். நீர்க்குமிழியானது நீரின் தின்றெழுந்து 'நீரிலொடுங்குவது போல் உலகமானது அவரில் தின்றுண்டாகி அவரிலொடுங்குகின்றன. ஆதலால்,

சகலமும் கடவுளுடைய தன்மையையுடையதாயிருக்கிறது. அவரை விட்டு நீங்கினது ஒன்றுமேயில்லை. பிரமாகாயம் அல்லது மனோகாயம், சிதாகாயம், பூதாகாயம் இந்த மூன்றுக்கு முன்னால் பிரபஞ்சங்கள் ஒரு அணுவுக்குக்கூட சமானமில்லை. இதை இஸ்லாமானவர்கள் நஃப்ஸுடைய வானம், ரூஹுடைய வானம், கல்புடைய வானம், அனாசிருடைய வானமென்று விவரிப்பதுண்டு. இன்னுமிதை அஹதியத்து, லஹ்தத்து, வாஹிதியத்தின் வானம் என்றும் பிரித்துக் கூறுவதுண்டு.

அன்றி, "He dwelling every object. Therefore, He is called the ear of our ears, the life of our lives, and the mind of our minds." அதாவது: அவர் எல்லா வஸ்திலும் வாசம் பண்ணுகிறார். அவர் கேள்வி நம்முடைய கேள்வி, உயிர் நம்முடைய உயிர், மனம் நம்முடைய மனமென்று சொல்லுகிறார். ஆதலால், மெஸ்மரிஸ வித்தையின் தத்துவம் கடவுளுடைய தத்துவம். கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை. சிலர் நியாயமற்ற மத வைராக்கியத்தினால் பிற ஜாதிகள் ஈரிரண்டு நான்கு என்றால் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்! தன் ஜாதியார் ஈரிரண்டு ஐந்தென்றால் அதை விஸ்வாசத்தோடு ஒத்துக்கொள்வார்கள்! மதமென்பது கடவுளுடைய சமுகத்தில் மோக்ஷத்துக்குரிய வழி! நாம் மனம்போலவடி கட்டி வைத்திருக்கிற கட்டுக்கதையல்ல! புத்திக்கும் வேதத்திற்கும், அனுபோகத்திற்கும், ஒற்றுமைப்படாத செய்திகளை நம்புகிறவர்கள் பேதை! "உண்மையை அறிகிறது ஞானம், உண்மையை நம்புகிறது விசுவாசம், உண்மையில் நடக்கிறது மதம்.(உண்மையை அறிவதுதான் ஞானம். உண்மையை அறிவதுதான் (பக்தி) விசுவாசம் உண்மை வழியில் நடப்பதுதான் மார்க்கமாகவும் இருக்கவேண்டும்.) உண்மையை விரும்பிய உன்னத விவேகிகள் சகல மதங்களிலுமுள்ள பொய்யையும், மெய்யையும் நீர் விசாரித்து, தன் விசுவாசத்தையும், நடத்தையையும் சீர்திருத்திக் கொள்ளவேண்டும்!

தாய் தந்தைகளின் வழக்கத்தையே உண்மையை விசாரியாமல் அனுசரிப்பது சிறு குழந்தைகளுக்கடுத்தது. சகல மதங்களிலும் பொய்யான உடையில் மெய் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், பொய்க்குக் காலில்லை. ஆதலால், மெய்யின் காலைக் கொடுத்து அதை நடத்தாட்டப்படுகிறது. இல்லாவிட்டால் அது நடைபெறாது. மனிதர்களினால் காலத்துக்குகாலம் மதங்களின் உண்மையைப் பொய்யால் மறைக்கப்பட்டபோது அதைப் பெரியோர்களில் யாராவது சீர்திருத்திச் சகல மதங்களின் உண்மையும்

www.miskinsha.blogspot.com

இதுதானென்று மாணிடர்களுக்கு எடுத்துக் காட்டுவார்கள். அவர்களுக்குப் பின் அவர்களைத் தொடர்ந்தவர்கள் அதை வரவர முன்னிருந்ததை விட அதிக கேடாக்கி விடுவார்கள். மற்ற மதங்களைப் பொய்ப்படுத்த தங்கள் மதத்தை வேறாகப் பிரித்துக் கொள்வார்கள். பிற மதத்திலுள்ள பெரியோர்களைத் தூஷிப்பார்கள். இவ்விதமாக மத வைராக்கியம் ஏற்பட்டு உண்மையை மறைத்து மாணிடர்களை வஞ்சித்து விட்டார்கள்.

தங்கள் கட்சிக்காக வேத வாக்கியத்திலில்லாத அனேகப் பொய்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சிலர் வேதத்திலும் கைபழகி (வேதத்தையே தம் மனம் போன போக்குப்படித் திருத்தி) இருக்கிறார்கள். ஞானமென்ற தகப்பன் ஒன்றாகவும், மார்க்கம் என்ற தாய் பலதாகவுமிருக்கிறது. சகல மதமும் மூலத்தில் ஒரே சக்கரத்தில் சுழல்கின்றது. காலத்தில் பெரும் வித்தியாசமாகத் தோன்றுகின்றது. ஒரே வஸ்து பல உடையில் வெளியாயிருக்கிறது. சகல மதங்களுக்கும் ஆத்ம ஞானமானது, உயிராக இருக்கிறது. தற்போது அந்த ஆத்ம ஞானமானது அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் தெஒஸாட்டிஸம் அல்லது மெஸ்மரிஸமென்று வழங்குகின்றது. சில பிராணிகள் மற்றப் பிராணிகளைத் தன் சித்தத்திற்குக் கீழ்படுத்திக் கொள்வதற்காக மெஸ்மரிஸ தத்துவத்தைப் பிரயோகிப்பதாக பிராணி சாஸ்திரிகள் கூறுகிறார்கள்.

சகலத்திலும் தேவ பரிசுத்த ஆவியானது நிறைந்திருக்கிறது. "ஆத்மே பரமத்ம குரு "வென்று கிரந்தத்திலும், "The soul is our first spiritual teacher" என்று ஆங்கிலத்திலும் சொல்லப்படுகிறது. அதாவது: ஆத்மாவே நம்முடைய பரமாத்மாவான குரு, அல்லது ஆத்மாவே நம்முடைய பரிசுத்த ஆவியாகிய முதல் ஆசான்! இன்னும் அறபி பாஷையில் "மன்அறஃப நஃப்ஸஹு ஃபகத் அறஃப றப்பஹு" வென்று சொல்லப்படுகிறது. அதாவது தன்னை அல்லது தன் ஆத்மாவை அறிந்தவனே கடவுளை அறிந்துகொள்வான்!

"Those who neglecting the God in their own hearts, seek then gods are like unto those who rejecting the jewel in their possession, are in anxious search of another." அதாவது: தன் சொந்த இருதயத்திலே கடவுளைத் தேடாதவர்கள் வேறொரு கடவுளைத் தேடுகிறார்கள். இன்னும் அவர்கள் தன் வசமிருந்த ஆபரணத்தை இழந்து விட்டு மற்றவர்களிடம் தேடி விசாரப்பட்டவர்களுக்கு தருமாயிருக்கிறார்கள்.

"As the fire in wood, fragrance in a flower, and virtue in water, so the divine soul is manifester in the living body. அதாவது: விறகில் அக்னியைப்போலும், புஷ்பத்தில் வாசனையைப் போலும், ஜலத்தில் இன்பமல்லது தெளிவைப் போலும் தேவ ஆவியானது நாம் வசிக்கும் சரீரத்தில் வெளியாயிருக்கிறது"

"He is not lost to me, and I am not lost him, who beholds me in every place, and discern me in every object." அதாவது: அவன் என்னை இழக்கவில்லை. நான் அவனை இழந்துவிடவில்லை. ஒவ்வொரு இடத்திலும் என்னைத் தேடுகிறவர்கள், ஒவ்வொரு வஸ்திலும் என்னைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

"Hope not destined to be fulfilled." அதாவது: "விதிப்படி முடியுமென்பதை நம்பக்கூடாது." ஏனென்றால், இந்த எண்ணமானது அனேகரை முன்னுக்கேறாமல் தடுத்துவிட்டது. அறிவாளிகளும், ஞானவான்களும் இந்த எண்ணத்தில் சிக்கவே இல்லை. இந்தக் கொடும்விஷமாகிய எண்ணத்தில் சிக்கினவர்கள் கடைத்தேறவேயில்லை!

நாம் கடவுளாயிருக்கிறோம், கடவுள் நாமாயிருக்கிறோம். நம்மால் ஆகாததும் கடவுளால் ஆகாததும் ஒன்றுமில்லை. நம்மில் கடவுளிருக்கிறார், கடவுளில் நாமிருக்கிறோம். அவரை விட்டு நாம் நீங்கவில்லை, நம்மைவிட்டு அவர் நீங்கவில்லை! என்று எப்போதும் சிந்தித்து வருவதே தபங்களில் மிகவும் சிறந்தது. இந்த இரகசியத்தை எல்லோரும் அறியமாட்டார்கள். அறிந்தவர்கள் பிறருக்குச் சொல்லப்பயந்து மறைக்கிறார்கள்.

நாம் கடவுளென்று தியானித்து வருவதால் உண்டாகின்ற பலன் யாதெனில் இந்த தியானமுள்ளவர்கள் கடவுளுக்கு மிக உவப்பானவர்களென்றும், கடவுளின் கருணையும் குணமும் இவர்களில் பேரில் தாவி இவர்கள் அவ்குத்தைப் பங்கமாக்கித்தள்ளோடு சேர்த்துக் கொள்கிறதென்றும், கடவுளின் தத்துவம் இவர்கள் மூலமாக வெளியாகுமென்றும், இவர்கள் கடவுளுக்கு மிகவும் நெருங்கினவர்களென்றும், இவர்கள் எவ்விதம் இவ்வுலகத்தில் வசிக்க விரும்புகிறார்களோ அவ்விதமே கடவுள் அவர்களுக்கு உதவி புரிகிறாரென்றும், கடவுள் இவர்கள் சித்தத்திற்கு ஒரு போதும் மாறு செய்கிறதில்லை என்றும் பிரம ஞானிகள் கூறுகின்றனர். இவர்கள் மகத்துவத்தை யாரால் சொல்லக்கூடும்? இவர்களுடைய

www.miskinsha.blogspot.com

செயலுக்கு யாதொரு குணமுமில்லை. ஏனென்றால், இவர்கள் செய்கிற நன்மையும் தீமையும் குணமற்றது. இவர்களுடைய செயல் கடவுளுடைய செயலாக இருக்கிறது. இவர்கள் தன் சித்தத்திற்கு யாதொருபாவமும், நன்மையும்செய்கிறதில்லை. ஆகையால், நன்மையும் தீமையும் இவர்களைத் தொடரக் காரணமில்லை. இவர்கள் ஒரு போதும் தன் இச்சைக்கு யாதொரு காரியமும் செய்கிறதில்லை. இவர்கள் அடி, நடு, முடிவில்லாத இந்த அகண்ட ஆகாயத்தை போல், தன்னை மட்டுப்படாத அரூபியாகச் சிந்தித்துத் தன் சரீரத்தை மறந்திருக்கிறார்கள். இவர்களுக்குக் கொஞ்சமும் அகங்காரமில்லை, இவர்கள் அகங்காரம் கடவுளுடைய அகங்காரமாயிருக்கிறது. இவர்களை ஏசினால், அல்லது நிந்தித்தால் கடவுள் பொருத்தக் கேடாகிறார். இவர்களை கனம் பண்ணினால் கடவுளின் அன்புண்டாகிறது. இவர்கள் செய்து வருகிற அனுஷ்டானத்தினால் சித்தம் வலுவாகி ஆத்ம குணம் அதிகரித்து அனேக அற்புதங்களைச் செய்யத்தக்கவர்களாகிறார்கள்!

மெஸ்மரிஸ வித்தையை இந்த முக்தர்களே முற்றிலும் உணர்ந்தவர்கள்! சித்திக்கும் முக்திக்கும் அனேக அப்பியாசங்களும், சாதனைகளுமுண்டு. அவைகளில் மிகச் சிறந்ததும், அதிக வலுவானதும் இதுவே! ஏனென்றால், நம்முடைய மனம் எந்த வஸ்தை நாடுகிறதோ, அதில் போய் கலக்கிறதும் லயிக்கிறதும், அல்லது அந்த அந்த வஸ்தாகத்தான் ஆகிக்கொள்கிறதும் அதன் சுபாவம். உள்ள வஸ்தை நாடினால் அதில் போய் கலந்து, அதை வம்பித்து அல்லது இழுத்துத் தனக்குக் கீழ்ப்படுத்திக் கொள்கிறதும், இல்லாத வஸ்தை நாடினால் நாடப்பட்ட வஸ்துவாகத் தானே வெளியாகிறதும் அதன் கய குணம். ஆகையால், இந்த இயற்கையை அறிந்தே தபங்களையும் யோகங்களையும் பல விதமாக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதன் விபரங்களைப் பின்னால் விவரிக்கப்படும். தன்னை பிரமமல்லது கடவுளென்று சிந்திப்பவர்களுக்குத் தன் சரீரம் ஞாபகமிருக்கிற வரையில் தன்மையும் தீமையும் தொடரும். அவர்களின் செயல் கடவுளின் செயலாகாது! வேற்றுமையான அவர்களின் அகங்காரத்தின் செயலாகும். இந்த வேற்றுமையான யானென்னும் அகங்காரத்தைச் சுட்டெரித்தவர்களில், கடவுள் தன் நீதத்துக்கு விரோதமாக யாதொரு செயலையும் வெளியாக்கிறதில்லை இவர்களைப் பாவம் செய்யத் திராணி அற்றவர்கள், நன்மையை மட்டும் செய்ய இயன்றவர்களென்று சொல்லலாம். ஒரு சமயம் நமது சிற்றறிவுக்கு அவர்கள் செயல் விரோதமாகத் தோன்றலாம். ஆனால், அவர்கள் கடவுளின்

உத்தரவுக்கும், நீதத்துக்கும் விரோதமாக ஒரு போதும் நடக்கிறது இல்லை. அவர்களால் உலகத்தார்களுக்கு உண்டாகின்ற நன்மையையும், பலனையும் சொல்ல இயலாது!

என்கிலும், அஞ்ஞானமாகிய நானென்னும் வேற்றுமையான அகங்காரத்தை அழிக்காதவர்கள், கடவுளின் நீதத்துக்கும் பொருத்தத்திற்கும் விரோதமாக சிலசமயம் நடக்கக்கூடும். அப்படி நடந்தால் கடவுள் நம்முடைய இருதயத்தில் நம்மை நிந்திக்கிறார். அதனால் நம்முடைய மனம் கறுத்து, நம்முடைய ஆத்மதத்துவமாகிய மனோ பலம் அல்லது சித்த தத்துவம் மிகவும் குறைந்து போகின்றது. ஆதலால், நாம் உவந்ததைப் பிறருக்கும் உவக்க வேண்டும். நாம் உவக்காததைப் பிறருக்கு உவக்கக்கூடாது! இந்த நியாயப் பிரமாணத்தைக் கடவுள் நம்முடைய சுபாவத்தில் படைத்திருக்கிறார். இதற்கு விரோதமாக நாம் நடக்கக்கூடாது!

மெஸ்மரிஸர்கள் அதிக உண்மையுள்ளவர்களாயும், நீதம் உள்ளவர்களாயும், சன்மார்க்கர்களாயுமிருக்க வேண்டும். இந்த வித்தையை வீண் விளையாட்டிற்காகச் செய்கிறதும் அவ்வளவு உசிதமல்ல. அனேகர் இதனை வீண் விளையாட்டுக்குச் செய்யக் கூடாது என்றே சொல்கிறார்கள்! இதை நன்மையான காரியங்களுக்கேயல்லாது, தீமையான காரியங்களுக்கு உபயோகப்படுத்தக்கூடாது! இது வரையில் நாம் எழுதி வந்த சங்கதிகள் சிலருக்கு விளங்காது. இனி நாம் எல்லாருக்கும் விளங்கும்படி, மெஸ்மரிஸ வித்தை செய்கிற விதங்களைக் குறித்து எழுதப் போகிறோம்.

இந்த வித்தையை மூன்று விதமாகச் செய்யப்படுகிறது. முதலாவது "இன்திக்கால்" அல்லது "இன் இக்காஸ்" அதாவது: நம்முடைய தத்துவத்தை ஒரு வஸ்தில் போடுவது, அல்லது செலுத்துவது; அல்லது நம்முடைய ஆத்மாவை அதில் நிழலிட அல்லது பிரதிபலிக்கச் செய்தல். இதில் ஒருவனுக்கு நம்முடைய ஆத்ம தத்துவத்தை அளிக்கலாம். இன்னும் கூடு விட்டுக்கூடு பாய்தல் அல்லது ஒரு சரீரத்தை விட்டு மற்றொரு சரீரத்தில் ஆத்மாவை புகுத வைத்தல், அல்லது சூக்ஷும சரீரம் எடுத்தல் முதலியவை இதைச் சேர்ந்தது.

இரண்டாவது. "இன்ஜிதாப்" அதாவது ஒரு வஸ்தின் தத்துவத்தை நாம் இழுத்துக் கொள்வது. இதில் நாம் ஒருவன் உடைய ஆத்ம தத்துவத்தைப் பிடுங்கிக் கொள்ளலாம். இன்னும்

www.miskinsha.blogspot.com

ஹாழிராத்தென்னும் அழைப்பு - தேவதைகளை அல்லது இறந்து போன மனிதர்களைக் கூப்பிட்டுப் பேசுதல் இதைச் சேர்ந்தது.

மூன்றாவது, " இத்திஹாத் " அதாவது : ஒரு வஸ்தில் நாம் போய்க் கலந்து விடுவது. இதில் நாம் ஒரு வஸ்தைப்பல ரூபமாக மாற்றலாம். அல்லது நாம் பல ரூபமெடுக்கலாம். இது மிகவும் பெரிது ! இன்னும் ஒவ்வொரு வஸ்தின் மூலத்தையும் உணர்தல். பிரபஞ்சங்களுக்கு மூலமாகிய கடவுளில் கலந்து-படைக்க, அழிக்க, வளர்க்க வல்லமையடைதல் முதலியவை இதைச் சேர்ந்தது.

கர்னல் ஹென்ரியெஸ் அல்காட்டு துரை தாம் தூத்துக்குடியில் கொடுத்த லெக்சரில் சொல்லியிருக்கிறதாவது : தற்காலம் உள்ள இன்ஜினியர்கள், பெரிய பெரிய பாலங்களையும், ரயில்களையும், கப்பல்களையும் ஒரு ஊரைவிட்டு மற்றொரு ஊருக்குப் போகத் தயார் செய்கிறார்கள். ஆனால், முற்காலத்திலுள்ள பெரியோர்கள், நம்முடைய நினைவு அல்லது யோசனை செல்வது போல், தம்முடைய உட்சரீரத்தினால் ஒவ்வொரு இடமும் போகக் கூடியவர்களாக இருந்தார்கள். அது எவ்வளவு தூரமாயிருந்த போதிலும் அவ்விடத்துக்குச் சங்கதிகளைப் பார்க்கவும் அவ்விடத்தில் தன்னைக் காட்டவும் கூடியவர்களாயிருந்தார்கள். நாம் ரயிலில் உட்கார்ந்து கொண்டு ஒரு மணிக்கு அறுபது மைல் வீதம் பிரயாணம் செய்கிறது பெரிய காரியமா ? அல்லது பிரபஞ்ச தத்துவங்களை நமது சித்தத்திற்குக் கீழ்படுத்தி, நம்முடைய வலுவான சித்தத்தைக் கொண்டு நமது சூக்ஷும சரீரத்தை, பூலோக முழுமையும் ஆகாயத்தில் ஒரு நொடிக்குள் சுற்றிவரச் செய்வது பெரிய காரியமா ? ரஸாயன சாஸ்திரத்தைக் கொண்டு உயிரை சரீர சம்பந்தத்தை விட்டு நீக்கவும், அணுக்களை அணுக்களின் சம்பந்தத்தைவிட்டு விலக்கவும், அசைவற்ற அல்லது உயிர் அற்ற அணுக்களைத் திரும்பச் சேகரம் செய்யவும் கூடும் !

ஆனால் போன உயிரைத் திரும்பக் கொண்டுவர முடியாது. இன்னும் அந்த சாஸ்திரத்தினால், குலாப் அல்லது ரோஜாப்பூ இதழ்களின் அணுக்களைக் உண்டாக்கலாம். ஆனால் திரும்ப அந்த அணுக்களினால் குலாப் புஷ்ப இதழ்களை உண்டாக்க ஏலாது. மற்றபடி முன்விருந்த வாசனையும் அதில் உண்டாகாது. என்றாலும், முற்காலத்திலுள்ள பெரியோர்கள் தங்கள் சித்தத்தை எவ்வளவு வலுவாக்கி இருந்தார்கள் என்றால் : அவைகளைப் புதிதாக உற்பத்தியாக்கும் வல்லமையைக் கொண்டு, அவர்கள் ஆகாயத்தில் நின்றும் குலாப் புஷ்பத்தினால் மழை வருவிக்கச் செய்யக் கூடியவர்களாய் இருந்தார்கள். இன்னும் எந்த வாசனை

வேண்டுமோ, அந்த வாசனைகளினால் தங்கள் வீடுகளை நிரப்பக் கூடியவர்களாயிருந்தார்கள். இன்னும் எவர்கள் இந்த விஷயத்தில் சந்தேகிக்கிறார்களோ, அவர்கள் தலையின் மீது புஷ்பம் வருஷிக்கச் செய்யக் கூடியவர்களாயிருந்தார்கள். இன்னும், இது மட்டுமல்ல, மற்றவர்களும் அவர்களிடத்தில் அந்த ஞானங்களைக் கற்றுக் கொண்டு, இந்தக் காலத்தில் நம்முடைய கண்களுக்கு முன்னாலும் (மேடம் பிளாவாட்ஸகி போன்றவர்கள்) அவ்வித அற்புதங்களைச் செய்திருக்கிறார்கள். இன்னும் சமஸ்கிருத பாஷையில் ஹெப்னாட்டிஸம் என்னும் வித்தைக்கு " குபத் வித்தியா "வென்றும், அற்புதம் செய்கிற மனோ தத்துவத்திற்கு " இக்ஷா சக்தி " என்றும் சொல்வதுண்டு.

அஷ்டமா சித்தி :

ஷ்ரீமத் பாகோத்தில் சொல்லப்பட்ட அட்டமா சித்தியைக் குறித்து தூத்துக்குடியில் கர்னல் அல்காட்துரை மேலும் சொல்கிறார்:

1-வது அனீமா : இந்த சித்தியில் யோகியானவன் தன்னை ஒரு அணுவைப் போல் சிறிதாக்கவும், ஒரு சிறிய வஸ்தில் தன்னை அடக்கிக் கொள்ளவும் கூடும் !

2-வது மஹீமா: இந்த சித்தியில் யோகியானவன் தன்னுடைய சரீரத்தை ஒரு மலையைப்போல் பெரிதாக்கவும், தன் சரீரத்தை ஒரு மைதானத்தில் எவ்வளவு விரிவாக்க வேண்டுமோ, அவ்வளவு விரிவாக்கவும் கூடும்!

3-வது லகீமா : இந்த சித்தியில் யோகியானவன் தன்னை பஞ்சுகளின் அணுக்களைப் போல் லேசாக்கி, ஆகாயத்தில் பறக்கக்கூடும் !

4-வது பிராப்தீ : இந்த சித்தியில் யோகியானவன் தன் உறுப்பில் எதையாவது ஒன்றை கணக்கின்றி எவ்வளவு நீட்ட வேண்டுமோ அவ்வளவு நீட்டவும், தன் விரல் நுனியினால் சந்திரனைத் தொடவும் கூடும் !

5-வது பிராக்காமயா : இந்த சித்தியில் யோகியைக் கண்டிப்பாள வஸ்துக்கள் அல்லது இயற்கையானஜடப் பொருள்கள் யாதொன்றும் அவனைத் தடை செய்யாது! தண்ணீருக்குள் முக்குளித்துப் போவதுபோல் வெகு சுலபமாக பூமிக்குள் எங்கும் போய்வரக் கூடிய சக்தி அவனுக்கு உண்டு !

6-வது வஸ்துவா : இந்த சித்தியில் மண், தண்ணீர், காற்று, நெருப்பு, ஆகாயமாகிய ஐந்து மஹா பூதங்களும் யோகியின்

www.miskinsha.blogspot.com

உத்தரவுக்குக் கீழ்படியும். அவன் கட்டளையை மீறாது. இந்த தத்துவத்தைக் கொண்டே யோகியானவன், மானிடர்களின் பேரிலும், மிருகங்களின் பேரிலும் தன் ஜீவகாந்த தத்துவத்தைப் போட்டு தன் சித்தத்திற்குக் கீழ்படுத்திக் கொள்கிறான். இன்னும் இந்த தத்துவத்தைக் கொண்டே யோகியானவன் தன் சரீர இச்சைகளையும், இந்திரியங்களையும் அடக்கிக் கொள்வான்!

7-வது இஸ்துவா: இந்த சித்தியில் யோகியானவன் பிரபஞ்ச மூலப் பிரகிருதியின் பேரில் சூழ்ந்து அதிகாரம் பெற்றுப் படைக்க, வளர்க்க, அழிக்க வல்லமையடைகிறான்!

8-வது காம் வஸ்துவாம்: இந்த சித்தியில் யோகியானவன் தன்னிஷ்டப்படி ஒவ்வொரு வஸ்திலும் குணங்களை உண்டாக்கலாம். அமிர்தத்தை நஞ்சாகவும், நஞ்சை அமிர்தமாகவும் மாற்றலாம். இவ்வளவு மேலான பதவியை அடைந்த பின், யோகி ஆனவன் மாமூல் அல்லது இயற்கைக்கு விரோதமாக யாதொரு காரியமும் செய்ய விரும்புகிறதில்லை!

ஹெப்னாடிஸம் அல்லது மெஸ்மரிஸ வித்தையின் மகத்துவத்தையும், நம்மில் பல அற்புதங்களையும் செய்யக்காரணமாய் இருக்கிற மனோ சக்தியின் வல்லமையையும் எடுத்துக்காட்டக்னல் அல்காட் துரை எழுதியதே போதுமென்று நினைக்கிறேன்.

மெஸ்மரிஸ வித்தையின் மூல சந்நாகிய ஜீவகாந்த ஒளியின் தன்மை:

1-வது மனோ சக்தி, 2-வது ஆன்ம சக்தி, 3-வது இச்சா சக்தி இதில் ஒன்றை விட ஒன்று வலுவானது. இந்த மூன்றையும் சூக்ஷ்ம சம்பந்தம், காரண சம்பந்தம், மகா காரண சம்பந்தம் எனவும், இதனை முறையே கல்புடைய தவஜ்ஜா, ரூஹுடைய தவஜ்ஜா, நப்ஸுடைய தவஜ்ஜா எனவும், அதாவது: வெளி மனம், உள் மனம், அடிமன நோக்கம் எனவும், இதன் தன்மை-சிந்தித்தல், நோக்குதல், இச்சித்தல் எனவும், இதன் செயல்-செலுத்தல், இழுத்தல், பேதித்தல் எனவும், இதில் ஒன்று மற்றொன்றில் சற்று சம்பந்தப்பட்டே இருக்குமெனவும் கொள்க!

ஆகாயத்தில் உலகத்தில் உண்டாகப்போகிற சகல வஸ்தின் அணுக்களும் நிறைந்திருக்கின்றன. ஆகையால், மனம் அல்லது எண்ணம் கெட்டியானவர்கள், அல்லது வலுவான சித்தமுள்ள

யோகி, அல்லது தபசிகள் ஆகாயத்தில் நின்றும் ரோஜா புஷ்பத்தினால் மழை வருஷிக்க வேண்டுமென்று சிந்திப்பார்களேயானால், உடனே நாட்டத்தின் அலையாகிய இவர்களின் ஜீவகாந்த ஒளியினால் ஆகாயம் அசைக்கப்பட்டு, அந்த ஆகாயத்திலிருக்கிற பற்பல வஸ்துக்களின் அணுக்களில் அலை உண்டாகி, அவைகள் காற்று, நெருப்பு, ஜலம், மண் மண்டலங்களைக் கடக்கும் கால தவணைகளை மீறி, அந்த அணுக்கள் உடனே திரண்டு இனத்தோடு இனம் சேர்ந்து, பூரணமான புஷ்பமாகி அக்ஷணமே வருஷிக்கின்றது. இது போலவே அவர்கள், சுகந்த வாசனைகள் தேவையென்று சிந்திப்பார்களேயானால், உடனே அவர்கள் சிந்தித்த வாசனைக்குரிய அணுக்கள் ஆகாயத்தில் சேகரமாகி, அவர்களின் ஸ்தலங்களைப் பரிமளிக்கச் செய்கின்றது. இன்னும் இவர்கள் மேகத்துக்கு அல்லது ஆகாயத்துக்கு அல்லது பூமிக்குக் கட்டளை இடுவார்களேயானால், எந்த வஸ்து அல்லது எந்த ஆகாரம் தேவையென்று கட்டளையிட்ட போதிலும் அவைகள் அவைகளை அளிக்கச் சித்தமாயிருக்கின்றன! மூலப்பிரகிருதிகளும் இவர்களின் கட்டளையை மீறாது! இவ்வித அற்புதங்களைச் செய்யக்கூடியவர்கள் உலகத்தில் அனேகர் இருந்திருக்கிறார்கள்! இருக்கிறார்கள்! இனியும் இருப்பார்கள்!

ஆகாயத்தைப் போலுள்ள அருபமான ஒரு உண்மையானது தன் சிந்தனையினால் உண்டான ரூபங்களாகிய சிருஷ்டிப்பொருள்களுக்குள் உயிராகவும், சத்தாகவும், சித்தாகவும், ஆனந்தமாகவும் நின்று உலகமெங்கும் வியாபித்து, தன் நிலைமையில் முன்னும் பின்னும் பேதமடையாமல், பிரபஞ்சங்களைச் சிருஷ்டிக்கவும், காப்பாற்றவும், அழிக்கவும் காரணமாயிருக்கிறது. அந்த உண்மைப் பொருளே நமது உள்ளத்திலிருந்து இவ்வித அற்புதங்களைச் செய்விக்கின்றது. இதுவே கனபதார்த்தம், ஜல பதார்த்தம், வாயு பதார்த்தங்களிலும், பல வகையான மூல திரவியங்களிலும், தாமிலும், வாளம், பூமி, நட்சத்திரம் இன்னும் மற்றுமுண்டானவைகளிலும் ஒளியிட்டு மின்விப் பிரகாசிக்கின்றது. இதுவே ஜீவகாந்த ஒளியின் ஊற்றுக்கண்! இதன் ரூபத்தை தன் ரூபமென்று சிந்தித்து வருகிறவர்கள், கடைசியில் அந்த ரூபமாகவே ஆகி விடுகிறார்கள்! உலகமெல்லாம் அழிந்தாலும் அவர்களுக்கு அழிவு இல்லை!

ஏனென்றால், உலகமெல்லாம் ஜலத்தால் அழிக்கப்படுமானால் தமக்கு ஜலத்தின் ரூபத்தைச் சிந்தித்து தாம் ஜலமாக ஆகிக்

www.miskinsha.blogspot.com

கொள்வார்கள்! காற்றினால் அழிக்கப்படுமானால் தமக்குக் காற்றின் ரூபத்தைச் சிந்தித்து தாம் காற்றாக ஆகிக்கொள்வார்கள்! அக்னியால் அழிக்கப்படுமானால் தமக்கு அக்னியின் ரூபத்தைச் சிந்தித்து தாம் அக்கினியாகிக் கொள்வார்கள்! எந்த வஸ்தினால் அழிக்கப்படுகிறதோ, அந்த வஸ்த்தின் ரூபத்தைத் தனக்குச் சிந்தித்து தாம் அந்த வஸ்தாகிக் கொள்வார்கள். கடைசியாகக் கடவுளின் ரூபத்தைச் சிந்தித்து தாம் கடவுளாகிக் கொள்வார்கள்! பின்பு எந்த ரூபத்தில் வெளியாக வேண்டுமோ, அந்த ரூபத்தில் வெளியாவார்கள்!

தந்தையின் குணம் பிள்ளைக்கு இருப்பது போல, மூலத்தின் குணம் கோலத்திலும் இருக்கிறது புதுமையல்ல! இந்தப் பெரியோர்கள் தங்கள் மனோ தத்துவம், அல்லது ஆன்ம தத்துவத்தினால் உலக முழுமையும் ஒரு பெரிய இருளை அல்லது ஒரு பெரிய பிரளயத்தை உண்டாக்கவும், சந்திரன் அல்லது சூரியனின் அசைவை நிறுத்தி அதனால் உலகத்துக்கு யாதொரு தீங்கும் நேரிடாமல் காப்பாற்றவும், இது போல உலகத்துக்கு உண்டாகிற இடையூறுகளை நீக்கவும் கூடும். இந்த விஷயங்களை ஞானமும் தேவ பக்தியுமில்லாதவர்கள் நம்பமாட்டார்கள்!

ஜீவ காந்த ஒளியாகிய மனோ பலத்தினால், சிலர் சாகாமலே இருப்பதாகத் தெரிய வருகிறது. யாதொரு வஸ்தும் இவர்களின் மீது குணம் செய்யாது. இவர்களே எல்லா வஸ்தின்மீதிலும் குணம் செய்வார்கள். ஏனென்றால், நாம் கிரகங்களினாலும் மண், தண்ணீர் காற்று, தெருப்பினாலும் வம்பிக்கப்படுகிறோம். இந்த இயற்கைக் குணங்களானது நம்மை – உண்ணவும், உறங்கவும், போகிக்கவும் கட்டாயப்படுத்தி விடுகின்றது. எல்லா வஸ்தின் பேரிலும் நாமே குணம் செய்யக்கூடியவன். ஒரு வஸ்தும் நம் பேரில் குணம் செய்ய முடியாது! அப்படியிருக்க வானம், பூமி, இன்னும் மற்ற வஸ்துக்களெல்லாம் நம் மீது தங்கள் தத்துவங்களைப் போட்டு, நம்மைப் பொம்மையைப் போல் ஆட்டி வைக்கின்றன. நாம் நமது சொந்த இயற்கைக் குணமாகிய மோகம், கோபம், பசி, உறக்கம் முதலியவைகளை, ஞானத்தையும், புத்தியையும் அனுசரித்து நமது சித்தப்படி நடத்தி, தன்னை பிரமமென்றறிந்து, தபத்தினால் அல்லது யோகத்தினால் நமது சித்தத்தை வலுவாக்கி, நமது இந்திரியங்களையும், தத்துவங்களையும் நாம் மேற்கொள்ளாத (கட்டுப்படுத்தாத) வரையில், மற்ற வஸ்துக்களை நாம் கீழ்படுத்த முடியாது!

ஒருவனுக்குப் பிணியானது உடலை விட்டும் உயிரைப் பிரிக்க (முயலும் போது) எத்தனிக்கையில், மனமானது உயிரை – உடலை விட்டும் பிரியாமலிருக்க நாடுகின்றது. ஆதலால், பிணியானது உயிரை வெளியிலும், மனமானது உயிரை உள்ளுக்கும் இழுக்கின்றது. இந்த நிலைமையில், இந்த இரண்டும் ஒன்றுக்கொன்று செய்து கொள்கிற போரினால் அவனுக்கு மரணாவஸ்தை உண்டாகின்றது. இதில் பிணி மீறினால் உயிர் போய்விடும்; மனம் மீறினால் பிணி நீங்கிவிடும். ஆகையால், இந்த வித்தை தெரிந்தவர்களில் சிலர் அந்த மனதுக்கு உதவி புரிந்து வலுவையளித்தால், அவன் சாகமாட்டான் என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், ஞானவான்களில் அனேகர் ஜீவித்திருப்பதைவிட சாவதையே உவந்திருக்கிறார்கள்! ஏனென்றால் கொஞ்சமாகிலும் சரீர சம்பந்தமிருக்குமானால், மனதின் தடிப்பு நீங்காது. கடவுளிடம் தெளிவான சேர்மானம் கிடைக்காது. கடவுளின் சேர்மானத்தின் இன்பத்தை இச்சிக்காதவர்கள், சரீர சம்பந்தத்தை விட்டொழிக்காத வரையில் பூரணமான இன்பத்தை அடையமாட்டார்கள். இதில் இயற்கை மரிப்பும், தியான மரிப்பும் சரிதான்!

நம்முடைய மனமானது எவ்வளவோ விஸ்தீரணமுள்ளது. இதன் விஸ்தீரணத்துக்கு அளவில்லை. உலகமெல்லாம் இதற்கு முன் ஓர் அணுவுக்குக்கூட சமானமில்லை. அப்படியிருப்பதுடன் இது மிகவும் சுருங்கவும் தக்கது. இதைச் சுருக்கி ஒரே எண்ணமாக ஒரு வஸ்தில் தாக்கினால், அது உருகி ஜீவகாந்த ஒளியாகப் பாய்கின்றது. இதை விரிய விட்டால் எல்லா வஸ்திலும் விரிந்து ஒளியிடுகின்றது. விரிந்த நிலைமையிலும் சித்தம் வலுவாயிருப்பது தன் ஸ்தூலத்தை எண்ணத்தினால் சூக்ஷுமமாக்கக் கூடியவர்களுக்கே! இவர்களே எல்லாக் கடினமான கட்டிப் பொருள்களையும் சூக்ஷுமமாக்கக்கூடும்! ஒரே வஸ்தை ஒரு பதவியில் ஜீவகாந்த ஒளி என்றும், ஒரு பதவியில் மனோ சக்தியென்றும், ஒரு பதவியில் ஆன்ம சக்தி என்றும், ஒரு பதவியில் இச்சா சக்தி என்றும் சொல்லப்படுகிறது.

சிலர் ஆகாயத்தைச் சுருக்கத்துக்காக பூத ஆகாயம், மன ஆகாயம், ஆன்ம ஆகாயமென்று விவரித்திருக்கிறார்கள். மன ஆகாயத்தை பிரம்ம ஆகாயமென்றும், ஆன்ம ஆகாயத்தைச் சிதாகாயமென்றும் சொல்லப்படும். ஆனால் இது ஏழு பிரிவுள்ளது. இந்த ஏழையும், ஏழு வானம் அல்லது ஏழு உலகமென்று

www.miskinsha.blogspot.com

சொல்லப்படும். இதில் ஒவ்வொன்றிலுமுள்ள அதிசயங்களையும் உண்மைகளையும் விவரிக்க முடியாது. இதில் ஒன்றைவிட ஒன்று வலுப்பமானது. இதற்கு மேலுள்ள சங்கதியும் விவரிக்கதக்கதல்ல! இந்த லோகங்களில், மானிடர்கள் மரித்த பின் தங்கள் ஞானம் இன்னும் செயலின் பதவிக்குத் தக்கபடிச் செல்லுவார்கள். உயிராய் இருப்பவர்களும் அந்த மேலான மறைவாகிய ஆன்ம லோகங் களுக்குத் தங்கள் ஞானம் அல்லது தபமாகிய மனோ பலத்தின் பதவிக்குத் தக்கபடிச் செல்லக்கூடும். மரித்தவர்களும் மரிக்காதவர் களும் இதில் சிலர், இரண்டு உலகம் வரையிலும், சிலர் ஐந்து உலகம் வரையிலும் செல்லக்கூடும். ஏழு உலகம் வரையில் சென்ற வர்கள் மிகவும் சொற்பம்!

யாக்கோப்பு, வர்ஜல், முஹம்மது போலொத்த சில மஹாத்மாக்கள், ஜீவ காந்த ஒளியின் ஏணி வழியாக இன்னும் மின்னல் அல்லது ஒளியென்னும் வாகன மூலமாகச் சென்றதாகச் சொல்லப்படுகிறது. இந்த வாகனத்துக்கு அல்புராக்கென்று சொல்லப்படும். புராக் என்ற பதம் பர்க் என்னும் பதத்தில் நின்றும் பிறந்திருக்கிறது. பர்க்கென்றால் மின்னல் அல்லது ஒளி என்று அர்த்தமாகின்றது. சிலரிதைக் கனவென்றும் சிலர் விழிப் பென்றும் சொல்லுகிறார்கள். கதையைக் கவனிக்கும்போது கன வாகத் தோன்றுகின்றது. ஆனால் சமாதி யோக விஷயங்களை கதையல்லது கனவின் போங்காக விவரிப்பதாகவும் சிலர் கருத்து.

மேற்சொல்லிய ஆன்ம லோகங்களுக்கு, ஜீவ காந்த ஒளி யினால் மயக்கப்பட்டுக் காந்த நித்திரையில் இருப்பவர்களின் ஆன் மாக்களை வெகு தூரம் வரையில் அனுப்பப்படுமானால் சிலசமயங் களில் அவைகள் திரும்பிவரப் பிரியப்படுகிறதில்லை. ஆகையால், அவைகளைத்திரும்ப இவ்வுலகத்துக்குக் கொண்டுவர சக்தியில்லா தவர்கள், அவைகளை ஆன்ம லோகங்களுக்கு வெகுதூரம் வரையில் அனுப்பக்கூடாது. ஒருசமயம் சரீரத்தின் பற்றற்றுப்போகும் அல்லது ஆகாயத்தில் 50 மைலுக்கு அப்புறத்தில் சில இடங்களில் பற்றுக் கவர்ச்சி அல்லது திண்மைக் கவர்ச்சியாகிய பிண்டித கருணம் இல்லாததால் எந்த வஸ்தும் அவ்விடத்தில் ரூபமற்றுப்போவது போல, ஒரு சமயம் இவள் ஆன்மா பிரமத்தில் ஐக்கியமானால் இவன் சரீரமும் ரூபமற்றுப்போகும். ஏனென்றால் அவ்விடம் செல்லுகிறவர்கள் ரூபமற்றே செல்லுகிறார்கள். ஒருவன் மூலமாக அனுப்பப்படாமல் தானாய்ச் செல்பவர்களுக்குப் போதுமான சித்த வலுவிருப்பதால் அவர்களுக்குப் பயமில்லை!

உலகமெல்லாம் அழிந்த போதிலும் ஆகாயத்தை போல் அரூபமான ஓர் உண்மையானது அழியாமலே இருந்து விடும்! இதைக்கடவுளின் உண்மையென்று சொல்லப்படும்! இதன் கண் வெளியான சகல தத்துவங்களிலும், சிருஷ்டிப்பொருள் களுக்கு முதன்மையான அல்லது ஆதி மூலமான தத்துவத்தை யூதர்கள் மோசேயுடைய ஒளியென்றும், கிருஸ்தவர் கிருஸ்து டைய ஒளியென்றும், இந்துக்கள் பரமாத்மாவுடைய ஒளியென்றும் முஹம்மதியர்கள் முஹம்மது நபியுடைய ஒளியென்றும் கூறுகின் றார்கள். இதில் நின்று சிருஷ்டிகள் உண்டானது. இதையே கடவுள் என்றும் பாவிக்கிறார்கள்!

இந்தக் கடவுளானவர் கிருஸ்தவருக்கு கிருஸ்தவரின் கொள்கையைப் போலவும், முஹம்மதியருக்கு முஹம்மதியர்களின் கொள்கையைப் போலவும், இந்துக்களுக்கு இந்துக்களின் கொள் கையைப் போலவும், யூதர்களுக்கு யூதர்களின் கொள்கையைப் போலவும், மற்றவர்களுக்கு மற்றவர்களின் கொள்கையைப்போலவும் தோற்றமாவாரென்று விசுவாசித்திருக்கிறார்கள்!

இதல்லாமல் மேற் சொல்லிய ரூபமற்ற கர்ணாடியின் தெளிவுக்குத்தகுமான, களங்கமற்ற பிரமத்தில் வெளியான தத்து வங்கள் அனந்தமுண்டு. அவைகளில் ஒவ்வொன்றையும், இந்துக் களும், யூனாவியாகிய கிரேக்கர்களும் கடவுளென்றே சொல்லு கிறார்கள். முகம்மதியர்களும், கிருஸ்தவர்களும், யூதர்களும் அவை களைத் தேவ தூதர்களென்று சொல்லுகிறார்கள். இது வரையில் எவ்வகையான சரீரங்களும் எடுக்காமலிருக்கிற ஆன்மாக்களுக்கே தேவதூதர்கள் அல்லது தேவ தூதர்களென்று சொல்லப்படும். இதே பலவகையுள்ளது: நிரஸயினம், தாவரயினம், விலங்கு இனம், பட்சியினம், மனித இனம் முதலியவைகளே! இவைகள் எல்லாம் ஜீவகாந்த ஒளியின் பல பிரிவுகளே!

இவைகளைச் சரீரமெடுப்பதற்கு முன்னும், சரீரமெடுத்து மரித்த பின்னும், பொதுவாக தேவதைகளென்றும், இவைகளில் துஷ்டமானவைகளைப் பிசாசென்றும் சொல்லப்படும். தேவதை களை இஸ்லாமானவர்கள் ஜின்னென்று சொல்லுவார்கள். இது தேவ தூதர்களாகிய மலாயிக்கத்துகளின் பதவிக்குக் கொஞ்சம் தாழ்ந்தது. இவ்விடத்தில் இவைகளை விஸ்தரிக்க முடியாது. இவைகளுக்கெல்லாம் சொந்தத்தில் ஒரு ரூபமுண்டு. என்றாலும் பல ரூபங்களில் வெளியாகத்தக்கது. இவைகளையும் நமது சித் தத்துக்கு அடக்கியாளக்கூடும்!

www.miskinsha.blogspot.com

இவைகளில் ஒவ்வொன்றையும் இந்த உலகத்தில் வெளியாக, ஆகாயம், நெருப்பு, காற்று, ஜலம், மண் மண்டலங்களைக் கடந்து, நிரஸ, தாவர, விலங்கு, முதலிய பல பதவிகளில் வந்து மனித ரூபமெடுக்கக் கட்டாயப்படுத்தப்படுகின்றது. அல்லது மனிதனே இந்தப்பதவிகளில் வெளியாகிறான். ஏனென்றால், சிருஷ்டிகளில் முதல் பதவியும், கடைசிப் பதவியும் இவனே! முதல் பதவியில் கடவுளைப் போலவும், கடைசிப் பதவியில் சிருஷ்டியைப் போலவு மாயிருக்கிறான்! முதல் பதவியில் படிப்படியாகத் தாழ்ந்து கடைசிப் பதவியில் படிப்படியாக உயருகிறான். முந்தின பதவியில் மனிதப் பதவியை விட்டு பல துறைகளில் இறங்குகிறான். பிந்தினபதவியில் பல துறைகளைக்கடந்து மனிதப் பதவியில் வருகிறான். (மனிதன்) மனுசன் என்பது மனு + ஈசன் என்பதில் நின்று மறுவியதாம்!

மேற்சொல்லியவைகளில் அனேகம் சரீரமெடுக்கப் போதுமான சித்த வலுவில்லாமல் திரும்பி விடுகிறது. குறைவான சித்த வலு உள்ளது சிசுவில் அல்லது கர்ப்பத்தில் மரித்து விடுகிறது. திரும்ப தன் சித்த வலுவுக்குத்தக்க ரூபங்களையெடுத்து, சித்தத்தைக் கெட்டியாக்கிக்கொண்டு தன் சித்த வலுவுக்குத்தக்க ரூபத்தில் வெளியாகி பிறகு மனித ரூபத்தில் வெளியாகின்றது. இதனால் எல்லா ரூபமும் மனிதனுடைய ரூபம் அல்லது உடையென்றும், இவன் ரூபமும் இவன் வெளியாகப்போகிற ஒவ்வொரு வஸ்தின் ரூபமும் ஆன்ம லோகத்தில் அடையாளமாக சித்தரிக்கப்பட்டிருக் கிறதென்றும், எந்த தத்துவத்தைக் கொண்டு இவைகள் பேதப் படுகின்றதோ, அந்த தத்துவத்தைக் கொண்டே நாமும் எல்லா வஸ்தையும் பேதிக்கலாமென்றும் அறியவும்!

மோசே, தாவீது, லூத்து, முதலியவர்கள், சிலரைக் குரங்காக மாற்றினதாயும், கிருஸ்து சிலரைப் பன்றியாக மாற்றியதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. சிலர் இதை வெளி ரூபமல்ல, அகரூபம் என்றும், இப்படியே அவர் இறந்தவர்களை எழுப்பவில்லை, அவர்கள் மனதை ஞானத்தைக் கொண்டு உயிராக்கினாரென்றும் சொன்னாலும், இந்த ஞானத்தினால் வெளி ரூபத்தை மாற்றவும், செத்த பிரேதத்தையே எழுப்பக் கூடுமென்றும் தோன்றுகிறது. இவ்விடத்தில் ஒரு சங்கதி ஞாபகம் வைக்கத்தக்கது. கவுஸைன் என்ற இரண்டு வில்லு அல்லது ஓர் வட்டத்தில் பாதியில் பிறக் கிற ஆன்மாக்களும், பாதியில் இறக்கிற ஆன்மாக்களும் யாத்திரை ஆகின்றது. இந்த இரண்டு பாதியையும் மஷ்ரிக், மக்ரிப் என்று சொல்லப்படும். வேறு நாமங்களும் உண்டு!

மேற்கூறியவைகளில் சித்தமென்பதும் அறிவென்பதும் இந்த தானத்துக்கு ஒரே பொருளாம்! இதனால் தெரிய வருகிறதாவது: மாத்துக்குத் துவக்கமும் முடிவும் வித்தாக இருப்பது போல உலகத்துக்கு மனிதனே துவக்கமும் முடிவுமாக இருக்கிறான்! இவனிலே யோசித்த வலுவாகிய அறிவும் மற்ற தத்துவங்களும் பூரணமாயிருக்கிறது. ஆகையால், எல்லா வஸ்தையும் இவன் ரூப மெடுக்க வம்பிக்கப்பட்டு வருகிறது. எந்த வஸ்துவானாலும் பூரணமான ஆன்ம விருத்திக்கு ஏதுவானபின் மனித வடிவில் வெளியாகின்றது. மனிதன் பிரமத்திலிருந்து பல பதவிகளைக் கடந்து – பிரமத்தில் போய்ச் சேரவேண்டும். இவனுக்குச் சரீர யாத்திரை முடிந்து விட்டது. இனி ஆன்ம யாத்திரை செய்ய வேண்டும்!

ஆனால் பிரமத்திலிடம் நேசமாயிருப்பவர்களுக்கு இந்த உலகம் எப்படி மாயையோ, அப்படியே கடவுளும், ஆன்ம லோ கங்களும், தேவ தூதர்களும் மாயையேயாகும். பிரமமே ஆன்மா! ஆன்மாவே மனம்! மனமே ஜீவகாந்த ஒளி! ஜீவ காந்த ஒளியே உயிர்! உயிரே உடலாகும்! ஒரே வஸ்து பல வஸ்தாய் வெளியாகி இருக்கிறது. ஒன்றுக்கொன்று ரூப பேதம் குண பேதமேயன்றி உண்மை பேதமில்லை. இது மகா நுட்பமான ஞானம்!

இது உலகத்தில் ஒரு காலத்தில் பூரணமான ஸ்திதியில் இலங்கிக்கொண்டிருந்தது. பிறகு வரவர மறைந்து போய்விட்டது! இப்போது சொற்ப காலமாக இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய கல்வியிற் சிறந்த தேசங்களில் சில அறிவாளிகள் இந்த ஞானங் களைப் பரிசோதித்து வருகிறார்கள். ஆனால் இன்னும் இந்த ஞானமானது, பழைய பூரண ஸ்திதிக்கு வரவில்லை. இன்னும் இந்த ஞானத்தைப் பிரயோகிக்கும் விதவ்களும் அவர்களுக்குச் சரியாக விளங்கவில்லை. என்றாலும், இறந்தவர்களின் ஆன்மாக் களைப் கூப்பிட்டுப் பேசுதல், ஆகாயத்தில் பறக்குதல், பிறர் மனதிலுள்ள சங்கதிகளைத் தெரிந்து கொள்ளுதல். அக்கினியில் பிரவேசித்தல், ஜலத்தின் மேல் நடக்குதல், ஆன்ம தத்துவத் தினால் விருந்தளித்தல், புஷ்பத்தினால் மழை வருஷித்தல், தேவையுள்ள வஸ்துக்களை ஆகாய மார்க்கமாய்த் தருவித்தல், சூக்ஷ்ம சரீரமெடுக்குதல் முதலிய அற்புதங்களைச் செய்ய வல்ல வர்களாக இருக்கிறார்கள். தற்போது ஐரோப்பிய மேல் நாடும், இந்திய வட நாடும் இந்த ஞானத்தில் தேர்ச்சியடைந்து வரு கிறது. ஒரு காலத்தில் இந்த ஞானமானது பூரணமான உன்னத

www.miskinsha.blogspot.com

நிலைமைக்கு வந்து பிரகாசிக்கவும், எல்லார் கையிலும் தேவ தத்துவம் வெளியாகவுங் கூடுமென்று தோன்றுகின்றது!

பிரீமேஸன் சங்கத்திலும், தியாஸொஃபி சங்கத்திலும் அனேக வித்தைகளைச் செய்யக்கூடியவர்கள் இருக்கின்றார்கள். தியாஸொஃபியின் ரிப்போர்ட்டுகளை வாசித்தால், அல்லது பிரீமேஸனின் ரகசியங்களை உணர்ந்தால், மிருகத்தன்மை நம்மை நீங்கி தேவ தன்மை நம்மில் பிரகாசிக்கின்றது. இதன் விசேஷங்களைப் பின்னால் எழுதிக்காட்டுவோம். இந்த ஞானத்தை உணர்ந்தவர்கள், இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய இடங்களில் அனேகர் குடி, சூது, வாது, பொய், களவு, விபசாரம் முதலிய கெட்ட குணங்களை விட்டு விட்டார்கள். எந்தக் காலத்திலும் ஆலிம்களாகிய குருமார்களும், பாதிரிகளுமே உண்மைக்கு இடையூறாக இருந்து, உண்மையைப் பரவவிடாமல் மனிதனுடைய தத்துவத்தை மட்டுப்பட்டதாக விவரித்து, உண்மையை மறைத்து விட்டார்கள்! இந்தக் காலத்திலும் பிரீமேஸன், தியாஸொஃபியைத் தூற்றிக் கொண்டிருப்பவர்களும் அவர்களே!

இன்னும் மேற்கூறிய ஜீவகாந்த ஒளியானது, நமது இருதயத்தில் நின்று நம்முடைய பல எண்ணங்களாலும் ஊற்றுக் கண்ணின் ஜலத்தைப்போல் வெளியாகி, நமது இந்திரியங்களின் வழியாக ஒலித் தோடிக்கொண்டிருக்கிறது. ஆகையால், நாம் ரகசியமாக நம்முடைய மனதில் ஒரு நூதன காரியத்தை உத்தேசித்து, அதை சீக்கிரம் செய்து முடிக்காமல், செய்வோம் செய்வோமென்று காலதாமதம் செய்து கொண்டிருந்தால், உடனே இந்த ஒளி ஆகாயத்தில் பரவி, இன்னொருவனுடைய மனதில் தாக்கி அந்த எண்ணத்தை அவன் மனதிலும் உண்டு பண்ணி, அவனை அந்தக்காரியத்தை செய்யும்படி செய்விக்கின்றது; அவன் நமக்கு முந்தி அந்தக்காரியத்தைச் செய்து முடித்து விடுகிறான். இவ்விதமாக ஒருவன் எண்ணத்தைப் பலர் மனதிலும் உதிக்கச் செய்கின்றது!

அன்றி ஆன்மாவின் குணம் சரீரத்திலும், சரீரத்தின் குணம் ஆன்மாவிலும் தாவுகின்றது. ஏனென்றால், நம்முடைய மனதில் சந்தோஷமுண்டானால் வாயில் சிரிப்பு வருகின்றது. நம்முடைய கண் அழுமேயானால் மனதில் துக்கமுண்டாகின்றது. இந்தச் செயல்களை ஒருவனின் சந்தோஷத்தின் நிமித்தம் அல்லது ஒருவனின் துக்கத்தின் நிமித்தம், மாயத்துக்காக அவனோடு இந்தச் செய்கையில் நாமும் உடந்தையாயிருப்பது போல்பாவனை

காட்டினாலும் சரி, உடனே அவன் துக்கமும் சந்தோஷமும் நம்மில் தாவி அவனைப்போல் நம்மையும் ஆக்கிவிடும்!

ஒருவன் தன் சரீரத்தை அல்லது தன் தலையைச் சில நேரம் வரையில் ஒரே எண்ணமாக அசைத்துக்கொண்டே இருப்பானேயானால், இச்செயலினால், முதலாவது இவன் சரீரத்தின் குணம் அவன் ஆன்மாவின் பேரில் தாவுகின்றது. பின்பு அவன் ஆன்மாவின் குணமும் இவன் சரீரத்தின் பேரில் தாவ ஆரம்பிக்கின்றது. பிறகு வரவர இவனுக்குக் கேரி (போதை) உண்டாகி தன்னை மறந்தவனாகிறான். இவன் புலன் பொறிகளெல்லாம் அற்றுப் போகின்றது. பின்பு அவன் உட்பார்வை துலங்கினவனாகி, மறைவுகளையும், பிறர் மனதிலுள்ள சங்கதிகளையும் சொல்லக் கூடுமாகிறான். கேட்ட வஸ்துக்களைத் தருவித்துக் கொடுக்கவும், பிணிகளைச் சுகப்படுத்தவும், தன் பேரில் வல்லயம், ஈட்டி முதலிய ஆயுதங்களைப் பிரயோகிக்கவும், தாம் துண்டித்த உறுப்புகளைப் பொருத்தவும், காயங்களையும், ரணங்களையும் அப்பொழுதே ஆற்றவும் கூடுமாகிறான். திரிகால வர்த்தமானங்களைச் சொல்லுகிறான். இந்த நிலைமை அவனில் அதிகப்பட்டால், அவன் கண்டிப்பான சரீரமும், சூக்ஷுமத்தைப் போல் கண்டிப்பற்றதாகி விடுகின்றது அப்பொழுது அவனைப் பிடிக்க ஏதுவில்லாமல் போகிறது. அப்பொழுது இவன் சொல்லுக்கும் அதிக குணமுண்டாகி இருக்கிறது. அந்நிலைமையில் அவன் நீயில் விழுகிறதும், ஆகாயத்தில் கொளுகிறதும், ஜலத்தில் நடக்கிறதும் மகா வித்தையாய் இருக்கும்! அந்நிலைமையில் அவன் யாரையாவது உரிக்கிப் பார்த்தால் அல்லது ஒங்கி அறைந்தால், அல்லது கட்டித்தழுவி நெஞ்சோடு நெஞ்சு அணைத்தால் அவனுக்கும் அந்த குணம் தாவி விடுகின்றது. அவனும் அவனைப்போல் குதிக்க ஆரம்பித்து விடுவான்!

இந்த குணங்கள் ஜீவகாந்த ஒளியின் தன்மையினாலே உண்டாகின்றது. இன்னும் ஒருவன் தனக்கு பேய் இருக்கிறதாக நிச்சயித்துக் கொள்வானேயானால் அவன் சரீரத்தில் அனேக குணங்குறிகளைக் காட்டித் திடீரென்று, ஜீவகாந்த ஒளியினால் நிறைக்கப்பட்டு, விதவிதமான பயங்கர ரூபங்களைக்காட்டி அவன் தலையைச் சுற்ற வைக்கும். பிற்பாடு இவனுக்கும் மேற்சொல்லியது போல் நடக்கும். சிறு குழந்தைகளுக்கு விதவிதமான கனவுகளைக்காட்டி அழவும், சிரிக்கவும் வைக்கிறது இந்த ஒளியே! சில தெளிவான மனதுக்கு உண்மையான சங்கதிகளையும், சில இருளான மனதுக்கு உபயோகமற்ற பொய்யான சங்கதி

www.miskinsha.blogspot.com

களையும் கனவில் காட்டி வைக்கிறது இந்த ஒளியே! இந்த ஒளி கம்மியாக இருப்பவர்களுக்குக் கனவு காணாது. இந்த ஒளியே கனவுகளுக்குக் காரணம்!

இந்த ஒளி அதிக கம்மியாக இருப்பவர்களுக்கு நித்திரை பிடியாது. இந்த ஒளி அளவுக்கு மிஞ்சியதாயிருந்தால் அடிக்கடி மூர்ச்சை உண்டாகும். மரித்த ஆவிகள் கண்ணுக்குத் தோற்றமாகும். இவர்களைச் சுற்றிலும் மரித்த ஆவிகள் சஞ்சரிப்பதை மற்றவர்களும் காணலாம். இவர்களை அந்த ஆவிகள் சிலசமயம் ஆகாயத்தில் கொளுக வைப்பதும், சிலசமயம் இவர்களை ஆகாய மார்க்கமாகத் தூக்கிக்கொண்டு போய் மலையின் உச்சம், மரத்தின் கிளை, வீட்டின் கூரை முதலிய இடங்களில் வைத்து விடுகிறதும் உண்டு. யாராவது கண்டு அவர்களை அழைத்துக் கொண்டுவர வேண்டும். அல்லது அந்த ஆவிகளே இவர்களின் பேரில் அன்பு உள்ளதாயிருந்தால், திரும்பக் கொண்டு வந்து விடுகிறதுமுண்டு. இவர்களுக்கு "மீடியம்" என்று சொல்லப்படும். நமது சித்தம் அன்னியில் இது அதிகப்பட்டால், இவ்வித தீங்குகளையும் குறைந்தால் அதிக பலவினத்தையும் உண்டாக்குகின்றது. ஆகையால், நமது சித்தத்தை மீறி குறைவதும், அதிகப்படுவதும் ஒரு வகை ஆத்ம சம்பந்தமான வினையாயிருக்கும். இதற்கு மெஸ்மரிஸர்களிடத்திலல்லாமல் டாக்டர்களிடத்தில் பரிகாரமில்லை! நமது சித்தத்தினால் இந்த ஒளி எவ்வளவு அதிகப்பட்டபோதிலும் நன்மையாயிருக்கும். தமது சித்தத்தைக்கொண்டு அதிகப்படுத்திக் கொள்வதற்காகவே பெரியோர்கள் முயலுகிறார்கள்.

சில சரீர சம்பந்தமான வியாதிகளினாலும் இந்த ஒளி திடு கூறாக அதிகப்பட்டு, மறைவுகளைக் காட்டுகின்றது. வைசூரி போல் ஒத்த வியாதிகளில் பெரும்பாலும் இக்குணங்கள் வெளியாகின்றன. முடிவில் நமது சித்தமன்னியில் அதிகப்படுகிறதும், குறைகிறதும் பின்னையிருக்குமென்று அறியவேண்டும். இதன் விபரங்களையும் பின்னால் விவரித்துக் காட்டப்படும். அன்றி நாம் ஆதரவு வைத்த வேளையில், நாம் விசுவாசித்திருக்கிற பெரியோர்கள் ரூபத்தில் வெளியாகி நமக்கு உதவி புரிவதும், நாம் பயந்த நேரத்தில் பயங்கரமான ரூபத்தில் வெளியாகி நம்மைப் பயமுறுத்துகிறதும் இந்த ஒளியே! வியாதியஸ்தர்கள் மூர்ச்சையாயிருக்கும் போது, அவர்களின் சூக்ஷுமம் கழன்று கொஞ்ச தொலைவில் நிற்க சில (Sensitive) கூர்மையான புலனுள்ளவர்கள் கண்டிருக்கின்றார்கள். அப்போது சூக்ஷுமத்துக்கும் சரீரத்திற்கும் காந்த சம்பந்தமான ஒரு தொடர் மட்டும் இருக்கும். அத்தொடர் அற்று

விட்டால் மரிதன் மரித்து விடுவான். சூக்ஷுமம் மறுபடியும் சரீரத்தில் மீளாது. அந்தத் தொடர் இருக்கிற வரையில் சூக்ஷுமம் சரீரத்தை விட்டுப்பிரியாது. யோகிகளுக்கும், பெரியோர்களுக்கும் அவர்களின் சூக்ஷுமம் எவ்வளவு தொலைவுக்குச் சென்றிருந்த போதிலும் சரி! மேற்சொல்லிய காந்த சம்பந்தமான தொடர் அற்றுப் போகாது.

சாதாரணமான ஜனங்களுக்கு அவர்களின் சூக்ஷுமம், சரீரத்தை விட்டும் வெகு தூரம் வரையில் சென்று விட்டால் அத்தத் தொடர் அற்றுப்போகும். இறந்து போன மரிதர்களைக் கூப்பிடுகிறவர்கள் தன் எண்ணங்களை ஒன்றுபடுத்தி, மரித்த ஆன்மாக்களைத் தன் பாசம் இழுத்து அழைக்கும் போது, தாம் மூர்ச்சையாகி தமது சூக்ஷுமம் கழன்று சபையிலுள்ளவர்களின் – இறந்துபோன சொந்தக்காரர்களின் ரூபத்தில் சில சமயம் வெளியாவதும் உண்டு. இப்படி வெளியாவதற்கு சபையார்களின் வலுவான சித்தமல்லது ஜீவ காந்த ஒளியே காரணம்!

இதற்கு ஆனிமெல் மேக்னட்டிஸம் அல்லது, மக்னாத்தீஸை ஹைவானி என்று சொல்லப்படும். இதற்கு ரேஷ்தேக் என்பவர் பிரெஞ்சு பாஷையில் "ஒடல்" அஃதாவது ஒருவகை ஒளியென்று சொல்லுகிறார். சிலரிதை (Soul Oura) "ஸோல் ஒரா" அஃதாவது ஆன்மாவின் ஒளியென்று சொல்லுகிறார்கள். இன்னும் சிலரிதை "எலெக்டிரிஸிட்டி" (Electricity) அஃதாவது, மின்சாரமென்றே கூறுவார்கள். ஆனால் நட்சத்திரங்களின் தத்துவங்கள் உலகத்தில் எல்லா வஸ்துவிலும் சென்றிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று அனேக விஷயங்களில் ஒற்றுமையாக இருந்த போதிலும், அனேக விஷயங்களில் விகற்பமாகவே இருக்கின்றன. இது போலவே மின்சாரமும், காந்த சத்தும், ஜீவகாந்த ஒளியும். இன்னும், வேறு வகையான மற்ற அனேகவித தாதுக்களும் உலகத்தின் ஒவ்வொரு வஸ்துவிலும் நிறைந்திருக்கின்றன. இவை ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று அனேக விஷயங்களில் ஒற்றுமையாகவும், அனேக விஷயங்களில் வேற்றுமையாகவுமிருக்கின்றன. அன்றி, ஒரே தாதாகிய காந்த சத்து அல்லது மின்சாரம் அல்லது, ஜீவகாந்த ஒளி அல்லது மற்ற தாது இவைகளில் ஏதேனும் ஒன்றைத் தனித்தனியே ஒவ்வொரு வஸ்துவிலும் பரிசோதித்தால் இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வஸ்துவிலும் பல தன்மையாகவே இருக்கின்றன. இதைக் குறித்து இவ்விடத்தில் விஸ்தரிக்க முடியாது. (Science or Natural Philosophy) "ஸைன்ஸ் ஆர்

www.miskinsha.blogspot.com

நேச்சுரல் ஃபிலாஸொஃபி" அஃதாவது, தத்துவ ஞானம் அல்லது இயற்கைப் பிரமாணங்களை வாசித்திருப்பவர்கள் நன்றாய் அறிந்திருப்பார்கள்.

அப்படியிருந்தபோதிலும், சகல மூலாதாரங்களுக்கு மூலமாகவும், இராஜனாகவுமிருந்து சகல மூலதாதுக்களையும் அடிமையாக அடக்கி ஆளக்கூடியதும், எல்லாவற்றையும்விட அதிக வலுவான தத்துவமுடையதும், பெரிய கிரகங்கள் தொடுத்து சிறிய அணு வரையில் ஆகாயம் உள்பட எங்கும் வியாபித்திருப்பதும் ஜீவகாந்த ஒளியே! இதற்குமுன் மற்றவைகள் மிகவும் அற்பமானவைகள். இதன் மகத்துவத்தை ஒருவராலும் விவரிக்க முடியாது. இதற்கு மறைவுகளைக் காட்டுகிற சக்தியுண்டு. இது பூரணமான ஞானம் உடையது. எல்லா வஸ்துக்களுக்கும் இதுவே ஞான சூரியனாக இருந்து ஞானத்தைக் கொடுக்கின்றது. இதன் விளைவு ஸ்தலம் கடவுளின் உள்ளமையாயிருக்கின்றது. இதனைக் கடவுளின் சித்தமல்லது, சித்த தத்துவமென்றே சொல்லவேண்டும்! கடவுளுக்கும் மற்ற வஸ்துக்களுக்குமிருக்கிற சம்பந்தத்தினால், மற்ற வஸ்துக்கள் ஒன்றுக்கொன்று இயற்கையாக இந்தத் தத்துவத்தைப் பிரயோகிப்பது போல நாமும் நமது சித்தப்படி மற்ற வஸ்துக்களின் பேரில் இயற்கையாக இந்தத் தத்துவத்தை பிரயோகிக்கலாம். இது நமது நாட்டத்தினால் அசைவில் வருகின்றது. இதைப்பிடித்து அசைத்தால் உலக முழுமையும் அசையக்கூடிய தாயிருக்கிறது. தற்போதுள்ள கல்விவான்களுக்கு இன்னும் இதைப்பற்றிய விசேஷங்கள் சரியாக விளங்கவில்லை. சந்திரன், சூரியன் முதலானவைகளும் இதற்கு முன் பிரகாசமற்றவைகள்!

இன்னும் இந்த ஒளியை நித்திரை செய்பவனிடம் ஒரு மனிதனுடைய சுபம் அல்லது, ஒரு மிருகத்துடைய சுபத்தில் அனுப்பி அவனுடன் பேச வைக்கலாம். எவ்விதமெனில் நாம் இன்னானுடன் இன்ன சுபத்தில் பேசவேண்டுமென்று சிந்தித்தவுடன் நம்முடைய இருதயத்திலிருந்து ஜீவகாந்த ஒளியின் அலைகள் எழும்பி ஆகாயத்தில் மோதுகின்றன. ஆகாயத்திலிருக்கிற ஜீவகாந்த ஒளியின் அலைகளானவை, அவன் சரீரத்திலிருக்கிற ஜீவகாந்த ஒளியில் மோதி அலைகளையுண்டாக்கி, நாம் சிந்தித்த சுபங்களை அவனுக்கு வெளியாக்கிக் காட்டுகின்றன. இவ்விதமாக ஒரு சேனையை அனுப்பி ஆயுதங்களைக் கொண்டும் அவனுடன் யுத்தம் செய்ய வைக்கலாம். இவைகளை நாமும் பரிசோதித்திருக்கிறோம். இன்னும் எதிரிகளிடம் அனுப்பி ஒரு கோட்டையைப்

போல், அவர்களை வளைத்துக் கொள்ளவாவது, ஒரு மலையைப் போல் அல்லது, ஒரு சுவரைப்போல் எழுப்பி அவர்களை தடுத்துக் கொள்ளவாவது செய்யலாம். அதிக வலுவான சித்தம் உடையவர்கள், அல்லது இந்த வித்தையில் அப்பியாசமுடையவர்கள், தூக்கத்திலிருப்பவர்களிடத்தில் மட்டுமல்ல, விழித்திருப்பவர்கள் பேரிலும் இவ்விதக் காட்சிகளைக் காட்டலாம். இன்னும் மந்திரம் ஜெபிப்பவர்களிடத்திலும், யோகத்தில் இருப்பவர்களிடத்திலும், தபத்திலிருப்பவர்களிடத்திலும் போய்ப் பல்லை இளித்து, முகத்தை வலித்து பயங்கரமான பல சுபங்களைக்காட்டி பயமுறுத்துகிறதும், நல்ல சுபங்களாகவும், நல்ல பானங்களாகவும், நல்ல வாசனைகளாகவும் வெளியாகி அவர்களைப் பரவசப்படுத்துகிறதும் இந்த ஒளியே! இந்த ஒளியானது தபத்திலிருப்பவர்களுக்கும், யோகத்தில் இருப்பவர்களுக்கும், நல்ல சுபத்திலாவது, கெட்ட சுபத்திலாவது வெளியாகி தன் பொருத்தம் அல்லது, கடவுளின் பொருத்தத்தை அறிவிக்கும். இந்த ஒளியே அவர்களுக்கு நல்ல காரியங்களையும், நல்ல சுபங்களையும் காட்டுமானால் இதனை மலக்கானியா அல்லது ரஹுமானியா அஃதாவது, தேவ தூதர் அல்லது, கடவுளைச் சேர்ந்த குணமென்றும், இந்த ஒளி அவர்களுக்குக் கெட்ட காரியங்களையும், கெட்ட சுபங்களையும் காட்டுமானால், அதனை ஷைத்தானியா அஃதாவது, பிசாசின் குணத்தைச் சேர்ந்ததென்றும் சொல்லப்படும். இன்னும், இது நமக்கு நமது சித்தத்திற்கு வழிப்பட்டதாகவும், பரலோகம், ஆன்மலோகத்தின் உண்மைகளை நமக்கு அறிவிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. நமது மன எழுச்சிக்குத் தக்க சுபங்களைக் காட்டுவதே இதன் சுபாவம். தனித்திருப்பவர்களின் எண்ணத்தில் இது பல வகை சுபங்களை வெளியாக்குகின்றது. எண்ணத்தை விட்டும் இது நீங்கின வஸ்தல்ல! எண்ணத்தையும் இதையும் பிரிக்க முடியாது. இந்த ஒளி அறிவாகவும், அந்த எண்ணம் பார்வையாகவும் இருக்கிறது. இஃதோடு இச்சையும் சம்மந்தப்பட்டிருக்கிறது. இந்த இச்சையில் தொனியுமிருக்கிறது. இவ்விடத்திலிது விவரிக்கத் தக்கதல்ல!

இன்னும், மின்சாரமும், காந்த சத்தும், ஜீவகாந்தமும் இன்னும் மற்ற தாதுக்களும், எல்லா வஸ்துவிலும் ஒரே அளவாயிராமல் பல அளவாகயிருப்பதால், ஒரு தாதை ஒரு வஸ்துவில் அதற்குப் போதுமான அளவை விட்டுக் குறைக்கவாவது, அதிகப்படுத்தவாவது கூடும். இது போலவே ஜீவகாந்த ஒளியை ஒரு வஸ்துவில் போதுமான அளவுக்கு குறைத்தாவது, அதிகப்படுத்தியாவது வேலை வாங்கப்படுகிறது.

www.miskinsha.blogspot.com

காற்றின் அலையில்லாத ஒரு கட்டடத்துக்குள் சற்று உயரத்தில் அல்லது மாடத்தில் பேரில், ஒரு தீபத்தை அல்லது, மெழுகுதிரியைக் கொளுத்தி வைத்து, அதற்குக் கீழ்ச்சற்றுத் தூரத்தில் இன்னொரு தீபம் அல்லது மெழுகு திரியைக் கொளுத்தி வைத்துக் கொஞ்ச நேரத்துக்குப்பின் கீழிருக்கிற தீபமல்லது, மெழுகுதிரியை அமர்த்திவிட்டால், இதன் புகை நேராக ஆகாயம் செல்லாமல் வளைந்து, மேலே எரிந்துக்கொண்டிருக்கிற தீபத்திலிடம் போய்ச் சேர்கின்றது. பின்பு அந்தப் புகையின் அணுக்களை அந்த தீபத்தின் அக்கினியானது உஷ்ணப்படுத்தி, அந்தப் புகையின் அணுவானது அந்தப் புகையின் தொடர் ஏற்பட்ட ஆகாயத்தின் அணுக்களை உஷ்ணப்படுத்தி, அந்தப் புகையல்லது அந்தப்புகையின் தொடர் ஏற்பட்ட ஆகாயத்தின் வழியாக அந்தத் தீபத்தின் அக்கினியின் அணுக்கள் சென்று, திரும்ப அந்த அமர்ந்த தீபத்தைக் கொளுத்தி விடுகின்றன. வரவர அந்தக் கட்டடத்துக்குள் இருக்கிற ஆகாயத்தின் அணுக்கள் முழுமையும் உஷ்ணப்படுத்தப் பட்டு, அந்தத் தீபத்தின் அக்கினியின் அணுக்கள் ஆகாய முழுமையும் பரவி, அந்த கட்டடத்திலும், நாம் அணித்திருக்கிற வஸ்துக்களிலும் தீயைத்தாவச் செய்கின்றது. இந்தப் பரீட்சை மரக் கட்டடங்களில் செய்யக்கூடாது; அபாயம் நேரிடும். இந்தப்பரீட்சை செய்யும்போது நாமும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

மேற்சொல்லிய இரண்டு தீபங்களுக்கும் ஒன்றுக்கொன்றிருக்கிற பாசம், அல்லது, கவர்ச்சியைப்போல், ஒரு மனதுக்கும் மற்றொரு மனதுக்கும் உண்டாயிருக்கிறது. இது போலவே கடவுளுக்கும், சிருஷ்டிப் பொருள்களுக்கும் 'சம்பந்தமுண்டாயிருக்கிறது. கடவுள் நெருப்பாயிருந்தால், சிருஷ்டிப் பொருள்களின் ஆன்மா சிறிய நெருப்பாயிருக்கும். பெரிய நெருப்பும், சிறிய நெருப்பும், கொளுத்துகிற தன்மையில் இரண்டும் ஒன்றாயிருக்கின்றன.

இச்சையினால் ஆன்மாவிலுண்டான அலைக்கு மனமென்றும், அம்மன நோக்கத்தால் அம்மனதின் கண் எழும்பிய அலைக்கு ஜீவகாந்த ஒளியென்றும் பெயர். ஆதலால், இந்த ஒளியை மனமென்றாவது, ஆன்மாவென்றாவது, இச்சாசக்தி என்றாவது சொல்லலாம்! நமது கண் சூரியனின் ஒளி அல்லது, விளக்கின் ஒளியன்றியே பார்க்காது. அது போலவே நமது காது ஆகாயத்தின் உதவியன்றியே கேளாது. இதைப்போலவே நாம் இந்த ஜீவகாந்த ஒளியின் உதவியன்றியே தேவ வசனங்களைக் கேட்கவும், தேவ தூதர்களைக் காணவும், ஆன்மலோகம், பரலோகத்தின் உண்மைகளை அறியவும் முடியாது. இந்த ஒளியானது, ஞானமில்லாத்தபசி அல்லது யோகிகளுக்கும், உண்மையையும், நீதத்தையும் அனுசரிக்காமல் அக்கிரமமாக நடப்பவர்களுக்கும் உண்மையைக் காட்டாமல்-தேவ தூதர்களைப் போலவும், கடவுளைப் போலவும், அவர்களுடைய மன எழுச்சிக்குத்தக்கபடி, அல்லது அவர்களுடைய விசுவாசம் அல்லது மனமுயற்சிக்குத் தக்கபடி, ஏதாவது ஒரு வடிவெடுத்து அவர்களோடு வசனித்து, அவர்களைப் பரவசபடுத்தி ஏமாற்றிவிடும். ஞானத்தை உணர்ந்தவர்களுக்கும், உண்மையையும், நீதத்தையும் அனுசரித்து சன்மார்க்கமாக நடப்பவர்களுக்கும் இந்த ஒளியானது – ஆன்ம லோகம் அல்லது, பரலோகத்தின் உண்மைகளையும், தேவதூதர்களின் உண்மைகளையும், கடவுளின் உண்மையையும் உள்ளது உள்ளபடி சரியாகக் காட்டுகின்றது. இதன் மகத்துவத்தைச் சொல்ல முடியாது!

ஆன்மாவுக்கும், மனதிற்கும், ஜீவகாந்த ஒளிக்கும் ஒன்றுக்கொன்று தடிப்பின் வித்தியாசமும், ஒன்றுக்கொன்றுள்ள அலைகளின் நுட்பங்களின் வித்தியாசமும் இருந்தபோதிலும், ஒன்றுக்கொன்று பிரிக்கக்கூடாத சம்பந்தமுள்ளதாக இருப்பதால், ஒன்றுக்கொன்றிருக்கிற பாசம் அல்லது கவர்ச்சியினால், ஒன்றின் குணம் மற்றொன்றின் பேரில் தாவிக்கொண்டிருக்கின்றது. சூனியமும் இந்த தத்துவத்தைக் கொண்டே செய்யப்படுகின்றது; என்றாலும், இதில் தெய்வீக குணமும் பொருத்தமும் சம்பந்தபட்டதல்ல. ஆதலால், அவர்கள் சில காலத்துக்குள் இந்த ஒளியினால் தண்டிக்கப்பட்டு விடுகிறார்கள்! இதனை வீண் விளையாட்டுக்கும், கெட்ட காரியங்களுக்கும், பிரயோகிப்பதனாலே, தெய்வீக ஒளிக்கு அவமதிப்புக்கு இடமுண்டாகின்றது. அப்படிச் செய்பவர்கள் அகத்தியம் மறுமையில் தண்டிக்கப்படுவார்கள். நாம் செய்கிற சொற்ப சொற்ப செயல்களும், சொற்ப சொற்ப மன ஊசாட்டங்களும், ஆகாயத்தில் சித்திரிக்கப்படுகின்றன! இவை மறுமையில் நமக்கு இன்பத்தையாவது, துன்பத்தையாவது காட்டுமென்று (Psychology) ஸைக்கொலாஜி அல்லது இல்மெ மாப அதுத் தபி ஆத் என்னும் இயற்கைக்குப் பின்னுள்ள மறுமை சாஸ்திரம் அல்லது ஆத்ம தத்துவ சாஸ்திரத்தின்படி தெரிய வருகிறது. இன்னும், ஒவ்வொரு வஸ்துவும் அழியும் போது " தன் நிழல் அல்லது, சாயையைப் போல் " ஒரு ரூபத்தை விட்டுவிட்டு அழிகின்றனவாம். அவை எப்போதும் அழியாமலே இருக்கின்றனவாம்! அவை யோகிகளுக்கும், மரித்த ஆவிகளுக்கும், காந்த உறக்கத்தில் இருப்பவர்

www.miskinsha.blogspot.com

களுக்கும் தெரிய வருகிறதாம். இதற்கு ஒற்றுமையாகத் தத்துவ ஞானத்தின்படி, ஒரு வஸ்துவும் அழிகிறதில்லை! ரூபம் பேதப் படுகிறதுதானென்றும், சடப் பொருள்களும், தத்துவங்களும் அழிகிறதேயில்லை! ஒரு நிலைமையை விட்டும் மறு நிலைமையில் மாறுகிறது தானென்றும் தெரிய வருகிறது.

ஒவ்வொரு வஸ்துவின் காரண சரீரங்களும் ஆகாயத்தில் வெகு தூரம் வரையில் வியாபித்திருக்கின்றன. அவற்றை ரூபத்தைக் கொண்டு மட்டுப்படுத்த முடியவில்லை. இவற்றின் பிரகாசமோ, கொடிய மின்னலைவிடக் கொடியதாயிருக்கிறது! ஞானத்தினாலும், பரிசுத்தமான எண்ணத்தினாலும் வளரக் கூடியதாயிருக்கிறது! யாதொரு கனவும் அற்ற ஆழ்ந்த நித்திரையில் இது வெகுதூரம் வரையில் சென்று விடுகிறது. விழித்தபின் இது சென்ற மேலான உலகங்களும், அவ்விடத்தில் அது கண்ட விஷயங்களும் நமக்கு ஞாபகமில்லாமல் போகின்றன. ஏனென்றால் கடவுளின் நாட்டத்தின் அலைகளை நமது இந்திரியங்களுக்கு அடையச் செய்வது இந்த ஜீவகாந்த ஒளியே! தெய்வலோகம், ஆன்ம லோகங்களின் விஷயங்களை எட்டிக்கொள்ள, ஜீவகாந்த ஒளியின் நுட்பமான அலைகளை பெட்டிக் கொள்ள வேண்டும். அப்படி அடைந்துகொள்ள நமது இந்திரியங்களுக்குப் போதுமான தெளிவும், சக்தியுமில்லாததால் மறந்து போகின்றன. ஒரு பாட்டலுக்குள் ஒரு மணியைத் தொங்கவிட்டு, மின்சாரக் கம்பியைத் தொடுத்து மின்சாரத்தைப் புகட்டி, மணியடிக்கும்படி செய்து, பிறகு அப்பாட்டிலை ஊடி (Air pump) ஏர்ப் பம்பு அல்லது மஃராஜூல் றைவா லென்னும் காற்றிழுக்கும் கருவியினால் மெதுவாக உள்ளிருக்கிற காற்றை வெளிப்படுத்தினால், வாயுவை வெளிப் படுத்தியதற்கு முன் கேட்ட மணிச் சத்தம், வரவரக் கம்மிப்பட்டுக் கடைசியில் அறவே கேட்காது! மணி அசைகிறது மட்டும் தெரிய வரும். இதனால் தெரிய வருகிறதென்னவென்றால், (Ether) ஈதர் இதற்கு அரபிப் பாஷையில் அதீரென்று சொல்லப்படும். அதாவது ஆகாயம் சப்தத்தை நமது செவிப்புலனுக்கு எட்ட வைக்கிறதற்கு ஆகாயத்தைவிடவும், வெளிச்சத்தை விடவும், இன்னும் அந்த பாட்டலில் வெளிப்படாமல் தங்கியிருக்கிற இலேசான காற்றை விடவும், அதிகத் தடிப்பான வஸ்துவின் அலைகள் தேவையாயிருக்கின்றன. இல்லாவிட்டால் அந்த பாட்டலுக்குள்ளிருக்கிற ஆகாயமும், வெளிச்சமும், இலேசான காற்றும் அந்த சப்தத்தை நமது செவிப் புலனுக்கு எட்ட வைக்கலாம். அந்த பாட்டலுக்குள்ளிருக்கிற ஆகாயமும், இலேசான காற்றும், வெளிச்சத்தின் அலைகளை

மட்டும் நமக்கு எட்டவைக்க போதுமாகின்றன, மற்றப்படி ஆன்ம லோகத்தின் சங்கதிகளை நமது ஞாபகத்துக்கு எட்டி வைக்கக் காரணமாயிருக்கிற ஜீவகாந்த ஒளியின் நுட்பமான அலைகளை, நமக்கு எட்ட வைக்க இவற்றால் முடியாது. இதற்கு இதைவிட மெல்லினமான வஸ்து தேவை! ஆனதால் இதனை நமது இந்திரியங்களே தெளிவடைந்து எட்டிக்கொள்ள வேண்டும். நமது இந்திரியங்கள் அந்த அலைகளை எட்டிக்கொள்ள அப்பியாசத்தினால் தகுதியாகின்றது. இதன் அப்பியாசங்களைப் பின்னால் விவரிக்கப்படும்.

எந்தச் சத்தையும் நாம் ஒரு வஸ்துவிலிருந்து முற்றிலும் வெளிப்படுத்த முடியாது. அதன் அளவைவிட அதிகப் படுத்தவாவது, குறைக்கவாவது செய்யலாம். ஆதலால், எந்தச் சத்தையாவது நாம் ஒரு வஸ்துவிலிருந்து, வெளிப்படுத்தும் போது அது முற்றிலும் வெளிப்படாமல், ஒரு பாகம் அதில் தங்கியே விடுகின்றது. ஒரு சமயம் அப்படி முற்றிலும் அந்தச் சத்தை வெளிப்படுத்துகிறதாயிருந்தால் அந்த வஸ்துவுக்குச் சேதமுண்டாகும். எப்படியெனில், மேற்சொல்லிய பாட்டலில் மீதியாய்த் தங்கியிருந்த அந்த இலேசான வாயுவையும், வெளிப்படுத்தி விடுவோமானால், வெளி ஆகாயத்தினால் நெருக்கப்பட்டு, அந்த பாட்டலுக்குச் சேத முண்டாகும். ஏனெனில், தத்துவ ஞானத்தின்படி ஒவ்வொரு வஸ்துவிலும் ஒருசதுர அங்குலத்திற்கு ஏழு ராத்தல் கனம் ஆகாயம் தாக்குகின்றது. இந்தப்பிரமாணத்தையே ஜீவகாந்த ஒளிக்கும் கவனிக்க வேண்டியது. இல்லாவிட்டால் அழிவுக்குக் காரணமாகும். காற்றினலை ஒரு ஸக்கெண்டு (Second) நொடிக்கு 32டிலிருந்து 32, 768 வரையில் இருக்கின்றன. இதைவிட விரைவான அல்லது, அதிகமான அல்லது நுட்பமான அலைகள், காற்றின் செயலைச் செய்யாது. ஒரு நொடிக்கு மின்சாரத்தினலை 32, 768டிலிருந்து 3,435,97,38,368 வரையிலுண்டாகின்றன. இதன் பின் வெளிச்சம், உஷ்ணம், ஆகாயம் இலைகளின் அலைகள் மிகவும் நுட்பமானதாயிருக்கின்றன. அலையின் நுட்பத்துக்குத் தக்கபடி வேகமும் அதிகமாயிருக்கும். ஒரு சத்தின் அலையை இன்னொரு சத்து ஏற்றுக் கொள்ளுகிறதாயிருந்தால், இரண்டின் அலையும் ஒன்றுக்கொன்று சற்று சமமாகவே இருக்கவேண்டும். அதிக வேற்றுமைப் பட்டதாயிருந்தால் ஒன்றுக்கொன்று கலந்து விடையளிக்காது. ஆகையால், ஜீவகாந்த ஒளியும் நம் இந்திரியங்களும் ஒன்றுக்கொன்று கலந்து விடையளிக்க – அல்லது ஜீவகாந்த ஒளியின் மோது தலை நம் இந்திரியங்கள் உணரச் சக்தி பெறாத வரையில்

www.miskinsha.blogspot.com

கடவுள், தேவதூதர்கள், மேலான உலகங்களில் வசிக்கும் பெரியோர்களின் ஆன்மாக்கள் முதலானவர்களைக் காணவும், அவர்களோடு சம்பாஷிக்கவும், அவர்கள் வார்த்தைகளை கேட்கவும், அவ்விடத்திற்கண்ட காட்சிகளை ஞாபகத்தில் வைக்கவும் முடியாது. அலைகளின் நுட்பங்களை உத்தேசித்துப் பார்க்கும்போது, மின்தாதைவிட வெளிச்சமும், உஷ்ணமும், அதி வேகமுள்ளதென்றும். இந்த இரண்டையும்விட ஜீவகாந்த ஒளியே அதிகவேகமுள்ளதென்றும் தோன்றுகின்றது! ஆனால், சாஸ்திரப் படி மின்தாது ஒரு நொடிக்கு சுமார் 2,00,000 மைல் செல்லுகிற தாகவும், வெளிச்சம் நொடிக்கு சுமார் 1,86,000 மைல் வரை செல்லு கிறதாகவும், உஷ்ணம் இதைவிடச் சற்று கம்மியாகச் செல்லுகிற தாகவும் தெரிய வருகிறது. ரேஷ்தேக்கென்பவர் ஜீவகாந்த ஒளியை உஷ்ணத்தைவிட வேகமாகவும், வெளிச்சத்தைவிட மெதுவாகவும் செல்கிறதாகச் சொல்லுகிறார்.

சிலர் இதன் வேகத்தை நமது எண்ணம் அல்லது நினைவு அல்லது யோசனைக்குச் சமமாக எண்ணுகிறார்கள். முடிவில் இதை மனித னுடைய சித்த வலுவுக்குத் தக்க வேகமுள்ள தென்று சொல்ல வேண்டும். ஏனென்றால், இதன் குணத்தைப் பார்த்தால் அதிவேக முள்ள தென்று தோற்றுகிறது. நினைவே அல்லது, நாட்டமே ஜீவகாந்த ஒளியாக மாறியிருக்கிறது. இந்த ஒளியை அசைவற்ற பொருள்களில் புருத்தி-மரம், கல், முதலியவற்றைப் பேசவைக்கிற தும், கல், கட்டைத்துண்டு முதலியவற்றில் புருத்தி. அதை உருண்டோடச் செய்து திருட்டு முதலானவைகளைப் பிடிக்கிறதும், மிருகங்களைப் பேசவைக்கிறதும் இதைச் சேர்ந்ததாயிருந்தால் இஃது இலேசானதல்ல! சில காலம் தன் காதலியை மறக்காமல் அடிக்கடி சிந்தித்துக் கொண்டிருந்த ஒரு வாலிபனுக்கு தன் காதலி தன்னோடு வந்து பேசுவது போலும், தன்னை அவள் பரிகாசம் பண்ணி பரவசப் படுத்தியது போலும், கனவில் தோன்றி - வரவர விழிப்பிலும் அப்படியே தோன்ற ஆரம்பித்து விட்டதாம்! சிலர் தூர தேசத்திலுள்ள தன் சிநேகிதனை படம் பிடிக்க வேண்டுமென்று அவன் ரூபத்தை ஒருவாரம் மட்டிலும், சிந்தித்துக்கொண்டிருந்து பிறகு, அவன் தம்மோடு நிற்பது போல சிந்தித்துக் கொண்டிருந்து படம் பிடித்ததில், தன் படத்தோடு சிநேகிதன் படமும் விழுந்திருப்பதைக்கண்டு ஆனந்தித்து ஆச்சரியமடைந்திருக்கிறார்கள்!

(இந்த சித்தி சிலருக்கு ஒரு வாரத்திலும், சிலருக்கு ஒரு மாதத்திலும், சிலருக்கு ஆறு மாதத்திலும், சிலருக்கு ஒரு வருடத்திலும்

உண்டாகின்றது. சித்த வலுவு எவ்வளவுக்கு அதிகமோ, அவ்வளவுக்குச் சீக்கிரம் சித்தியாகும்! சித்தமும் படிப்படியாகத் தான் வலுவாகின்றது. இதனை இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பரிசோதித்திருக்கிறார்கள்.)

(ஆகையால், சிலர் எண்ணத்தை அல்லது, மனதை ஜடப் பொருளென்றே உத்தேசிக்கிறார்கள். அது சித்தோ! சத்தோ! சுத்த சைதன்னியந்தானோ! இது நமக்கு ரூபத்தைக்கொண்டு மட்டும் உணர்த்தும் போது அறிகிறோம். அரூபத்தைக்கொண்டு உணர்த்தும் போது நாம் அறியவில்லை. நமது இந்திரியங் களுக்கு அரூபங்களை உணரச் சக்தி போதாது. இந்த ஆன்ம சத்தாகிய ஜீவகாந்த ஒளியின் அலையானது எல்லா வஸ்து விலும் "ஜீவதாதைப்போல்" ஓடிச் சென்றுகொண்டிருக்கிறது. ஆகையால் எல்லா வஸ்துவுக்கும் சித்தமிருப்பதாகத் தெரிகிறது. வித்தைத் தலைகீழாக ஊன்றினால் முதலில் வேர் மேலும் முளை கீழுமாகக் கிளம்பி, பிறகு வேர் கீழும் முளை மேலுமாக மாறி விடு கிறதும், தமக்கு ஏதாவது தடைகள் நேரிடுமானால் அதை விட்டு தாம் ஒதுங்கிச் செல்கிறதும், வேருக்கு நாம் வெளிச்சத்தில் பாதை தவறிச் செல்லுகிறோமென்றும், முளைக்கு நாம் இருளில் பாதை தட்டுக்கெட்டுச் செல்லுகிறோமென்றும், கிளைக்கு நமக்கு நேரில் தடுப்பு வருகிறதென்றும் தெரிந்து, அவை தாமே வளைந்து, தங்கள் தங்கள் பாதைகளை நோக்கிச் செல்லுகிறதும், சில செடிகள் மழை பெய்யப் போகின்ற சமயத்தில், தங்கள் இலை களை மூடிக்கொள்கிறதும், சில பூண்டுகளைத் தொட்டால் சுருங்கிக் கொள்ளுகிறதும், அல்லி போன்ற சில புஷ்பம் சந்திரன் உதய மான போதும், தாமரை போன்ற சில புஷ்பம் சூரியன் உதயமான போதும் மாத்திரம் தங்கள் இதழ்களை விரித்துக் கொள்கிறதும், மற்ற வேளைகளில் தங்கள் இதழ்களை மூடிக்கொள்கிறதும், சில புஷ்பம் சந்திரன், சூரியன் பரிசமே திரும்பிக்கொள்ளுகிறதும், சில புஷ்பங்கள் ஆண் மரத்திலிருந்து வராத வண்டுகளுக்கு மதுவைக் கொடாமல் தங்கள் இதழ்களை மூடிக்கொண்டு, ஆண் மரத்திலிருந்து வருகிற வண்டுகளுக்கு மட்டும் தங்கள் இதழ்களை விரித்து மதுவை உண்ணக் கொடுக்கிறதும், சில பூண்டுகள் சமீபத்தில் பிராணிகளை இழுத்து, அது சமீபித்தவுடன் தாம் வளைந்து அந்தப் பிராணிகளைப் பிடித்துத் தமக்கு ஆகாரமாக்கிக் கொள்ளுகிறதும், அதாவது பிராணிகளை வேட்டையாடுகிற பூண்டு, இரவில் அக்கினியைப்போல் பிரகாசிக்கிற மரம், இரைச்சலிடுகிற பூண்டு, (அதாவது, சில பூண்டுகளில் சப்தமுண்டாகிறதாம்) இருப்

பிடத்தை விட்டு நகர்கிற மரம், (இது ஒரே இடத்தில் தரித்திராமல் நாளுக்கு நாள் நகர்ந்து செல்வதாகத் தெரியவருகிறது.) இராகம் பாடுகிற மணல், (அதாவது சில மணல்களில் தொலியுண்டாகிறதாம்.) வால் நட்சத்திரங்களில் சில முன் செல்வதுபோல் பின்னாகவும் செல்கிறது. இதன் நடையையும், இது செல்லுமிடங்களையும் மட்டுப்படுத்தக்கூடவில்லை; தன்னிஷ்டப்படி நடக்கின்றது. சில சமயம் ஒரு நொடிக்கு லட்ச மைல் சென்றால் சில சமயம் ஒரு மைல் செல்கின்றது. சில சமயம் இதைவிட மெதுவாகவும் விரைவாகவும் செல்கின்றது. தாவரசங்க சாஸ்திரங்களிலும் திரசவர்க்க சாஸ்திரங்களிலும், பிராணி சாஸ்திரங்களிலுள்ள புதுமைகளுக்கு ஒற்றுமையாகச் சில சங்கதிகளை விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நோட்டமிட்டுப் பார்க்கும்போது, சகல வஸ்துவிலும் சித்தமும், அறிவுமிருப்பதாகத் தோற்றுகின்றது. சிலர் காந்தக்கல், கரும்பு, இரசம் முதலியவற்றை உயிருள்ள வஸ்துவென்றே சொல்லுகிறார்கள். அனேக வஸ்துக்களைக் கவனிக்கும்போது சித்தமிருப்பதாகத் தெரியவரும். இந்த தத்துவம் மற்ற வஸ்துக்களை விடப் பிராணிகளிலும், இதைவிட மனிதர்களிலும் அதிகமாயிருப்பதாகத் தெரிகிறது.

ஒரே தத்துவந்தான் படிப்படியாக வந்து மனிதனில் பூரணமடைந்திருப்பதாகத் தெரியவருகின்றது. இதனால் மனிதன் தான் சிருஷ்டிப் பொருள்களில் கடைசியானவனென்றும், சகல வஸ்துக்கும் முதன்மையானவனென்றும் விளங்குகின்றது. ஆகையால், இந்த "ஆனிமேல் மேக்னடிஸம்" என்னும் "அறிவான்மா"வானது சகலவற்றிலும் வெளியாகியிருந்தபோதிலும் மனிதனில் தான் பூரணமாயிருக்கிறது. ஆகவே இந்த ஒளியானது மூன்று பகுதியினை உடையது (என்பதை இந்தப் பாட ஆரம்பத்தில் விளக்கப்பட்டுள்ளது.)

(குறிப்பு: இதனால் நாம் ஆதரவு வைத்த வேளையில் நமக்குப் பெரியோர்களின் உதவி உண்டாகாது என்றும், நாம் பயந்த வேளையில் மரித்த ஆவி அல்லது பிசாசு நம்மைப் பயமுறுத்தாமட்டாது என்றும், இறந்து போன ஆன்மாக்களை நாம் கூப்பிட்டுப் பேசக் கூடாது என்றும் கருத்தல்ல! இவைகளைக் குறித்து வேறொரு இடத்தில் விவரித்துக் காட்டப்படும்.)

மெஸ்மரிஸம்.

இல்மெதவஜ்ஜா வென்னும் சித்தத்தோர்மை, கவர்ச்சி ஞானம் அல்லது தல்ஸம், ஒரு வசியசித்தி யென்று சொல்லப்படும். இது கவர்ச்சிக்கு மூலகாரணம் கவரப்படும் பொருள், கவர்ச்சித் தத்துவமிவைகளையும், இவைகளின் பண்பினாலுண்டாகும் பயனையும் விவரிக்கப் பெற்றது. இதைக் குறித்து வேதங்கள், நீர்க்க தரிசனங்கள் முதலான முக்கிய பிரமாணங்களில், விவரிக்கப்பட்டிருக்கிற வாக்கியங்களைத் தங்களின் பரிசுத்த மெய்ஞ்ஞான அருளினாலும், பரிபூரணக் கடாட்ச அனுக்கிரகத்தினாலும் விளங்கியறிந்து, காட்சி ஞானப்பிரகாச வேதாந்திகளின் அபிப்பிராயத்துக்கு சில பண்பில் கொஞ்சம் பேதமாயும், அரஸ்தாத்தலீஸ், ஜாலினூஸ் முதலான யூனானி தொகுக்குமாக்களாகிய தத்துவ ஞானிகளின் கருத்துகளுக்குப் பல பண்பில் ஒருவாறு ஒற்றுமையாயும் தங்கள் அனுபவத்தில் விளங்கியறிந்துகொண்டபடி மெஸ்மரிஸ ஞானிகள் சொல்வதாவது:- ஒப்புவமையில்லாதபடி சர்வ வியாபகமாயுள்ள ஒரு மூலச்சத்து, நடுமையமென்னும் பாதாளமான தஹ்த்தத்தர விலிருந்து அண்டத்திலுள்ள சுரையா வென்னும் கார்த்திகை நக்ஷத்திரம் வரையில் நிறைந்துள்ள சிருஷ்டிப் பொருள்களுக்கு மூல் அசலாய் நின்று, கவர்ச்சித் தத்துவத்தைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

பார்வையிலும், பார்க்கப்படுவதிலும், இக்கவர்ச்சித் தத்துவம் காணப்படுவதாயும், வேறு தத்துவங்களின் விளைவு ஸ்தலமாயும், ஒவ்வொரு ஆதார அணுக்களுக்கு மூல காரணமாயுமிருக்கின்றது! சூரியனும் சந்திரனும் இதனெதிரில் பிரகாசமற்ற ஓளுவுக்கொப்பானவைகள்! இதுவோ தனது மெய்ப்பிரகாசத்தினால் எங்கும் வியாபித்து, இரகசியம், பரசியம், அந்தரங்கம், பகிரங்க முதலிய எவற்றையும், விளங்கிக்கொள்ளக்கூடியதாயிருக்கின்றது. ஆகையால் இக்கவர்ச்சி தத்துவத்தை யறிந்த பிரியமாகிய சீஷர்களே! தங்களுக்குள் இதைக் கட்டுப் படுத்திக் கொண்டதின் பின், சிருஷ்டிகளை இன்பப் படுத்துதலுக்கும், துன்பப் படுத்துதலுக்கும் இதில் நிமித்தக் காரணங்களைத் தெரிந்து திறமைப் பெற்றுக் கொள்வீர்கள்! ஆகவே எந்தப் படைக்கப்படு பொருள்களுக்கும், விசேஷமாய் மனிதருக்கும், துன்பங்கொடாதீர்கள்! துன்பிக்குதல் தன்னைத்தானே துன்பிக்குதலாயிருக்கும்! சிருஷ்டிப் பொருள்களில்

www.miskinsha.blogspot.com

உண்டாயிருக்கின்ற இக்கவர்ச்சித் தத்துவத்தின் உதவியால், சிருஷ்டிகர்த்தாவின் வல்லமைகள் – காணவும், அறியவும்படுகின்றன. இத்தத்துவப் பரிமாற்றம் யாவருக்கும் சாத்தியப்படாமல் மற்றபடி விசேஷ அப்பியாசிகளுக்கு மாத்திரம் கூடுமாகின்றது. ஒழுங்காய் இதைக் குறித்து விவரிக்கப்படுகிற அறிவு ஆத்மஞான மாகிய இல்மெ குஹானி என்று சொல்லப்படும். இத்தத்துவப் பரிமாற்றம் – அப்பியாசத்தாலுண்டாகின்றது! பூரண விருப்பம் உடையோரெவரும் இடைவிடாது அப்பியாசித்தல்வேண்டும்! ஆகவே இது மட்டுப்படுத்த முடியாத மகா கண்ணியத்தையுடையது! அளேகர்கள் இதையறிய அதிஷ்டவீனர்களாக இருக்கிறார்கள்! இதனால் தாழ்மையுள்ள நான், சில தோழர்களுக்குக் கற்றுக் கொடுக்க, வாக்குத் தத்தம் செய்திருக்கிறேன்.

மனிதனாகிய இன்சானுடைய சரீரம், இந்த ஒளி நகர்த்தும் ஒரு மெஷினாயிருக்கும். ஆகையால் இந்த ஒளிஇந்த மெஷினுடைய உதவியால் அசைவில் வருகின்றது. அதன் விபரமாவது: இந்த ஒளி-கை விரல்கள், கண்கள், மூக்கு இவைகளினுதவியால், இந்த மெஷினில் நின்றும் வெளிப்படுகின்றது. இதை அப்பியாசிக்கிறதால் மனிதர்கள், தங்களல்லாததை - அதாவது மற்றவைகளை சமயோசிதமாய் தங்களுக்கு வழிப்படக் கொண்டுவருகிறார்கள். அதாவது கைதி உரிமைவிடப்படுதலும், புலன்கள் விருப்பத்துக்கு வசப்படுதலும், (முதர்சிக்) ஞானமென்னும் யாவையும் எத்திக்கொள்ளும் தத்துவமும், நினைவு, எண்ணம் வகையாக்களும், உகம்புதலும், ஒடுங்குதலும், உட்காருதலும், எழுதலும், துக்கமும், சந்தோஷமும் இதனால் எப்படி ஆதீனப்படுத்திக்கொள்கிறானென்றால்: சமயோசிதமாய்த் தான் தன் அவயங்களை ஆதீனப்படுத்திக்கொள்வதுபோலேயாம்!

இதனுதவியால் செய்கிறவனாகிய ஆமில் செய்யப்படுகிறவனாகிய மாமூலில், ஒரு சக்தியை எப்படி உண்டாக்குகிறானென்றால்: வசப்பட்டவன் தனது வெளிப் பார்வையன்றியே சமீபம், தூரம், வெளிபடை, உட்படை, இருள், ஒளி வகையறாக்களிலும்; இரகசியம், பராசியங்களிலும் பார்த்துப் பரிசோதிக்கக்கூடியவனாயும், மனிதர்களின் புத்தி இதில் வியக்கத்தக்க விதமாயும் கண்டறிகிறான்! சுவர்க்க நரக சூட்சும லோகங்களில் மரித்துப்போனவர்களுடைய ஆவியுடன் பேசுதலும், திருட்டுப் பிடித்தலும், புதைக்கப்பட்டதைக் காட்டுதலும் அவனுடைய வேலையாயிருக்கின்றது. இன்னும் ஒவ்வொருவரையும் தனது இஷ்டத்திற்கு வசப்படுத்தலும், ஒவ்வொரு

பிணியையும் நீக்குதலும், இதன் நுட்ப வேலைகளாயிருக்கின்றன. ஆகையால் அறிவினர்களுடைய வார்த்தைகளில் செல்லவேண்டாம். இதை பிசாசாகிய ஷைத்தானுடைய அறிவென்று சொல்ல வேண்டாம். துக்கத்துக்குக் காரணமென்று எண்ண வேண்டாம். எவை செய்த போதிலும் செய்பவனாகிய ஆமில் தனது செய்கையாகிய அமலைக் கொண்டே செய்வான். இது மந்திரியுமல்ல. ஆகையால் இதோ இதிலுள்ள எந்த வேலையையும் மந்திரவாதி காட்டமாட்டான். மற்றபடி ஆரம்பமும், இதன் முடிவும் கடவுளாகிய அல்லாஹ்வுடைய உதவியைக் கொண்டாயிருக்கும்!

ஒளியுடையப் பிரிவுகள்:

மேலான அவ்வொளி உடன்பாடாகிய இதுபாத் என்றும், எதிர்மறையாகிய மன்பி என்றும் இரு வகைப்படும். உலகத்தின் வடபாகம், மனிதர்களுடைய வலதுபுறம், தலைப்புறம், முன்புறம், இவைகளில் உடன்பாடாகிய ஒளியும், உலகத்தின் தென் பாகம், மனிதர்களின் கால்புறம், இடதுபுறம், பின்புறம், இவைகளில் எதிர்மறையாகிய ஒளியுமிருக்கின்றன! உடன்பாடாகிய ஒளியின் நிறம் சிவப்பு. எதிர்மறையாகிய ஒளியின் நிறம் கறுப்பு நீலவருணம். உடன்பாடாகிய ஒளியின் குணம் குளிர்ச்சி. எதிர்மறையாகிய ஒளியின்குணம் உஷ்ணம். இவைகளினுதவியால் பிணிகளடங்கலும் சொஸ்தமாக்கப்படுகின்றன. உடன்பாடாகிய ஒளியின் ஸ்தலத்தில் எதிர்மறையாகிய ஒளியையாவது, எதிர்மறையாகிய ஒளியின் ஸ்தலத்தில் உடன்பாடாகிய ஒளியையாவது, புகுத்தினால் பிணியாகிறது நீங்கும். பிணி குளிர்ச்சியாலுண்டாயிருந்தானால் அதை உடன்பாடாகிய ஒளியின் அதிகத்தாலுண்டாயிருக்கிறதாக அறிந்து, அப்பொழுது எதிர்மறையாகிய ஒளியைப் புகுத்தவும். உஷ்ணப்பிணி உண்டாகில் அதை எதிர்மறையாகிய ஒளியின் அதிகத்தாலுண்டாயிருக்கிறதாக அறிந்து, உடன்பாடாகிய ஒளியைப் புகுத்தவும் அதன் வழியாவது:– (தவஜ்ஜா) கூர்மையான சிந்தனையாலாவது, பார்வையாலாவது, கைகளின் சைகையாகிய பாகுகளாலாவது, எதுநேர்ப்பட்ட போதிலும் சரி! அவசியமான ஒளியைப் புகுத்துகிறதாக நாடிக்கொள்ளவும். குறிப்பு: தங்கம், செம்பு, வைரம், முத்து, சந்தக்கல், மின்னற்கல், இவைகளில் சந்தசக்தி அளவைக்காண அதிகமாக இருக்கின்றது.

செயலாகிய அமல்களின் பதவிகள்:

இதனால் முதல் முதல் (ஆமில்) செய்கிறவன், (மகுமூல்) செய்யப்படுகிறவனுடைய அறிவைக் கீழ்ப்படுத்தி (அமல்)

www.miskinsha.blogspot.com

வேலைகளுடைய பதவிகளைக் காட்டுகிறான். ஏனென்றால் செய்யப் படுகிறவனாகிய தமது மகமூல், எந்த (தரஜா) பதவியாயிருக்கிறான் என்பதை செய்கிறவனாகிய ஆமில், அறிகிறதற்காகவேயாம்! செய்கிறவனின் குணபாடு சற்று செய்யப்படுகிறவன் பேரிலுண்டா யிருக்கிறதா? அல்லவா? எந்த வேளையில் எவ்வித வினாக்கள் வினாவ வேண்டுமென்பதற்காகவேயாம்!

1-வது பதவி – விழித்திருத்தல்.
2-வது பதவி – தூக்கம்.
3-வது பதவி – ஆழ்ந்த தூக்கம்.
4-வது பதவி – தூக்கத்தில் விழித்திருத்தல்.
5-வது பதவி – அந்தரங்க திருஷ்டி அல்லது உட்பார்வை.
6-வது பதவி – தூரதிருஷ்டி அல்லது வெளிப் பார்வை.
7-வது பதவி – முராக்கபா அல்லது சமாதி.
ஆக ஏழு பதவிகளாகும்.

1-வது பதவி – விழித்திருத்தல்:- இந்த நிலைமையில், செய்கிறவனுடைய உணர்வும், ஐயறிவும் தரிபட்டிருக்கும். மற்றபடி அவன் கண்கள் கனமாயிருக்கும். தவிர வெளிப்படையாய் வேறு எவ்வித குணமும் தெரிய வராது. அவன் கண்கள் மிகுதமாய் மூடப்பட்டிருப்பதை விரும்புவான். இன்னும் தலை கனத்திருக்கும், என்கிலும் செய்யப்படுகிறவன் தானே தன் கண்களை விழித்துக் கொள்ளக்கூடுமாவான். இதைக் காண அதிகமாகச் செய்யப்படு கிறவன் பேரிலுண்டாகாது.

2-வது பதவி – தூக்கம் அல்லது அரை நித்திரை:- இந்நிலைமையில் செய்யப்படுகிறவனுடைய கண்கள் மூடப் பட்டிருக்கும். செய்கிறவன் உத்தரவின் றியே விழிக்கச் சக்திபெறான்! செய்கிறவன் கூப்பிடும்போது விழித்துக்கொள்ளவும் கூடுமாவான்.

3-வது பதவி – ஆழ்ந்த தூக்கம்:- இந்நிலையில் செய்யப்படு கிறவன் நல்ல மாதிரியாய்த் தூங்குவான். தனது சரீர உணர்வு அறவேயிராது. கூப்பிடப்பட்டானாலும் பதில் (ஜவாபு) கொடான். பேசுதலை விரும்பான். அவன் திரேகத்தில் எந்தப் பாகங்களையும், எந்நிலையில் வைக்கப்பட்டாலும், அந்நிலை யிலேயே இருக்கும். அவன் திரேகம் உணர்வற்றிருக்கும். குளோர பாரம் என்னும் மருந்தின்றியே அவயவங்களைத் துண்டிக்கும் தொழில் முதலானதை நடத்தலாம். அவனுக்கு அறவே வருத்தத்தின் உணர்விராது. சமீபத்தில் பிரங்கி, முதலானது கட்டாலும் அறியான்!

4-வது பதவி – தூக்கத்தில் விழித்திருத்தல்:- இந்நிலைமையில் செய்யப்படுகிறவன், சமீபத்திலுள்ள வஸ்துக்களை கண்திறக் காமலே நன்றாய் பார்க்கக்கூடுமானின்றான். அப்போது செய்கிற வனுடைய வார்த்தையை மட்டும் கேட்பான். எங்கேயாவது அவனைப் போகும்படி உத்தரவு கொடுக்கப்பட்டால், போகப் பிரியப் படமாட்டான். அவனுடைய கண்கள் திறக்கப்பட்டிருந்தால், இப்போது ஆழ்ந்த தூக்கத்திலிருக்கிறானா? அல்லது தூக்கத்தில் விழித்திருக்கிறானா? என்று அறிகிறதற்காக அவனுக்குக் கசப்பு வஸ்துவைக் கொடுத்து, தித்திப்புடைய குசியைக் கொண்டு (எக்கீன்) உறுதியுடன் (தசவ்வுர்) சிந்தனை செய்தாலும், அல்லது தித்திப்பை உமது சிந்தனையினுதவியால் கசப்பாய்க் காட்டினாலும், அதன்படி அதற்கிசைய அவன் பதில் (உத்தரம்) சொன்னால், அவன் 3-வது பதவி ஆழ்ந்த தூக்கத்திலிருக்கிறான் என்றறியவும்.

5-வது பதவி-அந்தரங்க திருஷ்டி அல்லது உட்பார்வை:- இந்நிலைமையில் செய்யப்படுகிறவன் செய்கிறவனுடைய உத்தரவு பிரகாரம் தன்னுடையவும், மற்றவர்களுடையவும், சொஸ்தமா யிருத்தல் அல்லது பிணியாயிருத்தல், இவற்றின் நிலைமையை அந்தரங்க திருஷ்டியால் பார்க்கக்கூடுமாகிறான். உள்படையாகிய பிணிகளடங்கலையும் சொல்லக்கூடுமாகிறான். பிணியாளி அல்லது செய்யப்படுகிறவன் தனது பிணிகளை தன்றாக்கிக் கொள்ளக்கூடுமாகிறான். அதாவது நான் அறிந்து அதற்கு இன்ன வழியாக செய்தால் அதன் சொஸ்தம் கிடைக்கும் என்றறிந்து, தன்னை நன்றாக்கிக்கொள்கிறான். சொஸ்தத்துக்கான அவிழ்த்தை (மருந்தை) யோசித்துச் சொல்லக்கூடுமாவான்! அல்லது மரணம் உண்டாயிருந்த போதிலும், உடனே அறிவித்து விடுவான்!

6-வது பதவி – தூரதிருஷ்டி அல்லது வெளிப் பார்வை:- இந்நிலைமையில் செய்யப்படுகிறவன், சமீப தூரமான ஒவ்வொரு வஸ்துக்களையும் பார்க்கிறான். ஒவ்வொரு வினாவுடைய விடைகளையும் அளிக்கிறான். எங்கு போகச் சொன்ன போதிலும் போகிறான். அப்படிப் போவது எது(வானால்)? சூட்சுமமாகிய ஆத்மா வென்னும் நூகாவியேயாம்! அவனுடைய ஸ்தூலமோ அங்கேயே இருக்கும். போகக் கற்பித்த (உத்திரவிட்ட) ஸ்தலம் வரையில் அது எவ்வளவு தூரமாய் இருந்த போதிலும், எவ்வளவு கூடுமாகாதநாய் இருந்தாலும், செய்கிறவன் உத்தரவளித்தவுடனே செய்யப் படுகிறவன் செல்கிறான்! எந்த வஸ்துவை நாம் யோசனையால் சிந்தனை செய்து காட்டுவோமோ அந்த வஸ்து

www.miskinsha.blogspot.com

அவன் முன்னிலையில் வருகின்றது. அவள் திரிகால முணர்ந்த ஞானியாவாள்! எக்காலமும் எப்படிப்பட்ட கடல், மலை, முதலிய தூரங்களும் அவனைத் தடை செய்யாது! எந்த வஸ்துவை செய்கிறவன் உத்தரவளிக்கிறானோ, அதுவே அவன் முன்னிலையில் வரும். கண்மூடி விழிக்குமுன் அண்டசராசரங்கள் அடங்கலையும், சுற்றக்கூடும். இந்நிலைமையில் செய்யப்படுகிறவன் திடீரென ஒளியினால் நிறைக்கப்படுகிறான். ஆகையால் மெஸ்மெரிஸமென்னும் வித்தையின் புதுச்சட்டமாகிய மாயாவினோதமான மாஜிக் யோகத்தினால் விசேஷ வழிகளையும், செய்கிறவனுடைய சூட்சுமங்களையும் காட்டுவான்! சூட்சுமலோகங்களிற் சென்று சம்பாஷிக்கக் கூடுமாவான்: செய்கிறவனுடைய உத்திரவுப் பிரகாரம் கிரியைகள் செய்வான்!

7-வது பதவி – முராக்கபா, அல்லது சமாதி:– இந்நிலையில் செய்கிறவனும், செய்யப்படுகிறவனும், ஒருவருக்கொருவர் தேவை உடையவரல்லர். செய்யப்படுகிறவன்-செய்கிறவனன்றியேஒவ்வொரு விஷயத்தையும் தானே அறியக்கூடுமாவான்! செய்கிறவன் இருதய நாட்டப் பிரகாரம் வேலை வாங்கக்கூடுமாவான். இந்நிலைமைக்கு யோக அப்பியாச இணக்கம் வேண்டும். அல்லது செய்கிறவன் சித்திபெற்றவனாயிருக்க வேண்டும்! எந்த மனிதனையும் செய்கிறதன்றியே வசப்படுத்தலாம் இப்பதவியே மேலானது! இப்பதவி செய்கிறவன், செய்யப்படுகிறவனுக்கு கிடைக்கிறது. வெகுவருத்தம். ஏனெனில் அது செய்கிறவன் செய்யப்படுகிறவனுடைய வேறுபாடேயாம்! ஏனெனில் பூலோகத்தின் கவலையுள்ளவர்கள் பெருமையுள்ளவர்கள். அல்லது செய்கிறவனைக் கொஞ்சமும் பாராட்டாதவர்கள்! இப்படிப்பட்டவர்களின் தன்மையால் மேற்படி 7-வது பதவியை எத்தாமலிருக்கிறார்கள்!

செய்யப்படுகிறவனுடைய இலட்சணங்கள்:

தன்மேல் மெஸ்மரிஸம் செய்வதற்குத் தான் மறுதளிக்காமல் ஒப்புக்கொள்ளல், சித்த சுத்தம், சற்குணம், மிருதுவானதேகம், நன்னடக்கை, நல்ல இலட்சணம், சிகப்பு நிறம், மெலியல் உரோமம், வேலைப்போலொத்தக் கண், முதலிய தன்மையுள்ள சிறுவன் அல்லது சிறுமி, 8 வயதிற்குக் கீழ்படாமலும், 18 வயதுக்கு மேற்படாத பாலியன் அல்லது பாலியள் முதலானவர்களும் செய்யப்படுவதற்குத் தகுதியானவர்கள். தன் சிறுவன் அல்லது சிறுமியாயிருந்தாலும், அவ்வாறேயாம்! எங்கிலும் இவர்கள் செய்கிறவனைக்காண முரடர்களாகவாவது அல்லது

செய்கிறவனுக்கு முன்னிலையில் மரியாதையற்றவர்களாகவாவது இருக்கக்கூடாது. அன்னியர்களாயின் எளிதில் சம்மதமுண்டாகாது. விகடப் பிரசங்கி, மற்ற இதர சிரிப்பு முதலிய கேலிகளுடையவர்களுக்கு இடையில் இருக்கக்கூடாது. செய்யப்படுகிறவனை நல்ல லட்சண முடையவனாகத் தேடி எடுக்க வேண்டும் அவன் இந்தச் செய்கைகளில் விசேஷத் தகுதியுடையவனாவான். இந்த இலட்சணங்களுடையவன் கிடைக்காவிடில் இலட்சணக் குறைவளவே பதவிகளை யெற்றுக்கிறதிலும் நாமதமாகும். செய்கிறவனுக்கும் மிகுந்த நேரம் செலவாகும்.

சிந்தனையாகிய (தசவ்வுர்) இருதய தத்துவமிவைகளால் ஜடப்பிணிகளை சொஸ்தமாக்கும் வழிகள்:

1-வது: புத்திசாலிகளாகிய பிணியற்றஸ்திரீ, புருஷர்கள், எவரும் இந்தமறைவான கடாட்சத்தைக் கொண்டு அப்பியாசத்தின் உதவியால், ஜடத்தின் பிணிகளை சொஸ்தமாக்கக் கூடுமாவார்கள் எனினும், அப்பியாசித்தலும், சித்த தத்துவத்தை கெட்டியாக்குதலும், மனோதத்துவத்தை அதிகப்படுத்தலும், ஆசாளாகிய (உஸ்தாது) உடைய சட்டங்களுக்குக் கட்டுப் படுதலும் அவசியமாகும்.

2-வது: இந்த மறைவான கடாட்சமுண்டாவதற்காக, இந்த வித்தையில் நம்பிக்கையும், உறுதியும் நன்றாயிருக்கவேண்டும். பொதுவான கிருபையாலே அழைக்க வேண்டுவதுடன் திரேகத்துப்புரவும், திரேகத்தில் பரவும் ஜடத்தின் தத்துவமும், செய்கிறவனில்உண்டாயிருக்கவேண்டும். சுத்தமான இருதயமும், சித்த தத்துவ கெட்டியுமுள்ளவன் இந்த வித்தையின் கடாட்சத்தை விட்டும் அதிஷ்டமறான்!

3-வது: செப்படி வித்தைக்காரனுக்கும், மனப்போக்குப்படி நடப்பவனுக்கும், இவ்வித்தையைக் கற்றுக்கொடுத்தல் அறிவின்மையாகும். அவர்கள் கற்றுக்கொள்ளுதலும் அறிவின்மையேயாகும். பிணியாளிக்கும் அப்படியேயாகும். இந்த வித்தையின் பால் (அல்லாஹுத்தஆலா) வாகியக் கடவுளை மறுக்கிறவனுடைய முடிவு கெடுதி என்பதுபோல், உறுதிகொண்டவர்கள் எவரும் பிரயோஜனமடைவார்கள்! மறுக்கிறவர்களுக்குப் பிரயோஜனம் கொடாது!

4-வது: பிணியாளி சிந்திக்கப்படும்போது வீண் பேச்சுப் பேசுவது முதலாவது கூடாது. தனது கவலின்மையை வெளிப்

www.miskinsha.blogspot.com

படுத்துகிறதற்காக – அதாவது தனது வருத்தத்தை முன்விட்டு– முனங்கவும், சப்திக்கவும் கூடாது. மற்றப்படி பிணியாளி சிந்தனையைப் பெற்றுக்கொள்வதற்காக தயாராயிருக்கவேண்டும். ஏனெனில் சொஸ்தத்தின் மிருதபாகம், பிணியாளியின் நல்ல சுபாவத்தில் தரிபட்டதாயிருக்கும்.

5-வது: அனேகப் பிணிகள் சுபாவத்தினால் உண்டாகின்றன. இன்னும் அனேகம் இருதய எண்ணத்தினால் மாறுகின்றது. அவ்வாறே மாறி மாறி வருகின்றது. பிணியாளிகளை உணர்வின்மை யாக்கி சொஸ்தப்படுத்துதல் சொஸ்தத்துக்கு அவசியமில்லை. மறறப்படி வசப்படுத்தல் மட்டும் போதுமாகும். சிந்தித்தலுக்காக இந்நிலைமை அவசியமாகும்.

6-வது: பிணியாளி திரேகத்தைத் தளர்த்திவிட வேண்டும். தன்னை செய்கிறவனிடத்தில் ஒப்புக்கொடுத்து, கம்மாரிருக்க வேண்டும். இன்னம் செய்கிறவன் பிணியை அப்புறப் படுத்துகிறானென்றும் எண்ணவேண்டும்.

7-வது: பலவீனமுள்ள பிணியாளியின் பேரில், சித்தனை சீக்கிரப்படும் பிணியாளியின் பேரில், முதலிலேயே வசப்படும் நிலைமைக்காணப்பட்டதானால், அதைப் பரிட்சிக்கவேண்டும்.

பரிட்சையின் வழிகள்:

புயங்களிலிருந்து (Pass) பாஸ் அல்லது கைசிகிட்சை செய்து விரல்கள் வரையில் கொண்டு வரவும். 10 அல்லது 15 பாசுக்குப் பின்பு பிணியாளிக்கு உஷ்ணம் அல்லது குளிர்ச்சி, அல்லது படபடப்பு, அல்லது கைகால் தூங்குகிறத்தின் விதம்தெரியும். அப்படியானால் குணத்தை ஏற்றுக்கொள்ளும் நிலைமை காணப்பட்டதாயிருக்கும். ஒரு நிமிஷத்திற்கு 2 அல்லது 3 பாஸ்தான் செய்யலாம்.

மனிதன் திரேகத்தை குறித்த அவசியமான காந்த ஒளியின் தன்மைகள்:

காந்தத்தைப் போலவே மனிதன் திரேகத்திலும், இரண்டு தத்துவங்கள் இருக்கின்றன. வலது புறமும், முன் புறமும், தலைப் புறமும் முதுபித்து உடன்பாடென்னும் தத்துவமும், இடதுபுறமும், கால் புறமும், (மன்பி) எதிர்மறை யென்னும் தத்துவமுமிருக் கின்றன. சர்வ வல்லமையுள்ள (அல்லாஹ்) வென்னும் தெய்வம் இவ்விதமாய்ப் படைத்திருப்பதைப் பரிட்சித்து அறியப்படுகின்றன.

ஒரு மார்க்கஸ் என்னும் நடுமையத்திலிருந்து, இரண்டு முகீத் தென்னும் சுற்றுப்புறங்களுக்குச் செல்லுகின்ற ஒளியை (இதுபாத் - Positive) உடன்பாடென்னும் தத்துவமென்று சொல்லப்படுகின்றது. சுற்றுப் புறங்களில் நின்று நடுமையத்துக்குச் செல்லுகின்ற ஒளியை (மன்பி – Nagative) எதிர்மறை யென்று சொல்லப்படுகிறது. இவைகளைக்கொண்டு எண்ணப்படுகிறதாவது: உடன்பாடென்னும் ஒளியானது நடுமையத்தில் நின்றும் வெளிப் பட்டு, சுற்றுப் புறங்களில் வியாபிக்கும் பொழுது உடன்பாடென்றும், இருவே சுற்றுப் புறங்களில் நின்றும் நடுமையத்திற்குச் செல்லும் பொழுது, எதிர்மறை யென்றும் அழைக்கப்படுகிறது. விளங்கிக் கொள்வது யாதெனில்: அவ்வொளி செல்லுதல் ஒரு வட்ட வளையம் போலிருக்கின்றது. வட்டம் துண்டிக்கப்பட்டால், இது வும் துண்டிக்கப்பட்டு போகின்றது. சேர்க்கிறதினால் ஒன்று சேர்ந்து தனது குணத்தை காட்டுகின்றது. வலது உள்ளங்கை அதன் விரல்களிலிருந்து வெளிப்படுகிற ஒளிக்கு உடன்பாடென்று பெயர். இதன் குணம் குளிர்ச்சியும், சொஸ்தமுண்டாக்குதலுமாம். அவ்வாறே இடது உள்ளங்கை அதன் விரல்களிலிருந்து வெளிப் படுகிற ஒளிக்கு எதிர்மறை யென்று பெயர். இதன் குணம் உஷ்ணமும், உடன்பாடென்னும் ஒளியைத் தன்னிடம் இழுக்கிறது மாகும். வலதுகையை மனிதனின் திரேகத்தில் வைத்தால் ஒளி உட்புகும். இடது கையை வைப்பதினால், உள்ளிருந்து ஒளியை வெளியில் இழுக்கும். அதுவும் கீழ்காணும் விதியை அனுசரித்தேயாம்! அதாவது உடன்பாடாகிய ஒளி – உடன்பாட்டொளியையும், எதிர் மறையாகிய ஒளி-எதிர்மறை ஒளியையும் விலக்கும். உடன் பாடானது எதிர்மறையையும், எதிர்மறையானது உடன்பாட்டையும் இழுக்கும் என்பதேயாம்!

எதிர்மறையொளியும், உடன்பாட்டொளியும், சரிசமானமாய் ஒத்திருத்தலே சொஸ்தம்! இவைகளில் எதுவும் எங்கேயாவது கூடக்குறைய இருந்தால் பிணியுண்டாகும். ஆகையால் எந்த இடத்திற்கு எந்த ஒளி அவசியமோ அந்த இடத்திற்கு அந்த ஒளியை உட்புகுத்த நேரிட்டாலும் சரி, அப்புறப்படுத்த நேரிட் டாலும் சரி, பின்தள்ள நேரிட்டாலும் சரி, எதுவுபோல் செய்வதில் சொஸ்தமுண்டாகின்றது. உதாரணமாக உடன்பாட்டொளியின் அதிகத்தால் தலை நோய் உண்டென்று வைத்துக்கொள்வோம். வலியோ சிரசின் முன்பக்கில் மட்டும் இருந்தெனில், தமது வலது கையைப் பிணியாளியின் நெற்றியின்மேல் வைத்து, அந்தக் கையிலுள்ள உடன்பாட்டொளியினால், பிணியாளியின் உடன்

www.miskinsha.blogspot.com

பாட்டொளியைப் பின்தள்ளி - அப்பொழுது பின்தலைப் பிடரிப் புறத்தில், தமது இடது கையை வைத்து - அதனால் உடன்பாட் டொளியின் அதிகத்தை வெளியே இழுத்துக்கொள்ளப்படுவ தென்பதேயாம்! ஆகவே இதனால் பிணி இன்ன ஒளியின் அதிகத்தாலென்றும், அதற்காக அவ்வொளியைப் பின் தள்ளுகிற விதம் இன்னதென்றும், பின்பு அதை இழுத்துக் கொள்ளச்செய்கிற விதம் இன்னதென்றும், சொஸ்தம் பண்ணும் விதிகள், சமயோசித மாய்ச் செய்ய வேண்டியது இன்னதென்றும், நமக்குக் கற்பிக்கப் படுவதை அறியலாம். ஆகவே நாமும் பரிட்சிப்போம். எதிர்மறை யொளியின் மிகுதியால், பிணியாளிக்கு ஒரு ஸ்தலம் உணர்வற்றோ ருளிர்ந்தோ, கெட்டியாகவோ, இருந்ததென்று வைத்துக் கொள்வோம். அவ்வாறிருந்ததானால், இடது கையை அந்தஸ் தலத்தில் வைத்து, அக்கையின் ஒளியினால் அந்தஸ்தலத்தின் எதிர்மறை யொளியை பின்னே தள்ளி, மறு பாகம் வலதுகையினால் அந்த ஒளியை இழுத்துக்கொள்ளப்படுவது என்பதேயாம். இப்படிச் செய்வதினால் இரு ஒளிகளும் சரிசமானப்பட்டுச் சொஸ்த முண்டாகும்!

உடன்பாட்டொளியின் மிகுதியால் உண்டாகும் வியாதிகளின் அடையாளங்கள்:

பஞ்சேந்திரியங்களின் உணர்வு அதிகப்படல், மிகுந்தவலி, வேதனை, உஷ்ணம், எரிச்சல், சுபாவமின்மை, சாந்தகுணமின்மை, இரத்த விருத்தி முதலியனவாம்.

எதிர்மறை யொளியின் அதிகத்தாலுண்டாகும் வியாதிகளின் அடையாளங்கள்:

பஞ்சேந்திரியங்களின் உணர்வின்மை, மறமறத்துப் போகுதல், கண் குத்தல், பலமின்மை, சோம்பல், இரத்தக் குறைவு முதலியனவாம்.

மனிதனின் உடலில் இந்த வித்தையோடு சம்பந்தமான ஸ்தலங்கள்:

தலையோ அதனுள் மூளையோ (Office) அவ்வாபீசுக்கு உரியது. அங்கிருந்து அனேக தந்திகள் பலவிதமாக உடலில் ஆபீசுக் கணக்கான ஸ்தலங்களுக்குச் சென்றிருக்கின்றன. சகல தந்துவங் களுக்கும் கஜானாவாயிருப்பது தலை மூளையே! சித்த

கை அல்லது கால்களின் வழியாய் ஜீவகாந்த மீடியன் அல்நெர்வ் என்னும் காந்தப் பவருடைய நரம்புகள் தலை மூளைக்கு நேரே செல்வதைக் காட்டும் படம்,



www.miskinsha.blogspot.com

உடலில் (Positive & Negative Force)

மன்பி – இதுபாத்தென்னும் ஒளிகளைக் காட்டும் படங்கள்





www.miskinsha.blogspot.com

www.miskinsha.blogspot.com

தலையின் இடதுபுறம்



1.	காமம்	11.	ஆசாரம்
2.	யுத்தம்	12.	தர்மம்
3	சினேகம்	13.	பயம்
4.	புத்திரவாஞ்சை	14.	சிந்தனை
5	சுய இச்சை	15.	ஆனந்தம்
6.	எச்சரிக்கை	16.	ஞாபகம்
7	அபிமானம்	17,	ஒற்றுமை
8.	கோபம்	18.	ஒழுங்கு
9.	அநியாயம்	19	அறிவு
10	தேட்டம்	20	கணக்கு

www.miskinsha.blogspot.com

தலையின் முன்புறம்



1. வார்த்தை
2. சாதுரியம்
3. சித்தம்
4. பகுத்தறிவு
5. துர்குணம்
6. நிறப்பத்தின் இச்சை
7. ராகத்தின் இச்சை
8. கட்டடம்கட்டும் இச்சை
9. நற்குணம்
10. அதிருப்தி, சந்தேகம்
11. நிறம்
12. நிறை
13 அளவு

தலையின் பின்புறம்



1. அன்பு
2. புகழ்
3. ரகசியம்
4. விசுவாசம்
5. விவேகம்
6. அகங்காரம்
7 நஷ்டம்
8 காரமானம்

www.miskinsha.blogspot.com

தலையின் மேல்புறம்



1. சுதேசஇச்சை
2. துரிதம்
3. யோக்யதை
4. சாந்தம்
5. அத்தாட்சி
6. காலதாமதம்
7. கண்டதுபோல் செய்தல்
8. மட்டுப்படுத்தல்
9. நியாயம்
10. அமானிதருணம்
11. கவலை

தத்துவத்தின் ஸ்தலம் இரு புருவத்துக்கிடையில் தலைமூளைக்குள் இருக்கிறது. பொது ஜனங்கள் சித்த தத்துவத்தின் ஸ்தலமாயிருக்கிற இருதயத்தைக் குறித்து கருதிக் கொள்வது – தாமரைக் காயையே! ஆனால் அதுவோ ஓர் இறைச்சித் துண்டு. என்கிலும் இருதய ஸ்தலத்தில் நின்று ஒரு நாடி அங்கு சென்றிருக்கின்றது. ஆகையால் இருதயத்தின் பிரதி பிம்பம் அதில் படுகின்றது. இதனாலேயே பொது ஜனங்கள், அதை இருதய ஸ்தலம் என்று சொல்கிறார்கள். ஆனால் சித்த தத்துவத்தின் அகல் ஸ்தலம் முன் சொல்லப்பட்ட ஸ்தலமே! தலை மூளையின் பல பங்குகள் பல மாற்றமான பல தத்துவங்களை உடைய மையமாயிருக்கின்றன. அதாவது மனிதனுடைய ஒவ்வொரு செயலும், தலை மூளையின் விதர்ப்பமான பல பங்குகளில், சம்மந்தப்பட்டிருக்கின்றன. இதற்காகப் படத்தைப் பார்க்கவும்.

மூளையானது பார்வைக்கு வினோதமாயிருக்கிற பல கொசகொசப்பானவைகள் சேர்ந்ததாயிருக்கும். அதன் உருண்டை பாகம் மேலும், சப்பட்டை பாகம் கீழுமாயிருக்கும். மூளையின் படத்தில் அவசியமானவைகள் மாவையும் காட்டப்பட்டிருக்கிறது மூளையின் ஒவ்வொரு பங்கின் பெயர்களும், நரம்புகளுக்கும், தலை மூளைக்கும் நடுமையமான மூலஸ்தலங்களையும் காட்டப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நரம்புகளின் பெயர்களும், அவசியமானவைகளை எழுதப்பட்டிருக்கிறது. தலை மூளையின் எந்தப் பங்குகளிலும் செயலோ, தத்துவமோ, நிரூபமோ, அவயவமோ, சம்மந்தப்பட்டவாவும் விவரிக்கப்பட்டிருக்கிறது. இன்னின்ன பாகங்களில் இன்னின்ன நினைவுகள் உண்டாகும் என்பதையும், விவரிக்கப்பட்டிருக்கிறது. சரீரப் படத்தில் நரம்புகள் வெளிப்படும் நடுமையமான மூலஸ்தலங்களையும், தலை மூளை, குறுக்கு மூளை இவற்றில் சம்மந்தமானவை வாவும் காட்டப்பட்டிருக்கிறது.

நரம்புகள் உணர்வு சம்மந்தம், அசைவு சம்மந்தம் என இரு வகைப்படும். அவ்விரண்டுமே சேர்ந்து பல பாகங்களுக்குச் சென்று, அவயவங்களுக்கு உணர்வும், அசைவும் கொடுக்கின்றன. அவைகள் சரிசமானமாகும் பொழுது சௌக்கியமும், கூடக்குறைய ஆகும் பொழுது பிணியும் உண்டாகின்றன. நரம்புகள் நடுமையமென்னும் மர்க்கஸிலிருந்து வெளிப்படுகின்றன. இவை புருவ மத்தியில் 12 ஜோடிகள் இருக்கின்றன. அதிலிருந்து 12 ஜோடிகளாக ஆரம்பித்து, முதுகின் குறுக்கெலும்பு மூளையில் 31 ஜோடி நரம்புகள் முளைக்கின்றன. அந்தக் குறுக்கு மூளை 5 பாகமாக்கப்படுகின்றது.

www.miskinsha.blogspot.com

1-வது: கழுத்திலிருந்து 8 ஜோடி நரம்புகள் வெளிப்படுகின்றன.

2-வது: நடு முதுகிலிருந்து 12 ஜோடு நரம்புகள் வெளியாகின்றன.

3-வது: இடுப்பிலிருந்து 5 ஜோடி நரம்புகள் வெளிப்படுகின்றன.

4-வது: ஆசனப் பிரிவான பாகத்தின் பின் துவாரத்துக்கு மேலும், இடுப்புக்கு கீழும் 5 ஜோடி நரம்புகள் வெளிப்படுகின்றன.

5-வது: பின் துவாரத்தின் பின் ஒரு ஜோடி நரம்புகள் வெளிப்படுகின்றன. இந்த கணக்குப்படி 31 ஜோடி நரம்புகள் திரப்பமாகின்றன. இவற்றில் ஒவ்வொரு ஜோடிகளிலும், வலதுபுறம் ஒரு நரம்பும், இடது புறம் ஒரு நரம்பும், வலதுபுறம் உள்ளது இடது புறமாயும், இடது புறமுள்ளது வலதுபுறமாயும் மாறி மாறிப்போய், தேகத்தின் பலபாகங்களுக்கு உணர்வும், அசைவும் கொடுக்கின்றன.

இவைகளைக் குறித்து சமஸ்கிருதத்தில் ஸ்திரப்படுத்திய பங்குகள்:

1-வது ஆக்ஞை: இது இருதய ஸ்தலமாகிய மூக்கினுடைய அடியாயிருக்கும். இதுவே மூளையுடைய மையமாயுமிருக்கும். இதில் இதில் அனேக அவயவங்கள் சம்மந்தப்பட்டிருந்த போதிலும் கண், காது, மூக்கு, நாவு முதலியன விசேஷமாக சம்மந்தப்பட்டிருக்கின்றன.

2-வது கண்டம்: இது கழுத்தின் பள்ளத்திற்குச் சரியாக முதுகுப்புறத்தில் இருக்கின்றது. இதில் அமையப்பட்டவைகளாவன: காற்றுப்பை, தாமரைக்காய், இரைப்பை முதலியன. தங்கள் தங்கள் திரைகளுடனே நெஞ்சுக்கும் வயிற்றுக்கும் இடையிலிருக்கிற சுவாசத்துக்குதவியான திரையுடனே இருக்கின்றன.

3-வது இருதயம்: இது நெஞ்சு மத்தியின் பின்புறம் நேர் பாகத்திலிருக்கின்றது. இந்த பாகத்திலிருந்து செல்லும் நரம்புகளில் அமையப்பட்டிருக்கிற அவயவங்களாவன:- இரைப்பை, குலைக்காய், ஈரல், மண்ணீரல், துரையீரல், முதலியன.

4-வது நாபி: இது தொப்புளுக்குப் பின்புறம், நேர்பாகத்திலிருக்கின்றது. இதிலிருந்து செல்லும் நரம்புகளில் அமையப்பட்டிருக்கும் அவயவங்களாவன: பிருக்கம், கால், முட்டு, பெண்குறி, நீர்ப்பை, சிறுகுடல் முதலியன.

5-வது சுவாதிஷ்டானம்: இது பெண்குறியின் அல்லது ஆண்குறியின் மேலுள்ள சிறு பள்ளத்துக்கு நேராகப் பின்னுள்ளது. இதில் கொளுக(அமைய)ப்பட்டது பித்தட்டு.

6-வது இதில் கொளுகப்பட்டது, பெண்குறி.

குறிப்பு: இந்த எல்லா நரம்புகளுக்கும் சக்தி குறுக்கெலும்பு மூளையிலிருந்து உண்டாகின்றன. இப்போது தெரியவந்தது என்னவென்றால்: 31 ஜோடி நரம்புகள் குறுக்கு மூளையிலிருந்து வெளிப்பட்டு விதர்ப்பமான பல பாகங்களுக்குச் சென்று, அவற்றின் செயலுக்கு முடிவைக் கொடுக்கின்றன. 31 ஜோடி நரம்புகளும், ஒரே கவராக முதுகந்தண்டில் சேருகின்றது. உள்ளங்கைப்புறமாய் விரல்களுக்கு இரு நரம்புகள் வருகின்றன. ஒன்றுக்கு (மீடியன்) என்றும், மற்றொன்றுக்கு (அல்நெர்வு) என்றும் சொல்லப்படும். பெருவிரல் நுனியிலிருந்து 3½ அங்குலத்தில் மீடியனும், 1½ அங்குல தூரத்தில் அல்நெர்வும் இருக்கின்றன. இந்த இரண்டையும் தவிர மூன்றாவது தொடர்ச்சி நரம்பொன்று இருக்கின்றது. அதற்கு ஹைப் போகிளாஸல் நெர்வு என்று பெயர். இத்தொடர்ச்சியின் உதவியால், தலை மூளை, குறுக்கு மூளை வகையறாக்களிலிருந்து வெளிப்படுகிற நரம்புகள் எல்லாம், ஒன்றோடு ஒன்று சேருகின்றன. இந்நரம்பு, ஒளிவிளையும் ஸ்தலமாம். அதற்கு ஜோகாஷ்மா என்று சமஸ்கிருதத்தில் சொல்லப்படும்.

அந்தரங்க அவயங்கள்: இதயம், நுரையீரல், ஈரல், இரைப்பை, சிறுகுடல், மண்ணீரல், நீர்ப்பை, முதலியன மேற்சொன்னவைகளில் எந்த அவயவங்களிலாவது, இடைஞ்சல் உண்டாகுமானால் குறுக்கு மூளையில் உண்டாயிருக்கும். அதன் பாகங்களின் மூலமாகிய நடுமையத்தில் கையை வைத்து, அதாவது உடன்பாட்டொளியோ, எதிர்மறையொளியோ என்பதன் அடையாளங்கள் அறிந்து, அதன் பிரகாரம் பினியாளியின் வலது, இடதுபுறங்களில் கையினால் முன்னாலும் பின்னாலும் வைத்து, ஒளியை உட்புகுத்த முயற்சி செய்து, நரம்பின் மூலஸ்தலத்துக்கு அசைவையும் கொடுக்க சொஸ்தமாகும்.

தலைப் பிணிகளை எங்ஙு சொஸ்தப்படுத்த வேண்டுமோ, அது கீழே காட்டப்பட்டிருக்கிறது. பேஷியல் நேர்வு: இது முகத்தின் பெருநரம்பு. இதற்குப் பெருங் கிளைகள் மூன்று இருக்கின்றன. இவை தலை முழுதும் வியாபித்திருக்கின்றன. இது கபாலத்திலிருந்து காதுக்குக் கீழ் ஒரு பள்ளமிருக்கிறதே அவ்

www.miskinsha.blogspot.com

விடத்தில் வெளியாகின்றது. தலையின் பிணிகளுக்கு அந்த இடத்தில் கையை வைக்கவும். அதாவது முன் சொன்னபடி உடன்பாட்டொளியையோ எதிர்மறையொளியையோ ஏதுவுபோல் புகுதவைத்து சொஸ்தமாக்கவும்.

(Optic nerve) ஆப்டிக்நெர்வு இந்த நரம்பில் பார்வையின் சம்பந்தமிருக்கிறது. இதற்காகக் கண்பட்டை, பொட்டு இலைகளில் கைவைக்க குணமாகும்.

(நீமுகஸ்டேக்நெர்வு) இதன் சம்மந்தம் இரைப்பையின் மீதும் அதனமாயிருக்கும்! இது விசேஷமானது! நீகஸ்நெர்வு என்றும் சொல்லப்படும். நெஞ்சுக்கும், வயிற்றுக்கும் சம்மந்தப்பட்ட அவயவங்கள் அடங்கலுமாகிய குலைக்காய், நுரையீரல் இலைகளின் நிரைகள், இரைப்பை, சிறுகுடல், பிருக்கம், மண்ணீரல், ஈரல், பித்து, நீர்ப்பை, கர்ப்பப்பை இலைகளில் குணம் செய்வதற்காக காதின் கீழ் நுவிக்கும் தாழ்வாய்க் கட்டையில் பக்க நுவிக்கும் சமீபத்தில், கழுத்தின் பக்கமாய்த் துடித்துக் கொண்டிருக்கிற இடத்தில், ஒளியைச் செலுத்த குணமுண்டாகும்!

(ஷிபாடிக்நெர்வு) இதனால், கால், முளி, பாதம், முதலியவை களின் வலி, உணர்வின்மை, காயம் முதலியன சொஸ்தமாக்கப்படும். குணப்படுத்த வேண்டிய இதன் ஸ்தலமாவது: பிணியாளியை நிறுத்திப் பின்தட்டின் பக்கம் வரைக்கு, இடையில் சற்று உள்புற மாய்த் தொடையில் இருக்கின்றது. அதில் வேலை செய்ய சொஸ்த முண்டாகும்.

பிணியாளியை சொஸ்தப் படுத்த வேண்டிய பல விதிகள்:

1-வது: (Pass) பாஸுடைய உதவியால், அதாவது கைவிரல் களினால் ஒளியையுட் புகுத்தல் அல்லது இழுத்துக் கீழே வெளிப் படுத்துதல் அல்லது வியாபிக்கச் செய்தல்.

2-வது: கண்களினால் கூர்மையாக முன் அப்பியாசப்படி பார்க்குதல்.

3-வது: மூச்சை யடக்கி வாயால் ஊதுதல்.

4-வது: மருந்து அல்லது ஆகாரம் அல்லது உடை அல்லது தண்ணீர் அல்லது பால் வகையறாக்களில் ஒளியைச் செலுத்தி, பிணியாளிக்குப் பரிமாறுதல்.

5-வது: பிணியாளிகளுக்கு ஏதேனும் ஒரு மந்திரம் அல்லது கடவுளாகிய அல்லாஹ்ஜல்லஷானஹூ உடைய பரிசுத்த நாமங்களைக் காட்டி சிந்திக்கச் செய்தல்.

6-வது: (Dorsal) முதுகின் மையமுடைய உதவியாலும் அதாவது அதனுள் ஒளியைப் புகுத வைத்துப் பிணியாளியின் நிரேகத்தில் தரிப்பித்தல் அல்லது அதைப் பார்க்க வைத்தல்.

7-வது: பிணியாளியின் சிந்தனை பிணியை விட்டு விலக்கி, வேறு பக்கம் நிலைக்கச் செய்தல் - முதுகின் மைய உதவியைக் கொண்டு, எல்லா விதத்தாலும் சிறந்த விதமாயிருக்கும் ஆகையால், முதுகின் மையத்தைக் காட்டுவதற்கு வழிகாட்டவும். அதாவது வியாதியின் ஸ்தலம், நெஞ்சுக்குழி, இருதயஸ்தலம் முதலிய இடங்களில், ஒளியைச் சேரம் செய்து, நோட்டமிடச் செய்யவும்.

8-வது: பிணியாளி ஆரூடில்லாமலே அவனுக்கு சித்த தத்துவத்தின் உதவியால் ஒளியைச் சேரம் செய்தல்.

9-வது: கடிதம் அல்லது வேறு தூது முதலான உதவியைக் கொண்டு பிணியாளியின் பேரில் குணம் செய்தல்.

10-வது: மக்கத்துக்குப் போய் ஹஜ்ஜுசெய் அல்லது காசிக்குப் போய் தீர்த்தம் செய்! ஏழையல்லது மிஸ்கீன்களுக்கு சாப்பாடு கொடு! அல்லது ஏதாவது நேர்ந்துகொள்-உனக்கு சவுக்கியமாகும்! என்று சொல்லுதல். மேற்கண்ட விதிகளால் சொஸ்தமாகும்.

பிணியாளி குணப்படுத்தலுக்குரிய நிலைமைக்கு வந்த போது அவனை சொஸ்தம் செய்யும் வழிகள்:

1-வது: செய்கிறவன் தலைமூளையின் ஒளியைச் சரிசமான மாக்குதலின் விதமாவது: நமது வலது கையை உள்ளங்கைப் புறமாக பிணியாளியின் நெற்றியில் வைத்து, அவ்வாறே இடது கையைப் பின் தலையில் வைத்து மெள்ள மெள்ள அசைத்து, வலது கையிலிருந்து உடன் பாட்டொளியின் சொஸ்தத்தை அருளுவதினால்-சுகங்கொடுக்கிற உடன்பாட்டொளி வெளிப்பட்டு நெற்றி யின் புறம் புகுகின்றது. இவ்வளம் பின் தலையின் பக்கமாய் அசைக்கியமும், கெடுதியும், சொஸ்தத்தைக் கெடுக்கிறதுமாகிய ஒளியை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறதென்றும், பிணியாளிக்கு இப்பொழுது சொஸ்தத்தையும் சுகத்தையும் அருளிக்கொண்டிருக்கிற தென்றும் சிந்தனை செய்யவும்.

www.miskinsha.blogspot.com

2-வது: வலது கையை வலதுபுறமும், இடது கையை இடது புறமும் காதுக்கு மேல் வைத்து சற்றுநேரம் தங்கிய பின்பு, இரு கையையும் பின்புறமாய்க் கொண்டுவரவும். இடது கையால் பின் தலையையும், கழுத்தையும், பிடரியையும் பலமாய்த் தேய்க்கவும். பின்பு இரு புறங்களிலேயும் இரண்டு கையையும் இரண்டு நிமிஷம் வைக்கவும். இவ்வளவும் செய்த பிறகு பிணியினிடத்துக்கு எந்த நரம்பில் ஒளியைப் புகுத்தவேண்டுமோ, அப்படிச் செய்துகொள்ளவும். இவ்விதம் செய்தாலும் பிணியாளிக்கு சொஸ்தமுண்டாகும்.

3-வது (Note) நோட்: தலை மூளையின் பேரில் எந்தச் செய்கைகளும் 5 நிமிஷத்துக்கு மேல் செய்யக்கூடாது. எப்பொழுதும் இவ்வளவு வருத்தத்திற்கு அவசியமில்லை. பார்வை மட்டும் செய்த பின்பு சிந்தனையால் இவையாவும் செய்யக்கூடும்! ஒளியைப் புகுத்தி மிகுந்த வேளையில் காலின் புறமாய் இழுத்துக்கொள்ளல் வேண்டும். எனினும் எந்தஸ்தலமாவது ஒளிமிகுதி அல்லது குறைவினால் பலமின்மை, உணர்வின்மை முதலியன இருந்ததானால் ஒளியைச் சேகரமாக்கி சற்று நேரம் தாமதித்து விடவும்.

ஞாபகம் வைக்க அவசியமான பொது விதிகள்:

ஒவ்வொரு ஜடத்தின் அவயவங்களது பங்குகளின் சொஸ்தமாகுதல் – அதற்கு ஏற்பட்ட தலை மூளையிலாயிருக்கும். ஆகையால் ஜடத்தின் அவயவங்கள் கொளுகப்பட்ட, அந்தத்தலை மூளையின் பக்கத்தில் மட்டும் விரலை வைத்து சிந்திப்பதால் உண்டாகும் குணம், அந்த அவயவத்தின் ஜடத்துக்கு மட்டும் சேருகின்றது. சம்மந்தத்தின் பாகமாகிறது தலை மூளையிலாயிருக்கும். இதைப் பற்றி தலை மூளையின் படத்தைப் பார்த்துக் கொள்ளவேண்டியது.

படத்தில் தலை மூளைக்குச் சம்மந்தப்பட்ட இருதயஸ்தானத்தைப் பார்க்கவும். இதுவோ ஜடத் தத்துவம் விளைந்து பொங்கும் ஸ்தானமாயிருக்கும். இன்னும் சித்த தத்துவத்தின் ஸ்தலமும் ஒளியுடைய ஸ்தலமும் இதுவே! எந்த வஸ்து தலை மூளையின் எந்த பாகத்தில் சம்மந்தமாயிருக்கிறதோ அது படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அறிந்து கொள்ளவும்! தலை மூளையினால் விளங்கிக் கொள்ளவும் போதும். அதே இடத்தில் கையை வைக்கிறதினாலோ, விரல்கள் வைப்பதினாலோ, ஒளியைப் புகுத்துவதாலோ, எண்ணத்தை ஒன்று சேர்க்கிறத்தினாலோ அனேக வியாதிகள் சொஸ்தமாக்கப்படுகின்றன. இன்ன பிணிக்கு

இன்ன ஸ்தலத்தில் வேலை செய்தால் குணப்படுமென்று படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

சுவாசகாசம், புத்தி சுவாதீனமில்லாமை, (Empima) நீண்ட கால க்ஷயகாசம் முதலிய வியாதிகள் மருந்துகளினால் சொஸ்தப்படுகிறது வெகு கஷ்டம். ஆனால் ஆத்மஞானத்தின் உதவியால், வெகு சீக்கிரம் குணமாகின்றன!

தலை முன் மூளையில் ஒளி மிகுதமாய் அதிகப்பட்ட பொழுது குலைக்காய், காற்றுப்பை இவைகளின் செயல்களிலும், அந்தக் கருவிகளிலும் (ஜாதிபா) கிரகித்தல், (முன்களிமா) கிரகித்ததைக் கூறாக்குதல், (தாபிஆ) வெளிப்படுத்தல் முதலிய இத்தராதரங்களிலும் வித்தியாசமுண்டாகும். இதற்காக வலது கையை நெற்றியின் பேரிலும், இடது கையைத் தலையின் பின் புறத்திலும் வைத்துச் சிந்திக்கிறதினால் பிணியாளிக்குச் சொஸ்தமுண்டாகும்.

சீதளம், உஷ்ணம், உணர்வின்மை, நாம்புகளின் துடிப்பு, பலமின்மை, ஆண்மையின்மை, முதலான வியாதிகளுண்டான நேரத்தில், தலைப் பின் மூளையில் காதின் பின்னாகவும், பிடரியின் இருபக்கமாகவும் உள்ள ஸ்தலங்களில் கையல்லது விரல் வைத்துச் சிந்திப்பதால் மேற்கூறிய வியாதிகள் மாத்திரமல்ல – திரேகம் அடங்கலிலும் உள்ள வியாதிகளும் குணமாகின்றது.

பலமின்மையால் இடுப்பு வலிக்கும்போது நாபிக்குப் பின்புற மையத்தில் இடது கையையும், நாபி அல்லது உந்தியில் வலது கையையும் வைத்துச் சிந்திக்கவும்.

சுருக்கமான கருத்து: எந்தச் சக்கரத்தின் மையத்துக்குச் சம்மந்தப்பட்ட பிணியாயிருந்தாலும் சரி, தமது வலது கையைச் சக்கரத்தின் எதிர் புறத்தில், அதற்குச் சரியான இடத்திலும், இடது கையைச் சக்கரத்தின் பக்கத்திலும் வைத்துச் சிந்திக்க குணமுண்டாகும்.

நெஞ்சு வயிறுடைய கருவிகள் மிகுதமாய்ப் பலமின்மையால் தமது ஸ்தலங்களை விட்டுப் பிசகிக்கொள்கிறது. ஆதலால் தங்கள் தங்களுக்குச் சம்மந்தப்பட்ட செயல்களைச் சரிவர நிறைவேற்றுவதில்லை. இதற்கு அவிழ்தமாவது: நெஞ்சு, வயிறு இவற்றில் எங்கு அவசியமோ, அங்கு முன்புறத்தில் வலது கையையும், பின் புறத்தில் இடது கையையும் வைத்துச் சிந்திக்குதலால் சொஸ்தமாகி

www.miskinsha.blogspot.com

கருவிகள் தத்துவத்தைப் பெற்று தங்கள் தங்கள் ஸ்தலங்களிற் சென்று செயல்களை நிறைவேற்றுகின்றன.

(Epilepsy) வலிப்பு: அதேகமாய் இதற்கு அவிழ்தமில்லை என்கிலும், ஆத்மஞானத்தின் உதவியால் சவுக்கியமாகும். இதற்குப் பிணியாளியின் தலை சுற்றும். ஒரு வகையான குளிர்ந்த நோய். இதற்கு டாக்டர்கள் (Apoplexy) என்று சொல்வார்கள். மேலே ஏறுகிறதாகத் தெரியவரும். இதுவே இளி வருகிற வலிப்பினுடைய அடையாளமாகும். இதற்குப் பிணியாளியினுடையக் காலின் ஒரு புறம், தமது கையல்லது விரல்களால் அமுக்கவும். பின்பு சீக்கிரம் அவ்வாறே மற்றொரு பாகமாகிய வலது புறமும், பின்பு சீக்கிரம் இடது புறமும், இடைக்கிடை அமுக்குவதால் உடனே சுற்றுதல் தடைபடும். இந்த சொஸ்தம் செய்து கொண்டே பிணியாளிக்குச் செய்யவேண்டிய சிகிட்சைகளைச் செய்ய வேண்டும். இதனால் இந்தப் பிணி சொஸ்தமாகும். பரிட்சித்தது.

Note: உடனே வியாதி நீங்கக்கூடிய நரம்புகள் எதனிலும் சரி விரல்களை வைப்பதாலும், சிந்தனையாலும், உடனே தாமத மின்றியே குணம் கொடுக்கின்றது.

உதாரணமாக 1-வது: கோறலீ, என்னுமிடத்தில் அதாவது பின் தட்டின் பக்கவரைக்கு இடையில் சற்று உட்புறமாய்த் தொடையிலிருக்கிற ஷியாடிக் அல்லது அரக்குள்ளிசா என்று பெயர் பெற்ற சந்து நரம்பு, மீடியன், அல்னர்வு முதலிய நரம்பு களில் கை வைத்து அழுத்திக் கொண்டு சுகத்தைப் பற்றிச் சிந்திப்பதால் குணமுண்டாகும்.

2-வது: தலை முகம் இதனுடைய நரம்பின் ஸ்தலம் படத்தில் சொல்லியிருக்கிறது. இந்தஸ்தலத்தில் குளிர்ந்த ஜலத்தை விரலில் தனைத்து ஒரு நிமிஷம் வைப்பதினால் பல் வலியின் கடின வருத்தத்தை நீக்கக்கூடும். எனினும் அது வாய்வினாலில்லாமல் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அதற்கு ஞானதிருஷ்டியாகிய தவஸ்ரூ அதாவது சித்தத்தோர்மையால் செய்யவேண்டும்.

3-வது: எந்த இடத்தில் அமுக்கினால் வலியுண்டாகுமோ, அந்த இடமாகிய கண் பட்டை, பொட்டு, அவ்விடம் துடிக்கிற நரம்பு முதலியவைகளில் கையல்லது விரல் வைப்பதால் கண்ணில் கடினமானகுத்து, எரிவு, வலி முதலியவற்றிற்கு ஒரு நிமிஷத்தில் குணம் உண்டாகும்.

4-வது: கண்ணுடைய வெளி ஓரத்து மூலைக்கும், காதின் மையத்துக்கும் நடுவில், கோயிட்டக் ஆர்ச்சுக்குக் கீழுள்ள துடிக்கிற பொட்டு நரம்பில் கை விரலால் தண்ணீர் தொட்டு வைத்துச் சிந்திப்பதால், செவிட்டுத் தனமும், காது வலியும் நீங்கும். அது போலவே, கேள்வி நரம்பாகிய (ஆடிட்டோரிநெர்வு) இதில் வைத்துச் சிந்திப்பதாலும் சொஸ்தமுண்டாகும்.

5-வது: முன் சொல்லப்பட்ட நரம்பாகிய (நீமுகஸ்டேக்நெர்வு) இதில் வேலை செய்கிறதால் நெஞ்சு, வயிறுகளின் கருவிகள் அடங்கலும் சொஸ்தமாகும்.

6-வது: எந்தக் கருவியின் தத்துவம் அதிகப் படக் கருதப் படுகிறதோ, அதே கருவியின் பேரிலேயே, பிணியாளியின் எண்ணத்தை ஒன்று படுத்தச் சொல்ல வேண்டும். விசேஷமாய்க் குணத்தை யேற்றுக் கொள்வதற்குரிய நிலைமை பிணியாளியில் காணப்பட்டப் பொழுது உடனே சொஸ்தமாகின்றது.

7-வது: மேற் சொல்லிய சிகிட்சைகளினால், கீழ் விவரிக்கப் படுகிற பிணிகள் சொஸ்தமாகின்றன. அதாவது அஜீரணம், எந்தப் பிணிக்கு வாயால் இரத்தம் வந்து, திரேகத்தில் காந்தல் வருமோ, அது, நடுக்கமுடைய வியாதி, காசம், சுவாச காசம், கிட்னியுடைய வியாதிகள், மலமிறங்காதிருத்தல், காலறா, நெஞ்சு வயிறுகளின் கருவிகள் ஒவ்வொன்றிலும் உண்டான எரிவு, வயிற்று வலி, குன்ம வலி, கிட்னியுடைய வலி, இரைப்பையுடைய வலி, மண்ணீரல் உப்புதல், வாந்தி, இரத்த வாந்தி, இரத்த முரிச்சல் சம்மந்தப்பட்ட வியாதிகளாகிய (Dropsy) வீக்கம் முதலிய வியாதிகள் சொஸ்தமாகின்றன.

வியாதிகளை சொஸ்தப் படுத்தும் விதம்:

முதலாவது சொஸ்தத்தைப் பற்றி நாடுவது, சொஸ்தத்தை அருளுவதேயாம். தமது தத்துவம், சுத்தமாயிருக்கவேண்டும். அப்பியாசத்தால் செய்கிறவன் தாம் சொஸ்தப் படுத்தத் தனக்குத் தத்துவமிருக்கிறதாக உறுதி கொள்ளல் வேண்டும். பரவா இல்லை யென்பது போல் கிஞ்சித்தும் சந்தேகம்கொள்ளக்கூடாது. இந்தத் தத்துவத்தை, ஆண்டவனுடைய அவிழ்தமென்றறிதல் வேண்டும். பிணியாளி தமக்கு மரியாதை செய்கிறவனாயிருக்க வேண்டும். ஆகவே தான், இந்நிலைமைகளில் இம்மறைவான உதவிகளால் அதேகமாய்க் குணப்படுத்துவீர்கள். பக்தியற்றவர்களுக்கும்,

www.miskinsha.blogspot.com

கடவுளை மறுக்கிறவர்களுக்கும் இதிலொன்றுமே ஆகாது. பிணியாளி வடபாகமாக முதுகைத் திருப்பி இருக்க வேண்டும். சுவர் அல்லது தலையணை இவைகளில் சாய்ந்து கொண்டிருக்க வேண்டும் தனது காலை நீட்டிக்கொள்ள வேண்டும். நாம் அவனைக் காண சற்று உயரமான தலையணை வகையறா முதலிய இருப்பிடத்தில அவனின் இரு காலுக்கிடையில் உட்காரவேண்டும். முழங்கால் மண்டியிட்டாவது, சம்மனங்கூட்டியாவது உட்கார்ந்து மெதுவாய் அவன் தலையிலிருந்து கால் விரல்களின் வரையில் நீளப்பாஸ் (Long pass) செய்யவும். பிணியாளியுடைய கைப் பெருவிரலை செய்யப்படுகிறவளாகிய மாமூலை பரிட்சித்து அறிதல் என்னுமிடத்தில் சொல்லியிருக்கிற விதமாய் பிடிக்கவும், அல்லது பிணியாளியுடைய இரு கைப் பெருவிரல்களையும் தமது இரு கைப் பெரு விரல்களால் பெருவிரலின் உட்புறத்து முன்பக்கம் பிணியாளியுடைய பெருவிரலின் உட்புற முன்பக்கத்தில் சேர்ந்தும், ஆள்காட்டி விரல் அவனுடைய பெருவிரல் நகத்தைப் பூராவாய் மறைத்தும் இருக்க வேண்டும். அந்த வகையினால் மீடியன் நெர்வின் உதவியால் குணமுண்டாகும். அல்லது தமது பெருவிரலிலுட்புறப் பக்கத்தைக் கொண்டு அவனின் சுண்டு விரலும் அதன் அடுத்த விரலாகியப் பவுத்திர விரலும் சேருகிற அடிவேரின் உள்ளங்கைப் புறத்திலும் அல்லது ஆள்காட்டி விரல் உட்புறத்தைக் கொண்டு அதற்கு நேராகப் புறங்கை புறத்திலும் தேய்க்கவும். இந்த வகையினால் அல்நெர்வின் உதவியைக் கொண்டு குணம் உண்டாகும் மேற்சொன்ன ஒவ்வொரு நிலைமைகளிலும் மேற்சொன்ன படியே தேய்த்துக் கொண்டாவது, மெள்ள மெள்ள அழுத்திக் கொண்டாவது இருப்பதால் குணமுண்டாகும். ஆகவே இவ்வாறு பிடித்ததன் பின் பிணியாளியின் இரு புருவ மத்தியில் தமது கண்ணால் இமைகள் அடிக்காமல் கூர்மையாய் பார்க்க ஆரம்பித்து, பிணியாளியினுடைய மூளையில் ஒளியை நிறப்புகிறேனென்று சிந்தித்தல் வேண்டும். இந்தச் செய்கைகளை 5 லிருந்து 10 நிமிஷம் வரையில் செய்து முடித்தால் பிணியாளியுடைய கண்களில் ஏதேனும் தூக்கம் வரக்கூடுமாகும் போது கைகளை விட்டு விட்டுத் தமது உள்ளங்கைகளைப் பிணியாளியின் கண் பட்டைப் பொட்டுகளின் பேரிலும், மற்றும் விரல்கள், தலையின் பேரிலுஞ் சற்று நேரம் வைக்கவும். அப்படி வைக்கிறதில், பெருவிரல் இரண்டையும் புருவ மத்தியில் அமுக்காமல் 4 லிருந்து 5 நிமிஷம் வரையில் வைத்து அவ்வாறே புருவ மத்தியில் கூர்ந்து பார்க்கவும். பிணியாளி அல்லது செய்யப்படுகிறவனைத் தூக்கத்துக்குக் கொண்டு வரச் சிந்திக்கவும். அப்பொழுது கைகளை யெடுத்து விட்டுத் தலையில்

இருந்து உந்தி வரையில் பாஸ் செய்யவும். அப்படிச் செய்வதில் எச்சரிக்கையாய் கவனிக்கத்தக்கதாவது: பிணியாளியுடைய எந்தப் பாகத்திலும் கைபடாதிருப்பதுவேயாம்! இன்னம் பிணியாளியின் திரேகத்தில் ஒளியை நிறப்புகிறேனென்று சிந்தனை செய்ய வேண்டும். பின்பு உந்தி வரையில் வந்த பொழுது, தமது இரு கைகளையும் மூடிக்கொண்டு, கையின் செய்கையால் உண்டாகும் காற்றுக்கூட அவன் பேரில் படாதிருக்குமளவு தூரத்தில் வலது விலாப் புறத்தின் நேரே தலைப் புறமாகக் கொண்டு வந்து மறு பாஸ் செய்யவும். அதாவது தலைகீழான பாஸ் ஆகி விடாமல் இருக்கவும் எச்சரிக்கையாவது: 10 லிருந்து 15 நிமிஷம் அல்லது அதைக்காண அதிகம் பிணியாளி தூக்கக் கண்ணாய் கைகளைத் தானே நன்றாய் மூடிக்கொள்ளும் வரையில் பாஸ் செய்யவும். இந்நிலைமைகளில் வித்தியாசமான உடைகள், அதாவது கனதியான பஞ்சுகடை, அல்லது மெல்லியப் பட்டுடை, அல்லது உரோம உடை முதலியன பிணியாளிக்கு இருக்கக்கூடாது. இந்நேரத்தில் செய்யப் படுகிறவன் ஏதாவது ஒரு நிலைமையில் வருவானேயானால் அப்பொழுது நமக்கும் அவனுக்கும் யாதொரு பயம், துக்கம், திகில் முதலியன இல்லாதிருத்தல் வேண்டும். இன்னும் அவனை இந்நிலைமையில் அப்படியே விட்டு விடவும். விழிப்பிக்க வேண்டாம். இதனால் எவ்வித நஷ்டமும் உண்டாகாது. தாம் நிலைப் படுத்திய நேரத்தில் அல்லது தாம் மனதில் நினைத்துக் கொண்ட நேரத்தில் தானே விழித்துக் கொண்டு சௌஸ்தப்படுத்தப்பட்ட நிலைமையில் வருவான். இந்நிலைமையில் ஏதேனும் அவனின் ஞாபகத்தில் உண்டாக்கினால், அவன் விழித்த பின்னும் அதே ஞாபகத்தில் இருப்பான். இந்நிலைமையில் அவன் நமது வினாக்களுக்கு விடையளிப்பான். அவன் நமது உத்தரவினால் பிணியையும், மறக்கக் கூடுமாகின்றான் குறிப்பிட்ட நேரத்துக்கு முன் விழிப்பிக்க விரும்புவோமானால் கீழ்காணும் விதமாய் விழிப்பிக்கவும். அதாவது முதல் முதல் காலிலிருந்து நாபி வரையில் தலை கீழாய் பாஸ் செய்யவும். 10 லிருந்து 15 பாஸ் போதும். உணர்வு வரவில்லையானால் இருபெரு விரல்களையும் அவனின் புருவ மத்தியில் வைத்து சற்று அமுக்கியும் நொட்டுத் தடவிக் கொண்டும் இருக்கவும். கண் பட்டைப் பொட்டு வரையில் கொண்டு வரவும். அல்லது குளிர்ந்த ஜலத்தினால் கண்கள் பேரிலும் நெற்றியின் மீதும் பலமாய் அடிக்கவும் விழித்துக்கொள்வான்.

Note: இந்நேரம் பிணியாளியல்லது செய்யப்படுகிறவனிடம் வேறு மனிதர்களை விடவாவது கூச்சல் குரல் போடவாவது, நாம் பயப்படவாவது, திகிலடையவாவது வேண்டாம்.

www.miskinsha.blogspot.com

சொஸ்தத்தின் பொதுவான விதிகள்:

பிணியாளியின் பேரில் குணத்தை ஒப்புக் கொள்கிற நிலைமையை உண்டாக்கித் தம்முடன் அவனுடைய ஆத்ம சம்மந்தத்தை உண்டாக்கவும், பின்பு பாசுடைய உதவியால் கால்களின் புறமாய் ஒளியை யெடுத்துக் கொள்ளவும். அல்லது ஒளியின் குறையினால் அவசியப்படில் அங்கேயே யிருக்க விடவும். அல்லது பரவவிடவும். ஆகவே தமது ஒளி பிணியை வாங்கிக் கொண்டு வெளிப்படும். ஒளி மிகுந்து சேகரமாய் இருந்ததானால் அப்புறப் படுத்தவும். குறைந்திருந்ததேயானால் நிறப்பவும். அவசியமில்லாத ஸ்தலத்தில் சேகரமாயிருந்ததானால் அவசியமான இடத்தில் கொண்டு போய்ச் சேர்க்கவும் வேண்டும்.

சொஸ்தப் படுத்த சில அத்தியாவசியமான கடாக்ஷ நேர் வழிகள்:

Note: தமது ஒவ்வொரு செய்கைகளையும், தன்னைப் படைத்த (அல்லாஹ்வென்னும்) கடவுளின் திருநாமத்தாலேயே ஆரம்பிக்குதலும், ஆசிரியரின் உத்தரவை விரோதிக்காதிருத்தலும் வேண்டும்.

வைத்தியர்களிடத்தில் எந்தப் பிணிகள் (மருந்தற்றவைகளாக) அவிழ்தம் அற்றவைகளாக இருக்கின்றனவோ. அந்தப் பிணிகளை சொஸ்தம் பண்ணத் துவக்கத்திலேயே நாடவேண்டாம். அதாவது முதல் முதல் அவிழ்தம் அற்ற வியாதிகள், இன்னும் தாமதத்தில் சொஸ்தமாகிற வியாதிகள், முத்தஅத்தியானத் தொத்து வியாதிகள் இவைகளின் சொஸ்தத்தை விரும்ப வேண்டாம்.

முத்தஅத்தி யாகியத் தொத்து வியாதிகள்:

1-வது வழிபாடு: வாந்தி செய்தல், தீனியில் வெறுப்பாதல், வைசூரி, பிளேக், சொறி சிரங்கு முதலியன. ஆகையால் இப்போது நமக்கு அதிக அப்பியாசமில்லாததால் ஒளியின் அதிகம் பிணிகளைப் போக்குவதற்கில்லாமலிருக்கின்றது. செய்வோமானால் அப்பொழுதுத் தொத்து வியாதிகள் ஒரு வேளைத் தமக்கு ஒட்டிக்கொள்ளலாம். ஏனெனில் இப்போது நிரப்பமான தத்துவம் நமக்கில்லை. குறைவாயிருக்கின்றது.

2-வது வழிபாடு: எவ்வித பிணியையும் சொஸ்தப்படுத்தக் கூடுமெனினும் தமது அப்பியாசமும், தத்துவமும், தைரியமும், விடா

முயற்சியும், ஊக்கமும், ஒளியினதிகமும், சித்த தத்துவம் இவைகளினுடைய அப்பியாச அளவின் பேரில் முதல் முதல் சிறு சிறு பிணிகளின் சொஸ்தத்தை உண்டாக்கவும். பின்பு உள்ள அவிழ்த மற்றதும், தொத்து வியாதிகளுடைய சொஸ்தத்தையும் செய்யக் கூடும். பயமும், திகிலும் அறவே இல்லாத தோத்தில் சொஸ்தப் படுத்தவும். இன்னும் அவனின் பிணி தம்மிலுண்டாகி விடுமோ என்ற பயம் அறவே கிஞ்சிற்றுமில்லாதிருத்தல் வேண்டும். மற்றபடி ஒன்றும் செய்ய வேண்டாம்.

3-வது வழிபாடு: முதல் முதல் சொஸ்தத்துக்கு ஆரம்பிக்க வேண்டிய பிணிகளாவது: தலை வலி, பல் வலி, வயிற்றுவலி, சிலந்தி, அதிகமான காந்தல், (இதன் சொஸ்தம் வியாதி அதிகரிக்கு முன் செய்ய வேண்டும்) எவ்வித வாய்வுருத்து, மலமிறுகல், தலை சுற்றல், ஆரம்பமான காசம், கண்ணில் பூவிழுதல், கண் வியாதியாகிய மங்கின பார்வை, மாலைக் குருடு, கண்ணில் தூசி விழுத்தாலுண்டாகும் அவஸ்தைகள், எல்லாவித வீக்கம், அவயவம் மரத்து உணர்ச்சி யற்று போதல், தூக்கமின்மை, வலிப்பு, மண்ணீரல் உப்புதல், ஈரல், மூளை, தாமரைக்காய், நீர்ப்பை, இரைப்பை, இவைகளின் பிணிகள், சுவாச காசம், மூச்சுப்பிடிப்பு, அஜீரணம், ஸ்திரீகளின் வியாதிகள், வகையறாக்களை எழுதியிருக்கும் பிரகாரம் முறையே செய்தபின், தொத்து வியாதிகளை சொஸ்தம் செய்யவும், அறவே கிஞ்சிற்றும் பயப்பட வேண்டாம்!

4-வது வழிபாடு: பலமில்லாத பிணியாளி, சிறுவர், பெண்கள் இவர்களிடத்தில் அதிக அன்பு வைத்துச் செய்தல் வேண்டும். ஆண் பிள்ளைகளின் பேரிலும் சிந்திக்குதலாகிய தவஜ்ஜாவால் குணம் விரைவில் உண்டாகும்.

5-வது வழிபாடு: கூக்குரல் சப்தங்களில் ஞானதிருஷ்டியாகிய தவஜ்ஜா செய்ய வேண்டாம். சிறுவர்களுக்கு தூக்க நிலைமையில் ஞானதிருஷ்டி செய்யவேண்டும்.

6-வது வழிபாடு: நமது தூக்கம், விசனம், தொத்தரவு அலுப்பு, தவிப்பு, முதலிய நிலைமைகளிலும், பிணியாளியின் களைப்பு, பலமின்மை முதலிய இந்நிலைமைகளிலும் ஞானதிருஷ்டி செய்ய வேண்டாம்.

7-வது வழிபாடு: சொஸ்தப்படுத்த ஆரம்பிக்கும் போது செய்கை வீணாகாதபடி அதிக நேரம் வரையில் விடாமுயற்சியால்

www.miskinsha.blogspot.com

கவளிக்கவும். சிந்திக்கும் ஸ்தலமும், நேரமும் ஆரம்பத்தில் குறிக்கப் பட்டிருத்தல் அவசியம்.

8-வது வழிபாடு: விசுவாசமற்றவனுக்கு ஞானதிருஷ்டி செய்ய வேண்டாம். அவனுக்குக் குணமுண்டாகாது.

9-வது வழிபாடு: சொஸ்தப்படுத்தும்போது பிணியாளியில் ஏதேனும் ஒரு மாற்றமான நிலைமை அதாவது வியர்வை அதன மாகுதல் அல்லது சிறுநீர் அதிகம், அல்லது சீதளம் அல்லது பிணியதிகப்படுதல், அல்லது வேதனை. ஒரே விடுத்தத்தில் அதிகப் படுதல் இவற்றில் ஏதேனும் இருந்தாலால் பயப்பட வேண்டாம். பிணியாளிக்குத் தேறுதல் சொல்லவும். வியாதி சீக்கிரம் சொஸ்த மாகும்.

10-வது வழிபாடு: நல்ல அவிழ்தமான உடல் பாட்டோளி போதுமான அளவு சேரமாயிருத்தல். நமக்கு உறுதியான பொழுதும், அவை அவிழ்தங்களுக்கு இயற்கையான நேர்பாட்டில் சமமாகும் பொழுதும், நிச்சயமான சொஸ்தத்தின் குணம் அருள சுத்தமான ஒளி அதனமாயிருக்கிறதாய் அறியப்பட்ட பொழுதும், நாம் ஞானதிருஷ்டி செய்தோமானால், உடனே ஜெயமாகு மென்ற எண்ணம் நமக்கு உறுதியான பொழுதும், நாம் குணப்படுத்தல் சந்தோஷத்தை உண்டாக்குதலாகும் என்று நமக்கு உறுதியான பொழுதும், மற்றது நம்மிது ஏதேனும் கெடுதியான குணபாடு உண்டாகாதென்ற எண்ணம் நமக்கு வெளியான பொழுதும், நாம் யாரையாவது கருணைப் பார்வையால் ஞானதிருஷ்டி செய்வோ மானால், உடனே யாதொரு தாமதமின்றியே சொஸ்தமாகும். எவனுடைய எவ்வித வியாதியும் நமக்குத் தாவாது!

11-வது வழிபாடு இழந்த சக்தியை மீட்டல்: இன்னும் ஞான திருஷ்டி செய்த பின் நமக்குக் களைப்புண்டானால் நாமே நம்மீது பாஸ் செய்து கொள்ள வேண்டிய விதமாவது: முதலாவது நமது இடது கையினால் வலது புயத்திலிருந்து கால் வரையிலும், பின்பு வலது கையினால் இடது புயத்திலிருந்து கால் வரையிலும் பாஸ் செய்து கொள்ளவும். பிறகு இருகையினாலும், நெற்றியிலிருந்து கால் வரையில் 10, 15 பாஸ் செய்து முகம், கை, கால்களைக் கழுவி பிறகு நம்மைப் படைத்து வளர்க்கின்ற அல்லாஹ்வாகிய கடவுளின் ஞாபகம் வைத்துக் கையேந்தி அவனிடத்தில் தத்துவத்தை அனுக்கிரகிக்கப் பிரார்த்தித்து, கையை முகத்தில்

நடவிக்கொள்ளவும். புதிய தத்துவமுண்டாகும். பிறகு செய்கை செய்யவும்.

குறிப்பு: சித்த தத்துவம் கெட்டியானதாலால் நமக்குப் பாஸ் முதலியன அவசியமில்லை. அப்போது 2 நிமிஷமே பிணியாளியின் பிணியை இல்லாமையாக்கப் போதுமாகின்றன. இதன் பின்பு நமது ஞானதிருஷ்டியால் எத்தனையோ மைல் தூரமுள்ள பிணியாளியின் பேரிலும் குணத்தை உண்டாக்கக் கூடுமாகின்றது.

பல வஸ்துக்களிலும் ஞானதிருஷ்டியாகிய தவஜ்ஜாவால் குணமுண்டாக்கும் விதம்:

இந்த (Animal magnetism) அனிமல் மேக்னட்டிஸமென்னும் ஒளியின் தத்துவக் குணமானது மற்ற வஸ்துவை விட மிகுதமாய் தண்ணீரில் சீக்கிரம் பாய்கின்றன. அதிக நேரம் வரையில் சேகரமாயிருக்கின்றன. இதனாலேயே தண்ணீரில் சுகமுண்டாக்கும் விதத்தைக் காட்டுகின்றோம்.

Note: எவ்விதமானக் குணத்தைத் தண்ணீரில் உண்டாக்கு கிறோமோ அதே குணம் அத்தத்தண்ணீரைக் குடிக்கிற வரைக்கும் உண்டாகும். உதாரணமாக பிணியாளிக்குச் சக்தி வரவேண்டு மென்று, சிந்தனை செய்து ஒளியைப் புகுத்தினால் அவனுக்குச் சக்தி வரும். அவ்வாறே வியர்வை யுண்டாக வேண்டு மென்று சிந்தித்தால் வியர்வை யுண்டாகும். தடைப் படுத்துவதற்காகத் தண்ணீரில் சக்தியல்லது வியர்வை வரக்கூடாதென்று ஒளியை சிந்தனையினால் புகுத்த வேண்டும். அப்பொழுது தடை பட்டுப் போகும்.

தண்ணீரில் ஒளியைச் செலுத்தும் வழி:

சுத்தமான தண்ணீரை ஒரு கிளாசில் ஊற்றித் தமது இடது உள்ளங்கையில் வைக்கவும். அக்கையின் விரல்களால் கிளாசின் சுற்றுப் புறங்களைப் பிடித்துக்கொள்ளவும். வலது கையை கிளாசின் வாயில் வைத்து 2, 3 நிமிஷம் தரிபடுத்தவும். அதாவது தமது உள்ளங்கையின் நடுமையம் கிளாசின் நடுமையத்தில் இருக்க வேண்டும். உள்ளங் கையிலிருந்து ஒளி வெளிப்பட்டு தண்ணீரில் புகுகின்றதென்று அல்லது புகவேண்டுமென்று சிந்தனை செய்யவும். சற்று நேரத்தில் உள்ளங்கையில் உஷ்ணம் தெரிய வரும். பின்பு கையை எடுத்துவிட்டுப் பார்வையால் ஒளியை நிரப்பவும். 1, 2

www.miskinsha.blogspot.com

நிமிஷம் பார்க்கவும் கருதப்படுகிற குணப்பாட்டை சிந்தனை செய்து கொண்டிருக்கவும். இந்தச் செய்கையை உள்ளங்கையினாலும், பார்வையினாலும், மாற்றி மாற்றி மூன்று தடவை செய்யவும். பின்பு கைவிரல்களைத் தண்ணீருக்குச் சமீபத்தில் அரை அங்குலம் அளவில் வைக்கவும், பின்பு மூச்சை ¼, ½ நிமிஷம் அடக்கி வைத்து தம் செய்து மெதுவாக வாயினால் தண்ணீரில் ஊதவும். ஆக இவ்வளவும் செய்ய 10 நிமிஷம் செலவு செய்வதில் குணபாடு உண்டாகும். இந்தத் தண்ணீரை பூமியின் பேரில் வைக்காவிடிலும், குடிப்பிக்காவிடிலும், அதாவது பூமியில் வைக்காமல் பிணியாளிக்கும் குடிப்பிக்காமல் பேணிப்பாக வைத்திருப்போமானால் அதில் 12 மணி நேரம் (பவர்) தரிப்பட்டிருக்கும். இத்தண்ணீரைக் குடிக்கும் எல்லா ஜலத்திலும் சேர்த்துக்கொள்ளலாம். அதிலேயும் இக்குணப்பாடே உண்டாகும். இத்தண்ணீரை நாட்டப்பிரகாரம் மாற்றம் செய்யலாம். தடவலாம், முகத்திலடிக்கலாம், பிணியுற்ற ஸ்தலத்தில் போடலாம். அவ்வாறே இத்தண்ணீரை எந்த பிளாஸ்திரியிலும் சேர்க்கிறதினால் காயத்திலும் தனது நற்குணத்தை உண்டாக்கிக் காயத்தை தன்றாக்கக் கூடுமாகின்றது.

தீனி வஸ்துக்களை மூச்சின் செய்கையல்லது மெஸ்மெரிஸம் செய்யும் வழி:

ஏலக்காய், மிட்டாய், ஆகாரம், பிளகு, உப்பு அல்லது எதில் பவர் செய்யத் தேவையோ அதை இருகைகளுக்கிடையில் அல்லது இடது கையில் எடுத்து கைக்குட்டையில் வைத்துப் பார்வை அப்பியாசத்தால் கூர்ந்து பார்க்கவும். சுவாச அப்பியாசத்தால் மூச்சடக்கி ஊதவும். இன்னும் சிந்தனையால் சிந்திக்கவும். இந்த செயலுக்கு 6, 7 நிமிஷம் போதும்.

Note: இந்த இடத்தில் நாம் உமக்கு அறிவிக்கிறது என்னவெனில்: நீவிர் பிணிகளை சௌக்யப் படுத்துவதன்றி பரிசுத்தமாக இருந்து, செய்யப்படுகிறவனால் ஒவ்வொரு வேலைகளையும் வாங்கக்கூடும் என்பதையும், அவனைக் கொண்டே பிரயோஜனம் உண்டாக்கிக் கொள்ளக்கூடும் என்பதையும், அவற்றில் சிலமாதிரிகளை உவமையாக உமக்குக் காட்டப்படுகிறது. நல்லபடியான செயல்களையும் காட்டுவது அவசியமாய் இருக்கின்றது.

பிரயோஜனமான செயல்கள்:

1. செயல்களின் நிலைமையினால் ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு வேலைகளையும், செய்யப் படுகிறவன் செய்யக்கூடுமாகிறான். அல்லது எந்த ஸ்தலத்தையும் செய்கிறவனுடைய உத்தரவின் பிரகாரம், செய்யப்படுகிறவன் தனது கண்ணால் பார்ப்பான்.

2. செய்கிறவன் இஷ்டப் பிரகாரம். செய்யப்படுகிறவனின் தேகம் அவயவங்களினால் செய்கிறவன் அவனை வேலை வாங்கக்கூடுமாகிறான்.

3. செய்யப்படுகிறவனை, எந்தப் பட்டணங்களுக்கும் அனுப்பி எந்தக் குளத்திலாவது, எந்தக் கடலிலாவது, குளிக்கும் படிச் செய்யலாம்.

4. செய்கிறவன் உத்தரவுப்படி செய்யப் படுகிறவன் எந்த வஸ்துவிலும் அல்லது எந்த ஜீவன் அல்லது விலங்கிலும், நேசம் அல்லது பகை வைத்தல் முதலிய குணங்களை வெளியாக்கலாம்.

5. செய்கிறவன் உத்தரவுப்படியே சொந்தமான எந்த மனிதன் அல்லது வஸ்துவுடைய பெயரையும் செய்யப்படுகிறவனின் வாயினால் வெளிப்படுத்தாதிருக்கச் செய்யலாம்.

6. செய்யப்படுகிறவன் உத்தரவுப்படி எந்த மனிதனிலும் நேசம் அல்லது பகை வைக்கச் செய்யலாம்.

7. செய்கிறவன் உத்தரவுப்படி அழகான அல்லது அவலட்சணமான மனிதர்கள் அல்லது வஸ்துக்களை அறிய விரும்பினால் அவைகள் அவன் உத்தரவுக்கு மாற்றமாக இருந்தாலும் சரி, அவன் கருதியபடி தெரிவிக்கலாம். அல்லது ஸ்திரீயைப் புருஷன் அல்லது புருஷனை ஸ்திரீ அறிய விரும்பினாலும் சரி உள்ளது உள்ளபடி சிந்தனையின் மூலமாக உண்மையை அறிவிக்கலாம்.

8. செய்கிறவன் செய்யப்படுகிறவனை தமது சப்தத்தையே கேட்க வசப்படுத்துகிறான். மற்றவர்களின் சப்தத்தைக் கேட்க மாட்டான். செய்கிறவனுடைய விருப்பப்படிக் கூச்சலையாவது, அமைதியையாவது, முறையிடுதலையாவது, நல்ல சுகந்த வாடையை துர்வாடையாகவாவது, துர்வாடையை சுகந்த வாடையாகவாவது, சிந்தனையின் மூலமாகக் காட்டலாம்.

9. செய்கையுடைய நேரத்தில் செய்கிறவனுத்தரவுப்படி செய்யப்படுகிறவன் தித்திப்பை கசப்பாகவாவது கசப்பை தித்திப்பாகவாவது, குளிர்ச்சியை உஷ்ணமாகவாவது, உஷ்ணத்தை

www.miskinsha.blogspot.com

குளிர்ச்சியாகவாவது காட்டுதல், அல்லது வியாதியை நன்றாய்ப் பற்றிப் பிடித்துக் கொள்கிற மருந்துகளால் வியாதியை விடவாவது, வியாதிகளை இலகுவாக்கிற மருந்துகளால் வியாதிகளை நன்றாய்ப் பற்றிப் பிடித்துக் கொள்ளவாவது செய்தல். உதாரணமாக மலத்தைக் கட்டுகிற மருந்துகளைக் கொடுத்து மிகுதமாய் மலத்தைப் போக்குதல் அல்லது அதற்கு மாற்றமாகச் செய்தல்.

10. செய்கிறவன் உத்தரவுப்படி பாரமான வஸ்துகளைத் தூக்க, லேசான வஸ்துக்களைத் தூக்காமலிருக்கச் செய்தல்.

11. செய்கிறவன் ஓரிடத்திலும், செய்யப்படுகிறவள் ஓரிடத்திலும் இருந்து கொண்டு செயல்களைச் செய்தல். அதன்படி செய்யப்படுகிறவன் நடத்தல், செய்கிறவள் செய்யப்படுகிறவளை அந்தரத்தில் நிறுத்துதல்.

12. முன் மரித்துப் போன ஆவிகளுடன் வினாவி, செய்யப் படுகிறவள் விடை வாங்குதல்.

13. செய்கிறவள் உத்தரவுப்படி ஏற்படுத்தப்பட்ட நேரத்தில் விழித்தல்.

14, செய்கிறவள் செய்யப்படுகிறவளின் யாதொரு உறுப்பைத் துண்டித்தால், வலி இல்லாதிருத்தல்.

15. நடந்தவைகளில் - சென்ற அல்லது கடந்து போன சமாச்சாரங்களை செய்யப்படுகிறவளிடம் விசாரித்தல்.

16. செயல்களின் நிலைமைக்குப் பின் ஞாபகிக்கவாவது, மறந்து விடவாவது உத்தரவு செய்தல்.

17. செய்கிறவனுடைய நாட்டப்படி செய்யப்படுகிறவனுடைய ஜடத்தின் எந்தப் பாகத்தையாவது வேலைக்கு உதவாமல் செய்தல். செயலுக்குப் பின்பு அந்த பாகத்தை இலகுவாக்கி விடுதல்.

18. செய்யப்படுகிறவளின் உதவியால் திருடனின் மனதை வசப்படுத்தி, திருட்டுப் போன சொத்தை வாபஸ் கொடுக்கச் செய்தல்.

19. பரிமாற்றம் செய்யப்பட்ட அல்லது உபயோகப்படுத்தப் பட்ட உடையின் உதவியால் செய்யப்படுகிறவன், அந்த உடைக்குச் சொந்தமான அன்னியன் நிலைமைகளை அறிந்து சொல்லுதல்.

20. செய்யப்படுகிறவன் புதைக்கப்பட்ட ஸ்தலத்துக்குச் சென்று, புதைக்கப்பட்ட பொருளின் நிலைமைகள் அடங்கலையும் காட்டக் கூடுமாகுதல்.

21. செய்கிறவனும் செய்யப்படுகிறவனும், ஒருவன் மற்றொரு வனுடைய இருதய நிலைமைகளை அறிந்து கொள்ளக் கூடுமாகிறான். அதாவது இருவரும் ஒரே ஆவிக்குரியவர்கள் ஆகிறார்கள்.

22. செய்யப் படுகிறவன் மூடப்பட்ட கடிதத்தைப் படிக்கக் கூடுமாகிறான். மறைவாய் இருக்கிற ரகசிய வஸ்துக்களை பெட்டி, முதலியவைகளில் உள்ளவைகளை பார்க்கக்கூடுமாகிறான்.

23. செய்யப்படுகிறவனுக்கு ஒவ்வொரு வஸ்துவிலிருந்தும் வெளிப்படுகிற ஒளியே, அவ்வஸ்துவின் மறைவைக் காட்டிக் கொடுக்கின்றது!

24 புதிய மனிதனின் நிலைமை முதலியவைகளைக் காட்டக் கூடுமாகிறான். எனினும் பெயர் சொல்லமாட்டான்.

25. ஆன்மலோகங்களில் சென்று மரித்துப் போனவர்களின் ஆவிகளுடன் சம்பாஷிக்கக்கூடுமாகிறான்.

26. மதுபானம் முதலிய துர்வழக்கங்களைக் கைவிட-செய்கை யுடைய நிலைமையில் செய்யப்படுகிறவனுடன் வாக்கு தத்தம் வாங்கி விட்டு விடச் செய்விக்கிறான்.

27. செய்யப்படுகிறவனை அவனுடைய ஜடத்தில் எந்த அவயவங்களையாவது, இரும்பு அல்லது சீசா அல்லது தடி முதலியன என்று எண்ணி வேலைக்கு உபயோகப் படுத்துவது போல் பாவனை காட்டச் செய்தல்.

28. (Magnetism) மேக்னட்டிஸமுடைய செயலில் இருக்கிற வர்கள் பயம், திகில் அற்றவர்களாகிறார்கள். இவர்களுக்குப் பேய் பிசாசுப் பிடியாது.

29. மனிதர்களுடைய தலையின் பல பாகத்தில் பலவித சுபாவங்கள் இருக்கின்றன. அச் சுபாவங்கள் எந்த தத்துவத்தை யாவது, நாட்டம் அல்லது செயல்களையாவது சம்மந்தப்பட்டவை களாயிருக்கின்றன. ஆகவே செய்கிறவன் அவைகளை அசைவுக்குக்

www.miskinsha.blogspot.com

கொண்டுவரக் கூடுமாகிறான். உதாரணமாக காப்பாற்றுதல், புத்தி, உணர்ச்சி, ஞானம், உணர்வின்மை, சேர்க்கை, நீண்ட வயது, கணக்கு, ஒழுங்கு, பொருத்தம், எச்சரிக்கை முதலியனவாம்.

30. செய்கிறவன் செய்யப்படுகிறவனுக்கு ஆன்மாவாகிய ரூஹானி வரப்போக இருக்கிற பாதையைக் காட்டி, செய்கிறவன் அன்றியே செய்யப்படுகிறவன், தன் பேரில் இவ்வித்தையின் செய்கையைச் செய்து கொள்ளச் செய்விக்கிறான். இன்னும் செய்யப்படுகிறவன், ஒவ்வொரு ஸ்தலங்களையும், பார்க்கக் கூடுமாகிறான். சமாதியோகம் செய்யக்கூடுமாகிறான். சிரத்தை (முயற்சி) வீணாகாதிருக்கும்படி இதைக் கெட்ட வேலைகளில் பரிமாறாமல், நல்ல வேலைகளிலேயே உபயோகப்படுத்தவேண்டும்.

செயலுடைய நஷ்டத்தைக் குறித்து கவனிக்கத்தக்கது:

1. செய்கிறவன் செய்கைக்குப் பின்பு வேதனையை முறையிட்டால் அதற்கு சொஸ்தம், இந்த வித்தையின் உதவியைக் கொண்டே செய்யவும்.

2 செயலைச் செய்யும் வேளையில் அல்லது கண்ணின் அப்பியாசத்தை அபிவிருத்திக்குக் கொண்டு வரும்போது, கண்களால் உற்று அல்லது கோபமாய்ப் பார்க்கக் கூடாது.

3. செயலைச் செய்யும் வேளையில் செய்யப்படுகிறவனுடைய கண்ணைப் பார்க்கக் கூடுமான (சதாரண) பார்வையே போதுமாகும். அப்படி இல்லையானால் பார்வையில் வித்தியாச முண்டாவதற்கு ஏதுவுண்டு. ஆதலால் பார்வை பேதப் படுவதற்குரிய அச்சம் உண்டாகின்றது.

4. எது வரையில் செய்யப்படுகிறவன் சரியான விடையளிக்க வில்லையோ அது வரையில் திரும்பத் திரும்ப அதே வினாவையே வினாவ வேண்டும். ஏனெனில் அவனுக்குத் தவறுதலின் பழக்கம் உண்டாகாதிருக்கவேயாம்! இல்லாவிடில் அடிக்கடி தப்பிதம் செய்யக்கூடும்!

5. அபிவிருத்தியின் அளவுப் பிரகாரம், வினாவை வினாவ வேண்டும். இல்லாவிடில் தவறான விடையளித்து செய்கிறவனை அவிசுவாசி யாக்கிவிடுவான். அதனால் அவநம்பிக்கைக்கு இடம் உண்டாகும்.

6. பிரேதங்களைப் புதைக்கப்பட்டிருக்கும் எந்த ஸ்தலத்துக்கும் அனுப்ப வேண்டாம். ஏனெனில் அங்கு அவன் பயப்பட்டு விடுவான். மரித்துப் போனவர்கள் ஆன்மாக்களிடத்திலும் அனுப்ப வேண்டாம். அங்கும் பயமுண்டாகும். இவ்விடங்களுக்குச் செய்கிறவன் சிறந்த அப்பியாசியாகி விட்ட பிறகே அனுப்ப வேண்டும்.

7. செய்யப்படுகிறவனுக்குப் பிழையான உத்தரவினால் துக்கம் உண்டாகாதிருக்கும்படி ஆராய்கிறதற்காக சற்று சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். இடைக்கிடை தொடர்ந்து வினாவை விடாது வினாவி விடைக்காக எதிர் பார்த்திருக்க வேண்டும். தாமதமாகில் அதே வினாவைத் திருப்ப வேண்டும்.

8. மரித்துப் போன ஆன்மாக்கள் சில வேளைகளில் பயப்படுத்தி விடுவதினால் இடுகாடு, சுடுகாடுகளுக்கு அனுப்பக்கூடாது. பூரண குருதிக்குப் பின்பு, அனுப்புவதில் (தடை) விலக்கு இல்லை.

9. சில வேளைகளில் செய்யப்படுகிறவன் ஆன்மலோகத்துக்குப் போய் வர ஒப்புக்கொள்ளாதவனாக மறுதலிப்பதினால் தமது உத்தரவன்றியே எங்கும் போவதில்லை என்னும் உறுதியை ஸ்திரமாய் அவனிடத்தில் வாங்கிக் கொண்டு, அவனுக்குப் போகும் சக்தியை அளித்துக் கட்டளை யிடவும். அன்றி நம்முடைய உத்தரவின்றி எங்கும் போகக் கூடாதென சமாளிப்பாக, மறுதலிப்பை மாற்றிக் கொண்டு கட்டளையிட வேண்டும்.

10. செய்யப்படுகிறவனை திகில் நிறைந்த எந்த ஸ்தலத்துக்காவது அனுப்புவோமானால், அவன் பயப்படாதிருக்கும்படி அவனைச் சுற்றிப் பிரகாசத்தினுடைய சக்கரத்தை செய்து விடவும். அதாவது சிந்தனையினால் பிரகாசம், அவனைச் சுற்றிலும் இருக்கிறதாகச் செய்துவிட வேண்டும்.

11. பிரகாசத்தின் சக்கரத்தை முதலில் செய்யவில்லையானால், அவனை ஆன்மாக்கள் பிடித்துக் கொள்ளாதபடி அவனைச் சுற்றிலும் பிரகாசத்தினுடைய சக்கரத்தைப் பின்னாலாவது உண்டாக்கி அனுப்பவேண்டும்.

12. செய்யப்படுகிறவனுக்கும், ஆன்மாக்களுக்கும் இடையில் சண்டையுண்டாகுமேயானால் செய்யப்படுகிறவனுக்குப் பிரகாசத்தினுடைய வாளைக் கொடுத்து, ஜெயிக்கதைரியத்தையும்,

www.miskinsha.blogspot.com

ஊக்கத்தையும் கொடுக்கவும். இன்னும் சண்டை செய்யத் திறனற்றவளானால் தூக்கிவிட உத்தரவளிக்கவும் அல்லது திரும்பிவிடக் கட்டளையிடவும்.

13. குளம் அல்லது கிணற்றில் விழுந்து விடுவாளாகில் சித்தனையின் உதவியால் அவளிடத்திற்கு ஓடம் அல்லது கயிறு அனுப்பி அதைப் பற்றிப் பிடித்தேறத் தகுதியையும் கொடுத்து வெளிப் படுத்தவும்.

14 காயம் அல்லது அடியை முறையிட்டாளாகில் அவள் பேரில் சித்தனையின் பிளாஸ்திரி போடவும்.

15 ஏதேனும் கஷ்டம் முன்னில் வந்தால் ஆண்டவனிடம் உதவி தேடவும். ஞானதிருஷ்டியை நிலையாய் வைக்கவும். நாட்டப் பிரகாரம் விரல்களால் சைகை செய்து வேலை வாங்கவும்.

16. சில வேளை செய்யப்படுகிறவள் தன்னில் பிணியுண்டாயிருக்கிறதைப் பார்த்துப் பயப்படுவாள். அப்பொழுது அவளிடத்திலேயே அதற்குரியவைகளை விசாரித்து சொஸ்தமாக்கவும். அல்லது சித்தனையின் உதவியால் பிணியை அப்புறப் படுத்தவும்.

செய்யப்படுகிறவனைச் சுற்றிலும் பிரகாசத்தை உண்டாக்கும் வழி:

ஒரே எண்ணமாய் இருதயத்தை ஒன்று படுத்தி, செய்யப் படுகிறவனுடைய தலையை நடுமையமாய் ஏற்படுத்திக் கொண்டு, அதைச் சுற்றிப் பாசின் உதவியாலும், சித்தனையின் உதவியாலும் ஒளியின் பிரகாசத்தை உண்டாக்கவும். எந்த ஆன்மா அல்லது வஸ்தாவது அதற்குள் புருந்து வருத்தத்தை உண்டாக்கக்கூடாது என்று சித்தனை செய்யவேண்டும். இவ்வொளி சூரியன் ஒளியை விடப் பிரகாசமானது! இன்னும் தடிப்பற்றது. இதை பிணியாளியாவது, செய்யப்படுகிறவளாவது சகிக்க முடியாமல் முறையிடுவார்களானால் அதைப் பாஸ்களின் உதவியால் தடுத்துக் கொள்ளவும்.

மெஸ்மெரிஸம் செய்வதற்குரிய விதி:

Note: செய்யப்படுகிறவனை நன்றாய்ப் பரீட்சித்து, அவன் பேரில் செயலை ஆரம்பிக்கவும். ஸ்தலம் சுத்தமாகவும், இடையில் அதிகப் பிரகாசமில்லாமலும், மாமூலான காற்றுப் போக்குவரவில்லாமலும், எவ்விதக் கூச்சலில்லாமலும், இருவரும் சாப்பிட்ட

ஆகாரம் ஜீரணமாகியும் இருக்கவும். மற்றவர்கள் ஒருவரும் இருக்கக் கூடாது. பிணியாளியின் உடை நல்லதாகவும், இருவரும் பரிமள வாடை (அத்தர்) அணிந்திருக்க வேண்டும். செய்தலுக்கும் செய்யப் படுதலுக்கும்-இருவரும் பொருத்தமாகவும், இருவருக்கும் சூரியகலை (வலது நாசி துவார மூச்சு) ஓடிக்கொண்டும் இருக்கவேண்டும். அன்றி இருவரும் கைகால் கழுவி அல்லது குளித்துச் செயலைச் செய்ய உட்காரவேண்டும். பொதுவாய் பரிசுத்தமான எண்ணத்தைக் கொண்டு செய்யவேண்டும். ஒருவருக்கும் வஞ்சகம் இருக்கக் கூடாது. ஒருவருக்கொருவர் நேசமாய் இருக்க வேண்டும்.

தவஜ்ஜாவாகிய ஞானதிருஷ்டி செய்யும் முதல் வழி:

முத்தினை வகை செய்யப்படுகிறவன் தனது முதுகுப்புறம் வடபுறமாகவும், முகப்புறம் தென்புறமாகவும் உட்காரவும். செய்பவன் எதிராய் சற்று உயரமான இருப்பில் உட்காரவும் அவனின் வலது கைப் பெருவிரலைத் தமது இடதுகைப் பெருவிரலும், அவனின் இடது கைப் பெருவிரலைத் தமது வலது கைப் பெருவிரலிலும் இருவர் விரலின் உட்புறப் பக்கங்கள் ஒன்றுக்கொன்று சேர்த்தும் வைக்கவும். இருவருடைய பெருவிரல் பின்புறம் தங்கள் ஜடலப் பக்கமாய் இருக்கவும். தமது இருகை ஆள்காட்டி விரல் உட்புறங்கள் அவனின் பெருவிரல்களின் பின் புறத்தில் அடியிலிருக்கவும். தமது மீதி விரல்கள் அவனின் உள்ளங்கைப் பக்கமாய் அல்லது அவனின் உள்ளங்கையிலிருக்கவும். இப்பொழுது தாம் சித்தனையை ஒன்மைப் படுத்திப் பார்வை விதிப்பிரகாரம் பார்த்து, கண்ணின் உதவியால் அவனின் மூளையில் ஒளியைச் சேரமாக்குகிறேன் என்றும், பெருவிரலின் உதவியால் ஒளி சுற்றுதலாகிக் கொண்டிருக்கிற தெனவும், அதாவது தமது வலதுகைப் பெருவிரலிலிருந்து, ஒளி வெளிப்பட்டு அவனுடைய பெருவிரலில் புருந்து மணிக்கட்டு விலாப்புறங்களின்வழியாய்ச் சென்று, அவனின் வலது விலாப்புறம் மணிக்கட்டுப் பெருவிரல் இலைகளின் வழியாய் செய்கிறவனில் புகுந்து, ஜடலத்தில் திரும்பி வருகிறதெனவும், அதன் குணம் அவன் பேரில் காந்தத் தூக்கம் ஆகிக்கொண்டிருக்கிற தெனவும், இருவரும் ஒரே எண்ணத்தில் இருக்கிறோம் எனவும் ஆகிய இலைகளை சித்தனை செய்யவும். அவனும் ஒரே நினைவாய் ஒளியைப் பெற்றுக்கொள்ளவும் காந்தத் தூக்கத்தில் இருக்கவும், தயாராயிருப்பதாக விரும்பவும். அவன் தனக்குக் குணமுண்டாள பொழுது, நிரேகத்தைத் தளர்த்திவிடவும். கண்மூடக் கூடுமானால் கண்ணை மூடிக்கொள்ளச் சொல்லவும். விசேஷமாய்த்தானே கண்ணை மூடிக்கொள்ள அவன் விரும்ப வேண்டும்.

www.miskinsha.blogspot.com

சற்று நேரத்துக்குப் பின், தாம் அவளின் முகத்தில் அதாவது தமது வலதுகைப் பெருவிரலினால் அவளின் இடது கண்ணிலிருந்து, ஓரங்குல உயரமாகவும், மற்றும் விரல்கள் புருவத்தின் பேரிலும், அவ்வாறே இடதுகைப் பெருவிரலை அவளின் வலது கண்ணிலிருந்து ஓரங்குல உயரமாகவும் மற்றும் விரல்கள் புருவத்தின் பேரிலும் வைத்து, அவள் பேரில் காந்தத் தூக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறேனென்றும், ஒளியினால் அவளைப் பிரகாசிக்கச் செய்கிறேனென்றும் சிந்தனை செய்யவும்.

ஆக அவள் சுவாசம் சிக்கிரம் சிக்கிரம் வாங்கித் தூங்கிவிட்டா னென்றும் அறியப்பட்ட பொழுது, கைகளை எடுத்து விட்டு முகத்தில் (Pass) பாஸ் செய்ய ஆரம்பிக்கவும். 10, 15 பாஸுக்குப் பின் அவளைப் படுக்கப் போடவும். அதற்குப் பிறகு பாஸ் செய்யவும். சில வேளை தெஞ்சுக்குச் சரியாயும், சில வேளை விலாவுக்குச் சரியாயும் செய்து கொண்டிருக்கவும். எதற்கும் எச்சரிக்கையாவது கைகளைக் கீழிருந்து மேல் பாரிசம் பாசுக்காக கொண்டு போதும் பொழுது, கை விரல்களை மடக்கி வைத்துக் கொண்டு கொஞ்ச தூரத்தில் அவள் விலாவுக்குச் சரியாக கைகளை யிழுத்துக்கொண்டு, அதாவது கையைப் பின் வாங்கிக் கொண்டு காற்றுக்கூட அவள் தேகத்தில் படாமல், இன்னும் தலைகீழாள பாஸ் ஆகிவிடாமல் கைகளைக் கொண்டு வந்து மறுபடியும் மேலிருந்து பாஸ் செய்யவும், இந்நிலைமையில் பிணியாளி தூக்கத்தில் விழித்திருத்தல் என்னும் நிலைமையில் நின்றும் சென்று சுத்தமான தூக்கத்தில் மட்டுமே ஆவான். அல்லது மேல் விவரிக்கப்பட்ட மூன்றாவது நிலைமையாகிய ஆழ்ந்த தூக்கத்தில் சென்று விடுவான். நன்றாய்த் தூங்கிவிட்ட பொழுது மிகவும் மெதுவாய் அவளை அழைக்கவும். நன்றாய்த் தூங்குகிறதினால் பேசாதிருந்தானாகில், அவனுடைய விரல்களைத் தமது வாயில் வைத்து அழைக்கவும். அப்போதும் பேசவில்லையானால் அவனுடைய காதில் தமது உள்ளங்கையை வைத்து ஒளியைச் செலுத்தி அழைக்கவும். அப்படியும் பேசவில்லையானால் படத்தில் விவரிக்கப்பட்டிருக்கிற பேச்சினுணர்வுடைய ஸ்தலத்தில் ஒளியைப் புகுத்தவும். இப்படிச் செய்வதில் உடனே விடையளிப்பான்.

அப்பொழுது அவளை நீ எங்கிருக்கிறாய்? என்று வினாவவும். விடையாக அவன் தான் இருக்கும் ஸ்தலத்தைச் சொல்வானாகில் நலமே! மற்றபடி வேறு ஸ்தலத்தைச் சொல்வானாகில், அவ்விட மிருந்து தாம் இருக்கும் ஸ்தலத்துக்கு வா வென்று அழைக்கவும்.

வந்து தனது ஸ்தலத்தை விவரித்தானேயானால் உனக்குத் தெரிகிற ஒளியானது என்ன நிறமாக இருக்கிறது? என்று விசாரிக்கவும் அதற்கவன் பஞ்சபூதக் கிருத்தியங்களில் சம்மந்தப் பட்டுப் பிரயோஜனம் அற்ற நிறங்களை விடையாக அளிப்பானேயானால் (Animal-Magnetism) அனிமல் மேக்னடிஸமுடைய அசல் நிறமாகிய நிலவருணமான வெண்ணிறத்தைச் சிந்தனை செய்து அவ்வொளி உன் மூளையிலிருந்து வெளிப்பட்டு உன் கண்ணின் பக்கமாக வருகிறதென்று சொல்லி, அவனை உறுதிக் கொள்ளும் படிச் சொல்லவும். இவ்வொளியின் நிலைமையில் அவன் வேலை செய்யத் தகுதி உடையவன் ஆவான். அவன் இவ்வொளியை விவரித்த பொழுது இருதயம் பிரகாசத்தின் நிலைமைக்கு வந்து ஒவ்வொரு வினாக்களுக்கும் விடையளிக்கத் தகுதியுடையவனாவான்.

Note: பஞ்சபூதக் கிருத்தியங்களாவன: ஆகாயத்தின் ஒளியின் நிலைமையில் அவன் கறுப்பு நிறத்தையும், வாயுவின் ஒளியின் நிலைமையில் பச்சை நிறத்தையும், தேயுவின் ஒளியின் நிலைமையில் சிகப்பு நிறத்தையும், பிருதிவியின் ஒளியின் நிலைமையில் மஞ்சள் நிறத்தையும், அப்புவின் ஒளியின் நிலைமையில் வெள்ளை நிறத்தையும் கண்டு சொல்வான். இந்த ஒளிகளால் அவன் வேலைக்குத் தகுதியாக மாட்டான். நீலநிறமான வெள்ளை ஒளியில் அவன் ஒவ்வொரு வேலையும் செய்யத் தகுதியுள்ளவனாவான்! இதில் தான் இருதயப் பிரகாச நிலைமைகள் உண்டாகின்றது. இப்பிரகாசத்தின் நிலைமைகள் செய்கிறவன் செய்யப் படுகிறவனின் அப்பியாச அபிவிருத்திக்குத் தக்கதாய் உண்டாகின்றன. இது 6-வது பதவி. இதில் கேள்விகள் கேட்கவும், பதில் அளிக்கவும் கூடும். இந்நிலைமைக்கு வந்த பொழுது செயலை முன் போல் ஜாரியாக நடத்தாமல் அந்நிலைமை அவனை விட்டு நீங்காமல் இருப்பதற்கு சற்றுக்குச் சற்றுப் பிரகாசம் கம்மியாகும் போது, பாஸ் மட்டும் செய்து வரவும். காந்தம் அளவுக்கு மிஞ்சி அவன் ஆழ்ந்த தூக்கத்திலாக இருந்துண்டாகி விட்டால் அதைத் தலைகீழாள பாஸ்களினால் குறைத்துக் கொள்ளவும். காந்தத்தின் குறைவினால் அவன் துரிய நிலைமைக்குப் போகாமல், அவன் இந்திரியங்கள் நமக்கு வசப்படாமல் இருக்கும் போது இருக்கிற பஞ்சபூத கிருத்தியங்களான இருளை, சாதாரணப் பாஸ்களினால் காந்தத்தை நிறைத்து நிக்கவும். இந்நிலைமைகளில் அவன் பயப்படவாவது, திகிலடைந்து அலறவாவது, வேறு பயங்காமான அடையாளத்தைக் காட்டவாவது, செய்வானாகில் தாம் அறவே பயப்பட வேண்டாம். உனது பயத்தையும் திகிலையும் அப்புறப் படுத்துகிறேன் என்று அவனுக்கு உறுதி கூறவும்.

www.miskinsha.blogspot.com

வினாக்களின் விதி 1-வது வகை:

நீலநிறமான வெண்மையின் பிரகாச ஒளியை அவன் பார்த்த பொழுது, முதல் முதல் சிறு வினாக்களை வினாவவும். உதாரணமாக அவனை யடுத்து சூழ்ந்திருக்கும் வஸ்துக்களை விசாரிக்கவும். பின்பு அவ்விட்டிலிருக்கும் வஸ்துக்களை விசாரிக்கவும். விசாரித்ததின் உண்மைக்காக, அவ்வஸ்துக்களை இடம் மாற்றி வைத்து வினாவி உண்மையை விளங்கவும். மெள்ள மெள்ள அடுத்த அறையில் உள்ளவைகளைக் குறித்தும், பின்பு 2, 3 அறை தூரத்தில் உள்ளவைகளைக் குறித்தும், பின்பு தகுதி தகுதியாய்த் தூரமான ஸ்தலங்களில் உள்ளவைகளைக் குறித்தும், பின்பு தூரமான நகர்களில் உள்ளவைகளைக் குறித்தும், பின்பு விகற்பமான காலங்களைக் குறித்தும், அவனை வினாவி வரவும். ஆரம்பத்தில் பிழையான உத்தரம் கொடுப்பானேயானாலும் நாம் இதில் அற்ப விசுவாசியாகா திருத்தல் வேண்டும். ஏனெனில் மேக்னடிஸமுடைய ஒளி எங்கெங்கு செல்லுகிறதோ அங்கெல்லாம் அவன் பூரணமாகவும், சரியாகவும் விடையளிக்க வல்லவனாகிறான். ஆனதால் ஒளி செல்லாத இடங்களுக்கு சிந்தனையின் மூலமாக ஒளியை அனுப்பவும். Note: அன்றி ஒளியின் பிரகாசம் மங்கலாய் சுத்தமில்லாதிருந்தால் சிந்தனையின் மூலமாய் அதன் பிரகாசத்தைத் தெளிவாக சுத்தப் படுத்தி விடவும். பின்பு பிரகாசம்–உனது மூளையிலிருந்து பரிபூரணமானதாய் உனது கண்களின் பக்கம் வந்துகொண்டிருக்கிறது–என்று அவனுக்கு உறுதி மொழி கூறவும். உத்தரம் கொடுக்காத விஷயத்தில் எதிர்பார்த்திருந்து மறுபடியும் அதே வினாவை வினாவவும். துரிதப்படாமல் புத்தியில் படும்படி இடம் (அவகாசம்) கொடுக்கவும். மற்றபடி வெகு நேரம் வரையில் சம்பாஷிக்காமல் இருக்க வேண்டாம். உதாரணமாக ஒரு புத்தகம் இந்த அறையில் இருக்கிறது அதை வாசியென்று, நாம் அவனை வினாவினதாக வைத்துக் கொள்வோம். அதற்குப் பிரதி உத்தரம் பிழையாகக் கொடுத்தானாகில், திரும்ப அவ்வினாவையே வினாவி அவன் தனது உத்தரத்தைச் சரியாய்ச் சொல்லுமளவும் எதிர் பார்த்து வினாவிக்கொண்டே இருக்கவும். அவன் நிரேகத்தையும் பார்க்கும்படிச் சொல்லி ஏதேனும் வியாதி இருக்கிறதா? என விசாரிக்கவும். அப்படி வியாதி யிருந்தால் அதற்குரிய அவிழ்தங்களை, அவனிடத்திலேயே விசாரித்து சொஸ்தம் செய்துக் கொள்ளவும், இந்நிலைமையிலும் அவன் நிகால விஷயங்களைக் குறித்து தெரிவிப்பான். பிணிகளை சொஸ்தமாக்குவான்! புதைக்கப் பட்டவைகளை, இன்னும் திருட்டுப் போனவைகளைக் காட்டுவான். மறைவான வஸ்துக்களைக் கொண்டு வந்து கொடுப்பான். ஆன்ம

லோகத்திற்குச் சென்று ஆன்மாக்களுடன் சந்தித்துப் பேசுவான். ஆரம்பத்தில் கஷ்டமான வினாக்களை வினாவல் நியாயமான பிரகாரம் அவனை வேலை வாங்கவும். அவனை நிர்ப்பந்திக்க வேண்டாம். செயலுடைய நிலைமையைக் கொண்டு அவனிடத்தில் நமது உத்தரவின்றியே அவன் எங்கேயாவது செல்லாமல் உத்தரவு பிரகாரமே செல்லவும், யாதொரு காரியத்தைச் செய்யவும் உறுதி மொழி வாங்கவேண்டும். நமது கட்டளைப்படி நடக்கும்படி வாக்கு வாங்கிக் கொண்டு, நீ இன்ன காரியத்தை செய்யக் கூடுமா? வென வினாவவும். ஓமென்றால் செய்து முடிப்பான். இல்லாவிடில். "இதோ உனக்கு அதைச் செய்யும் தத்துவத்தை அளிக்கப்படுகிறது நீ செய்து முடிப்பாய்" எனச் சொல்லி மனதிலும் உன்னி, அதிக வலுவாக நாடவும். அப்போது செய்து முடிக்கக் கூடுமானான். இதில் நமது கட்டளையை மீறி அவன் யாதொன்றும் செய்யக் கூடாதவனாக செம்மையாய் வசப்பட்டிருப்பது அவசியம்.

2-வது வகை:

அவனின் தலையை–வடபுறமாகவும், காலை–தென்புறமாகவும் இருக்கும்படி படுக்க வைத்து சின்னபாஸ் மூலமாய்க் கண்களில் பாஸ் செய்து, காந்தத் தூக்கத்துக்குக் கொண்டு போகிறேன் என்று சிந்தனை செய்யவும். அவன் தூங்கிய பொழுது காந்தப் பிரகாசத்தை சிந்தனை செய்து, பிரகாசத்தை ஏற்றுக்கொண்ட பொழுது முன்போல் வினாக்களை வினாவ ஆரம்பித்து வேலை வாங்கவும்.

3-வது வகை:

அவனை முன்போல் படுக்க வைத்து நெஞ்சு வரையில் பாஸ் செய்யவும். காந்த தூக்கத்துக்குக் கொண்டு போகிறேன் என்று முன்போல் சிந்தனை செய்து, தூங்கிய பொழுது பிரகாசத்தைக் கொடுக்கவும். பிரகாசத்தை ஏற்றுக்கொண்ட பொழுது முன்போல் முந்தின சட்டப் பிரகாரம் கேள்விகளைக் கேட்டு வேலை வாங்கவும்.

4-வது வகை:

முந்தின இருப்பைப் போல் உட்கார வைத்து செய்கிறவன் தமது வலது கைப் பெருவிரலை அவனின் இடது உள்ளங்கையின் மத்தியிலும், மற்றும் விரல்களைப் புறங்கையிலும் அவ்வாறே தமது இடதுகைப் பெருவிரலை அவனின் வலது உள்ளங்கையின்

www.miskinsha.blogspot.com

மத்தியிலும், மற்றும் விரல்களைப் புறங்கையிலும் வைத்துக் கொண்டு, இருவரும் ஒருவரையொருவர் எதிராகக் கண்சிமிட்டாமல் பார்க்கவேண்டும். கண் பாரமாகும் பொழுது கண்ணை மூடிக் கொள்ளச் சொல்லவும். அவன் தன்பேரில் செயலின் குணமுண்டாக வேண்டுமெனவும் விரும்பவும். அவள் சற்று வேகமாய் சுவாசிக்கவே புருவ மத்தியாகிய இருதயஸ்தலத்தைப் பார்க்கவும். வலது கையை அவளது தலையின் பேரிலும், இடது கையை முன் வைத்திருந்தது போலும் வைத்துக் கொள்ளவும். என்கிலும் அப்பொழுதும் புருவ மத்தியிலேயே பார்வையை வைத்துக் கொள்ளவும். சற்று நேரத்துக்குப் பின்பு அவன் தலையின்மீது இரு கையையும் வைத்து, அவளின் மூளையில் பிரகாசத்தை அதிகப் படுத்திக் காந்தத் தூக்கத்திற்குக் கொண்டு போகிறதாய் சிந்தனை செய்யவும். சற்று நேரத்துக்குப்பின் அவளின் முகத்தில் 10, 15 சின்னபாஸ் செய்து பின்பு (Long Pass) பெரிய பாஸினால் திரேகம் அடங்கலிலும், ஒளியை வியாபிக்கச் செய்யவும். இப்பொழுது அவள் காந்தத தூக்கத்திற்கு சென்று விடுவாள். முன்போல் சற்று நேரம் சுற்றுப் பாஸ் செய்துக் கொண்டு வினாவி வேலை வாங்கவும்.

5-வது வகை:

அவளை வடபுறமுதுகும், தென்புற முகமுமாய் நாற்காலியில் உட்கார வைத்து, தாம் அவனுக் கெதிராய் சற்று உயரமான வேறு நாற்காலி அல்லது பீடத்தில் உட்கார்ந்து, சிந்தையை ஒன்றுபடுத்தி அவளின் கண்களை இமையடிக்காமல் கூர்ந்த பார்வையாய்ப் பார்க்கவும். தமது கைகளின் விரல்களை அவளின் திரேகத்தின் மேல் வைக்கவும். அதற்காக கைகளை வைத்துக் கொள்ள ஆதரவான விளம்புறச் சட்டங்களுள்ள நாற்காலி அவசியம். பின்பும் காந்தத் தூக்கத்திற்குக் கொண்டு போவதாய் சிந்தனை செய்யவும். அவள் கண்கள் தூங்க ஆரம்பிக்கும் பொழுது தூங்கச் செய்யவும். பிறகு முகத்தில் வட்டப் பாஸ் அல்லது வளைந்த பாஸ் செய்யவும். அப்படிச் செய்யும் பொழுது அவள் கண்களின் ரெப்பைகள் மூடிக் கொண்டு, இன்னும் தமது கைகள் சுற்றிக் கொண்டு வரும்பொழுது, அவளில் உண்டான அசைவு நின்ற பொழுதே காந்தத் தூக்கத்திற்கு சென்று விட்டதாக அறியவும். பின்பு சின்னப்பாஸ் முதலியன செய்து திரேகம் அடங்கலிலும் ஒளியைப் பரவவிட்டு முன் போல் வினாக்களை வினாவிக் கொள்ளவும்.

6-வது வகை:

முன் சொன்னபடி அவளை நாற்காலியில் உட்கார வைத்து தாம் அவளின் பின்புறம் நின்றுகொண்டு அவளின் கண்பட்டை

(பொட்டின்) பேரில் இருகைகளையும் வைத்து, அதாவது விரல்கள் கண்ணையும் மூடி நெற்றியிலும் இருக்கவேண்டும். உச்சியின் பேரில் கூர்மையான பார்வையாய்ப் பார்த்துக் கையாலும், பார்வையாலும், அவளின் மூளையில் ஒளியைச் சேகரம் செய்து தூங்க வைக்கிறேன் என்று சிந்தனை செய்யவும். அவள் காந்த உறக்கத்துக்குச் சென்ற பொழுது பிரகாசத்தைக் கொடுத்து முன்போல் செய்து கொள்ளவும்.

7-வது வகை:

முன்போல் நாற்காலி இல்லாமல் கீழே உட்கார வைத்து அவள் கால்களை இருபுறமும் நீட்டி வைத்து, அவளின் இருகால் முட்டுக்கும் இடையில் தலையணையின்மேல் உட்கார்ந்துகொண்டு, அவளுடைய இருகைப் பெருவிரலையும் பிடித்து முன்போல் பார்க்கவும். தூங்கிய பொழுது சின்னப்பாஸ் செய்யவும். காந்த உறக்கத்துக்குச் சென்ற பொழுது பிரகாசத்தைக் கொடுத்து, முன் போல் செய்து கொள்ளவும்.

8-வது வகை:

முன்போல் உட்கார வைத்து ஏதாவது ஒரு பிரகாசமுள்ள வஸ்துவைப் பார்க்க வைத்து தாம் அவளுக்குப் பின்னால் இருந்து உச்சியைப் பார்த்து சிந்தனை செய்து, காந்த உறக்கம் வந்தவுடன் பிரகாசத்தைக் கொடுத்து முன்போல் செய்யவும்.

இதைத்தான் ஹிப்னாட்டிஸமென்று சொல்லப்படுகிறது. செய்கிறவன் இல்லாமல் செய்யப்படுகிறவன் தானே ஒரு வஸ்துவை நோட்டமிட்டு இந்நிலைமைகளை உண்டாக்கி கொள்ளலாம். ஆகையால் இதை ஆட்டோ மெஸ்மெரிஸமென்றும் சொல்வார்கள். அஞ்சனம் போன்றவை இதைச் சேர்ந்ததுதான்! இன்னும் இதை எலக்ட்ரோ பாலோஜி அல்லது எலக்ட்ரிகல் ஸைக்கொலாஜி என்று சொல்கிறதும் உண்டு. ஆனால் பார்க்கிற வஸ்து அதிகக் கறுப்பாகவும், பளபளப்பாகவும் இருக்க வேண்டும். அல்லது பளிங்குத் துண்டுபோல் அதிக பிரகாசம் உள்ளவைகளாக இருக்க வேண்டும். அல்லது மையும் பிரயோகிக்கலாம். இவ்வாறாக நாம் ஒரு வஸ்துவைக் கூர்மையாக நோட்டமிடும் போது, நமது சித்த வலுவினாலும், ஆகாயத்தினாலும் நம்மைச் சுற்றிலும் இருக்கிற வஸ்துக்களினாலும் மெஸ்மெரிஸம் செய்யப்படுகிறோம். இயற்கையாக ஒவ்வொரு வஸ்துவும் நம் மீது காந்தச் சத்தைச் செலுத்துகின்றது. நமது சித்த வலுவினால் இரத்த ஓட்டம் தடைபட்டு

www.miskinsha.blogspot.com

இந்திரிய நரம்புகளின் உணர்வற்றுப் போனவுடன், மற்றவை நம் மீது தன் (பவரை)சக்தியைப் பூரணமாகப் போடுகின்றது. தலை மூளையிலும், நுரையீரலிலும் மேற்படி சத்து நிறைந்துவிடுகின்றது. தன்னிஷ்டமாகிய மனதின் ஊசாட்டத்தினாலும், இரத்த ஓட்டத்தினாலும், இந்திரிய நரம்புகளின் கூர்மையாலும் அது வெளிப்பட்டு விழிப்புண்டாகின்றது. இதில் கண் திறந்திருப்பதால் மேலான பதவிகள் உண்டாக காரணமில்லை. ஆதலால் உடனே விழித்துக் கொள்ளச் சக்தியுண்டாகின்றது. மேலான பதவிகளுக்குக் கண்மூடியிருப்பது அவசியம். இதில்தானே விழித்துக் கொள்ளவும் ஏலாது.

9-வது வகை:

முன்போல் உட்கார வைத்து ஒருவரை யொருவர் எதிர் பார்வையாய்ப் பார்க்க ஆரம்பிக்கவும். தேர்ந்த அப்பியாசிகளுக்கு சின்னப்பாஸ் மற்றும் சிகிட்சைகள் யாதொன்றும் அனுசரிக்க வேண்டியதில்லை. சிந்தையை ஒருமைப் படுத்தலும், கண்ணால் கூர்மையாகப் பார்த்தலுமே போதுமானது. அவனின் தலை மூளையில் ஒளியைச் சேகரித்து, காந்த உறக்கத்துக்குக் கொண்டு போகிறேன் என்று வழக்கம்போல் சிந்தனை செய்து, காந்த உறக்கம் வந்தவுடன் பிரகாசத்தை கொடுத்து முன்போல் செய்யவும்.

10-வது வகை:

முன்போல் எதிரே உட்கார்ந்து தமது கையில் அவனின் கால் பெரு விரல்களைப் பிடித்துக்கொண்டு, பார்வை விதிப்பிரகாரம் தாம் அவன் கண்களைப் பார்க்கவும். தூக்கம் வந்தவுடன் முன்போல் செய்யவும். என்கிலும் முந்தியே அவனுக்குத் தாம் கொடுத்த பிரகாசம் நன்றாய் வேலைகள் செய்யப் போதுமானதாக இருக்கிறதா? என்று அவனை விசாரித்து தெரிந்துக்கொள்ளவும்.

11-வது வகை:

முன்போல் உட்கார வைத்து கிறிஸ்டலை அவனுக்கு மத்தியில் தொங்கவிட்டு அவனை அதை பார்க்கச் சொல்லவும். இவ்விடம் இருந்தால் அவனின் பெருவிரலை தாம் பிடித்துக் கொண்டு, அவனைப் பார்த்து காந்த உறக்கத்திற்குக் கொண்டு போவதாய் சிந்தனை செய்யவும். தூங்கின பொழுது பிரகாசத்தைக் கொடுத்து முன்போல் செய்யவும். வேலைக்கு ஆரம்பிக்கும் பொழுதே

எப்பொழுதும் கிறிஸ்டலைக் காந்த ஒளியினால் நிரப்பி வைத்தே வேலைக்கு உபயோகப் படுத்தவும். அன்றி கோழி முட்டை போல் சங்குவினால் செய்யப்பட்ட வஸ்துக்கு (Magic crystal) மேஜிக் கிறிஸ்டல் என்று சொல்லப்படும். இதையாவது காந்தத்தையாவது அவனுக்கெதிரே பிடித்துக் கொண்டு முன்போல் உட்கார வைத்து, அவன் கண்களைக் கூர்ந்து பார்க்கவும். அவனை காந்தத்தை அல்லது கிறிஸ்டலைப் பார்க்கச் சொல்லவும். காந்தத் தூக்கம் வந்த உடன் பிரகாசத்தைக் கொடுத்து வேலை வாங்கிக் கொள்ளவும். இப்படிச் செய்வதினால் காந்தமும் கிறிஸ்டலும் அவன் மீது பிரகாசத்தைப் போடுகின்றது.

12-வது வகை:

முன்போல் அவன் உட்கார்ந்து காலை நிட்டிக் கொள்ளவும். தாம் அவனின் விலாப் புறமாய்ச் சமீபித்து உட்கார்ந்து அவனைக் கிறிஸ்டலைப் பார்க்கச் சொல்லவும். அவனது கண்களையும், (கண்ணாம் பட்டை) பொட்டுகளையும் தாம் பார்க்கவும். வழமை போல் காந்த உறக்கத்திற்குக் கொண்டு போவதாய் சிந்தனை செய்து அவ்வாறே தூங்கிய பொழுது பிரகாசத்தைக் கொடுத்து முன்போல் செய்யவும். என்கிலும் இருவரின் இருதய சிந்தனை ஒன்றாய் இருத்தல் அவசியம். தவிர கிறிஸ்டல் போன்ற பிரகாசமுள்ள வஸ்துக்களிலும், அதிகக் கறுப்பான அல்லது பளபளப்பான வஸ்துக்களிலும், காந்தக்கல், பளிங்கு, கண்ணாடித் துண்டு போன்றவைகளிலும் மற்ற வஸ்துக்களை விட இந்த ஒளி அதிகமாய் நிறைந்திருக்கும். அன்றி எலக்டிரிக்கென்னும் மின்சாரத்துக்கும், அனிமல் மேக்னட்டிஸ மென்னும் ஜீவகாந்தத்திற்கும் வித்தியாசம் என்னவெனில் மின்சாரமானது உலோகங்களில் மட்டும் எளிதாய்ப் பாயும். மற்ற வஸ்துக்களில் எளிதாய் ஊடுருவாது. ஜீவகாந்தமானது சகலத்திலும் எளிதாய்ப் பாய்ந்து ஊடுருவிச் செல்லும்! இவ்வித்தியாசத்தின் நிமித்தமே பெயர் விகற்பப்பட்டது. ஆக இந்த இரண்டின் சம்மந்தத்தைக் கொண்ட குணமுண்டாகின்றது!

13-வது வகை:

இருதய ஒற்மைப் படுதல் தமக்கு ஸ்திரப்பட்ட பொழுது எவ்விதம் உட்கார்த்தின போதிலும், எந்தப் புறமாய் இருந்தின போதிலும் சரியே–அவனைக் காந்த உறக்கத்திற்கு கொண்டு போகிறேனென்று சிந்தனை செய்தல் போதுமானது. அவன் உறக்கத்தில் சென்று விடுவான். அப்போது பெருவிரலைப் பிடித்தல்

www.miskinsha.blogspot.com

அவசியமில்லை. இருதயத்தைக் கெட்டிப்படுத்தி, கண்களினால் கூர்ந்து பார்த்தாலே போதுமானது. தூங்கிய பொழுது பாஸ் களினால் காந்த ஒளியை திரேகம் அடங்கலிலும் பரவ விட்டு முன் போல் செய்யவும்.

14-வது வகை:

அவன் முன்னில்லாவிடிலும் சரியே! வேறு அறை அல்லது மாடியில் இருந்த போதிலும் ஞானதிருஷ்டி செய்கிறேன் என்று அவனுக்கு முன்னமே தெரிவிக்குதல் வேண்டும். இருதயத்தை ஒன்று படுத்தி, சிந்தனையினால் ஒளியை அவனுடைய திரேகத்தில் சேகரித்து, அவன் தூங்க வேண்டுமென்று சிந்திக்கவே அவன் தூங்கிவிடுவான். தாம் அந்த ஸ்தலத்திற்குச் சென்று பாஸ்களினால் ஒளியை திரேகம் அடங்கலிலும் பரப்பி, பிரகாசத்தை ஏற்றுக் கொண்ட பொழுது முன்போல் செய்யவும். நாம் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு எண்ணத்தினாலும் ஒளியைப் பரவச் செய்யலாம்!

15-வது வகை:

ஏதேனும் ஒரு கடிதம் அல்லது வஸ்துவை அவள் சுரணை யற்றுப் போவதற்காக அதில் காந்தத்தை நிரப்பி அனுப்பவும். அவள் அதைப் பெற்றுக் கொண்டவுடனே காந்த உறக்கத்துக்குச் சென்று விடுவான். அவளிடத்துக்கு நாம் சென்று, பாஸ் முதலியவைகளால் ஒளியை திரேகம் அடங்கலிலும் பரப்பி, பிரகாசத்தை ஏற்றுக் கொண்டவுடன் முன்போல் செய்யவும். நாம் போகவில்லையானால் அவன் சுரணையற்று எழுந்து நிற்பான். அதனால் ஒரு பயமும் இல்லை. நாம் அவளிடம் போகாமலும் சிந்தனையால் ஒளியைப் பரவச் செய்யலாம்.

16-வது வகை:

ஒரு காகிதத் துண்டில் கால் ரூபாய் அளவுக்கு வட்டமாய் ஓர் அழகான கறுப்பு அடையாளமிட்டாவது, தண்ணீர் நிறைந்த கிளாஸ் அல்லது சீசா வகையறாக்களிலாவது, அவனின் வலது கைப் பெருவிரலின் நகத்தின் பேரில் ஒரு கறுப்பு அடையாளம் செய்தாவது, காகிதத்தின் பேரில் ஒரு துளி எண்ணையை விட்டு அதைப் பரவச் செய்து அதன் பேரில் அவ்வளவு அளவுக்குக் கறுப்பு மையில் பொட்டிட்டாவது அவனைக் கூர்ந்து பார்க்கும்படி

ஆக்ஞாபிக்கவும். இந்நிலைமைகளில் அவனுக்குப் பிரகாசத்தை சிந்தனையினால் கொடுத்து இந்தக் கறுப்பு அடையாளம் முதலிய வற்றின் உள்ளால் பெரும் வளாத்தரங்கள் (காடுகள்) காணப் படுவதாய் உறுதிமொழி கூறவும். ஆகவே இவ்வளாத்தரங்களில் எந்த ஸ்தலங்களையாவது, வஸ்துக்களையாவது, மனிதர்களை யாவது விரும்பினால் அவை எங்கிருந்த போதிலும் சரியே அவனுக்குக் காணப்படும். அவற்றிலிருந்தும் அவைகளுக்குச் சம்மந்தப்பட்டவைகளை விசாரித்தால் அவன் அவைகளைக் குறித்து விசாரித்து பிரதி உத்தரம் அளிப்பான்.

17-வது வகை:

அவனைக் கட்டிலில் படுக்க வைத்து அவன் இடது புறம் தாம் நாற்காலியிலிருந்து, அவனின் கண்களின் பக்கமாய் பார்வை யின் விதிப்பிரகாரம் பார்க்கவும். தூங்கிய பொழுது (Long pass) நிளப்பாஸ் முதலியவைகளால் ஒளியை திரேகம் அடங்கலிலும் பரவச் செய்து முன்போல் செய்யவும்.

18-வது வகை:

அவனை சம்மணம் கூட்டியாவது முழங்கால் மடியிட்டாவது உட்காரச் செய்து, அவனது புருவ மத்தியை கூர்மையாய் பார்த்து, தாம் இருதயத்தை ஒன்று படுத்தி ஞானதிருஷ்டி செய்து அவனை உணர்வின்மையாக்கவும். தூங்கிய பொழுது பிரகாசத்தைப் பரவச் செய்து முன்போல் செய்யவும்.

19-வது வகை:

இரண்டு எண்ணெய் விளக்கைக் கொளுத்தி அதை 10 அங்குலம் உயரமுள்ள இரண்டு விளக்குத் தண்டின் மீது வைத்து அதை ஒரு பிரகாசமான செம்பு, அல்லது பித்தளை தாம்பாளத்தில் வைத்து அவனை எதிரில் உட்கார வைத்து, இரண்டு விளக்குத் தண்டுக்கும் மத்தியில் அவனைக் கூர்ந்த பார்வையாக ரெப்பைகள் அடிக்காமல் பார்க்கும்படிச் செய்து 5 நிமிஷத்திற்குப் பிறகு, ஏதோ ஒரு வளாத்திரக்காணப்படுகிறதே அதைத் திரும்பப் பார் என்று பார்க்கச் செய்து, விளாவ வேண்டியது. அப்போது அவனுக்கு ஒரு வெள்ளை மைதானம் காணப்படும். ஒரு வேளை காணப்பட வில்லை யென்று சொல்வானாகில் நாம் விளக்குத் தண்டின் எதிரில் முன்னிலையாய் இருந்து கொண்டு அவனுக்கு "இதோ எனக்கு ஒரு

www.miskinsha.blogspot.com

வெள்ளை மைதானம் காணப்படுகிறதே! நீர் அதை நன்றாய்ப் பாரும்" என்று சொல்ல வேண்டியது. உடனே ஒரு வெள்ளை மைதானம் காணப்படும். அப்பொழுதும் காணப்படவில்லை யென்று சொல்வானாகில் தாம் சித்தளையை ஒன்று படுத்தி அதில் மைதானத்தைக் காட்ட முயற்சி செய்ய வேண்டியது. அதாவது, மைதானம் தெரிய வேண்டுமென்று சிந்திக்க வேண்டியது. சற்று நேரத்திற்குப் பின்பு விளக்குத் தண்டுகளுக்கு மத்தியில் ஒரு விஸ்தீரணமான மைதானம் காணப்படும். அதில் எந்த மனிதன் அல்லது வஸ்து, அல்லது ஸ்தலம், அல்லது பட்டணமாயிருந்த போதிலும் சரி, சிந்தனை செய்வதால் உடனே அவை அவனுக்கு அதில் காணப்படும். அப்பொழுது விசாரிக்க வேண்டியதெதுவோ அவைகளை முன் சட்டப் பிரகாரம் விசாரித்துத் தெரிந்துகொள்ள வேண்டியது.

குறிப்பு:

1. தண்ணீர் நிறைந்த ஒரு கிளாஸ் அல்லது சீசா, அல்லது திலகம் போல் கால் ரூபாய் அளவுக்கு ஒரு கறுப்புப் புள்ளி, அல்லது பொட்டு முதலியவைகளை அவனின் கண் இரப்பைகள் அடிக்காமல் மிகக் கூர்மையாய்ப் பார்க்கும்படிக்குச் செயலை ஆரம்பிக்கும் முன் அவனுக்குக் கட்டளை செய்ய வேண்டியது. விடைவளிக்கும் பொழுது பார்வை அந்த வஸ்துக்களை விட்டும் திரும்பக்கூடாது. அப்படித் திரும்புவானாகில் செயலை முன்பிலிருந்து ஆரம்பிக்க வேண்டும்.

தமது நினைப்பின் கெட்டியும், சித்தத்தை ஒன்று படுத்தும் அப்பியாசமும், சித்தத் தத்துவத்தின் அபிவிருத்தியும் எவ்வளவு ஆகுமோ அவ்வளவுக்கு வேலையிலும் திறனாவார்கள்!

3. தம்முடைய உத்தரவு பிரகாரம் தூங்கி விழித்தவுடன் நமக்குச் செய்தி அறிவிக்கிறதற்காக நாம் அவன் பேரில் யாதொரு செயலை ஆரம்பிப்பதற்கு முந்தியோ, அல்லது பிந்தியோ அவன் தூங்க விரும்புவானாகில் அப்படியே அவனைத் தூங்கவிடவும். அப்படித் தூங்கவிட்டதின் பின்பு அவனை (Long Pass) நீளப் பாஸின் உதவியால் வேலை வாங்குவதற்குத் தருதியாக்கவும். நமது உத்தரவின்றி தானே தூங்கிவிட்டால் உடனே தூங்குவதற்கு நாமே உத்தரவளித்துவிட வேண்டும்.

4. மிகுதமல்லது சில வேளைகளில் செய்யப்படுகிறவன் செயலின் சிறந்த விதிகளை விவரித்துக் காட்டுவான். இன்னும்

நஷ்டமான செயல்களையும் விவரித்துக்காட்டுவான். அவ்வாறே நாம் அவனுக்குச் செய்ய வேண்டியது அவசியமாகும்.

5. நாம் எப்பொழுதும் பெருமை செய்யக் கூடாது. தமது தத்துவத்தைக்காண மேலாக வாதாடக்கூடாது. தம்முடையவும் அவனுடையவும் மேலேறும் நிலைமைகளின் நலமோ, கெடுதியோ அவன் அறியக்கூடுமாகிறான். எச்சரிக்கையாவது: முதலில் தானே அவன் இருதயப் பிரகாசத்துக்குச் சென்று விடுவான் என்றும் வேலை செய்ய தருதியுடையவன் ஆவானென்றும் நாம் நம்பிக்கை கொள்ளக்கூடாது. மற்றப்படி இடைவிடாது செயலைச் செய்ய வேண்டும். செய்யப்படுகிறவர்கள் சிலர் சீக்கிரமாயும், சிலர் தாமதமாயும் இருதயப் பிரகாசத்தை யெத்திக் (அடைந்து) சொல்கிறார்கள். அடைந்த பின் வேலை செய்யத் திறமையாகிறார்கள். சிலர் 40 தடவைக்குப் பின் இதய பிரகாசத்தை அடைகிறார்கள்.

6. செயலுடைய வேளையில் அவனிடம் சமீபித்தே கூர்ந்து பார்க்கவும். சமீபித்தே வாயால் தம் செய்து ஊதவும். விழிப்புக்குப் பின்பு அவன் வேதனையின் முறைப்பாட்டைச் சொல்வானாகில் சொஸ்தப் படுத்தவும்.

செய்யப்படுகிறவன் பேரில் பூரண குணம் உண்டாகிற பரீட்சை:

அவன் பேரில் பூரண குணம் உண்டாயிருக்கிறபோது கைகள் நட்டமாய் நிற்கும். அல்லது திரேகம் குளிர்ச்சியாகவாவது, அல்லது உஷ்ணமாகவாவது காணப்படும். அல்லது செய்கிறவனுடைய விரல்களில் இருந்து, உஷ்ணம் அல்லது குளிர்ச்சி, அல்லது ஒளி வெளிப்படுதல் காணப்படும். திரேகத்தில் எறும்பு கடிப்பது போலவாவது, ஊசி குத்துவது போலவாவது காணப்படும். அவனின் தலை இன்னபுறமாய்த் திரும்பிக் கொள்ள வேண்டுமென்று சிந்தனை செய்தால் அவ்வாறே திரும்பிக் கொள்ளும். செய்கிறவனைத் தவிர அன்னியர்களின் பேச்சுகளைக் கேட்க மாட்டான். மற்றவர்கள் அழைத்தாலும் விடையளிக்க மாட்டான். அவன் திரேகத்தின் எந்த பாகத்தை எந்நஸ்திதியில் வைத்த போதிலும் அவ்வாறே இருக்கும். தாம் திரேகத்தை விறைத்து போகும்படி உத்தரவளித்தால் அவ்வாறே அவன் திரேகம் கட்டை போல் விறைத்து போகும். தலையொரு பக்கமும் காலொரு பக்கமும் இருக்கும்படிச் செய்தால் அப்படியே கட்டை போல் விறைத்தே இருக்கும். கண் திறக்காமல் பார்க்க

www.miskinsha.blogspot.com

கூடுமாகிறான். சிலர் வெளிப்படையாய் கண்ணைத் திறந்திருப் பார்கள். எனினும் கண்ணின் ரெப்பைகள் அடிக்கவாவது, கண்ணின் கருவிழிகள் அசையவாவது செய்யாது. இன்னும் அவளின் கண் இலங்குதல், தாழ்ந்த குரலாகுதல், முகம் அழகாகுதல் அன்றி முன், பின் இருக்கிற வஸ்துக்களையும் பெட்டி, துணி, திரை முதலியவைகளில் உள்ளிருக்கிற வஸ்துக்களையும் சரிசமானமாய்ப் பார்க்கக் கூடுமாகுதல் முதலிய யாவிலும் அவள் காந்தத்தூக்கத்தில் பூரணமாயிருக்கிறாள் என்று அறியவும்!

செய்யப்படுகிறவன் பேரில் அன்னியர்களின் தொடர் அல்லது சம்மந்தத்தினால் சம்பாஷணை உண்டாக்குதலின் வழி:

தாம் ஒரு மனிதனின் உடையின் முந்தியை, அவளின் கையில் கொடுத்து இவனுடன் சரியாய் சம்பாஷணை நடத்த வேண்டு மென்று சிந்தனை செய்வீராளால், அவன் சம்பாஷணையை நடத்துவாள். இவ்வாறே தாம் தமது இரு கைகளையும் அவளின் கைகளில் செயலின் சட்டப் பிரகாரம் வைத்து, "நாம் நமது தத்துவத்தை இவனுக்குக் கொடுத்திருக்கிறோம். இவன் வேறொரு செய்யப் படுகிறவனைக் காந்தத் தூக்கத்துக்குக் கொண்டுவரக் கூடும்" என்று சிந்தனை செய்வீராளால் அவ்வாறே செய்வாள். தமது செய்யப்படுகிறவன் காந்தத் தூக்க நிலைமையிலிருக்கும் போது, அவன் கையில் பிணியாளி அல்லது சொஸ்தவானாகிய மனிதர்களின் உடையையாவது, மயிரையாவது, நகத்தையாவது, கடிதத்தையாவது கொடுத்து அவர்களின் நிலைமைகளை விசாரிக்க விரும்பினால் விசாரித்தறியலாம். அவர்களின் கால நிலைமை களையும் தாம் அவனால் விசாரித்துக் கொள்ளலாம்.

காந்த தூக்கத்திலிருந்து செய்யப்படுகிறவனை விழிக்கச் செய்வதின் பொது விதிகள்:

உம்மை விழிப்பாக்குகிறேனென்று அறிக்கையிட்டு கால் விரல் களிலிருந்து தலையின் கடைசி வரையில் தலை கீழான பாஸ் செய்யவும். அப்பொழுது புகுத்தியிருந்த காந்த ஒளியைத் திரும்பப் பெறுகிறேனென்று சிந்தனை செய்யவும். இந்த பாஸ் கால்களில் இருந்து நெஞ்சுக்குச் சரியாயும் செய்யலாம். செய்யப்படுகிறவன் விழிக்கும் வரையில் செய்யும் ஒவ்வொரு பாஸுக்குப் பின்னாலும் தமது கைகளை உதறிவிட வேண்டும். சிந்தனையினால் மட்டும்

பிணியாளிக்கு விழிக்க கட்டளை யிடவும். பிணியாளி தூங்க விரும்புவானாகில் உத்தரவளித்துத் தூங்க வைக்கவும். ஆனால் சற்று தூரத்திலிருந்து பிணியாளிக்கு வாயினால் ஊதுவதினால் காந்த குணம் சென்றுவிடும். ஆகையால் சற்று தூரத்திலிருந்து ஜீவகாந்த குணத்தைச் செல்ல வைக்கவும். இளைப்பு அல்லது வேதனையை அவன் முறையிட்டால் அவைகளை சொடக் பாளினால் சொஸ்தமாக்கவும். அதாவது பாஸ் செய்து, செய்கிறவன் தமது கைகளை உதறிவிடவும். இதன் பிரயோஜனமாவது: செய்யப் படுகிறவனின் பிணி செய்கிறவனின் மீது அறவே தொதாது. செய்யப்படுகிறவன் உணர்வில் வரவில்லையானால் கண்கள், பிடரி, நெற்றி, கன்பட்டை, பொட்டு முதலியவைகளில் பலமாய் ஊதி தலை கீழான பாஸினால் விழிப்பிக்கவும். தூங்க விரும்பினால் தூங்கவிடவும். நாளை உஜாராவான்! இவ்வாறு செய்தும் உணர்வில் வரவில்லையானால் தான் சந்தேகம்! இருதயத்தில் கவலை கொள்ள வேண்டாம். வேறொரு செய்யப்படுகிறவன் பேரில் செயலைச் செய்து அவனின் ஆன்மாவைத் தேடச் செய்து திரும்பி வர அழைக்கவும். ஏனெனில் சில வேளை செய்யப்படுகிறவனின் ஆன்மா வெகு தூரமான ஆன்மலோகங்களில் சென்று திரும்பி வரப் பிரியப்படுகிறதில்லை. ஆனால் செய்கிறவன் அறவே பயப்பட வேண்டாம். அதற்காக ஏதேனும் அழிந்தப்பரிமாற்றமும் வேண்டாம். செயலுக்குப் பின்பு தாமும், செய்யப்படுகிறவனும் குளித்து அல்லது கை, முகம், கால் கழுவி சர்பத் அல்லது பால் குடித்துக்கொள்ளவும். சிந்தனை விளைந்து அபிவிர்த்தியானதால் சிந்தனையினால் தலை கீழான பாஸ் செய்து விழிக்க உறுதி மொழி சொல்லி விழிப்பிக்கவும்.

தமது பெருவிரலை அவனின் ஒரு கண்ணிலும், அடுத்த இரண்டு விரல்களை மறு கண்ணிலும் வைத்துக் காந்த ஒளியைத் திரும்ப வாங்குகிறேனென்று சிந்தனை செய்யவும். அவன் விழித்துக் கொள்வான். திரும்ப வாங்கும் அந்தக் காந்த ஒளியின் சக்தி ஆன்ம சக்தியாக இருந்த போதிலும் ஜடசக்தியாயிருந்த போதிலும் சரியே! திருப்ப வாங்க வேண்டும். ஏனெனில் ஆன்ம சக்தியானால் காந்த தூக்கத்திற்குச் செல்கிறான். ஜட சக்தியானால், அவனின் அவயவங்கள் வெளி வேலைகளை விட்டும் நீங்கியிருக்கும்.

Note: செய்யப்படுகிறவன் எவ்விதத்திலும் விழிக்காவிடில் தாம் திகில் கொள்ள வேண்டாம். ஏனெனில் 32 மணி நேரம் வரையில் உணர்வின்மையாய் இருப்பான். பின்பு தானே விழித்துக் கொள்வான்! பிணி முதலிய வேதனைகளை முறையிட்டானானால்

www.miskinsha.blogspot.com

உலோகத்தினால் வட்டமான ஒரு ஆயுதம் செய்து, அதை வாயில் வைத்து பற்களை நன்றாய் அமுக்கி அதைக் கடித்துக் கொண்டு, சிந்தையை ஒன்று படுத்தி அவனுடைய பிணி அல்லது வருத்தத்தை சிந்தனை செய்து அதில் இழுத்துக் கொள்ளவும், சொஸ்தமாகும்! பின்பு அந்த ஆயுதத்தை வெயிலில் அல்லது நெருப்பில் காய்ச்சி சுத்தி செய்து வீளக்கி வைத்துக்கொள்ளவும்.

ஜீவ வர்க்கங்களைச் செயலினால் அவைகளின் வருத்தங்களை விட்டும், காப்பாற்றுதல் அல்லது தம்முடன் அவைகளின் நேசம் அதிகப் படுதல் அல்லது அவைகளைத் தமது இஷ்டப் பிரகாரம் வேலை வாங்குதல் முதலியவை:

எந்த ஜீவனைத் தமக்கு வசப்படுத்த வேண்டுமோ அல்லது அவைகளின் வருத்தத்தை விட்டும் காப்பாற்ற வேண்டுமோ, அல்லது அவைகளின் தீங்கை விட்டும் நாம் தப்பித்துக் கொள்ள வேண்டுமோ, அவைகளின் கண்களின் புறம் நன்றாய் கூர்ந்தும் கூர்மையான பார்வையாய்ப் பார்க்கவும். முதல் முதலில் கண் கவரப் பட்டதனால் உடனே அது நமது பரிசம் நோக்கும். அப்பியாசத்தினால் தேர்ச்சி யடைந்த பின் நம் தாட்டப் பிரகாரம் வேலை வாங்கலாம். நமது அப்பியாசம் அபிவிர்த்தியாய் பூரணமாகிடுமானால் புலி முதலிய மிருகங்கள் தமக்கு அதி சீக்கிரத்தில் வழிப்படும். மிகுந்த அப்பியாசம் அவசியம் தீனி வர்க்கங்களில் இச் செயலைச் செய்து அவைகளுக்குத் தின்னக் கொடுத்தால் அதிகக் குணபாடு உண்டாகிறது.

மெஸ்மெரிஸ வித்தையின் பல விதிகள்:

பார்வையின் சக்தியைக் கெட்டிப் படுத்திக் கொள்வதற்காக முகம் பார்க்கிற கண்ணாடியில் கால் ரூபாயளவு ஒரு கருப்பு பொட்டிட்டு அதை நித்தியம் கால் மணி நேரம் வரையில் கண் சிமிட்டாமல் அந்தப் புள்ளியை சுற்றிலும், கண்ணாடியில் தெரிகிற நமது உருவத்தைக் கிஞ்சிற்றும் பாராமல் அந்தப் புள்ளியின் மையத்தை விடாமல் பார்க்க அப்பியாசிக்க வேண்டும். அப்புள்ளியின் சுற்றித் தெரிகிற நமது ரூபத்தைப் பாராமல் அந்தப் புள்ளியையே பார்க்க நமக்கு சக்தி உண்டாகி விட்டால் நமது பார்வைக்கு எந்தப் பிராணிகளும் வசப்படாமல் போகாது! இதனால் சித்த வல்லமும் உண்டாகின்றது.

ஒருவனை சீக்கிரம் காந்த உறக்கத்துக்குச் கொண்டு வருகிறதா யிருந்தால், அரை ரூபாயளவு வட்டமாக ஒரு காந்த வில்லையும்,

அந்த அளவுக்கு ஒரு துத்தநாக வில்லையும், அந்த அளவுக்கு ஒரு வெள்ளி வில்லையும் சரிக்கட்டிக் காந்த வில்லையை மத்தியில் வைத்து, அந்தப் புறமும் இந்தப் புறமும் வெள்ளி வில்லையும், துத்தநாக வில்லையும் வைத்து, நடுமையத்தில் மூன்றுக்கும் துவார மிட்டு ஒரு செம்பாணிப் போட்டுத் திறைந்து வைத்துக்கொள்ளவும். மயக்கப்படுகிறவன் கையில் கொடுத்து அதைப் பார்த்துக் கொண்டிருக்கும்படி செய்து, தாம் தொலைவிலிருந்து பாஸ் செய்யவும். உடனே சீக்கிரம் மயங்கி விடுவான். வேண்டிய காரியங்களை விசாரித்துக்கொள்ளவும்.

சிலர் இவ்வித்தையினால் சுகப்படாத வியாதிகளை ஒரு கோழி அல்லது ஆடு முதலிய பிராணிகளில் அப்பிணியை இலேசாக இறக்கி விடுகிறார்கள். இதற்கு இன்றிக் காலமெறல் என்று சொல்லப் படும். அதாவது அப்பிராணியை அப்பிணியாளிக்கு முன் நிறுத்தி அப்பிணி, இப்பிராணியின் பேரில் தாவ வேண்டுமென்று சிந்திப் பதால் அப்பிணி சுலபமாக அதில் தாவிக் கொள்ளும். இதனால் அப்பிராணி சுகமடையவும் ஜீவிக்கவும் மாட்டாது. ஆதலால் இது மகாப் பாதகம்! இதற்கு வேறு தந்திரம் செய்யவேண்டும். அதாவது ஒரு பாத்திரத்தில் ஜலம் எடுத்து அதை அவனுக்கு முன் வைத்தாவது அல்லது ஒரு கல்லையாவது ஒரு கட்டைத் துண்டையாவது, அவன் முன் போட்டு அவ்வியாதியை முன் சொன்னபடி இறக்கவும். பின்பு அந்தக் கட்டை அல்லது கல் அல்லது ஜலத்தைப் பாத்திரம் உள்பட மனிதர் கால் படாமல் புதைத்து, அல்லது மறைத்துவிடவும். இந்தப் பொருட்களை இவ்வேலை செய்கிறவனைத் தவிர மற்றவர்கள் தொட்டால் அவ்வியாதி ஒரு சமயம் அவர்களுக்குத் தொத்தவும் கூடும்!

இவ்வாறே ஒரு கல், அல்லது மரம், அல்லது இயந்திரம், அல்லது தகடு முதலியவைகளில் இறந்து போன மனிதர்களின் கெட்ட ஆவியையும், தேவதையையும் ஸ்தாபிப்பதுண்டு. தேவதை என்பது இன்னம் சரீர மெடுக்காத ஆவி. சில ஆவிகள் எந்த வகையான சரீரமும் எடுக்காமல் அப்படியே திரும்பி விடுவதும், சில சிகுவிலேயே மரித்துத் திரும்பி விடுவதும், மறுமையின் சாஸ்திரப்படி இயல்பாயிருக்கிறதென தெரிய வருகிறது. தமக்குச் சரீரமெடுக்கப் போதுமான சித்த வலுவில்லாததால் அப்படியாகின்றது. ஆதலால் சரீரமெடுத்த வஸ்துக்களுக்கு சித்தவலு அதிகமென்று இதனால் தெரியவரும்.

ஒரு தாம்பாளம் அல்லது தேங்காய்க் குடுக்கை முதலிய வஸ்துக்களில் நாள்தோறும் இடைவிடாமல் தமது ஒளியைச்

செலுத்தி வரவும். அதில் பூரணமாக ஒளி நிறைந்தபின் அதை நகரும்படி சிந்தித்தால் அது அசைவில் வரும். அதைப் புதைக்கப் பட்ட பொருள்களையும், திருட்டுப் போன சாமான்களையும் காட்டும் படி ஏவினால் உடனே அது நகர்ந்து, இருக்கிற இடத்தைக் காட்டும். எப்போதும் அதில் ஒளியை நிறைந்திருக்கும்படி ஒளி நிறைத்தே வைக்க வேண்டும். செலவான போது சொற்பச் சிந்தனையினால் அதற்கு அசைவைக்கொடுத்து வேலை வாங்கவும். எப்போதும் அதில் பவர் தரித்திருக்கும்படி ஆக்ஞாபித்து வைக்கவும். அல்லது மரித்தவர்களின் ஆவியை அல்லது இன்னும் சரீர மெடுக்காத ஓர் ஆவியைத் தரிப்பித்தும் வைக்கலாம். இது பாதகம் ஆதலால் நம்முடைய ஆவியையே தரிப்பித்து வைப்பது நலம். ஏனென்றால் அது அவர்களுக்கு ஒரு சிறையைப் போல் இருக்கும்.

மெஸ்மெரிஸ வித்தையின் பாஸ் செய்யும் விதம்.

(Pass) பாஸென்பது. கைகளினால் செய்யப்படுகிற எல்வகை யான சிகிட்சைகளுக்கும் பொதுவாக வழங்குகின்றது. இது பலவித முண்டு. அதாவது கைகளினால் தொட்டு அல்லது தொடாமல் தடவிக் கொடுத்தல் அல்லது தட்டிக் கொடுத்தல், அல்லது விரல் களினால் சைக்கினை செய்தல் முதலியனவாம்! இப்படிச் செய்வதனால் நமது கைகளிலுள்ள சுகுணமாகிய ஜீவகாந்தசத்து அல்லது ஒளியானது, பிணியாளிகளின் திரேகத்தில் பாய்ந்து சுகத்தை உண்டாக்குகின்றது. இந்த ஒளியை அனிமல் மேக்னடிஸம் (Animal-magnetism) அல்லது நரவாளிமக்னாத்தி லென்று சொல்லப்படும். இது இரண்டு வகையுண்டு. அதாவது வலது கையில் நின்றும் வெளிப்படும் படியான ஒளியைப் பாஸிடிவ் (Positive) அல்லது மவுஜிபா வென்று சொல்லப்படும். இதன் குணம் குளிர்ச்சி இதை உஷ்ணமான வியாதிகளைச் சுகப்படுத்த உபயோகப்படுத்தப்படுகின்றது. இடது கையில் நின்றும் வெளிப்படும்படியான ஒளியை நெகடிவ் (Negative) அல்லது ஸாலிபாவென்று சொல்லப்படும். இதன் குணம் உஷ்ணம். இதைக் குளிர்ச்சியான வியாதிகளை சுகப்படுத்த உபயோகப்படுத்தப்படுகின்றது. மேற்சொல்லிய 'ஸாலிபா' 'மவுஜிபா' வென்னும் தத்துவத்தை மன்பி, முதுபித் தென்றும் சொல்வதுண்டு. இதனைத் தமிழில் உடன்பாடு, எதிர்மறை

என்றாவது, இழுப்புக் காந்தம், மறுப்புக் காந்தம் என்றாவது சொல்லலாம். நமது இரண்டு கைகளிலும் உள்ள இந்த வித்தியாச மான குணத்தை அறிந்திருந்தால், சிறு குழந்தைகளை நமது வலக்கையினால் தட்டி அல்லது தடவிக் கொடுத்துச் சீக்கிரம் தூங்க வைக்கலாம். இடக்கையில் உஷ்ணமான குணமிருப்பதால், இந்தக் கையைக் கொண்டு குழந்தைகளை தட்டி அல்லது தடவிக் கொடுத்தால் சீக்கிரம் தூங்காது. பாஸ் செய்வதை நமது நாடுகளில் மந்திரித்தல், அல்லது குழையடித்தல் என்று சொல்லுவார்கள். ஆனால், தற்காலம் மந்திரித்தலும், குழையடித்தலும் மூடர் களுடைய கைவசத்திலிருக்கிறது. அவர்கள் அதன் அகமியத்தை இன்னதென்று உணராவிட்டாலும் அனேகமாகக் குணமும் செய் கின்றது.

கிரேக்க தேசத்து லோதானுடைய மதப் புத்தகங்களில், மனிதர்களுடைய கைகளின் சுக குணத்தைப் பற்றி அடிக்கடி எழுதப்பட்டிருக்கின்றது. கிறிஸ்துக்கு 600 வருடத்துக்கு முன்னுள்ள ஹக்கீம் ஸோலனென்பவர் எழுதுகிறார்: சிலகொடிய வியாதிகளுக்கு மருந்துகள் குணம் செய்யவில்லையாம். என்கிலும் கைகளினால் தட்டி அல்லது தடவிக் கொடுத்தலே பெரும்பாலும் சுகத்தைக் கொடுக்கின்றனவாம்!

கிறிஸ்துக்கு 500 வருடத்துக்கு முன்னுள்ள எல்லியெஸென்பவர் எழுதுகிறார்: பர்மஸ்நிபூஸ் என்பவன் இராஜபுத்திரியாகிய ஆயோ என்பவளுக்குச் சொன்னதாவது: "நீ உன்னுடைய பிணிக்கு மருந்து தேடி அனேக தேசங்களைச் சுற்றினாய். ஓரிடமும் சுகப்பட வில்லை. தற்போது நீலாற்றங்கரையில் வசிக்கும் ஹக்கீம் ஸி அஸ் என்பவரிடம் போவாயானால் அவர் தம்முடைய சுகுணமுள்ள கையினால் தட்டி அல்லது தடவிக் கொடுத்து சுகப்படுத்தி விடுவார்" என்றனவாம். கிரேக் தேசத்தில் பிரக்யாதி பெற்ற ஹக்கீம் எஸ்குளெப்பேடென்பவர், மூளையிலுள்ள பேதத்தையும், பைத்தியத் தையும் நீக்கக் கையினால் நேய்த்துச் சுகப்படுத்துவாராம். உரோமா தேசத்து ஒரு வைத்தியர் எழுதுகிறார்: உள்ளங்கை அல்லது உள்ளங்காலை அதிகமாய்த் நேய்த்துக் கொண்டிருந்தால் தூக்கம் வந்துவிடுமாம்!

கிறிஸ்துக்கு 361 வருடத்துக்குமுன் 99 வயதிருந்து காலஞ் சென்ற ஹக்கீம் ஹிப்போக்கிரிட்டெஸ் என்பவர் எழுதியிருக்கிறார்: முற்காலத்திலுள்ள சில பேர்ப்போன வைத்தியர்கள் சரீரத்தை கையினால் மெதுவாகத் நேய்த்துக் கொண்டிருப்பதை இரத்த

www.miskinsha.blogspot.com

ஒட்டத்திற்கு அதிகப் பிரயோஜனமென்று அறிந்திருந்தார்களாம். இன்னும் சில கீர்த்தி பெற்ற வைத்தியர்கள், பிணியாளிகளின் திரேகத்தில் கையினால் தடவிக் கொடுக்கும் போது வெளிப்படுகிற உஷ்ணமானது அதிக சுகத்தைக் கொடுக்கின்றன வென்றும், பலவகையான வலிகளை ஆற்ற உபயோகப்படுகின்றன வென்றும், பலவிதமான பலஹீனங்களை நீக்கி சக்தியை உண்டாக்குகின்றன வென்றும் அறிந்திருந்தார்களாம்!

ஒவ்வொரு மனிதன் மீதும் மெஸ்மெரிஸ வித்தை குணம் செய்கின்றது. ஆனால் எவனுடைய தலை முளையில் (வெட்டல் புளோட் என்னும்) தைப்பான குணம் கம்மியாக இருக்கிறதோ, அவன் மீது மற்றவர்களை விட அதிகமாகத் தாவுகின்றது. காந்த உறக்கம் அநேக விதமாகச் செய்யப்படுகிறது. எல்லோரும் ஒரே விதமாகச் செய்கிறதில்லை. ஆகையால் தமக்கு எளிதாகத் தோன்றுகிற ஏதாவது ஒருவகையை அவசியமாக அனுசரிக்க வேண்டும். முதலாவது டாக்டர் டைலோஸுடைய வழியை எழுதிக் காட்டப்படுகிறது. இது அப்பியாசிகளுக்கு மிகவும் சிறந்தது. அதன் பின் ஒரு பதவியை எவ்விதம் உண்டாக்குவது என்பதையும், அதை எவ்விதம் தரிபாடாக்கி (நிலைக்க) வைப்பது என்பதையும், ஒரு தாழ்ந்த பதவியை எவ்விதம் மேலான பதவிக்குக் கொண்டு போகிறது என்பதையும் விவரித்துக் காட்டப்படும்.

காந்த உறக்கம் செய்யும் விதம்:

1-வது செய்யப்படுகிறவனை ஆரோக்கியமாக உட்காரவைத்து நாம் அவனுக்கு எதிரில் உட்காரவேண்டும். கூடுமானால் அவனுடைய இருப்பிடத்தைப் பார்க்கிலும், நம்முடைய இருப்பிடம் கொஞ்சம் உயரமாயிருப்பது நல்லது. அதாவது நம்முடைய நாற்காலியை விட அவனுடைய நாற்காலி கொஞ்சம் தாழ்ந்திருக்க வேண்டும். அவன் முழங்கால் நம்முடைய முழங்கால்களுக்கு இடையிலும் - நம்முடைய கால் அவனுடைய கால்களுக்கு இந்தப் புறமும் அந்தப் புறமும் வைத்துக் கொள்ள வேண்டும். அவனை வாய் பேசாமல் ஆரோக்கியமாக உட்கார்ந்திருக்குபடிச் சொல்லவும். செய்கிறவன் கிஞ்சிற்றும் பயப்படவேண்டாம்.

ஆரம்பத்தில் மேக்னடிஸம் அல்லது ஜீவகாந்த ஒளியின் குணத்தினால் யாதோர் உபத்திரவம் தேரிடுமானால் அதைக் கொண்டு பயப்பட வேண்டாம். செய்கிறவன் திடசித்தத்துடன்

செம்மையாக உட்கார்ந்து கொண்டு செய்யப்படுகிறவனுடைய கையின் பெருவிரலைப் பிடித்துக் கொள்ளவும். அதாவது செய்கிறவனுடைய ஆட்காட்டி விரலும் அதற்கடுத்த விரல்களும் செய்யப்படுகிறவனுடைய பெருவிரலின் பின்புறத்தில் இருக்க வேண்டும். செய்கிறவனுடைய பெருவிரலின் உட்புறம், செய்யப்படுகிறவனுடைய பெருவிரலின் உட்புறத்தில் சேர்ந்திருக்கவேண்டும். நம்முடைய கண்ணை அல்லது பார்வையை, அவனுடைய கண் அல்லது பார்வையோடு சேர்த்து சில நிமிஷம் வரையில், அதாவது நம்முடைய பெருவிரலின் சூடும் அவனுடைய பெருவிரலின் சூடும் நமக்குச் சமமாகத் தோன்றுகிற வரையில் அவனை நோக்கிப் பார்த்துக்கொண்டே இருக்கவும். அதன் பின் அவனுடைய வலது கையையும், இடது கையையும் விட்டு விடவும் பிறகு நம்முடைய கையின் உட்புறம் செய்யப்படுகிறவனுடைய பாரிசம் இருக்கத் தக்கதாகப் பாஸ் செய்து நமது கைகளை அவன் சிரசு வரையில் கொண்டு போகவும். அதன் பின் நமது கைகளை அவன் தோள் வரையில் கொண்டு வந்து கொஞ்ச நேரம் அவ்விடத்திலேயே வைத்திருக்கவும்.

பிறகு அவ்விடத்திலிருந்து கைகளை மெதுவாகத் தொட்டுத் தடவிக் கொண்டு, செய்யப்படுகிறவனுடைய கைவிரல்களின் தலைப்புறம் வரையில் கொண்டு வரவும் பின்பு நம்முடைய கையில் பந்தைப் போல் ஏதோ ஒரு வஸ்து இருப்பது போல் விரல்களைக் கொஞ்சம் வளைத்துக் கொண்டு கையை மேலே உயர்த்தவும். சிரசு வரையில் உயர்த்தின பின் அவ்விடமிருந்து நெற்றி, இன்னும் முகத்தின் வழியாக கையை நெஞ்சு வரையில் கொண்டு வரவும். நம்முடைய கை கண்ணுக்குச் சமீபத்தில் வந்த பொழுது, இரண்டு மூன்று விடுத்தம் செய்யப்படுகிறவனுடைய கண்ணில் ஏதோ ஒரு வஸ்தைப் போடும் பாவனையாக சைக்கினை செய்யவும். பிறகு மெதுவாக வாய்க்குச் சமீபத்தில் வந்த பொழுதும் அவ்வாறே செய்யவும். அதாவது வாயில் ஏதோ ஒரு வஸ்தைப் போடுவது போல் சைகை காட்டவும். ஆனால் கை சரீரத்தில் படக்கூடாது.

பிறகு அவ்விடமிருந்து கையை தொப்புள் வரையிலும் கொண்டு வரவும். பின்பு அவ்விடமிருந்து முழங்கால் வரையிலும் கொண்டு வரவும். இன்னும் கஷ்டமில்லாவிட்டால் நம்முடைய கைகளைச் செய்யப்படுகிறவனுடைய கால் விரல்களின் முனை வரையிலும் கொண்டு வரலாம். இவ்விதமாகச் சில நேரம் வரையில் செய்து கொண்டிருக்கவும்.

www.miskinsha.blogspot.com

(பாஸ்கள் - PASSES)

மெஸ்மெரிஸ வித்தையில் அடிக்கடி பாஸ் செய்ய நேரிடும். ஆகையால் பாஸ் செய்யும் விதங்களை அறிந்திருப்பது அத்தியாவசியம்! பாஸ் செய்யும் விதங்களாவன:- 1. குறில் பாஸ்: இதனை ஷார்ட் பாஸ் (Short Pass) அல்லது கலீல் பாஸென்று சொல்லப்படும். இஃதானது, சரீரத்தின் யாதொரு பாகம் அல்லது உறுப்பில், மேல் அல்லது, கீழ் எந்தப் பாரிசமாவது சீக்கிரம் சீக்கிரமாகச் செய்யப்படுகின்றன. இதனை லோக்கல் பாஸ் (Local Pass) அல்லது "முக்காமி பாஸ்" என்றும் சொல்லப்படும். இவ்விதமான பாஸ் சரீரத்தின் யாதொரு பாகம் அல்லது உறுப்பிலுள்ள வலி அல்லது வேதனை முதலிய ரோகங்களை நீக்கச் செய்யப்படும் போது ஒவ்வொரு பாஸுக்குப் பின்னும் அதாவது கை சரீரத்தில் பட்டுக் கொண்டு அலக்காகும் போது, ஏதோ கையில் ஒட்டிக் கொண்ட வஸ்துவை நீக்குவது போல் உதறிவிட வேண்டும்.

உதாரணமாக ஒருவனுக்குக் கையில் தேள் கொட்டி விட்டதாக வைத்துக்கொள்வோம். கொட்டின இடத்திலிருந்து பாஸை ஆரம்பித்து விரல்களின் தலைப்புறம் வரையில் கொண்டு வர வேண்டும். ஒவ்வொரு தடவையும் கையை உதறிவிடவேண்டும். அப்படிப் பாஸ் செய்யும் போது வேதனை நீங்க வேண்டுமென்று மனதினால் அதிக வலுவாக நிர்ணயித்துக் கொண்டிருக்கவும் வேண்டும். பாஸை ஆரம்பிப்பதற்கு முன் எதுவரையில் விஷம் ஏறியிருக்கிறது எனத் தெரிந்து, எண்ணத்தைக் கொண்டும், கையினாலும் தடை செய்து கொள்ளவேண்டும். அதாவது அந்த இடத்தைச் சுற்றிலும் இடது கையினால் கை சரீரத்தில் பட்டுக் கொண்டிருக்கத் தக்கதாக சில தடவை பாஸ் செய்து கொள்ள வேண்டும். அப்படிச் செய்யும்போது மனதினாலும் இதற்கு மேல் விஷம் ஏறக்கூடாதென வலுவாக நிர்ணயிக்கவும் வேண்டும். இவ்விதமான வேதனைகளை நீக்கக் காந்த நித்திரை யுண்டாக்க வேண்டிய அவசியமில்லை. பாஸ் செய்த பின் அந்த உறுப்பு உணர்வற்று அல்லது கனத்து சோர்ந்து விடுமானால், கீழிருந்து மேல் பாரிசம் ஏழெட்டுப் பாஸ் செய்துவிட வேண்டும். இதற்குக் கை சரீரத்தில் படவேண்டிய அவசியமில்லை. (தொடாமலும் பாஸ் செய்யலாம்) ஆனால் தொட்டுப் பாஸ் செய்வதில் சற்று குணம் அதிகமுண்டாகும்.

சில வருடங்களுக்கு முன் நம்முடைய ஊர் நதிக்கு அப்புறத்திலுள்ள ஒரு தென்னந் தோப்பில் ஒரு கிழவிக்குக் கையில் தேள் கொட்டிவிட்டது. அந்த விஷத்தை இறக்க 2, 3 பேர் வரை மந்திரித்தார்கள். விஷம் இறங்கவில்லை. அவள் பிரலாபிப்பதைப் பார்த்து அவள் கையைத் தொடாமல், பத்து பதினைந்து பாஸ் வரையில் செய்தேன். கொட்டு வாயில் கூட வலியில்லாமல் நீங்கி விட்டது. பின்பு அவள் தன் கையை உயர்த்த முடியவில்லை. கை அப்படியே உணர்வற்று சோர்ந்து விட்டது. திரும்பக் கீழிருந்து மேல் பாரிசமாக ஏழெட்டுப் பாஸ் செய்த பின் கை உயர்த்த வந்தது. இவ்வாறாகப் பாஸ் செய்த இடம் கனத்து அல்லது அசைவற்றுப் போவது அளவுக்கு மிஞ்சிய காந்தச் சக்தி பிரவேசித்து இரத்த ஓட்டத்தை நிறுத்திவிடுவதால் உண்டாகும்! ஆகையால் கீழிருந்து மேல் பாரிசம் பாஸ் செய்தால், காந்தச் சக்தி வெளிப்பட்டு இரத்த ஓட்டமுண்டாகும். இவ்வாறான குணபாடு அளவுக்கு மிஞ்சியதாக எப்பொழுதும் உண்டாகாது. சில சமயங்களில் உண்டாகும். அப்படி உண்டாவதற்குக் காரணம் யாதெனில் செய்யப்படுகிறவர்கள் மெஸ்மெரிஸ வித்தையின் தத்துவத்தை அதிகமாய் ஏற்றுக் கொள்ளக்கூடிய சுபாவம் உள்ளவர்களாயிருப்பதாலும் அல்லது செய்கிறவர்களுடைய கையில் காந்த சக்தி அதிகமாக உண்டாகி இருந்தாலும் அப்படி உண்டாகும். கையில் காந்த சக்தியை அதிகப் படுத்திக் கொள்ளும் விதத்தைக் குறித்துப் பின்னால் எழுதப்படும்.

ஆனால், இப்போது நான் தேள் விஷம், வயிற்று வலி, தலை கோய், வாய்வுப் பிடிப்பு, பல் வலி முதலியவைகளுக்கு பாஸ் செய்கிறதில்லை. ஒரு கூரான எழுத்தாணி அல்லது ஆணியை இரண்டு மூன்று விடுத்தம் பூமியில் வைத்து அழுத்தி அல்லது ஊன்றிக் கொண்டு, அதிக வலுவாக மனதைக் கொண்டு வலி நீங்கி விட வேண்டுமென்று சிந்திப்பேன். இவ்வித சிகிட்சையினால் ஜுரம் கூட சுகப்பட்டிருக்கின்றது. பிசாசுகள் நமக்கு சமீபத்தில் அல்லது நமது கண்களுக்கு முன்னால் இருக்க வேண்டுமென்கிற அவசியமும் இல்லை. அவர்கள் மறைவாக எங்கிருந்த போதிலும் அல்லது எவ்வளவு தொலைவிலிருந்த போதிலும் ஒரு நாண் அல்லது ஸ்தம்பத்தை அவர்களென்று பாவித்து அதற்கு பாஸ் செய்வதினாலும் சுகம் உண்டாகும். ஆனால் இதற்குச் சற்று அப்பியாசமும் சித்த வலுவும் வேண்டும். இந்த உண்மையின் பேரில் விக்கிரக ஆராதனை ஏற்பட்டது.

முன் சொல்லப்பட்ட நெகடிவ், பாஸிடிவ் அல்லது முதுபித், மன்பி யென்னும் உடன்பாடு, எதிர்மறையாகிய காந்தம் இரண்டும்

www.miskinsha.blogspot.com

சீரத்தில் சமமாக இருக்கிற வரையில் பிளியுண்டாகாது. இதில் பேதப்பட்டால் பிளியுண்டாகும். இது இருதய மென்னும் மூல ஸ்தானத்திலிருந்து சீர முழுமையும் பரவியிருக்கிறது. இதுவே நமது இரத்தம், மூளை, எலும்பு, தரம்பு, தசை முதலியவைகளுக்கு உயிராக இருக்கிறது!

வலது கையால் பாஸ் செய்தால் வலது கையிலிருக்கிற உடன் பாடாகிய காந்தம், பாஸ் செய்யப்படுகிற உறுப்பில் பாயும். பாஸ் செய்யப்படுகிற உறுப்பிலிருக்கின்ற எதிர்மறையாகிய காந்தத்தை வலதுகை இழுத்துக்கொள்ளும். அப்படியே இடக்கையால் பாஸ் செய்தால் இடக்கையிலிருக்கிற எதிர்மறையாகிய காந்தம், பாஸ் செய்யப்படுகிற உறுப்பில் பாயும். பாஸ் செய்யப்படுகிற உறுப்பில் இருக்கிற உடன்பாடாகிய காந்தத்தை இடக்கை இழுத்துக் கொள்ளும். ஆகையால் தொத்து வியாதிகளாயிருந்தால் நமக்குத் தொத்தாமலிருக்கவும், கெட்ட காந்த குணம் நமது சீரத்தில் சம்பந்தப்படாமலிருக்கவும், ஒவ்வொரு பாஸுக்குப் பின்னும் கையை உதறும்படி சொல்லப்பட்டது. இல்லாவிட்டால் உதறவேண்டிய அவசியமில்லை. உதறுகிறதில் பலர் குறைவுதான். எந்தப் பிணிக்கு எந்த காந்தம் அவசியமென்பதைச் சமயோசிதமாய்த் தெரிந்து கொள்ளவேண்டும். உடன்பாடாகிய காந்தம் உடன்பாடாகிய காந்தத்தையும், எதிர்மறையாகிய காந்தம் எதிர்மறையாகிய காந்தத்தையும் விலக்கும். உடன்பாடாகிய காந்தம் எதிர்மறை யாகிய காந்தத்தையும், எதிர்மறையாகிய காந்தம் உடன்பாடாகிய காந்தத்தையும் இழுத்துக்கொள்ளும். இவற்றின் விபரங்களைப் பற்றிப் பின்னால் அந்தந்த ஸ்தானங்களில் இவற்றைக் குறித்துப் பேசும்போது தெளிவாய் விபரிக்கப்படும்.

ஒருவனுக்கு சர்ப்பம் தீண்டிவிட்டதாக வைத்துக்கொள்வோம். அவனுக்குச் செய்யும் சிகிச்சையாவது: சர்ப்பம் தீண்டி சொற்ப நேரமாயிருந்தால் தீண்டிய உறுப்பு அல்லது பாகத்தை, எது வரையில் விஷம் ஏறியிருக்கிற தெனத் தெரிந்து-அதற்கு மேல் ஏறாமல் அந்த ஸ்தலத்தைச் சுற்றிலும் இடக்கையால் கை சீரத்தில் பட்டுக்கொண்டிருக்கும்படியாகத் தொட்டு-சில தடவைப் பாஸ் செய்து மனதினாலும் விஷம் ஏறக்கூடாதெனச் சிந்தித்துத் தடை செய்து கொள்ள வேண்டும். ஏனெனில் பாம்பு விஷமானது குணத்தில் வரட்சியான குளிர்ச்சியாயிருக்கும். ஆகையால் அது சீக்கிரமாக இருதயத்துக்குச் சென்று இரத்த ஓட்டத்தை நிறுத்தி விடுகின்றது. ஆகையால் மனிதன் மரித்துவிடுகிறான். ஆனதினால்,

இடக்கையைக் கொண்டு பாஸ் செய்தால் குணமுண்டாகும். அப்படியே மந்திரிப்பவர்களும் இடக்கையால் மந்திரிப்பது நன்மை யாகும். பிள்ளு முள் சொள்ளபடி தடை செய்து கொண்டால் விஷம் ஏறுகிறது நின்றுவிடும். பிறகு கடித்த இடத்திலிருந்து அந்த உறுப்பின் கடைசி முடிவு வரையில்-அதாவது கையில் கடித்து இருந்தால் கை விரல்களின் நுனிவரையிலும், காலில் கடித்திருந்தால் கால் விரல்களின் நுனி வரையிலும்-அரைமணி நேரம் வரையில் பாஸ் செய்ய வேண்டும். ஒவ்வொரு பாசுக்குப் பின்னும் கையை உதறிவிட வேண்டும். ஏனெனில் கெட்ட குணங்கள் அப்பொழுது தான் நீங்கும். கடித்து அதிக நேரமாகி விட்டால் அல்லது விஷம் மூளைக்கேறி மூர்ச்சையாகி விட்டால் தலையிலிருந்து கால் விரல் களின் நுனி வரையில் பாஸ் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சுகமுண்டாகும்.

அதிக அப்பியாசமுள்ளவர்களும் அதிக வலுவான சித்தமுடைய வர்களும், வாயால் விஷம் இறங்கு என்றால் போதும், உடனே இறங்கி விடும். தலையிலிருந்து கால் வரையில் பாஸ் செய் வதற்கு நீளப் பாஸென்று சொல்லப்படும். இதன் விபரம் பின்னால் வரும். அப்படிச் செய்யும் போது மூர்ச்சை தெளிந்து உணர்ச்சி வந்தால் நல்லது இல்லாவிட்டால் சிலிர்த்த ரோமங்கள் படிந்து விட வேண்டும். விஷம் இறங்காவிடில் உரோமம் படியாது. உரோமங்கள் படிந்தும் உணர்ச்சி வராவிடில், புருவ மத்தியில் இரண்டு மூன்று விடுத்தம் வலுவாக ஊதவேண்டும். அப்படியும் உணர்ச்சி வராவிடில் அப்படியே விட்டுவிட வேண்டும். அரைமணி நேரத்தில் தானே தெளிந்து விடும். பாம்பு விஷங்களுக்குக் கீழிருந்து மேல் பரிசமாகப் பாஸ் செய்யக்கூடாது. தலைகீழான பாஸ் செய்வதினாலும், புருவ மத்தியில் ஊதுவதினாலும் எவ்வித மூர்ச்சைகளும் அல்லது ஆவேசம் வந்திருந்த போதிலும், உடனே நீங்கிவிடும்.

கொப்ப ஸ்திரீகளுக்கு இடுப்புக்குக் கீழ் சாதாரணமான பாஸ் செய்யக்கூடாது. அதனால் கொப்பம் விழுந்துவிடும். அப்படியே அவர்களுக்கு இடுப்புக்குமேல் தலைகீழான பாஸும் செய்யக் கூடாது. அதனால் கொப்பம் மேலே ஏறிவிடும். ஆகையால், எவ்விதப் பாஸும் செய்யாமல் சித்த வலுவைக் கொண்டு அல்லது ஜலத்தில் பவரைச் செலுத்தி பக்குவம் செய்ய வேண்டும். ஜலத்தில் பவரைச் செலுத்தும் விதமும், சித்தத்தை வலுவாக்கிக் கொள்ளும் விதமும் பின்னால் எழுதப்படும். கொப்பத்துக்குச் சேதமுண்டாகாத வழி ஏதாவது மெஸ்மெரிஸ சம்மந்தமாக புத்திக்கும் அனுபோகத்

www.miskinsha.blogspot.com

திற்கும் ஒத்திருந்தால் அவ்விதம் செய்யலாம். வயிற்றில் மிச்ச பிண்டங்களை வெளியாக்க வயிற்றிலிருந்து முழங்கால் வரையில் அரைமணி நேரம் பாஸ் செய்தால் வெளிப்படும். தொடாமல் சற்றுத் தொலைவில் திரைக்கு அப்புறமிருந்து கொண்டும் செய்யலாம். அல்லது ஒரு நாற்காலியாவது செய்யலாம். தன் சொந்த மனைவியாய் இருந்தால் தொட்டும் செய்யலாம். எவ்விதம் செய்த போதிலும் அதோடு சித்த வலுவையும் பிரயோகிக்கவேண்டும். இல்லாவிட்டால் ஒன்றும் நடக்காது. சித்தவலுவே சகல காரியத்துக்கும் உயிரென்று எண்ணிக்கொள்ளவும்!

சரீரத்தில் யாதொரு பாகம் அல்லது உறுப்பில் கத்திப் பிரயோகம் செய்யவேண்டுமானால், அப்பியாசிகன் செய்யப்படுகிறவன் பேரில் காந்த உறக்கம் உண்டாக்கவேண்டும். காந்த உறக்கம் உண்டானவுடன் அந்தப் பாகம் அல்லது உறுப்பின் மீது சில நடனை சிறிய பாஸ் அதாவது குறில்பாஸ் சீக்கிரம் சீக்கிரமாகச் செய்யவேண்டும். ஆனால் முன்போல் கையை உதறக் கூடாது. இல்லாவிட்டால் குணம் அதிகமாகத் தாவாது. பின்பு அந்த இடம் சேர்ந்து அசைவற்றுப்போகும்! அதன் மீது (Surgery) கத்திப்பிரயோகம் செய்யலாம்! வருத்தமிராது. ஆனால் அனுபோக சாலிகளுக்குச் செய்யப்படுகிறவன் பேரில் காந்த உறக்கம் உண்டாக்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் இரண்டு மூன்று பாஸ் செய்தவுடன் பலரைச் சீக்கிரம் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களா? அல்லவா? என்று சீக்கிரம் தெரிந்துகொள்வார்கள். சீக்கிரம் பலரை ஏற்றுக்கொள்ளக் கூடியவர்களாக இருந்தால், சில நடனை பாஸ் செய்து அந்த உறுப்பை அசைவற்றுப் போகும்படி செய்துவிடுவார்கள். அதன் பேரில் கத்திப் பிரயோகம் செய்யலாம். சீக்கிரம் பலரை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு முக்கியமாகக் காந்த உறக்கம் செய்ய வேண்டும்.

ஒரு நடனை பிரான்சிலுள்ள சாயல் எக்கமி என்பவர் ஒரு ஸ்திரீயின் ஸ்தன்னியத்தின் பேரில் மெஸ்மெரிஸம் செய்து, அதனை அசைவற்றுப் போகும்படிச் செய்து அதிலுள்ள (மார்பகப் புற்று) கட்டியை அறுக்க உத்தரவு செய்தார். அந்த இடம் உணர்வற்றுப் போய்விட்டது. பிறகு அதன் மீது பன்னிரண்டு நிமிஷம் வரையில் கத்திப் பிரயோகம் நடந்தது. அவளுக்கு யாதொரு வலியும் தோன்றவில்லை. சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தாள். இவ்விதமாக ஸ்திரீகளின் புண்பட்ட ஸ்தன்னியங்களை எத்தனையோ அவர்கள் கண்களுக்கு முன்னால்

அறுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு யாதொரு வேதனையும் தெரியவேயில்லை!

டாக்டர் எஸடேல் என்பவர் கல்கத்தாவில் ஓர் ஆஸ்பத்திரி கட்டியிருந்தார். அதில் மெஸ்மெரிஸ வித்தையினால் மனிதர்களை மயக்கி அவர்கள் அவயவங்களில் கத்திப் பிரயோகம் செய்துக் கொண்டிருந்தார்! அவர் அவர்களுக்கு குளோரபார்ம் உபயோகிக்கவே யில்லை. இதற்காகவே அந்த ஆஸ்பத்திரி கட்டப்பட்டிருந்தது. அவர் செய்த இரண வைத்தியங்களுக்கெல்லாம் மெஸ்மெரிஸ வித்தையையே உபயோகித்து வந்தாராம்!

2. நெடில் பாஸ்: இதனை லாங் பாஸ் (Long Pass) அல்லது தவில் பாஸென்று சொல்லப்படும். நீளப்பாஸானது சிரசு தொடுத்து கால் வரையில் உட்கார்ந்திருப்பவர்களின் பேரில் செய்யப்படுமானால் அதற்கு நீள பாஸ் அல்லது நெடில் பாஸென்று சொல்லப்படும். கட்டில் அல்லது தரையில் படுத்திருப்பவர்களின் பேரில் செய்யப்படுமானால் அதற்கு (Horizontal) ஹாரிஸான்ட்டல் அல்லது உபுக்கி அதாவது அருகுப் பாஸென்றும் (Oblique) ஆப்லிக் அல்லது க்கஜீ அதாவது கோணல் பாஸென்றும் சொல்லப் படும். இப்பாஸுகளைப் பெரும்பாலும் மேக்னடிக் (Magnetic) அல்லது மக்னாத்தீஸ் அதாவது காந்தப் பாஸென்றும் சொல்வ துண்டு. ஏனெனில் இதன் மூலமாகச் செய்யப்படுகிறவன் அல்லது பிரியாவியின் பேரில் ஆழ்ந்த காந்த நித்திரை உண்டாக்கப் படுகின்றது. இவ்விதப் பாசுகள் மகா குணமுள்ளதாய் இருக்கின்றன. இன்னும் இவ்வாறான பாஸுகள் வியாதிகளை இழுத்துச் சுகப் படுத்துவதற்காகச் செய்யப்படுமானால், கை சரீரத்தில் பட்டுக் கொண்டிருக்க வேண்டும். காந்த உறக்கம் மட்டும் உண்டாக்கு வதற்காகச் செய்யப்படுமானால் கை சரீரத்தில் படாமல் அலக்காக (தனியாக) இருக்க வேண்டும். எந்த வியாதிகளுக்கும் பொதுவாக சிரசிலிருந்து கால் வரையில் நீளப் பாஸ் செய்யலாம். ஒரு அங்கம் அல்லது ஒரு உறுப்பில் யாதொரு வியாதி இருக்குமானால் அந்த வியாதி இருக்கிற ஸ்தலத்துக்குச் சற்று உயரத்திலிருந்து, அந்த உறுப்பின் கடைசி முடிவு வரையில் சிறிய பாஸும் செய்யலாம். வியாதிகளுக்காகச் செய்கிற பாஸ் எந்தப் பாஸானாலும் ஒவ்வொரு பாஸுக்குப் பின்னும் கையை உதறிவிட வேண்டும். இல்லாவிட்டால் அவ்வியாதிகள் ஒரு சமயம் நமக்குத் தொத்திக்கொள்ளும். காந்த உறக்கம் உண்டாக்கச் செய்கிற பாஸுகளுக்கு கையை உதறக் கூடாது.

www.miskinsha.blogspot.com

3. இழுப்புப்பாஸ்: இதனை அட்ராக்டிவ் (Attractive) அல்லது கஷிஷி அல்லது ஐதுபி என்று சொல்லப்படும். இப்பாஸுகளை உபயோகப்படுத்துவதற்கு அதிக சித்த வலு வேண்டும். இப்பாஸுகளினால் செய்யப்படுகிறதாவது: செய்யப்படுகிறவனாகிய மாமூல் தொலைவில் இருப்பானாகில், செய்கிறவனாகிய ஆமீல் அவனைத் தன் பாரிசம் இழுக்கிறதாயிருக்கும். அதாவது செய்யப்படுகிறவன் முன்னால் தொலைவில் இருப்பதாக வைத்துக்கொள்வோம். அவன் நெஞ்சுக்கும் செய்கிறவனுடைய நெஞ்சுக்கும் சிறு கயிற்றைப்போல் ஓர் ஒளியின் தொடர்ச்சி ஏற்பட்டிருக்கிறதாகச் சித்தித்து, செய்கிறவன் தன் இரண்டு கைகளையும் அவன் முன்னால் நீட்டி அவ் வெறுமையாகிய கயிற்றைப் பிடித்துக் கொண்டு அவனைத் தன் நெஞ்சின் பக்கம் இழுப்பதேயாம்! அப்படிச் செய்யும்போது கை விரல்கள் மூடி இருக்கக்கூடாது. என்கிலும் விரல்கள் சற்று வளைந்ததாக விரிந்திருக்க வேண்டும். இவ்விதப் பாஸுகளினால் செய்கிறவனுடைய சித்தம் அதிக வலுவாகவும் கெட்டியாகவும் இருக்குமேயானால் – அல்லது செய்யப்படுகிறவன் மிகவும் கூர்மையான புலனுடையவனாக இருப்பானேயானால் அல்லது மெஸ்மெரிஸவித்தையின் பவரை சீக்கிரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய சுபாவமுடையவனாக இருப்பானேயானால்–இடையில் எத்தனை தடுப்புகள் இருந்தபோதிலும் அல்லது, அவன் எவ்வளவு தொலைவிலிருந்தபோதிலும் சரியே! அதிக குணமுண்டாகும். பெரும்பாலும் செய்யப்படுகிறவர்கள் உடனே செய்கிறவனிடம் வந்து முட்டிக் கொள்வார்கள். ஆகையால் முன்னேயே எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்! இவ்வித பாஸுகள் சபையில் வேடிக்கை காட்டுகிறவர்களுக்கு அதிகம் உபயோகப்படுகின்றன.

இன்னொரு வகையான இழுப்புப்பாஸ் யாதெனில், தன்னுடைய வலது கையை செய்யப்படுகிறவன் பாரிசம், பந்தாடுகிறவர்கள் கையில் பந்தை வைத்துக்கொண்டு எறிவது போல் வெறுங் கையை எறியவேண்டும். அப்படி எறியும்போது தன் வலது காலையும் முன்னுக்கு எடுத்து வைத்துவிட வேண்டும். இன்னும், "நாம் செய்யப்படுகிறவன் மீது ஒளியின் கயிற்றை வீசிவிட்டோம், அஃது அவனைப் போய்ச் சுற்றிக்கொண்டது" என்று சித்திக்கவும் வேண்டும். பின்பு அவனை நமது பாரிசம் இழுக்கவேண்டும். இது மிகவும் குணபாடுள்ள வழி இக்குணமுள்ள வழிபாட்டை எல்லோரும் அறியமாட்டார்கள்!

வேடிக்கை காட்டும்போது அனுபவசாலிகள், சபையில் உட்கார்ந்திருப்பவர்களின் பேரில் யாரார் மீது குணம் அதிகமாகத்

தாவுகின்றது என்று வெகு சுலபமாகத் தெரிந்துகொள்ளக் கூடும்! ஆனால், எவர்மீது குணம் அதிகமாகத் தாவுகின்றதோ, அவர்கள் நமது கை அசையும்போதெல்லாம் அவர்களும் அசைந்துவிடுவார்கள்! இன்னும் அவர்களின் சரீரம் நமது பாரிசம் முன்னுக்கு இழுக்கப்படுவதாகத் தெரியவரும். ஆனால் சிலர் மீது இவ்வளவு குணமும் உண்டாகும். அதாவது, அவர்கள் செய்கிறவனுடைய நெஞ்சில் வந்து வெகு வேகமாக முட்டிக்கொள்வார்கள்! அதனால் செய்கிறவர்கள் பெரும்பாலும் பூமியில் விழுந்துவிடுவார்கள்! பயங்கரமான இந்த செயல்களை மறுப்புப் பாஸின் மூலமாக தடுத்துக்கொள்ள வேண்டும்.

4. மறுப்புப்பாஸ்: இஃதானது இழுப்புப் பாஸுக்கு தேர் மாற்றமாயிருக்கும். இதன் விபரமாவது: நமது விரல்கள் சற்று வளைந்திருக்கும்படியாக, நமது உள்ளங்கையை செய்யப்படுகிறவன் பக்கம் திருப்பிக்கொண்டு, நமது கையை நீட்டி அவனை நம்மிடமிருந்து நமது உள்ளங்கையினால் முட்டித் தள்ளுவதுபோல் சைகை காட்டவும். அப்படிச் செய்யும்போது நமது எண்ணத்தினால் தடுத்து நமது கையினால் அவனை முட்டித் தள்ளுகிறோமென்று மனதினால் சித்திக்கவும் வேண்டும்!

5 தலைகீழான நெடில் பாஸ்: இதனை மாற்றமான நீளப் பாஸென்று சொல்லப்படும். நீளப் பாஸ் மூலம் ஜீவகாந்தப் பவரைச் செலுத்தப்படுகின்றது. மாற்றப் பாஸினால் வெளிப்படுத்தப்படுகின்றது இவ்விதப் பாஸுகளினால் பெரும்பாலும் சில நூதனங்கள் வெளிப்படுகின்றன! அதாவது: இப்பாஸை முதுகெலும்புக்குக் கீழ்ப்பாகத்திலிருந்து ஆரம்பித்து மேல் பாரிசமாக நமது கையைத் தலையின் மேல்பாகம் வரையில் கொண்டுபோகப் படுமானால், பெரும்பாலும் கூர்மையான புலன்களையுடையவர்களில் சிலர் ஆகாயத்தில் கொளுகப்பட்டு விடுகிறார்கள் (அந்தரத்தில் தொங்குவார்கள்) நாம் எச்சரிக்கையாய் இல்லாவிடில் பூமியில் கீழே விழுந்துவிடுவார்கள்! நான் என் சகோதரனுக்குச் செய்யும்போது எனக்கும் ஒரு விடுத்தம் இவ்விதம் சம்பவித்திருக்கிறது! புஷ்டியாகத் தடித்திருப்பவர்களின் மீது இவ்விதப் பாஸ் செய்யக்கூடாது! ஏனெனில் ஜீவகாந்த உஷ்ணம் அல்லது தத்துவமானது மேலே எழும்பும்போது நரம்புக்கோர்வைகள் அசைக்கப்பட்டு ஒரு சமயம் சிக்காய் விடக்கூடும்!

6. தலைகீழான குறில் பாஸ்: இதனைத் தலைகீழான சிறிய பாஸென்றும் சொல்வார்கள். இரண்டு கைகளையும் சேர்த்துக்

www.miskinsha.blogspot.com

கொண்டு செய்யப்படுகிறவன் முகத்தில் பாஸ் செய்கிறதாயிருக்கும். இவ்விதம் பாஸ் செய்து வலுவாக செய்யப்படுகிறவன் முகத்தில் வாயினால் ஊதினால் ஜீவகாந்த குணம் நீங்கிவிடும். அதிக அப்பியாசமுள்ள அனுபவசாலிகளுக்கு இவ்விதப் பாஸ் செய்ய வேண்டிய அவசியமில்லை. குணம் நீங்கும்படி வாயினால் உத்தரவினித்தே குணத்தை நீக்கக்கூடும்!

7. குற்றுப்பாஸ்: இது எழுத்தாணி அல்லது ஒரு கூருள்ள ஆணியைப் பூமியில் ஊன்றிக்கொண்டு பிணி, வேதனை, விஷம் முதலியவைகளை இறங்கும்படிச் சிந்தித்தால் உடனே இறங்கி விடும்! இரண்டு மூன்று விடுத்தம் செய்வதால் எவ்விதப் பிணிகளும், வருத்தங்களும், விஷங்களும் குணமாகாமல் போகாது! இதற்கும் சற்று சித்தவலு கெட்டியாக இருப்பது அவசியமாகும்!

8. வட்டப் பாஸ் அல்லது வளைவுப் பாஸ்: இது ஞான திருஷ்டி செய்யும்போது அடிக்கடி நெற்றியிலிருந்து இரண்டு விலாப் புறங்களுக்கும் ஒளியைப் பரவவிடுவதற்காகச் செய்யப்படுகின்றது.

9. தட்டுப்பாஸ்: இது மிருகங்களைத் தன் சித்தத்திற்குக் கீழ்ப்படுத்திக் கொள்ளவும், பயத்தைத் தெளிவித்து தைரியத்தைக் கொடுக்கவும், வேதனைகளை நீக்கவும் முக்கியமாகச் செய்யப் படுகின்றன. இதில் வெறும் தட்டு மட்டும் பிரயோஜனப்படாது. சித்த தத்துவத்தைப் பிரயோகிப்பதுடன், அம்மிருகத்தின் கண்களைக் கூர்ந்து பார்த்து மெதுவாக அதன் முகத்தையும் முதுகையும் தடவிக்கொடுத்து பின்பு அம்மிருகத்தின் இரு காதுகளையும் நமது இரு கையிலும் பிடித்து, கொஞ்சநேரம் சிந்தித்து மெள்ளச் செவியில் ஊதவும். பின்பு தட்டிக்கொடுத்து நம்மோடு அழைக்கவும், உடனே வசப்பட்டுவிடும்!

10. சுட்டுப்பாஸ்: இது பிணியின் ஸ்தலத்தில் ஒளியைச் சேகரம் செய்ய, செய்யப்படுகின்றது. இதில் மூன்று வகையுண்டு. இதைப் பிரயோகிக்கும் போது கை சரீரத்தில் படக்கூடாது!

11. தொட்டுப் பாஸ் அல்லது தடவுப் பாஸ்: அதாவது தொட்டு அல்லது தடவிப் பாஸ் செய்தல் முதலியன.

தொடக் பாஸ்: அதாவது ஒவ்வொரு பாஸுக்குப் பின்னும் நமது கைகளில் கெட்ட குணம் தாவாமல், அல்லது ஒட்டிக் கொள்ளாமலிருக்கும் பொருட்டுக் கையை உதறவேண்டும்.

12. தொடாப்பாஸ் அல்லது சைக்கினைப் பாஸ்: இதுவும் ஒரு ஸ்தலம் அல்லது அங்கத்தில் ஒளியைச் சேகரம் செய்து பரவவிடச் செய்யப்படுகின்றது. இதில் கை சரீரத்தில் படக்கூடாது!

13. குறிப்புப்பாஸ் அல்லது மறைவுப்பாஸ்: இதுவானது ஒரு வஸ்துக்குச் செய்ய வேண்டிய பாஸை, வேறொரு வஸ்துக்குச் செய்வது. இதனால் அந்த வஸ்துக்குக் குணம் உண்டாகின்றது. அதாவது மறைவில் இருப்பவர்கள் பிணியை நீக்க ஒரு மரம் அல்லது கட்டைக்குச் செய்தல்.

14. கூடாப் பாஸ் அல்லது தன்மைப் பாஸ்: இதுவானது தனக்குப் பலஹீன முண்டானால் அதை நீக்கிக் கொள்வதற்காகச் செய்யப்படுகின்றன. அதாவது நமது வலது கையால் இடது தோளிலிருந்து கால் வரையில், பின்பு நமது இடது கையால் வலது தோளிலிருந்து கால் வரையில், பின்பு இரு கையாலும் முகத்திலிருந்து கால் வரையிலும், இரண்டு மூன்று விடுத்தம் பாஸ் செய்துக் கொள்ளுதல். இதனால் நமக்குப் புதிய தந்துவமுண்டாகும்!

15. சுற்றுப் பாஸ் அல்லது கட்டுப் பாஸ்: அதாவது நம்மை அல்லது செய்யப்படுகிறவனைச் சுற்றிலும், அல்லது ஒரு அங்கத்தைச் சுற்றிலும் கார்மானத்திற்காகப் பாஸ் செய்தல். இதனால் அந்த அங்கத்தைச் சுற்றிலும் அல்லது நம்மைச் சுற்றிலும் அல்லது செய்யப்படுகிறவனைச் சுற்றிலும் கார்மானமாக (பாதுகாவலாக) ஒளி சூழ்ந்து நிற்கும். இதனால் நம்மையாவது செய்யப்படுகிறவனையாவது வெளியிலிருந்து யாதொரு வஸ்து பயமுறுத்தாட்டவாவது, யாதொரு நிழ்கை விளைவிக்கவாவது முடியாது. இதை உடல் கட்டு என்றும் சொல்லப்படும்.

மரித்த ஆவிகளை அல்லது ஏதாவது ஒரு தேவதையை தனித்திருந்து அழைப்பவர்கள் தன்னைச் சுற்றிலும் கார்மானத்திற்காக ஒரு கோடு கிழித்துக் கொள்வார்கள். அதனால் வருகிற வஸ்து அந்தக் கோட்டுக்குள் பிரவேசிக்காது! இந்தக் கோட்டுக்கு 'ஹிஸார்' அல்லது தடுப்பு என்று பெயர். இதில் நமது ஒளியானது ஒரு கோட்டை அல்லது மதிலைப் போல் நம்மைச் சூழ்ந்து நிற்கும்!

அன்பார்ந்த நேயர்களே!

நமது ஆசிரியப் பெருந்தகை அவர்களால் இதுவரை விளக்கப் பெற்ற-பாஸ்களின் மூலம் கார்ந்த நித்திரைக்கு கொண்டு போகும்

www.miskinsha.blogspot.com

விதமும், மக்களின் நோய்களை மருந்தில்லாமல் மெஸ்மரிஸம் என்கிற ஆத்ம தத்துவ ஜீவகாந்த ஒளி கொண்டு நோய் நீக்கும் விதமும், ஆகாரம், தண்ணீர், மருந்து முதலியவற்றில் காந்தசக்தி உண்டாக்கும் விதமும், தூரதிருஷ்டி மாமூலான பயிற்சி பெறும் மாணவனின் சூட்சுமத்தை திரிலோகங்களுக்கு அனுப்பும் வகை, பிறர் மனதில் உள்ளதைத் தெரிந்து கொள்ளும் வகை, மிருகம், பறவைகள் போன்ற ஜீவராசிகளையும் வசப்படுத்தும் விதம், பிணிகளை சேவல் போன்ற பறவைகளில் இறக்கும் வகை போன்ற வற்றை இதுவரை பார்த்தீர்கள்! படித்தீர்கள்! இனி பயிற்சி செய்வதன் மூலம் நமக்கு நாமே காந்த பவரை நம்மீது உண்டாக்கிக் கொள்ளும் முறைகளையும் பார்ப்போம்.

மெஸ்மெரிஸ யோக அப்பியாச முறைகள்:

1. நவீன கண் அப்பியாசம் – தீபத்தைப் பார்த்தல்: கண் அப்பியாசம் பற்றி முன்னரே பார்த்தோம். கட்புலன்களுக்கு இன்னொரு விதத்திலும் சுலபமாகப் பவரை உண்டாக்கலாம்!

அஃதாவது ஒரு சிறு விளக்கு ஒன்றைத் தயார் செய்து அதில் பசு நெய் அல்லது விளக்கெண்ணெய் ஊற்றி, பெரிதாக இல்லாமல் சிறிய திரி போட்டு அவ்விளக்கை ஏற்றி ஏகாந்தமான எந்த சப்தமும், காற்றும் இல்லாத ஓர் அறையில் நாம் தனிமையில் அமர்ந்து – புருவ மத்திக்கு நேராக தீபத்தை மூன்றடி தூரத்தில் வைத்து நாம், கண்ணிமைக்காமல்–தீபத்தை 15 நிமிஷங்கள் வரை "தீபம் அணைய வேண்டும்" என்று உறுதியான எண்ணத்துடன் பார்த்து வரவும். இப்படி பார்க்கப் பார்க்க மேற்படி தீபத்தின் ஒளி இருபது நாளைக்குள் நமது பார்வையின் வன்மையாலும் (Mental Force) மென்டல் போர்ஸாலும் சிறிது சிறிதாக அதன் வெளிச்சம் குறைந்து அணைந்து விடும். அப்போது கட்புலனுக்கும் மனதிற்கும் வல்லமை நிறைந்த ஜீவகாந்தப் பவர் உண்டாகிவிட்டது என்று உணர்ந்து கொள்ளலாம். இதனால் பற்பல சித்துக்கள் செய்யலாம்! பார்வையாலும் நினைவினாலும் மேற்கூறியபடி வியாதிகளைத் தீர்க்கவும் மிருகங்கள், பறவைகள் நமக்கு கட்டுப் படவும் பயன் படுகிறது இந்த ஜீவகாந்த ஒளி!

கண் அப்பியாசத்தில் மற்றொரு வகை: முன் போலவே தனிமையில் தனித்த அறையில் அமர்ந்து கோலி எனப்படும் பளிங்கு ரவையை சமதளத்தில் வைத்து கண்ணிமைக்காமல்–அந்த ரவை நகர வேண்டும் – என்று சிந்தனையை வலுவாக்கி

எப்பொழுதும் சிந்தித்து வந்தால் சீக்கிரத்தில் பார்வையின் வன்மையால் அந்த பளிங்கு ரவை நகர ஆரம்பிக்கும். நமதாசிரியர்களின் சிஷ்யர்களிடம் இந்த வல்லமைகள் நிறைந்திருந்தன. கண்ணாடியில் கண் பயிற்சி செய்வதைப்போன்று டிம்மி காகிதத்திலும் கறுப்பு பொட்டிட்டு பயிற்சி செய்யலாம்.

கை அப்பியாசம்:- காகிதத்தின் மூலம் பவர் ஏற்றிக் கொள்ளுதல்: நான்கு பக்கம் கொண்ட ஒரு முழு டிம்மி காகிதம் வாங்கி மேலிருந்து கீழ் வரை அரை அங்குலத்திற்கு ஒரு கோடாக (ரூல்டு பேப்பரைப்போல்) உள் பக்கம் முழுவதும் கறுப்புக் கோடுகள் போட்டு வைத்துக்கொள்ளவும். முன் போல் தனி அறையில் 3 அடி உயரம் உள்ள சமமான ஒரு மேஜை மீது அந்த கோடிட்ட காகிதத்தை ஒட்டி வைத்து, நாம் நின்று கொண்டாவது அல்லது ஒரு பலகை அல்லது அட்டையில் அக்காகிதத்தை ஒட்டி கீழே வைத்து – நாம் உட்கார்ந்து கொண்டாலது – நமக்கு வசதியாக இருந்து கொள்ளவேண்டும். முகம் வடக்குநோக்கி இருக்கவேண்டும். (உதாரணமாக பத்து என்று விரல்களைக் காட்டுவது போல்) இரு கைகளையும் விரித்து ஒன்றோடு ஒன்று தொடாமல் கோடிட்ட காகிதத்தில் கை படாமல் அரை அங்குல உயரத்திற்கு கைகளை மேலே உயர்த்திக் கொண்டு, மேலிருந்து கீழாக அதாவது வடக்கிலிருந்து தெற்கு பக்கமாக கைகளை ஒவ்வொரு கோடாக மெதுவாக கீழே இறக்கிக்கொண்டு வர வேண்டியது. இந்தப் பயிற்சியை ஆரம்பிக்கும்போது கும்பகம் (மூச்சை நிறைத்துக் கொண்டு) செய்ய வேண்டும். கைகளை இறக்கும் போது மூச்சையும் விட்டுக்கொண்டு வரவேண்டும்.

காகிதத்தில் கடைசிக் கோடு வந்தவுடன் மூச்சை முழுவதும் விட்டு, கைகளை மூடிக் கொண்டு காகிதத்தின் ஓரப் பக்கமாகவே மீண்டும் மேலே கையைக் கொண்டு போகவும். போகும் போது மூச்சை இழுத்துக் கொள்ள வேண்டும். மீண்டும் பழையபடி கையை விரித்து மேல் கோட்டின் மேல் ஆரம்பித்து அடிக்கோடு வரை கைகளைக் கொண்டு வரும்போது மூச்சை விட்டுக் கொண்டு வர வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கை காகிதத்தில் படக் கூடாது. கையைத் திருப்பி மேலே கொண்டு போகும் போது காகிதத்தின் நடுவிலும் கைசெல்லக்கூடாது. கண்களும் அசையாமல் ஒவ்வொரு கோடாக பார்த்துக் கொண்டே வர வேண்டும். இவ்விதமாக தினந்தோறும் அரை மணி நேரம் கிட்டத்தட்ட ஒரு மாதம் வரை செய்து வந்தால் கைகளுக்கு அளவற்ற காந்தச்சத்து மீடியன் அளரில் உண்டாகிறது. இதன் மூலம் ரோகங்களை குணப்

www.miskinsha.blogspot.com

படுத்தவும், மருந்து, தண்ணீர், ஷர்பத் போன்றவற்றில் மனுஷிய காந்த தத்துவத்தை அளிக்கவும் ஆகின்றன!

பிராணாயாமம் - மூச்சின் அப்பியாசம்:

தனி அறையில் தான் தனிமையாக இருந்து கொண்டு மெதுவாக ஒரு நிமிஷம் மூச்சை உள்ளுக்கு இழுத்து (பூரகம் செய்து) ஒரு வினாடி (24 நொடி) நேரம் மூச்சை நிறுத்தி (கும்பகம் செய்து) ஒரு நிமிஷ நேரத்தில் மூச்சை (இரேசகம்) வெளிவிடவும். மறுநாள் 1½-நிமிஷமாகவும், அதற்கடுத்த நாள் 2 நிமிஷமாகவும் இப்படியாக நாளொன்றுக்கு அரை நிமிஷம் அதிகப் படுத்தி கடைசியில் 12 நிமிஷம் ஒரே தடவையில் இழுக்கவும். 12 நிமிஷம் நிறுத்தவும். நிறுத்தியபடி மெதுவாக விடவும். இவ்வாறு பழக்கத்திற்கு கொண்டுவர வேண்டும்.

இப்படியாக பயிற்சி பூரணம் அடைந்தபின் உடலில் 72,000 நாடி நரம்புகளிலும், உடல்முழுவதிலும் ஜீவகாந்த சக்தி உண்டாகுகின்றது. இதனால் நமக்கே காலரா, பிளேக், விஷஜுரம், பாண்டு, குன்மம் (Ulcer), கூயம் முதலிய கொடிய வியாதிகள் அறவே இல்லாமல் ஒழிக்கலாம். நம் சரீரத்திற்கு மிகுந்த வலுவையும் சித்த ஒருநிலைப் பாட்டையும் உண்டாக்கிக் கொள்ளலாம்! மக்களின் நோய்களை மெஸ்மெரிஸ விதியின்படி குணப்படுத்தவும் ஆகின்றது.

முக்கிய அறிவிப்பு:

யோகப் பயிற்சி செய்யும் காலத்திலும் மற்ற நேரங்களிலும் இணை துணை இல்லாத பிர்மமாகிய அல்லாஹ் ஸுப்ஹானஹு-வ தஆலா என்னும் மிகப் பரிசுத்த மானவனும் மிக மேலானவனுமாகிய எல்லாம்வல்ல இறைவனையே நாடி, உண்மையுடன், வேறு எந்த நினைவும் இல்லாமல் - தான் தானாகவே உறுதியுடன் அதாவது தன்னம்பிக்கையுடன் – சாதகம் செய்வதுடன், பயிற்சி காலத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன் உணவருந்தி தாம் சுத்தமாகவும் இருக்க வேண்டும்.

ஆரம்ப அப்பியாசிகள் ஒரே ஊர், ஒரே இடம், ஒரே நேரம் என்பதை கடைபிடிக்க வேண்டும். ஏகாந்தமாக மூளையைச் சாந்தி செய்யும் நேரமாகிய காலை நேரம் (7 மணியிலிருந்து 8 மணி வரை) பயிற்சி (Practice) செய்து வரவும்.

இத்துடன் ஞான விநோத அஷ்டமாசித்து என்னும் மெஸ்மெரிஸம் முற்றுப் பெற்றது.

மனதின் ஸ்புலனமே மாயா லீலா!
சங்கற்ப மில்லா திருத்தலே சமாதி!

இல்மெ ரூஹானி.

முகவுரை:

கடவுளின் அம்ஸமே ஆத்மா! ஆத்மாவின் அம்ஸமே ஆகாயம்! ஆகாயமானது முடிவில்லாத அகண்டமாயிருக்கின்றது. இதன் விசாலத்தை எவராலும் மட்டுப் படுத்த முடியாது! ஆனால், ஆகாயத்தைவிட ஆன்மா அதிக சூக்குமமாகவும் ஆத்மாவை விடக் கடவுள் அதிகத் தூய்மையாகவும் இருக்கலாம். ஆகையால், சுத்த வெட்ட வெளியை அதற்கு ஒப்பிடுவது வழக்கம்! வெட்ட வெளியை அதற்கு ஒப்பிடுவதில்லை. கடவுளின் அம்ஸமோ எந்த வஸ்துவின் சுயத்தை விட்டும் ஒழியாது. ஆகையால், ஆகாயத்தை ஆன்மா என்றாவது, ஆன்மாவைக் கடவுளென்றாவது சொல்லலாம். கடவுளுக்கு மேற்பட்ட வலுவான வஸ்து ஒன்றுமில்லை! ஆகையால், இந்த ஞானத்தில் ஒவ்வொரு காரியத்தையும் கடவுளாகவே இருந்து செய்ய வேண்டும். இல்லாவிட்டால் நம் சித்தத்திற்கு அதிக வலுவிராது. நம் காரியத்தைக் கட்டாயம் சாதிக்க முடியாது! இதில் நமக்குச் சந்தேகமற்ற நம்பிக்கை இருக்கவேண்டும். நாம் நாடியபடி நமது ஆத்மா நமக்கு முடித்துத் தருமென்பதை ஞாபகத்தில் வைக்க வேண்டும்!

பூமியானது ஆகாயத்தில் ஒரு பந்தைப் போல் சுழலுகின்றது. அவ்வாறே சந்திரன், சூரியன், நக்ஷத்திரம் முதலிய எல்லாக் கோளங்களும் ஆகாயத்தில் சுற்றுகின்றன. அவற்றின் எல்லையைக் கடக்காமல், கடவுளின் பிரதிநிதியாகிய ஆத்மாவானது அடக்கி ஆள்கின்றது. பூமியும் ஒரு நக்ஷத்திரமாகையால் "சந்திரனைச் சூழ ஆகாயமிருப்பது போல்" பூமியைச் சூழ ஆகாயமிருக்கிறது. சுத்த வெளியாகிய ஆகாயத்தை உண்டென்றும் இல்லையென்றும் சொல்ல முடியாது! அதனைப் பார்க்கவும் முடியாது! அதிலுள்ள இருளையும், வெளிச்சத்தையும் பார்க்கலாம். அதனை அறியவும் முடியாது! அதில் பஞ்ச வர்ணத்தில் ஏதாவதொன்றைப் பார்க்கலாம். அறியலாம். ஆகாயத்தில் பறக்கும் பக்ஷிகளுக்கு யாதொரு தடையும் ஏற்படாத குறிப்பைக் கொண்டு அதனை உண்டென்று நம்பலாம். அதனை பிரம்மத்திற்கு ஒப்பிடலாம். அதன் விசாலத்தின் முடிவை எட்டிக் கொள்ள (சென்று அடைய) முடியாது. அதற்கு முடிவும் இல்லை!

www.miskinsha.blogspot.com

ஆத்மாவின் பிரதிநிதி மனம். மனத்தின் கீழ் அதன் காரியதரிசிகளாகிய அனேக ஆவிகள் இருக்கின்றன. அதன் சம்பந்தத்தினால் மனிதன் அனேக தொழில்களுக்கு அருகனாவான்! ஆத்மாவோ ஆனந்தமயமானது! மனம் விரும்பியதை அளிப்பதும், அதனைப் பரவசப் படுத்துவதும் அதற்குச் சொந்தமானது. இந்தக் காலத்தில் ஜால வேலைகள் ஏற்பட்டு உண்மையான வேலைகளுக்குப் பஞ்சம் ஏற்பட்டு விட்டது. எதார்த்தமான ஞானம் மறைந்திருக்கின்றது!

இல்ம் அல் ரூஹானி என்னும் ஆத்ம ஞானம்:

அதாவது ஆத்ம ஞானிகள் இரகசியமாய்ச் செய்யும் சித்துகளுக்கு ஆசான்! இதைத்தான் இங்கிலீஷில் ஸ்பிரீச்சுவலிஸம்-ஹிப்னாட்டிஸத்திற்கு உயிர் ஜீவன் – மெஸ்மெரிஸம் – ஆன்ம மின்சாரமாகிய மனோகாந்தக் கவர்ச்சியின் வல்லமை-முஷாஹிதா, முராக்கிபா, முஆயினா, முகாஷிபா, முவாஸிலா என்னும் பரிபாஷையாகப் பேசுகிறது! கஷ்ஃபு, கராமத்து, 'முஃஜிஸாக்கள்' பரீட்சை செய்யப்பட்டது. இதனைக் கடைசியாக எழுதப்படும்.

ஒரு விஞ்ஞாபனம்:

ஆத்மஞானமானது எந்த மதத்தின் எல்லைக்கும் உட்பட்டதன்று! அஃது எந்த மதத்தையும் தள்ளாது! எந்த மதமும் மத வைராக்கியமில்லாவிட்டால் அதனைச் சம்மதிக்கும்! மத வைராக்கியமோ, நெருஞ்சி முள்! இந்தப் பாதைக்கு இதுவே பெரும் பாலாருக்குக் கருவ முள்ளாயிருக்கலாம்! ஆனதால் இதை எல்லாரும் அனுசரிக்க வேண்டிய அவசியமில்லை! எவ்வித நிர்ப்பந்தமுமில்லை! ஆனால் இந்த ஞானத்தை ஒரு மதத்தின் எல்லைக்கு உட்படுத்தி விளங்குவது அசாத்தியம்! இஃது ஒரு மதத்தின் எல்லைக்கு உட்படாவிட்டாலும்-எம்மதத்தின் மத சம்மந்தமான சடங்குகள், ஜபதபம் யாவும் இதனைச் சேர்ந்தது! ஆனதால் – எல்லா மதமும் இதையே தழுவி நிற்கும்!

ஆத்ம ஞானமோ, எல்லா மதத்தையும் சம்மதித்ததாக அதன் எல்லையை விட்டும் கடந்து நிற்கும்! இந்த ஞானமானது அனேகரால் பரீட்சிக்கப்பட்டது. மேலும் ஹிப்னாட்டிஸம், மெஸ்மரிஸம் முதலான சித்துக்களுக்கு முடிவான மூலம்! இதில் சொல்லப்பட்ட செய்திகளை இந்நூல் பார்த்த அன்றைய தினமே பரிசோதிக்கலாம்.

ஆனால் சில காரியங்கள் ஏழு நாளைக்குள் முடிவுக்கு வருகின்றன! இதற்குள் அப்பியாசத்தை இரண்டு மூன்று வாரமாவது பழகிக்கொண்டால் துரிதமாக முடிவுக்கு வரும்! ஒருகால் தாமதப்பட்டால் அப்பியாசத்தை விட்டுவிடக் கூடாது! (பயிற்சியைத் தொடர்ந்து செய்யவும்.)

அப்பியாச விபரம்:

ஆகாயமானது முடிவில்லாத விசாலமாயிருக்கிறது! முடிவில்லாத விசாலத்திற்கு எந்த இடமும் நடு மையம் ஆகலாம்! பூமி என்றால் பூமியிலுள்ள வஸ்துக்களும் அதைச் சேர்ந்தது. ஆகையால், பூமிக்கு மேலும் கீழும், தெற்கும் வடக்கும், மேற்கும் கிழக்கும், முடிவில்லாத ஏக வெட்ட வெளியாயிருக்கின்றது என்பதை மறக்கக்கூடாது! அதில் பல தூரங்களில் நக்ஷத்திரமாகிய உலகங்கள் சஞ்சரிக்கின்றன!

1. இப்போது நாம் அப்பியாசிக்க வேண்டியது என்ன வென்றால் நமக்கு மேலும், கீழும், முன்னும், பின்னும், இடப்புறமும், வலப்புறமும் முடிவில்லாத ஏக வெட்ட வெளியாயிருக்கிறதாகச் சிந்தித்து, வெளியிலுள்ள ரூபங்களையும், மனதிலுள்ள நமது ரூபங்களையும் (நமது சரீரம் உள்பட) அதில் அழித்துவிடவும். மீதியை அதாவது-இவ்வாறு சொரூப நாசமான மிச்சத்தை அல்லது களங்கமற்ற தெளிவான அம்ஸத்தை-அரூபத்திற்கு அரூபமான என்றைக்கும் உள்ள அழியாத தானே தானாயுள்ளது எதுவோ, அதைச்சேர்ந்தது எனத் தெரிந்து கொள்ளவும். இவ்வாறு நமது அடிமூலம் முடிவில்லாததாகவும், அழிவில்லாததாகவும் இருக்கிறது. மேலும், வெளியிலுள்ள ஆகாயமே மனதின் உள்ளும் இருக்கிறது! எதையும் மன முயற்சியினால் உண்டாக்கலாம்!

ஆகாயமோ, ஏற்கெனவே உள்ளது. வெளியில் உண்டான தோற்றங்கள் மனதின் சாகூியாகவும், மனதிலுண்டாகிற தோற்றங்கள் விருத்தியின் சாகூியாகவும் இருக்கிறது! இந்த விர்த்தியின் சாகூியானது மனதைவிட்டு ஒழித்தவுடன் "களங்கமற்ற கண்ணாடியில் அதற்கு முன்னாலுள்ள பொருள்கள் யாவும் தோற்றுவது போல்" அந்தத் தெளிவான மனவெளியில்-வெகு தொலைவிலுள்ள நக்ஷத்திரங்களாகிய-நூதனமான உலகங்கள் தோன்றும்! அதில் ஒவ்வொன்றிலும் உள்ள ஆச்சரியங்களையும், பூமியிலுள்ள அதிசயங்களையும் காணலாம்! இதை இல்மெ இஷ்ராக் என்று

www.miskinsha.blogspot.com

சொல்வதுண்டு. இதில் முடிவான தேர்ச்சிக்குப் பின்னால் சூக்கும மான ஆவிகள் சமைகிற விதமும், மறுமையின் இரகசியங்களும் தெரியவரும்!

இந்த அப்பியாசத்தைச் செய்யச் செய்ய அதற்கு மேம்படியான ஞானங்கள் வெளியாகும்! இதற்கு இல்மெ முகாஷிபா என்று பெயர்.

மத வைராக்கியத்தில் செல்லவேண்டாம்! அது சன்மார்க்கத்தைப் போதித்துப் பகையை உண்டாக்கும்! அனேகர் இந்த ஞானங்களை வாசித்திருந்தும் தங்கள் மதத்தைச் சரியாய் வைத்திருக்கிறார்கள். எவர்கள் இந்த ஞானத்தை வாசித்தால் தங்கள் மதம் தப்பிப்போகுமென்று எண்ணுகிறார்களோ, அவர்கள் இந்த நூலை வாசிக்கவே கூடாது! இந்த ஞானத்தை மதத்தின் எல்லைக்கு உட்படுத்தி அதன் இரகசியங்களை மறைத்துத் தந்திரமாகவும், பரிபாஷையாகவும் எழுதுவதால் அனேகருக்கு விளங்கிக்கொள்ள இயலாது!

2. சில ஞானிகள் மனோவிர்த்தியின் சகஷியை அழிக்க இயலாது என்கிறார்கள். ஏனென்றால், உதிப்பை ஒருவரும் தடுக்க முடியாது! உதிப்போ கடவுளின் தூதாயிருக்கிறது! பூமியில் தோன்றும் நிழலைப் புதைக்கவும், ஜலத்தில் தோன்றும் நிழலை அழிக்கவும் முயற்சிப்பது கூடாத காரியமென்கிறார்கள். இது ஞானத்திற்குச்சரிதான்! ஏனெனில், ஞானிகள் தற்போதத்தை விட்டு ஒழிந்ததுபோல், அருள்போதத்தையும் விட்டு ஒழிவார்கள்! அதாவது : தானென்பதையும் தான் கடவுளென்பதையும் விட்டு விடுவார்கள்! கடவுளென்பதும் தனக்கு மாயையாயிருப்பதால், தானே உண்டாகும் தெய்வீக நாதத்தால் அருள் போதத்தையும் விட்டுவிடுவார்கள்! ஞானிகள் ஒன்றையும் உண்டாக்குகிறதுமில்லை-அழிக்கிறதுமில்லை!

3. சில யோகிகள் "விர்த்தியை விர்த்தியைக் கொண்டே நசிக்க வேண்டும். சுத்த ஆகாயமான மனவெளியில் மனதின் சங்கற்பங்களையும், விஷயங்களையும் பழக்கத்தால்-தலையெடுக்காமல் நாசம் செய்துவிடலாம்" என்கிறார்கள். இருக்கிறது அழியாது! இல்லாமலிருந்துவருகிறது அழியும்! ஆகையால், சில ஞானிகள். தன்னில் கேட்கும் தொனியை மனமுயற்சியால் கண்டுபிடித்து – பிரணவ சாதனை செய்து புலன் பொறிகளை அடக்கி – மனதின் பல எண்ணங்களையும் நாசம் செய்து விடுகிறார்கள். இது பிரம

ஞானத்தைச் சேர்ந்தது! இதன் இரகசியங்களை இவ்விடத்தில் பேசுகிறது தகுதியல்ல! மேலும் இஃது இராஜயோகத்தைச் சேர்ந்தது.

ஆகாயத்தில் காற்றசைவதுபோல் மனதில் அறிவசையும்! அதில் பிராண அம்ஸமான அறிவும், காற்றின் அம்ஸமான அசைவும் இருக்கிறது! நமது இருதயத்தில் பிராணவாயுவின் அசைவு இருக்கிற வரையில் மனதின் சங்கற்பம் நீங்காது!

4. சில யோகிகள் ஹட்யோகத்தினால் சுவாச அப்பியாசம் செய்து பிரணாயாமம் செய்வதால், அவ்வசைவை நிறுத்த மனோவிர்த்தியை நாசம் செய்கிறார்கள். இது மஹா கஷ்டம்! சிலருக்கு ஒத்துக்கொள்ளும். சிலருக்கு ஒத்துக்கொள்ளாது! விஷத்தைச் சாப்பிடுவது எல்லார் சுபாவத்திற்கும் ஏற்றுக்கொள்ளாது. இதைப் பற்றி நாம் பேசுவது தகாது! இந்த சாதனைகளை ஏற்படுத்தின மஹான்கள் வசமே ஒப்புவித்துவிட வேண்டும்.

இந்த அப்பியாசத்தால் திடீரென உஷ்ணமாவது குளிர்ச்சியாவது ஏற்பட்டுவிடும். இதனால் மனதின் சங்கற்பங்கள் நீங்குமென்றும், மனோவிர்த்தி நாசமாகுமென்றும், மனதின் சலனம் நீங்கிவிடுமென்றும் திட்டப்பட்டிருக்கலாம்.

நமது எண்ணங்கள் முடிவில்லாத மன ஆகாயமாகிய சமுத்திரத்தின் அலைகளாயிருக்கும்! மன வெளியானது அலையற்ற சமுத்திரம் போல் ஆகிவிடுமானால், கடவுளின் ஒளி அல்லது சுத்துவம் ஆத்மாவிலும், ஆத்மாவின் ஒளி அல்லது சுத்துவம் மனதிலும் வெளியாகும்! இதனால் சித்த ஜயமுண்டாகும்! பிரகிருதியை (பஞ்சபூதங்களை) ஜயிக்கலாம். அஷ்டசித்திக்கும் ஆளாகலாம்!

5. சில யோகிகள் புருவ மத்தியில் நேரட்டத்தை வைத்து கண்மூடி மனதின் பார்வையால் நோட்டமிடுகிறார்கள். பார்வையின் கொடுமையால் புலன் பொறிகளை நாசமாக்கித் நாதிருஷ்டியை உண்டாக்கிக் கொள்கிறார்கள்!

நமது மனதிற்குக் கண் இல்லை-ஆனால் அது பார்க்கும்.

காதில்லை – ஆனால் அது கேட்கும்.

மூக்கில்லை – ஆனால் அது முகரும்.

நாவில்லை – ஆனால் அது ருசிக்கும்

சரீரமில்லை – ஆனால் அது ஸ்பரிசிக்கும்.

www.miskinsha.blogspot.com

சரீரத்தின் புலனை அடக்குவது பெரிதல்ல – அதற்கு மூலம் புருவமத்தி. மனதின் புலனை அடக்குவது தான் பெரிது! அதற்குரிய ஸ்தானம் தலை முளையின் நடு மையம். உச்சியின் கீழாயிருக்கும்! இந்த ஸ்தானத்தைச் சில யோகிகள் மனதின் பார்வையால் நோட்டமிடுகிறார்கள். பார்வையின் கொடுமையால் மனதின் புலன் பொறிகள் நீற்று நாசமாய் விடுகின்றன! இதனால் கபாலத்தின் வழியாகத் தங்கள் சூக்குமத்தைக் கொண்டு ஆகாய வெளியில் சென்றுவிடுகிறார்கள். இவர்கள் தொலைவிலுள்ள நக்ஷத்திரமாகிய உலகங்களில் சென்று அங்குள்ள அதிசயங்களைப் பார்க்கலாம். சூக்கும சரீரமெடுக்க வேறு உபாயங்களும் உண்டு! அதைச் சூக்குமம் எடுக்கும் விதிகளில் சொல்லப்படும்.

6. நமக்குப் பிரியமான உருவத்தை அல்லது, நமது ரூபத்தை மனதால் முன்னிறுத்தி சில யோகிகள் மனதின் பார்வையால் நோட்டமிடுகிறார்கள். சில காலம் இந்த அப்பியாசம் செய்வதால், தூர தேசத்திலுள்ள நமது சினேகிதன் ஒருவனை நம்மோடு கூட நிற்பதாகச் சிந்தித்துப் போட்டோ பிடித்தால் நம் படத்தோடு சினேகிதன் படமும் கூட விழுந்திருப்பதாகப் பரீட்சித்திருக்கிறார்கள். மேலும், அந்த ரூபத்தைப் பார்க்கப் பார்க்கப் பார்வையின் கடுமையால் அதிகப் பிரகாசமாய் இலங்கும்! பின்பு நம்மோடு பேசும். நம் நாட்டங்களை நிறைவேற்றித்தரும்! இந்த அப்பியாசத்தால் நம் மனம் நமக்கொரு தேவதைபோல் வசமாகும். இந்த அப்பியாசத்தினாலும் புலன்கள் சிதறாமல் மனம் குவியும்.

முதலாவது இதில் துவக்கமாகச் சொல்லப்பட்ட ஆகாய வெளியின் அப்பியாசத்தைக் கடைப்பிடியாய்ப் பிடித்து எப்போதும் சாதித்துவர வேண்டும்.

மனதின் பிரதிநிதி ஆகாயம்! ஆகாயத்திலுள்ள உலகங்களும், அதில் நிறைந்துள்ள தத்துவங்களும் மனதின் தத்துவங்களாக இருக்கின்றன! மனமோ, ஆத்மாவின் தத்துவம்! ஆத்மாவோ கடவுளின் தத்துவமாயிருக்கின்றன! ஆகையால், இவைகளை பூத ஆகாயம், மன ஆகாயம், ஆன்மாகாயம், பிரமாகாயம் என நான்கு பிரிவாகச் சொல்லலாம். ஆகையால், இந்த அப்பியாசமோ பிரம ஞானத்திற்கு ஒத்தது. மிகவும் சிறந்தது!

கடவுளின் அம்சம் இச்சை மயமாகவும், ஆத்மாவின் அம்சம் பார்வை மயமாகவும், மனதின் அம்சம் அறிவின் மயமாகவும், ஆகாயத்தின் அம்சம் தத்துவ மயமாகவும், எல்லா வஸ்துக்களிலும் விளங்கும்! இச்சை மயத்தைத் தத்துவ ஞானிகள் கவர்ச்சித்

தத்துவமென்று சொல்லுவார்கள். இந்தத் தத்துவமோ, பிராணிகளின் காமமாகவும், தாவர வஸ்துக்களில் சத்தாகவும், நிரஸ வஸ்துக்களில் கவர்ச்சித் தத்துவமாகவும் விளங்கும். எல்லா எண்ணங்களிலும், எல்லாத் தத்துவங்களிலும், எல்லாப் பொருள்களிலும் கடவுளின் சம்பந்தம் உண்டாயிருக்கும்!

இந்த அப்பியாசத்தால் "சூரியக் கண்ணாடியில் அல்லது பழுக்கக் காய்ச்சின இரும்பில் அக்கினி வெளியாவது போல்", அல்லது "இரும்பைக் காந்தத்தில் தேய்த்தால், காந்தத்தின் சக்தி இரும்பில் வெளியாவதுபோல்" நமது மனதுக்கு ஆத்ம சக்தியும், கடவுளின் தத்துவமும் உண்டாகும்! இதில் சரிவர சொரூப நாசமுண்டாகாவிட்டாலும் பழகின வரையில் சில சித்துக்களைச் செய்யலாம்!

மேல் நாட்டார் அப்பியாசத்தில் அவர்களுக்குச் சரிவர சங்கற்ப விகற்பங்கள் நீரவில்லை! என்றாலும், அவர்கள் பழகினவரையில் சில சித்துக்களைச் செய்கிறார்கள்!

இந்த அப்பியாசம் செய்யச் செய்ய மனோவிர்த்தியாகிய சங்கற்ப விகாரமென்னும் சலனங்கள் நீங்கிக்கொண்டும், மனதின் ஆட்டம் நின்றுகொண்டும், ஆத்மசக்தியாகிய அற்புதம் செய்யும் சக்தி அதிகப்பட்டுக்கொண்டே வரும்! கடைசியாகச் சங்கற்ப விகாரங்கள் முற்றிலும் நீங்கிவிடும்! அப்பொழுது நமது மனதில் ஆத்மசக்தியும், கடவுளின் தத்துவமும் முற்றிலும் வெளியாகும்! அப்பொழுது நமக்கு ஒரு சங்கதியும் மறைந்திராது! ஓர் அற்புதமும் செய்ய இயலாமற் போகாது! இதில் வெகு கெட்டியான உறுதி இருக்கவேண்டும்.

இந்த அப்பியாசத்தைக் கண்முடிச் செய்யவேண்டும். சகாயம் நீங்காமல் அப்பியாசிக்கிறவர்கள் கண் திறந்தும் செய்யலாம். பகலில் அரைமணி நேரம், இரவில் அரைமணி நேரம் குறிந்த ஒரே நேரத்தில் ஒரே இடத்தில் அப்பியாசிக்க வேண்டும். இடத்தையும், நேரத்தையும் காரணமில்லாமல் அடிக்கடி மாற்றக்கூடாது. அரை மணி நேரத்திற்குக் குறையாமல் அப்பியாசிக்க வேண்டும். அதிகப்படுத்துவது மேல்!

பத்திய விபரம் :

சாராயம், மாமிசம், ஸ்திரீபோகம், அதிக உஷ்ணமான பதார்த்தம் மிகுதமாய்க் கூடாது! நிதகாலம் (எப்போதும்) குளித்துப் பரிசுத்தமான ஆடைகள் அணியவேண்டும். எல்லாச் பேரிலும்

www.miskinsha.blogspot.com

அன்பாகவும், சாந்தமாகவும், சன்மார்க்கமாகவும் இருக்கவேண்டும். வெறு வயிறாகவும், வயிறு நிறைந்திருக்கும்போதும் அப்பியாசம் செய்யக்கூடாது! அதிகத் தூக்கமும், அதிக விழிப்பும் கூடாது! பால், வெண்ணெய்-தலை மூளைக்கு வலுவும், மனதுக்குத் திடனும் அளிக்கக்கூடிய பதார்த்தங்களைச் சாப்பிட்டு வரவேண்டும். பன்றி இறைச்சி, மாட்டு இறைச்சி கூடாது! அப்பியாச காலங்களில் கஞ்சா, அபின் முதலிய போதையான வஸ்துக்களை அனுபவிக்கக் கூடாது! இந்த அப்பியாசத்தில் உஷ்ணம் அதிகப்படும். குளிர்ச்சி யான வஸ்துக்களை உபயோகிக்கவும். ஒருகால் குளிர்ச்சி அதிகப் பட்டால், குளிப்பதை விட்டு உஷ்ணமான பதார்த்தங்களைச் சேர்க்கவும். அவசியமில்லாமல் குளிக்கவும், குடிக்கவும் வெந்நீர் ஆகாது! அப்பியாசம் செய்தவுடன் அரை மணி நேரத்திற் குள்ளாக எவ்வித பானமும் செய்யக்கூடாது!

பசி, தாகம், மோகம், விழிப்பு, தூக்கம், மலம், ஜலம் இவைகள் நம்மை வம்பிக்காமல் நாம் அதனை விட்டிருந்தால் நல்லது. அதனால் நமக்கு யாதொரு ஹிம்சை இருக்கக்கூடாது. இவ்வாறு நம் தத்து வங்கள் நமது சித்தத்திற்குக் கீழ்பட்டிருந்தால் பிரகிருதி ஜய முண்டாய் விட்டது! அப்பியாசத்தை விட்டுவிடலாம்! எவ்வித சித்துக்களையும் செய்யலாம்! சிலருக்குக் கொஞ்ச காலமும், சில ருக்கு நீண்ட காலமும் செல்லும்! சிலருக்கு இவ்வளவு சாத்தியப் படாது. கொஞ்சம் சாத்தியமாகும். சித்தஜயமுண்டானால் எவ்வித பத்தியமும் வேண்டியதில்லை! பிணியற்றுவிட்டது! ஒருகால் அப்பியாசக் குறைவால் பிணியுண்டானாலும் மனோசக்தியின் கொடூரத்தால் தெறித்துப்போகும்!

1, பிறர் மனதின் செய்திகளை அறிதல்:

எவன் மனதின் சங்கதிகளை அறியவேண்டுமோ, "அவன் மன தும் நம் மனதும் ஒன்று அல்லது அவன் ஆத்மாவும் நம் ஆத்மா வும் ஒன்று நாங்கள் இருவரும் ஏக-ஒரே முடிவில்லாத-வெட்ட வெளியாயிருக்கிறோம். எங்கள் இருவருக்கும் யாதொரு பேத மில்லை" என-நமது மனதின் உதிப்புக்களைத் தடுத்து, நமது மனதின் பல எண்ணங்களை நீக்கி, ஒரே மனதாய் எண்ணம் அசையாமல்-வெகு உறுதியோடு வலுவான சித்தமுள்ளவனாய் இருப்போமாயின், நமது மன முயற்சியன்றி அவன் மனதிலுள்ள செய்திகள் நம் மனதில் வெளியாகும்!

2. இறந்துபோன ஆத்மாவின் மனதிலுள்ள செய்திகளை அறிதல்:

எந்த ஆத்மாவின் மனதின் செய்திகளை அறியவேண்டுமோ, அந்த ஆத்மாவின் சமாதிக்கு அருகில் சென்று, அந்த ஆத்மாவும் நம் ஆத்மாவும் ஏக-ஒரே வெட்டவெளி அல்லது ஆகாயமாயிருக்கிற தெனச் சிந்தித்து, மனதின் அசைவுகளை நீக்கி ஒரே நினைவாக இருந்தால், நமது மனதின் முயற்சியன்றி ஓடிவருகிற எண்ணம் அந்த ஆத்மாவின் மனதின் செய்திகளாயிருக்கும்! உயிராயிருப்ப வனின் ஆத்மாவைவிட மரித்தவனின் ஆத்மா சரீரத்தின் தடை இல்லாததினால் அது சீக்கிரத்தில் நம்மோடு சம்பந்தப்படும். சில சமயங்களில் அது வெகு தூரத்திலிருக்கும். நம் சம்பந்தத்தை எட்டிக்கொள்ளாத வரையில் அது நம்மோடு சம்பந்தப்படுகிற தில்லை! ஆகையால், நம் மனவெளியை அதிக விசாலமாக்கிக் கொண்டிருக்கவேண்டும்!

3. ஓர் ஆத்மாவின் தத்துவங்களை நம் ஆத்மாவில் எடுத்துக்கொள்ளும் விதம்:

எந்த ஆத்மாவின் தத்துவத்தை நம் ஆத்மாவில் எடுக்க வேண்டுமோ, அந்த ஆத்மா மரித்திருந்தாலும், உயிராயிருந்தாலும் அந்த ஆத்மாவுடன் நம் ஆத்மாவை சம்பந்தப்படுத்தவேண்டும். அஃதாவது அந்த ஆத்மாவும் நம் ஆத்மாவும் ஆகாயத்தைப்போல் ஒரே வெட்ட வெளியா யிருக்கின்றதெனச் சிந்தித்து "அந்த ஆத்மாவே நான்! அதன் தத்துவமே என் தத்துவமாயிருக்கின்றது" எனக் கருதவும். நமக்குத் திடமும் நம்பிக்கையும் உண்டானால் அதன் சம்பந்தம் உண்டாய்விட்டது. நம்மால் ஏலாத காரியத்தை அதன் உதவியைக் கொண்டு செய்யலாம். பெரிய காரியங்களுக்கு மஹான்களின் ஆத்மாவின் சம்பந்தம் அல்லது கடவுளின் சம்பந் தத்தை உண்டாக்கிக் கொள்ளலாம்! இதற்கு நாமும் மகாப் பரிசுத்தமான ஞானியாயிருக்கவேண்டும். இறந்தவுடன் சூக்குமத் திற்குச் சரீரத்தை விட பத்துப்பங்கு வலு அதிகமாய் விடுகிறது. சிலவற்றுக்கு அதன் ஞானத்திற்குத் தக்கபடி இன்னமும் அதிகமாயிருக்கும். இவ்வித சம்பந்தத்தை ஓர் ஆத்மாவுடன் உண்டாக்கும்பொழுது, அது மரித்திருந்தால் நம்மோடு சம்பந்தப் பட்டவுடன் அது சீக்கிரத்தில் வந்து நமக்கு மட்டும் தன் ரூபத்தைக் காட்டி நம்மோடு பேசுவதும் உண்டு! மரித்தும்போன மனிதனின் கெட்ட ஆவிகளுடன் இவ்வித சம்பந்தத்தை உண்டாக்கிக் கொள்ளுவது மகா பயங்கரம். வலுவான சித்தமுள்ள ஞானிகளுக்குக் குற்றமில்லை

www.miskinsha.blogspot.com

4. ஓர் ஆத்மாவில் நம் மனதின் செய்திகளைப் போட்டு விடுதல் அல்லது நம் ஆத்மாவின் தத்துவத்தை அளித்தல் விபரம் :

அந்த ஆத்மாவையும் நம் ஆத்மாவையும் ஆகாயத்தைப்போல் ஏக ஒரே வெட்ட வெளியாகச் சிந்தித்து, நம் எண்ணம் அதன் எண்ணமென்றும், நம் தத்துவம் அதன் தத்துவமென்றும் கருத வேண்டும். இவ்விதம் சலனமற்று ஒரே நினைவாக இருந்தால் நம் எண்ணமாகிய மனதின் செய்திகளும், நமது தத்துவங்களும் அதில் வெளியாய்விடும்!

5. நடக்கப்போகிற செய்திகளை முந்தியே தெரிந்துகொள்ளும் விதம் :

நம்மை முடிவில்லாத ஆகாயத்தைப்போல் சுத்த ஏக வெட்ட வெளியாகச் சிந்தனை செய்து மனதின் அசைவில்லாமல் இருப்போமாகில், கனவிலாவது, அசரீர வாக்கினாலாவது அவ்விஷயம் நிகழ்கிறவிதத்தைப் பிரத்யக்ஷ ரூபமாகவாவது விளக்கிக்காட்டப் படும். இது சில சமயம் ஏழு நாளைக்குள் தெரியவரும். நாம் விடாமல் அரைமணி நேரமாவது சாதித்துவர வேண்டும்!

6. தூரதிருஷ்டியை உண்டாக்கிக்கொள்ளும் விதம் :

நம்மை சுத்த சூனியமாக கீழ், மேல், முன், பின், இடதுபுறம், வலதுபுறம், நம் சரீரம் உள்பட இல்லையெனக் கருதி யாதொரு ரூபமில்லாமல், முடிவில்லாத ஒரே ஆகாயமாய்ச் சிந்தனை செய்து "அலையற்ற சமுத்திரம்போல்" இருந்தால்-"களங்கமற்ற கண்ணாடியில் எதிரிலுள்ள பொருள்கள் தோற்றுவது போல்" தொலைவிலுள்ள நக்ஷத்திரமாகிய உலகங்கள் நம் மன ஆகாயத்தில் தோன்றும். அதற்குப்பின்னால் எந்த இடத்தையும் நோக்கினால் அது தடையின்றித் தெரியும்!

7. இறந்துபோன ஆத்மாவைக் கூப்பிட்டுப் பேசுதல்:

எந்த ஆத்மாவைக் கூப்பிட்டுப் பேசவேண்டுமோ, அந்த ஆத்மாவையும், நம் ஆத்மாவையும் ஒன்றாகச் சிந்தித்து "ஆகாயத்தைப்போல்" அரூபமாகக் கருதி, நம் அரூப அம்சம் அதில் மோதும்படியாக மன ஆகாயத்தை விசாலமாக்கிக்கொண்டே போகவேண்டும். ஏனெனில், அது சில சமயங்களில் வெகு தூரத்திலிருக்கும். அல்லது வேறு கிரகங்களிற் சென்றிருக்கும். அதனை

நம் நாட்டத்தால் நாடி கவர்ச்சி செய்துகொண்டேயிருந்தால், நமது அரூப அம்சம் அதில் மோதினவுடன் அது எவ்வளவு தூரத்திலிருந்தபோதிலும் உடனே வந்து நம்மோடு பேசும்! இவ்விதம் பேசுவதில்-சுமார் மூவாயிரம் பேர்களுக்கு முன் வந்து பேசியும் சிலருக்குத் தெரிந்தது, சிலருக்குத் தெரியவில்லை. தெரியாத காரணம் : ஹிருதயப் பரிசுத்தக் குறைவென்று எண்ணப்பட்டது.

8, எந்த ஜீவனையும் வசியமாக்குதல் :

நம் ஆத்மாவையும் அந்த ஜீவனின் ஆத்மாவையும் "ஆகாயத்தைப் போல்" ஒன்றென்று கருதி, நம் சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படியாக நம் மனதினால் நாடி கருஷிக்கவும் (ஈர்க்கவும்) உடனே வசியமாய்விடும்!

9. பிணியையும் வறுமையையும் அகற்றிச் சுகத்தையும் செல்வத்தையும் உண்டாக்கிக்கொள்ளுதல்:

"நான் ஆகாயத்தைப்போல் சுத்த வெட்டவெளியாயிருக்கிறேன். நான் அரூபத்திற்கு அரூபமான சுத்த பிரம்மம்; மாமிஸம் எலும்பு மில்லை, என் ஜடம் எனக்கு மெய்யான வடிவல்ல! எனக்குப் பிணியில்லை, வறுமையில்லை. உலகம் என் வசமிருக்கிறது. எல்லாச் சுகமும் எல்லாச் செல்வமும் எனக்கே!" என்று இவ்விதம் ஒரு நாளைக்கு இருமுறையாக காலையும், மாலையும் கால் கால் மணி நேரம் கருதி வந்தால் போதும்!

10. ஓர் ஆத்மாவின் பிணியையும், வறுமையையும் அகற்றிச் சுகத்தையும், செல்வத்தையும், மோக்ஷத்தையும் அளித்தல் :

"நான் ஆகாயத்தைப்போல் அழிவில்லாத, முடிவற்ற சுத்த பிரமமாயிருக்கிறேன். சதாவும் நான் மோக்ஷத்திலிருக்கிறேன். இந்த ஆத்மாவும் நானும் ஒன்று. இந்த ஆத்மாவை பூமியிலிருந்து மேலே உயர்த்துகிறேன். இதன் பிணியையும், வறுமையையும் அகற்றிவிட்டேன். இதற்குச் சுகத்தையும், செல்வத்தையும், மோக்ஷத்தையும் அளித்துவிட்டேன்!" எனக் கருதவும். இதற்கு நமக்கு அசரீர வாக்காக மறுமொழி ஒமென்று வந்தால் போதும்.

www.miskinsha.blogspot.com

இல்லையெள வருமாகில், பிரமத்தால் ஆகாதகாரியம் ஒன்றுமில்லை யென மளதைத் திடப்படுத்திக்கொண்டு, மறுபடியும் ஆமென்று வருகிறவரையில் முயற்சிக்கவும். மரித்த ஆவிகளைக் கீழ்ப்பதவியி லிருந்து மேல் பதவிக்குக் கொண்டுபோகிறதாயிருந்தால் அதுவே நமக்குப் 'போதும்-பற்றாது' எனத் தெரிவிக்கும்!

11. சூக்குமம் எடுக்கும் விதம்:

நம் சொருபத்தைக் கோசதி பாதமுதல் செவ்வையாக ஒரு கண்ணாடியில் நோட்டமிட்டுத் திட்டப்படுத்திக்கொள்ளவும். பின்பு நமது சரீரத்தை மன ஆகாயத்தில் அழித்து நாமும் மன ஆகாயமா யிருந்துகொண்டு, கண்ணாடியில் பார்த்துத் திட்டப்படுத்தின நமது சுபத்தை நாம் ஆகாய வடிவாயிருந்துகொண்டு செவ்வையாக நோட்டமிடவும். பின்பு நமது சினேகிதன் ஒருவனிடம் நிதகாலம் போய்க்கொண்டும், பேசிக்கொண்டிருப்பதாயும், நம் கொல்லைக்குத் தண்ணீர் இறைப்பது போலும், நாம் ஆலயத்தில் போய்த் தொழுவது போலும் மனோ பாவனையாக, நாம் ஆகாயமாயிருந்து கொண்டு கண்ணாடியில திட்டப்படுத்தின சுபத்தைக்கொண்டே செய்யவேண்டும். இதில் சூக்குமம் வெளியாய்விடும்!

எந்த சாதனையும் 40 நாள் செய்தால் அனேகமாகப் போதும். ஒரு நாளைக்கு 24 மணி நேரம் ஆகையால், நாளொன்றுக்கு ஒரு மணி நேரம் அப்பியாசித்தால் 24 நாளைக்கு ஒரு நாள் அப்பியாசந்தான் ஆகும். ஒரு நாளைக்கு மூன்று மணி நேரத் திற்கு மேல் அப்பியாசிக்கக் கூடாது!

இத்துடன் நம் ஆசிரியர் அவர்களின் பாடங்கள் நிறைவு பெறுகின்றன.

— சம்பூரணம் —

இந்நூலாசிரியரின் அருட்கவிதை:

பல்லவி

ஐயே மெத்த சரியே! — சுத்த நான்!
ஐயே மெத்த சரியே! (ஐயே)

1) தேகிகர் சொன்னபடி
மாசற்ற நிஷ்டையிலே
கூசாமல் நாம்பணிய
மாசுகம் வந்தது காண்!
அது எப்படி?
வாய்ச் சொற்படி! (ஐயே)

2) சுத்தஞானம் வேண்டுமானால்
பற்று தனை மர்க்கடம்போல்
மற்ற தெல்லாம் அசுத்த ஞானம்
மெத்த மெத்தப் பேச வேண்டாம்
இது சத்தியம்!
இது சத்தியம்! (ஐயே)

3) கண்டேன் என்ற காட்சி யார்?
என்றுமுள்ள அகண்ட அறிவு
அண்டமிரண்டும் கோடி யாவும்
ஒன்றாய்ச் சமைந்தது
நான் தானே!
தான் தானே!! (ஐயே)

அருளானந்த துஆ:

எங்கும் பரிபூரணமான சுத்த சைதன்னியமாகிய அல்லாஹுத் தஆலா வென்னும் மகா வலுப்பமாகிய மஃரிபத்துல்லாஹ் வெட்ட வெளியே நான் என்னும் மகா தத்துவ காரண மூலப்பொருளாகிய அஹதாம் நினைவை அடையும் ஒலிமார்களுடைய சங்கமாகிய நாம் – தன்னைத்தானறியும் பொருட்டு நமக்கு உன்மையை உபதேசித்து அதன்படித் தனது கடாட்சத்தால் ஆகச்செய்த – பரம

www.miskinsha.blogspot.com

குருமஹான் ஔலாதுர் ரஸூல் மௌலானா மஷாயிஹ் முஹம்மது தாஹிர் காதிரீ ஆரிஃபு பில்லாஹ் அவர்களை நாம் எப்போதும் வெளி எண்ணத்திலும் உள் எண்ணத்திலும் மறக்காமல் நினைத்துக்கொள்வோமாக!

இன்னமும் நமக்கு விலாயத்தென்னும் சித்தியையும் அடையும் பொருட்டும் "ஸைத்து ஸர்மதி", "குன்" என்னும் தொனியாகிய பிரணவத்தையும் உபதேசித்து அதன் பரிபூரணத் தத்துவத்தை அடையச்செய்த மேற்சொல்லிவந்த பரம குரு மஹான் அவர்களுக்கு நம் உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தம் செய்து ஆனந்தம் அடைவோமாகவும். இன்னமும் நமக்கு அன்பியாக்கள், ஔலியாக்களின் பரிபூரண சித்தி மார்க்கமும், முக்தி பதவியும் கிடைத்த தற்காக வேண்டி அளவிடாத சாகரத்தில் முக்குளி போட்டு ஆனந்திப்போமாகவும்!

இன்னமும் மற்ற எல்லா ஜீவகோடி ஜெந்துக்களும் நம்மைப் பின்தொடர்ந்து நம் மனம்போல் நடக்கப்போகின்றன! அளவற்ற ஆத்ம ஜீவகாந்த ஒளியின் தத்துவம் நம்மில் எப்போதும் மின்னிப் பிரகாசிக்கிறது! இன்னமும் நமக்கு அருள் செல்வமும், பொருள் செல்வமும் கணக்கற்று உண்டாகிக்கொண்டே இருக்கிறது! இன்னும் புத்திரச் செல்வங்களும் பூரண ஆயுள் செல்வமும் உண்டாகிறது. இன்னமும் நமக்கு வறுமை, நரை, திரை, பிணி, மூப்பு, சாக்காடு கிடையா! ஸ்தூல சூட்சும காரண சிதாகாய பதவிகள் நமக்கு ஒரு நொடிக்குள் உண்டாகின்றது!

இன்னமும் அளவற்ற ஆன்ம பதவிகள் நமக்கு உண்டாகிக் கொண்டிருக்கிறது. இதோ நமது காதிரிய்யா என்னும் தரீக்காவுக்கு மூல புருஷராகிய ஹழ்ரத் கௌதுல் அஃலம் அவர்களின் ரூஹு ஹாழிராகியிருக்கிறது! மேற்சொல்லிய எல்லாத் தத்துவமும் நமக்கு எப்பொழுதும் உண்டாகிக் கொண்டிருக்கிறது! இதோ, பர வெளியில் நாம் சிந்தித்தபடி பூரண அம்சம் உண்டாகிக் கொண்டிருக்கிறது! இதோ, சகல தத்துவமும் நமக்கு உண்டாகி விட்டது. இதில் யாதொரு சந்தேகமில்லை! இதோ, நமக்கு எதிரிகளாய் வரக்கூடியவர்களின் கெட்ட எண்ணங்களெல்லாம் நம் முன் வராமல் பறந்தேகி விட்டது! நமக்கு எதிரிகள் யாருமே இல்லை. இதோ, நான் பிர்மம்! சர்வமும் பிர்மமயம்! இவ் வெண்ணம் மாறாமலிருப்பதே நமது ஈமான்! இவ்வீமானை மாறாமல் தரிபாடாக்கி வைத்து வஹ்தத்தென்னும் நூரில் நம்மனைவர்களும் சேர்ந்து ஆனந்திப்போமாக. ஆமீன்!!!

ஆத்மஞானத்தின் சூட்சம். அருள்குருவின் கடாட்சம்.

இஃது

இந்நூலாசிரியராகிய தஞ்சை ஜில்லா வழுத்தூர்

ஆரிஃபுபில்லாஹி, மஷாயிஹ், மவுலானா, மவுல்வி,

குருபிரான்,

A. முகம்மத் தாஹிர்ஷாஹ் காதிரிய்யி

அவர்கள் மீது

அந்நவர்களின் முரீத், கலீபத்துல் காதிரிய்யி

வத்தலக்குண்டு. ஸ்வானுபவ பிரஹ்மானந்த

ஸ்ரீமத் மஸ்தான் ஸாமியார் என்ற

P. K. மைதீன் பாஷா சாயபு

பாடியது.

கடவுள் துதி அருபம்

ஆரணங் காணாதாகி அறிவென
அதுவாய் ஞானப்
பூரணமாகிப் புந்தி பொறி
புலன் பலது மின்றித்
தாரணை யாலு மெட்டாத்
தன்மையய்த் தானாய் நிற்கும்
காரண மெதுவோ வத்தைக்
கருதியே கருத்துள் வைப்பாம்!

www.miskinsha.blogspot.com

சொரூபம்:

அகம்மதுவாய் அஹதாய் அறிவாய்
அலிஃபாய் ஞான
முஹம்மதுவாம் முத்தொளியாய்
மூதறிவோ குணர்பொருளாய்
ஜெகம்மதுவாய்ச் சித்தமதாய்க்
சின்மயமாய் சித்சொரூப
சுகம்மதுவாய்க் சுத்தமதாய்ச்
சம்மாவாயிருப்பதை யாம்துதி செய்வாமே!

அருள்குரு தோற்றம்:

ஜெகம்மது தனிலே மாத்தர்
சித்தையி லுற்ற ஞானம்
அஹம்மது வாகி யெங்கு மஹ
தெனும் சமதைக் காட்டும்
முஹம்மது மகளாம் பாத்து
முத்தெனும் சத்தில் தோன்றும்
முஹம்மது தாஹி ரெங்கள்
முர்ஷித் முர்ஷி தீயே!

உலகத்தின் ஆச்சரியமான நூல்:

சித்தையை அடக்கிச் சித்திகள் பலதும்
செய்வகை சீருடன் காட்டிச்
சிந்தையே சிதையா சிவமென வாக்கும்
சிறப்பொடு அஜாயிபுல் ஆலம்
சிந்தையைப் பயக்கும் நூலதை
விரித்துச் செய்தவ செம்மலே! ஞானச்
சிந்தையிர் முஹம்மத் தாஹிரே
நீரமுர்ஷித் முர்ஷி தீயே!

கடாட்சத் தன்மை:

சித்தியை விரித்துக் காட்டிச்
சீக்கிரம் சிறந்த ஞான
முத்திபி தெனவே காட்டி
முகமுக மாக ஞானச்
சத்திவி லடைந்து காட்டிச்
சகஜநற் சமாதி பூட்டும்
முத்தாரம் முஹம்மத் தாஹிர்
முர்ஷித் முர்ஷி தீயே!

இதுவுமது

ஒருவருங் காணா வொன்றை
உமக்குநா னுரைக்க வெண்ணி
விரும்பினே னீயும் வந்தாய்
விளம்பினே னதுவே யாவாய்!
அருமையோ யென்று என்னை
அதன்படி யாகச் செய்த
குரு முஹம்மது தாஹிரே
ஹாதிமுர்ஷித் முர்ஷி தீயே!

இதுவுமது

சற்குரு கரத்தாற் சுட்டுதழுவிய
ஞான நிக்கை
தற்பர காசமாகித் தானவ
னான தன்மை
நிற்குண நிர்வி காச
நிமலமாஞ் சாகஷி போதம்
முற்கல குணர்ந்த வெங்கள்
முஹம்மது தாஹிரே!

www.miskinsha.blogspot.com

உபதேச உண்மை :

உள்ளைநீ யறியாதித்த வுலகிவில்
அலைந்தாய் ஞானம்
நின்னையே தவிரவேறு
நிர்ணயம் நினையா யென்ன
அன்னையாய் வந்து மோனம்
அமர்ந்திட அருளாலாக்கும்
தன்னையே முஹம்மத் தாஹிர்
தயழுர்ஷித் முர்ஷி தீயே!

உண்மைஞானம் தேகத்திலன்று :

வாக்கொடு மனமுங்காணா
வான்பொரு ளதனைக்காண்ப
தாக்கையா லொன்றுமில்லை
அறிவினா லறிவதல்லால்
சூக்கும காரணச்சின்
றுரியமாந் துரியாதீதம்
மூக்கினி லில்லையென்ற
முஹம்மது தாஹிரே!

அறிவையறிவது தவத்தாலன்று :

அறிவினை யறிவதென்றா லருந்
தவ மெதற்குமைந்தா?
அறிவினை அறிவோன்நீயே!
அஹதெனும் சமது நீயே!
அறிவெனும் பொருளும் நீயே!
அவனிவ னெல்லாம் நீயே!
குறியிது வென்ற முஹம்மத்
தாஹிர்ஹஜி முர்ஷி தீயே!

தரிசனம் கண்ணிலன்று :

கடவுளின் தரிச னத்தைக்
கண்ணினிற் காண்பதன்று
திடமுள போதத் தாலே
திருவுருவுளத்திற் றோன்றும்
நடனமுங் கீதங் கேட்கும்
நடுநிலை இதுவாமென்ற
தடம்பெரும் புயத்தீர் வள்ளல்
சற்குரு முர்ஷி தீயே!

சுயம்பிரகாசம் ரூபமன்றெனக் கடாட்சித்தல் :

ஆக்கையு மின்றி முன்பின்
அடிமுடி நடுவு மின்றி
வாக்கொடு மனமு மின்றி
வான்புவி சுவன மின்றிச்
சூக்கும காரணமு மின்றிச்
சுயம்பிர காச போத
மாக்குதல் முஹம்மத் தாஹி
ராரிஃபே முர்ஷி தீயே!

அட்டமாசித்து :

அட்டமாசித்தி அடைந்திட வுமக்கே
அதிஜய யோகமொன் றுளது
கிட்டவா என்றுஅருகிவி ருத்தி
கியாலெனும் பரைதவ மளித்து
நிட்டைநீ நிதமுங் கூடி
நிர்வாளத்தி லூஞ்சலு மாடி
சிட்டனே சுகியென் றருளிய
முஹம்மத் தாஹ்ரே முர்ஷிதீயே!

www.miskinsha.blogspot.com

அச்சர தியானம் அறிவை அறியாது :

அச்சர தியானத் தாலே
யறிவினை யறியப் போமோ
சக்கரை யென்றால் நாவு
தித்திக்குமோ தற் பரத்தை
பக்குவர் காண்ப தல்லால்
அபக்குவி காணா ரென்றீர்
முக்கனி யதற்கு மேலாம்
வாய்மையோய் முர்ஷி தீயே!

உயர்ஞான உபநிஷத் :

சத்தமதாய் நிறைந்துநின்ற ஆகாயத்தைக்
சந்ததமும் மனம்வைத்து ஒன்றாய்பார்க்கச்
சுத்தமயம் நிறைந்தஒளி முஹம்மதிய்யா
சுயம்பிரகாசஞ் ஜோதி சொரூபமாகும்
நித்தியமும் தானாகும் நிர்விகற்பநிலை
பெற்றசமாதி நிலைபுகுவ தாகும்
உத்தம சற்குருவான முஹம்மத்தாஹிர்
உரைத்தபடி பார்க்கவரு ஞண்மையாச்சே!

அனுபவானந்தம் :

ஆதவனுதிக்கக் கங்கு லகன்றிடும்
தன்மை போல
மாதவக் குருவேயுங்கள் மகத்துவ
மகிமை யாலே
சாதனை செய்யச் செய்யச்
சங்கைபோய் சாந்தனானேன்
மூதறி வுடையோய்
முஹம்மத் தாஹிரே முர்ஷிதீயே!

ரவியை இருள் வெல்லாது!

நன்மையை உரைக்கும் ஞான
நற்குரு சீயமுன்பு
தின்மைவந் தெதிர்ப்ப தென்றால்
தினகர னிருளும் போலாம்!
புன்மையே துணைக்கொள் வார்க்குப்
புகழிலைத் துன்ப மென்றீர்
அன்புளோய் முஹம்மத் தாஹிர்
அறிஞரே முர்ஷி தீயே!

அச்சத்தால் அருள் ஞானமன்று :

அச்சமு மகத்தையுள்ளான்
அருள்குரு பாதம்பற்றி
நிச்சய முணர்வதென்றால்
நீவிலம் நிந்தை செய்யும்!
பிச்சர்கள் பிரமஞானம்
பிறப்பிலும் அடையரென்னும்
முச்சகம் புகழும் முஹம்மத்
தாஹிரே முர்ஷி தீயே!

நூற்பெருமை!

அகஇருள் அகலஞான வருக்கனைத்
தோற்றச் செய்து
சுகநிலை நல்கலான
சுயம்பிர காசநூலை
இகந்தவில் அளித்தானெந்தை
என்குரு மவுனாதித
முஹம்மது தாஹிரெங்கள்
முர்ஷித் முர்ஷிதீயே!

www.miskinsha.blogspot.com

சவுத் சர்மதி அல்லது பிரணவம்:

ஆனந்தக் களிப்பு

தெய்வீக ராகத்தைக் கேள்மின்—ஞான
தேவமனோன்மணி தரிசனம் காண்மின்!

1. தெய்வத்தை வெறென் றெண்ணாதே—நீயே
தெய்வமெ ன்பதை சிந்திக்கும் போதே
தெய்வமாம் உன்சிர மீதே—திரு
தெய்வீக ராகம் முழங்கும் தப்பாதே! (தெ)

2. உச்சிக்கு நேரே கீழாலே—சிர
சுச்சிக்கு முன்பின்னு ணாவுக்கு மேலே
அச்ச மிலான் அருளாலே—அருள்
அச்சரத் தின்மணி யண்டத்து ளாலே (தெ)

3. பத்துவித ராகங் கேட்கும்—ஞானப்
பக்தரை யிந்த தவத்தினி லாக்கும்
சித்தி முத்தியுஞ் சித்திக்கும்—மோன
முக்தர்கள் சொன்ன முறையிது வாகும்! (தெ)

4. புள்ளினம் போலொரு சத்தம்—வேறு
புல்லாங் குழலை நிகர்த்தஓர் சத்தம்
புல்புல் வீணையின் சத்தம்—இதை
புல்லர்க் குஉரைக்க வொணாதுஎன் சித்தம்! (தெ)

5. சிந்து தரங்கத்தின் சத்தம்—சிவ
சிந்தையர் கோவினி லாலய சத்தம்
அந்தரத் தின்இடி சத்தம்—ஆகா!
அந்தணர்க் கின்ப கஞ்சிராவின் சத்தம் (தெ)

6. பற்பல வாத்தியச் சத்தம்—ஹரி
பற்குண னுத்தப் பறையொலி சத்தம்!
தற்பர மாமணி முத்தம்—அவன்
தர்பாரி லேவரும் தவயோக சத்தம்! (தெ)

7. ஹூஹூ வென்று முழங்கும்—ஞான
ஹூவே யணுமனு வெங்கும் ததும்பும்
ஹூஹூ தாத்தி லொடுங்கும்—ஓம்
ஹூவுக்குள்ளே யொரு கூத்து விளங்கும்! (தெ)

8. பிரணவம் பிரபல யோகம்—உந்தன்
சிரமதில் கேட்கும் சிலம்பொலி ராகம்!
திரமுள பேரைப் பின்பற்றும்—தீய
மரணம் பிறப்பிலா மணிமந்திர யாகம்! (தெ)

9. சவுத் சர்மதி யாகும்—புவி
மவுத்தை விலக்கும் மகாதவ யோகம்!
பவத்தைத் துடைக்குமா வேகம்—பல
அவத்தை கடந்து அவனிவ னாகும்! (தெ)

10. அகம் பிரகாச நல்வீரர்—அருள்
முஹம்மது பேரர் முஹம்மது தாஹிர்
இகந்தனி லென்குரு நாதர்—திரு
சுகமஸ்தான் சாமிக் கிரங்கும் சுகிர்தர் (தெ)

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம்
மதுக்கூர் K. O. P. முஹம்மது தாவூத் ராவுத்தர் அவர்கள்

இயற்றிய தாஹிர் பதிகம்.

(எம்பெருமான் சையத் முஹம்மத் தாஹிர் ஹஸனி மவுலானா அவர்களிடம் கேட்டுக் கொண்ட தாஹிர் பதிகம்)

முனாஜாத்து

1. எல்லாம் அறிவின் மயமாக
இயங்கும் நிலையே தான் என்ற
நல்லோர் அறியும் எனது குரு
நாதா! சகிக்கொண்ணாத துன்பம்
சொல்லால் உரைக்க கேட்டதன் மேல்
சோதித்து இரங்கும் வரை பொறுக்க
இல்லா உடல் பொருள் ஆவியும் நான்
இது தருணங்கார் தாஹிர் வலி!

www.miskinsha.blogspot.com

2. விட்ட குறைக்கும் நானில்லையே
விதியின் பயம் தான் எனக்கேது?
துஷ்ட மாயை வேறுளதோ
தூய உள்ளமைக்கிணையா?
பட்டப்பகல் போல் உன் வாய்மை
பழுதாதவரேது ன்னுரைகள்
கட்டாயம தாகவே சத்தியம்
காணப் புரிந்தருள் தாஹிர் வலி!

3. பார்த்தே இருக்கும் நீயிருக்கப்
பாடாய் படுத்தும் துன்ப வசம்
சேர்த்தோ விடுத்து விட்டு விட்டாய்
செயலில் கெட்டசே யெனினுங்
காத்தே வளர்க்கும் பிதா தனக்கு
கருணை யிலை யென்றிடலாமோ?
வார்த்தை தப்பாதா வுளவான்
வாழ்வே வந்தருள் தாஹிர் வலி!

4. வயிற்றின் பொருட்டா லுலகிடத்து
மாறாக் கவலை ஏன் படைத்தாய்?
கயற்றினரவு போலே கண்ட
கருத்தால் வறுமை நசித்தின்பம்
இயற்றி சுக செல்வமே படைக்க
இயலா தென்ப தொன்றுளதோ?
சுயத்தின் கருணை உண்மையெனில்
சுதந்தரத் தருள் தாஹிர் வலி!

5. அடக்க அடக்க அடங்காதுழலும்
ஆற்றலில்லா தென் மனதில்
கிடக்கும் கவலை சஞ்சலங்கள்
கிளைத்த மூலம் நீ அறிவாய்!
நடக்க இருப்பதையும் அறிவாய்
நடந்துமுன் சென்றதும் அறிவாய்!
கடக்கா வினையை கடந்தேற்றி
கருணை புரிந்தருள் தாஹிர் வலி!

6. இறுதி நபிகள் நாயகத்தின்
எழில்சேர் மரபின் குரு மணியே!
சுருதி முடிவாய் நின்றிலங்கும்
துரியவடிவே தாயகமே!
பரிதி உதயம் போலுதித்த
பரமானந்த பெருங்கடலே!
கருதி உதவி தேடுமெற்குக்
கலங்காதருளும் தாஹிர் வலி!

7. இந்தத் தருணம் எனைக் காத்து
இருந்தால் உலகில் ஆதரிக்கச்
சொந்தம் ஒருவரையும் காணேன்
சொல்லும் குறைகள் அநேகமே
எந்த வகையாலும் எளிதென்று
எளியேனுங்கட்கே அபயம்
அந்தம் நானும் அர்ப்பணம் என்று
அறைந்த வடியேன் தாஹிர் வலி!

8. சொல்லால் செயலால் உண்மை நெறி
தொடுத்து நன்மை தொழில் புரிய
கல்லாச் சிறிய அடிமை உனை
கவியாலுரைத்தேன் ஏதேதோ
பொல்லா மொழி யென்றிகழாமல்
பொருத்தமுளதென்று இதையேற்று
வெல்லாதொழிய சிறுமையெனில்
வெற்றியருள்வாய் தாஹிர் வலி!

9. நீயே ஆதி அந்தமதும்
நீயே உள்ளும் புறமதுவும்
நீயே உலக வஸ்தெதுவும்
நீயே உற்றதாய் தந்தை!
நீயே ஒருண்மைப் பொருளும்
நீயாய் எல்லாம் இருப்பதினால்
நீயே இப்போ தெனது குறை
நிறைவேற்றிட அருள் தாஹிர் வலி!

10. உண்மையை அறிவது ஞானம்
உண்மையை நம்புவது பக்தி
உண்மையில் நடப்பது மார்க்கம்!
உண்மையாய் உண்மையைச் சொன்ன
உண்மையான உனையே நம்பி
உரைத்தேன் முழுதும் உண்மையென
உண்மை இது என் சத்தியமே!
உண்மை முஹம்மது தாஹிர் வலி!

www.miskinsha.blogspot.com

P. M. முஹ்யித்தீன் அப்துல் காதிர் இயற்றிய

இறை இலக்கணம்

ஆசிரியப்பா:

உலகெலாம் சூழ்ந்து உள்ளும் வெளியும்
பரந்து விரிந்து பகரொணா அகண்டமாய்
விளங்கும் சுத்த விள்ளை ஒப்பத்
தனக்கோர் உவமையில் தானே தானாய்
அறிவின் காட்சியாய் அருபத்திற் கருபமாய்த்
தன்னிலை அசைவற மன்னுரு அனைத்தும்
தனக்குள் இயங்கினும் தாக்கற்று ஏகமாய்த்
தனித்தும் தானில்லாத் தன்மையாம் பூரண
நிறைவே சுயப்பெரும் ஞானம்;
இறைஇலக் கணமும் இத்தகை யுனர்வே!

வெண்பா:

குறைவற்ற செல்வம்:

சுத்தத் தெளிவினில்லை சும்மா இருக்கசுகம்,
மித்தை வடிவில் மிதக்காதே! – சித்தாய்
நிறைந்தவன் நானென்று நிற்கும் திடமே
குறைவற்ற செல்வமாம் கொள்!

குரு வணக்கம்:

அறுசீர்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்:

அந்தமில் துரியா நீத வகண்டிதா கார ஞானச்
சிந்தையுள் அகிலாண் டங்கள் சிறப்புற வடங்கு மோன
எந்தைதாய்க் காசா னான விரு கண்ணின் மணியே என்னைச்
சந்ததம் காத்நாட் கொள்வீர் சர்வமே தாஹிர் நாதா!

சமர்ப்பணம்:

பல்லவி

பூரண ஷெய்கே முஹம்மது தாஹிர்
பூம்பதமே சரணம் (பூ)

சரணாது பல்லவி

1. காரணமெய்த் தேசிகரே
கருணைசுயப் போதகரே
கதி என்னை யாள்வீரே! (பூ)

2. அன்னை யெந்தைக் காரனும் நீர்
அடிமுடியும் நடுவிலும் நீர்
அடிமைக்கு ஆதாரம் நீர்! (பூ)

3. பிறவிப் பெருந் துயரழிய
பேரருளின் மழை பொழிய
பேதைமை எனக் கொழிய (பூ)

4. மாயைமலா மருள் நடுப்பீர்
நாயநிலை வரமளிப்பீர்
துணையென்றன் பிழை பொறுப்பீர்! (பூ)

5. வல்வினையும் மிடியறவே
செல்வசுகம் மிருந்துறவே
திடசித்தம் யான் பெறவே (பூ)

6. ஆனந்த நும் அருள் நிலையே
அகண்டவறி வெனுங்கலையே
அதுவன்றி நானிலையே! (பூ)

7. உடல் பொருளும் ஆவியுமே
உவந்து செய்தேன் சமர்ப்பணமே
உரை அப்துல் காதிருமே! (பூ)

www.miskinsha.blogspot.com

இந்நூலாசிரியர் அவர்களின் சகோதரர்

மௌலவி அ. சையத் குலாம் ரஸூல் சாஹிப் ஹஸனி

அவர்கள் இயற்றிய

முனாஜாத்து

ஆனந்தக் களிப்பு

தரவேணும் யாறப்பு ஹாதி – கதி
பெறவேணும் உன்னடிமை யாறப்பு ஹாதி

1. நுள்ளாம துய்யமந்திரமும் – ஞான
தெறிமேவும் பூராயம் விளையுந்தந்திரமும்
என்னாளும் மாறாத வரமும் – கட்டை
ஈடேறும் பரிசாக ஈமானிலுரமும் (தர)

2. தனது துணையான ஆதரவும் – நல்ல
தக்வாவும் வேதஃபுர்கானுடைய சிறப்பும்
உனது கிருபாநிதி யுறவும் – தாத்தில்
ஒளியான அஸ்ராரு வெளியாகும் துறவும் (தர)

3. மனதிலீமானின் தௌஹீதும் – கல்பு
மணியான பேரின்ப வழியாம் முரீதும்
தினமும் உன் மீதிலில் யாதும் – துய்ய
தரிசனங்கண்டு களிகூரும் ஷுஹூதும் (தர)

4. தவக்க லொடுசபுரு சிறாவும் – நல்ல
தௌபாவும் மௌத்தாகு முன்னேஃபனாவும்
குளித்திடும் துஆமுஸ்த ஜாபும் – உன்றன்
குருபுடைய சமூகநிலை பிரியாத வாழ்வும் (தர)

5. தொல்லை யறுகாம விற்லாகம் – சிந்தை
தூங்காமல் தூங்கும் சுக நீங்கா முஆகம்
நல்ல ஜூஹறதாகிய லிபாசும் – எங்கள்
நகுமானை யொன்றுபட தொழுகமிஃராஜும் (தர)

6. ஆசாரமான இஃபானும் – என்றும்
ஆதார மௌன நிலை மாறாத தீனும்
பேசாமல் பேசும் பயானும் – உன்றன்
பேராசை பூணும் கமாலும் எகீனும் (தர)

7. காணாமற் காணும் ஜமாலும் – சரலி
ஹான பெரியோருடைய ஹாலும் அஃப் ஆலும்
பூணாமந்திர திறவுகோலும் – ஞானப்
பொருளான குதுஸ்தனை மருவும் கமாலும் (தர)

8. அருள் பெருகும் வஹ்பீ லுஹூனும் – இன்னும்
அந்நாளிருண்ட அஹியானுடைய சீரும்
ஹிருதய கமலத்தின் நூரும் – றப்பு
இம்மையிலும் மறுமையிலும் உனது தீதாரும் (தர)

9. வாழும் ஹயாதுல் ஹய்யாத்தும் – கலி
மாவுடனே உன்னை மறவாத சக்காரத்தும்
நாளும் உயர்ந்த தரஜாத்தும் – எங்கள்
நபி முஸ்தஃபா மீது உண்டும் சலவாத்தும் (தர)

10. ஆமீனல்லாஹும்ம ஆமீன் – சொல்லும்
ஆமீன் தவறாத மூமினெல் லோர்க்கும்
ஓதி குலாம் றசூல் சொல்லும் – துஆ
ஓயாமலோதும் உகப்பு டையோர்க்கும் (தர)

11. அல்லாஹும்ம ஸல்லிவ ஸல்லம் – எங்கள்
ஆல நபிக்கும் அவர் கிளையார்க்கும்
ஸல்லா அலன்னபி ஸல்லிம் – தும்ம
ஸல்லு அலைஹி யாரப்பி ஸல்லிம் (தர)

வஸ்ஸலாமு அலைக்கும்,
வரஹ்மத்துல்லாஹி வபரக்காத்துஹு

www.miskinsha.blogspot.com

அருஞ்சொற் பொருள்

அல்லாஹ் – இறைவன், கடவுள், தயவன், நாயகன், பிரமம், தலைவன், ஹக், ரப்
அவ்லாத் – சந்ததி
அர்ஷ் – இறை ஸ்தலம்
அஸ்ரார் – ரகசியங்கள்
அவிழ்தம் – மருந்து, ஔஷதம்
அஹதாம் – ஏகாந்த, தன்னில் தான் என்ற
ஆரிஃபே காமில் – முற்றும் அறிந்தவன், ஞானி
ஆகிரத் – மறுமை
அகத்தியம் – அவசியம்
அப்படிக்கில்லை – (அப்படியல்ல) அப்படியிருக்காது
அனுபோகம் – அனுபவம்
அவயவம் – உறுப்பு
அவிவேகிகள் – அறிவு குறைந்தவர்கள்
அனுஷ்டானம் – கடைபிடித்தல்
முழு அங்கத்தைத் தொட்டும் – உடல் முழுவதும்
ஆக்ஞாபித்தல் – உத்தரவிடுதல்
இருளின்பேரில் – இருள்மீது
இப்பேர்க்கொத்த – எப்படிப்பட்ட
இஸ்லாம் – சாந்தி சமாதான மார்க்கம், பரிசுத்த ஏகத்துவ ஆத்மஞான வழி
இபாதத்–வணக்கம், தொழுகை
இன்பத்திலும் – சுவையிலும், ருசியிலும்
ஸ்தானம் – இடம், நிலை, குறிப்பு
ஸ்திரீ – பெண்
ஸ்தூல இச்சை – உடல் இச்சை
ஸஹிபத் – பண்பு
ஸஹத்தாக – திருத்தமாக, சரியாக
ஈமான் – பக்தி, விசுவாசம், நன்னம்பிக்கை
உவக்கவில்லை – விரும்பவில்லை
உரிக்கிப்பார்த்தால் – உற்றுப்பார்த்தால்
உன்னி – நினைத்து
ஏலாத்தனம் – இயலாமை
ஏர்க் – இணை, ஜோடி சேர்த்தல்
கண்டித்தால் – குறிப்பிட்டால்
கண்டித்து – குறிப்பிட்டு

கவிமா – சொல்
கல்ப் – மனம்
கல்க் – படைப்பினங்கள்
கருசல் – கரிசல், கருப்பு
கருஷிக்கும் – கவர்ந்திழுக்கும், ஈர்க்கும்
கடவுளைத்தொட்டும் – கடவுளிடமிருந்து
காணக்கூடும் – பார்க்க முடியும்
காங்கை – உஷ்ணம், சூடு
கார்மாளம் – பாதுகாப்பு
காஃபிர்–ஏக இறை மறுப்பாளர்கள், வழிகேடர்கள்
கிஞ்சிற்றேனும் – கொஞ்சம்கூட
குஃபிர் – இறைமறுப்பு
கொத்தப்பட்டு – எழுதப்பட்டு, வரையப்பட்டு
கொளுகவைப்பது – அந்தரத்தில் தொங்க வைப்பது
சத்துரு – எதிரி
சத்சங்கல்பம் – ஹக்கை (உண்மையை) அறியும் தன்மை
சத்கருமம் – நற்செயல்
சரீரம் – உடல், மேனி
சாஷ்டாங்கம் – அங்கம் முழுவதும் தரையில்பட விழுந்து வணங்குதல்
சாகரம் – கடல்
சிருஷ்டிப்பு – படைப்பு
சீக்காய் – நோய்வாய்ப்பட்டு, பிணியுற்று
ஷரஹ் – வாழ்க்கை நடைமுறைச் சட்டம்
சுழத்தி – நித்திரைக்கும் விழிப்புக்கும் இடைப்பட்ட தன்மை
தத்தம் செய்து – வழங்கி
தரிபாடு – நிலைத்திருத்தல்
தரிபாடானதாக – நிலையானதாக
தவ்ஹீது – ஏகத்துவம்
தஹ்த்தஸ்ரா – பாதாளம்
தாற்பரியம் – கொள்கை, கருத்து
தாவா – அழைப்பு
திண்ணம் – நிச்சயம்
திக்ரு – தியானம், சிந்தனை செய்தல், ஞாபகப்படுத்துதல்
துருஷ்த் – புனிதம், பரிசுத்தம்

www.miskinsha.blogspot.com

துன்மார்க்கம் – கெட்டவழி
தூஷணம் – திட்டுதல், அவமதித்தல்
நபித்தனம் – இறைவனின் மகத்தான செய்தியை அறிவிக்கும் பண்பு (நுபுவத்)
நாபி – தொப்புள்
நாட்டம் – விருப்பம்
நாயகத்தனம் – தலைமைப்பதவிக்கு உரிய தன்மை
நிர்த்தூளி – துளிகூட இல்லாமல்
நிரப்பமானதாயும் – நிறைவானதாயும்
பட்சி, பக்ஷி – பறவை
பக்கிசாரம் – பறவைகள்
படைக்கோலங்கள் – விண்கோள்கள்
பகுவதம் – மலை
ஃபர்ழ் – தலையாய கடமை
பாரிசம் – பக்கம்
பிரதிஉத்தரம் – மறுபதில்
பாத்தின் – அகம், உட்பொருள்
பிரமாணம் – வேளை, சத்தியம், அளவு
பிரளயம் – உலக அழிவு, கியாமத்
புராதனம் – பழைமை
பூர்ளீகம் – ஆதி
பூம்பதமே – பூப்போன்ற சொல்லே
பூராயத்தின் பார்வை – பூரணமான ஏக பார்வை
போஜனம் – உணவு
மஅரிஃபா – ஆத்மஞானத்தின்படி முற்றிலும் அறியப்பட்ட அறிவு, பிர்மஞானம்
மறுதளிக்காமல் – மறுக்காமல்
மனிதர்பேரில் – மனிதர்கள் மீது
முனிவு – கோபம்
முர்ஷித் – நேர்வழிகாட்டி
மூமின் – நன்னம்பிக்கையாளர், விசுவாசி
மேட்டிமையான – மிகமிக மோசமான
மோட்சம் – சொர்க்கம்
வஹ்தத்தென்னும் நூரில் – ஏகத்துவமெய்யொளியில், சுயம்பிரகாசத்தில்
வன்னிப்பு – வர்ணிப்பு, வர்ணனை
வஸ்து – பொருள்
வரத்தி – வரவழைத்து

www.miskinsha.blogspot.com

வரத்தாத – வரவழைக்காத
விகற்பம் – வேற்றுமை
விசுவாசம் – நம்பிக்கை
விர்த்தி – வளர்ச்சி, அதிகப்படுத்தல்
விருக்ஷம் – மரம்
வம்பித்தல் – கட்டாயப்படுத்துதல்
வருத்தாவிட்டால் – தராவிட்டால்
வைசூரிபோலொத்த – வைசூரி அம்மை போன்ற
லாஹிர் – புறம், வெளிப்பொருள்
ரசூல் – அனுப்பப்பட்டவர், தூதர்
ரூஹ் – உயிர்
ஜகம் – உலகம்
ஜடம் – உடல்
ஹதீத் ஷரீஃப் – முஹம்மது (ஸல் அவர்களின் தூய பொன்மொழி
ஹானி – ஆபத்து
ஹிம்சித்தல் – வதை செய்தல்
கௌதுல் அஃலம் – முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி (கத்) அவர்கள்
ஹாழிராகி – வருகைதந்து, பிரசன்னமாகி ஆஜராகி

திருத்தம்: 134-வது பக்கத்தில் குன்து கன்ஜன் மக்னியான் என்றிருப்பதை — குன்து கன்ஜன் மஹ்ஃபிய்யன் என்று மாற்றி படிக்கவும்.

காண்ராவுத்தர்,
B. நஸ்ரத் இலியாஸ் அஹமது,
வழுத்தூர்.

www.miskinsha.blogspot.com

இதோ...
ஆத்மீகப் புரட்சி உண்டாகிவிட்டது!

இதைப்போன்ற ஆத்மீக நூல் இதுவரை வந்ததில்லை!

படிப்பவர்களை ஆச்சரியம் அடையச் செய்யும்
அளவுக்கு புதுமைகள் நிறைந்த நூல்!

தன்னை அறிந்து தன் தலைவனை
அறிந்துகொள்வதற்கும், தன்னை ஒழுங்குபடுத்தி
"ஆத்ம ஒளி" அடைந்துகொள்வதற்கும்
ஓர் அற்புத வழிகாட்டி!

www.miskinsha.blogspot.com